பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

உலகளாவிய நான்காம் மாநாட்டு மலர்

பேங்காக்-தாய்லாந்து

மே 23,24,25, 1999.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்
INTERNATIONAL TAMIL INTEGRATION SOCIETY

Best wishes for the success of

THE FOURTH WORLD CONFERENCE OF INTERNATIONAL TAMIL INTEGRATION SOCIETY

23-25 th- May 1999

Best compliments From

THE SEETHAKATHI TRUST

Seethakathi Chamber,
688, Anna salai, chennai-600 006.

Cresent Residential Matric. Hr. Sec. School for Boys
Seethakathi Estate, Vandalur, chennai-600 048.

✪✪✪✪

Cresent Matric. Hr. Sec school for girls
24, pycrofts Garden Road, Nungambakkam Chennai- 600 006.

✪✪✪✪

Yousuf Zulaikkha Medical Centre
Ervadi Road, Kilakarai-623 517.

✪✪✪✪

Thassim Beevi Abdul Kader College for Women
Ervadi Road, Kilakarai-623 517.

and

ALL INDIA ISLAMIC FOUNDATION

Seethkathi Chambers
688, Anna Salai, Chennai-600 006.

✪✪✪✪

Crescent Engineering College
Seethakathi Estate, Vandalur, Chennai-600 048.

✪✪✪✪

Madurai Crescent Matric, School for Girls
Seethakathi Nagar, Kallampatti, Natham-Alagarkoil Link Road,. Madurai-14.

✪✪✪✪

Nagore Crescent Matric. School for Girls
Muddukkuthazhai Lane, Samba Thottam, Nagore-611 002.

✪✪✪✪

Crescent Industrial Training Institute
Madurai Crescent School Campus,
Seethakathi Nagar, Kallampatti, Natham-Alagarkoil Link Road,. Madurai-14.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற

உலகளாவிய நான்காம் மாநாட்டு மலர்

23, 24, 25 -5-1999

பாங்காக் - தாய்லாந்து

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

12, சாயிநகர் இணைப்பு, சென்னை - 600 092

தொலைபேசி - 4871375, 8552237; தொலைநகல் - 8552237

மின் அஞ்சல் - kokudil@md2.vsnl.net.in

பதிப்பு : **மே 1999**

விலை : உரூபா **200/-**

மலர் ஆக்கம்: **வா.மு.சே. திருவள்ளுவர்**

மலர்க்குழு

தலைவர்

கவிக்கொண்டல் **மா. செங்குட்டுவன்**

ஒருங்கிணைப்பாளர்கள்:

பேராசிரியர். **அ.இறையன்**

கவிஞர் கடலூர் **அ. தேவநாதன்**

முனைவர். **வளன் அரசு**

இலக்கியச் சுடர் **மூவேந்தர் முத்து**

செயலாளர்கள்

முனைவர். **நா. மதியழகன்**

முனைவர். **வா.மு.சே. ஆண்டவர்**

கவிக்குயில் **பொன். அய்யனாரப்பன்**

உறுப்பினர்கள்

முனைவர் **மெய்யப்பன்**

ஆலந்தூர். **கோ. மோகனரங்கன்**

முனைவர் **மலையமான்**

முனைவர் **அமிர்தலிங்கம்**

திரு. இரா. மதிவாணன்

புலவர். **கி.த. பச்சையப்பன்**

புலவர். **த. சுந்தரராசன்**

திரு. ஏசு. மோகன்தாசு

பாவலர். **ம.கணபதி**

இல. பழனிமுத்து

அச்சும் அமைப்பும்:

சேதுமதி அச்சகம்

12, சாயிநகர் இணைப்பு, சென்னை - 600 092

தொலைபேசி - 4871375, 8552237; தொலைநகல் - 8552237

மின் அஞ்சல் - kokudil@md2.vsnl.net.in

கிடைக்குமிடம்:

தமிழ்மணி புத்தகப் பண்ணை

281, கயிதேமில்லத் சாலை , திருவல்லிக் கேணி, சென்னை 600 005

தொலைபேசி - 4871375, 8552237; தொலைநகல் - 8552237

மின் அஞ்சல் - kokudil@md2.vsnl.net.in

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு
மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

பாரிஸ் நகரில் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் சிறந்த நிறுவனம்

புதிய சப்பல் பல்பொருள் அங்காடி

நுகர்வோரின் தேவைகேற்ப தரமான பொருள்களின் இருப்பிடம்

புதிய சப்பல் பல்பொருள் அங்காடி

New Chapelle Stores

214, Rue du Ebg. St., Denis

75010 PARIS

Tel: 0140 36 20 35

Fax: 01 4841 4589

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

உலக பிரசித்தி பெற்ற

கைரேகை & நியுமராலஜி ஜோதிடர்

கைரேகை கலைவேந்தன்

டாக்டர் . பி . தமிழ்மணி , பி.எச்.டி., அவர்களிடம்

தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

Dr. P. Thamilmani, Ph.D.,

Hotel Karpagam, A /c Room No. 113,

South Mada St., Mylapore, Chennai - 4.

Phone: 72388 / 72398 D. Ph: 71273

Fax: 91 - 44 - 839880

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

பன்னாட்டுத் தமிழர்களின் பாதுகாப்பு மன்றம்
பயனான செயல்முடிக்கும் பலம்வாய்ந்த குன்றம் (பன்னாட்டுத்)

எந்நாளும் தமிழர்களின் இதயமாக இருக்கும்
இரவுபகல் நாள்பொழுதை எண்ணாமலே உழைக்கும் (பன்னாட்டுத்)

தேசமெல்லாம் உளதமிழர் செம்மையினைக் காக்கும்
சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகள் கேட்கும்
வாசமலர்த் தோட்டத்திலே வண்டமிழ் வளர்க்கும்,
மாறுபா டிலாவகையில் வளம்பெற உழைக்கும் (பன்னாட்டுத்)

இவ்வுலகில் எங்கோ ஒருமூலையில் ஆனாலும்
எம்தமிழர்க் கின்னலெனில் இதயமே துடிக்கும்
அவ்வுலகில் வந்ததுன்பம் போக்கிடவே துடிக்கும்
அகம்நெகிழ்ந்து எரிமலைபோல் தீர்த்திட வெடிக்கும் (பன்னாட்டுத்)

உலகிலுள்ள மக்கள் எல்லாம் உறவினராய் எண்ணும்
உரிய தமிழ் இலக்கியங்கள் பிறமொழியில் பண்ணும்
தலமெல்லாம் அறிவியல் தனை இணைத்துச் செல்லும்
தமிழாலே தமிழர்களைத் தான் இணைத்து வெல்லும் (பன்னாட்டுத்)

சுயநலமே சிறிதுமிலாத் தூயபணி ஆற்றும்
தியாகமலர்ச் செம்மையினால் சிறப்பினை ஏற்றும்
நயமான கொள்கைவழித் தமிழீழம் போற்றும்
நட்புக்கோர் பெட்டகமாய் நானிலத்தைக் கூட்டும் (பன்னாட்டுத்)

தரணிவாழும் தமிழர்களே தனித்து நிற்க லாமா?
சரித்திரம் படைக்கவொரு தமிழணியில் சேர்வீர்
வரலாறு புதுமையாக பழமை மரபாக
வாழ்வாங்கு தமிழுலகை வாழவகை செய்யும்! (பன்னாட்டுத்)

பெருங்கவிக்கோ

18.6.83 ஆம் நாள் மருத்துவமாமணி டாக்டர் பஞ்சாட்சரம் முயற்சியினால் நியூயார்க்கில் நடந்த தமிழர் விழாவில் இசைக்குயில் எம்.எல். வசந்தகுமாரி அவர்களால் இசை அமைத்துப் பாடப்பெற்றது.

komala vilas

INDIAN VEGETARIAN RESTAURANT

Estd. 1947

With Best Compliments from

INDIAN VEGETARIAN RESTAURANT

Estd. 1947

கோமள விலாஸ்

சைவ உணவகம்

76 – 78 சிரங்கூன் ரோடு , சிங்கப்பூர்,

டெலிபோன் 2936980, 2945294 ஃபேக்ஸ் 3929385

கடந்த 50 ஆண்டுகளாக, சிங்கப்பூர் பல இன மக்களுக்கு சிறந்த சுவையான, சுகாதாரமான சைவ உணவு, படைத்து பெரும்புகழுடன் செயல்பட்டு வரும் எங்கள் உணவகம், பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகலாவிய நான்காம் மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துகிறது.

நிர்வாக இயக்குநர்

இரா. குணசேகரன்

TRUST PRESIDENT

Justice P. Venugopal,

FOUNDER & TRUST SECRETARY

Perungkavikko Dr. V.M. Sethuraman,

PATRONS:

Honourable Minister **Dr. M.Tamilkudimagan** (India)
Honourable Minister **Datoshri. Dr. S. Samyvelu,** (Malaysia)
Honourable Minister **S. Thondaman** (Srilanka)
Alhaj. **B.S. Abdur Rahman** (India)
Bishop. **Ezra. Sargunam** (India)
Dr. Winston. V.Panchatcharam, (U.S.A)
Dr. S. Navaratnam (U.K)
Dr. K. Shun. Sundar (U.S.A.)
Dr. K.M. Sundaramoorthy (Canada)
Dr. V.G. Santhosham (India)
Mr. Gem.R. Veeramani (India)
Mr. U.Karunakaran (India)

INTERNATIONAL COMMITTEE

Justice, **Dr.S. Mohan**
Chairman, International Committee

Dr. P. Ramamoorthy (India)
Kaviyarasu **Vairamuthu** (India)
Danshri. **K.R. Somasundaram** (Malaysia)
Mr. Yazhan. R. Shanmugalingam (U.S.A)
Mr. Alan. Anandan. (France)
Mr. Noel. Rajan (France)
Mr. Putparatham (Mauritius)
Dr. Somaskantha Gurukkal (Australia)
Prof. Jamal (France)
Mr. Christopher Francis (Italy)
Mr. S. Kaviarasan (U.A.E)
Mr. K.Ganesalingam (Germany)
Fr. C.A. Joachin Pillai (Canada)
Alhaj **Dr. Sheik Aboobuckar** (Thailand)
Dr. Subramaniam Kangeyan (U.K.)
Mr. V.S. Gunaretnam (Germany)
Mr. Mohammed Kamaludin (China)
Mr. V.J. Babu (U.S.A)
Mr. Tamil Thillai Koothan (S. Africa)
Mr. A. Ayoob (Thailand)
Prof. Subramaniam (Srilanka)
Mr. Achariar Neelamegam (Reunion)
Mr. K.Maheswaran (U.K)
Mr. Deva. Rajendran (France)

SPECIAL COMMITTEE

Dr. A.Anandakrishnan
Chairman, Special Committee

Director. Bharathiraja (India)
Dr. P.Srinivasan (U.K.)
Mr. R. Guna Sekaran (Singapore)
Mr. R.N. Veerappan (Malaysia)
Dr. Alexander M.Dubianski (Russia)
Dr. Gopalsamy (U.S.A)
Dr. Rafiyudeen (Thailand)
Dr. Parimala (U.S.A)
Dr. A.Humayun (Thailand)
Mr. Chelliah (Canada)
Mr. B.Balasubramaniam (Germany)
Mr. M. Manoharan (U.S.A.)
Prof. K.Balasubramaniam (Malaysia)
Mr. Rajkumar (Canada)
Mr. Aathi kumanan (Malaysia)
Dr. Sheik. Noorudeen (U.A.E)
Mr. S.Rajaretnam (Canada)
Poet. Vallabai Isac (U.S.A)
Mr. Deva. Manoharan (France)
Mr. Poopala Somasundaram (Germany)
Mr. Karunai Kamal (Hongkong)
Prof. V.Kumarasamy (Reunion)
Mr. Srikanthan (Australia)
Thiru. S.K.P. Abdul Rahman (India)
Mr. S.Dharmalingam (Malaysia)
Mr. M.A. Ibrahim (Singapore)
Mr. Gopala Guru Samy (U.S.A)
Mr. Kanags (Canada)

TRUST TREASURER & DIRECTOR

Mr. V.M.S. Thiruvalluvar

வழி நடத்தும் குழு

தலைவர்

முனைவர். ச. முத்துக்குமரன்

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்
டாக்டர் இலலிதா காமேசுவரன்
முனைவர் ஔவை நடராசன்
திரு. ந. நல்லுசாமி
பத்திரிக்கையாளர் சாவி
திரு. லேனா தமிழ்வாணன்
திரு. அ.மா. சாமி
திரு. ஈசுவரன்
முனைவர் அரு.கோபாலன்
திரு. முத்துக்குமாரசாமி
முனைவர் பொற்கோ
முனைவர் ஆறு.அழகப்பன்
முனைவர் கா.மு.பாதுஷா
முனைவர் ஈரோடு தமிழன்பன்
கி.ஆ.பெ. மணிமேகலை கண்ணன்
முனைவர் கு.மோகனராசு
திரு. இதயதுல்லா
பேராசிரியர் வி.கலைமணி
வேலா.மா. சக்திவேல்
மறவன் புலவு க. சச்சிதானந்தம்
முனைவர் புரட்சிதாசன்
முனைவர் ஆர்.ஐ.துரைமுருகள்
பேராசிரியர் இ.ஜே. சுந்தர்
திரு. ச.அ. சௌரிராசன்
முனைவர் அம்மையப்பா
திரு. எம்.என்.டி. நடராசன்
திரு. சேது குமணன்
கவிஞர் எபனேசர்
முனைவர் தமிழ்மணி
திரு. அனீசு

ஞானபாரதி வலம்புரிஜான்
முனைவர் எஸ். சாதிக்
முனைவர் வெங்கட சுப்பிரமணியன்
முனைவர் முத்துக் கண்ணப்பர்
சிலம்பொலி செல்லப்பன்
வழக்கறிஞர் இரா. காந்தி
கவிவேந்தர். மு.மேத்தா
திரு. சா. கணேசன்
உவமைக்கவிஞர் சுரதா
டாக்டர். ஜே.ஜி. கண்ணப்பன்
டாக்டர். குமரேசன்
பேராசிரியர் கண.சித்சபேசன்
முனைவர் சூ.இன்னாசி
முனைவர் இளவரசு
முனைவர் சனார்த்தனம்
எழுத்தாளர். சு.சமுத்திரம்
கவிஞர் இரவி பாரதி
திருக்குறள் மணிமொழியன்
திரு. சந்திரசேகரன்
புலவர். இளஞ்செழியன்
வழக்கறிஞர் பழனியப்பன்
திரு. இளசை சுந்தரம்
முனைவர் தெய்வநாயகம்
திரு. த.மு. பொற்கோ
முனைவர் சரளா ராசகோபாலன்
கலைமாமணி என்.கே.டி.முத்து
திரு. கோ. சூரியமூர்த்தி
திரு. இராதா கிருட்டிணன்
திரு.எம்.எஸ். மணியம் -இந்திராணி (தில்லி)
உதயை மு.வீரையன்

Officer on Special Duty



President's Secretariat,
Rashtrapati Bhavan,
New Delhi - 110004

No.F.2-M/99

30th March, 1999

Dear Dr. Sethuraman,

The President of India, Shri K.R. Narayanan, is happy to know that the International Tamil Integration Society, Thailand Branch, is organising its Fourth World Conference from 23rd to 25th May, 1999 at Bangkok.

The President extends his warm felicitations to the participants and the organisers and wishes the Conference all success.

With regards.

Yours sincerely,

S.N. Sahu

பாங்காக்கில் நடைபெறும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய 4-ஆம் மாநாட்டிற்கு

மாண்புமிகு முதல்வர் கலைஞரின்

வாழ்த்துச்செய்தி

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச்செயலகம்
சென்னை-600 009
நாள்: 12.5.1999

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காம் மாநாடு வரும் வைகாசித் திங்கள் 9, 10, 11-ஆம் நாட்களில் (1999 மே 23, 24, 25) தாய்லாந்து நாட்டின் தலைநகராம் பாங்காக்கில் இனிதே நடைபெறுவதும், அந்நிகழ்வினையொட்டி அறிவு மணம் வீசும் சிறப்பு மலர் ஒன்றை மலரச்செய்யவிருப்பதும் அறிந்து அகம் மிக மகிழ்கிறேன்.

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு - முன்தோன்றி மூத்த குடி'' தமிழ்க்குடி என்ற முதுமொழிக்கேற்ப, நம் தாய்மொழியாம் அழகுத் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை உலகெங்கிலும் உள்ள நம்மக்கள் அறிவதோடு, அயல்நாட்டவரும் அறிந்து பயனடையும் வகையில் - 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், பெருங்கவிக்கோ முனைவர் வா.மு.சேதுராமன் அவர்களின் சீரிய தலைமையில் செவ்வனே செயல்பட்டு வருவது அளவற்ற மகிழ்ச்சியினை அள்ளித்தருகிறது.

''21-ஆம் நூற்றாண்டினை நோக்கித் தமிழ், தமிழர்'' என்ற தலைப்பினைக் கருப்பொருளாய்க் கொண்டு நிகழ்வுறவிருக்கும் இம்மாநாடு - தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமை சேர்க்கின்ற வகையில் சிறப்புற நிகழ்ந்தேறிட என் உளமார வாழ்த்துகிறேன்.

மு. கருணாநிதி

காணிக்கை



தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கட்கு
பாங்காக்கில் நடைபெறும் எமது மன்றத்தின் உலகளாவிய
நான்காவது மாநாட்டில், பவள விழா
நடாத்தி இம்மலரைக் காணிக்கையாக்கி மகிழ்கின்றோம்

இங்ஙனம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தினர்

பாங்காக்கில் நடைபெறும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய 4-ஆம் மாநாட்டிற்கு

மாண்புமிகு **பேராசிரியரின்**

வாழ்த்துச்செய்தி

க. அன்பழகன் எம்.ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச்செயலகம்
சென்னை-600009
நாள்: 8.5.1999

அன்புடையீர்,

வணக்கம்,

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் உலகளாவிய நான்காம் மாநாடு, தாய்லாந்து தலைநகரான பேங்காக்கில், மே இறுதியில் நடைபெறுவது அறிய மகிழ்ச்சி அடைகிறேன்.

என்றுமுள தென்றமிழாய் இலங்கும் நமது உயிரினும் மேலான செந்தமிழ், தமிழகம், யாழ்ப்பாணம், சிங்கை, மலேசியா மட்டுமன்றிப் பல்வேறு நாடுகளிலும் பரவலாகப் பேசப்படும் மொழியாக நிலவுவது, அந்தந்த நாடுகளில் வாழும் தமிழர்கள், பிறமொழிக் கலாச்சாரத் தாக்கத்துக்கிடையிலும், தமது தாய்மொழிப்பற்றாலும், தமிழ்ப்பண்பாட்டில் கொண்டுள்ள ஈடுபாட்டாலும் தாய்மொழியில் பேசியும் பயின்றும், எழுதியும் வாழ்ந்து வருவதால் வாய்த்த பேறாகும் அவர்தம் பேச்சு மொழியும் நடையும் திரிபுறுவது இயல்பே. அவர்களிடையே தமிழ்மொழிப் பற்று வளரவும், தமிழ் இலக்கியப் பயிற்சியுடன், திருக்குறள் அறநெறியில் தெளிவும் அதைக் கைக்கொள்வதில் உறுதியும் மேம்படச் செய்யவும் இந்த மாநாடு பேருக்கம் அளிக்கும் என நம்புகிறேன்.

பன்னாடுகளிலும் தமிழுறவு வளரவும், 'தமிழன்' என்னும் இனப்பற்று ஊன்றவும், 'தமிழ்மொழி' பயிலும் ஆர்வம் தழைக்கவும், இப்படிப்பட்ட மாநாடுகள் நடத்துவதன் மூலம் வழிவகுத்திடும் எனது அன்புக்குரிய நண்பர் பெருங்கவிக்கோ டாக்டர் வா.மு.சேதுராமன் அவர்களது அயரா முயற்சியையும், தொண்டினையும் பாராட்டுவதுடன், மாநாடு பல்லாற்றானும் சிறப்புடன் நடைபெறவும், குறிக்கோளில் வெற்றி காணவும் வாழ்த்துரைக்கின்றேன்.

அன்பன்,

க. அன்பழகன்

பாங்காக்கில் நடைபெறும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய 4-ஆம் மாநாட்டிற்கு

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் அவர்களின்

வாழ்த்துச்செய்தி

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் உலகளாவிய நான்காம் மாநாடு தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்காக் நகரில் நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் உலக அளவில் பல நாடுகளில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. உலகில் உள்ள பல நாடுகளில் தமிழர்கள் பல்வேறு துறைகளில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்று மதிக்கப்பட்டு வருகின்றார்கள். தமிழ்மொழியின் பெருமை இன்று பல உலக அரங்குகளில் பேசப்பட்டு வருகிறது.

என்றாலும் தமிழ்மொழிக்கு மேலும் ஏற்றம் ஏற்படவும், தமிழ் இலக்கியங்கள் பரவிடவும், அறிவியல் முன்னேற்றத்துக்கு ஏற்ப தமிழை வளப்படுத்திடவும் உலக அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ்ப் பற்றுள்ள அறிவியல் நிபுணர்கள் - சிந்தனையாளர்கள் - வல்லுநர்களின் ஒத்துழைப்பைத் திரட்ட இந்த உலகளாவிய மாநாடு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்று நம்புகிறேன்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் சீரிய முறையில் அமைந்திடவும், மாநாடு வெற்றியுடன் நடந்தேறிடவும் என் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

ஜி.கே. மூப்பனார்

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ., பிஎச்.டி,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

வாழ்த்து

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் தலைமையில் இயங்கும் ''பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்'' ஒரு சிறப்பான அமைப்பாகும். ஊர் அளவிலும் தெரு அளவிலும் தமிழ்நாட்டில் எத்தனையோ அமைப்புகள் இருக்கும்போது இந்த அமைப்பு உலகளவில் பலரோடு தொடர்பு வைத்துக்கொண்டு, சிறப்பாக இயங்கி வருவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. கடந்த முறை செருமனி நாட்டின் பெர்லின் தலைநகரில் இந்த மன்றத்தின் மாநாடு நடைபெற்றபோது என் போன்றவர்கள் கலந்துகொண்டோம். உண்மையிலேயே பெர்லின் மாநகரிலிருந்த தமிழன்பர்கள் பலரும் ஒருங்கிணைந்து அந்த மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்கள். தமிழ்நாட்டிலிருந்தும் ஏராளமான தமிழன்பர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ. அவர்கள் கலந்துகொண்ட அந்த நிகழ்ச்சிகளில் எத்தனையோ வகையான சிறப்பான உரைகள் நிகழ்த்தப்பட்டன. எனவே, கவிஞர் வா.மு.சே. அவர்களின் முயற்சிகள் வெளிநாடுகளில் வரவேற்கப்படுகின்றன என்பதுடன் அங்கு மாநாட்டைச் சிறப்பாக நடத்த ஏற்ற சூழலும் உருவாக்கப்படுகிறது என்பது உண்மை. இதற்காகக் கவிஞர் வா.மு.சே.யைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1999, மே நான்காம் கிழமையில் பாங்காக் நகரில் அன்புத் தோழர் இலியாசு அவர்கள் முயற்சியில் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற மாநாடு நடைபெற உள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். கவிஞர் வா.மு.சே.யும் அங்கு சென்று பிற ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரும்பியுள்ளார். அவரும் மற்றுமுள்ள தோழர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 'முத்தமிழறிஞர்' கலைஞர் அவர்களைச் சந்தித்துக் கோரிக்கை வைத்துள்ளனர். மாண்புமிகு முதல்வர் அவர்களும் தக்கவாறு உதவுவதாகக் கூறியுள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று மாநாட்டுக் குழுவினர் வேண்டியுள்ளனர். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு கல்வியமைச்சர், வணக்கத்திற்குரிய மேயர்

மு.க. ஸ்டாலின் மற்றும் நான் ஆகியோரும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளனர். எப்படியிருந்தாலும் தமிழக அரசு வெகு விரைவில் இதற்கான இசைவினை வழங்கும். நாங்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்க வாய்ப்பிருக்கும் என்று கருதுகிறேன். மாநாடு சிறப்புற என் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு என்னுடைய முழு ஒத்துழைப்பும் உண்டு என்ற உறுதிமொழியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி என்பது ஏட்டுச் சுவடிகளில் தொடங்கி இன்றைக்கு மின்னம்பலம், இணையம் என்ற அளவில் விரிவடைந்துவிட்டது. இந்திய மொழிகளிலேயே தமிழ்தான் அறிவியல் உலகின் வளர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொண்டு வேகமாக வளரும் மொழியாகும். இத்தகைய நிலையில் உலகெங்கும் வாழுகின்ற 7 கோடித் தமிழர்களையும் ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தமிழுணர்ச்சியை ஊட்டுவது தமிழின் மாறா வளத்தை எடுத்துக் காட்டுவதும் தமிழ் வளர்ச்சிக்கான பணிகளில் அவர்களைத் தூண்டுவதும் நம் கடமையாகும். இந்தப் பணியைச் செய்ய முன் வந்திருக்கும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தினை மனமகிழ்ந்து பாராட்டுகிறேன். மாநாடு சிறப்படைய வாழ்த்துகிறேன்.

அன்புடன்

மு. தமிழ்க்குடிமகன்

மாண்புமிகு தமிழக செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத்துறை

அமைச்சர் **முல்லைவேந்தன்**

அவர்களின்

வாழ்த்துரை

பவள விழாக் காணும் உதய சூரியன்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காம் மாநாடு, தாய்லாந்து நாட்டிலே நடைபெறவது என்னை மகிழ்விக்கிறது, இதைவிட, ''அந்த மூன்று நாள் மாநாட்டில் ஒருநாள், தலைவர் கலைஞர் அவர்களின் பவழ விழா நிகழ்வு உன்னதமாக நடைபெறும்'' என்ற அறிவிப்பு, என் உள்ளத்தில் இரட்டிப்பு மகிழ்ச்சியினை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவருக்கு, இணையற்ற முத்தமிழறிஞராம் எமது முதலமைச்சர் அவர்களுக்கு தாய்லாந்து நாட்டிலே கூடும் அனைத்து நாட்டுத் தமிழர்களும் பவழவிழா எடுப்பது, எண்ணும் நெஞ்சத்திலெல்லாம் இனிப்பைச் சேர்த்திடும் செய்திதானே!

மொழிகளிலே மூத்தது முத்தமிழ் என்று கூறிப் பெருமைப்படுகிறோம்.

இயல், இசை, நாடகம் என்கிற இன்பத் தமிழிலே இயல், இசை ஆகிய இரண்டுமே இணைந்ததுதான் நாடகத் தமிழ் என்பதை நாமறிவோம்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் மூவரையுமே நாம் நமது முத்தமிழுக்கு ஒப்பிடலாம்.

இயல் தமிழிலே, தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் சென்று பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து வெற்றி கண்ட பெருமையாளர் தந்தை பெரியார் அவர்கள்.

இசைபோலவே, கேட்போரெல்லாம் கிறுகிறுத்துப் போகும்படி நயம்படப் பேசித் தமிழகத்து மக்களையெல்லாம் தன்வயப்படுத்திய சிறப்பினுக்குச் சொந்தக்காரர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மாண்புமிகு முதல்வர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களோ இயலில் புது மெருகூட்டியவர், இசைக்குப் புது நயம் சேர்த்தவர்; இதனாலேயே நாடகத் தமிழுக்கு நலம் சேர்த்தவர், பலம் சேர்த்தவர், ஆகவேதான் இவர் முத்தமிழ் அறிஞர்!

இத்தகைய காரணங்களால், 1996ல் தமிழகம் நான்காம் தடவையாகப் போட்ட புதுக் கணக்கு, பெரியார் + அண்ணா = கலைஞர் என்பதாகும். இதில் இன்னொரு செய்தியும் விளங்கும்; இதற்கு முன்னாலே சில காலம் தாம் போட்டதெல்லாம் தப்புக் கணக்கு என்பதைத் தமிழினம் தெளிவுபடப் புரிந்து கொண்டுவிட்டது.

கலையுலகப் பொன்விழா கண்டு, ஒப்பற்ற உதயசூரியனாகத் திகழும் நம் கலைஞர் அவர்கள், இன்றைய தினம் பவழ விழாக் காண்கிறார்; தமிழகமே விழாக் கோலம் பூண்டிருக்கிறது! சங்கத் தமிழ் கண்ட சரித்திர நாயகனைத் தங்கத் தமிழகமே பொங்கும் பூரிப்பினாலே ''காவிரியாற்று மணலினும் நின் வாழ்நாள் இன்னும் பலவாகுக!'' என்று வாழ்த்தி மகிழ்கிறது.

பகுத்தறிவுச் சுடரேந்தித் தமிழகமெங்கும் சுயமரியாதை ஒளிபரப்பினார், தந்தை பெரியார்; அவர் போட்ட தன்மானப் பாதையில் கழகத்தை நடத்தி, நம்மையெல்லாம் குடும்பப் பாச உணர்வோடு வளர்த்து ஆளாக்கிவிட்டார் அறிஞர் அண்ணா; அவர்களிடம் இரவல் பெற்ற எதையும் தாங்கும் இதயத்தோடு, நம் தமிழ்ச் சமுதாயத்திற்கே தலைமை தாங்கும் சர்வ வல்லமையும் பெற்றுச் சாதனைச் சரித்திரம் படைத்து வருகிறார், ஒப்பாரும், மிக்காரும் அற்ற மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள்.

முதன்முதலில் நம் தலைவர் அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், தந்தை பெரியார் சொன்னார்:-

''நம்முடைய முதல்வர் அவர்கள் தலைச்சிறந்த பகுத்தறிவுவாதியாவார். இத்தகைய பகுத்திறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்யோசனையுடனும் அவர் நடந்துவருவதன் மூலம் தமிழ் நாட்டுக்குப் புதுவாழ்வு தருபவர் ஆகிறார் நமது கலைஞர்! கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பு என்று சொல்லவேண்டும். அவர் பல்லாண்டு வாழ்ந்து அவர் பணி வெற்றியடைய வேண்டும் என ஆசைப்படுகிறேன்... என்றெல்லாம் அன்று மனம் திறந்து தந்தை பெரியார் வாழ்த்திய வாழ்த்து வீண்போகவில்லை என்பதை அவனிக்கு உணர்த்துவதே இந்தப் பவழ விழா!

அறிஞர் அண்ணா அவர்களை அன்றும் சரி இன்றும் சரி, நம் கலைஞர் அவர்களுக்கு மேலாகப் புரிந்து கொண்டவர்கள் - புரிந்து செயல்பட்டவர்கள் வேறெவரும் இல்லை; இதை நான் அல்ல - 1968ல் அறிஞர் அண்ணா அவர்களே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

''நான் கவலையோடு இருக்கிறேன் என்றால், முதன்முதலில் கண்டுபிடிக்கக் கூடியவர் கருணாநிதிதான். கோபமாக இருக்கிறேன் என்றால், முதன்முதலில் கண்டறிபவரும் கருணாநிதிதான்! நான் கோபமாக இருப்பது தெரியாமல் என்னிடத்தில் ஏதாவது பேசி, கோபமாக நான் நான்கு வார்த்தை சொன்ன பிறகு அண்ணா கோபமாக இருக்கிறார், என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்!

''கலைக்கு இருக்கும் ஒரு சிறப்பே அது. கவலைப்பட்டு நடிக்கிறானென்றால், மற்றவர்களும் அதை உணர்ந்து அல்லது அந்தக் கணமே அதை அறிந்து மற்றவர்களைக் கவலைப்பட வைப்பதுதான் கலைஞர் அவர்களின் திறமை. அதைப்போல என்னுடைய கோபதாபங்களை: என்னுடைய கவலைகளை உடனுக்குடன் நொடிப் பொழுதில் அறிந்து, அதை மாற்றவேண்டும் என்ற அக்கறையோடு நல்ல முறையில் துணைபுரிவதில், கருணாநிதிக்கு ஈடு கருணாநிதி தான்!''

இவ்வாறு அறிஞர் அண்ணா அவர்களே எழுதிப் பாராட்டியிருக்கிறார்கள் நம் எழுச்சிக் கலைஞர் அவர்களைப் பற்றி!

நான் தருமபுரியினன் என்பதனாலே இன்னொன்றை முக்கியமாகக் குறிப்பிட்டாக வேண்டும் இங்கே.

1965ல் தமிழகமெங்கும் இந்தி எதிர்ப்புக் கனல் மூண்டெழுந்து அதன் காரணமாகக் கலைஞர் அவர்கள், பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையிலே ஆட்சியாளர்களால் அடைக்கப்பட்டிருந்த நேரம்; சிறைச் சாலையில் போய் கலைஞர் அவர்களைப் பார்த்துவிட்டு வந்து அண்ணா அவர்கள் எழுதும்போது குறிப்பிட்டிருந்த ஒரு செய்தி, என் கண்களைக் குளமாக்கிவிட்டது, இதுவே அச்செய்தி!

''நான் கருணாநிதியைப் பார்த்தபோது அவர் 'அண்ணா நலமா? என்று கேட்பார் என்று கருதினேன். அண்ணி சுகமா? பரிமளமும், இளங்கோவனும் கௌதமனும் பாபுவும் சௌக்கியமா? என்று கேட்பார் என்று நினைத்தேன்.

கோபாலபுரம் போனீர்களா? குடும்பத்தைப் பார்த்தீர்களா? இல்லாளும் செல்வங்களும் நலமா? என்று கேட்பான் என்று எண்ணினேன். ஆனால், கருணாநிதி இதையெல்லாம் கேட்கவில்லை; என் குடும்பத்தைப் பற்றியோ, தன் குடும்பத்தைப் பற்றியோ எதுவும் விசாரிக்கவில்லை.

''என்னண்ணா, தருமபுரி எப்படியிருக்கிறது? கழகம் வெற்றி பெற்று விடுமா? என்பதுதான் அவர் கேட்ட முதல் கேள்வி!''

எங்கள் தருமபுரி தொகுதியில் தேர்தல் மேகம் சூழ்ந்திருந்த நேரம் அது. இருப்பினும் தாம் சிறைப்பட்டிருந்த போதும் கொள்கைத் தங்கமாம் தலைவர் கலைஞர் அவர்கள்; வீட்டு நலம் கருதாதவர்; நாள்தோறும் நாட்டு நலத்திலேயே கருத்தாக இருப்பவர்; கழகத்தின் பலத்திலேயே கவனமாக இருப்பவர் என்பதற்கு ஏற்ற எடுத்துக் காட்டல்லவா இது! எப்படி மறக்கவியலும் எங்களால்?

உதயசூரியனின் ஒளிபெற்றுத்தான் நிலவு ஒளி சிந்துகிறது என்பது அறிவியல்; அதேபோல் நமது இளைஞரணிச் செயலாளர் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களின் நிழலாக விளங்குவது நமக்கெல்லாம் பெருமையளிக்கும்.

இத்தனை ஒளி வீசும் சொக்கத் தங்கமாம் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைத் தொண்டருக்குள் தொண்டனாய் நின்று நானும் - இருகரம் கூப்பி, ஆயிரம் பிறை கண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்த்தி வணங்குகிறேன்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

இலங்கை தமிழ் அமைச்சர் மாண்புமிகு **சௌ. தொண்டமான்** அவர்களின்

வாழ்த்து

திருமிகு பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் தனது உலகளாவிய நான்காவது மகாநாட்டை இம்முறை தாய்லாந்து நாட்டின் தலை நகரான பாங்கொக் நகரில் நடத்தவிருப்பதறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த உலக மாநாட்டில் இலங்கையின் சார்பில் என்னையும் பங்குபெறுமாறு அன்புடன் அழைத்திருக்கும் பெருங்கவிக்கோ டாக்டர் வா.மு.சேதுராமன் அவர்களுக்கும், வரவேற்புக் குழுத் தலைவர் டாக்டர் இலியாசு அவர்களுக்கும், மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒருகால், தெற்கே தென்குமரியையும் வடக்கே வட வேங்கடத்தையும் எல்லையாகக் கொண்டு முடங்கிக்கிடந்த தமிழ், இன்று உலகளாவிய ஒரு மாபெரும் மொழியாக மலர்ந்திருக்கிறது. அண்மையில் செய்யப்பட்ட ஒரு ஆய்வின்படி இன்று 112 உலக நாடுகளில் தமிழ் மக்கள் பெருந்தொகையினராகவோ, சிறு தொகையினராகவோ இடம்பிடித்து, தமிழ் மொழியை நமக்குள்ளேயேனும் பேசி வாழ்ந்து வருகிறார்கள் என்று அறிகிறோம்.

இவ்வாறு விரிந்து பரந்துபட்ட தமிழையும், தமிழ் மக்களையும் காத்து ஒருங்கிணைத்து செயல்படத் தூண்டுவது தலைசிறந்த ஒரு பெரும் பணியாகும். இந்தப் பணியைக் கடந்த 22 ஆண்டுகளாக பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் சோர்வின்றிச் செய்து வருவது பாராட்டற்குரியதே.

1999 மே 23 - 25 ஆம் திகதிகளில் பாங்கொக் நகரில் நடைபெற இருப்பது நான்காவது மாநாடு. முதல் மூன்று மாநாடுகளும் முறையே திருச்சி, சென்னை, ஜெர்மன் - பெர்லின் ஆகிய நகரங்களில் நடைபெற்றிருக்கிறது. நான்காவது மாநாட்டை தாய்லாந்தில் நடத்துவது என்று முடிவு செய்திருப்பது பொருத்தமேயாகும். தாய்லாந்து நாட்டில் 500 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றும், பல இடப் பெயர்கள் கூட இன்றும் தமிழை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றதென்றும், மாரியம்மனுக்குக் கோயில் அமைத்து தமிழ் மொழியில் வழிபாடு அங்கு இன்றும் இருக்கிறதென்றும், தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாசுரங்கள் பாடப்படுகின்றன என்றும், தாய்லாந்தில் உள்ள தமிழ் அறிஞர்கள் குறிப்பிடும்போது பெருமிதத்தால் எமது நெஞ்சங்கள் பூரிக்கின்றன.

பாங்காக் மாநாட்டில் எனது இனிய நண்பரும் தமிழ்நாடு முதலமைச்சருமான கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பவள விழாவையும் மாநாட்டின் ஒரு நிகழ்ச்சியாக நடத்தத் திட்டமிட்டிருப்பது எனக்குப் பேருவகை தருகின்றது. கலைஞர் நீடு வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

திருமிகு பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் பாங்கொக் மாநாடு சீரும் சிறப்பும் பெற்று, மலர்வும் மங்கலமுமாக நடைபெற, மன நிறைவோடு வாழ்த்துகின்றேன்.

தங்களன்புள்ள,

கொழும்பு

22.04.1999

S. THONDAMAN, M.P
Ministry of Livestock Development & Estate Infrastructure
45, St. Michael's Road, Colombo-3.
Telephone: 44 1848
Fax: 941 - 541 364

தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில், 1999 மே 23-25 ஆம் நாள் நடந்த

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற மாநாட்டில்

உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின்

வரவேற்புரை!

மாட்சி மிகு தலைவர் அவர்களே! மெய்யன்பர்களே! வணக்கத்திற்குரிய தாய்லாந்து நாட்டின் இந்தியத் தூதுவர் அவர்களே! அனைத்து உலகநாடுகளிலிருந்தும் வருகை தந்திருக்கக் கூடிய தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கள் அனைவரையும் வணங்கி வரவேற்பதில் பூரிப்பும் பெருமிதமும் அடைகிறோம்.

தாய்லாந்தின் சதிர கோசஸ் நாகப்பிரதிபா அறக்கட்டளையும் - பன்னாட்டுத் தமிழுறவு மன்றமும் இணைந்து நடத்தும் நான்காம் உலகத் தமிழ் மாநாடு இது வாகும். தமிழகத்தில் திருச்சி, சென்னையிலும், செர்மனி பெர்லினிலும் முறையே முதல் - இரண்டு - மூன்றாம் மாநாட்டினைச் செம்மையாக நடத்தி நான்காம் மாநாட்டினைத் தாய் மனம் கொண்ட மக்கள் மட்டுமல்ல - நம் மாணிக்கவாசகப் பெருமான் கூறுவதைப் போல, தாயினும் சாலப்பரிந்து பரிவு காட்டும் தாய்லாந்து மக்கள் அரவணைப்போடு இந்த நான்காம் மாநாடு எல்லையற்ற இருளின் நடுவே முகிழ்த் தெழும் - தமிழ் தமிழினத்திற்கு விடிவுகாட்டும் உதய சூரியனைப் போல இன்று ஒளிமுகம் காட்டித் தொடங்குகிறது.

நாம் நம் மாநாட்டின் ஆய்வரங்கத்தின் பொதுத்தலைப்பாக **"21-ஆம் நூற்றாண்டை நோக்கித் தமிழ் - தமிழர்"** என்ற பொதுத்தலைப்பின் கீழ் பல உட் தலைப்புகளைத் தந்தோம். 21-ஆம் நூற்றன்டை நோக்கி நம்தமிழர்களை அழைத்துச் செல்வது என்றால் அதற்கு எத்தனை கொடிய பொய்மைகளை- உட்பகைகளை - இடையுறுகளை இடறி, வெற்றிக்குஅழைத்துச் செல்ல வேண்டும் என்பதை, எமக்கு ஏற்பட்ட அடாத சோதனைகள் வேதனைகள் எடுத்துக் காட்டுகின்றன. இவைகளை எல்லாம் புறங்கண்டு இந்த நான்காம் மாநாட்டுச் சாதனையை நிகழ்த்தவைத்த தமிழன்னையின் திருவடித்தாமரைகட்கு அனைத்துப் புகழையும் பெருமைகயையும் காணிக்கை ஆக்குகிறோம்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் நடத்திய ஒவ்வொரு தமிழ் மாநாடும், மிக மிக நெருக்கடியான காலக்கட்டங்களில் தமிழர்களுக்கு உணர்வும், எழுச்சியும் ஊட்டும் வகையில் நடை பெற்றுள்ளன. பன்னாடுகளில் வாழும். உலகளாவிய தமிழர்கள் - தமிழ் - உயர்வுக்கான இலக்குகளை கொள்கைகளை ஏந்திப் பிடித்து உயிர்ப்பினை ஊட்டி உள்ளன. இந்த வழித்தடத்தில் 21-ஆம் நூற்றாண்டை நோக்கி அடி எடுத்து வைக்கும் தற் கால கட்டத்திற்குத் தக உன்னதமான இலக்குகளுக்குரிய வித்துகளை இம்மாநாடு விதைக்கும் என்பதில் எள்ளவும் ஐயப்பாடில்லை.

தமிழினம் உலகத்தின் மூத்த இனம். கிரேக்கம் ஈப்ரு, அரபு போன்ற மொழிகளுக்கு முன்பே தோன்றிய மொழி நம் மொழி. உலகமெல்லாம், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே நாவாய் ஓட்டி, நாகரிகப் பண்பாட்டைக் கற்பித்தவர்கள் தமிழர்கள். பழங்கால மொழிகளோடு,ஒப்பு நோக்கத் தக்க தலை சிறந்த இலக்கியங்கள் அதன் வழியாகத் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் இன்றைய உலகச் சமுதாய வளர்ச்சிக் கருத்துகளுக்கு அடித்தளம் ஊட்டுவதாக அமைந்துள்ளன. இந்த அடிப்படைக் கருத்துகளின் மனித நேய மாண்புக்கும் உலக இன மக்களின் மனிதநேயத்திற்கும் கட்டியம் கூறுவதான் சங்ககாலப் புலவர் கணியன பூங்குன்றனார்பாடிய,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது முதிர்ந்த உலக மனித நேயத்தின் எல்லைக் கோடாகும். இத்தகைய பண்டைப் பண்பாட்டிற்குச் சொந்தக் காரர்களாகிய தமிழர்கள் இடைக்காலத்தில் பலநாடு பலமொழி, பலஇன, பலமதப் படை யெடுப்புகளால் வீழ்ந்தோம். கலப்பினத் தாக்கங்களின் சீரழிவினை ஏற்றோம். எனினும் அவ்வப்போது தோன்றல் களாக வந்த ஞானிகள் வேந்தர்கள் ஓங்கிய இறையாண்மையான வெற்றிகளால் உலகக் கடல்களில் கலம் செலுத்திப் பலநாடுகளில் தமிழ் நெறித்தடம் பதித்துள்ள அடையாளச் சுவடுகள் இன்றும் ஒளிச்சுடர் வீசுகின்றன.

தமிழ்மக்கள் உலக வரலாற்றோடு பின்னிப் பிணைந்த காரணத்தால் பன்னாடுகளில் வணிகம் கலாச்சாரம் உறவு-பணிகள் குறித்த பயணங்கள் சென்று தங்கள் பண்பாடுகளை உருவாக்கிப் பதித்துள்ளனர். இத்தகைய தமிழர் பண்பாட்டுக் கூறுகள் கீழ்த்திசை நாடுகளில் உள்ள கோயில்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் நடைமுறைத் தன் மைகளால் அறிகிறோம்.

அன்பு, அறம், மனித நேயம், மாந்தரியல் பண்பாடுகளின் தன்மைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் தாய்லாந்து நாட்டுக்கும், தமிழ் நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் அடிப்படையான பண்பாட்டுக் கூறுகள் மிக மிக ஒத்துள்ளன.

"அன்பின் வழியது உயர் நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு எடுத்துக் காட்டான - முதன்மை மக்கள் வாழும் நாடு - இந்தப்பூமிப் பந்தில் தாய்லாந்து நாடே தலைமைபெறும் என்றால் மிகையாகாது. ஆசை அறுத்தபுத்தபகவானின் ஆன்ம நேய ஒருமைப் பாட்டின் காவலர்களாக கபிலவஸ்துவில் பிறந்த சித்தார்த்த தேவ மனிதனின் கொள்கை நிலையங்களாகப் பவனிவரும் தாய்லாந்து மக்களின் பண்பாடும் அறமும்-அன்பும்-அறிவும்-தமிழர் - இந்தியர் பண்பாடுகளின் ஒருங்கிணைப்பின் வடிவங்களாகத் திகழ்கின்றன.

தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் ஒரு மரகத புத்த தேவன் ஆலயம் உள்ளது. வணக்கத்திற்குரிய இப்புத்தரை உலகமக்கள் தரிசிக்கின்றனர். உச்சியில் வைத்து உலகமக்கள் அமைதிகாண வாழிபாடு செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இதேபோன்று இந்தியாவின் தமிழ் நாட்டில் உத்திர கோசமங்கை என்னும் ஊரில் மரகத நடராசர் சிலை உள்ளது. ஆனால் அம்மரகத நடராசர் சிலையைச் சந்தனக் காப்பால் ஆண்டு முழுவதும் இருட்டறையில் அடைத்துவைத்துள்ளனர். மார்கழித்திங்கள் திருவாதிரை நாள் மட்டும் சந்தனம் பூசிய காப்பைப் பிரித்துத் திறந்து வைக்கிறார்கள் வணங்குவதற்கு! தாய்லாந்து மரகதபுத்த பகவான் சிலை எவ்வாறு உலகமக்கள் அனைவர் தரிசனத்திற்கும் பொதுமைப்படுத்தப் பட்டுள்ளதோ அதைப் போல உத்திரகோசமங்கை நடராசர் மரகத உயிர்ச் சிலையும், உச்சி முகடுவைத்து உலக மக்கள் தரிசனத்திற்குத் தாய்நலாந்து நாட்டை முன் மாதிரியாக வைத்துப் பொதுமைப் படுத்த வேண்டும்.

தாய்லாந்து, பாங்காக் மேவிய புத்தர் சிலைக்கும், இன்றைய தமிழ் உத்தரகோச மங்கை மேவிய நடராசர் சிலைக்கும் உள்ள தொடர்பைஆய்வாளர்கள் கண்டறிய வேண்டும்.

தாய்லாந்து அரசர்கள் முடிசூடும்போது திருவெம்பாவை ஓதி முடிசூடும் பழக்கம் இன்றும் உள்ளதாக அறிகிறோம். இராமர் பெயர் சாலைகளுக்குச் சூட்டப்பட்டுள்ளது. அரசுவாரிசுகள் இராமர் திருப்பெயர் சூடும் நடைமுறை உள்ளது. தமிழக இந்தியத் தெய்வங்களைப் பொதுமக்கள் வணங்குகின்றனர். மகாமாரி கோயில் 125 ஆண்டுகளுக்கு முன்பு பாங்காக்கில் கட்டப்பட்டுள்ளது (மலரின் முன் அட்டையில் கோபுரம் காட்டப்பட்டுள்ளது). தாய் மக்களின் தெய்வமாக மகாமாரி அருள் பாலிக்கிறாள்.

இப்படியாக ஆய்ந்தாய்ந்து பார்த்தால் தாய்லாந்து மக்களுக்கும் தமிழக இந்திய மக்களுக்கும் வழிவழியான ஒருமைப்பாடு மீக்கெழுந்திருக்கிறது. இம்மாநட்டின் நோக்கமாக இந்தியத் தமிழக - தாய்லாந்து, பண்பாட்டுப் பிணைப்புக்கு மேன்மேலும் நன்நிலை ஏற்பட்டுள்ளது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இந்நான்காம் மாநாடு தாய்லாந்து உள்ளிட்ட அனைத்துக் கீழ்த்திசை நாடுகளின் மக்களின் அடி நாள் தொட்ட தமிழக இந்தியப் பண்பாடு மனித நேயத் தொடர்போடும் இலக்கியமொழி வளர்ச்சிக்கும் உறுதுணை புரியும். இன்றைய புதுமை நல்கும் உலகளாவிய கணினியுகத்தில் வாழும் தமிழ்மக்களின் அறிவியல் தொடர்புகளுக்குச் சிறந்ததொரு தொடர்புகளை உருவாக்கித் தரும் பண்டுதொட்ட இலக்கிய வளமிக்க தமிழ் மொழி மேன்மேலும் ஓங்கிட விரிவாக்கச் சிந்தனைகளை நல்கும். உலகளாவிய தமிழ் மக்களின் நெருக்கடிகட்கு அமைதியான தீர்வுகளைக் காண நடுநிலையோடு முயன்று ஒல்லும் வகையான் துணைபுரியும்.

இத்தகைய செயலாக்கச் செயல் திட்டங்களுக்கெல்லம் உறுதுணையாக இந்த மாநாடு இவ்வளவு சீரும் சிறப்புமாக நடைபெற **சதிரகோசஸ் நாகப்பிரதிபா அறக் கட்டளையும் அதன் தலைவர் சுலக் சிவரட்சாவும்** துணைத்தலைவர் **ருலட்லோகலாம்பாவும் உறுப்பினர்கள்** அனைவரும் அரும்பாடுபட்டு ஒத்துழைப்பு நல்கினர். முன்னின்று நடத்த உள்ளனர். செய்யாமற் செய்த இவ்வுதவிக்கு உலகத்தமிழர்கள் என்றென்றும் நன்றி யுடையோம். தாய்லாந்து நாட்டின் இந்தியத் தூதர் எச்.இ.இராஜேந்திராய், மாநாடு சிறக்க வாழ்த்து வழங்கிய இந்தியக்குடியரசுத் தலைவர், தமிழக முதல்வர், பேராசிரியர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், அனைவருக்கும் நன்றியுடையோம். மாநாடு சிறக்க வருகை தந்த அனைத்து நாட்டுத் தமிழ்ப் பெருங்குடிமக்களுக்கும் நன்றி கூறி உங்கள் அனைவரையும் வரவேற்று வணங்குகின்றேன்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் **தளபதி கி. வீரமணி** அவர்களின்

வாழ்த்துரை

பேரன்புடையீர்,

வணக்கம், பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு தாய்லாந்தின் தலைநகரில் நடைபெறுவதும், அதனையொட்டி மலர் வெளியிடுவதும் வரவேற்கத் தக்கவையாகும்.

தமிழின் தாயகமாகிய தமிழ்நாட்டிலேயே அந்நியப் பண்பாட்டு ஆதிக்கம் தலைகொழுத்து நிற்கிறது. தமிழன் வீட்டுப் பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் இல்லை என்கிற அளவுக்கு அதன் அவலம் நீண்டுப்போய்விட்டது. முதலில் இதற்கொரு முடிவு காணப்படவேண்டும். தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்கள் சமஸ்கிருத மயமாக்கப்பட்டுள்ளதை மீட்க வேண்டும்!

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நடுவில் இனவுணர்வை, பொதுநல உணர்வை ஊட்ட வேண்டும். தமிழனுக்கென்று ஒரு நாடு இல்லாத நிலையில் தமிழனின் உரிமை மறுக்கப்பட்டால் குரல் கொடுக்க ஒரு நாடு கிடையாது என்பது தமிழர்களின் கையறு நிலையாகும்.

முதலில் தமிழின மக்களின் சிந்தனையில் அடைந்திருக்கும் பழமைப்பாசிகள், குப்பைகள் அகற்றப்பட்டு, பகுத்தறிவு வெளிச்சமும், தன்மானத் தட்ப வெப்ப சூழ்நிலையும் உருவாக்கப்பட்டால்தான் 21-ஆம் நூற்றாண்டிலாவது நாம் தலைகீழ் மாற்றத்தை அடைய முடியும். தந்தை பெரியார் விரும்பிய மானமும், அறிவும் உள்ளவர்களாக நாம் தலை நிமிர்ந்து நிற்க முடியும்! அந்த நோக்கில் தீர்மானங்கள், திட்டங்கள் பாங்காக் மாநாட்டில் வடிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். மாநாட்டுப் பணிகளிலும் மலர்ப் பணிகளிலும் அயராது ஈடுபடும் தகைமைசால் நண்பர்களைப் பாராட்டுகின்றேன்.

மாநாடு வெற்றிபெற வேண்டும் என்ற எனது நல்விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்களன்புள்ள,

கி. வீரமணி

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

மலேசிய கூட்டுறவுக் காவலர் டான்ஸ்ரீ டத்தோ **கே.ஆர் சோமசுந்தரம்** அவர்களின்

வாழ்த்துச்செய்தி

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் உலகளாவிய நான்காம் மாநாடு தாய்லாந்து நாட்டின் பேங்காக் நகரில் நடைபெறவிருப்பதறிய மகிழ்ச்சியடைகிறேன்.

உலகின் பல நாடுகளில் குடியேறிய தமிழர்கள் அவரவர்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் தமிழ் மொழியைப் பிற இனத்தவரிடையே அறிமுகப்படுத்தி பெருமை சேர்த்துள்ளனர். சில நாடுகளில் தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாகவும் பயன்படுத்துகின்றனர். ஒரு சில நாடுகளில் அரசு அங்கீகாரம் பெற்ற மொழியாகவும் தமிழ் மொழி இருக்கின்றது. இது தமிழர்களுக்குப் பெருமையும்,தமிழ் மொழிக்கு வளர்ச்சியும் ஆகும்.

''இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கித் தமிழ் - தமிழர்'' என்று இம்மாநாட்டின் கருப்பொருள் தேர்வுசெய்திருப்பது மிகப் பெருத்தமானதாக இருக்கின்றது.

உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களிடையே அறிமுகமும், உறவும் ஏற்படுவதன் வழியும், ஆய்வுகள் செய்வதன் வழியும் மொழியை வளர்க்கவும், செம்மைப்படுத்தவும் இயலும். பல்துறை தகவல் யுகத்தை நோக்கி அறிவியலும், தொழில் நுட்பத்துறையும் வளர்ச்சி கண்டு வருகிறது. தொழில் நுட்பத்தோடு இணைந்து வளர தமிழர்கள் ஒன்றுபடுவதும், உறவை வளர்த்துக் கொள்ள வேண்டியதும் மிக முக்கியமாகும். இந்தப் பணியை மேற் கொண்டு உலக நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்டு வரும் இம்மன்றத்தின் அமைப்பாளரும் செயலாளருமான பெருங்கவிக்கோ டாக்டர்.வா.மு. சேதுராமன் அவர்களின் பணியும்,நோக்கமும் வெற்றி பெற நல்வாழ்த்துக்கள்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் அறிஞர் பெருமக்களின் ஆய்வுகளும், விவாதங்களும் உலகளாவிய அளவில் வாழும் தமிழ்ப் பெருமக்களுக்கும், தமிழ் மொழிக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாநாடு வெற்றிபெற நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்,

டான்ஸ்ரீ டத்தோ **கே.ஆர் சோமசுந்தரம்** PSM. DPMS. AMJ.JP
நிர்வாகத் தலைவர்
தேசிய நலநிதி கூட்டுறவு சங்கம் லிட்.,
கோலாலாம்பூர், மலேசியா.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

பேராயர் **எஸ்ரா. சற்குணம்** அவர்களின்

வாழ்த்துரை!

அன்பு கெழுமிய நண்பர் பெருங்கவிக்கோ அவர்களுக்கு,

வணக்கம்!

மே திங்கள் 23 முதல் 25 வரை பாங்காக்கில் நடை பெறவிருக்கும் பன்னாட்டுத் தமிழறவு மன்றத்தின் நான்காம் மாநாடு சிறப்பாக நடைபெற தாங்கள் எடுக்கும் நன்முயற்சி வெல்க என நெஞ்சார வாழ்த்துகிறேன். தமிழ்மொழி, பண்பாடு, தமிழ் இனமானம் காக்கும் நமது தானத்தலைவர் தமிழினக்காவலர். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள வருவதை எண்ணி பேருவகை கொள்கின்றேன். பல்வேறு சமயங்களைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர் பலரும் பன்னாட்டு இஸ்லாமியத் தொழிலதிபர்களும் பங்கேற்பதைக் குறித்து பெருமிதங் கொள்கின்றேன். நான் அறிஞனும் அல்ல. சிறந்த கவிஞனும் அல்ல. ஆயினும் இம்மாநாட்டில் கட்டுரை படிக்க வாய்ப்பளித்துள்ளீர்கள். தமிழ் மீது கொண்ட பற்றால். பாசத்தால் அதற்கான தகுதி பெற்றேன் என எண்ணி அகமகிழ்கின்றேன்.

சமயப் பணிக்கும் மேலாகச் சிறந்த தமிழ்த் தொண்டாற்றுவதை இலக்காகக் கொண்டு தொன்றுதொட்டே பணிபுரிபவர்கள் நான் சார்ந்துள்ள கிறிஸ்துவ சமயப் பெரியார்கள். ஜி.யூ.போப், கால்டுவெல், வீரமாமுனிவர், கிருட்டின பிள்ளை. வேதநாயகம் பிள்ளை முதலானோர் ஆற்றிய அளப்பரியத் தொண்டிற்கு தமிழகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

பொதுமறை கண்ட வள்ளுவன் பிறந்த நாட்டில் சமயபேதங்களை மறுத்து சமயப் பிணக்குகளில் சிக்குண்டு போகாமல் தமிழ்மக்கள் அனைவரும் எந்நாட்டில் இருப்பினும் தமிழுறவு வளர்த்து, தமிழ்த் தொண்டு புரிந்திட வேண்டுமென விழைகின்றேன். இம்மாநாட்டின் வெற்றிக்காக அதிகம் உழைக்கும் தங்களையும் தாய்லாந்து நாட்டுத் தமிழ் மகன் டாக்டர் இலியாஸ் அவர்களையும் வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் மொழி! வளர்க தமிழ் இனம்!

எஸ்ரா. சற்குணம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு
சதிர கோசஸ் நாகபிரதிபா நிறுவனத் தலைவர்

சுலக் சிவ ரக்சா அவர்களின்

அழைப்பு மடல்

அன்புக்குரிய சேதுராமன் அவர்களுக்கு

தாய்லாந்து தலைநகர், பாங்காக்கில் மே மாதம் 23முதல் 25வரை நடைபெறும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காம் உலகளாவிய மாநாட்டினை பொறுப்பேற்று நடத்துவதில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன்.

தமிழர்களுக்கும் இங்கு வாழும் தாய்லாந்து மக்களுக்கும் இடையே பண்பாட்டு உறவு தொன்று தொட்டு இருந்து வருகிறது. இந்த இரு வழி உறவினை மேலும் வலுப்படுத்துவதற்கும், மேம்பாடு அடையச் செய்வதற்கும் நல்லிணக்கத்திற்கும் வழிவகை செய்வதே இம்மாநாடின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று என அறிகிறோம்.

மேலும் உலக சகோதரத்துவம் மேலும் வேற்றுமையில் ஒற்றுமை உலகளாவிய சிந்தனை போன்றவைகளை வளர்த்தெடுக்க இம்மாநாடு வழிவகுக்கும் என நம்புகிறேன்.

இங்கு எங்கள் அமைப்பும் இத்தகைய குறிக்கோள்களை மையமாக வைத்து பணிபுரிந்து வருகிறது. தாய்லாந்து மக்கள் இம்மாநாடு மூலம் தாய்த் தமிழ் நாடு மற்றும் பன்னாடுகளிலிருந்து வரும் தமிழ் மக்களிடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுத்தி அதன் வழி, பயணடைவார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

சுலக் சிவரக்சா
தலைவர்.

We would be delighted to that the Fourth World Conference of the International Tamil Intergration Society in Bangkok on May 23rd to 25th 2542

We understand that one of the main objectives of the conference is to promote better understanding between Tamils and the poeople of the region with which Tamils have had cultural exchanges from ancient times. We also understand that the conference will promote ideas ofuniversal brotherhood and unity in diversity.

These are objectives that we ourselves would like to promote. We are confident that a number of Thais would benefit from the experience of interacting with Tamil Scholars from India and elsewhere.

Sulk Sivaraktsha

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற
4-ஆம் மாநாட்டு நிர்வாகக் குழுத் தலைவர்
திரு. ஏ.என்.சாமி அவர்களின்

வாழ்த்துரை!

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ அவர்களை எதிர்பாரா வகையில் சந்தித்தேன். அப்போது அவர் தமிழ் மாநாடு நடத்தும் நிலைக்காகத் தத்தளித்துக் கொண்டிருந்தார். நான் அதிகம் படித்தவன் அல்ல. என் நாடு தாய்லாந்து. ஆனால் நான் தமிழ்ப் பரம்பரையில் வந்தவன். இந்த உணர்வே என்னைச் சேதுராமனோடு ஒன்றாக உயர்வாகக் கலக்கவைத்தது! மூவேந்தர் பற்றி, முத்தமிழ்பற்றி எனக்குத் தெரியாது! ஆனால் தமிழ், தமிழர் உலகில் ஓங்க வேண்டும், தமிழ் மக்கள் செய்யும் தெய்வப் பணிகள் செய்ய வேண்டும் என்ற பெரிய ஆவல் எனக்குண்டு!

சொந்தக் கப்பல் வைத்து கடலெல்லாம் சுற்றியுள்ளேன். கப்பல் கவிழ்ந்த போதும் கலைப்படாத நான், ஐயா, சேதுராமன் கவலையில் பங்குகொண்டு, பன்னாட்டுத் தமிழுறவு மன்ற மாநாட்டை வெற்றிகரமாக நடத்த என் முழுமையான உழைப்பைத் தந்துள்ளேன். என் மகள் இறந்த சாவுக்குக் கூடச் செல்லாமல் தமிழ் மாநாட்டுப் பணிகளைக் கவனிக்கிறேன். தமிழ் மக்களே வாருங்கள். தாய்லாந்துத் தமிழன் வரவேற்கிறேன், வணங்குகிறேன், வாழ்த்துகிறேன்.

அன்புடன்

ஏ.என்.சாமி
(தாய்லாந்து)

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

அறிஞர் Dr. வா.செ. குழந்தைசாமி அவர்களின்

வாழ்த்துச் செய்தி

அன்புள்ள திரு. பெருங்கவிக்கோ அவர்களுக்கு,

வணக்கம்,

தாங்கள் தாய்லாந்தில் நடத்த இருக்கும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காவது மாநாடு பற்றிய தங்கள் கடிதத்தையும் அதனுடன் தாங்கள் சேர்த்த அனுப்பி இருந்த அறிவிப்புகளையும் பார்த்தேன். பார்ப்பவர்கள் மலைக்கும் அளவில் பலருடைய ஈடுபாடுகளுடன் இம் மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறீர்கள். மாநாடு உண்மையிலேயே சிறப்பாக அமையும் என்பதில் எனக்கு அணுஅளவும் ஐயம் இல்லை. நான் பங்கு கொள்ள வேண்டும் என்று அன்புடன் வேண்டி இருக்கிறீர்கள். தங்களுடைய அழைப்புக்கு நன்றி. இயலுமா என்பது பற்றி எண்ணிக் கொண்டு இருக்கிறேன்.

தங்கள் அசாதாரண முயற்சிக்கு மீண்டும் பாராட்டுகள்.

தங்கள் அன்புள்ள

வா.செ. குழந்தைசாமி

Ph.D., D.Litt.,F.N.A.Sc., F.N.A.E., F.I.E.,

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின்

வாழ்த்துரை

மேன்மைமிகு பெருங்கவிக்கோ டாக்டர் வா.மு.சேதுராமன் அவர்களின் மேலான சமூகத்திற்கு,

வணக்கம் பல! வாழ்த்துக்களும் பல!

தங்களின் மேலான வழிநடாத்துதலில் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் உலகளாவிய மாநாடு, இம்முறை பாங்காக் நகரில் நடைபெறவிருப்பது மிகுந்த பாராட்டுதலுக்கு உரியதாகும். மேற்கு அவுஸ்திரேலிய சைவமஹாசபையின் சார்பாகவும் அவுஸ்திரேலிய இந்துக்குருமார் கவுன்சிலின் சார்பாகவும், ஸ்ரீலங்காவில் தலைமைச்செயலகம் கொண்டு விளங்கும் அனைத்துலக இந்துசமய குருப் அவுஸ்திரேலியக் கிளையின் சார்பாகவும், தங்களின் அரிய பணிக்கு உளமார்ந்த பாராட்டுக்களும், மாநாடு சிறக்க வாழ்த்துகளும் தெரிவிக்கிறேன்.

வாழ்க! சுபம்!!

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

தெய்வத்திரு சக்கர ஹிந்து புத்த தர்ம தேரோ அவர்களின்

நல்லாசி

பலநாட்டு அறிஞர்கள் ஒன்று கூடி தமிழ், தமிழர்கள் உயர்வுக்கும் மாநாடு நடத்துவது அறிந்து மகிழ்ச்சி யடைகின்றோம்.

எம்மைச் சந்தித்த பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றத் தலைவர் பெருங்கவிக்கோ விடம் எமது நல்லாசியை வழங்கிணோம். இம்மாநாடு பௌத்த சமயம் ஆழமாக பதிந்துள்ள தாய்லாந்து நாட்டின் தலைநகர் பேங்காக்கில் நடைபெறுகிறது. நலிந்தோரின் வாழ்வுக்கு வழிகாட்டிய புத்த பெருமானின் பெரும் கொள்கைகளை முன் நிறுத்தி மனுக்குலத்திற்கு பல்லாற்றாலும் பணி செய்யும் தமிழ் அறிஞர் பெருமக்களுக்கு எனது பாராட்டுக்கள்.

என்றும் நலமுடன் வளமுடன் வாழ்க! உயர்க!

அன்புடன்

சக்கர ஹிந்து புத்த தர்ம தேரோ
கோப்பிங் - பேராக் - மலேசியா

அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம்

பங்காரு அடிகளாரின் அருளுரை

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் உலகளாவிய நான்காம் மாநாடு தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் நடைபெறுவதை அறிந்து மகிழ்வுமிகக் கொண்டோம். அழைப்பிற்கு நன்றி,

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் இம்மாநாட்டில் பங்கு கொண்டு பல்வேறு தலைப்புகளில் சொற்பெருக்காற்றவும், ஆய்வுக் கட்டுரைகள் படிக்கவும் ஏற்பாடுகள் செய்திருப்பதும் நல்லதொரு முயற்சியாகும், முயற்சி திருவினையாக வாழ்த்துகிறோம்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'',

என்ற தலையாய பண்பினை அடிப்படையாகக் கொண்டு வாழும் இனம் தமிழினம்.

அன்பும், பண்பும், அமைதியும், ஈகையும், ஆன்மீகமும், நெறிதவறா வாழ்வியல் முறைகளும், வானோங்கி வளர்ந்து விட்ட இந்த விஞ்ஞான யுகத்தில் மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான நற்குணங்கள் அவை என்பதை கருத்தொற்றுமையோடு யாவரும் ஏற்பர் என்பதில் ஐயமில்லை.

எத்தனை விதமான விஞ்ஞான தொழில் நுட்பங்கள் நாளும் உலகில் கண்டுபிடிக்கப் பட்டாலும் மனித மனத்தின் அடிப்படை வளர்ச்சிக்கும், பண்புகள் சிறக்கவும் அவை உதவுகிறதா? அவை கிடைக்க வழி என்ன? என்பதையும் இம்மாநாடு ஆராய்ந்தால் மேலும் சிறப்பாக இருக்கும் என எண்ணுகிறோம்.

ஆன்மீக நெறிகளைக் கடைப்பிடிப்பதின் மூலம் இவற்றை நிச்சயம் அடைய முடியும் என்றும் நாம் நம்புகிறோம்.

இத்தகுச் சூழ்நிலையில், எமது எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றி கூறி, இம்மாநாடு பல்லாற்றாலும் சிறப்புற நடைபெற எமது உளமார்ந்த ஆசிகள் உரித்தாகுக!

ஓம் சக்தி!

அருள் திரு பங்காரு அடிகளார்
நிறுவனர் தலைவர்
ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ,
பண்பாட்டு அறநிலையம்
மேல் மருவத்தூர்

பிரான்ஸ் தமிழுறவு மன்ற பன்னாட்டு உறுப்பினர் **ஆலன் ஆனந்தன்**

வாழ்த்துச் செய்தி

''நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு''

தமிழன்னை அறிஞர்களாலும், சான்றோராலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றாள். அந்த வகையில் தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்டு, தமிழின் இனிமையை, வளத்தை, தொன்மையை உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் கொண்டு செல்லும் ''கவிக்குயில்'' பெருங்கவிக்கோ வாழ்க பல்லாண்டு! தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்த தமிழ்ப் பெரியார் நமது பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள்.

பெருங்கவிக்கோ அவர்களின் அரிய முயற்சியில் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய நான்காவது மாநாட்டை மே மாதம் 23, 24, 25 ஆகிய திகதிகளில் பாங்காக் நகரில் ஏற்பாடு செய்துள்ளார்.

இவருடைய ஆற்றலை விளக்கத் தேவையில்லை. இவரது கவிநயமே தனி; சொற்களின் அலங்காரம் அடிமையாய் வந்து இவர் நாவில் நின்று ஏவல் செய்யும் ''பெருங்கவிக்கோ'' என்று பெயர் சூட்டியவர்கள் இவருடைய தரமறிந்துதான் தாரை வார்த்திருக்கிறார்கள்.

இவருக்குத் தமிழ்ப் பணிதான் குடும்பம்; அதனில் கொஞ்சம் ஓய்வு வேளையில்தான் இல்லம் சென்று வருதல். இப்படித் தன்னை மாற்றிக்கொண்ட மாமனிதருக்குத் தமிழன்னையைக் குளிர்விக்க விழாக்கள் எடுப்பதுவும், மாநாடுகள் நடத்துவதும் திருவிளையாட்டு.

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலை வின்றித்
தாழாது உஞற்று பவர்.''

தூய உள்ளத்தோடு பெருங்கவிக்கோ அவர்கள் தொடங்குகின்ற செயல்பாடுகள் அனைத்தும் நேய உள்ளம் கொண்ட திருமிகு. இலியாசு மற்றும் சுலக் சிவரக்சா போன்ற பெருமக்கள் கூடிநின்று நிறைவை செய்வார்கள்.

முதுபெரும் தமிழறிஞர்களை செர்மனி அழைத்துச் சென்று மூன்றாம் மாநாட்டை வெற்றியோடு நடத்திய திருமகனால், தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய நான்காம் மாநாடு வெற்றியாகவே அமையும் என்பது திண்ணம்.

''தம்பொருள் என்பதம் மக்கள் இனிதே தம்மக்கள்
தம்தம் வினையான் வரம்''.

வேலும், மயிலும் போல வள்ளுவரும், ஆண்டவரும், உடன் இருக்கின்றனர்.

இம்மாநாடு எல்லாவகையிலும் சிறப்புற விளங்கிட இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்க தமிழ்!

வளர்க தமிழன் ஒற்றுமை!

அன்புடன்

ஆலன் ஆனந்தன்
நகரமன்ற உறுப்பினர், பிரான்ஸ்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், தலைமையகச் செயலாளர்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

ஆஸ்திரேலிய பன்னாட்டுக் குழு அ. இரட்ணகாந்தன் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் தமிழுக்காக ஆற்றிவரும் தொண்டினை யாம் நன்கு அறிவோம். தாங்களும் இம்மன்றத்தினரும் தமிழ் மொழியினது வளர்ச்சிக்காக ஆற்றி வரும் பணி அளப்பரியது. தமிழ் இனம் நிலைத்து நிற்க தமிழ் மொழியின் வளர்ச்சி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களைத் தேச வேறுபாடின்றி ஒருங்கிணைத்து தமிழ் மொழியினை மட்டும் மனதில் கொண்டு பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் ஆற்றிவரும் பணி மிகவும் சிறப்பானது. நான்காம் உலகத் தமிழ் மாநாட்டினை இம்முறை பாங்காக்கில் நடைபெற ஒழுங்கு செய்து இதனைச் சிறப்புற நடைபெற உழைத்த அனைத்து தமிழ் அன்பர்களுக்கும் நன்றியுடன் எனது அன்பான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற பணி தொடரவும் மாநாடு சிறப்பாக நடந்தேறவும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் பணி.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

ஜெர்மன் பன்னாட்டுத் தமிழுறவுமன்றப் பன்னாட்டுக் குழு உறுப்பினர்



கேரி. கணேசலிங்கம் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

பேரன்பிற்குரிய பெருந்தமிழ்த் தொண்டன்.பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கட்கு வணக்கமும் வாழ்த்துகளும்.

தங்களது பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காவது உலகமாநாடு தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் நடைபெறுவது பற்றி அறிவிப்பு கண்டு அங்கலாய்ப்பில் தவிக்கின்றேன்.

உலகம் முழுதாண்ட தமிழ் இனத்தின் வரலாற்றின் இடைக்கால வீழ்ச்சிக்கு பின் கங்கைமுதல் கடாரம் வரை சோழப் பேரரசின் ஆட்சியின் கீழ் தமிழ் நிலமாய் இருந்து 1000 ஆண்டுகளின் பின் இன்றும் அச்சுவடுகளை தாங்கிநிற்கின்ற தாய்லாந்திலே இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை வரலாற்றை மீட்டு எடுக்கும் பெருஞ்செயல் ஆகும்.

உலகத்தமிழர்களை ஒன்றிணைக்கின்ற பெருஞ்செயலில் தாங்கள் ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்குரியது. அதற்கு உ.த.ப. இயக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் எமது பாராட்டுகளை தெரிவிப்பதுடன் இம்மாநாடு உலகத்தமிழர்களிடையே மொழி, பண்பாடு ரீதியில் ஓர் ஒருங்கிணைப்பை உருவாக்கவும் உலகத்தில் வாழும் பல இலட்சம் தமிழர்களை தாய் தமிழ் உணர்வுக்குள் கொண்டு வரவும் ஈழத்தமிழர்களின் அவல நிலையைப் போக்கி, அவர்கள் உரிமை பெற்று மக்களாக வாழ வழிஅமைக்கவும் பயன் விளைக்கட்டும்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழக செயலாளர் **ஆண்டியப்பன்** அவர்களின்

வாழ்த்துச் செய்தி

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் உலகளாவிய நான்காம் மாநாடு பேங்காக்கில் 1999மே திங்கள் 23 முதல் 25 வரை நடைபெறுவதை அறிந்து உளம் மகிழ்கிறோம்.

21-ஆம் நூற்றாண்டின் நுழைவாயிலில் உலகம் நின்று கொண்டிருக்கும் வேளையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. உலகில் வாழும் மற்ற இனங்கள் நம்மைவிட எவ்வளவோ முன்னேறியிருக்கும் வேளையில் தமிழன் மட்டும் பின்தங்கிவிடக்கூடாது.

21-ஆம் நூற்றாண்டினை நோக்கி தமிழ், தமிழர் எனும் மாநாட்டுக் கருப்பொருள் பொருத்தமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கருப்பொருள் விரிவாகவும் அதே வேளையில் அர்த்தத்துடனும் விவாதிக்கப் படவேண்டும்.

"கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி
நாட்டத்திற் கொள்ளா ரடி-கிளியே
நாளில் மறப்பாரடி!"

என்று பாரதி சொல்லியதுபோல் இல்லாமல் இந்த மாநாடு உண்மையில் பயனுள்ளதாக அமைய வேண்டும். செயற்படுத்தக்கூடிய தீர்மானங்களையே நிறைவேற்ற வேண்டும்.

மாநாடு வெற்றிபெற எங்களின் வாழ்த்துக்கள்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

ஈப்போ மாநகர் நல் நெஞ்சர்

திரு.இரா.மாணிக்கம் அவர்களின்

நல்வாழ்த்து

வருக தமிழரே! வாகை சூடும் மாநாடு காண வருக! எத்தனை தடுக்கும் சிறுமைகள் நேர்ந்தாலும் அதனை தவிடு பொடியாக்கி நிகரிலா தமிழ் மாநாட்டை நடத்தியே தீருவேன் எனப் புறப்பட்டிருக்கும் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களுக்கு எனது முதற்கண் வணக்கமும் பாராட்டும் உரியதாகும்.

உலகளாவிய நிலையில் தமிழ், தமிழர் ஏற்றம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் சீரிய முயற்சிகள் வெற்றி பெற வேண்டும்.

உறவு நிலையிலும், அறிவு நிலையிலும், ஆய்வு நிலையிலும், தமிழுக்கும் தமிழர்களுக்கும் அடித்தளமாக விளங்கப்போகும் பேங்காக் மாநாடு நிச்சயம் நல்ல பயனையும் சிறப்பையும் கொண்டு வரும் என நம்பலாம்.

மாநாட்டை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும் பெருங்கவிக்கோவிற்கும் மாநாட்டிற்குழுவினர்க்கும் குறிப்பாக மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் வா.மு.சே. திருவள்ளுவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

உலகளாவிய தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடுவதால் புதிய மில்லினிய ஆண்டு 2000ல் தமிழ் தமிழர் நிலை உயர ஆராய்வோம். வழி வகைகள் காண்போம். வாரீர்! வாரீர்!

இரா. மாணிக்கம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

பெரியார் பல்கலைக் கழகப் பதிவாளர்

முனைவர் ந. வேலுசாமி

வாழ்த்துரை

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காவது மாநாடு, தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக்கில் 1999 மே, 23, 24, 25 ஆகிய நாட்களில் நடைபெறுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. தமிழகச் சான்றோர் பலரின் அரவணைப்புடன் உலகளாவிய அடிப்படையில் மாநாடு நடப்பது குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் உருவாகிய எழுபதுகளிலும், எண்பதுகளிலும், நானும் அதன் உருவாக்கத்திற்கும் பரவலுக்கும் பெருங்கவிக்கோவுடன் உடன் இருந்தேன், உதவினேன். அது இன்றைக்கு ஆலமரமாகப் பல்கிப் பெருகி உண்மையிலேயே பன்னாடுகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு தமிழ், தமிழர் நலன்களுக்குக் குரல் கொடுத்து வருகிறது; ஒரு மேருபோல் அதைப் பெருங்கவிக்கோ வழிநடத்தி வருகிறார் என்பதை அறிந்து பாராட்டி மகிழ்பவன்.

உலகளாவிய தமிழுறவிற்குப் பல அமைப்புகள் இருந்தாலும், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் மூத்தது என்பேன்.

மலேசியத் தொழிற்சங்கவாதியும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. டேவிட் தலைமையில் உருவாகி அரும் பணி ஆற்றிவரும் உலகத் தமிழர் மாமன்றமும் மற்றொரு கோணத்தில் ஆக்கப்பணி ஆற்றி மாநாடுகள் பல நடத்தியிருப்பதும் இங்கே நினைவு கூரத் தக்கது. இவையிரண்டையும், இரு கண்கள் எனலாம்.

மாநாட்டில் உலகத் தமிழர் நலனை உள்வாங்கிய தீர்மானங்களை, 21-ஆம் நூற்றாண்டிற்கு அறிவியல் பூர்வமாகத் தமிழர்களை அழைத்துச் செல்லும் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு அவற்றை நடைமுறைப்படுத்தவும், ஆவன செய்ய வேண்டும் என்ற என் விழைவைத் தெரிவித்து - மலர் மணம் கமழ என் வாழ்த்துதல்களைப் பொழிகின்றேன்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டிற்கு

தமிழகக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் **து. விக்டர்** அவர்களின்

வாழ்த்துரை

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் உலகளாவிய ஒவ்வொரு மாநாடும் இச்சங்கத்தின் மூலம் நடைபெற்று வருகிறது என்பது நமக்கும் நம் தமிழ் மக்களுக்கும் மிக்க மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கிறது.

தற்போது நடைபெறவிருக்கும் நான்காம் மாநாடு பண்பாட்டுச் சிறப்புமிக்க தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கில் வரும் மே மாதம் 23-25 வரை நடைபெறவுள்ளது என்பதனை அறிந்து மகிழச்சியடைகிறேன்.

இவ்வியக்கத்தின் மூலம் நடைபெறும் கூட்டம் தமிழ் நாட்டிற்கும் தமிழுக்கும் மிக்க பெருமையை அளிக்கும் வகையில் அமையும் என நினைக்கிறேன்.

தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழ் மக்களுக்கு இவ்வியக்கத்தின் மூலம் தமிழ் பற்றியும், தமிழர் பண்பாட்டினைப் பற்றியும் அறியும் ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை நினைக்க மிகவும் பெருமையாக உள்ளது.

தங்களது அமைப்பின் அடிப்படை நோக்கம் தொன்மைத் தமிழ் மொழி இலக்கியங்கள் பற்றியும், உறவு, அறிவு, ஆய்வு மற்றும் பக்தி ஆகிய நிலைகளைப் பற்றியும் எடுத்து விளக்க ஒரு சந்தர்ப்பமாக அமைவது உன்னதமான செயல் என்றே கூறலாம். அத்துடன் எதிர்கால சந்ததியினருக்கும் தமிழைபற்றியும், தமிழரைப் பற்றியும் அறியவும் ஒரு வாய்ப்பாக அமையும்.

21-ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நாம் நம் மொழிக்கும் இனத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமையாக நினைத்து இவ்வியக்கத்தின் மூலம் பல்வேறு நாடுகளில் குடியேறியிருக்கும் பலதரப்பட்ட மக்களுக்கு பயன்படும்வகையில் நடத்தப்படவிருக்கும் இம்மாநாடு நல்ல முறையில் நடந்தேற வாழ்த்துகிறேன்.

உலகளாவிய நிலையில் தமிழ் மற்றும் தமிழர் ஏற்றம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் வழி செயலாற்றும் இவ்வியக்கம் மென்மேலும் உயர்வடைந்து உன்னத செயல்களை புரிய வாழ்த்துகிறேன்.

நுழைவாயில்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் நடத்தும் உலகளாவிய நான்காம் மாநாடு இவ்வாண்டு மேத் திங்கள் 23,24,25 ஆகிய நாட்களில் தாய் லாந்துத் தலைநகரான பாங்காக்கில் நடைபெறு கிறது. இந்த மாநாட்டில் வெளியிடுவதற்கென இச்சிறப்பு மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

'தமிழ்ப்பணிக்காகவே தமது வாழ்வினை ஒப்படைத்துக் கொண்டு, பலநாடுகளுக்கும் பறந்து பறந்து சென்று வந்து கொண்டிருக்கின்ற பெருங்கவிக்கோ, வா.மு.சேதுராமன் அவர் களைத் 'தமிழ்ப்பறவை' என்று நான் அழைப்ப துண்டு. ஏறக்குறைய இருபதாண்டுக்கு முன் அவரால் தோற்றுவிக்கப்பட்டதுதான் பன் னாட்டுத்தமிழுறவு மன்றம். இம் மன்றத்தை உரு வாக்கியதிலும், தொடர்ந்து வளர்த்து வருவதி லும், எனக்கும் பங்குண்டு என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும்.

பெருங்கவிக்கோ வா.மு.சே. அவர்களை என்றன் உடன்பிறப்பாக ஏற்றுச் செயல்பட்டு வருகிறேன் நான். அவர் ஆற்றுகிற பணிகளி லெல்லாம் அவருக்குத் துணை நிற்பவன் நான். அந்த வகையில்தான் இந்த மாநாட்டு மலரினை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டேன். மலர்க் குழு உறுப்பினர்களின் முழு ஒத்துழைப்போடு இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பவளவிழா வினை யொட்டி மாண்புமிகு அமைச்சர் முனைவர் தமிழ்க் குடிமகனார் தலைமையில் அமைக்கப் பட்டுள்ள மலர்க்குழுவிலும் நான் இடம் பெற்றுள்ளதால் அந்த மலரை உருவாக்கும் பணியிலும் நான் ஈடுபட்டுக் கொண்டு, அதே நேரத்தில் இந்த மலரையும் தொகுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மேலும் மிகக் குறுகிய காலத்தில் இம்மலரைத் தொகுக்க வேண்டிய சூழ்நிலை. எனவே, நண்பர்கள் உதவியுடன், 'அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல' இம் மலரினை இம்மலர்க்குழு உருவாக்கி உங்கள் முன் படைக்கின்றது.

எமது வேண்டுகோளுக்கிணங்கி அறிஞர் பெருமக்கள் பலரும் தங்கள் எழுத்தோவியங் களை அனுப்பி மலருக்கு மணமூட்டியிருக் கின்றனர்.

மேதகு குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன், மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர், மாண்புமிகு கல்வி யமைச்சர் பேராசிரியர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் வா. முல்லை வேந்தன் இலங்கை அமைச்சர் மாண்புமிகு தொண்டமான் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார், திராவிடர் கழகப் பொதுச்செய லாளர் திரு.வீரமணி ஆகியோரும் வாழ்த்தரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். அவர்களுக்கெல் லாம் மலர்க்குழு தனது நன்றியைக் காணிக்கை யாக்குகின்றது.

இம்மலர் உருவாக, உடனிருந்து ஒத் துழைத்த கவிக்குயில் பொன் ஐயனாரப்பன், கவிஞர் கடலூர் அ.தேவநாதன், உள்ளிட்ட நண்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை மலர்க்குழுத் தலைவர் பொறுப் பில் அமர்த்திச் சிறப்பித்த என் அன்பு உடன் பிறப்பு, பெருங்கவிக்கோ வா.மு.சே. அவர்கட் கும், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அல்லும் பகலும் மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டு, அரும்பாடு பட்ட வா.மு.சே. திருவள்ளுவர், வா.மு.சே.ஆண்டவர் ஆகியோர் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

காலம் மிகவும் குறைவாக இருந்ததால், பல கட்டுரைகள் இம்மலரில் இடம் பெற வாய்ப்பில்லாமல் போய் விட்டது. திட்டமிட்ட படி மலருக்கு எழில் கூட்டவும் முடியவில்லை. அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகின்றோம்.

நன்றி

அன்புள்ள

மா.செங்குட்டுவன்

மலர்க்குழுத் தலைவர்

விண்ணைத் தொடவா? மண்ணைத் தொடவா? வெற்றிவாகைச் சூடவா?

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்

விண்ணை எட்டிப் பிடிக்க முயல்கிறேன்.
விண்ணைப் பிடிக்க இயலுமா? - அடடே
மண்ணையாவது தொட்டிட விரைகின்றேன்!
மண்ணைத் தொடவே மனம் வருமா? - ஓ!ஓ!
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் நின்று யான்
வெட்ட வெளியில் தவிக்கின்றேன் - வேதனைப்
புண்ணுக்கே மருந்தினை வேண்டியே இறைவா!
பொழுதெலாம் புலம்பிக் கழிக்கின்றேன் - நொந்தே!
அழுது அழுது விழிக்கின்றேன்!

நேற்றிரவு வரை நம்பிக்கை தந்தவன்
விடியலில் மாறி விட்டான்!
கூற்றினும் மேலாகக் கொடுமை புரிந்திடும்
கூத்தை நடத்துகின்றான்!
மாற்றத்தைக் கண்டே மாநாடு நடத்திட
மதியைச் செலுத்துகின்றேன்
ஆற்றலுள்ளவர்கள் யாரேனும் கைகொடுத்தே
ஆதரவு தாராரோ? இறைவா மாதவம் சேராதோ?

சித்தம் தடுமாறித் தேசம் பிறநாட்டில்
தீயினில் நடக்கின்றேன்
உத்தமர்யாரேனும் சத்தியம் காத்திட
உதவிகள் ஈவாரோ?
பத்தியம் காத்துக் காத்துக் கிடக்கின்றேன்
பலமும் குன்றுகின்றேன்
எத்திசை இறைவா நீயும் இருக்கின்றாய்?
என் மானம் காப்பாயோ?

ஒத்துரிமை சச்சிதாநந்தத்தின் நண்பர்
உள்ளொளி வடிவமாம் நம்
புத்தபிரானருள் புண்ணிய சுலக் சிவ
ரட்சகன் காணுகின்றேன்

சித்தம் வைத்தே நல்ல செம்மை உதவிகள்
செய்வதாய் ஒப்புகின்றார்
மொத்தத்தில் மாநாடு முழுமை வெற்றிபெற
மோனத்திறை அருள்வாய்!

ஏங்கித்தினம் இதயம் வெடிக்கின்றேன்
ஈன நம்பிக்கைத் துரோகம் தனைத்
தாங்கொணாதே ஐயோ? தமிழ் மானம் காக்கவோ?
தமிழரிடை யானும் வாழவோ?
மூங்கையின் எண்ணம் போல் முடங்கித் தவிக்கிறேன்
மூச்சுத்திணறல்போல் உழல்கிறேன்
தூங்கா நிலை மனச்சோர்வு தனை மீறித்
துடித் தெழுந்தே வழி தேடுகின்றேன்!

வங்கக் கடல் நடுவந்த கப்பலு டைந்தே
வந்த தமிழருள் தமிழனைப்போல்
முங்கித் தத்தளிக்கும் மூள் வினைமாறியே
முழுமை மாநாடு வென்றிடவே
அங்கங்கே இறைவா குருவே சிலவழி
ஆக்கங்கள் காட்டுகின்றாய்!
தங்கு தடைபல தாண்டிக் கடக்கவே
தக்கதுணைவர வேண்டுகிறேன்!

இந்தநாள் வரை எனக் கேற்றம்பல செய்தாய்
இறைவா இறைவா இது தகுமோ?
செந்தமிழ் மாநாடு சீரழிவு ஆகினால்
தேசத்தமிழர்கள் தம்மிடையே
எந்த முகத்துடன் இறைவா நான்வாழ்வேனோ
இதற்கோ என்றன் உழைப்பெல்லாம்?
கந்தலுடைகட்டும் காட்சியைப் பாராயோ
கடவுளே மானம் காக்க வாராயோ!

ஒரு துரியோத னன் உத்தமி பாஞ்சாலி
உடுத்திய சேலை உரிந்ததைப்போல்
வருதுரியோதனன் துச்சாதனர் வேட்டி
வலிந்து உரிந்தே வம்புசெய்வார்
தரும் இச் சோதனை தன்னிலே பாஞ்சாலிபோல்
தவித்தே உன்னையே நம்புகின்றேன்!
இருந்தமிழ் மாநாடு இயன்றிட கண்ணா
இதயக்குல தெய்வம் வழிசெய்க!

உலகே எதிர்த்தாலும் ஒருவன் நீ போதாதா?
ஓரிறை என்பதும் பொய்யாமோ?
கலகம் செய்திடும் காதகர் நாணிடக்
கருணை அருளையும் பொழியாயோ?
நலமாய் மாநாடு நாள் குறித் தபடி
நன்று பாங்காக் நடைபெறவே
நிலம் பெயரினும் ஆம்! நின் சொல்பெயரால்
நிகரிலா அல்லா ஹூ" நடத்து விப்பாய்

காலமெலாம் 'கர்த்தர்' தாளடி பற்றியே
காலம் கழிப்பவன் நான்!
ஞாலங்கள் அனைத்தையும் நன்றுவலம் வர
நடைமுறை வகுத்த பரம் பொருளே
கோலங்கொள் வெற்றிகள் கொடுத்த குருதேவா
கொடைக்கரம் நீட்டுகவே
வாலறிவன் துணை வாகைதருகவே
வல்லமை மாநாடு நடக்கவே!

இடர்கள் பொடிப் பொடியாகியே ஏகுக
எம்மிறை குருவருள் முன்வருக
அடலேறு ஆற்றல் அடுக்குகமுடுக்குக
ஆண்மை பொய்மை புறம்காண்க!

தடந்தோள் வலிமை தாங்குக இறைகுரு
தமிழத்தாய் வலிமை வெல்கவே!
நடக்கும் நடக்கும் மாநாடு நடத்துக
நாள்குறித்தபடி நடத்துகவே!

இடக்கர் செய்த இடும் பைகள் பொடிபட
ஏற்றம் மாநாடு பெறுகவே!
தடைகள் என்றவர் சிறைகள் என்றவர்
தலைகள் குனிந்திட நடக்கவே
கொடைகள் வருமென்றார்
படைகள் பயம் என்றார்
படைகள் விடைகள் காண்கவே!
நடைபெறுகவே நான்காம் மாநாடு
நானிலம்வெல்ல நடக்கவே!

உரிய இடத்தை உலகஅரங்கில்
ஓங்கு தமிழர் பெறுகவே!
சரி சமம்கொள் உரிமை வெல்கவே
தமிழ்நம் மொழியோ சிறக்கவே!
விரியும் நெஞ்ச வேணவாவுமே
விதிகள் முனைந்து செய்கவே!
நிந்தனை செய் வஞ்ச நெஞ்சகர்
நம்பல் இன்றி விஞ்சவே!

எம்பி எகிரி நெம்புகோல்போல
ஏற்றம் தமிழர் காண்கவே!
நம்பிக் கைக்கே துரோகம் செய்பவர்
நாணக் கூனக் கொள்கையே
செம்மை வெற்றி சிறந்து ஓங்கவே
தெய்வத் தமிழே வளர்கவே
அம்மம்மாவோ! நம்மாநாடு
வாகை சூடி வருகவே!

வாழ்க, வரலாறு படைக்கும் வா.மு.சே!

பெரியாரப் பேருரையாளர் அ.இறையன்

பாலமிடும் பணி

நெடிய உருவம் ஆறடிக்கும் மேலான உயரத்துடன்!-
முதுமையைக் காட்டும் அறிகுறியாக நரைமுடி-
என்னைப் போன்ற பகுத்தறிவுப் பற்றாளரை அறைகூவி வம்புக்
கிழுக்கிற வகையில் நீற்றுப் பூச்சு நிரம்பிய நெற்றி-
யானைக்கிருக்கும் கண்களை நினைவூட்டுகின்ற சிறிய ஆனால்
கூர்மை வாய்ந்த கண்கள்-
மேலுதடு வெளித் தெரியாத முறையில் பொசு பொசு
வென அடர்த்தியாக முளைத்து இரு புறமும் நீண்டு
இறுதியில் குஞ்சங்களாகத் தொங்கும் மீசை - அதுவும்
வெள்ளை நிறந்தான்!-
கடவுள் நம்பிக்கையற்ற என்போன்றாரை அறை
கூவுகின்ற தன்மையில் அடிக்கடி "இறைவா! இறைவா!"
என்று நம்பிக்கை பொங்கப் பலுக்கும் வாய்! ஆம்
எங்கட்கது மூடநம்பிக்கை!
எதிர்ப்படுவோக்கு வணக்கம் தெரிவிக்க முந்திக்
கொள்ளும் தடக்கைகள்-
அரச நடைபோடும் கால்கள்!
தொள தொளவென ஈடாடும் வெண்மையான மேற்சட்டை-
இரு தோள்களையும் தழுவித் தொங்கிடும் நீளமான
மடிப்புத் துணி-
அரைக்கு அசைக்கப்பெற்ற வெண்ணிற உடுக்கை-
தமிழினம் பற்றியே நாளெல்லாம் சிந்திக்கும் நல்லுள்ளம்-
இவை யாவும் இயைந்தமைந்த மொத்த வடிவமே
வா.மு.சேதுராமன் எனும் பெயரிய பெருங்கவிக்கோ!
இவ் வெளிமைத் திருவுருவந்தான் மாபெரும்
இயக்கமாகிப் பார் முழுவதும் வதியும் தமிழ்ப் பேரின
மக்களை ஒன்று கூட்டும் பாலமிடும் பணியை
மேற்கொண்டிருக்கிறது.

விடலைப் பருவ வேட்கை!

இத்தகைய தமிழுணர்வு பெருங்கவிக்கோ அவர்களிடம் ஏதோ அண்மைக் காலத்தில் தற்செயலாக - திடீரெனத் தோன்றிய ஒன்றா?

அன்றன்று. தமிழ் மொழிப் பற்று, தமிழின உயர்வு குறித்த வேட்கை ஆகியன வெல்லாம் அவரின் இளமைக் காலத்திலேயே அவருள் விதையூன்றப்பட்டு விட்டவை. ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் 40 ஆண்டுகட்கு முன்னர் அவர் பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே தமிழ்ப்பாக்கள் படைக்கும் ஆர்வமும் ஆற்றலும் அவருக்கு அமைந்திருந்ததையும் அவர்க்குப் பரிசுகள் வழங்கப் பட்டமையையும் கல்வித் துறைத் தொண்டனாக விருந்த நான் அறிவேன்.

ஆசிரியராக வா.மு.சே. அவர்கள் முகவையில் பணி புரிந்த காலக்கட்டத்தில் பாட்டரங்கங்களில் அவர் பங்கு பற்றிய நிகழ்வுகளும் நூல்கள் யாத்து வெளியிட அவர் மேற்கொண்ட ஆர்வமான முயற்சிகளும் எனக்கு நன்கு தெரியும். ஆக, தமிழ்த் தொண்டு என்பது அவரின் இக்கால நிலைப்பாடு அன்று; அக்காலத்திலேயே அவருள் ஊற்றெடுக்கத் தொடங்கி விட்ட விடலைப் பருவ வேட்கை!

செய்தித் தாள்களில் சிறப்பிடம்!

'புலவர்ப்பட்டம் எய்தி அவர் தமிழகத்தின் தலைநகரம் போந்து, மேற்கொண்ட வாழ்க்கை ஏற்கனவே அவருள் ஊற்றெடுத்துப் பெருகிப் பொங்கி வழிந்து கொண்டிருந்த தமிழிய உணர்வுகட்கு நல்ல வடிகால்களைக் காட்டிற்று. அல்லிக்கேணி இசுலாமியக் கல்வி நிறுவன மேலாண்மையர் அவரைத் தமிழாசிரியர் பொறுப்பில் அமர்த்தியதோடு மட்டுமின்றி, அவரின் பல்முனை மொழி நடவடிக்கைகட்கு இடையீடு செய்யாது ஊக்கமும் ஒத்துழைப்பும் அருளிய நிலையில், மொழி - இனம் தொடர்பான கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்கங்கள், பாட்டரங்குகள், மாநாடுகள், வினைசெயற்குழுக்கள் முதலியவற் றில் ஆயிரக்கணக்கான தடவைகள் பங்கேற்றுப் பொறுப்பாற்றித் தமிழ்த் தொண்டர்களின் பேரன்பினை ஈட்டி, செய்தித் தாள்களில் சிறப்பிடம்

எய்துகின்ற அளவிற்கு உயர்ந்தார் வா.மு.சே அவர்கள். அவர் பங்குபெறாத தமிழிய நிகழ்ச்சிகள் கிடையா எனும் நிலை தோன்றியது.

வேறுபாடான அவரின் தனித் தோற்றமும், பகட்டில்லா அவரின் பண்பாடும், வஞ்சம் படியா அவரின் நெஞ்சமும், எவரிடமும் உரிமையுடன் பேசி உறவாடும் அவரின் ஒழு கலாறும் பல தரப்பட்ட தமிழ் ஆர்வலர்களை யும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்தோரையும், பலப்பலச் சிற்றமைப்புகளின் பொறுப்பாளர் களையும் அவரைச் சுற்றி மொய்க்குமாறு ஆக்கின. தமிழ் நாட்டின் பெரிய அரசியல் தலைவர்களும் தமிழியத்தை ஊக்குவிக்கும் செல்வர்களும் அவரை விரும்பி வரவேற்கும் புதுப்புது நிலைகள் ஏற்பட்டன!

பெருங்கவிக்கோவின் படைப்பாற்றல்

தெம்பும் நம்பிக்கையும் மேலோங்கிய நிலையில் பாவலர் வா.மு.சே. அவர்கள் தன் பனுவற்படைப்பு முயற்சிகளைத் தொடர்ந்தார். படைத்தார், படைத்தார்; அப்பப் படைத்தார், இதுவரையும் 70 இலக்கியங்களை தொடர்ந்து வெளியிட்டுள்ளார் என்பது பெருமிதத்திற்குரிய சிறப்புச் செய்தி. இம் முயற்சியில் அலருக்கு கிட்டியிருக்கும் வெற்றியைக் கருதுகையில் விம்மிதம் உண்டாகிறது. இவ்வண்ணம் புலவ ராக - பாவலராக இருந்த வா.மு. சே. அவர்கள் பெருங்கவிக்கோ வாகச் சிறப்பு நிலை பெற்றார். பெருங்கவிக்கோவின் படைப்பாற்றலின் அருமையினை உணர்த்துகின்ற ஒரு நிகழ்ச்சி.

சென்னை - பெரியார் திடலில் முத்தமிழ் மன்ற விழாவில் சீர்காழி சிவ சிதம்பரம் அவர்கள் ''எத்தனை எத்தனை வெங்கொடுமைச் சிறை எம்மை அடைத்தாலும்'' எனும் தொடக்க வரிகளுடன் பாட்டொன்று இசைக்கிறார். பாடலின் பத்தகளின் இறுதியில் முறையே வித்து முளைத் தெழு வெல் தமிழ் ஈழம் வேண்டல் துறப்போமோ?'' என்றும், ''வென்றி தரும் தமிழ் ஈழநாடமைத்திடும் வேட்கை விடு வோமோ?'' என்றும் அமைந்த வரிகளைச் சீர்காழியார் பாடியபோது உள்ளக் கிளர்ச்சியுற்று அவையோர் எழுப்பிய கையொலி அடங்க நெடுநேரம் பிடிக்கிறது.

பாடிமுடித்துவிட்டு, ''இப்பாடலை இயற்றி யவர் பெருங்கவிக்கோ அவர்கள்'' என்று இசைச் செல்வர் அறிவித்த போது ''அப்படியா!'' என்ற தமிழர் தலைவர் மானமிகு கி.வீரமணி எழுந்து பெருங்கவிக்கோவைத் தழுவி, கை குலுக்கி ''அருமை! அருமை! உள்ளத்தை உலுக்குகின்ற உணர்ச்சிப் பாடல்'' என்கிறார். அரங்கினுள் ஒரே ஆரவாரம்! இப்படிப்பட்டது பெருங்கவிக் கோவின் படைப்பு.

இப்பாடல் இடம்பெற்ற 'கௌதமரின் கண்ணீர் எனும் நாடக நூல் எதிர்காலத் தமிழக மாணாக்கர்களால் பயிலப்படுவது திண்ணம். தமிழகத்தின் பல்கலைக் கழகங்களிலும் பெருங்கவிக்கோவின் நூல்கள் பயிலப்படும் காலம் உறுதியாக வந்தே தீரும்.

இலக்கு

இவ்வண்ணம் பெருங்கவிக்கோவுக்கு நாட்டில் கிட்டியுள்ள ஏற்பிசையை, நற்புகழை, செல்சொல்லை, அவர் தன்னலத்திற்காக-தன்னில்ல நலத்துக்காகவே பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விழைந்தாரல்லர். மாறாக மொழி நலத்துக்காக - இன நலத்திற்காக உருப்படியாக ஏதேனும் செய்தாக வேண்டுமே என்பதைத்தான் கருதினார்.

உண்மையான தமிழ்த் தொண்டர்களைச் செல்சொல் படைத்த நல்வாய்ப்புச் சூழ்நிலை என்பது தமக்கென வாழாமல், தமிழுக்கென தமிழர்க்கென வாழும் இலக்குக்கே இட்டுச் செல்லும். அதுதான் இயற்கை.

அவ்வண்ணமே பெருங்கவிக்கோ தன் இலக்கினைத் தீர்மானித்தார்.

''எம்மின் இனத்தை ஒன்றுசேர்க்காமல் இறுதி எமக்கு வாராது!

எம்மின் மொழியை உலகாள வைக்காமல் எம்மின் உயிரோ போகாது!''

அயலகப் பயணங்கள்

குறிக்கோளை முடிவுபண்ணிவிட்டுக் குந்திக் கிடத்தல் தகுமோ? ஆயலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தும் முயற்சி மட்டும் போதுமா? அயலகத் தமிழர்களும் நம்மவர்களே! அவர்களையும் சந்தித்தல்தான் அனைவரையும் இணைப்பதற்கான நடவடிக்கைகளின் முதற்படி என்றுணர்ந்த பெருங்கவிக்கோ மிகமிகத் துணிச்சலாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். புவிப்பந்தில் எங்கெல்லாம் தமிழினம் வாழ்கிறதோ அங்கெல்லாம் பலமுறை சென்று பல நிலைகளில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்ப் பெருமக் களைச் சந்தித்து உரிமையோடு உறவாடி அவர்களின் அன்புச் செல்வத்தை கொள்ளை கொள்ளையாகத் திரட்டினார் அவர். ஒப்பீட்டு முறையிற் கூறுவதெனில் அயலகப் பயணங்கள் மேற்கொண்ட தமிழ்த் தூதர்களில் பெருங்கவிக்கோவின் பயண எண்ணிக்கைதான் பெரியது!

தமிழுறவுக்கு ஒரு மன்றம்

பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர் அனைவரும் உறவாடுவதற்கு ஏற்ற ஏந்தாக ஓர் அமைப்பு இருக்க வேண்டிய இன்றியமையாமையினை ஆழமாகக் கருதிய பெருங்கவிக்கோ பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தைப் பலரையும் கலந்து நிறுவினார். தாயகத்தில் திருச்சி, சென்னை, ஆகிய இரு பெருநகரங்களிலும், அயலகத்தில் ஆறு ஆண்டுகட்கு முன்னர் செருமானிய நாட்டுத்தலைநகரிலும் வெற்றியாக மாநாடுகள் நடத்தப்பெற்று, இப்போது நான்காம் மாநாடு தாய்லாந்துத் தலைநகரம் பாங்காக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அய்ரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கானடா, ஈழம், தமிழகம் ஆகிய பகுதிகளிலிருந்து தமிழர்கள் வருகை தர, பெர்லின் மாநகரத்தில நடத்தேறிய நான்கு நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் தமிழினத்தின் ஒப்பற்ற பண்பாட்டை - பல்துறை ஆற்றலை - பொங்கும் ஆர்வத்தை அருமையிலும் அருமையாக வெளிப்படுத்தின. அதேவேளை நம் தமிழினத்திற்கென முழு உரிமை படைத்த தனிநாடு இல்லையே என்னும் ஏக்க அலைகளும் அங்கே எழுந்தன. ''21-ஆம் நூற்றாண்டினை நோக்கித் தமிழ் - தமிழர்'' எனும் தலைப்பில் நடைபெறும் பாங்காக் மாநாடு தமிழினத்திற்கு நல்ல தொரு விடியலைக் கொண்டு வரும் என்று நம்புகிறேன்.

தமிழ் நடைப் பயணம்!

பெருங்கவிக்கோவின் முயற்சிகள் நல்ல விளைவுகளைத் தந்திருக்கின்றன. குறிப்பாக குமரி முனையிலிருந்து சென்னை வரை, முகப்பேர் கண்ணதாசன் மன்ற விடலைகள் போன்றவர்களும், எண்பது அகவைத் தமிழறிஞர் மா. சு. சம்பந்தனார் போன்ற முதியவர்களும் பங்கேற்ற தமிழ் உணர்வுகளை வழி நடைப் பயணத்தைத் திட்டமிட்டு, உடல் நலப் பாதிப்புடனும் தலைமையேற்று நடத்திக் காட்டினார் அவர். அப்போது நடைப்பயண அணியினர், ''அம்மா அப்பா இருக்கையிலே மம்மி டாடி எதற்காக?'' என்றும், ''பெயர்ப் பலகைகளைத் தமிழிலே எழுதுக'' என்றும் ஒலி முழக்கமிட்டு வந்த அருஞ் செயலுக்கு முழு வெற்றி கிட்டும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதன் தொடர்பாக இப்போது போராடிவரும் இயக்கங்கட்கு முன்னோடியாகப் பெருங்கவிக் கோவின் தமிழ் நடைப் பயணம் அமைந்தது.

இங்கொன்றைக் குறிப்பிடுவது இயல்பாகப் பொருந்தும். இறைப்பற்றில் படு உறுதியாக ஊன்றிநிற்கும் பெருங்கவிக்கோ வழி நடைப் படை நடத்தி வந்த போது, ''கடவுள் இல்லவே

இல்லை'' என்று உரத்த குரலில் ஓங்கி யொலிக்கும் பெரியார் பற்றாளர்களால் தமிழ்த் தொண்டர்கட்கு நாகர்கோவிலிலிருந்து தாம்பரம் வரையிலும் அளிக்கப்பட்ட வரவேற்பும் உண்டி யும் நன்கொடைத் தொகையும் கற்பனை எல்லையைத் தொண்டியவை! திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வேண்டுகோள் அறிக்கை யிட்ட வண்ணம், கருஞ்சட்டைக்காரர்கள் கடும் வெய்யிலில் தமிழ்ப் பயணம் மேற்கொண்ட ஈகமாந்தரை ஏற்றிப் போற்றினர்.

இப்படி எல்லாக் கட்சியினரின் அன்பை யும் ஈட்டியவர் பெருங்கவிக்கோ வா.மு.சே. அவர்கள். அனைத்து இயக்கங்களைச் சார்ந்த தமிழுணர்வாளர்களை ஒரே அரங்கத்தினுள் கூட்டுவித்துக் கலந்துரையாடல் நிகழ்த்தும் தகுதி இன்றையத் தட்பவெட்ப நிலையிலும் பெருங் கவிக் கோவுக்கு இருக்கிறது. கரவின்றிக் கருத்து வெளியிடும் பண்பினால் சில வேளை கசப்பான சூழ்நிலை அவரால் உருவாகிவிடுதல் இயற் கையே என்றாலும் இன்றைக்கும் எத்தகைய முரண்பாட்டுச் சூழலையும் உடன்பாட்டுச் சூழலாக மாற்றிக் காட்டும் போராற்றல் அவருள் உறைந்து கிடக்கிறது.

துணைவியாரும் பிறங்கடைகளும்

பெருங்கவிக்கோவின் தொண்டறத்திற் கும், பெயருக்கும், புகழுக்கும், வெற்றிவாய்ப்பு களுக்கும், அடிப்படையாக இலங்குபவர் அவரின் அருமைத் துணைவியார் திருவாட்டி சேதுமதி அவர்களே. ஆசிரியையாகப் பணி யாற்றிக்கொண்டே நான்கு ஆண்பிள்ளைகளை யும் ஒரு பெண் குழந்தையையும் பேணி வளர்த்து ஆளாக்கும் வீட்டுத் தொண்டு முழுவதையும் அம்மையார் ஏற்றுக் கொண்டதால், நாட்டுத் தொண்டுக்கு எளிதாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள ஏந்து கிட்டியது.

அடுத்து அவரின் இருவகைப் பிறங் கடைகளைக் குறிப்பிடல் வேண்டும். வா.மு.சே. ஈன்றெடுத்த குழவியான ''தமிழ்ப்பணி'' இதழின்பொறுப்பினை ஏற்று அதன் வடிவத் தையே மாற்றியமைத்துச் சிறப்பாகப் பேணியும் இயக்க நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதிலும், நடத்துவதிலும் தந்தைக்குத் தோள் கொடுத்து உதவியும் திகழ்ந்து கொண்டிருக்கும் திருவள்ளு வரும், அப்பாவைப் போலவே தப்பாமல் பாப்புனையும் ஆற்றல் காட்டியும் மன்ற நடவடிக்கைகளில் பங்கேற்றுத் துணைநின்றும், ஒளிரும் பேராசிரியர் ஆண்டவரும் பெரிதும் பாராட் டப்பெற வேண்டியவர்கள்.

இவர்களின் ஒத்துழைப்போடும், 'எள்' என்றால் எண்ணெய் பிழிந்திடும் தோழர்களின் துணையோடும் - பெருங்கடன் பளுவைச் சுமக்க நேரிட்டாலும் - உலைவின்றித் தாழாது உஞற் றும் பெருங்கவிக்கோ தமிழியத் தொண் டில் புதிய வரலாறு படைத்துக்கொண் டிருக்கிறார். வருங்காலத் தலைமுறையினர் அவரைப் பாராட் டிப் புகழ்வர் என்பதில் ஐயமே இல்லை.

வாழ்க வா.மு.சே. அவர்கள்!

அசோகன் பாதை! வே. நாகராசா, பாங்காக்

கொண்டல் மழைபோலும் பொருங்கவிக்கோ தன்வேகம்
கண்டோர் விறைத்துநிற்க கன்னத்துமீசைகளும்
பண்டோர் தமிழ்மொழியின் பண்பாட்டின் இலக்கணமாய்
விண்டோர் வியக்கவீறுநடை போடுகிறார்.

கள்ளமில்லா உள்ளத்துத் திருவள்ளுவனைப் பெற்றெடுத்து
மெல்லவே தமிழ்ப்பணிக்கு விதையாக விட்டுவிட்டார்.
உள்ளப் பசுமையுடன் உறவுக்குப் பாலமாய்
வெள்ளம் போல் புகழ்ஓங்க பணிசெய்து வருகின்றார்

அன்று அசோகன்தன் மகனை அயல்நாடு அனுப்பிவைத்தான்
சென்று புகட்டிவா புத்தர் போதனையை
இன்று தன்மகனை தரணிஎங்கும் தான் அனுப்பி
நன்று தமிழ்ப்பணியை நால்திசையும் பரப்பு என்றார்.

மன்றத்தின் மாபெரும் வெற்றி

வா.மு.சே. திருவள்ளுவர் இயக்குநர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நிறுவனரும், உலக அமைப்பாளருமான எமது தந்தையாரின்

"என்றன் இனத்தை ஒன்று சேர்க்காமல்
இறுதி எமக்கோ வாராது -
எம்மின் மொழியை உலகாள வைக்காமல்
என்றன் உயிரோ போகாது"

என்ற முழக்கத்துக்கு ஏற்ப இம்மன்றம் உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் பெரும் பணியை அயராது செய்து வருகிறது.

சுவாமி இராமதாசர் அவர்கள் தந்தையாரை 1977-ஆம் ஆண்டு தன் மணிவிழாவை முன்னிட்டு மலேசியாவிற்கு அழைத்துச் சிறப்புச் செய்தார். அப்போது தமிழர்கள், தாயகத் தமிழர்கள் அயலகத் தமிழர்களைக் கிஞ்சிற்றும் எண்ணுவதில்லை என்ற மனப் போக்கைக் களைய இந்த பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் தோற்றுவிக்கப்பட்டது.

அன்று தொடங்கிய தந்தையின் பயணம், இன்று வரை தொடர்ச்சியாக பீடு நடை போட்டு வருகிறது. உலகமெலாம் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்க அப்பயணங்கள் பெரும் பாதைகள் வகுத்துள்ளன.

மன்றத்தின் உலகளாவிய முதல் மாநாடு 1985-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2,3 தேதிகளில் திருச்சி மாநகரில் சிறப்புற நடைபெற்றது.

**சிதறிக் கிடக்கும் தமிழினத்தை
சேர்த்து உயர்த்தப் புறப்படுக!
பதறித் தாழும் நிலை மாற்றும்
பாதை வகுக்க முன்வருக!**

என்ற முழக்கத்தோடு அம்மாநாடு சீரிய முறையில் நடைபெற்றது.

தமிழ்-தமிழர் என்று பேச அஞ்சிய சோதனைக் காலத்தில் மாற்றம் காண, மக்களுக்கு எழுச்சியூட்டும் வண்ணம் உலகளாவிய இரண்டாம் மாநாடு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 27 முதல் 30 வரை சிறப்பாக சென்னையில் நடை பெற்றது.

சிந்தனையிலும், செயலிலும், தமிழர்களின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தி உலகளாவிய தமிழர்கள் உணரும் வண்ணம் இம்மாநாடு சிறப்புற நடைபெற்றது.

மன்றத்தின் உலகளாவிய மூன்றாம் மாநாடு உலகத் தமிழர்கள் வியக்கும் வண்ணம் ஐரோப்பியக் கண்டத்தின் ஜெர்மன் நாட்டில் தலைநகராம் பெர்லினில் 12.8.93 முதல் 15.8.93 வரை பேரெழுச்சியோடு புலம் பெயர்ந்த மக்களுக்கு பொலிவூட்டும் வண்ணம் வெற்றிகரமாக நடைபெற்றது.

செர்மன் அதிபர் எல்மட்கோல் அவர்களின் வாழ்த்துகளுடன் பிரம்மாண்டமாக ஜெர்மன் பெர்லின் கலாச்சார மையத்தில் நடந்த நிகழ்வுகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சிறப்பு நிகழ்வாகும் .

மாமன்றத்தின் நிறுவனர் பெருங்கவிக்கோ, ஜெர்மனியின் கிளை அமைப்பாளர் குணரத்தினம் ஆகியோரின் சீரிய முயற்சியில் தமிழகத்திலிருந்து முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், மாண்புமிகு தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன், நீதியரசர் வேணுகோபால், அறிஞர்.க.பொ.இரத்தினம் உள்ளிட்ட 40 தமிழறிஞர்கள் பெர்லின் நகரில் கூடி மாநாட்டின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

அதே சமயம் இம்மாநாட்டால் மன்றத்துக்கு எண்ணற்ற இழப்புகளும் இன்னல்களும் ஏற்கவேண்டிய நிலைக்கு ஆளாகியதும் குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய நிலையில் இன்றுவரை பல் வேறு நாடுகளிலிருந்து தாய்த் தமிழகத்திற்கு வருகைதந்த 700க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெருமக்கட்கு இம்மன்றம் பாராட்டு விழா எடுத்து அவர்களுக்கு பட்டயங்கள் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் தமிழ்-தமிழர் மேம்பாட்டு மாநாடுகள், தமிழ் ஊர்திப் பயணம், மாவட்ட மாநாடுகள் என தொடர்ச்சியாக நடத்தி தமிழர்களிடையே எழுச்சியை ஏற்படுத்துவதில் இம்மன்றம் சளைக்காமல் செயலாற்றி முன்னனியில் உள்ளது.

மன்றத்தின் முத்தாய்ப்பு நிகழ்வுதான் 1993ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் **''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்,''** என்ற பதாகையை ஏந்தி 50 தமிழறிஞர் பெருமக்களுடன் மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ தலைமையில் 1330 கி.மீ.பாதம் தாள் நோக கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை நடந்து மக்கள் மத்தியில் தமிழ் வழிக் கல்விக்கும் தமிழ் வழிப்பாட்டுக்கும் மிகப் பெரிய விழிப் புணர்வை ஏற்படுத்தியது.

ஈழத்தமிழர்களின் இன்னல்களுக்கு குரல்கொடுக்க இம் மன்றம் என்றும் தயங்கியதில்லை. அனைத்துக் கட்சிகளையும் இணைத்து மூத்தறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களின் அரவணைப்போடு தமிழகம் முழுவதும் கடையடைப்பு, தொடர் வண்டி மறியல் செய்த பெருமைக்குரியது இம் மன்றம்.

இம்மன்றம் நீதியரசர் வேணுகோபால் தலைமையில் அறக்கட்டளையாய்ப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்றத்தின் அறக்கட்டளைக் குழு உலகளாவிய நான்காம் மாநாட்டினை பாங்காக்கில் நடத்துவதென முடிவு செய்தது.

மேலும் இந்நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவரும், ஈடுஇணையற்ற முதல்வருமான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கட்கு உலகத் தமிழர்கள் சார்பில் பவளவிழா நடத்தவும் திட்டமிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாய் 23.10.98 அன்று யான் பாங்காக் சென்றிருந்தபோது திரு.இலியாஸ் அவர்கள் தலைமையில் குழு அமைத்து அனைவரும் ஒத்துழைப்பு நல்குவதாக உறுதி அளித்தனர்.

திரு இலியாஸ் அவர்களும், நிறுவனர் பெருங்கவிக்கோ அவர்களும் உலகளாவிய தமிழ் மக்களை பத்திரிகைகள் வழியாக மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தனர்.

இம்மாநாட்டுக்கு நீதியரசர் மோகன் தலைமையில் பன்னாட்டுக் குழுவும், டாக்டர் அனந்த கிருட்டிணன் தலைமையில் சிறப்புக் குழுவும், அறிஞர் முத்துக்குமரன் தலைமையில் வழி நடத்தும் குழுவும் அமைக்கப் பட்டன. என 21-ஆம் நூற்றாண்டை நோக்கித் தமிழ், தமிழர் என்ற கருப்பொருளை மாநாட்டின் மையக் கருத்தாக வைக்கப்பட்டது.

பாங்காக்கில் இம்மாநாட்டினை நடத்த வேண்டிய சூழலில் பல சோதனைகளையும் இம் மன்றம் காண வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது .

உலகளாவிய நிலையில் மாநாட்டு அறிவிப்பு வழங்கிய காரணத்தாலும், தமிழகம், மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்கள் ஆர்வத்தோடு மாநாட்டுக்கு வருகை தர, பயணச்சீட்டு ஏற்பாடு செய்த நிலையில் மாநாடு நடத்தும் பெரும் பொறுப்பினை மன்றத்தினர் உணர்ந்து எச்சோதனைவரினும் தொய்வுக்கே இடமில்லை என்று நெஞ்சுயர்த்தி அதற்கான பணிகளில் ஈடுபட்டது.

மன்றத்தின் நிறுவனர் அவர்கள் தமிழுக்காக, தமிழர் நலன்களுக்காக நடத்திய பொதுப் பணிகளில் பின் வாங்கியது கிடையாது. அடுத்த நிலையில் நிறுவனரின் எண்ணத்திற்கு ஏற்ப

ஒளிவிளக்காகப் பண்புச் செம்மல் மறவன் புலவு சச்சிதானந்தம் அருளால் அறிஞர் சுலக்சிவரட்சா அவர்களின் அரிய அறிமுகம் கிடைத்தது.

சுலக் சிவரட்சா அவர்களின் நாகபிரதிபா சதிரகோசஸ்

அறக்கட்டளையும் நம்மன்றத்துடன் இணைந்து மாநாட்டினை நடத்த முன்வந்து அதரவு நல்கியது. மேலும் பாங்காக்கில் வாழும் திரு. சோம்கியா சாமி அவர்களும் மாநாட்டுக்கு முழு ஒத்துழைப்பு நல்கினர்.

மாநாடு சிறப்புற நடைபெற மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு நேரில் சென்று அழைப்பினை விடுத்தோம். எம் அழைப்பினை ஏற்று பெருமக்கள் பலர் மாநாட்டிற்கு உறுதுணையாகவும் உந்துதலாக வும் இருந்து செயலாற்றினர்.

மாநாட்டுக்கு நாட்கள் குறித்த நாள் முதலாய் நிறுவனர் அவர்கள் ஒரே சிந்தை யோடு, ஊன், உறக்கம் இன்றி, தனது முதிர்ந்த வயதிலும் பன்னாடுகளுக்கும் சென்று, தமிழர் களை ஒருங்கிணைக்கும் உன்னத முயற்சிக்கு இந்தமிழுலகமே என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளது.

பாங்காக்கில் நடைபெறும் மாநாட்டுத் தேதியினை மாநாட்டிற்கு ஆர்வத்தோடு தமிழகத்திலும், அயலகத்திலும் பேராளர் களாகச் சேர்ந்த பெருமக்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாடு சிறப்புற நிகழ வாழ்த்துரை வழங்கிய இந்தியக் குடியரசின் தலைவர் திரு.கே.ஆர் நாராயணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்விஅமைச்சர் அன்பழகனார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் தமிழ்க் குடி மகன் அவர்களுக்கும், அமைச்சர் முல்லை வேந்தன் அவர்கட்கும் இலங்கை மாண்புமிகு தோட்டத் தொழிலாளர் நலம் மற்றும் கால் நடை வளர்ச்சித்துறை அமைச்சர் தொண்ட மான் அவர்களுக்கும் தமிழ்ச் சான்றோர் களுக்கும், தமிழறிஞர்கள் அனை வருக்கும் விழாக் குழுவினரின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டு மலருக்கு விளம்பரங் களை தந்துதவிய வணிகப் பெருந்தகை புலவர் அப்துர் ரகுமான் அவர்களுக்கும், கூட்டுறவுக் காவலர் டான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களுக்கும் திருமிகு நல்லையா அவர்களுக்கும், பிரான்ஸ் சரோ ராஜலிங்கம் தம்பதியினருக்கும், மற்றும் அனைத்துப் பெருமக்களுக்கும் மன்றத்தின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாடு சிறப்பாக நடைபெற பல் வகையிலும் மன்றத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய பத்திரிக்கை அன்பர்களுக்கும் ஐரோப்பிய டி.ஆர்.டி. வானொலி மற்றும் தொலைக் காட்சிக்கும் குழுவின் சார்பாக நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

நாங்கள் ஏற்றுள்ள தமிழ்ப் பணியில் உலகளாவிய தமிழ்த் தொண்டிற்கு பலவகை யிலும் ஒத்துழைப்பு நல்கி வரும் தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் என் மனப் பூர்வமான நன்றியை காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

தங்கள் அன்பன்

வா.மு.சே. திருவள்ளுவர்

(மன்ற இயக்குநர்)

பழையன கழிதல் புதியன புகுதல்!

பேராசிரியர் வி.கலைமணி

காலத்தின் கட்டளை என எடுத்துக் கொண்டாலும் இக்கருத்து ஏற்புடையதே ஆகும். பண்டைய இலக்கியங்கள் பாட்டாகவே இருந்தன.

பாடியவர்களும் முனிவர்களும் சான்றோராகவும் இருந்தனர். இவர்கள் அரசர்கள் தரும் பொன்னுக்கும் பொருளுக்கும் பாடினர் எனினும் பாடப்பட்ட பொருள் உயர்ந்ததாகவே இருந்தது. இவர்களுள் பலரிடம் 'நரஸ்துதி' செய்யும் பழக்கம் அறவே இல்லை. ஒன்று ஆண்டவனைப் பற்றிப் பாடினர், அடுத்து ஆண்டவனின் 'அம்சம்' எனக் கூறப்படும் அரசர்களைப் பற்றிப் பாடினர்.

சங்கரதாஸ் சுவாமிகள் மன்னராக இருந்த சேதுபதி அவர்களைக் கூட பாட மறுத்துவிட்டதாக ஒரு செய்தி உண்டு. ஒரு சமயம் சேதுபதி மன்னரிடமிருந்து வந்த ஒருவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிடம் எத்துணையோ புலவர்களும் கவிஞர்களும் சேதபதி மன்னரிடம் வந்து அவர் மீது கவிதை பாடி பரிசில் பெற்றுச் செல்கின்றனர். சுவாமிகள் மட்டும் இதுவரை மன்னரிடம் வந்ததில்லை. மன்னர் தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறார் அவசியம் வர வேண்டும் என்று வற்புறுத்தினார். அதனால் எரிச்சல் அடைந்த சுவாமிகள் ''போய்யா வரமுடியாது, நானும் மறவன் அவனும் மறவன், அவனை என்னய்யா நான் பாடறது? பரிசு வாங்கறது? அவன் பரிசில் எனக்குத் தேவையில்லை. நரஸ்துது பாடற வழக்கம் என்னிடம் கிடையாது... போ... போ...'' என்று கூறிவிட்டாராம். மன்னரையே பாட மறுத்துவிட்டார்.

இது ஒரு மரபுதான்! நீண்ட நெடுங்கால மாகவே நமது புலவர்களும் கவிஞர்களும் தெய்வங்களையே பாடிவந்தனர். சங்க காலம் இதற்கு ஒரு விதிவிலக்கு என்று கூறலாம். சங்க இலக்கியத்தில் பாடப்பட்ட அகத்துறைப் பாடல்கள் அனைத்திலும் பாட்டுடைத் தலைவர்கள் அனைவருமே அரசர்கள் என்று கூற முடியாது. சாதாரணமாக குடும்பத் தலைவனும்கூட பாட்டுடைத் தலைவனாக இருந்திருக்கக் கூடும். ஆனாலும் அவர்கள் கொடைவள்ளல்களாகவும் குறுநிலமன்னர்களாகவும் இருந்தனர்.

பரிசுப் பெறும் நோக்கில் பாடும் புலவர் பெருமக்கள் எல்லாம் பரிசில் தரும் தகுதியுடைய கொடை வள்ளல்களையும், மன்னர்களையுமே நாடிச் சென்றனர். அப்போதுதான் அவர்கள் வாழ முடியும்.

ஆகவே தெய்வத்தையே பாடிப்பாடி வாழ்ந்த புலவர்கள் தங்களின் வாழ்க்கை பொருட்டு தெய்வத் தன்மையில்லாத மன்னர்களைப் பாடுவது அவர்களின் தேவையாகிவிட்டது. ஆகவே மன்னர்களுக்கும் தெய்வத் தன்மையைக் கற்பித்துப் பாடினர்.

திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்று ஆழ்வார் ஒருவர் பாடியது இதன் பொருட்டே ஆகும். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ அடிகள் முதன் முதலில் ஒரு குடும்பத் தலைவன் கோவலனையும், குடும்பத் தலைவி கண்ணகியையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு காப்பியம் இயற்றியபோது கண்ணகியை தெய்வத் தன்மைக்கு ஏற்றிவைத்தே அவளைப் பாடினார். ''கற்புடைத் தெய்வம் இவள்போல் ஒரு பொற்புடைத் தெய்வம் கண்டிலமால்' எனக் குறிப்பாடுகிறார். காப்பிய மரபுகளை இளங்கோ வடிகளே உடைத்தெரிய அஞ்சியுள்ள காரணத்தால் தான் பல இடங்களில் கண்ணகியைத் தெய்வம் எனப் போற்றுகிறார். தம் அண்ணனும் மன்னனுமான செங்குட்டுவனிடம் அவளுக்குச் சிலை வடித்துக் கோயில் நிறுவுமாறும் கோரிக்கை விடுக்கிறார்.

தெய்வத்தைப் பாடுகின்ற மன்னரைப் பாடுகின்ற மரபு உடைத்தையேப் பாடவேண்டும் என்று விரும்புகின்ற அடிகளால் அதனை மிகமிக எச்சரிக்கையாகவே செய்கிறார். நரஸ்துதி பாடுகின்ற வழக்கம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியப்

பொன்நாட்டில்கூட எங்கும் இல்லை என்பதை நாம் அறிய வருகின்றோம், சரத் சந்திரர், பங்கிம் சந்திரர் கூட இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், தான் சாதாரண மனிதனையும், பெண்ணையும் தலைவன் தலைவியாகக் கொண்டு புதினங்கள் இயற்றத் தொடங்கினர்

மரபு என்பது நீண்ட நெடுங்காலமாக நம் நாட்டு மக்களால் பின்பற்றப் பட்டுவருகிறது என்பதாலேயே அது புனிதமானது என்று கூறுவது கூட ஒரு மூடக் கொள்கையே ஆகும். ஒரு காலத்தில் நாம் பின்பற்றி வந்தவையெல்லாம் இன்று காலப்போக்கில் மாற்றம் பெற்று விட்டன. அன்று அகல்விளக்கேற்றியவன் இன்று ஆயிரம் வோல்ட் மின்னொளியைப் பாய்ச்சி இரவைப் பகலாக்கு கிறான். அன்று காலில் புண் ஏற்பட நடந்து போனவன் இன்று ஏவுகணையில் பயணம் செய்கிறான். ஏன் இன்றைய மனிதனின் நடை உடை பேச்சு எல்லாவற்றிலுமே மாற்றம் செய்து கொண்டதை எவரால் மறுக்க முடியும்?

இலக்கியத்தை மனிதன் தான் படைக்கிறான். அவனின் எண்ணத்தில் ஏற்பட்ட மாற்றம் அவனது எழுத்திலும் எதிரொலிக்கத் தானே செய்யும்? இந்த மண்ணில் நிகழ்ந்த அரசியல் புரட்சி, தொழில் புரட்சி, எண்ணப்புரட்சி எல்லாமே ஒருபெரும் மான்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த மாற்றம் அவன் எழுத்திலும் ஏற்படுவது இயல்பே ஆகும்.

இன்று ஆட்டுக்கார ஆலமேலு, குப்பத்து ராசா, காணவாய் குருமூர்த்தி, சிரிக்கும் சின்னப் பெண்ணு என பல்வேறு கதைகளும், நாடகங்களும் கவிதை நூல்களும் எழுந்துள்ளன. இவர்கள் சாதாரண சராசரி மனிதர்களைக் காட்டிலும் பிறப்பாலும் வளர்ப்பாலும் பின்தங்கியவர்களே! ஆனாலும் இன்று பாவலர்களால் பாடப்படும் பாட்டுடைத் தலைவர்கள்? இந்த நிலை காலத்தின் கட்டாயமாகும்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினான''

என்னும் தொல்காப்பிய இலக்கணத்திற்கேற்ப இந்த மாறுதல் நிகழ்ந்துள்ளது. நிகழத்தான் செய்யும். எதிரே வர முடிகின்ற மக்களின் இலக்கியமே சிறப்புக்குரியதாகும்.

தமிழ்ப்பணி தொடர மாவட்டந்தோறும் உறுப்பினர் இயக்கம்

30 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் தமிழ்ப்பணி - திங்களிதழ் தொடர தமிழ்ப்பணிச் செம்மல்கள் உறுப்பினர் இயக்கத்தைச் சிறப்பாக்கித் துணை செய்ய வேண்டுகிறோம்.

எண்ணற்ற பணிச் சுமை, பொருளிழப்புகளுக்கிடையில் பன்னாட்டுத் தமிழுறவுப் பணியாற்றும் 'தமிழ்ப்பணி' தொடர தமிழ் உணர்வாளர்கள் மாவட்டந்தோறும் தமிழ்ப்பணி உறுப்பினர் இயக்கத்தை நடாத்த வேண்டுகிறோம். **அயலகத் தமிழ் அன்பர்களும் உறுப்பினர் கட்டணத்தை அனுப்பி தமிழ்த்தொண்டைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.**

தமிழ்ப்பணித் திங்களிதழ் உறுப்பினர் தொகை

	இந்தியா - தமிழகம்	வெளிநாடுகள்
ஆண்டு உறுப்பினர்	ரூ. 70.00	20 U.S. டாலர்
ஐந்தாண்டு உறுப்பினர்	ரூ. 350.00	90 U.S. டாலர்
பத்தாண்டு உறுப்பினர்	ரூ. 600.00	180 U.S. டாலர்
ஆயுள் உறுப்பினர்	ரூ. 1000.00	280 U.S. டாலர்
புரவலர் நன்கொடை	ரூ.5000-மென்மேல்,	500 U.S.டாலர் மென்மேல்

காசோலை அனுப்புவோர் 'தமிழ்ப்பணி' (TAMILPANI) எனக் குறிப்பிடவும்

வா.மு.சே. திருவள்ளுவர், ஆசிரியர் 'தமிழ்ப்பணி'
12,சாயிநகர் இணைப்பு, சென்னை 600 092..

"வள்ளலாரின்"
தமிழ்ப்பற்று - தமிழ்ப்பணி

தவத்திரு சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகளார்

தமிழைத் தமிழ்நாட்டில் பிறப்பித்ததற்காக வள்ளலார் இறைவனுக்குநன்றி கூறுகிறார்.

''சுத்த சன்மார்க்க லஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவன்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின்கண்ணே பேராசை, பெருங் கோபம், பெருமோகம், பெருமிதம், பெரு லோபம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்கம், முதலிய பெருங்குற்றங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய மற்றையிடங்களிற் பிறப்பியாமல் குணங்களே பெரும்பாலும் விளைதற்குரிய இவ்விடத்தை உறுப்பிற் குறைவு படாத உயிர்பிறப்பாகிய இம் மனிதப்பிறப்பிலே என்னைப் பிறப்பித்தற்குரிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை யென்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்.

தமக்குத் தமிழ்ப்பற்றைத் தந்ததற்காக வள்ளலார் இறைவனுக்கு நன்றி கூறுகிறார்.

''எல்லாமானவராயும் ஒன்றுமில்லாதவராயும் எல்லா அண்டசராசரங்களின் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற தனித்தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரையின்றியே என்றரத்தத்திற் பயின்றறிதற்கரமையாகிய கல்விப்பயிற்சியை எனதுள்ளகத்தேயிருந்து பற்றுவித்தருளினீர்.

இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிராயசத்தையும் பெருமறைப்பையும் போது போக்கையும் உண்டுபண்ணுகிற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை சொல்லவொட்டாது பயிறுதற்குமறிதற்கும் மிகவுமிலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கு மிகவுமினிமையுடைய தால், சாகாக் கல்வியைலே சிலர் விற்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைக்க தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல்வகை தோத்திரப் பாட்டுக்களைப் பாடுவித்தருளினர்

வள்ளலாருக்குத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் எவ்வளவு பற்று இருந்தது என்பதற்கு இவ்விரண்டு எடுத்துக் காட்டுகளும் போதும்.

மற்ற எல்லாப் பற்றுகளையும் முற்றத் துறந்த துறவியாகிய வள்ளலார் தாய்நாடாம் தமிழ்நாட்டின் மீதும் தாய்மொழியாம் தமிழ் மொழியின் மீதும் தணியாத பெரும்பற்றுக் கொண்டிருந்தார். தம்மைத் தமிழ் மன்னிற் பிறப்பித்ததற்காக. தமக்குத் தமிழ்ப்பற்றைத் தந்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறுமளவுக்குச் செல்கிறார். தமிழ்மண்ணின் மீதும், தமிழின் மீதும் அவ்வளவு பற்று அவருக்கு. காரணம் யாது? தமிழ்மண் ஞானமண்! தமிழ்மொழி ஞானமொழி. தமிழ் என்ற சொல்லுக்கு வரைந்த உரையில் இதனை அவரே விளக்குகிறார்.

வள்ளலார் சென்னையிலுறைந்த காலத்தில் அக்காலத்திய சங்கராச் சாரிய சுவாமிகள். ''சமஸ்கிருதமே எல்லா மொழிக்கும் தாய் மொழி'' (மாத்ருபாஷை) என்று கூறினாராம். ''தமிழே எல்லா மொழிக்கும் தந்தை மொழி'' (பித்திருபாஷை) என்று கூறினாராம்.

அது தொடர்பாகத் தமிழ் மொழியின் பெயராகிய 'தமிழ்' என்னும் சொல்லுக்கு ஓர் உரையும் செய்தருளினார்.

தமிழ் - இயற்கை உண்மைச் சிறப்பின் மொழி.

ழ் - இயற்கை உண்மைத் தனித்தலைமைப் பெருமைச் சிறப்பியல் ஒலி.

56 தேசங்களுள் சுதேசமாகிய தமிழ் நாடு தவிர மற்ற

55 தேச மொழிகளில் இல்லாதது.

இயற்கை உண்மையே தமிழ்.

தமிழ்மொழியே மிக எளிதில் (அதிசுலப மாக) சுத்தசிவானுபூதியைக் கொடுப்பது. இவை அவ்வுரையில் வள்ளலார் கண்ட முடிபுகள்.

தன்னை இறைவன் தமிழால் வளர்க்கிறான் என்கிறார் வள்ளலார் இராமலிங்க அடிகள். ''மெய்யடியார்'' சபைநடுவே எந்தை உனைப்பாடி மகிழ்ந்தின்புறவே செந்தமிழின் வளர்க்கின்றாய்'' என்பது அவரது திருவருட்பாப் பாடலொன்றின் அடி (4802).

செந்தமிழால் தன்னை வளர்ப்பதாகக் கூறும் வள்ளலார், இறைவன் அன்பர்களுக்குத் தமிழால் அருளுகின்றான் என்றும் கூறுகின்றார். ''வடிக்குறும் தமிழ் கொண்ட அன்பருக்கருளும் வள்ளலே ஒற்றியூர் வாழ்வே'' என்று திரு ஒற்றியூர் சிவபெருமானைப் பாடுகின்றார் (875). ''வடிக்குறும் தமிழ் கொண்டு அன்பருக்கு அருளும் வள்ளலே'' என்பது வள்ளலாருக்கும் பொருந்தும். இறைவன் வள்ளலாருக்குத் தமிழால் அருளுகிறான். வள்ளலார் நமக்குத் தமிழால் அருளுகிறார்.

தமிழ்க்கவிதையின் சாந்தம்

திருவொற்றியூரிலுள்ள நந்தி ஆசிரமம் சாந்தம் மிகுந்தது என்று சொல்லவரும் வள்ளலார், 'தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது'' என்று சொல்லுகிறார்.

கண்டவர் உளமெலாம் கட்டு கின்றது
தண்டமிழ் கவிதைபோல் சாந்தம் மிக்கது
விண்டயன் பதமுதல் விரும்பத் தக்கது
எண்டரும் தவம் அர சிருக்கும் சீரது

என்பது வள்ளலார் வாக்கு (குடும்ப கோஷம் 19) தமிழ்க்கவிதையின் சாந்தத்தை வள்ளலார் அனுபவித்தவாறு என்னே! என்னே!

தாம் பாடும் பாமாலைகளைத் ''தமிழ்ப் பூமாலை'' ''சீர்த்தமிழ் மாலை''. ''மதன இன் தமிழ் மாலை'' என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

கலைமகளால் திருப்பதிகம் என்றொரு சரசுவதி வணக்கம் பாடிய வள்ளலார் ''சங்கம் வளர்ந்திட வளர்ந்த தமிழ்க்கொடி'' என்று கலைமகளைப் பாடுகிறார்.

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்காக முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பு நட்த்தியவர் வள்ளலாரே.

தமிழ்நாட்டில் முதன் முதலாக முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர் வள்ளலாரே. முதன் முதலாக மும்மொழிப் பாடசாலை நிறுவியவர் வள்ளலாரே. அவர் நிறுவியருளிய ''சன்மார்க்க போதினி''பாடசாலையில் முதியோர் கல்விக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தமிழ், ஆரியம், இங்கிலீஷ் ஆகிய மும்மொழியும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொண்டமண்டல சதகப் பதிப்பில் வள்ளலார் கல்வெட்டுச் சான்று காட்டுகிறார். திருவலிதாயம், திருமுல்லைவாயில் கல்வெட்டு களைக் குறிப்பிடுகிறார். அக்காலத்திய பெரும் புலவர்களெல்லாம் கல்வெட்டுகளைப் பற்றி நினைத்ததும் இல்லை. தமிழ்ப் புலவர்களெல் லாம் கல்வெட்டுகளிற் கவனஞ்செலுத்தாத காலத்தில், கவனஞ் செலுத்துவதற்கு முன்னமேயே, வள்ளலார் கல்வெட்டுகளை ஆராய்ந்து வைத்திருந்து சான்று காட்டுவது அவரது கலைப்புலமையைக் காட்டும்.

வள்ளலாரின் பன்முக அறிவு

நூலாசிரியராய், உரையாசிரியராய், பதிப்பாசிரியராய், பத்திரிகை யாசிரியராய், போதகாசிரியராய், ஞான சிரியராய், வியாக்கியனகார்த்தராய், சித்த மருத்துவராய், சீர்திருத்தவாதியாய், அருட்கவிஞராய், அருள்ஞானியாய் வள்ளலார் பன்முக ஞானத்தோடு விளங்கினார். அவரது தொண்டு பல்வகையிலும் பரந்து விளங்கிற்று.

அவர் அருளிய திருவருட்பா ஆறுதிருமுறைகளையும் ஏனைய உரைநடை ஆக்கங்களையும் கற்போர் இதனை நன்குணர்வர். கற்றுப் பயன்பெறுதல் தமிழ் மக்கள் கடனாம்.

தமிழர்கள் உலகமுழுவதும் பலநாடுகளில் பரவியுள்ளனர். அவர்களை உறவுபடுத்துவது

என்றென்றும் தமிழ் மக்கள் ஓங்கி வாழ்வர்

-சௌந்தரா கைலாசம்-

பேருலகில் எத்திசையை நோக்கி னாலும்
பெரிதான குழப்பங்கள் போர்கள் தோன்றிச்
சீர்குலைத்து நல்லமைதி தன்னை முற்றும்
சிதைத்துவிட்டுத் தீமைகளைக் கொண்டு வந்து
சேர்க்கின்ற நிலைதானே இந்த நாளில்
தெரிகிறது! நெஞ்சத்தை நச்சுப் பாம்பாய்ச்
சீறிஅது கடிக்கிறது! தீயை மூட்டித்
தேசத்தை எரிக்கிறது பாழில் தள்ளி!

தென்றலது பூங்காவில் தவழ்ந்தி ருக்க,
சிற்றோடை சலசலத்துக் குளிர்ந்தி ருக்க,
நன்றன பூங்குயில்கள் கூவும் ஓசை
நம்செவியில் தேனாகப் பாய்ந்தி ருக்க,
என்றென்றும் துய்த்திருக்கும் நற்சு கத்தை
இழந்துவிட்டுப் பொல்லாத புயலின் ஊடே
சென்றுதுயர்ப் படுதற்கா நாம்பி றந்தோம்?
சீரழிந்து வீழ்வதற்கா மனித வாழ்க்கை?

சந்தனத்தின் நறுமணத்தைத் தூரத் தள்ளிச்
சாக்காடையின் நாற்றத்தில் புரள லாமா?
சிந்தையிலே இதைச்சற்றே எண்ணிப் பார்த்துச்
செயல்படுதல் வேண்டாமா? தமிழ்ச் சான்றோர்
முந்திவந்து பணியாற்றி உலகம் முற்றும்
மூண்டிருக்கும் பெருங்கனலை அவிக்க வேண்டும்!
இந்தஒரு காரியத்தை இனிது செய்தால்
என்றென்றும் தமிழ்மக்கள் ஓங்கி வாழ்வர்!

எந்தமிழர் தன்மை காக்க

-பொற்கிழிக் கவிஞர் அரு.சோமசுந்தரன் -

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் மாநாடு
பாங்காக்கில் நடத்து தற்குப்
பாங்காக முன்வந்த இலியாசின் பண்புக்குப்
பாராட்டி வாழ்த்து கின்றேன்!

எந்நாளும் பணியாற்றும் என்னருமைப் பெருங்கவிக்கோ
இணையில்லா சேதுராமன்
இயல்பாக நடந்தாலும் எழில்வானில் பறந்தாலும்
எந்தமிழர் நன்மைக் காக்கப்

பண்ணாலே பாடுகின்றான்; பாங்காக்கில் கூடுகின்றான்
பாராள முந்து கின்றான்
பைந்தமிழர் பெருமக்கள் இருபதாம்
நூற்றாண்டைப்
பார்த்தவர்கள் ஒன்று சேர்ந்து

கண்ணாலே கனிவோடு இதயத்தில் அன்போடு
காசினியுள் தமிழர் எல்லாம்
கைகோத்து வாழ்ந்திடவே பாங்காக
நல்வழிகாட்டக்
கைகூப்பி வாழ்த்து கின்றேன்!

தமிழ். உறவுபடுத்துபவர் பெருங்கவிக்கோ திரு.வா.மு.சேதுராமன் அவர்கள், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் என்றொரு மன்றத்தை நிறுவி. உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று ஆங்காங்கே தமிழுறவை வளர்ப்பதுடன் மாநாடுகளும் நடத்துகிறார். திருவெம் பாவையை முடிசூட்டு விழா மந்திரமாகவே கொண்ட தாய்லாந்தில் நான்காவது மாநாட்டை நடத்துவது மிகப்பொருத்தம். தாய்லாந்துத் தமிழர்களுக்கு நம் அன்பான வாழ்த்துகள்! மாநாடு இனிது நிறைவேறுக! இதுபோல இன்னும் பல மாநாடுகள் உலக நாடுகள் பலவற்றில் நிகழ்க! பெருங்கவிக்கோ வா.மு.சே. பணிகள் வெல்க!

வாழ்க ! வாழ்க!!

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

பேராசிரியர் ம.சங்கரலிங்கம், எம்.ஏ., எம்.பில். (இந்திய மாநிலங்களவை உறுப்பினர்)

பிற நாட்டு மக்கள் தம் தாய்மொழியைத் தமது அன்னையாக, வணங்கும் தெய்வமாகக் கண்டனர். ஆனால், தமிழர்களோ அதற்கும் ஒருபடி மேலே சென்று, தாய்மொழியை உயிராக மதித்துப் போற்றினர்.

'தமிழுக்கு அமுதென்றுபேர் இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

என்று பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதி தாசன். உடலில் மறைந்து நின்று அதனை இயக்குவது உயிர். அதுபோலத் தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும், தமிழ்ப் பண்பாட்டையும், மறைவாக நின்று இயக்குவது தமிழ் மொழியாகும். தமிழரும் தமிழ்க் கலாச்சாரமும் நிலைத்து நின்று நீடுவாழ வேண்டுமானால், தமிழ்மொழி கால மாறுபாட்டுக்கேற்ப புதுவடிவம் பூண்டு, புதுப்பொலிவு பெற்றுத் திகழ வேண்டும். பழமையின் சிறப்புகளை அழியாமல் காப்ப தோடு காலத்துக்கேற்ற புதுக் கருத்துகளை வரவேற்கும் நெஞ்சமும் தமிழர்க்கு வேண்டும்.

பண்டைக் காலந்தொட்டே தமிழர்களுக்கு இயற்கைத்துறைகளில் ஈடுபாடு இருந்தது. மருத்துவம், மனையியல், வானவியல், கணி தம், சோதிட இயல் ஆகிய துறைகளில் சிறந்த நூற்கள், கருத்துச் சித்திரங்கள் முதலியவைகள் முற்காலங்களில் அரசர்களின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டு மக்களிடையே பரப்பட்டன. மக்களிடையே இத்துறைகளில் சிறந்த வல்லுநர்கள் வளர்ந்தனர்.

அவர்களுக்கு கொடுக்கவேண்டிய ஊக்க மும் ஆக்கமும் மூவேந்தர்களால் கொடுக்கப் பட்டன. அக்காலம் தமிழே எல்லாம் என் றிருந்த காலம். அக்காலகட்டத்தில் கலந்துரை யாடல்களும், கருத்தரங்குகளும், நல்ல நூல்களை கற்றோர் மத்தியில் அரங்கேற்றுதலும் மட்டுமே இருந்துவந்தன. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், கருத்துச் சித்திரங்கள், புகைப்படங்கள் அனைத்திற்கும் மேலாகப் பத்திரிகைகளின் வழிகாட்டுதல் ஆகியவை தற்காலத்தில் இருந்தும் தமிழ், பிறமொழி அளவுக்கு உலகத் தமிழ் ஆக வில்லை ஏன்?

ஆங்கில மொழிக்குத் தொடர்ந்து இரு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் வலிமை கிடைத்தது போன்ற வாய்ப்பு வேறுமொழிகளுக்குக் கிடைக்கவில்லை.

விடுதலைக்குப்பின் இந்திய நாட்டில் மக்களாட்சி மலர்ந்தபோது 'தேசிய உணர்வு' என்ற அடிப்படையில் ஒரு சிந்தனை எழுந்தது. வட இமயம் முதல் தென்குமரி ஈறாக உள்ள இந்திய நாட்டில் ஒருமைப்பாடு உணர்வு ஓங்கி நிலைக்க வேண்டுமானால் ஒரு தேசிய மொழி தேசிய கலாச்சாரம், வேண்டும் என்ற எண்ணம் தான். இச்சிந்தனையால் தேசிய மொழி யாக இந்தி மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுவே பயிற்றுமொழியாகவும், கட்டாய மொழியாகவும் ஆக்கப்படுவதற்கான செயற் பாடுகளை அரசு தொடங்கியபோது, பல மாநிலங்களில் எதிர்ப்புக் கிளம்பியது. எந்த மொழி வந்தாலும் ஆங்கில மொழியை அகற்றிவிட முடியாது என்ற நிலை இருந்த மையே அதற்குக் காரணம். இந்தச்சூழலில் தான் இருமொழிக் கொள்கையா? மும்மொழிக் கொள்கையா? எதனை இந்தியா ஏற்றுக்கொள் கிறது என்னும் வினா எழுந்தது. இந்த வினாவுக்கு இன்னும் முடிவான விடை கிடைக் கவே இல்லை.

இந்தப் பின்னணியில்தான் தமிழ்நாட்டில் எங்கும் தமிழ்! எதிலும் தமிழ் என்னும் முழக்கம் எழுந்தது. தமிழர்க்கு மொழிப்பற்று

மிகுதி என்பதை எவரும் அறிவர். 'தமிழ் எங்கள் உயிர்' என்று உணர்ச்சிபொங்க மொழிபவர் தமிழர். எனவே தொடக்கத்தில் இந்த முழக்கம் பொருள் உள்ளதாகவும் மக்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் வாய்ந்த தாகவும் காணப்பட்டது. ஆனால் நாளடைவில் இந்த உணர்வு நலிவடையத் தொடங்கியது. இதற்குப்பல காரணங்கள் உண்டு.

கல்வி நிறுவனங்களில் ஆங்கிலமும் தமிழும் பயிற்றுமொழியாக இருந்தன. ஆங்கில மோகத்தால் கற்றவர்கள், செல்வந்தர்களின் பிள்ளைகள் ஆங்கிலம் பயிற்றுமொழியாக உள்ள வகுப்புகளில் சேர்ந்தனர். நாட்டுப்புறத்தி லுள்ள கலை பாட வகுப்புகளில் மட்டுமே தமிழ்ப் பயிற்றுமொழி என்ற நிலை ஏற்பட்டது. இந்த வகையில் 'தமிழ்' ஏழைகளின் மொழி யாக நாட்டுப்புறத்திலுள்ள நலிந்த மக்களின் மொழியாக மாறியது.

இந்த இடத்தில் மற்றொன்றையும் கூறவேண்டும். தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகக் கூக்குரல் இட்ட தமிழ் அறிஞர் பலர்ஓய்ந்தனர். மாநாடுகளும், கருத்தரங்கு களும், தமிழுக்காக நடத்தப்பட்டன. தீர் மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மொழி மாநாடுகள்; அரசியல் மாநாடுகளாக வடிவம் கொண்டன. தமிழ் நெஞ்சங்கள் வேதனையில் மிதந்தன. பட்டங்களும் பரிசுகளும் வழங்கி தமிழறிஞர்களை ஓரம்கட்டிவிட்டனர்.

நாம் நடந்து வந்துகொண்டிருக்கும் பாதையைக் காட்டுவதற்காகவே இதையெல் லாம் கூறவேண்டிய அவ்சியம் ஏற்படுகிறது. தமிழ்மொழி இன்னும் தமிழ் நாட்டில் பயிற்று மொழியாக மாறவில்லை. இதைப்புரிந்து கொள் வதற்குத் தான் இவ்வளவு விளக்கங்களும் தரப்பட்டன. 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் உயிர்பெற்று உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானால், நம் சிந்தனையில் சில மாற்றங்கள் நிகழ்ந்து ஆகவேண்டும்.

1. இந்தியத் திருநாட்டில் இருமொழிக் கொள்கைதான் பின்பற்றப்பட வேண்டும். ஒன்று தாய்மொழி மற்றது உலகமொழி.

2. மக்களிடம் மாநில தேசியப் பற்றுணர்வுக்கு அப்பால் உலகமானுடம் பற்றிய உணர் வும் அரும்ப வழிசெய்ய வேண்டும்.

3. உலகில் வளர்ந்துவரும் நாடுகளில் எல் லாம் அவரவர் தாய்மொழியிலேயே கல்வி நடைபெறுகிறது என்னும் உண்மையை நம்மக்களுக்குத் தெளிவாக உணர்த்த வேண்டும்.

4. தாம் கற்றவற்றை தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் விரித்துரைக்கும் ஆற் றலை மக்களிடம் வளர்க்கவேண்டும்.

5. பிறமொழிச் சொற்களை தமிழில் கையாளு வதற்கு இருக்கின்ற தயக்கத்தைப் போக்க வேண்டும். தமிழில் எந்த ஒலிப்பையும் வெளியிடும் அளவுக்குத் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்படவேண்டும்.

6. நமக்குள்ளே பழங்கதைகள் பேசி மகிழும் மனப்பான்மையை அகற்றி காலத்திற் கேற்ற புதிய மன அமைவை மக்களிடம் உருவாக்கவேண்டும்.

7. தமிழ்நாட்டில் பல தலைமுறைகளாக பரவலாக வழக்கில் வந்துவிட்ட பிற மொழிச் சொற்கள் (பாமரன் புரிந்து கொள்ளும் சொற்கள்) தமிழ்ச் சொற் களாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

8. அறிவியல் அகராதித் தொகுதிகள் ஏராள மாக்க வேண்டும். நாளேடுகளில் சொல் லாக்க மேடைகள் அமைத்து அறிவியல் துறைச் சொற்களை தேவைக்கேற்ப உருவாக்க வேண்டும்.

9. அறிவியல் தமிழாக்க முயற்சிகள், அறி வியல் செய்திகளைத் தரவல்ல வழிகள், அறிவியலில் பத்திரிகைகளின் பங்கை அதிகரித்தல் ஆகியனபற்றி அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டும். அதற்குத் தமிழறிஞர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

10. தமிழில் அறிவியல் பரப்பும் முறைகளில் கருத்துச் சித்திரங்கள் புகைப்படங்கள்

ஒன்று கூடுவோம் பாங்காக்கில்

-புலவர். வை.உமாபதி

தாய்லாந்து பாங்காக்கில் ஒன்று கூடுவோம் – நம்
தாய்மொழியோ டினப்பெருமை நின்று பாடுவோம்.

கடல்கடந்து மண்ணாண்ட தமிழர் கூட்டம் – இன்று
தடம்புரண்டு நிலைமறந்து கொண்டார் வாட்டம்
திடமனமும் இனஉணர்வும் கொள்ளும் நாட்டம் – நீங்கள்
தொடருவதால் எடுத்திடுவார் பகைவர் ஓட்டம்... (தாய்லாந்து)

பலநாட்டுத் தமிழர்இனம் ஒன்று கூடி – என்றும்
நிலையான முன்னேற்றப் பாதை நாடி
வலிவான, வழிவகுக்கும் செயல்கள் தேடி – அங்கு
தெளிவாகும், உருவாகும் நன்மை கோடி (தாய்லாந்து)

பெருங்கவிக்கோ அழைக்கின்றார் ஒன்றாய்க் கூட – நமது
வருங்காலத் தமிழரினம் வெற்றி தேட
நெருங்கிவரும் நூற்றாண்டின் பாதை போட – நாம்
ஒருங்குகூடி வெற்றிபெறும் வழியை நாட (தாய்லாந்து)

அயல்நாட்டுத் தமிழரில்லப் பிள்ளை எல்லாம் – தமிழ்
பயிலாத நிலைமாற்ற வழிபல சொல்வோம்
முயற்சிகளை வா.மு.சே மன்றம் சொல்லை – ஏதும்
தயக்கமின்றி, பின்பற்றி நாமும் வெல்வோம் (தாய்லாந்து)

வானொலி தொலைக்காட்சி திரைப் படங்கள், கார்ட்டுன் ஓவியங்கள், ஆகிய வற்றை ஈடுபடுத்தவேண்டும்.

11. அறிவியல் நூல்கள் ஆங்கிலத்தின் மொழி பெயர்ப்பாக இருக்கக் கூடாது. தமிழ் மக்களுக்கு பழக்கப்பட்டச் சொற்களிலே அமைத்து, இயற்கைத் தமிழ் உணர்வுடன் எழுதப்பட்ட புது நூல்களாக இருத்தல் வேண்டும்.

12. அறிவியல் மன்றங்கள் ஊர்ஊராக அமைத்து கருத்துகளைத் தமிழில் பரப்பு தல் வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், மொழி யல் அறிஞர்கள், மொழி சார்ந்த தம் அடிப் படை வாதத்தைக் கைவிட்டு, பழைய வாதக் கோட்பாட்டைக் கைவிட்டு, தனித்தமிழ் கொள்கையை அப்படையாகக் கொண்ட, காலத்திற்கேற்ற புதுக்கோட்பாடுகளைத் துணிச் சலுடன் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

தமிழ் மக்களின் வாழ்வியல் கோட் பாட்டை உயிராக நின்றுவடிவமைக்கும் தமிழ், காலத்திற்கேற்ற புதுக்கருத்துகளை ஏற்றுக் கொண்டு, புது வடிவம் பெற வேண்டும், காலத்துக்கு ஒவ்வாத பழமைவாதக் கருத்துக் களைக் களைந்துவிட்டு நல்லவை பின்பற்றத் தக்கவை, எங்கிருந்தாலும் அவற்றை எடுத்து வந்து தமிழ் மொழிக்கும் புதுப்பொலிவு ஊட்டவேண்டும்.

"..... நன்மையும் அறிவும்
எத்திசைத் தெளினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்ச மொன்றில்லை..."

என்ற அமரகவி பாரதியின் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு,

சேமமுற வேண்டு மெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்

என்னும் அன்பு வேண்டுகோளையும் ஏற்று நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். அப்பொழுதுதான் அன்னைத் தமிழ் இந்த அவனியில் சிறந்த மொழியாக வலம்வர முடியும். ☆

அறிவியல் நோக்கில் அகப்பொருள் தத்துவம்

-பேராசிரியர் டாக்டர். ந.சுப்பு ரெட்டியார்-

மானிட வாழ்வில் திருமணம் ஓர் ஆயிரங் காலத்துப் பயிர். மானிட இனம் குன்றாது நடைபெற இறைவனால் வழிவழி வளர்ந்து வருவதற்கு வழங்கப்பெற்ற ஆற்றலை நல்ல முறையில் செயற்படுத்த ஆன்ற விந்த சான்றோர்களால் நெறிப்படுத்தும் முறையே திருமணம். இந்த ஆற்றல் இறைவனால் வழங்கப்பெற்றததாலின் இதனை ஈண்டு விளக்குவேன். அறிவியல் அடிப்படையில் இந்த விளக்கம் அமைகின்றது.

நமது உடல் உயிரணுக்களால் ஆனது. ஒவ்வோர் உயிரணுவினும் இரட்டை நிறக் கோல்கள் (XX, XY) என்பது போல் உள்ளன. ஆனால் ஆணின் விந்தணுக்களிலும், பெண்ணின் முட்டையணுக்களிலும் ஒற்றை நிறக் கோல்கள் (Single Chromosomes) (X,X,Y,Y) என்பது போல் உள்ளன. இவை குழந்தைப் பருவத்தில் பக்குவப்படாத நிலையில் உள்ளன. அஃதாவது இயக்கமில்லாத நிலையில் (dormant) உள்ளன. இவை ஆணின் முன்குவிப் பருவத்திலும், பெண்ணின் பூப்பெய்தும் பருவத்திலும் வளர்ச்சி அடைந்து இயங்கும் நிலையை அடைகின்றன. இந்த இரண்டு வகை ஒற்றை அணுக்கள் ஒன்று சேர்வதால்தான் ஒரு புதிய உயிர் தோன்றும், இந்த இரண்டு வகை உயிரணுக்கள் ஒன்று சேர்வது எப்படி? இந்த இயக்கம் இருபாலரிடம் காதலாக - ஓர் அற்புத ஆற்றல் மலர்கின்றது. கயமி நிகழ்கின்றது. இதனால்தான் இவர்கள் கூடுவதைக் 'காமக் கூட்டம்' என்று குறிப்பிட்டன தொல்காப்பியம். இந்த அணுக்கள் இரண்டும் பெண்ணின் கருக்குழலில் (Fellopian Tube) சந்தித்து இணைகின்றன. இணைந்த இக்கருவுற்ற அணு சிறிது சிறிதாக நகர்ந்து சென்று கருப்பையின் சுவரில் பதிந்து குழந்தையாக வளர்கின்றது. இஃது எல்லா உயிர்க்கும் பொருந்தும்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் என்று ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியரின் நூற்பா குறிப்பிடுவதாகக் கருதலாம்.

இதுவே அக இலக்கியத்தின் தோற்றுவாய்; ஊற்று வாயாகவும் செயற்படுவது. சங்க இலக்கியத்தில் அகப்பாடல்களின் மிகுதியான எண்ணிக்கையும் அப்பாடல்களைப் பாடியவர்களின் மிகுதியான தொகையும் புறத்திணைப் பாடல்களின் தொகையினும், பாடினோர் தொகையினும் மும்மடங்கு மிக்கிருத்தலைக் காணலாம். இதனால் சங்கப் புலவர்கள் அகம் பாடுவதையே சிறந்த புலமையென மதித்திருந்தனர் என்பது புலனாகின்றது.

காதலரின் கண்கள்:

காதலர்களின் காமக் கூட்டம் நடைபெறுவதற்கு இணைப்புக் கருவிகளாகச் செயற்படுவதில் பங்கு பெறுபவை கண்கள், நம்பியும், நங்கையும் நட்புக் கொள்வதற்கு முன்னர் இருவர் கண்கள் நட்புக் கொள்கின்றன; காதல் துடிப்பை இயக்குகின்றன. காமத் தீ பற்றுகின்றது. ''கண்டதும் காதல்'' என்று மக்கள் பேச்சில் அடிபடுவது இதுவேயாகும். குப்பைக்கோழியார் என்ற குறுந்தொகைப் புலவர் இதனைக்

''கண்தர வந்த காம தெள்ளெரி'

என்று காமத் தீயின் பிறப்பிடமாகக் கண்ணைக் கொள்வர். சிக்கி முக்கிக் கற்கள் இரண்டும் சேர்ந்து மோதும் போது தீ உண்டாவதாகக் கூறுவர் அறிவியலறிஞர். ஆனால் இங்குக் காதலர்களின் காண்கள் மோதாமலேயே - கம்பியில்லாத தந்திபோல் - பார்வையளவிலேயே காமத்தீ உண்டாவதாகக் குறிப்பர் இந்த செந்நாப் புலவர், கல்லில் பிறந்த தீ பஞ்சு முதலிய விரைவில் பற்றும் பொருள் இல்லையாயின் வளராது. கண் பிறப்பித்த காமத் தீயோ

நடவாகவும் வளரவல்லது என்பதை 'கள்ளெரி என்ற சொற்றொடர் குறிக்கின்றது, தொல்காப்பியரும்.

> **நாட்டம், இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்**
> **கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்**

என்ற நூற்பாவால் குறிப்பர்.

ஒன்றுபட்ட உள்ளக் குறிப்பினை இருவர் கண்களும் பரிமாறிக் கொள்ளுகின்றன. காதல் நாடகத்தில் கண்ணின் திருவிளையாடலைக் காப்பியக் கவிஞர்களும் போற்றியுரைப்பர். மிதிலை நகர் வீதி வழியே சென்ற இராமனும் மேன்மாடத்தில் நின்று கொண்டு நோக்கும் பிராட்டியும் ஒருவரை யொருவர் நோக்கிய நிகழ்ச்சியைக் கம்பநாடன்

> **கண்ணொடு கண்ணிணைக்**
> **கவ்வி ஒன்றையொன்று**
> **உண்ணவும் நிலைபெறாது**
> **உணர்வும் ஒன்றிட**
> **அண்ணாலும் நோக்கினான்**
> **அவளும் நோக்கினாள்**

என்று காட்டுவான், தொடர்ந்து

> **வரிசிலை அண்ணலும்**
> **வாட்கண் நங்கையும்**
> **இருவரும் மாறிப்புக்கு**
> **இதயம் எய்தினார்.**

என்றும் காட்டுவான்.

உளவியல் - ஊழ்:

பருவம் நிரம்பிய ஆணும் பெண்ணும் பார்த்ததும் உள்ளம் திணறிக் காமப்பித்தேறுவதற்குக் காரணம் யாது? உளவிய லார் இதனைப் பாலுந்தல் (Sex-drive) என்று கூறுவர். எண்ணற்ற நம்பியரும் நங்கையரும் நாடோறும் சாலையிலும் சோலையிலும் இளைமரக்காவிலும் படக் காட்சிக் கொட்டகையலும் பிற இடங்களிலும் காண்கின்றனர்; யாரோ ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கின்றான். யாரோ ஒருத்தி ஒருவன்மீது கண்கணையை எய்கின்றாள். பலரை விலக்கி ஒருவரைத் தேர்ந்து விழையும் இச்சிறப்புப் பார்வை ஆய்தற்குரிய அரிய சிக்கலாகும். ஆயினும் நம்முன்னோர் இதற்குக் காரணம் காணவும் முனைந்தனர்.

> **ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
> **ஒன்றி உணர்ந்த பால தாணையின்**
> **ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**

என்ற நூற்பாவால் காரணம் காட்டி விளக்குவர்.

தொல்காப்பியர் நல்லூழின் ஏவலால் காட்சி நிகழும் என்பது அத்தொல்லாசிரியரின் கருத்தாகும். கிழவனும் கிழத்தியும் காண்ப என்று இருவரையும் எழுவாயாக வைத்துக் காட்டும் சிறப்பால் முன்னதாகக் காதலித்தவர் யார் என்ற வினாவிற்கு இடம் வைக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கது.

இந்த சிந்தனை யோட்டத்தை தானே அவளே தமியர் காண காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல் என்ற நூற்பாவிலும், இதற்குத் தடைவிடைகளால் அமைந்த நக்கீரரின் உரையாலும் கண்டு தெளியலாம்.

பாலதாணை விளக்கம்:

தொல் காப்பியர் கூறிய பாலதாணையைச் சங்கப் புலவர்களும் ஒப்புக் கொண்டு விளக்கம் தருவதை அவர்தம் பாடல்களால் அறியலாம்.

> **பால்வரைத் தமைத்தல் அல்லது அவர்வயின்**
> **சால்பளந் தளிதற்கு யாவும் யாரோ?**

என்று கூறுவர் பேரிசாத்தனார். காப்பு மிக்கதனால் வேறுபட்ட தலைவியின் நிலை கண்டு அதற்குக் காரணம் கேட்ட செவிலிக்குத் தோழி கூறுவது இது. ''தலைவிக்கு நீலப் பூவைத் தந்து நட்புச் செய்த அன்பன் ஒருவன் உளன்'' என்ற எண்மையைக் குறிப்பால் புலப்படுத்தி 'இச்சந்திப்பு ஊழ்வலியால் நிழ்ந்தது. இதில் தகுதியை வரையறுத்து அறிதற்கு எமக்குத் தகுதி இல்லை' என்று கூறுவார் அம்மூவனாரும்,

> **பிறிதொன் றாகக் கூறும்**
> **ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே**

என்று மொழிவர். ஊழ் குலமகளிர்க்கு ஒருவனைத்தலைவனாக்கிய பின்னர் மற்றொருவனைத் தலைவனாக்கும் ஆற்றல் உடையதன்று என்கின்றாள் தோழி.

இல்வாழ்க்கை:

ஊழ்வலியாலும் ஒற்றை நிறக் கோல்களின் இயக்க ஆற்றலாலும் இணைந்த காதலர்களின் இல்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக நடைபெறுகின்றது. இளமரக்காவிற்குச் சேர்ந்து போதல், அங்காடிக்கு இணைந்து போதல், படக்காட்சிக்குச் சேர்ந்து போதல், ஆலய வழிபாட்டுக்குச் சேர்ந்து போதல், தேனிலவு அனுபவித்தல் ஆகிய செயல்களெல்லாம் நடைபெறுவதற்கு நிறக்கோல்களின் இணைப் பாற்றல்தான் என்று கருதுவதில் தவறில்லை. குறுந்தொகைத் தலைவி யொருத்தி தன் கணவனை நோக்கிக் கூறுவது:

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயா கியர்எம் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே

''மறுமையிலும் நீ என் கணவன்; காணும் நின் நெஞ்சு கவர்ந்தவள் என்று அமையட்டும்'' என்கின்றாள்.

இல்வாழ்க்கையின் பயன் மக்கட்பேறு. மக்கட்பேற்றால் இம்மைப் பயனும் மறுமைப் பயனும் கைகூடும் என்பதனை அகநானூற்றுத் தலைவியொருத்தி தோழியிடம் கூறுவது:

இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின்றி எய்துச்
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர் பயந்த செம்ம லோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே வாகுதல் வாய்த்தனம் தோழி

இப்பாடலில் மக்கட் பேற்றின் பயன் தெரிவிக்கப் பெறுவதைக் கண்டு மகிழலாம்.

இந்த இரண்டினையும் ஒரு சேரவைத்து,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நண்கலம் நன்மக்கட் பேறு

என்ற குறட்பாவில் வள்ளுவப் பெருந்தகை சிறப்பிப்பதைக் கண்டும் களிக்கலாம். கணவனுடைய ஒற்றை நிறக் கோலும் (விந்தணுவில் உள்ளது) மனைவியினுடைய ஒற்றை நிறக் கோலும் (முட்டையணுவில் உள்ளது) இணைந்ததன் விளைவு குழந்தை. அதனால் இருவரும் தாம் விளைவித்த குழந்தையின் மீது இவர்கள் பற்றும் பாசமும் மிக்கவர்களாக இருப்பதில் வியப்பில்லை. இதனைச் சாதாரண மக்கள் (குருதிபாசம்) என்பர், அது பொருந்தாது. நிறக்கோல்களின் இணைப்பே என்ற அறிவியல் உண்மையைக் கொள்வதே முற்றிலும் பொருந்துவதாகும்.

இந்தப் பேருண்மை ஐங்குறு நூற்றின் பாடலொன்றால் மேலும் தெளிவாகும்.

மறிஇடைப் படுத்த மான்பிணை போல
புதல்வன், நடுவண் ஆக, நன்றும்
இனிது மன்ற அவர்கிடக்கை; முனிவுஇன்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும், உம்பரும், பெறலருங் குரைத்தே

என்ற பேயனார் வாக்கால் தெளியலாம். இது தலைவனின் கடிமனைக்குச் சென்று வந்த செவிலி தான் கண்ட இன்பக் காட்சியை நற்றாய்க்கு எடுத்துரைப்பதாக வருவது. கணவனும் மனைவியும் ஒரே படுக்கையில் கிடக்கின்றனர்; அவர்களின் இடையே (நடுவில்) அவர்தம் அன்புக் குழந்தை - பிள்ளைக்கனியமுது - சிரித்த நிலையில் கிடக்கின்றது. இதனைச் செவிலி கண்ணுறுகின்றாள்; மகிழ்கின்றாள். அறிவியலடிப்படையில் கூறினால், ''இருவருடைய ஒற்றை நிறக்கோல்களால் விளைந்த 'பேசும் பொற்சித்திரம்' அவர்கள் நடுவே கிடக்கின்றது; அதனைக் கண்டு 'பெற்றவர்கள்' மகிழ்கின்றனர். தம்முடைய சொந்த விளைச்சல் அல்லவா?'' என்று அமைகின்றது.

மனைமாட்சியின் மங்கலத்தையும் மக்கட்பேற்றின் நன்கலத்தையும் ஒருங்கே பெற்றுத் தலைவனும் தலைவியும் காதல் என்றும் இன்பக் கடலுள் மூழ்கிக்கிடப்பதை நெஞ்சும் கண்ணும் குளிரக் கண்ட காட்சிகளைக் கண்டு உவந்த உள்ளத்தளாய் செவிலி எடுத்துக் கூறுவது நம்மையும் இளமைக்காலத்துக்குத் தள்ளச் செய்வது மகிழச் செய்கின்றது இல்லையா?

☆

தாயகத் தமிழ்த் தோழா!

தாயகத்துத் தமிழ்த்தோழா! வணக்கம். இந்தத்
தனிமடலை 'ஃபிரான்'சினின்றே வரைகின் றேன்நான்!
தேய்பிறையாய்ப் போய்விட்ட வாழ்க்கை மீள
திசைமாறி வந்ததொரு பறவை யானேன்
வாய்விட்டுச் சொல்வதிலே வெட்கம் இல்லை;
வந்தஎன்னை இந்தமண்ணின் அரசே, மிக்க
நேயமுடன் 'ஃபிரஞ்சுமொழி' கற்ப தற்கும்
நிதியுதவி, அதற்குப்பின் தொழிலும் தந்தார்!

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தோம்
கதைதோன்றி விட்ட'தென்ற சொல்கின் றோம்நாம்!
வில்,வாளால் நம்சோழர் கடாரம், ஈழம்
வென்றங்கே கொடிபோட்டார் என்போம்! அன்றோ
அல்லிரவில், பகற்பொழுதில் எல்லாம் 'தொண்டி'
அகில், முத்துப் பொருள்வாங்க யவனர் வந்தார்!
சொல்நண்பா! இன்றென்ன நிலைமை? அந்தச்
சொக்கவைக்கும் வரலாறு கானல் நீரா?

நம்மண்ணில், நம்மொழியில், நம்தோ ளின்மேல்
நம்பிக்கை வைத்தோமா? ஃபிரெஞ்சில் இன்று
தம்மொழியில் ஆங்கிலத்தைக் கலப்போருக்குத்
தண்டனைகள் தருவதற்குச் 'சட்டம்' செய்தார்!
எம்மொழியும், எவ்வினமும், எப்பண் பாடும்
எம்மீது படைஎடுத்தல் ஆகா தென்றார்!
தம்மொழியைத் தம்மரபைக் காப்போர் மட்டும்
தாரணியில் உயர்கின்றார்! இதுதான் உண்மை.

அங்கென்ன உன்நிலைமை? மழலைப் பள்ளி
ஆதிக்கம் 'ஆங்கிலத்தில்! ஆல யத்தில்
வெங்கொடுமைச் 'சமக்கிருத' ஆட்சி! இன்னும்
வேற்றுமொழி 'தெலுங்'கினில்தான் இசைய ரங்கம்!
சுங்கம்முதல் காப்பீட்டுத் துறைகள் எல்லாம்
சுடுகின்ற நெடி'இந்தி' என்றால், 'அன்று
சங்கம்வைத்தே ஆண்டவள்என் தமிழ்த்தாய்; என்றே
சளைக்காமல் பேசுகின்றாய்! வெட்கம் வேண்டாம்!

'எப்போதும் தாய்மொழியே எல்லாம்' என்போர்
ஏற்றங்கள் பெறுகின்றார் கோள மீதில்!
'சப்பா'னும் 'செர்மனி'யும் 'கொரியா' போன்ற
தரம் உயரும் நாடுகளின் உரந்தான் என்ன?
தப்பாகத் தாய்மொழியைப் புறக்கணித்தோர்
தத்தளிப்பார் வறுமையிலே! சான்றா வேண்டும்?
இப்பக்கம் 'நம்மிந்தியா', 'வங்க தேசம்'
'இருட்கண்ட ஆப்பிரிக்க நிலங்கள்' சாட்சி!

உன்மொழிபோல் 'வண்மைமொழி' உலகில் உண்டா?
உன்குறள்போல் 'பொதுமறைநூல்' ஏது மண்ணில்?
உன் இசைபோல் 'மேன்மைஇசை' எங்கே? நீண்ட
உன் 'தொன்மை வரலாற்றை மறுப்போர் யார்? யார்?
என்இனிய தமிழ்நண்பா! அதனால் நீயும்
இழந்துவிட்ட 'முதுகெலும்பைத் தேடு! தூய
உன்மொழியில், உன்வழியில், உன்உழைப்பில்
உறுதியுடன் நிற்பதில்தான் உனக்கே வெற்றி!

- கவிவேந்தர் கா.வேழவேந்தன் -

பிணியறியோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை

-பேராசிரியர் டாக்டர். ஜே.ஜி. கண்ணப்பன்-

நாகரிக உலகில் நடந்து கொண்டிருக்கிற நாம் எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். துன்பமும் பிணியும் வராமல் இருக்க வேண்டும் என எண்ணுகிறோம்.

இது பேலவே அரசாங்கமும் மக்கள் பிணியின்றி வாழ வேண்டும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று பல நலத் திட்டங்களை உருவாக்குகிறது.

சுகாதாரத்திற்கே தனி அமைச்சகமும் உண்டு. அதற்காக நாடு முழுவதும் வல்லுநர் களும், நிபுணர்களும், குழுவாகத் திட்டமிட்டு வருகின்றனர்.

உலக சுகாதார நிறுவனம் உலகம் முழு வதும் மக்கள் நோயற்ற வாழ்க்கையை வாழ வேண்டும் என்கிறது. இவர்கள் நினைக் கிறார்கள்.

''பிணியறியோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' ('ஆறாம்' திருமுறை திருத் தொண்டம்)

இந்த நல்ல மனித நிலையினைத்தான் உலக சுகாதார நிறுவனம் கி.பி.2000 ஆண்டிற்குள் உலக மனிதர்கள் அடைய வேண்டுகிறார்கள். இந்த நல்ல நல நிலையினை அடைய, எல்லா சமூகத்தினருக்கும், அரசுக்கும் கொள்கைப் பிணியாக உலக நலச்சங்கம் சமர்ப்பித்துள் ளார்கள். இதனையேற்று அரசும் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறது. எனினும் தனிப்பட்டவர்கள் தன்னிறைவாக இந்த நலனைப் பெற ஏது செய்ய இயலும் என்பதனை இக்கட்டுரைமூலம் அறிவோம்.

இயற்கையினால் படைக்கப்பட்ட உயிர் இனங்கள் உணவு முறையை ஏற்றுக் கொண் டுள்ளன. இயற்கை வளங்கள் உள்ளதாகில், உயிரினங்கள் செவ்வனே பிறந்து, வளர்ந்து தமது இனப்பெருக்கத்தைக் கொண்டு செலுத்துகிறது. இயற்கையின் வளர்ச்சியால் உயிரினங்கள் தவிப்பது மட்டுமல்லாமல் இயல்பாகத் தளர்ந்து, வதங்கி அழிந்து போகலாம்.

அதுபோலவே மனிதனும் இயற்கை வளங்கள் இருப்பின் இயற்கையோடு இயைந்து வாழ்வானேயானால், அவனது வளர்ச்சி சிறப் பாக இருக்கும். இல்லையெனில், மனிதனும் பிணியற்று, வறுமையில் வாடி, துன்பமடைந்து இன்பம் இல்லாது துயரம் அடைவது உண்டு. அதனை வளரா நாடுகளில் மிகவும் துல்லிய மாகக் காண்கிறோம்.

வளர்ந்த நாடுகளில் எல்லா நல்ல வளங் களையும் பெற்று, சர்வ சாதரணமாக மனிதன் சராசரி அறுபது வயதிற்கு மேல் வாழ்கின்றான் என்பதனை அறிகிறோம். வளரும் போது, சாதாரணமாகப் பாதிக்கக் கூடிய நோய்கள் என்று கூறக் கூடியவையும், பாதிக்காத அளவு மனித னின் உடல் நலம் மேலை நாடுகளில் உள்ளதைக் காண்கிறோம். வளரா நாடுகளில், பிணிகளால் பாதிக்கப்பட்டு, இளமையிலே ஏன் குழந்தைப் பருவத்திலேயே இறப்பு ஏற்படுவதைக் காண்கி றோம். இவற்றைத் தவிர்க்க இயலும். மேலும் பிணியில்லாமை கொண்ட சமூகம் ஏற்படுத்த முடியும் என்ற அறிவியல் வாழ்வு முறையை இன்றைய நாளில் நாம் அறிந்துள்ளோம். இதனை முடியும் என்ற முறையில் வள்ளுவர்

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்து

என்று கூறி, நாட்டின் அணியாக சுபிட்ச மாகத் திகழ முதல் முன்னோடியாக பிணி யின்மையைக் குறிப்பிடுகிறார்.

பிணியல்லாத சமூகம் இருக்க முடியுமா என்ற கேள்விக் குறியினை நாம் கேட்கிறோம். முடியும் என்று மருத்துவக்குழாம் கூறுகிறது. எப்படி? கீழ்க்கண்ட முறைகளினால் முடியும். ஒவ்வொருவருடைய பெருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் பிணியில்லாத மனிதனாக நடத்திக் காண்பிக்க இயலும்.

முதலாவதாக, சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இரண்டாவதாக, ஊட்டச்சத்து உணவு களை உட்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, நோய்த் தடுப்பு முறை களை அனுசரிக்க வேண்டும்.

நான்காவதாக நல்வாழ்வு வாழ்க்கைக் கல்வி முறைகளை, அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்பப் பெற வேண்டும்.

ஐந்தாவதாக, நல்ல வாய்ப்புகளையும் வாழ்வு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலே காட்டியவற்றை விவரமாக ஆராய்வோம்.

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தி லிருந்தே மனித வாழ்க்கையில் தமிழ் நாட்டில் சிறந்த சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். அவர்கள் கூற்றில் ''சுத்தம் சுகம் தரும்'' சுத்தம் சோறு போடும் என்று கூறியது மட்டுமல்லாமல் அறிவுரையாக

கந்தையானாலும் கசக்கிக்கட்டு
கூழானாலும் குளித்துக்குடி

என்று கூறியுள்ளதை வாய் மொழியாக நாம் அறிகிறோம். மேற்கூறிய அறிவுரைகள் சாதாரணமாகவும் எளிமையாகவும் தென்பட்டா லும், என்பதனை நாம் அறிய வேண்டும். நம் நாட்டில் புழுதிகளும், அழுக்குகளும் மிகுதி யாகச் சூழ்ந்திருப்பதைப் பார்க்கிறோம். சூரிய ஒளியின் வெப்பத்தில் வியர்வை உடலில் உண்டாகிறது. நமது உடலிலே, கழிவுப் பொருட் களை வெளியேற்றும் முறையாக வியர்வையும் ஒருவழியாக உள்ளது.

நமது உடலின் உள் அவயவங்களை நோயினின்றும் காப்பாற்றுவதற்கும், நுண்ணிய நோய்க்கிருமிகள் உடலினுள்ளே புகாவண்ண மும், உடலின் வெப்ப, தட்ப நிலையினைச் சீராக அமைக்கும் விதமாகவும் உடலைப் போர்த் திய தோல் பயன்படுகிறது. ஆகையினால், மனிதத் தோல் தூய்மையாக இருக்க, நாம் அறிந்த சுகாதார முறை ''குளிப்பது'' ஆகும். குளிப்பது என்பது நாம் அன்றாடம் கடைப் பிடித்து வருகின்ற முறை எனினும், நலவாழ்வு விதி அறிந்து கடைப்பிடிப்பது சாலச் சிறந்தது. குளிரான தட்ப நிலை இருப்பின் வெந்நீரில் குளிப்பது பரவாயில்லை. மற்றைய வெப்ப நாட்களில், குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. அதனை உடலை ஊக்குவிக்கும் நிலையில் ''அக்கு பஞ்சர்'' முறை மருத்துவமாகக் கூடக் கொள்ளலாம்.

உடலைச் சுகாதாரமாக வைப்பது மட்டு மல்லாமல், வீட்டுச் சுகாதரமும், சுற்றுப் புறச் சுகாதராமும் மிகவும் தேவை. இந்த முறைகளை நாம் அறிந்து அந்த முறைகளைக் கடைப்பிடிப் பதில் கவனம் செலுத்த வேண்டும். அந்த முறையாக, மிக முக்கியமாக, தமிழிலே தூய உடைகளை உடுத்துவது சிறந்ததென்பதை, ''கந்தையானாலும் கசக்கிக்கட்டு'' என்று கூறியுள்ளார்கள்.

இரண்டாம் சிறப்பான முறை, ஊட்டச்சத் தினை ஆர்வமாக ஏற்றுக் கொள்வதைக் கடைப்பிடிக்க வேண்டும் நமது நாட்டிலே, நிலம் என்னும் நல்லாள் நல்கும் காய்கறிகள், கீரைகள், தானியங்கள், பருப்பு வகைகள் அதிக அளவில் விளைவிக்கப்படுகின்றன.

பல ஐந்தாண்டுத் திட்டங்களால் சீரமைக் கப்பட்ட விதிகளினால், நம் நாட்டு உணவுப் பண்டங்கள் தேவைக்கு மேல் கிடைக்கும்படி யாக, பசுமைப் புரட்சி ஏற்படுத்தியுள்ளோம்.

வளரும் உடலுக்குத் தினமும் வளமுடன் வாழ வேண்டி உட்கொள்ள வேண்டிய ஊட்டசத்துக்கள், மேற்கூறிய தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள் கீரை வகைகள் நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. இவற்றை நமது வீட்டிலேயே வளரச் செய்யவும் முடியும்.

தினமும் ஒரு கீரை, ஒரு காய்கறி என்று உணவில் சேர்த்துக் கொண்டால் நலவாழ்வு நிச்சயம். நல்ல உயரமும், வேண்டிய பருமனும் ஒருவன் பெற இயலும். வேலைப் பளுவினால் அசதி அடையாமல், தொடர்ந்து ஒருவனால்

பணியாற்ற இயலும். ஆனால், நமது நாட்டிலே நிலவும் தவறான எண்ணங்களினால் நாம் உண்ணும் பண்டங்களை ஒதுக்கிவிடும் பாங்கினைக் காண்கிறோம். இது சூடு, குளிர் இது, வாய்வு இது, மூட்டினைப் பிடிக்கும். இது 'ஜீரணிக்காது என்ற தவறான எண்ணத்தை ஊட்டச் சத்தினைக் கொண்ட காய்கறிகளை, பழங்களை ஒதுக்கிவிடுகிறோம். மேலும், மகளிர் சமைத்த ருசியான உணவினை ஆண்மக்களுக்கு மட்டும் பகிர்ந்துவிட்டு, தாமும் குழந்தைகளும் பகிர்ந்து கொள்வதில் மேலும், விரதம் என்று கூறிப் பட்டினி போட்டு உடலை வாட்டி விடுகிறார்கள்.

அதனால் தென்னிந்தியாவில் மகளிர் ஊட்டத்சத்துக் குறைவினால் ரத்தக்குறைவு சோகை நோய் போன்ற நோய்களுக்கு ஊட்ட படுகிறார்கள்.

வளரும் சிசு பலமாக இருக்க வேண்டுமானால், கருவுற்ற தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். கருவுற்றதாய் பேணும் சிசுவிற்குப் பூரண ஊட்டச்சத்து கொடுப்பதன் காரணத்தால், தாய் தானம் நல்லஊட்டச் சத்தினை ஏற்றுக் கொள்ள முடியும். இல்லை யென்றால், கருவறையில் வளரும் சிசுவும் வளர்ச்சியின்றி வாடும். தாயும் நோய்வாய்ப்பட்டு வலுவிழக்க நேரிடும். நமது நாட்டிலே கிடைக்கும் எண்ணற்ற காய்கறிகள் மேற்கூறிய எந்த விதக் குறைகளைக் கொண்ட வையுமல்ல. மேலை நாட்டு மருத்துவ வல்லுநர்கள், இந்தியா வந்து பார்வையிட்டபோது. இவ்வளவு ஊட்டச்சத்துக் குறை இந்திய மக்களிடையே, முக்கியமாக மகளிரிடையே உள்ளது என்பதை அறிந்து ஆச்சிரியப்பட்டனர். அவர்கள் சமூகத்தில் சென்று ஆராய்ந்தபோது, நமது சமூகத்திலே, முக்கியமாக இந்தியப் பெண்களிடையே உணவுப் பொருட்களின் மேல் நிலவிய மேற்கூறிய தப்பு அப்பிராயத்தைக் கண்டார்கள். இதனை உணர்ந்து அறிவியல் சார்ந்த ஆய்வு கூறியபடி கருவுற்ற தாய் நல்ல ஊட்டச்சத்து உணவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். பிறந்த மூன்றாம் மாதத்திலிருந்து தாய்ப் பால் மட்டுமின்றி நல்ல ஊட்டச் சத்து உணவினைக் கொடுக்க வேண்டும். எல்லாக் காய்கறிகளையும் கீரைகளையும் பழங்களையும் வளரும் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். தவறான அபிப்பிராயத்தை நீக்கி, தாய் ஊட்டச்சத்தினை ஏற்றுக் கொள்வாளேயாயின், பிறக்கும் குழந்தை நல்ல உருவத்தையும் பருமனையும் பெறுவதற்கு. வாய்ப்புண்டு இல்லையென்றால் உயரம் பரும்ன் ஆகியவற்றின் வளர்ச்சியும் குன்றி, வதன வடிவமைப்பும் சீர் குலையும்

நம்நாட்டுத் தின்பண்டங்கள் பனை வெல்லம், நாட்டுச் சர்க்கரை, வெல்லம் கொண்டு செய்யப்படுவதால், வேண்டிய சக்தியளிக்கும் ஊட்டச்சத்து கொண்டுள்ளன. வெண் சர்க்கரை திடீர் சக்தியினை அளிக்குமேயின்றி, தீய விளைவுகளைக் கொடுக்கும்.

நோய்த் தடுப்பு முறைகளைக் குழந்தை பிறந்த முதல் மாதக் காலத்திலேயே அனுசரிக்க வேண்டும். முன் காலத்தில், குழந்தைப் பருவத்தில் தாக்கும் பிணிகளினால், ஏராளமான குழந்தைகள் இறந்து கொண்டருந்தன. மேலும் பல குழந்தைகள் உடல் ஊனத்தினால் பாதிக்கப் பட்டார்கள். கண்கள் ஒளியிழந்தும் கால், கைகள்,வேலை செய்ய முடியாமலும், மூளைப் பாதிப்பு ஏற்பட்டும், வாழ்நாள் பூராவும் அவதியுற்றனர்.

இந்த விதமான பாதிப்பு, வளரா நாடுகளிலும், அறியாமையுள்ள சமூகத்திலும் மிகவும் காணப்படுகிறது. மற்றும் குழந்தை இறப்பும் அதிகமாக இருக்கிறது.

ஆனால் இந்தச் சூழ்நிலையினை அறவே தவிர்க்க இயலும், வளர்ந்த நாடுகளிலும் அறிவியல் சார்ந்த நாடுகளிலும் சாதாரணமாகக் குழந்தைளைப் பாதிக்கும் நோய்கள் குழந்தைகளை அணுகா வண்ணம், நோய்த் தடுப்பு முறைகளை ஏற்றுக் கொள்ளுவதன் மூலம்

குழந்தைகள் இறப்பைத் தடுத்து விட்டார்கள் என்றும், உடல்நிலை பாதிப்பு என்பதைத் தவிர்க்க இயலும் என்பதையும் ஊர்ஜிதம் செய்துவிட்டார்கள்.

மக்களுக்கு, கல்வியறிவு மிக மிக முக்கியம். இதனை உணர்ந்து தமிழ் மொழியில் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று கூறினார்கள். கண்களுக்குப் புலப்படும் ஞானம், ஒளிமயமானது. எத்தனையோ நவீனங்களையும் புதுமைகளையும் இன்றைய பொறியில் மற்றும் மருத்துவ அறிவியலால் பெறுகிறோம். இந்த நவீனங்களையும் புதுமைகளையும், நமது வாழ்க்கை முறையே அப்போதைக்கப்போது மாற்றி அமைக்கின்றன. உடலின் வேலைத் திறமை மிகுவிக்கிறது. நேரம் வீணாவதைத் தவிர்க்கிறது. அதனால், பிரயோசனமான ஆக்க வேலைகளுக்கு அதிக நேரம் செலுத்த இயலு கிறது. இதனால், நமது உடற் சுகாதரம் வீட்டுச் சுகாதாரம், சுற்றுப் றச்சுகாதாரம் முதலியவற்றை எளிதில் கடைப்பிடிக்க முடிகிறது. எளிதில் கடைப்பிடிக்கப்படுவது மட்டுமின்றி தொடர்ந்து சுகாதாரப் பணியினைத் தொய்வில்லாமல் செய்து கொண்டிருக்கவும் முடிகிறது.

கல்வியறிவினால் நல்லவை, கெட்டவை அறியலாம். தவறாக அபிப்பிராயங்களைத் தவிர்க்கலாம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு கல்வி யறிவு மிக முக்கியம்.

மக்கள் நல்ல வாய்ப்புகளை வரவேற்க வேண்டும். அறிவு பரவும் போது, உலகம் சுருங்குகிறது. அறிவியல் ஞானம் உடனுக்குடன் பரவுகிறது. இந்த ஞானம் பரவினால் வாழ்வு இயங்குமுறை மாறுபடுகிறது.

தமிழ் மொழியில் ''திரை கடலோடியும் திரவியம் தேடு'' என்பது மட்டுமில்லாமல், பாரதியார் கூறியபடி ''எட்டுத் திசையெங்கும் சென்று சாத்திரங்களைத் தமிழிலே கொணர்வீர்'' என்பது போல அறிவார்ந்த நல்ல உண்மைகளை உடனே ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற வேண்டும்.

வாழ்வு முறைகளையும், நோய் ஏற்படின் மருத்துவ முறைகளையும் நோய் வராவண்ணம் தற்காப்பு அறிவியல் சார்ந்த முறைகளையும் ஏற்றுக்கொண்டால், மனிதன் பிணியறியான் எந்நாளும் இன்பம் பெறுவான். அதனால் துன்பமில்லை. என்பதன் உண்மை விளங்கும்.

ஒருவனது உடல் வளர்ச்சி நன்றாக இருக் கிறது என்பதனை அங்க அடையாளங்கள் காண் பிக்கின்றன. குழந்தைக்கு நல்ல உடல் வளர்ச்சி யிருக்க வேண்டும். உடல் ஊனம் கூடாது.

பிறந்த குழந்தை மூன்றாம் மாதத்தில் இரண்டு பங்கு பருமனாகவும், ஒன்பதாம் மாத அளவில் மூன்று பங்காகவும் பருமன் பெற வேண்டும். பிறந்த குழந்தை ஆறாம் மாதத்தி லிருந்து இரண்டு வருடங்களுக்குத் தவழ்ந்து ஊர்ந்துநின்று பேசப் பழக வேண்டும். வயதிற் கேற்ற உயரமும், பருமனும் வளரும் பிராயத்தில் இருக்க வேண்டும். உடல் மேல்தோல் நன்றா யிருக்க வேண்டும். மார்புக் கூடு பரந்து விரிந்து இருக்க வேண்டும். மார்புக் கூடு சுருங்கியும் முன்துருத்தியும் இருக்கக் கூடாது.

கைகள், கால்கள் நீண்டும் நேராகவும் இருக்கவேண்டும். வளைந்திருக்கக் கூடாது. கண்களிலே ஒளிபடர்ந்திருக்கவேண்டும்.

நல்ல உடல வளர்ச்சியிலிருந்தால், உடல் மூளை ஒருங்கிணையும்போது உடல் நலம் நன்றாக இருக்கும். பாரதியார் கூற்றின் படி இளைஞன்.

''ஒளிபடைத்த கண்ணினன்
உறுதி கொண்ட நெஞ்சினன்''

ஆக இருக்க வேண்டும்.

என்றும் அவனையே, நாட்டின் சுபிட்சத் திற்கு வாவா என்றும் அறை கூவி பாரதியார் அழைக்கிறார்.

''பிணியறியாத மனிதப் பிறிவியும்
வேண்டுவதே இம் இம்மானிலத்தே''

☆

TAMILS : THEIR ORIGIN AND THE LONG JOURNEY

Padmashri. Prof. Dr. S. Kameswaran, Emeritus Professor, Chennai Medical College.

MODERN

According to Prof. Velupillai, the Tamils can be defined as people, having Tamil as their mother tongue. Tamil language is a member of the Dravidian / South Indian family of languages. The four southern most states of India-Tamilnadu, Kerala, Karnataka and Andhrapradesh are predominantly linguistically Dravidian, each state carved on the basis of predominance of the four major Dravidian Languages. The Dravidian languages are mother tongues of about a quarter of the Indian South India States. A number of Dravidian lanaguages have been identified in other parts of South Asia. Among the tribal languages central India, almost extending to the borders of Bengal, distinct from the Austro-Asiatic family have been located in isolated settlements in Nepal and Pakistan. The Brahui Speakers are found in hills of Baluchistan, almost on the borders of Pakistan, Afghanistan and Iran. So the Dravidian family of languages in a South Asian family of languages is one sense. About 22 languages are classified as belonging to the Dravidian family and on linguistic criteria, sub-division as North, Central and South Dravidian are made. Tamils alone number amout 60 million people

South India and Srilanka have been homelands of the Tamils, from the beginning of the recorded history. The region, roughly covered by the border states of Tamilnadu and Kerala are identified as ancient Tamzhakam upto about 10th Century AD.Eventhough some evidence exists for Tamil influence, Tamil presence in Srilanka is noticeable from very early times) strong for Tamil presence and influence in Srilanka, from about the 10th century. In the 19th and early 20th centuries, Tamils migrated to some British colonies in search of employment and thus there are substantial Tamil Populations in Malaysia, Singapore, Mauritius, Fiji and South Africa. After the Word war II, a movement of Tamil professionals UK, USA, Australia and New Zealand was proceeding continuously. Due to the recent civil war type situation in Srilanka, many thousands of Tamils are in about 20 countries, with large numbers in Canada, Germany, France and Switerland. Within the Nordic countries, Norway and Denmark have more Tamils than Sweden.

ANCIENT

The name given to the family came from a very early reference in the Rig Veda, where the sanskrit word "Dravida" was used to refer to one of the languages namely Tamil - Which has the oldest written records of the family.

The Dravidian languages have remained as an isolated family without demonstrable connections with Indo-European tongues or any other languages. Dravidians form population of South India speaking Dravidian languages, but are very heterogenous in tradition religion and race. The term Dravidian is frequently used to indicate those inhabitants of India who have dark skin and negritoid characteristics. This is not correct. The Dravidians have varied skin colour straight hair and Caucasian features.

STORY ABOUT MIGRATION

For a discussion on migration of group of people we have to depend on several parameters which have been used in the present context.

1. Literary evidence: In some cases ancient writings cannot be deciphered. e.g. Indus valley civilization.
2. Archeological excavations.
3. Languages spoken and evidences of the same language speaking people left enroute or scattrerd. E.g. Brahui in Pakistan.
4. Deep routed Religious traditions: Migrants (Sumerians) have the practise of carrying their customs wherever they go.
5. Racial characteristics are carried in the genes which are race specific.
6. In a few cases, DNA of the genes carry race specific diseases which could give an idea of the migration of travelling Race provided the

race has not widely intermarried. We give three examples here.

a. Typical example will be a disease called "Otosclerosis" deafness disease affecting young people who gradually loose hearing. It runs in families and affects only the Mediterranean races. It is most common in South India.

b. Sickle cell anaemia - where a pattern progressively becomes anaemic with a ochange in blood corpuscles-again a Mediterranean disease common in South India.

6. c. Thalassemia - again a disease of Mediterranean people gene bound where a person gradually bleeds to death with spleen enlargement.

7. In recent times, a very accurate and useful scientific tool has become available to identify population migration. This is called HLA typing of the DNA. We obtain what is called dendogram which helps us to identify the various group of races.

In Madurai Kamaraj University, dendogram has already been done on selected closed communities. One such example will be a community of weavers from Madurai who have race relationship with spanish Gypsies which means that the latter had migrated from India. The M.K. University department of Immunology is all set to do the testing on a world basis. Before we embark on the migration of the Dravidians we should be very clear, without emotion, that the present homeland of their's was unoccupied, and that only waves of migrants filled them up inturn.

The first wave we believe was the negritoid wave starting 500,000 years ago-from Olduvai gorge Tanzania-through Nile valley - Latamne in Syria - through Himalayan passes - to Indian and South. We have all the evidences for their travel and the route taken gradually in thousands of years.

Still thousands of years later came the second wave, the Australiod wave following the same route and drove the negrotoid people away.

Relatively recent and the last wave was the Dravidian wave which happened in the 2nd millenium BC.

We will move on to the Pre History 4000 BC and see what the Proto Dravidians were upto.

The old island of "cos" was the abode of Proto Dravidians as attested by old Egyptian Historian Heredotus.

The island disintegrated through volcanic eruption during the 4th millenium BC and the inhabitants got scattered and entered the Southern Mesopotamia area called Sumer.

They were named Sumerians by the others.

In chapter 2 of John Heises "Akkadian language" he wonders how and where from the Sumerians who were not the first people of Mesopotamia came to occupy the present place. Heredotus explanation is the answer. The Sumerian language has no known relation to any other languages. There is a remote relationship with the Dravidian languages (like spoken by the Tamils now in South India). Because of the term "the black headed ones" it is possible but far from proven that the Sumerians are an early branch of one of the people now living in South India. The Sumerians were responsible for the first monumental temples and places and for the founding of the first city states and most likely for the invention of writing (all in the period of 3100-3000 BC).

The linguistic and cultural affinities between the Sumerians and the Tamils are evident as testified by Prof. Sadasivam and Loganathan Muttarayan. Prof. Nilakantasastri has pointed out similarities like temple worship, their habit of worshiping moon God perched in artificially raised hillock called "Ziggerat. The capital of Sumer was "OR", and the Sumerian Sacred city and religious centre was named as Nippur. This great civilization could not last for ever. Since Mesopotamia had no natural boundaries and was difficult to defend, and the influence of neighbouring countries was great.

From Sumer ""Dravidians" started moving through the Northwest corner of India and established the Indus valley civilization in the year 2500-1500 BC, having established two highly civilized cities like "Harappa and Mohenjodaro".

தமிழ் - நம் காதலி!

-பாவலர் எழுஞாயிறு-

ஆடிடும் பூங்கொடியோ? - இல்லை
அசைத்திடும் இளந்தென்றலோ?
ஈரெட்டுப் பருவமெனும் - தேரில்
எதிர்வரும் ஏந்திழையோ?
தேனிலே நனைத்தெடுத்துப் - பெற்ற
தெவிட்டாத கனிச்சுவையோ?
கடலுக்குள் சிப்பிதரும் - நல்ல
கனிமுத்து தான்இவளோ?
மான்விழிப் பார்வையினால் - நம்மை
மயக்கிடும் பேரழகோ?
உடலெனும் கூட்டினிலே - வாழும்
உணர்வுக்கு அடித்தளமோ?
காதலி - நம் காதலி;
கனிமொழி - இவள் தனிமொழி;
நாளெல்லாம் - வாழும் நாளெல்லாம் - நம்மை
இணைத்திடும் செந்தமிழ்மொழி!
செந்தமிழ் மொழியவள்; முந்திப் பிறந்தவள்;
சிந்தை மகிழ்ந்திட வந்திங்கு போற்றுவோம்!

However, this civilization ended abruptly (Sir Mortimer Wheeler). This advanced civilization again was proto Dravidians with Lord Pasupathi and Nataraja worshipped.

They were attacked and nearly annihilated by Indo Aryan tribes who were preliterate nomads from central Asia (Modem day Russia). They drove the Dravidians in a three pronged fashion South, East, and South East. By gradual degrees the conquerors, knowing the culture of those they defeated attempted merger.

Any conqueror has three options with the conquered.

1. Total annihilation
2. Assimilation into their fold.
3. Allowing them to function on their own cultural terms or norms but under the thumb of the conqueror. The Aryans did all these and the result is the caste system.

All of us abhor the caste system, the base of this country. But you may be amazed to know that the Anthropologists and Geneticists world over are thrilled by the phenomenon.

Cast system is the greatest Biological experiment ever done on Homosapiens" Dobzhamky.T. We will be failing in our narrative if we don't mention the Egyptian civilization. During the 2nd millenium BC there were large Asian presence from South Indian peninsuala as mentioned by (Herodotus-great Greek Historian). These people sailed from South India by High seas with the Trade winds. These people were not conquerors but priests, artisans, stone dressers, colonade builders, Gold smith and Agricultural experts. The results were the pyramids at Gaza, 1000 pillared temple at Luxor, the jewels on the neck of Tutankamen. The organised worships at the temples, the Agricultural operations portuyed in the parchments resemble those occuring in our paddy fields even to this day.

This is but a very condensed version of the migration of a very glorious Race the world had produced. Dravidian civilization we dare can say is the only civilization which has survived several millenium and the Test of Time!

REFERENCE:

1. **Howells William W**
   Homo Erectus
   Scientific American
   Vol.215, 1966.
2. **Pfeifer John E**
   Emergence of Man, Nelson, 1970.
3. **An introduction to the study of Man**
   Oxford University Press, 1971.
4. **Wheeler Mortimer,**
   Civilization of Indus Vally and Beyond,
   Mc GrawHill, 1966.
5. **Nehru Jawharlal,**
   Discovery of India Edited by Robert Crane
   Constable, 1960.
6. **Dobzhansky Theodosius,**
   Evolution Genetics and Man
   Chapman and Hall, 1955.
7. **Leakey L.S.B.**
   Adams ancestors,
   Methuen, 1953.

உரையாடல்

'கிராக்கி'

நூல்கள் சிலவற்றை எழுதிவைத்திருந்தேன். கையெழுத்துப் பிரதிகள் அலமாரியில் முடங்கிக் கிடந்தன. உரைக்கிழத்தி பண்டிகை வந்ததும் அதாவது சரஸ்வதி பூஜையன்று விளக்கவுரை தேவையானால் உரைக்கிழத்திக்கு பொருள் கலைமகள். கலைமகள் என்பவள் சரஸ்வதி! அத்திருநாளில் என்னுடைய சுவடிகளைத் தேடினேன். பூஜையறையில் வைத்து கலைமகள் அருளைப் பெறுவதற்கு!

தூசு படிந்த அலமாரியைத் திறந்தேன். சுவடிகள் மீது கறையான் படிந்திருந்தது. தூசு, கறையான் அகற்ற அல்லல்பட்டு ஏடுகளைப் புரட்டினேன். புத்தகப் பூச்சி, புழுக்கள் நெளிந்து ஓடின. ஏடுகளில் ஏதோ ஒரு ரசனை இருப்பதை உணர்ந்தேன்! மீண்டும் ஒரு முறை ஏடுகளைப் புரட்டிப் பார்த்ததில் சங்க இலக்கியக் கட்டுரைகள் சிலவற்றை எழுதி வைத்திருந்தது நினைவுக்கு எட்டியது. கறையான் படிந்திருந்த ஏடுகள் அந்த இலக்கியத்தனி தொன்மையையும் எடுத்துக் காட்டியது!

புத்தகப்பூச்சி புழுக்களின் ரசனையிலிருந்து ஏடுகளை மீளச் செய்து, என் இலக்கிய ரசனையை பரவலாக தமிழ் வாசகர்களிடையே பகிர்ந்து கொள்ள, பூஜை அறையில் மலர், சந்தனம், குங்குமம் இட்டு, சாம்பிராணி, கற்பூர ஒளி காட்டி கலைமகளை மன்னித்தருள வேண்டினேன்! மறு தினம் விஜய தசமியன்று ஒரு பதிப்பகத்தில் சுவடிகளுடன் நுழைந்தேன். கலைமகள் அருளில், சிக்கலில் இருந்த நூல் அச்சகத்தை எட்டிப்பிடித்தது.

அச்சகத்திலிருந்து விடுபட்டு வந்த தாள்களைப் படித்துப் பார்த்தால் நூலின் இழைகள் பிரிந்து கிடக்கும்! ஏட்டில் இடம் பெறாத புதுப் புது சொற்கள் காட்சியளிக்கும்! சிலவற்றுக்கு கால், கொம்புகள் ஒடிந்திருக்கும். குறிகள் தவறி இடம் மாறியிருக்கும். வேண்டாத இடத்தில் ஒரு கேள்வி, வியப்புக் குறி நிமிர்ந்து நிற்கும்! சொற்களுக்கு இடையே இடைவெளி இருக்க வேண்டிய இடத்தில் இருக்காது. வேண்டாத இடத்தில் சொற்கள் இணைந்திருக்கம் இந்த பிழைத்திருத்தலுக்கு 'ப்ரூஃப் ரீடிங்' என்று பெயர். இப்படி பிழைத்தெழுந்த நூலுக்கு ஒப்பனைகள் பல உண்டு. நூலுக்கு மூலாதார எழில் இருந்தல் அழுகுக்கு அழகூட்டுவது என ஒப்பிடலாம்! இது கம்பன் நிலமகளுக்கு அளித்த பதவுரை. சொல்தோறும் உரைக்கும் சொல் என்னுடைய நூலின் உரைநடையை படிப்போர்கள் ரசனையுடன் வரவேற்பார்களா என்ற ஐயப்பாடு என்னை உறுத்தியது. தீவிர ஆலோசனைக்குப் பிறகு அணிந்துரைக்கு எழுத்துலகத்தில் மிகச்சிறந்து வளங்கும் எழுத்தோவியர் ஒருவரை அணுகினால் நூலுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று தோன்றிற்று. நூலைப் படிக்கா விட்டாலும் அணிந்துரையை யாவது வாசகர்கள் படித்துமகிழ வகை செய்தேன்!

புத்தகத்தின் தாள்கள் நூலால் கோக்கப்படவில்லை. எனினும் அவற்றை கட்டுக்கோப்புடன் அவர் இருப்பிடம் எடுத்துச் சென்றேன். அவர் அங்கு அப்போது இல்லை. இதுதான் நல்ல தருணமென்று அணிந்துரை வழங்குமாறு வேண்டுகோளுடன் ஒரு மடலை எழுதி வைத்து அச்சகத்திலிருந்து வந்த தாள்களின் கட்டையும் வைத்துவிட்டு வந்துவிட்டேன்! தாள்கள் நூலால் கட்டப்படவில்லை எனினம், நூலுக்கு (புத்தகத்திற்கு) அணிந்துரை எழுதித்தருமாறு பணிந்திருந்தேன்.

தொலைபேசியில் கால நேரம் குறிப்பிட்டு என்னை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் விட்டுவைத்து தாள்களின் கட்டுதான் இருக்குமென்று இல்லம் தேடிச் சென்றேன். அந்த தாள்களின் கட்டு புதுப் பொலிவுடன் அங்கு கிடந்தது. அத்துடன் தன் கையால் எழுதப்பட்ட மடல் ஒன்றும், எட்டுப் பக்க அணிந்துரையும் இருந்தன. படித்தவுடன்

என் மெய் சிலிர்த்தது. மடலில் அணிந்துரை அணிந்துரைக்காக எழதப்படவில்லை படித்து சுவைத்து எழுதியது என்று குறிப்பிட்டிருந்தது. அணிந்துரையைப் படித்ததும் என் நூலின் நுணுக்கங்களை அப்போது தான் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

கண்களில் நீர்மல்க அவருக்கு இதயங் கலந்த நன்றி தெரிவித்து வணங்கி விடைபெற் றேன். இந்த முன்னுரையை இத்துடன் நிறுத்தி முடிவுரைக்கு வரும்போது இந்நிகழ்ச்சிக்கு விளக்கவுரை அளிக்கிறேன். சிறந்த உரை கோளாளரிடமிருந்து அணிந்துரை ஒரு மெய்யுரையே.

இக்கட்டுரையின் நோக்கம் உரைத்தலைப் பற்றியதாகும். உரை கட்டுதல், உரையிடல் என்பது நூலுக்கு உரை செய்தலைக் குறிப் பிடும். முன்பொருமுறை ஒரு இதிகாசத்தைப் பற்றிய மூன்று மகாகவிகளின் காப்பியங்களை வைத்து ஒப்புநூல் ஒன்றை எழுதினேன். ஒப்புக்காக எழுதவில்லை. காப்பியங்களில் கண்ட எழில் வருணனைகளை ஒப்பிட்டு எழுதியது. இந்நூலை ஒரு பெரும் புள்ளியிடம் கொடுத்து நூலுக்கு ஒரு மதிப்புரை எழுதுமாறு அவரிடம் பணிந்துரைத்தேன். அப்பெரும் புள்ளிக்கு இந்த இதிகாசத்தில் ஈடுபாடு உண்டு! சில நாட்கள் கழித்து அவரிடம் சென்றேன். அவர் பக்கம் பக்கமாக எழுதியிருந்த மதிப்புரை பழிப்புரை வடிவில் இருந்ததைக் கண்டு வருந்தினேன். இதிகாச நூலில் புதுமை ஒன்றுமில்லை எனக்கூறி இத்தகைய நூல் எழுதுவது எப்படி என்று எனக்கு அறிவுரை வழங்கினார்! இதிகாசத்தின் தொன்மையை நவீனமாக்க முடியாது என்று அவர் முகத்தைப் பார்த்து முகவுரை ஒன்றும் கூறாமல் நூலுடன், கொடுத்த மதிப்புரையை ஏக்கத்துடன் பெற்றுக் கொண்டு வந்துவிட்டேன். அதை நூலின் பதிப்புரையில் நான் சேர்க்கவில்லை! நடுவு நிலை கொண்ட இதிகாசத்தின் அருமை பெருமை தெரிந்த அறிஞர்கள் நால்வர் இந்நூலுக்கு சிறப்புரை, பரிந்துரை பாராட்டுரை, புகழுரை என பல கோணங்களில் எழுதி நூலை சிறப்பித்தனர். அச்சடித்த அனைத்து நூல்களும் இங்கு மட்டுமின்றி மேலைய நாடுகளில் தேக்கமின்றி விற்பனை ஆயிற்று. மதிப்புரை அளித்தவருக்கு இது ஏமாற்றத்தை அளித்தது. தான் எழுதிய பதிப்புரையை விமரிசன உரையாக பத்திரிகையில் பிரசுரித்து மகிழ்ச்சியடைந்தார்! அந்நூல் மறுபதிப்புகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது! அந்நபருடன் உரைசலை தவிர்த்தேன்!

உரைகல்லில் பொன்னை உரைத்தால் குணம் காணலம். பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களின் உரைத்தலில் தொன்மையான சங்க இலக்கியங் களின் எழில் பளிச்சிட்டது. அவர்கள் விட்டுச் சென்ற பொழிப்புரைகளிலிருந்து சங்க இலக் கியத்தின் பொருட் செல்வத்தையும், நூல்களின் முகவுரையாகிய பாயிரங்களின் உயர்நோங்கங் களையும் என்னைப் போன்ற தமிழ் இலக்கிய கற்றுக்குட்டிகள் கூட ஆராய்ந்தறிய முடிகிறது. அம்மேதைகள் தமிழ்மொழியின் தூதர்கள். பண்புரையாளர்கள்.

கட்டுரை நடையை உரைப்பாட்டு என்பர். உரைபெறு கட்டுரை என்பது காவியங் களிலே உரைநடையில் அமைந்த தொடரைக் குறிக்கும். தொடருக்கு ஒரு முடிவுரை உண்டு. முன்கூறியபடி என்னுடைய முன்னுரைக்கு பின்னோக்கிச் செல்வோம்! அடியேன் எழுதி யிருந்த நூலின் பெயர் 'காலத்தின் சுவடுகள்' இக்காலத்தின் கோலங்களிலிருந்து விடுபட்டு சங்க கால இலக்கிய ஏடுகளில் பதிந்திருக்கும் சமுதாய, இயற்கையில் அமைதி, எழிலைப் பருக எடுத்த முயற்சியாகும். அணிந்துரை வழங்கியவர். சங்கத் தமிழ்க் காவலர் கலைஞர் கருணாநிதி அவர்கள், பின்னுரை பி.கு. இதற்கு வேறொரு மதிப்புரை, விமரிசன உரை தேவை யில்லை! அப்படி வந்தால் ஏற்புரையாகாது!

★

உலகில் தோன்றிய முதல் இனம் தமிழ் இனமே!

-முனைவர் மு.பி.பாலசுப்பிரமணியம்-

தமிழ் இனத்தைப் போல பழம் பாரம் பரியம் பற்றிப் பெருமைப்படக் கூடிய இனம் உலகத்திலேயே எங்கும் இல்லை. என்று துணிந்து கூறலாம். தொன்மை வாய்ந்த எமது நாகரிகங்கள் அழிந்துவிட்டன என்னும் தகுதி

யுடைய இனங்கள் கூட, பூமிப்பந்தில் உயிர்த் தோற்றத் திற்குரிய பகுதியில் தோன்றி னோம் என்று கூறிக் கொள்ள முடியாதநிலையில்தான் உள்ளன.

மனித உயரின் தோற்றமே தனது மண்ணில் தான் நிகழ்ந்தது என்றுநெஞ்சை நிமிர்த்திச் சொல்லக் கூடிய ஓர் இனம் உண்டென்றால் அது தமிழினம் தான்.

'சிலேற்றின்' கொள்கை, நிலம், கடல் ஆகியவற்றின் பரப்பு மாறிக்கொண்டே இருக் கும் என்று கூறுகிறது. பூமியின் தெற்குப் பக்கம் உள்ள பரந்து விரிந்து கடற்பகுதி ஒரு காலத்தில் நிலப்பகுதியாக இருந்ததாகவும் அந்நிலப் பரப்பில்தான் மனித உயிர்த் தோற்றமும் நிகழ்ந்ததாகவும் கருதப்படுகிறது. அப்பகுதி யையே 'இலெமூரியா' என்றனர். இலெமு என்றால் உயர் அல்லது உடல் உறுப்புகள் என்ற பொருள்படும். உயிரினம் தோன்றியதே 'இலெ மூரியா' என்று அழைக்கப்படும் இப்பகுதியில் தான் என்பர் பூமி இயலார்.

இந்துமாக் கடற்பகுதி ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியாக இருந்தது என்பதை இழந்து இலெமுரிய (Lost Lemuria) என்னும் தனது நூலில் உறுதிப்படுத்துகிறார். ஸாகட் எலியட் என்னும் மேனாட்டு அறிஞர்.

அறிஞர்பெருமக்களால் குறிப்பிடப்படும் 'இலெமூரியா' எனும் இந்நிலப் பகுதியே குமரிக்கண்டம் என அழைக்கப்படுகிறது. பன் மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு என்னும் அரிய ஆராய்ச்சி நூலையே எழுதி யுள்ளார்.

இலெமூரியா என்னும் இப்பகுதி உயிரினத்தின் தோற்றம் மட்டுமல்லாமல் மனித நாகரிகத்தின் தொட்டிலாகவும் திகழ்ந்தாக பேராசிரியர் ஹெகல் (Prof-Hegal) கருதுகிறார். (Lumuria was the cradle of human civilaisation)

இந்துமாக் கடற்பகுதியில் ஒரு பெரிய நிலப்பரப்பே அமிழ்ந்துள்ளது. அந்நிலப்பரப்பு தான் மனித நாகரித்தின் தொடக்கம் என்று ஆங்கில அறிஞர்களால் கூறப்பட்டுள்ள இக் கருத்துகள் எல்லாம் நமது தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் காணப்படும் கருத்துக ளோடு ஒத்துப் போனதை நாம் காணலாம்.

குமரி முனைக்குத் தெற்கே ஏழ்தெங்க நாடு, ஏழ் பனை நாடு முதலிய 49 நாடுகள் இருந்ததாகவும். அவை கடற்கோளால் அழிந்து பட்டன என்றும் இலக்கியக் குறிப்புகள் காணப் படுகின்றன. அப்பகுதியில் இருந்த மலை குமரி மலை என்றும். அதனின்றும் பெருக்கெடுத்து ஓடிய ஆறு குமரியாறு என்றும். மற்றுமொரு பேராறு பஃறுளி ஆறு என்றும் இலக்கியங்கள மூலம் நம்மால் அறிய முடிகிறது. தலைச் சங்கத்துத் தென் மதுரை. இடைச் சங்கத்துக் கபாடபுரம் ஆகிய நகரங்களைப் பற்றிய குறிப்புகளும் காணக்கிடைக்கின்றன.

புறநானூற்றில் குமரி அம்பெருந்துறை அயிரை மாந்தி என்ற பிசிராந்தையார் பாடலுக்கு உரை வகுத்தோர் குமரியாற்றின் பெரிய துறை என்றே குறித்துள்ளனர். இக்குமரியாறு தான் கடற்கோளால் அழிந்துவிட்டது.

சிலப்பதிகாரத்தில் ''பஃறுளியாற்றுடன் பானமலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்

அடி பெண்ணே!

-பாவலர் மணிவேலன்-

பெற்றோர்தாம் எனைப்படைத்தார்; ஆனால் என்னைப்
பெண்ணாக வேண்டுமெனப் படைக்க வில்லை!
கற்றோரே! பெண்பிறப்பை யானே ஏற்றுக்
கண்டிப்பாய் இவ்வுலகில் பிறக்க வில்லை!
சுற்றிவரும் சக்கரத்தில், குயவன் கைகள்
தொடுமுறையில் மட்கலத்தின் உருவம் மாறும்
முற்றாகப் பிறபிறப்பை அறிந்தோ ரென்னும்
முனைவர்களே! பெண்வடிவம் யார்கொடுத்தார்?

பெண்குழந்தை என்றவுடன் முகம் சுளிக்கும்
பெற்றவளை என்னென்பேன்? சுற்றிச் சுற்றிக்
கண்ணென்றும் மூக்கென்றும் கனிவாய்ப் பேசிக்
காமத்துக் களிப்பினிலே மயங்கச் சாய்த்துப்
பெண் வயிற்றில் விதைபோட்ட ஆண்பிள் ளைக்கும்
பெண் குழந்தை கசப்பதுமேன்? அடியே பெண்ணே!
எண்ணிப்பார்! விழித்துப்பார்! இழிவு செய்வோர்
யாரெனினும் தூ வென்று காரித் துப்பு!

இடுப்புவலி வரும்போதே புறக்க டையில்
இடுகுழியைத் தோண்டிடுவார்; பெண் குழந்தை
படுப்பதற்குக் குழிப்படுக்கை! பையன் என்றால்
பல்லெல்லாம் தெரியும்படிச் சிரித்துப் பூவை
எடுப்பதுபோல் மெதுவாக எடுத்த ணைத்தே
இடுவார்கள் தொட்டிலிலே! சுற்றம் எல்லாம்,
உடுப்பதற்கு வகைவகையாய் ஆடை தந்தே
ஊர்மெச்சக் கொஞ்சிடுவர், முத்தம் ஈவர்!

அடிபெண்ணே! நீதரையில் விழுந்து, வாயை
அழுவதற்குத் திறக்குமுன்னர் மூடி, உன்னைத்
துடிப்படங்கக் குழியினிலே போடு வார்கள்!
சிலபேர்கள் மூக்குவாயை மூடி, உன்னை
நொடிப்பொழுதில் முடிப்பார்கள்! இரக்கம் கொஞ்சம்
நெஞ்சத்தில் இருப்போர்கள், குப்பைத் தொட்டிப்
படுக்கையிலே உனைக்கிடத்தி ஓடிப் போவார்!
பசித்துவரும் நாய்க்குணவாய் ஆகிப் போவாய்!

முடமடி பெண்ணே நீ! முக்காட் டுக்குள்
முடங்கிஏன் கிடக்கின்றாய்? சமையல் கட்டும்
ஆடவர்கள் காமத்தைக் கழிப்ப தற்கே
அழைக்கின்ற படுக்கையும், அன்றி வேறே
தேடுதற்கே உலகத்தில், கதவுக் கப்பால்
தெரியாது கிடக்கின்ற மூடப் பெண்ணே!
கூடுவிட்டுப் பறந்து நீ வான வீதி
குறுக்குநெடுக் கெங்கெங்கும் பறக்கக் கற்பாய்!

கடல் கொள்ள'' என்னும் இளங்கோவடிகள் கூற்று கொடுங்கடல் கொண்ட அக்கொடுமையை உலகுக்குப் பறைசாற்றுவதைக் காணலாம். குமரியாறு. பஃறுளியாறு பாய்ந்து சென்ற நிலப்பரப்பு முழுமையும் கடலுக்கு அமிழ்ந்து போன செய்தி. தென்பாலி முகத்திற்கு வட வெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றிற்கும் குமரியாற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காததூரம் கடல் கொண்டது'' என்ற அடியார்க்கு நல்லார் உரையிலும் காணப்படுகிறது.

குமரியாறு கடல் கொள்ளப்பட்ட காலத்து ஏழ்தெங்க நாடு ஏழ்பனை நாடு முதலான நாடுகள் அழிந்தன என்ற குறிப்பு அபிதான சிந்தாமணியிலும் உள்ளது.

சந்திர குப்தரின் தூதராய். இந்தியாவுக்கு வருகை தந்த மெகஸ்தனிஸ் எழுதி வைத்துள்ள குறிப்பும் 2300 ஆண்டுகளுக்கு முந்தைய இக்கடல்கோளை உறுதிப்படுத்துகிறது (Dutts Civilisation in India, Part-I, Page 219)

கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் தேன்றி வளர்ந்த தொன்மையான மூத்த இனம் தமிழினமே என்னும் உண்மையை மேற்காணும் சான்றுகள் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அம்மூத்த இனம் வழங்கிய முதன்மை மொழியே, நமது முத்தமிழ் மொழி என்னும் பெருமை நமக்கு என்றும் உண்டு. ☆

இருபத்தோராம் நூற்றாண்டு நோக்கிய தமிழ்

உலகத்தமிழன் வெ.செ.குணரத்தினம் (செர்மனி)

எந்த ஒரு மனிதனும், தனது சொந்த மொழியை அதாவது தனது தாய்மொழியைப் பேணத்தவறின் அவன் தனது வாழ்வியல் உரிமைகள் யாவற்றிலும் முதன்மையாகிய உன்னத மொழி உரிமையை இழந்து விடுகிறான். எனவே தான், தமிழர் என்று தம்மை அடையாளம் காட்டுகின்ற மக்கள் கூட்டத் தினரும், பூமிப்பந்தின் எந்தப் பகுதியில் எத்தகைய நிலையில் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் தமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் நிறைவு பெற்று வாழ்வதன் இனமாக சிறந்ததோர் சமுதாயமக்களாக புதுமைசேர் இருபத்தோராம் நூற்றாண்டில் அடையாளம் காட்ட முடியும் காட்ட வேண்டும் என்பதை இங்கு சுட்டுவது பொருத்தமாகும்.

தாய்த்தமிழ்

உயிர்கள் அனைத்துக்கும் ஒப்பாரும் மிக்காரும் அற்றவள் அன்னை என்பவள். அதேபோல, மனிதர்கள் அனைவருக்கும் அவரவர், தாய்மொழியே உயிர் போன்றது. பெற்றவள் மூலம் அன்பைப் பெறுவதைப் போல ஒருவன் அறிவைப் பெறுவது முதற்கண் மனிதனின் உள்ளத்தில் பணி இல்லையேல் அது பேரிழப்பாக அமையும். எனவேதான், தமிழர்களாகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும், தாய் மொழியாகிய தமிழ் மொழி முனைப் போடு ஊட்டுவது தமிழர்களின் தலையாய கடமைகளுள் முதற்கடமை என்பது உணரல் வேண்டும்; உணர்த்தல் வேண்டும். அறிவியல் வாழ்வியல் துறைகளிலும், அதி உன்னத நிலை அடைந்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் மற்றும் சப்பான், கொரியா, சிங்கப்பூர் போன்ற வளர்முக நாடுகளிலும் தாய்மொழிக்கு எத்துணை முக்கியம் தரப்பட் டிருக்கின்ற தென்பதைக் காணலாம்.

இதய தாகம் வேண்டும்!

தாய்நாடுகளிலும் பிற நாடுகளிலும் பரந்து பிரிந்து, வாழும் தமிழர்களில் பெரும் பாலானோர், தமது தாய்மொழியை ஒதுக்கி விட்டு-, பிறமொழிகளில் அதிக கவனம் செலுத்துபவர்களாகவே காணப்படுகிறார்கள். என்பது, மிக மிக வருத்தம் தரும் ஒன்று. ஒருவர், தனது சொந்த நாட்டை விட்டு, பிற நாடொன்றில் வாழும் நிலையில், அந்த நாட்டின் மொழியை முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டியது தவறெனக் கூறமுடியாது. ஆயினும், வாழும் நாட்டின் மொழியை மட்டுமின்றி, ஏனைய பிறமொழிகளைக் கூட கற்க எடுக்கப்படுகின்ற முயற்சிகளில் சிறிதள வாயினும் தாய்மொழியாகிய தமிழ்மொழியைக் கற்பதிலோ, அல்லது பயன்படுவத்திலோ, கவனம் செலுத்துவதில்லை என்பது காண முடிகிறது. இதற்கு ஓர் உதாரணம், ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழர்களே, தமது பிள்ளைகள், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அதிக வாய்ப்பை வழங்காது விடுவதைக்காணலாம், பதிலுக்கு, ஜெர்மானிய நாட்டிலோ, அல்லது பிரான்சு நாட்டிலோ, வாழும் தமிழ்ப்பிள்ளைக்கு முறையே ஜெர்மன், பிரஞ்சு மொழிகளுக்கு, வசதி இருப்பதைப் போன்று, தமிழ் மொழிக்கு இரண்டாம் இடம் தானும் தராது ஆங்கிலம், இலத்தீன், பிரஞ்சு, ஜெர்மனி, ஆகிய மொழி களையே இரண்டாவது மொழிகளாக, தெரிவு செய்து தரப்படுகின்றது.

எனவேதான் மீண்டும் இங்கு வலியுறுத்து வது யாதெனில், மேலதிக மொழிகளைக் கற்க முயற்சிப்பதைப் போல அல்லது அதற்கு மேலாக, தாய்மொழியைக் கற்பதற்கு ஏதும் தடைஇருப்பதாகத் தெரியவில்லை. மனம் உண்டானால் இடமுண்டு என்பதைப் போல எந்த ஒரு எதிர்கால சந்ததியினரும், தாய்

பொதுநலம்

கப்பல்கவிஞர் கி.கிருட்டின மூர்த்தி

வெளிச்சமது பரப்புகின்ற
வெண்நிலவும் சூரியனும்
விலையேதும் வைப்பதில்லை!
நகர்ந்து வரும் நதியெல்லாம்
தாகம் தீர்க்கத் தன்வாயால்
தடையேதும் விதிப்பதில்லை
கொத்தாகக் காய்க்கின்ற கனிமரங்கள்
அதைத் தன் சொத்தென்று
உரைப்பதில்லை!

நமைதாங்கும் மண்ணிங்கே
சுமைக் கூலி கேட்பதில்லை
இழுத்துவிடும் மூச்செல்லாம்
என தென்று!
காற்று, வரி வாங்க வருவதில்லை
சுயநல வாழ்வில்லை
சுகமில்லை! என்றும்
பொதுநல வாழ்வில் புன்னகை பூக்கும்
ஆசையை அடைகாக்கும்
மனிதர்கள் இதை
அவசரமாய் அறிதல் வேண்டும்!

மொழிக்கல்வி பெறவைப்பதற்கு, இன்று பெற்றோர்கள் கற்றோர்கள் மத்தியில் இந்ய தாகம் பொங்கி எழவேண்டும். குறிப்பாக, மொழியை முறையாகப் பயிலும் திறமையும், வேகமும், பிள்ளைப் பருவத்திலே உகந்தது என்பதும், பேச்சு உறுப்புக்கள் கேட்கும் உறுப்புகள், சிறுவயதில் முறையாகப் பயிற்சி பெற்றுக் கொள்ளமுடிகிறது என்பதும் மொழியறிஞர்கள் கருத்து.

மொழியுணர்வும் அறிவும், வளர, தாய் மொழியை'' இளம் பருவத்தில் ஊட்டிவிடுதலே சிறந்த கஎ்பனைத்திறன், சிந்தனை வளர்ச்சி எண்ண வெளிப்பாடு இவை ஒரு மனிதனுக்கு தாய் மொழி மூலமாகவே வெளிப்படக்க கூடியது. இதனை வலியுறுத்தும் மானிட அறிவியல் மூலம் என்ற கட்டுரையின் வாயிலாக பதினெட்டாம் நூற்றாண்டின் பிரஞ்சு மொழி ஙிறிஞர், எதிள்ளே போனேட் என்பவரும், சோகான் கோர்ட்பிரிட் கேர்டர் என்பவரும் வலியுறுத்திச் சென்றார்கள்.

அரசியல், அறிவியல், இலக்கியம், எல்லாத் துறைகளிலும் இன்று வளர்ச்சி கண்டுள்ள பொற்காலம் இதுவாகும். இன்னும், பெரும் அறிஞர்கள், பேராசிரியர்கள், தலைவர்கள் எனப்படுவோர், தமிழ் மொழி பற்றி இரட்டை வேடம் போடுவதை மறைக்கவோ, மறக்கவோ முடியாது. இன்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னரே, அமெரிக்கராகிய டாக்டர் கிரீன் என்பவர், வைத்திய நூல்கள் பலவற்றைத் தமிழாக்கம் செய்து, யாழ்ப்பாணத்தில் தமிழ் டாக்டர்கள் தோன்ற வழிகாட்டினார். இப்பெரியாரின் பெருந்தொண்டு சிறந்ததோர் தமிழ்த்தொண்டு மாகும். என்பதைச் செப்பிட வும் வேண்டுமோ? முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தமிழ்த் தெய்வமாகிய முருகன் ஆலயங்களிலும், வழக்கழிந்து விளங்காத வடமொழியில் கோவில்பூசனை செய்வது அறிவுடைமையாகா தன்றோ! தமிழன், பிள்ளைப் பருவம் முதல் பல்கலைக்கழகம் வரை, கல்விகற்றுத்தரும் மொழி அன்னைத் தமிழ் மொழியாக, தமிழன்வாழும் தாயகங்களில் யாம் மாற வேண்டாமோ? ஏ! தமிழா, ஏன் கண்மூடித் தூக்கமா இன்னும்? நீ! கண்விழித்து மேற்கே பார்! - பாரெல்லாம் திரும்பிப்பார்!! நாளைய பொழுது மலரும்பொழுது நூற்றாண்டு என்பதை மறந்து விட்டாயா! தரணியெலாம் பரந்து வாழும் தமிழா உணர்வுகொள்; உரிமை கொள்; உறக்கம் கொள்; மறத்தமிழனே! அன்னைத் தமிழோடு இருப்பதோறாம் நூற்றாண்டில் வெற்றி நடை போடவேகம் கொள் - தாகம் கொள்; மறவாது வெற்றிகாண்.

☆

தெற்காசிய பண்பாட்டிற்குத் தமிழர்களின் பங்களிப்பு...

இரா.ந.வீரப்பனார், மலேசியா

பண்பாட்டுணர்வு வலுவான செயல்களால் நீடிக்கவேண்டும். இதற்கு யார் பொறுப்பு? எந்தத் தமிழர்களின் பங்களிப்பு இதில் மிகுதி? இந்தியத் தமிழர்களின் பங்குதான் அதிகம் என நான் எண்ணுகிறேன்.

சில வரலாற்றுப் பின்னணிகள் என்ன என்றும் அவற்றின் சாதனை வேதனைத் தாக்கங்கள் இன்றுவரை பலத்தையும் நலத்தையும் வ்ழங்கியுள்ளனவா என ஆயவேண்டும்.

பழந்தமிழரின் தென்னாசியத் தொடர்புறவு தமிழியமாக இருக்கவில்லை. தென்கிழக்கில், எப்படி, எப்போது அதன் தொடக்கம், உலகவழிகாட்டியாகத் தொடங்கியதோ அதன் தொடர்ச்சிக் கயிறுகள் அறுபட்டன. இதற்கு வறுமைமட்டுமே காரணமல்ல.

தென்குமரியின் அழிவுக்குப் பின் பிளவுபட்டுவிட்ட தீவுகள் கிழக்கிந்தியத் தீவுகள் ஆயின. தொல்காப்பிய காலத்துக்கு முன்பே இந்தப் பரவல் இரைதேடும் பறவைகளாக அல்ல வணிகத் துணிவுகளால் கடல் கடந்து கிழக்கிந்தியத் தீவுகளில் பரவி, சிலகாலம் வாழ்ந்து, சிறந்த பணியாற்றியதற்கு முன்னே தமிழ் வேர்கள், இங்கு வேரூன்றிவிட்டன. குமரியில் தொடங்கி, ஈழம் வழியாக, சேதுவிலும், பின்னர் சிந்துவிலும் தமிழிய நாகரிகத்தை அறிவியல் பூர்வமாகவே கை யாண்டு வாழ்த்தினார். நாகர்களான, பழங்குடிமக்களிடம் இத்தீவுக் கூட்டங்களிலும், கிழக்காசியப் பெருநிலப்பகுதியிலும் தமிழர் மரபு வீறுடன் பரவிய சான்றுகள் ஏராளம் ஏராளம்.

திருவள்ளுவர் காலத் தமிழகத்தில் தமிழக மாண்புக்கும் கொடுந்தாக்கம் அங்கு விளைந்தது. அரசுகள், குடியேறிகளிடம் அடிமையாகிவிட்டதால், நாவலந்தீவான இந்தியா பல கோளாறுகளில் தத்தளித்தது. விழிப்பூட்டிய சிந்தனைகள் மக்களிடம் பரவவில்லை, பரப்படவில்லை; தடைகள் பல.

சிலப்பதிகாரத்திலோ, சங்க இலக்கியக் காலங்களிலோ, தமிழகக் கடலோடிகளின் வணிகமும் தொழிலும் கிழக்கிலும் மேற்கிலும் சிறப்பாகக் கொடிக்கட்டிப் பறந்தாலும் தமிழராட்சியின் செழிப்போ, தொடர்ச்சியோ, கூட்டுறவோ இல்லை. மன்னனும் வணிகனும், மாந்தனும் துண்டுபட்டுக் கிடந்தக் காலக்கட்டங்கள் அவை.

தமிழக இருண்டகாலக் கட்டத்திலும், மருண்டுவாழ்ந்த காலத்திலும், வறுமையுடன் சிறுமைகள் அவர்களை ஆட்டிப் படைத்தன.

ஏழாம் நூற்றாண்டுப் பல்லவர் படையெடுப்பில் கொச்சின்சீனா என்ற இந்தோ - சைனாவிலும், கம்பொடியா, பிலிப்பைன், இந்தோனேசியப் பகுதிகளிலும் ஆரிய மதச் சமயக் கலாசாரத்தைப் பரப்பினர். கம்பொடியா கிமர் கலாசா ரமும், ஆங்கூர்கோயில் கோட்டங்களும் தமிழைப் பயிரிட்டு வளர்க்கவில்லை; 10ம் நூற்றாண்டு சோழராட்சியிலும் இந்தப் பரவல்மிகு அழுத்தமான அரசாட்சியுடன், 64 கலைகளில் பல அரும்பெரும் பண்பாட்டு மரபுகளும் தெற்காசியாவில் பரவி வேரூன்றின. ஆனால், அவை சமணமும் சைவமும், பின்னர் புத்தமுமாக நாகரிகத்தைப், பழந்தொன்மையைப் பதித்துவிட்டன. எல்லாவித நுண்கலைகளும் படையெடுப்புடன் வந்து இங்குள்ள பல்வேறு பழங்குடி இனங்களைப் பண்படுத்தின.

சங்க இலக்கியச் சான்றுகளின் படி, பெண்கள் வராததால், வரலாறு ஆண்களின் குடிபெயர்வும், கூடிவாழ்வும் இங்கு நிலைபெறவில்லை; கலப்பினக் கருவாக்கத்தால், உருவாக்கம் இன அடையாளம் சிதைந்தது. இருப்பினும் மாபெரும் இந்து மாக்கடலும், இந்தோனேசியாவும், இந்து சீனாவும், கம்பூச்சியாவும் தமிழிய மரபுகளுடன் இன்னமும்

விளங்குகின்றன என்றால் பழந்தமிழரின் பண்பாட்டுச் சிறப்புகள் வேரூன்றிய, கூட்டுறவாண்மையே அடிப்படையில் ஆழ்ந்து சூழ்ந்து பரவியது.

அறுநூறு ஆண்டுக்கு முன் சோழப் பேரரசுக்கு அடங்கிக் கிடந்த சீனா, கி.பி.1400க்குப் பிறகு தென்கிழக்காசியாவை ஆதிக்கஞ் செய்யத் தொடங்கியது. அதற்கு முன்பும், பின்பும் இந்திய சீன நட்புறவு நீரும் நெய்யுமாகவே ஒட்டாத உறவு. இது வட தென் இந்திய உறவு போன்றது. ஆனால் பகையற்ற நாடுகளே இந்தியாவின் நட்புறவுக்கு இந்தோனேசியா நீடித்த உறவு. மலாக்கா மலாய் மன்னராட்சியின், தமிழர்களான வணிகர்களே, எல்லா விதத் தமிழ்நாட்டுத் தொழில்களை இங்கும் வளர்த்தனர். கட்டடக் கலை, வீடமைப்பு, செங்கற் சூளை, மற்றும் பல்வேறு கலைகள் வேரூன்றிச் சிந்தன. அப்போது சீனரின் தாக்கம் அறவே இல்லை. சான்றுகள் பல உள்ளன.

18ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் நாடு பிடிப்பிலும் இது தொடர்ந்தது. குடும்பம் குடும்பமாகத் தமிழர் கொல்லபட்டபின், சங்கக் காலக் கொள்கை உடைத்தெறியப்பட்டது. இந்த இருநூறு ஆண்டுக்குள்ளாகத்தான் தமிழினம் இங்குத் தழைக்கத் தலைப்பட்டது இன்று ஆசியாவின் நாடுகளில்.

இது பத்து நட்புறவு நாடுகளின் கூட்டமைப்பு; தலையிடக் கொள்கையை இவை ஒவ்வொன்றும் கையாள்கின்றன. மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்சு, புருநை, பர்மா, லாவோசு, கம்பொடியா, வியட்நாம் தமிழர் எறத்தாழ 25லட்சமாகலாம். (இது ஐரோப்பிய ஒன்றியம் போல உள்ளவை பத்து நாடுகளாகும்) இதில் சேராத நாடாக உள்ளது பாங்காக்.

இப்பத்து நாடுகளிலும் சீனர்களின் தொகை ஐந்துகோடி ஆகும். இவர்களிடமே வாணிகம், தொழில், ஏற்றுமதி இறக்குமதி, பெரிய நகரங்கள் மற்றும், பொருளாதாரமும் இவர்களிடமே உள்ளன. மற்றநாடுகளில், ஒவ்வொன்றிலும் பல்வேறு தேசியயினக் குறுநில மக்கள் அடங்குவர். மூவாயிரம் தீவுகளாலான இந்தோனேசிய மக்களின் தாய் மொழியான சாவாணியரே பெருந் தொகை. மலாய் பொது மொழி. இந்த வேறுபட்ட, முரண்பாடான சூழல்களில், நூறாண்டாக வாழும் தமிழர்களின் பொருளியல், அரசியல், சமுகவியலில் பலமில்லை; ஒரே ஒரு விழுக்காடு கூட பொருளாதார சமுதாயமாக, ஒன்றுபட்ட நிலையில் இல்லை. கோயில் கலாசார சமயங்களால் பிளவுண்ட இனம் தமிழினம்.

இந்திய சமுதாயமாகவும் தமிழர்களை மலேசிய அரசியல், பொருளியல், கட்சியியலில் ஒருங்கிணைக்க முடியவில்லை.

எனவே, இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் பெரிய மாறுதல் ஏற்பட்டாக வேண்டும். இது முதன் முதலாக வேண்டிய பெரிய திட்டம். இதற்குத் தமிழக அரசும். பொருளாதார, தொழில் வணிகர்களும் இணைந்து செய்ய வேண்டியதைத் தான் எங்கள் அமைச்சர் சாமிவேலர் வலியுறுத்திவருகிறார். தமிழகப் பாதை மாற வேண்டும் அயலகத் தமிழர் உறவுக்கு இந்திய அரசியலுக்கு அப்பாற்பட்ட அணுகுமுறை உடனடி தேவை. இந்த அணுக்க உறவுகளில் எந்த நாட்டரசும் குறுக்கே நிற்க்வில்லை.

இன்று அலையலையாக, தமிழகத் தமிழர் பரவும், புலம்பெயர்விலும் மாற்றம் வேண்டும். ஐந்துலட்சம்பேர், குடிபெயர்தலே பெரியபலம். இந்தியப் பலஇனங்களில், இங்கு தமிழரே மிகுதியாதலால், இது தமிழக அரசுக்கும் மக்களுக்கும் பெரியபலம் பாலமாக உள்ளது.

தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு, மண்ணுரிமை இல்லாமலுள்ளது. சில நாடுகளில் குடியேறி வாழ முடியும். இந்திய அரசியலில் தமிழர் பலம் உயர்ந்து இதன் உத்தியும் அரசியல் நுட்பமும் சீரடைந்தால் வாழ்வு நிலைத்து நீளும். தமிழுறவும் தமிழர் உறவும் இணையவேண்டும்.

எதிர்காலம்

-அமலதாசன்-
(தலைவர் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்)

வானத்தில் பறக்கும் கப்பல்
மடியிலே அமர்ந்து கொண்டு
கானத்துக் குயில்போல் சுற்றிக்
கற்பனை வளர்த்துக் கொள்வேன்;
மானத்தில் மான்போல் வாழும்
வாழ்க்கையை மனிதர்க் கெல்லாம்
ஞானத்துத் தமிழால் சொல்லி
நன்மையை விதைத்துச் செல்வேன்!

உலகத்து மக்கள் கோடி,
உலகத்து மொழிகள் தேடி,
உலகத்து மனங்கள் கோடி
உணர்வுள்ள கொள்கை கோடி,
நலத்துக்குத் துணையாய் நிற்கும்
நானிவை அனைத்தும் நாடி
உளத்துக்கு அமைதி சொல்வேன்
உயர்வான கவிதை பாடி!

பெற்றவர் விருப்பம் போலப்
பிள்ளைகள் வளரும் காலம்,
கற்றவர் கருத்துப் போலக்
கலைபல வளரும் கால்ம்,
குற்றமில் லாத மக்கள்
கொள்கையால் சேரும் காலம்
பற்றுளார் சமுதா யத்தில்
பணிசெயும் எதிர்கா லந்தான்!

அத்தகு சிறந்த காலம்
அடிப்படை அன்புக் காலம்
புத்தகக் கலைகள் எங்கும்
புதுமைகள் பொழியும் காலம்
சத்தியம் நிலைக்கு மாறு
தருமங்கள் வளருங் காலம்
இத்தரை காணு மாயின்
இன்பங்கள் வளரும் தானே!

ஏனென்று எவரும் கேட்க
எண்ணங்கள் வளர்க்கும் ஞானம்,
கானென்று திறமை காட்டும்
கற்றவர் காட்டும் வானம்,
நானென்று நிமிரும் தென்னை
நலமென்று வளையும் நாணல்
தேனென்று தத்து வங்கள்
சிந்திட மலரும் காலம்!

பொய்யோடு உண்மை கொஞ்சம்
பொருத்தி, அவற்றை யெல்லாம்
மெய்யோடு, மெய்யாய் வைத்து
விளக்கங்கள் செய்வார் தங்கள்
கையோடு பொருளை அள்ளிக்
கனவுக்குள் வாழ்வார்; தீமை
செய்யாத நல்ல வர்க்குச்
சிறந்தது எதிர்கா லந்தான்!

வட்டித்தொழிலுக்காகவே, பணத்துடன் நகரத்தார் கீழைநாடுகளில் வந்து, நூற்றாண்டில் இழந்த இழப்புகள் கோடானு கோடிச் சொத்துகள் மீட்கப்படவில்லை. கோயில்களை கட்டி விட்டுச் சென்றனர். எல்லாம் முடக்கப் பட்டு விட்டன. இதுதான் பண்பாட்டுச் சின்னங்களா? தமிழர் பங்களிப்பு இதுதானா என்ற வினாவுக்கு விடையில்லை. காலியாட் களாக வந்தது போனது, பரவும் சமுகப் பண் பாட்டைவெல்வதற்கல்ல.

கால் நூற்றாண்டாகவே, சென்னையில் ஒரு பண்பாட்டு நிலையம் அமையாததும், கலாசாரத் திணிப்புபெரிய வணிகக் கொள்ளை யாக இருப்பதும், வயிரவணிகம் சமுதாயத்தைப் பாதுகாக்காததும் தொடரும் கேடுகள். வேற் றுமைக்குள் ஒற்றுமை என்ற புதிய சித்தாந்தம் கருப்பொருளாகச் செயல்பட, இரு பக்க ஈடுபாடு முதலீட்டுக் கொள்கையாக, ஆக்கப்பட வேண்டும்.

இந்திய-தமிழக கூட்டுப்பணிகளில் இந்தக் குடிபெயர்வும் தொடங்கப் படுமானால், இந்திய வல்லரசு என்ற நீதியை ஆசியா புரிந்துக் கொண்டு ஒத்துழைக்கும். தமிழக டில்லி கூட்டுறவுமட்டுமே, இழந்த வாணிக இழப் பைப் போக்கிக் கொள்ளலாம். இந்தியா ஒரு சமநிலைக் கூட்டரசாகாத வரை இருவழி அடைபட்டேக்கிடக்கும். சாதி மத இன வெறுப்பே தொடர்ந்து வாழும். ☆

தமிழில் ஹைகு முயற்சிகள்

- முனைவர் இராம குருநாதன் தமிழ்ப் பேராசிரியர். பச்சையப்பன் கல்லூரி

தமிழில் இதுவரை சுமார் அறுபது ஹைகு தொகுதிகள் வெளிவந்துள்ளன. தமிழ் ஹைகு பற்றிய ஆராய்ச்சி நூல்கள் சுமார் எட்டு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. ஆராய்ச்சிப் பட்டங் களுக்காகவும் ஹைகு பற்றிய சிந்தனை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. கவிதையின் நிகழ் காலப் போக்கு ஒரு குறிஞ்சிப்பூக் காலமாகத் தான் ஹைகுவின் பக்கம் திரும்பியிருக்கிறது.

தமிழில் முதல் முயற்சியாக, பாரதிதான் ஹைகு கவிதைகளை மொழி பெயர்த்த தோடு,ஹைகு பற்றிய அவரது கருத்தையும் தெரிவித்துள்ளார். கவிதையில் கருங்கச் சொல்லு தல் நமக்கும் உண்டு எனத் திருக்குறளைச் சிறப்பாகச் சுட்டும் அவர், ஹைகு போன்று கவிதை ஒரேயடியாகச் சுருங்கிப் போய்விடக் கூடாது என்பதிலும் கவனமாய் இருந்துள்ளார். பாரதி கூறிச் சென்ற கூற்றில் ஒரு கருத்தை இங்குக் கருதுவது சிந்திக்கத்தக்கது. ஹைகு போன்ற நுட்பச் செறிவு கொண்ட பழந்தமிழ்ப் பாடல்கள் நிலவி வந்திருப்பதை எண்ணிப் பார்த்திருக்கிறார்.

தமிழுக்குப் பாரதியாரால் அறிமுகமான ஹைகு, மிக நீண்ட காலமாகத் தேக்கத்தி லிருந்து, தொண்ணூறுகளில் பரவலாயிற்று எனலாம். தொடக்கக் கால முயற்சிகளாக மொழிபெயர்ப்பு ஹைகு கவிதைகள் வெளி வந்தன. பிற நாட்டு இலக்கியங்களில் ஆர்வங் கொண்டோர், ஹைகுவைத் தமிழ் மண்ணுக்குக் கைப்பிடித்து அழைத்துவந்தனர்.

தொன்னூறுகளின் தொடக்கங்களில் ஹைகு குறித்த விரிவான பார்வை நூல்வடி வங்களில் பதிவு செய்யப்பட்டன. அப்துல் ரகுமான், சிற்பி, தமிழன்பன், அறிவுமதி, அமுதபாரதி, முதலியோர் இந்தத் துறையில் ஆர்வங் காட்டி ஹைகு கவிதைக்கு வரவேற்பு நல்கினர். இதுதான் ஹைகு என்ற நூல்வழிப் பேராசிரியர் தி.லீலாவதி, ஹைகுவைப் புரிய வைத்தார். சென்மதக் கருத்துகள் ஹைகு வழியே சொல்லப்பட்டதைத் ப.சுப்பிரமணியம் லீலா வதிக்கு முன்பாகவே நூல்வடிவில் அறிமுகப் படுத்தியுள்ளார். அதன் பின் ஹைகு புற்றீசல் போலப் புறப்பட்டது, தொன்னூறுகளின். பிற்பட்ட காலங்களில்தான்.

ஹைகு தனித்தனியான கவிஞர்கள் வழியே நூல்களாக வெளிப்பட்டதோடு, பலர் சேர்ந்து ஹைகுவைத் தொகை நூலாகவும் வெளிபடுத்தியுள்ளனர். இவ்வகையில் தொகை களாக வந்து பலரின் கவனத்தை ஈர்த்த நூல்களாக இன்றும் மக்கள் (1991) எண்ணம் நிறைய ஹைகு (95) வேரில் பூத்த ஹைக்கூ (97) ஆகியவை யாகும்! கணையாழி, ஹைகு சிறப்பிதழ் (92) என்றே இருமாதங்கள் வெளியிட்டு முன்னோடி யான பெருமையைப் பெற்றது. குமுதம், சிலரின் ஹைகு கவதைகளைச் சில இதழ்களில் வெளியிட்டது. 1991 இல் சுஜாதா, ‘ஹைகு ஒரு புதிய அறிமுகம்’. என்ற நால்வழிப் பல ஹைகு செய்திகளை அவருக்கே உரிய பாணியில் எழுதியுள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும். அவர் எழுதிய ‘நடன மலர்’ என்ற கட்டுரைத் தொகுதியின் சில கட்டுரைகள் ஹைகு பற்றியதாகும்.

அண்மைக் காலத்தில் ஹைகு கவிதை களைத் தொகுத்து நூலாக வெளியிடுவதில் புதுக்கோட்டையைச் சேர்ந்த மு. முருகேஷ், சென்னையைச் சேர்ந்த பா. உதய கண்ணன் ஆகியோர் மிகுந்த ஆர்வங்காட்டி வருகின்றனர். இரு தொகுப்புகளும் வெளியிடப் பெற்றுள்ளன. இவர்களின் முயற்சி பாராட்டுக் குரியதாகும்.

அமுதபாரதியின் புள்ளிப்பூக்கள், காற்றின் கைகள் ஆகியவை எண்பதுகளின் இடையில் வெளிவந்தன. ஜப்பானிய ஹைகுவின் அசை எண்ணிக்கையை (5.7.5.) அப்படியே பின்பற்றி

ஒரு மகாகவியின் மனக்குரல்!

-கவிமணி மதிவண்ணன்-

என் கவிதைச் சிவிகைக் காற்று!
என் கற்பனையின் கொடை ஊற்று!
என் வார்த்தை காலப் பேரிகை!
நான் வரலாற்றின் கைத் தூரிகை!
என் நண்பர்கள் வானப் பறவைகள்!
என் நினைவுகள் கற்பனைப் புரவிகள்!
என் கண்கள் சூரியன், வெண்ணிலவு!
நான் கட்டடத் தின்முதற் செங்கல்!
என் மாளிகை தீபம் வாய்மை!
என் மனையோ உள்ளத் தூய்மை!

என் தீராக் குரல்தான் பாட்டு!
நான் தீமைக் கிடங்கின் பூட்டு!
என் இல்ல விதானம் வானம்!
என் ஏடுகள் உறும் ஞானம்!
என் உள்ளம் உலகினும் பெருவெளி!
நான் ஊழிக் காலத் துயிரொளி!

எழுதும் முறையை இவரது பெரும்பாலான ஹைகு கவிதைகளில் காணலாம். அந்தாதி. முறையில் இவர் எழுதியுள்ளதும் ஒரு புதுமை.

ஹைகு தொடர்பாக இதழ்களின் பணியும் இங்கே குறிக்கத்தக்கது 'கரந்தடி' என்ற இதழ் தொடர்ந்து ஹைகு கவிதைகளை வெளியிட்டு வந்துள்ளது.

பல்கலைக் கழக ஆராய்ச்சிகள் சில மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இவ்வகையில் கோவை மணி, புனிதவதி, உதய சூரியன், மங்கையர்க்கரசி, பரிமளம், அருணாசலம், பட்டாபி சீதாராமன் முதலியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவர். திருமதி நிர்மலா சுரேஷ் ஹைகு எழுதும் முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டிருப்பதோடு, ஹைகு குறித்த முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு அப்பட்டத்தைப் பெற்ற முன்னணி ஆய்வாளராக அத்துறையில் தமிகழ்ந்து வருபவர் ஆவார்.

ஹைகுவிற்கெனத் தனிக் கருத்தரங்கினைத் தொடங்கிப் பெருமைபெற்றது, மதுரை காமராசர் பல்கலைக் கழகம். முனைவர் மேஜர் கதிர் மகாதேவன். ஹைகுவிற்கெனத் தனிக் கருத்தரங்கினை 1994 இல் நடத்தினார். 1996 இல் கோவையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஹைகுவிற்கு எனத் தனிக் கவியரங்கம் நடத்தியது. 1996 இல் சென்னை நங்கை நல்லூர் 'இலக்கிய வட்டம்' ஹைகு பற்றிய கருத்தரங்கினையும் கவியரங்கையும் நிகழ்த்தியது. காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் ஹைகு சிந்தனை அரங்கம் என்ற கலந்துரையாடலை அதில் ஆர்வமுடையோரை அழைப்பித்து நடத்தியது.

சென்னையில் உள்ள ஆசியவியல் நிறுவனம் 29,30,31 மார்ச் 1999 இல் நடத்திய ஹைகு பற்றிய மூன்று நாள் கருத்தரங்கம் குறிப்பிடத் தக்கது. சப்பானிய அறிஞர்கள். இந்திய அறிஞர்கள் ஹைகு பற்றிய பல்வேறு கட்டுரை கள் படித்ததோடு, சப்பானிய அறிஞர்களைக் கொண்டு ஹைகு எழுதப் பயிற்சி அளித்தமை யும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

இன்றைய தமிழ்க் கவிதை வளர்ச்சியின் கால கட்டத்தை, ஹைகு காலம் என்று ஓர் அன்பர் சுட்டியுள்ளமை அவரது ஆர்வத்தையும் ஈடு பாட்டையும் காட்டவல்லது! ஹைகு காலம் என்று ஒரேயடியாக வரையறுத்துக் கூறுதற்கு வலிமையான ஹைகு பற்றிய பரவலான வாசிப்பும் தமிழில் இன்னும் விரிவடையவில்லை. இதை அறிந்து கொள்ளுதற்கு உரிய புரிதல் ஓரளவுதான் வளர்ந்துள்ளது. எனினும் பிற இந்திய மொழிகளில் ஹைகு வளர்ச்சி பெற்று இருப்பதை விட, தமிழில் அக்கவிதை வடிவம் பலரைப் பாதித்துள்ளது என்பதால், ஹைகு குறித்து நூல்கள் பல்கியுள்ளன, தரமான உள்ளடக்கமும், காட்சிப்படுத்தலுமே ஹைகுவிற் உயர்நாடிகள் பல்கப் பெருகி வரும் ஹைகு கவிதை நூல்களின் எத்தனைத் தேறும் எப்படித் தேயும் என்பதை அந்நூல்களிலும் நிலைபேறு மட்டுமே உணர்த்தும். ☆

Thirukkural, The Guide for Mankind

Prof. Thirukkural G. Baskaran

Tamil is an ancient and clasical Dravidan language, capable of expressing intricate ideas in a simple and lucid manner. The greatest didactic literature, the ethical treatise and efficient guide in Thirukkural, the supreme classic and epic of sangam age. Thirukkural has been acclaimed as the crown and glory of Tamil literature.

Thirukkural presents a way of life and propose a code of conduct for welfare of society. The Philosophy of Thirukkural is unversal. The policies advocated are based on ethics, logic and rationality rather than traditional taboos. Tamilmarai appeals to the rationality of man and woman to lead a virtuous and noble path of life, not just to live for material and meaningless gains, but to exist peacefully, pleasantly and purposefully and worthy citizens of the world.

Thirukkural is characterised by its purity of language, the lofty tone of morality, secullarism and essential variety of topics. This immortal classic prescibed solution for the salvationof any individual and expects the harmonious development of humanlity in general.

Thirukkural demands the harmonious relationship between man and man, proclaims the responsiblilities of a man to the community and ultimately strikes a balance between the deeds of the individual and the needs of the society so that neither is affected adversely.

The Immense greatness of thirukkural is primarily revealed in the absolute absence of parochialism and racial chauvinism. Through Thirukkural happends to be the literatry product of Tamilnadu, no direct or indirect reference to Tamil land, language and literature is noticeable in any verse of Thirukkural. Individual names and palces find no mention in this moral treatise. The aforsaid salient features and indeed praise worthy.

According to Dr. G.U. Pope, the religion of Thirukkural is an amazing puzzle. Even the first chapter ""In praise of God" does not provide any clue to determine the religious outlook, of the author Thirukkural describes the basic qualities of Almighty and indirectly expects every man to shape his life according to divine qualities. The undiqueness symbolises and signifies that the maginificent message of Thirukkural that is meant for entire mankind. The lofty and laudable ideals implies in this immortal work not only transcends the artifical barries of caste, colour, community, creed, race, region and religion; but also transgresses space and time. Hence needless to say that Thirukkural is widely and wisely recognised, as ""Ulaga Pothumarai" *(உலகப் பொதுமறை)* common gospel or universal scripture of humanity. The fact that Thirukkural has been acclaimed universally indicates its catholicity in as much as the epic embraces the whole world in a sigle fold.

Science has proued that a ting atom of microscopic size beyound imagination and conception, on fission, is capable of realising tremendous energy that can destroy the whole world. But every Thirukkural couplet carries in itself indisputable universal truths that can save mankind from the threats that arise from within man's mind. If thirukkural is propagated and practised positively, social revolution is bound to occur by reforming the attitude of every member of society.

Bhagavad Geeta was preached by Lord Krishna and listened by man. thiruvasagam was sung by man and heard by God. but thirukkural was presented by man to mankind for its welfare.

Thirukkural begings with the first alphabet 'அ' end with ன்' the last alphabet in tamil language.

Thirukkural is broadly classified into three parts and distributed as detailed below

1. அறம் (Aram) on virtue
2. பொருள் (Porul) on wealth & Polity
3. இன்பம் (Inbam) on idealised love

The sacred Thirukkural of three divisions consist of 1330 coupets in 133 chapters. Each chapter of 10 coupets is headed by a single subject or topic or major theme of human life.The ten couplets under each chapter explain elegantly the various aspects of a particular precpet in width and depth under different conditions and circumstances. Such a comprehensive approach is intended to impress the mind the importance of the subject for its assimilation and application to life. To underscore the uniqueness of the subject, ten couplets for each chapter are used effectively as tools.

The first 380 couplets in 38 chapters deal with virtue related to domestic life and asceticism. The second 700 verses in 70 chapters discuss on welath & policy, socioeconomic values of life, the affairs of state, its administration and citizenship. The last 250 couplets in 25 chapters describe idelaised love, the psychological values of marital life and the intimacy between man and woman. The third division on idealised love is entirely different from the first two parts. Each chapter contains ten dramatic monologues.

This triple treatise on virtue, material prosperity and idelaised love is an invaluable treasure dedicated to the whole world.

Thirukkural evidently embraces all aspects of human life.The moral epic has been recognised. by its comprehensive and universal vision of life. Thirukkural has dominated the literary landscape of Tamil Nadu. However it is very unfortunate and lamentable that the impact of Thirukkural does not pervade in the society.

Though the classical epic is populrly and extensively known by the form in which the verses are composd, its eraliest admires and perhaps even the author himself referered to Thirukkural as Muppal meaning three parts of three themes. Thus the human life is conceived andpreceived in three dimensions. Thirukkural is aptly called Muppal (முப்பால்) inTamil.

The brevity of concept. charity of vision. lucidity of expression and simplicity of comprehension adorn Thirukkural is as a unique Literary work of great antiquiy in Tamil language. If in its content Thirukkural is a treatise, it is a theis par excellance on the art of living which captivates human heart. Thirukkural is the essence, embodiment and the epitome of unversal life. It projects a complete and comprehensive concept communicated in refined and intricate metre. Thirukkural owes its prominece and eminence to it exquistite poetic form and progressive views portrayed in verses of extreme beauty and delicacy. this classical work is unique and significant with an infinite gust for life and idealism of high order, with acceptance of human reality, philosiphic complexity and poetic beauty.

Besides parimelazhakhar commentators, has been recognised as the best commentator on Thirukkural the commentaries of Manakkudavar, Paripperumal, Parathiar and Kaalingar are only now available. The commentary of Manakkudavar belonging to eleventh century is considered as the earliest.

It is difficult and delicate task to transfer the elegance, exquisite poetic beauty and rhythm to another language. Thirukkural has been translated into many major languages of the world. Many missionaries who visited India in the past to preach and propagate their religions, studied tamil, realised the importance of Thirukkural and translated into, their own languages. In the 18the century the famous fr. Beschi of society of Jesus translated the first two parts into Latin language. fr. Beschi commented that Thirukkural is beacon light to the whole world. Dr.G.U. Pope, Rev. W.H.Drew and Rev. John Lazarus translated Thirukkural into English. M. Aerial introduced Thirukkural to the world through French translation. Recently Thirukkural was translated into Korean.

The Word Thirukkural compreises two important parts, Thiru and Kural forming a single title. Each verse of Thirukkural is composed of a Kural venba, the popular poetic form in tamil prosody. Kural comprises two short lines.

இருபத் தொன்றாம் நூற்றாண்டின் எதிரில்

கவிஞர் குறளடியான் .மதுரை

விண்ணில் தெரியும் விண்மீன்கள்
வேருடன் சாயுது விடியலிலே!
பண்ணின் இசைகள் பலப்பலவே!
பாடம் வழங்கும் அற்புதமே!
கண்ணின் மணியாய் விளங்கிடுமே
காலம் மாற்றும் கணினிகளே!
மண்ணின் வளங்கள் பெருகிடவே
மறக்க வியவா அறிவியலே!

இருபத் தொன்றாம் நூற்றாண்டில்
ஈர்க்கும் நேயம் வளர்ந்திடுமே!
கருவில் வளரும் குழந்தையுமே
கல்வி நாளும் கற்றிடுமே!

மருவில் லாத மாற்றங்கள்
மாணி டத்தின் தேற்றங்கள்
திருவும் பலவும் பெற்றிடுவார்
தேனாய் நன்மை செய்திடுவார்!

மதியை வளர்க்கும் கூடங்கள்!
மக்கள் வணங்கும் மாடங்கள்!
விதியை எண்ணி வீழமாட்டார்!
வீணாய் உழைத்தே ஓயமாட்டார்
அதிலும் பகையை தேடமாட்டார்!
அறிவி யலையே தேடிடுவார்!
புதிய பாரதம் படைத்திடுவோம்!
புதுமை தருவோம் உலகுக்கே!

The first live of kural venba is tetrametric and the second line trimetric.Every couplet is pregnant with profound wisdom compressed and condensed in a single and lucid form. The significance of the first and foremost terms, ie. Thiru *(திரு)* is singular. *Thriu in Tamil means excellent, beauty, wealth, etc.* the appellation of Thiru to Kural of which the popular clasic is composed bears an evidence to its uniqueness, reverence and hounour shown to this immortal classic. Eventhough the ancient epic is generally and conventionally called "Kural" radical change in our appraoch is the crying seed of the hour to honour and respect Thirukkural, We prefix Thiru to Kural is essentially preferred to express our esteem. It is earnestly requested and frequently appealed that whenever and whereever thirukkural is to be referred during either a dialogue or discussion or speech or writing, usage of kural withour thiru must be avoidted.

The main aim of Thiruvalluvar is to provide mainkind a wholesome life. He is not confined to any single plan of programmes and policy. the *religion of Thiruvalluvar can be conceived to be the* practice of virtue born out of love, and moulded by intergrity, honesty and wisdom.

In the first two parts of Thirukkural, Thiruvalluvar plays the role of eminent philospher, disciplinarian, political statesman, moralist and social reformer. In the third part of Thirukkural and author assumes the role of a creative artist, portrays the fascinating aspects of lovers. The poetical talents and imaginative skills of the author are excellenly and dramatically exhibited in Thirukkural. The desire of Thiruvalluvar is to encourage the society to achieve its goal of perfection and idealism.

Dr. Albert scheweizer, the eminent German Philosopher admired Thirukkural and declared "there hardly exists in the literature of the whole world, a collection of maxims in which we find so mush lofty wisdom".

Mahatma Gandi, the father of nation, observed "it is a text book of indispensable authority of moral life. The maxims of Thiruvalluvar was touched my soul."

"Bestowing Thiruvalluvar to the whole world, Tamil nadu has achieved the highest honour and gained eternal fame" thus Mahakavi Subramania Bharathi, the National Poet has glorified the greatness of global gospel. ☆

செவிச்செல்வம்

-டாக்டர் மு.குமரேசன், எம்.எஸ்., டி.எல்.சி.



அறிவியல் தமிழ் புதிய வேகத்துடன் வளர்ந்து வருகிறது. மருத்துவ அறிவியலைப்பற்றி ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளோம். தமிழுக்குத்தரம் சேர்க்க அந்த ஆழமான ஆய்வுகளைத் தமிழிலேயே வெளியிட்டால் நமது தமிழ் மொழி வளர்ச்சி மேலோங்க அது வழி செய்யும்.

1950 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலே காது, மூக்கு, தொண்டை பற்றிய எமது மருத்துவ அறிவியல் ஆய்வு தொடங்கிவிட்டது. சுசீந்தரம் எஸ்.எம்.எஸ் உயர்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவனாகச் சேர்ந்த அன்றே ஓட்டப்பந்தயத்திற்காகச் சுசீந்தரம் தானுமாலய சுவாமி கோவிலைச் சுற்றி வர ஆசிரியர். ஆணையிட்டார். அன்றொருநாள் ஆசிரியர் வராததால் ஓட்டப்பந்தயம் ரத்து செய்யப்பட்டது. கோயிலின் உள்ளே சென்று சிற்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு தென்னங்குச்சியை எடுத்து சிற்பத்தின் மூக்குத் துவாரம் வழியாக விட்டால் அது காதின் வழியாக வெளிவந்தது. அதே போல் காதின் வழியாக தென்னங்குச்சியை விட்டால் அது மூக்கு வழியாக வெளிவந்தது. சக மாணவர்களோடு இந்த அற்புதத்தைக் கண்டு ரசிக்கும் போது அவர்கள் எல்லோரும் கல்லிலே இவ்வாறு துளைபோட எவ்வாறு முடிந்தது என்று வியப்படைந்தனரே யொழிய காதுக்கும் மூக்கும் தொடர்பிருக்கிறது என்பதை என்னால் மட்டுமே உணர முடிந்தது. இச்சிலைகளே எனக்கு காது, மூக்கு, தொண்டை, மருத்துவத்தை கற்கத் தூண்டுகோலாக அமைந்தது.

'செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை (குறள் - 41)

காது கேளாமையினால் ஒருவன் செவிடாகிறான். நமது ஊரில் உள்ள மாணவர்களில் 4 சதவீதம் பேர் காதில் சீழ் நோய் உள்ளவர்களாக உள்ளனர். எனப் புள்ளிவிவரம் கூறுகிது. காதில் சீழ் வடிவதால் எந்தத் பாதிப்புமில்லை என அறியாமையினால் ஏழை மக்கள் அதைக் குணப்படுத்தாமல் விட்டு விடுகிறார்கள். ஏன் என்றால் அது ஒரு பயங்கரமானநோய் என்று தெரியாமையால் அதனால் பெரிய கெடுதல் ஒன்றும் வருவதில்லை எனக் கருதுகின்றார்கள்.

பெண்ணின் கருவுக்குள்ளே மனிதன் உருவாகும்போது முதலில்காதுதான் உருவாகிறது. பின்னர்தான் மற்ற உறுப்புகள் உருவாகத் தொடங்குகின்றன. ஒருவன் கண்ணை மூடிக் கொண்டே காதின் நுண்புலத்தினால் யார்யார் தன்னோடு இருக்கிறார்கள் என்ன செய்கிறார்கள் என்பதை எளிதாக அறிந்து கொள்ளலாம். பூமியின் அதிர்வை வைத்தே யார் வருகிறார் போகிறார் என்பதைக் காது, மூளைக்கு எடுத்துச் சொல்கிறது. எதிரொலிப் பார்வை என்பது ஒரு பெரிய நுண்ணறிவு. கண் தெரியாதவர்கூட ஓர் ஊன்று கோலைத் தட்டிக் கொண்டே பாதையில் என்ன என்ன தடங்கல்கள் உள்ளன என்பதை அறிந்து கொள்கிறார். வெளவால்கள் இரவில் தமது சிறகு எழுப்பும் ஓசையின் எதிர் ஓசை ஏற்படுவதை வைத்துச் சிறு துவாரங்களையும் தெரிந்து கொள்கின்றன. இன்றைய மருத்துவத் துறையின் முன்னேற்ற மாகிய Non Invasive Investigations எல்லாம் Echo Audio வினால் தான் நடைபெறுகிறது.

இந்த நல்ல உறுப்பைக் கெடுப்பதற்காகவே இப்போது அதிக இரைச்சல் புறப்பட்டிருக்கின்றன. இந்த மாறுதலான தொழில் மயமாக்கப்பட்ட உலகம் காதைக் கெடுக்கிறன. இதனால் காது மட்டும் கெடவில்லை. ஒருவரின் அறிவும் மழுங்கிவிடுகிறது.

நிலைகள்	ஒளிஅளவை டெசிபல்	
ஜெட்இயந்திர இயக்கம்	-	140
வானூர்தி	-	130
இடி	-	120
கொதிகலன்	-	100
புகைவண்டி	-	80
அதிக நெரிசலான இடம்	-	80
மிதமான நெரிசல்	-	60
சாலையூர்திகள்	-	40
அலுவலகம்	-	30
முணுமுணுத்தல்(அ) நெரிசல் இல்லாத இடம்	-	20
காது கேட்கக் கூடிய மிகக் குறைந்த அளவை	-	10

ஒருவரின் காது கேளாமை 40 டெசிபல் ஆகும் போது அவர் செவிடாகிறார்.

'கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றாம் துணை' (குறள்-414)

உலகப்பேரழகி கிளியோபாட்ரா பாலை வனத்தில் படுத்துக்கொண்டு பூமியில் காதைப் பதித்து விரோதியின் படை எவ்வளவு தூரத்தில் உள்ளது. எத்தனை காலட்படை, எத்தனைக் குதிரைப்படைட் என்பதை யெல்லாம் கூறிவிடு வாளாம். அதற்கு நுண்புலனாகக் காது பயன் படுத்தப்படக் கூடும் என நாம் அறியலாம்.

மகாபாரத இதிகாசக் கதையில் சுபத்திரை தன் குழந்தை கருவிலிருக்கும் போதே குழந்தை கேட்டதாகவும் பின் கோட்டைக்குள் செல்லும் முறையைப் பற்றிக் கூறும் போது குழந்தை தூங்கிவிட்டதாகவும் எனவே அதுப்பற்றி அறியத் தவறியதாகவும் கதைகள் உள்ளன.

வீர சிவாஜி கருவில் இருந்தபோது அவன் தாய் வீர வரலாறுகளை எடுத்துக் கூறியிருக் கிறார், நம் முன்னோர்கள் ஆற்றைக் கடக்கும் முன் ஆற்று மணலில் காதை வைத்துக் கேட்டு, மலை ஆற்றுப் பெருக்கு வருகிறதா என்பதை அறியும் ஆற்றல் உள்ளவர்களாக இருந்தனர்.

காது கேட்கும் தன்மை இழந்தால் அவனை உலகம் ஒரு கேலிப் பொருளாக்கிப் புறக்கணித்து விடுகிறது. கண் தெரியவில்லை என்றாலோ பரிதாப்படுகின்றனர். அவர்களுக் குப் பல சலுகைகளும் கிடைக்கின்றன. கண்ணாடி போட்டால் பெரிய மனிதன் என்றும் பொய் சொல்லாமாட்டார்கள் என்று கூறு கின்றார்கள். ஆனால் செவிடாகிக் காது கேட்கும் கருவி அணிந்தாலோ அவனை மதிப்பதில்லை.

காது நோய் ஆராய்ச்சி அவசியம்

மருத்துவமனையில் தினமும் 50 நோயாளி களை காது, மூக்கு, தொண்டைப் பிரிவில் பார்க்கிறோம். அவர்களில் 75 சதவீதம் பேருக்கு காதில் சீழ் வருவதினால் ஏற்பட்ட நோயே அதிகம். சில பள்ளிகளில் மருத்துவப் பரி சோதனை செய்தோம். அப்போது 4 சதவீதம் மாணவர்கள் காதில் சீழ் வருவதானால் செவிடாகி இருக்கின்றனர்,

பள்ளி மாணவர்களின் மெத்தனம்

'நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது (குறள் 419)

முதல் வகுப்பிலோ அல்லது இரண்டாவது வகுப்பிலோ ஒரு மாணவர் சரியாகக் காது கேட்காமல் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம் எனத் தெரிந்து கொண்டோம். மூளை (Feed Back) அள்ளிக் கொடுக்கும் கருவி. முன்னரே முளையில் இருந்தால் தானே அது அள்ளிக் கொடுக்கும். மூளைக்கு அறிவைக் கொடுப்பதே காதுதானே?

"சொலல் வல்லான் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது' (குறள் 647)

நாம் கேட்டுக் கேட்டுத்தானே நமது அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். பிறகு தான் நன்றாக பேச முடியும். நல்ல சொல்லுக்கு அகத்தியரை உதாரணமாகக் கூறிகின்றோம். சொல்வன்மை இருக்கிறதோ அவ்வளவு காது கேட்கும் தன்மை இருந்து இருக்க வேண்டும்.

> **'தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்**
> **சொல்லலும் வல்ல தமைச்சு'** (குறள்-)

உலக காவியமான 'ஜூலியஸ் சீசர்' வரும் அந்தோனி பேசியப் பேச்சே மக்களைக் கவர்ந்த தாக அறிகிறோம். பேசியே தலைவன் ஆனான் அவன். காது கேட்கவில்லை என்றால் பேச முடியாது. வாயிருந்தும் பேசா மடைந்தையாக இருக்கின்றனர் நம்மில் சிலர். இப்படி நம் மாணவர்களில் 4 சதவீதம் பேரில் 75 சதவீதம் பேர் காது நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்து அதை சரி செய்ய ஒரு புது அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டோம்.

நமது அணுகுமுறைக்கு உலக சிறப்பு

நமது அறுவைச் சிகிச்சை ஒது புதுவகை யான அறுவைச் சிகிச்சையாகும். இரத்த ஓட்டமுள்ள ஒட்டு அறுவைச் சிகிச்சையாகும். இந்த அணுகு முறையை நாம் இறந்தவரின் காதில் செய்து தெளிவுபடுத்தியுள்ளளோம். இலண்டனில் உள்ள மருத்துவப் பேராசிரிர் உயர்திரு. ஜீ.கே.ரோமன்ஸ் நமது முறையை ஏற்றுக்கொண்டு நமது மாணவர்களுக்கான 'கண்ணிகாம்' புத்தகத்தில் நமது முறையைக் புகுத்த எண்ணியுள்ளார்.

அவ்வாறு 'கண்ணிகாம்' புத்தகத்தில் வரும் போது உலகில் உள்ள அத்தனை மாணவர் களும் நமது அணுகுமுறையைத்தான் பின்பற்ற வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றியின் இரகசியம்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒட்டுறுப்பைக் காதில் இரத்த ஓட்டம் உள்ள இடத்தில் புதைத்து வைப்பதால் ஒட்டுறுப்பின் இரத்த ஓட்டம் இலகுவாக்கப்படுகிறது. ஆகவே, ஒட்டுறுப்பின் உயிர் 100 சதவீதம் உறுதிப்படுகிறது. 100 சதவீதம் உயிர்பெற்ற ஒட்டுறுப்பு காதில் ஏற்பட்ட துவாரத்தின் மேல் கலதாக ஒட்டிக்கொள்கிறது. ஆகவே, அறுவைச் சிகிச்சையின் வெற்றியும் உறுதியாகிறது.

அறுவை செய்த முறை

இந்த அறுவைச் சிகிச்சை பல நோயாளி களுக்குச் செய்யப்பட்டும் ஐந்து ஆண்டு காலமாகத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் வருகிறது. இந்த அறுவைச் சிகிச்சை 95 சதவீதம் வெற்றி அடைந்துள்ளது.

செய்முறை

காதுக்கு இரத்தம் வரும் பாதையில் உள்ள இரத்த நாரையும் (Vascular Strip) செவிப்பறை யின் மேல் தோலையும் மொத்தமாக உரித்து எடுத்து ஒட்டு (Tympanic Nenbrance) உறுப்பை அதன் அடியில் பொருத்திவிடுகிறோம். பின் அந்த உறுப்பின் மேல் இரத்த நாரையும், செவிப் பறையின்மேல் தோலையும் போர்த்திவிடுகி றோம். இவ்வாறு செய்வதன் மூலம் ஒட்டுறுப்பு இரத்தம் போர்த்தப்பட்ட போர்வை இரத்த நாரின் உள்ளே இருக்கிறது. இது அசைந்து வெளியே வரவும் முடியாது. நல்ல செழிப்பான இரத்த ஓட்டம் ஏற்படுகிறது. காதின் துவாரம் அடைபடுகிறது. செழிப்பான நிலத்தில் நல்ல விதை விதைப்பால் நல்ல அறுவடை கொடுக்கிறது.

அறுவைச் சிகிச்சையின் தேவை

காதில் உண்டாகும் சீழை மருந்து கொடுத்து குணப்படுத்திவிடலாம். ஆனால், காதில் உண்டான துவாரத்தை மருந்து மூலம் குணப்படுத்த முடியாது. அறுவைதான் செய்ய வேண்டும். துவாரம் இருக்கும்வரை திரும்பத் திரும்பச் சீழ் வரும். சீழ் வருவதால் காது கேட்கும் தன்மை கெடுகிறது. மூளையும் கெடுகிறது.

> **'எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
> **அதிர வருவதோர் நோய்' (குறள் - 429)**

பின்னால் வரப்போவதை அறிபவர்களுக் குத் துன்பமில்லை.

1. காது கேளாத் தன்மையின் வகைகள்

அ. கடத்தல் ஒலி கேளாத் தன்மை (Conductive)

ஆ. கிரகித்தல் ஒலி கேளாத் தன்மை நரம்புச் செவி (Sensorineural Deafness)

இ. மனநோய்ச் செவிடு (Melingering Deafness)

ஒலி கடத்தல் கேளாத் தன்மை ஏற்படுவதற்குக் காதில் புறக்காது, நடுக்காது மற்றும் உள்காதிலுள்ள முட்டை வடிவச் சன்னல் வரை உள நோய்கள் காரணமாகும். கிரகித்தல் கேளாத்தன்மைக்கு உள்காதிலோ, காது நரம்பிலோ, காது சம்பந்தமான மூளைப் பகுதியிலோ நோய் இருக்கலாம்.

2. காது கேளாததன் காரணங்கள்

அ. பிறவிச் செவிடு

பிறவிச் செவிட்டின் தன்மை அநேகமாக நரம்பு செவிடாக இருக்கும். இது மூன்று காரணங்களால் ஏற்படுகிறது.

அ. முன்னோர்களின் பரம்பரைக் குறை நோய்கள் சந்ததியார்க்குப் பற்றிக்கொள்கிறது. இந்நோய் உடையவர்களுக்கு வெளிக் காதின் உறுப்புகள் பார்வைக்கு நன்றாக இருக்கும். ஆனால், உள்காது உருவாகமலோ, வளர்ச்சியடையாமலோ இருந்துவிடும்.

ஆ. கருவில் ஏற்படும் நோய்கள் உள்காதை பாதிக்கும் தாய்க்கு ஏற்படும் நோய்களும், தாய் உட்கொள்ளும் மருந்துகளுமே கருவில் உள்ள குழந்தைக்கு விஷமாக மாறுகின்றன. முக்கியமாக அம்மை நோய், வைரஸ் நோய் போன்றவற்றால் தொல்லை ஏற்படுகிறது. மருந்துகளில் ஸ்ட்ரெப்டோமைசின், ஜென்டாமைசின், கேராமைசின், சலிஸிலேட், கொயினா மருந்துகள் காது நரம்பைத் தாக்குகின்றன.

இ. குழந்தை பிறந்தவுடனேயே சில நோய்கள் ஏற்படுகிறது. உதாரணமாக குழந்தை குறை மாதத்தில் பிறந்தாலும், வலி எடுத்து அதிக நேரம் கழித்துப் பிறந்தாலும், மூக்கு அடைபடுவதாலோ, நஞ்சுக் கொடி சுற்றிப் பிறப்பதாலோ, வேண்டிய அளவு சுவாச வாயு இல்லாமல் இருப்பதாலோ, தாய் தந்தையாரின் இரத்த மாற்றத்தினாலோ குழந்தைக்குக் காது மந்தமாகிவிடுகிறது.

வரித்து பெறும் நோய்கள்

கடத்தல் ஒலி கேளாத்தன்மையின் நோய்கள்

அ. அடிபடுதல் - காதில் எந்த உறுப்பில் அடிப்பட்டாலும் செவிடாக வாய்ப்புள்ளது.

ஆ. காதில் வெளிப் பொருள்கள் உள்ளே நுழைவதாலும் காது அடைய ஏதுவாகிறது.

இ. காதின் காற்று அழுத்தம் மாறுபடுதல்.

பொதுவாக விமானத்தில் செல்லும்போது இந்த நிலை ஏற்படுகிறது. விமானம் தரையை விட்டு மேலே ஏறம்போது ஆகாயத்தை விட்டுக் கீழே இறங்கும் போதும் அதிக அளவில் வெளிக் காற்றுக்கும், காது உள்காற்றுக்கும் அழுத்தத் தில்வேறுபாடு காணப்படுகிறது. அந்த வேளையில்காது தொண்டைத்துளை வழியாகக் காற்று நடுக்காதை அடைய வேண்டும். அப்படி அடைவதால்தான் நடுக்காதில் ஒரு வெற்றிடம் உண்டாகிறது. அப்போது நடுக்காதில் நீர் உறிஞ்சப் படுகிறது. அதனால் வேதனை ஏற்படுகிறது. உடனடியாகக் காது, தொண்டைக்கு குழாயைத் திறப்பதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவாகக் காது தொண்டைக் குழாய் அடைத்துக் காணப்படும்.

நாம் ஆகாரம் உண்ணும்போதும், எச்சில் விழுங்கும்போதும் காது, தொண்டைக் குழாய் திறக்கிறது. இந்த நிலையை மனத்தில் கொண்டுதான் விமானம் தரையிலிருந்து மேலே செல்லும் போதும், மேலிருந்து கீழே இறங்கும்போதும் தூக்கத்தை தவிர்த்தல் வேண்டும். மேலும் மிட்டாய் போன்றவற்றைச் சாப்பிடுவதால் உமிழ்நீர் விழுங்கப்பட்டு அந்தச் செயலினால் அன்னம் அசையும்போதும் காது தொண்டைக்குழாய் திறக்கிறது.

4. நோய்கள்

அ. காதில் சீழ் பிடித்தால் காது செவிடாகிறது. இந்தச் சீழ் நடுக்காதைத் தாக்குகிறது.

ஆ. சீழ் பிடிக்காமல் நடுக்காதில் நீர் இருப்பதாலும் செவிடாகிறது.

5. கட்டி ஏற்படுதல்

காதில் ஏற்படும் கட்டிகள் சாதாரணக் கட்டிகளாகவும் இருக்கலாம். புற்றுநோய்க் கட்டிகளாகவும் இருக்கலாம்.

கேளாத் தன்மை:

வெளிக்காதிலும் இருக்கலாம். நடுக்காதிலும் இருக்கலாம். சில வேளைகளில் மூக்கில் ஏற்படும் கட்டிகள் கூடக் காது, தொண்டைக் குழாயை அடைத்துச் செவிட்டுத் தன்மையை உண்டாக்கும்.

கிரகித்தல் ஒலி கேளாததன் காரணங்கள்:

கிரகித்தல் ஒலிகோளாத்தன்மை உள்காது நோயினாலும் காது நரம்பினாலும், மூளை நோயினாலும் ஏற்படலாம்.

அ. அடிபடுதல்: தலையில் அடிபடுவதனால் மண்டை ஓட்டின் மூலம் உள்காதில் அதிர்ச்சி உண்டாகிறது. அடிபடுவதால் ஏற்படும் எலும்பு முறிவு உள்காதை ஊனப்படுத்துகிறது.

ஆ. அதிரொலிகள்: தொடர்ச்சியான அதிரொலி கேட்டுக் கொண்டிருந்தாலும் உள்காது செவிடாகிறது.

இ. அழற்சி நோய்கள்: உள்காது, கிருமிகளின் தாக்குதலினாலும், மருந்துகளின் நச்சுத்தன்மையினாலும் செவிடாகிறது.

காது, மூளை, நரம்பின் கட்டிகளினாலும் நரம்புச் செவிடு ஏற்படுகிறது. செவி நரம்பிலேயே கடடிகள் ஏற்படுவதாலும் நரம்பு செவிடு ஏற்படுகிறது. B12 வைட்டமின் குறைபாடுகளும் காரணமாகலாம்.

மற்றும் சில காரணங்கள்

வயதான காரணத்தினால் உள்காது உறுப்புத் தேய்மானம் ஏற்படும்போதும், உள்காதின் நத்தை எலும்பில் அதிக நிணநீர் தேங்கும்போதும், உள்காதின் இரத்த ஓட்டம் குறையும்போதும் நரம்புச்செவிடு ஏற்படுகிறது.

இந்திய மக்களில் 10.7% பேருக்கு காது கேளாமை உள்ளது. இதில் 82% நோயாளிகளுக்கு இரண்டு காதுமே கேட்கும் திறனை இழந்துள்ளது. இந்த நிலையில் காது கேட்காதவர்கள் அல்லது காது மந்தமாக உள்ளவர்களின் தாழ்வு மனப்பான்மையை வார்த்தையால் வடிக்க முடியாது. காது கேளாமையும் காது மந்தத்தையும் மருந்து அல்லது அறுவைச் சிகிச்சை மூலம் குணமாக்கலாம். காது கேளாமையை ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையில் புதிய உத்தியைக் கண்டறிந்து அதை வெற்றிகரமாகச் செய்து வருவதற்காக டாக்டர் மு. குமரேசன் அவர்களுக்கு புதிய கண்டுபிடிப்புக்கான அகில இந்திய ஈமொக் விருது கிடைத்துள்ளது. காது மந்தம் மற்றும் காது கேளாமை பற்றிய அவரது கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிறோம். 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியாவில் மூன்று இலட்சம் குழந்தைகளுக்கு காது கேளாமை உள்ளது. 80 மில்லியன் மக்கள் காது கேளாமை அல்லது மந்தத்தால் அவதியுறுகிறார்கள். இதில் 35 மில்லியன் பேர் 4 வயதுக்கு உட்பட்டவர்கள், இவ்வாறு பெரியதொரு எண்ணிக்கையில் காணப்படும் காது கேளாமையை முயற்சி செய்தால் ஆரம்பக் கட்டத்திலேயே குணப்படுத்த முடியும். பெரும்பாலோருக்கு சிறிதளவே காது கேளாமை உள்ளது. பிற்காலத்தில் முழு செவிடு ஆனவர்கள் எல்லாம் மூளை அழற்சியால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஏனையோர் சீழ் மற்றும் நரம்புக் கோளாறு சம்பந்தப்பட்டவர்களாவர்.

காரணங்கள்:

காது மந்தம் அல்லது காது கேளாமைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. இதில் காதில் சீழ் 54%, வயழ - 8%, பிறந்தவுடன் பிராணவாயுக் குறைதல் - 6%, நச்சு மருந்துகள் - 5%, பாரம்பரியம் - 3%, காதுவலி, அடைப்பு - 3%, அம்மை நோய் - 3%, டைபாய்டு - 3%, தலையில் அடிபடுதல் - 2%, தெரியாத காரணங்கள் - 11% என பல்வேறு காரணங்களால் வருகிற காது கேளாமை ஒரு சிலருக்குத்தான் நரம்பையும் பாதிக்கிறது. காதுகேட்கும் நரம்பு பாதிக் கப்படாமல் இருந்தால் வெகு எளிதாக குணப்படுத்திவிடலாம். காது கேட்கும் நரம்பு பாதித்திருந்தால் கூட இன்று அதற்கு சிகிச்சை முறைகள் வந்துவிட்டன. நரம்பைத் தூண்டு வதற்கான மாத்திரைகளையும், ஊசிகளையும், மருந்துகளையும் பயன்படுத்தலாம். இத்துடன் இயன்முறைச் சிகிச்சையும் செய்வது நல்லது. செயலிழந்த நரம்பைத் தூண்டிவிட காக்ளியா இம்பிளாய்ண்ட் என்ற அறுவைச் சிகிச்சை கூட நடைமுறையில் உள்ளது.

காதில் சீழ் வருவதும், செவிப்பறையில் துளை விழுவதும் காது கேளாமையை ஏற்படுத்துகின்றன. இந்த நடுக்காது நோய் அதிக அளவு இந்தியர்களையும் எஸ்கிமோக் களையுமே தாக்குகிறது. காதில் சீழ் வடிதல் வருமானம் குறைவாக உள்ள இந்திய மக்களிடம் அதிகமாக காணப்படுகிறது. பிற நோய் களுக்கான பல்வேறு மருந்துகளைச் சாப்பிடு வதால் நரம்பு செவிடு ஏற்படுகிறது. நச்சு மருந்துகளால் செவிடு ஏற்படும் போது அவ்வப்போது காது இரைச்சலும், மயக்கமும் ஏற்படும் மருந்து நச்சுகளால் காது பாதிக்கப் படும்போது இரண்டு காதுகளும் பாதிக்கப்படும் என்று கூற முடியாது. ஏதாவது ஒரு காது மட்டும் கூட பாதிக்கப்பட்டு அடுத்த காது நன்றாக கேட்கும் நிலை கூட ஏற்படலாம்.

தலைவலிக்காக சாதாரணமாகக் கடையில் கிடைக்கும் மருந்துகளாலும் காது கேளாமை ஏற்படுகிறது. குழந்தை பிறக்கும்போது சரியாக மூச்சுவிட முடியாமல் இருந்தால் உள்காதில் இரத்த ஒழுக்கு ஏற்பட்டிருக்கும். டைபாய்டு தாக்கிய மூன்றாவது வாரத்தில் காது கேளாமை ஏற்படலாம். தலையில் அடிபடுவதால் காது அமைந்திருக்கும் மண்டையோடு எலும்பு உடைவதால் செவிட்டுத் தன்மைக்கு வாய்ப்பு உள்ளது.

போக்கும் வழிகள்:

1. எளிதாக குணப்படுத்தக்கூடிய காதில் சீழ் வடிதலை அலட்சியப்படுத்தாதீர்கள். உடனடியாக மருத்துவம் செய்யுங்கள்.
2. அடிக்கடி சளி வருதல் மூக்கில் நீர் வருதல், காதில் வலி ஏற்படுதல் ஆகியவை குழந்தைக்கு வராமல் தடுக்க டான்சில் மற்றும் அடினாய்டு நோய்களைச் சரி செய்ய வேண்டும்.
3. காதுக்கு நஞ்சான மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாது.
4. சுற்றுப்புறச் சூழலில் அதிகளவு ஒலியை ஏற்படுத்தும் கருவிகளைத் தடை செய்யவேண்டும்.
5. மூச்சுத் திணறினால் உடனடி மருத்துவம் தேவை. ஆகவே குழந்தைப் பேற்றை மருத்துவ மனைகளிலேயே வைத்துக் கொள்ளுங்கள். மூச்சுத் திணறலில் பாதிக் கப்படும் குழந்தைகளுக்கு காது, மூக்கு, தொண்டையை பரிசோதனை செய்ய வேண்டும்.

செவிப்பறைத் துவாரம்

இந்தியாவில் காது கேளாமைக்கு முக்கிய காரணம் காதில் சீழ் வடிதல் தான் இந்தச் சீழ் எப்போதும் இருப்பதில்லை. இதனால் காது செவிப்பறையில் துவாரம் கூட ஏற்பட்டு கேளாமை ஏற்படுகிறது. 1953 முதல் காதில் சீழ் வருவதைக் குணப்படுத்த பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. சீழ் வருவதால் ஏற்படும் செவிப்பறைத் துளையை அடைக்க அறுவைச் சிகிச்சையைக் கையாண்டு வருகிறார்கள். இதில் நான் ஒரு புதுவகையான இரத்த ஓட்டம் உள்ள ஒட்டுறுப்பு அறுவைச்

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி...!

-கவிமாமணி மல்லை மணிவாசகம்-

கல்தோன்றி மண்தோன்றாக் காலம் தொட்டே
கனித்தமிழே முன்தோன்றி வளர்ந்த துண்மை!
இலலையெனச் சொல்வார்கள் எவர்தான் உண்டு!
இன்பத்தமிழ், மூத்ததமிழ் முதன்மை என்றும்!
சொல்லுக்குச் சொல்புதுமை இன்பம் நல்கும்.
சொக்கவைத்து மனதினிலே மகிழ்ச்சி தூண்டும்!
நல்லுலகில் நற்றமிழர் ஒருங்கி ணைந்து
நம்மொழியை தமிழ்மொழியை வளர்ப்போம் வாரீர்!

உலகெங்கும் உலவிவந்த மொழிகள் எல்லாம்,
உயிர்பெற்று வளர்ந்ததில்லை; உண்மை கண்டோம்!
சில மொழிகள் காலத்தால் அழிந்த துண்டு!
செந்தமிழே செகமனைத்தும் பரவக் கண்டோம்!
பலநாட்டு அறிஞர்கள் போற்றக் கண்டோம்!
பன்னாட்டு மாந்தர்கள் பேசக் கேட்டோம்!
உலகத்தமிழ் மக்களெல்லாம் ஒன்று சேர்வோம்!
உலகரங்கில் தமிழ்மொழியைப் பரவச் செய்வோம்!

வளர்ந்துவரும் அறிவியலில் ஆக்கம் காண
வண்டமிழில் புதுச்சொற்கள் கண்ட றிந்து,
தளராமல் அறிவியலை வளர்ப்போம் நாளும்!
தமிழர்நிலை உயர்வதற்கு வழிகள் காண்போம்!
அளவில்லாக் கலைவளர்க்க முந்தி நிற்போம்!
ஆனமட்டும் கலைச் சொற்கள் தேடிக் காண்போம்!
வளர்ந்துவரும் வணிகத்தை உலக மெல்லாம்
வளர்ப்பதற்குத் தமிழ்மொழியில் புதுமை செய்வோம்!

தமிழ்வளர்ந்தால் நாம் வளர்வோம்; தமிழைக் காப்போம்!
தரணியெலாம் தமிழ்வளர்த்துச் சிறக்கச் செய்வோம்!
இமிழ்கடல்சூழ் உலகினிலே இருபத் தோராம்,
இனிதான நூற்றாண்டை நோக்கிச் செல்வோம்!
அமிழ்தான தமிழ்வளர ஆக்கம் கொள்வோம்!
அகிலமெலாம் தமிழர்நிலை உயரச் செய்வோம்!
தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்க்கை ஏற்போம்!
தன் மானத் தமிழரென நிமிர்ந்து நிற்போம்!

சிகிச்சையைக் கண்டுபிடித்து வெற்றிகரமாகச் செய்து வருகிறேன். என்னுடைய புதிய உத்தியின் மூலம் ஒட்டுறுப்பை செவிப்பறையாக அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இரத்த ஓட்டம் ஒட்டுறுப்பில் செல்லும் போதுதான் அது உயிரோட்டம் உள்ளதாக மாறி செவிப்பறையாகிறது. காதுகேட்கும்திறனைப் பெறுகிறது.

இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு காது கேட்கும் திறனை பெறுகிறது என்பது மட்டுமல்லாது, காதில் வேண்டாத சதை இருந்தாலும் அதுவும் அகற்றப்பட்டிருக்கும்.

எப்படிச் செய்யப்படுகிறது:

அ. காதில் உள்ள செவிப்பறையில் மூன்று அடுக்குச் சதைகள் உள்ளன. அவற்றுள் மேலடுக்குச் சதையினை மட்டும் கிழியாமல் முழுமையாகப் பிரித்தெடுக்க வேண்டும். இதுதான் ஒட்டுறுப்பு.

ஆ. இந்த ஒட்டுறுப்பை மடியாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இ. ஒட்டுறுப்பு ஒட்டாமல் சிலநேரங்களில் முன்னோக்கி வந்துவிடும். இந்த மாதிரி முன்னோக்கி வருவதை சிறப்பான முறையில் தடுத்தல் வேண்டும்.

ஈ. காதினுள் தோல் உறைக்கட்டி எழுவதை தடுப்பதற்கும் ஏற்றவாறு அறுவை செய்யப்பட வேண்டும்.

காதில் இரத்த ஓட்டம்

காதில் உள்ள இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் அதிகமாக இருக்கும். செவிப்பறைக்கு இரத்தம் வருவது இந்த இரத்த நாளங்கள் மூலமாகத்தான். ஆகவே, இதைப் பிரிக்க மாட்டோம். இரத்த நாளத்தைச் செவிப்பறையோடுதான் எடுக்கிறோம். அறுவையின் மூலம் அகற்றப்பட்ட செவிப்பறையின் மீது இரத்த நாளங்களும் செவிப்பறையின் மேல் தோலும் வைக்கப்படுகிறது. இதனால், இரத்த ஓட்டம் ஒட்டுறுப்புக்குக் கிடைக்கிறது. இதைத் தொடர்ந்து ஒலியை உட்கிரகித்து மூளைக்கு அனுப்பி கேட்கும் தன்மையைச் செவிப்பறை பெறுகிறது. இந்த ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை மூலம் ஆயிரக்கணக்கானோர் பயன் அடைந்துள்ளனர். ☆

மருத்துவத் தமிழ் வளர்ச்சி ஆமை நடை போடுவதை முயல் ஓட்டமாக்குவது எப்படி?

-டாக்டர் சு. நரேந்திரன்-

அறிவியல் துறை மிகவும் விரைந்து இவ்வுலகில் வளர்ந்து வருகிறது. அதற்கேற்ப நம் தமிழகமும் ஒத்து உயரவேண்டுமானால் நாம் நம் மொழியில் அறிவியல் நுட்பக் கருத்துகளை பயின்று வருதல் வேண்டும். அதற்கேற்ப முயற்சிகளும் பயிற்சிகளும் நடைபெறுதல் வேண்டும். இக்கருத்தினை ஒட்டி மருத்துவத் தமிழ் வளர்ச்சி அவ்வாறு நடைபெற்றுள்ளதா; நடைபெற்றன வெனில் எந்த அளவு அவை பயன் தந்துள்ளன. அதில் முடக்கம் இருப்பின் அதற்குத் தீர்வு என்ன என்று விடை காணுதல் நல்லது.

காரணங்கள்

மருத்துவத் தமிழ் வளர்ச்சி குறித்த சரித்திரத்தைப் புரட்ட அது மெது நடை போட்டு வந்துள்ளது. இதற்குக் காரணங்கள்.

1. தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம், தங்கள் தவயோகத்தின் பொழுது ஏற்படும் சிக்கல்களுக்காக உருவாக்கப்பட்டது எனினும், பின்னர் குருகுல குலக் கல்வியாக்கப் பட்டு உயர்சாதிக் காரர்களுக்கு மட்டும் பாரம்பரியமாகப் போதிக்கப்பட்டது. மருத்துவச் செய்திகளும் ஒளிவு மறைவாக செய்யுள் வடிவத்தில் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

2. சங்ககாலத்திற்குப் பிறகு தமிழர்களை தமிழன் ஆட்சி செய்யவில்லை. தொடர்ந்து தொழிலாளர்களே ஆட்சி செலுத்தினர். களப்பிரர் பாலி மொழியையும், வட மொழியையும் போற்றினர், பல்லவர் பிராகிருத்தையும், வடமொழியையும் ஆதரித்தனர். நாயக்கர் காலத்தில் வடமொழி தலைமை பெற்றது. பின்னர் சுமார் 200 ஆண்டு ஆங்கில ஆட்சி நிலவியது. இதனால் சாதாரண தமிழ் மக்களால் தமிழில் மருத்துவத்தை வளர்க்க இயலவில்லை.

3. இக்கால கட்டங்களில் எழுதப்பட்ட வடமொழி, சமயச் சார்புடைய மொழியாக மக்களிடம் அழுத்தம் கொண்டிருந்ததால், அறிவியல் அறிவு பெற்றவர்களாக விளங்கி வந்தவர்கள் பெரும்பான்மையினர் தமிழை விட வடமொழி அறிவை நிரம்பப் பெற்றவராக விளங்கினர். மேலும் புதிய கலை சொல்லாக்கத்துக்கு தமிழினும் வட மொழியே ஏற்றது என்ற எண்ணமும் ஏற் பட்டிருந்தது.

   இக்கருத்தை பாரதி தன் கட்டுரையில் கூறும்போது.

   "ஒன்று அக்கால மொழிவழக்கு, இரண்டு கல்லாதவரை அடிமைப்படுத்துவதே கல்வியால் பெரும் பயன் என்றும் பெரும் பான்மைத் தமிழருக்கு, புரியாத மொழியில் சொல்வது உயர்வு என்று கருதப்பட்ட நிலை என்று கூறுகிறார்.

4. ஆங்கில மருத்துவ கண்டுபிடிப்புகளால் நோய்களுக்கான காரணம், நுண்ணுயிர், வைரசு என்றுஅறிந்த நிலையில் சென்னையில் காலரா தோன்றிய போது இதைத் தடுக்க ஒரு துண்டறிக்கை முதன் முதலில் சென்னை கிறிஸ்துவ சமயத்தினர் அச்சகத்தில் தமிழில் வெளியிடப்பட்டது. இச்சமயத்தில் தான் நோய்களுக்கான காரணம், சமயத்திலிருந்து பிரித்துக் காரணம் சொல்லப்பட்டது. மேலும் மருத்துவம் ஜனநாயகப் படுத்தப்பட்டு மேலை நாட்டு மருத்துவம் தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்படடது.

   இக்காலகட்டத்தில் தமிழ் மருத்துவம் அதிக கலைச்சொற்களை கொடையளிக்க முடியாத நிலையிலேயே மறைமுக பாணியில் (பரிபாஷை) இருந்தது.

   இச்சமயம் இந்தியத் துணைக்கண்டத்தில் அறிவு மொழியாக வடமொழி இருந்ததால்

கலைச்சொற்களும் வடமொழியாக அமைந்திருந்தது. ஆகவே மருத்துவத்தைப் பரப்ப வந்த தமிழ் இதழ்களின் பெயர்கள் கூட வடமொழியாகவே இருந்தன. (எ.கா) ஆரோக்கிய போதினி (1908) வைத்திய போதினி (1910) ஆரோக்கிய தீபிகை (1929)

யாழ்ப்பாணத்தில் மருத்துவங்கள்

5. தமிழகத்தில் இப்படியாகத் துண்டு பிரசுரம் வடமொழிக் கலைச் சொல்லுடன் வெளி வந்த சமயம், இலங்கையில் ஆங்கில மருத்துவத்தை தமிழில் வடித்து தமிழ் மக்களுக்கு பாடம் புகட்டி தமிழர் நலனுக்காகப் பயன்படவேண்டும் என்று முதல் முதலில் விதை விதைத்தது அவர் காலத்திலேயே பழத்தையும் உண்டவர் யாழ்பாணத்தில் வடபால் பருத்தித்துறைக்கு 1847-இல் வந்த அமெரிக்க கிறித்துவப் பாதிரியார், மருத்துவர் சாமுவேல் ஃபிஷ்கி ஸீன் ஆவார். இவர் ஏறக்குறைய 4650 பக்கங்கள் தமிழில் ஆங்கில மருத்துவத்தை அவர் மாணவர்கள் உதவியுடன் மொழி பெயர்த்துள்ளார். இன்றைய பார்வைக்கு நூல்கள் பதினொன்று. இவர் முதன் முதலில் மொழிபெயர்க்கத் தொடங்கிய நூல் கல்வின் கற்றரின் (Anatomy, Physiology and Hygiene) என்ற நூலின் தமிழாக்கமான ஆங்காதி, பாத சுகரன வாதம், உயர் பாணவம்'' இதுவே தெளிவான படங்களுடன் 1852ஆண்டு 204 பக்கங்களுடன் வெளியிடப் பட்ட முதல் மேலை நாட்டு மருத்துவ நூல்.

இச்சம காலத்தில் தமிழகத்தில் சென்னை மருத்துவத் துறையில் பணியாற்றிய மருத்துவர். ம.ஜகநாத நாயுடு 1866-ஆம் ஆண்டு ''சரீர வினா விடை'' எனும் நூலையும் பிறகு ''சுகபரி பாலன தினசரியை, ''ஆயுர் வேத கிரந்தம் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் 1901-இல் எஸ்.எஸ்.முனுசாமி முதலியாரால் தேக தத்துவ சாஸ்திரம் 1908-இல் ரங்கூனிலிருந்து சாமுவேல் என்பவரால் ''மானிட மர்ம சாஸ்திரம்'' அல்லது சிசு உற்பத்தி சிந்தாமணி என்னும் நூல் வெளியிடப் பட்டுள்ளது. 1911இல் பி.எஸ். பிள்ளையால் தமிழ் மெகலியா மெ... வெளியிடப்பட்டு 1924-இல் ஆரேக்கியமும் நீடித்த ஆயுளும் என்ற நூலும் 1927-இல் வேங்கட ராம ஐயர் எழுதிய ''பிள்ளையுள்ளம்'' என்ற புத்தகமும் 1933ல் உடலுறுதி எனும் நூல் சுவாமி சுத்தானந்த பாரதியாலும் இயற்றப்பட்டது. அதன் பிறகு 1941-இல் டக்டர் டி.எஸ்.எஸ் ராஜனால் வீட்டு வைத்தியம் எனும் நூலும் வெளியிடப்பட்டது. இதன் பின்னர் ஒரு சில நூல்கள் வெளிவந்துள்ள என்றாலும் 1967லிருந்து தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம் நீயூ செஞ்சுரி பூக் அவுஸ், மதுரை காந்தி நினைவு நிதி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தென் மொழிகள் புத்தக டிரஸ்டு, வானதி பதிப்பகம், பூம்புகார் பதிப்பகம் போன்றவை பல மருத்துவ நூல்களை வெளியிட்டன.

வேதனை

இவைகளையெல்லாம் கூட்டிபார்த்தால் 150 ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக ஆங்கில மருத்துவப் புத்தகங்கள் 100 கூட கிடையாது. இவைகளுக்கான காரணங்கள் என்ன என்று ஆய்வு செய்ததில் மேற் சொன்ன செய்திகளைத் தவிர சில வெளிப்பாடுகள் மிகவும் வியப்பான தாகவும் வேதனை தருவதுமாக உள்ளது.

1955 வரை தமிழகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழ் இல்லை. சென்னை மாகாணமாக இருந்த பொழுதும் வட்டார மொழிகளில் ஆட்சி நடைபெறவில்லை. மேலும் அரசாங்க வேலைகளைத் தமிழில் நடத்த நினைத்த அன்றைய அரசே சோதனையாகத் திருச்சி மாவட்டத்தில் மட்டும் கடிதப் போக்குவரத்தை ஏனோ தானோ என நடத்தியது. அதை விரிவுபடுத்தத் தேவையில்லை என்றும் தீர்மானித்தது. 1955 ஆண்டுகளுக்கு முன்னரே, சட்டமன்ற உறுப்பினரார் கெஜபதி நாயகர் பிரேரணை மூலம் கடிதப்போக்குவரத்தில் முதலாவது தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு

வந்ததை அன்றைய ஆளுநர் அனுமதி அளிக்காத நிலையில் தமிழை வளர்க்கத் தடைகள் எழுந்தன.

1930-க்குப் பிறகுதான் தமிழ் நாட்டில் தாய்மொழிக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டது. இக்காலக் கட்டத்தில் வெளிவந்த கலைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள சொற்கள் பெரும் பாலானவை வடமொழி அல்லது ஆங்கில ஒலி பெயர்ப்புகளாகும்.

1959ம் ஆண்டு தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் தமிழைப்பயிற்று மொழியாக்குவதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பொழுது தமிழில் பயின்றால் தரம் கெட்டுப் போகும்; தமிழில் பாடநூல் இல்லை; அறிவியல் மற்றம் கலைத்துறைப் பாடங்களைத் தமிழில் எழுதக் கலைச் சொற்கள் இல்லை என்று வாதிட்டு அரசுஆணையில் நெளிவு சுளிவுகளை ஏற்படுத்தி தமிழ், கல்லூரிகளில் நுழையவிடாமல் தடுக்கப்பட்டது.

பாடநூல் எழுத 1959ல் கல்லூரி தமிழ்க் குழு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு பின்னர் 1962-இல் இது தமிழ்நாடு பாடநூல் நிறுவனமாகி, நூல்களை வெளியிட்டு வந்த நிறுவனம் 1975-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறிவியல் நூல்களை வெளியிடுவதை நிறுத்திவிட்டது. தமிழில் எழுதிய அறிவியல் நூல்கள் பல, இன்னும் கைப் பிரதிகளாகவே இன்றுவரை உள்ளன.

இது போலவே 1983-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் தமிழ்த்துறை என்ற ஒரு புதிய துறையை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு 15 மருத்துவ நூல்களையும் 14 பொறியியல் நூல்களையும் வெளியிட திட்டமிடப் பட்டு தயார் நிலையில் உள்ளது. இதில் பல நூல்கள் இன்னும் அச்சேறாமலேயே இருக்கின்றன.

தமிழக அரசு பொறியியல் கல்லூரியில் தமிழில் பொறியியலை நடத்த மாணாக்கர் தேர்வு நடைபெற்ற பின்னரும் இன்று வரை நடைமுறைக்கு வாராதது ஓர் கனவு போல் உள்ளது. இதன் காரணமாக மருத்துவம் தமிழில் என்பது ஓர் கானல் நீர் போல் தோன்றுகிறது.

மேல் நாடுகளின் தமிழ் ஆர்வம்

தமிழ் மக்களிடையே மேல் நாட்டு மருத்துவம் பரவ எண்ணியவர் ஓர் அமெரிக்கப் பாதிரியான டாக்டர் கிறீன். இவர் இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற எடுத்த காலம் அன்னியார் ஆட்சியில் அடிமையாக வாழ்ந்த காலம். தமிழினை அறியாத இவர் தமிழைப் படித்துக் கலைச் சொல்லாக்க முறைகளை திட்டமிட்டு வகுத்துப் புத்தகம் எழுதி, அல்லது எழுத வைத்துச் சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்னரே முப்பத்து மூன்று மாணவர்களுக்குத் தமிழில் மருத்துவம் கற்பித்துள்ளார்.

அந்நாளிலேயே டாக்டர் கிறீனின் மாணவர்கள் மேல்நாட்டு மருத்தவக் கல்வியைத் தமிழில் படித்தால் பயனுண்டா எனச் சற்று சலனமடைந்தார்கள். ''எனது மாணவர்கள் ஆங்கிலத்திலிருந்து மாறி, தமிழில் கற்பது பற்றி சலனமடைந்துள்ளனர். அரசு சேவையில் ஈடுபட்டுச் சம்பளம் பெறும் வாய்ப்புக் குன்றுமென அவர்கள் எண்ணுகிறார்கள், உண்மை. ஆனால் வைத்தியர்களை அவரவர் கிராமத்தில் நிலைபெறச் செய்தலே எதிர்கால நோக்கமாகும். எனவே பத்து நாட்கள் ஓய்வு கொடுத்து வைத்தியக் கல்வியைத் தொடர் வார்களா? அன்றேல் வேறு தொழிலை நாடு வார்களா? எனத் தீர்மானிக்க அவர்களுக்கு அவகாசம் கொடுத்துள்ளேன், எனக் கூறியுள் ளார். இக் கூற்று இன்றைக்கும் நாம் அனைவ ராலும் எண்ணிப் பார்க்கத் தக்கவொன்று.

இவர் எழுதிய நூல்களை அச்சிடுவதற்கு அரசு நிதியுதவி கோரிய பொழுது இலங்கை தேசாதிபதி ''அமெரிக்க மிசன் நடைமுறையில் கொண்டிருக்கும் ஆங்கிலம் தவிர்க்குங் கொள்கை பேராபத்தானதும் தற்கொலைக்கு ஒப்பானதுமாகும்'' என பதில் எழுதி உதவி அளிப்பதற்கு மறுத்த பிறகும் ''ஒவ்வொரு மூன்று ஆண்டுகளும் ஆறு மாணவர்களை பயிற்றுவிப்பேன்!... ஆம், கடவுள் எமக்கு ஆயுட் காலந்தரின், காலப் போக்கில் இம்மாகாணத்தை மேனாட்டு வைத்தியங்களற்ற சுதேசிகளால்

நிரப்பி விடுவேன்'' என்று மார்தட்டி புத்தகங் களை அமெரிக்க இலங்கை மிசன், தென்னிந் தியக் கிருத்துவப் பாடசாலை புத்தக சங்கம் ஆகியன புத்தகம் வாங்கி உதவியதன் வாயிலாக வெற்றி கண்டுள்ளார்.

செய்ய வேண்டியவை

1. தமிழ் வளர்ச்சிக்கு உழைக்கும் பல்கலைக் கழக கூட்டமைப்பு உருவாக்க வேண்டும்.
2. அனைத்துலகத் தமிழறிஞர் நிறுவனத்தின் மூலம் மாநாடுகள் நடைபெறும் பொழுது அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுத் தமிழ் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இது தவிர்க்கப்பட வேண்டும்.
3. பல நாட்டுக் கூட்டமைப்பு ஒருமைப் பாட்டுக் குழுவின் மூலம் கலைச் சொற்கள் உருவாக்கப்படவேண்டும். இதனால் தமிழக வெளியீடு சிங்கை, இலங்கை, மலாயா போன்ற நாடுகளிலும் படித்துப் பயன் பெற வாய்ப்பு உண்டு.
4. உயிரியற் கலைச் சொற்கள், வேதியியல் சொற்களுக்குஅனைத்துலக ஒருமைப்பாடு கண்டுள்ளதை எடுத்தாள வேண்டும். அறிவியலாளர் எழுதி மொழி அறிஞர். தமிழறிஞர் கட்டுடன் சொல் பயன்பாடு மொழி அமைப்பு ஆகியன பிழைபடாமல் நூல் வெளிவர வேண்டும்.
5. ஆய்த வெழுத்தைத் திட்டமிட்டு உப யோகப்படுத்த வேண்டும்.
6. பிறமொழிச் சொற்களை ஏற்க வேண்டிய இடத்தில் ஏற்க வேண்டும்.
7. அரசால் புதிய தமிழ் இலக்கணம் எழுத குழு அமைக்கப்பட்டுள்ளது. இது அறிவியல் கல்விக்கு ஏற்றவாறு சொல்லாக்கம், சொல்லமைப்புகளை எளிய, இனிய முறையில் பயன் பாட்டு தமிழ் இலக் கணத்தை உருவாக்க வேண்டும்.
8. 31 மொழிகளில் 65 நாடுகளில் 250 கலைச் சொல்லாக்கக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன. இதன் உதவியை நாட வேண்டும். கலைச் சொற்கள் அனைத்தும் கணிப் பொறியில் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். பல்வேறு நாடு களிலிருந்தும் கலைச் சொற்களை திரட்டி எல்லா நாட்டுக்குமான ஒரு பொதுமையை காண வேண்டும்.

மொழி பெயர்ப்பு மையம்

1. அறிவியல் பாடநூல் முதற் பதிப்புக்கும் அதன் அடுத்த பதிப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் அந்தத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் புதிய கண்டுபிடிப்பு களையும் புத்தகத்தில் காட்ட வேண்டும். இதற்கு ஒரு மொழி பெயர்ப்பு மையம் தேவை.
2. இயந்திர மொழிபெயர்ப்பு வசதி இருப்பின் கால மிச்சம் ஏற்படும் வாய்ப்பு உண்டு.
3. இவ்வசதியற்ற நிலையில் அல்லது இயந்திர மொழி பெயர்ப்பு உதவா நிலையில் தேவைக்குரிய மொழிபெயர்ப்பின் மூலம் நூல் ஆசிரியருக்கு அல்லது கட்டுரை ஆசிரியருக்கு உரிய தேவையான கட்டுரை களை மட்டும் மொழி பெயர்த்துக் கொடுத் தல் வேண்டும்.
4. அல்லது தேவைக்குத் தகுந்த படி ஜெர்மன், ரஷ்யன், பிரஞ்சு முதலிய பிற மொழிகளைக் கற்றுக் கொடுத்து இவர்களாகவே மொழி பெயர்ப்பு செய்து கொள்ளச் செய்தல் வேண்டும். இதில் இடர்ப்பாடு நேரும் என்ற நிலையில் ஒரு பொது மையத்தில் பல மொழி அறிந்த மொழி பெயர்ப்பாளர்கள் இயங்கச் செய்தல் வேண்டும்.
5. இவையனைத்தையும் விட மிக முக்கிய மானது ஒன்று உண்டு. 100 மொழிகளைப் பேசி எழுதி வந்த இந்தோனிஷியா, சுதந்திரம் பெற்றவுடன் மக்களவைச் சட்டத்தின் மூலம் ''பாஷா இந்தோனி ஷியா'' வே இனிப் பயிற்சி மொழி, இந்தச், சட்டத்தை இனி வரும் எந்த அரசும் மாற்றக்

திருநாள் வருகிறது

-உதயை மு.வீரையன்-

உலகமெலாம் தமிழோசை கனவு காண
ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமை யுண்டு;
உலகமெலாம் நம்கொள்கை பரவு தற்கு
உயிர்விட்ட சான்றோர்கள் எத்த னைபேர்!
உலகமெலாம் உயிர்க்காற்றே உலவு தற்கும்
உழைக்கிறது விஞ்ஞானம்; எங்கள் கொள்கை
உலகமெலாம் மனிதகுலம் வாழ வேண்டும்;
உன்மொழியை என்மீது திணிக்க வேண்டாம்!

தென்றலையா சிறைபிடிக்க முடியும்? மூளும்
தீயினையா மூடிவைக்க முடியும்? காலம்
இன்றுவரும்; நாளைவரும்; போகும்; ஆனால்
என்றைக்கும் இருப்பதுநம் தமிழே! வித்தும்
கன்றாகும்; மரமாகும்; மடிந்தும் போகும்;
காலத்தை வெல்வதுநம் மொழியே! எங்கும்
சென்றுவா! வென்றுவா! என்று சொல்லி
செந்தமிழைத் திசையெட்டும் அனுப்பி வைப்போம்!

ஆசையினை அடக்கிடலாம்; முயன்றால் போதும்;
ஆகாயப் பரப்பினையும் தொடலாம்; ஆனால்
ஓசையினை அடக்கிடவா முடியும்; ஓங்கும்
உயர்தமிழை ஒடுக்கிடவா முடியும்? மூடப்
பூசைகளும் சடங்குகளும போ!போ! எங்கள்
புத்துலகம் பூக்கிறது வா!வா! வந்தால்
தேசமே உன்பின்னால் நிற்கும்; அந்தத்
திருநாளும் வருகிறது; வரவேற் போமே!

பொலிக பொற்காலம்!

-கவிமுரசு பூவை அமுதன்-

வெற்றிதனை யகழ்ந்தவனின் தலையில் கல்லை
வைத்தன்று விளக்கமுற வீரம் சொன்னான்!
நற்பரிசே என்றாலும் நேரில் போற்றி
நல்கவில்லை யெனில்புலவன் மறுத்தி கழ்ந்தான்!
முற்றாத சிந்தனையில் போர்க்கெ ழுந்த
முடிமன்னர்க் கிடையமைதி புலவர் காத்தார்!
பற்றின்றித் தம்மக்கள் பகைத்த போது
பழியஞ்சி வடக்கிருந்து வாழ்வை நீத்தார்!

அரும்புலவர் வறுமைக்கும் மனமி ரங்கி
ஆவியையும் தரத்துணிந்தான் குமண வள்ளல்!
கருநெல்லிக் கனிஔவைக் கீந்து வாழ்நாள்
காலத்தை நீட்டிமொழி வளர்த்தான் அஞ்சி!
சிறுசெடியின் தவிப்புக்குப் பற்றுக் கோடாய்
தேர்நிறுத்திப் போர்நிறுத்திக் கொண்டான் பாரி
வறியவரை எதிர்க்கண்டால் பாணர் அன்பால்
வள்ளலூர் வழிசொல்லி வறுமை தீர்த்தார்!

வீரப்புண் ஏற்காத நாள்கள் எல்லாம்
வீணாகிப் போனவையாய் நொந்தார் வீரர்!
போருக்குப் போவென்றே எஞ்சி நின்ற
புதல்வனையும் தாயனுப்பிப் பூரித் தாளே!
தீரமுடன் புலிதன்னை முறத்தி னாலே
துறத்தியநம் தமிழ்மறத்தி வீரம் என்னே!
பேருக்காய் மாந்தரென வாழ்க லின்றிப்
பெருங்கற்பின் மாண்பாலே சிறந்தார் வாழ்வார்!

பாருக்கே பண்பாட்டைப் பாட மாக்கப்
படைத்திட்டார் அறநூல்கள் காப்பி யங்கள்
யாருக்கும் அஞ்சாமல் யாதும் ஊரே
யாவருமே கேளிர் எனப் பொதுமை போற்றி
சீரான அறவினைகள் நாளும் செய்தார்
செந்தமிழ்நல் ஆக்கமுறச் சங்கம் கண்டார்!
போரினிலும் நெறிமுறைகள் கடைப்பி டித்தார்!
புகழெல்லாம் மீண்டுமிங்கே பொலிந்தி டாவோ?

கூடாது என்ற நிலையில் அங்கு அம் மொழி கோலோச்சி வருகிறது. தமிழகத்தில் தந்தை பெரியாரின் எழுத்து மாற்றம்''லை, வை, னை'' யாகமாறியது சட்டத்தினால் தான். ஆக மருத்துவ நூல்கள் எழுதத் தமிழறிவு ஆர்வம், முயற்சி, உழைப்பு, பொறுமை தேவை என்பதை விட இனிமேல் மருத்துவத்திற்கான பாட மொழி தமிழ் என்ற ஒரு சட்டமே இன்று தேவையானது. இதில் இரண்டாவது எண்ணம் என்பது கூடாது. தேவை அதிகமாகும் போது பொருள் உற்பத்தியும் பெருகும் என்பது சித்தாந்தம். தேவையானால் மொழிப் பயிற்சிக்கு ஆங்கிலத்தை துணையாகக் கொள்ளலாம். ☆

தமிழ் படும் பாடு

-கவிக்கோ ஞானச் செல்வன்-

பிரஞ்சு மொழியில் விக்தர் ஹ்யூகோ எழுதிய 'லே மிசரபிள்' புதினத்தைத் தமிழில் ''ஏழைபடும் பாடு'' எனும் பெயரில் கவியோகி ச.சுத்தானந்த பாரதியார் படைத்தளித்தார். கடவுள் படும்பாடு பற்றி சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை நூற்கட்டுரை எழுதி யுள்ளார். இந்தப் பாடுகளைவிடப் பெரும்பாடு தமிழ் படும் பாடு.

'எங்கும்தமிழ்' 'எதிலும் தமிழ்'என்பது தமிழுணர்வாளர்களின் உயர் முழக்கம். ஆட்சிமொழி, கல்விமொழி, நீதிமன்ற மொழி, வணிக மொழி, வழிபாட்டு மொழி, இசை உள்ளிட்ட கலைமொழி என்று தமிழர் வாழ் வியல் அனைத்திலும் தமிழே- தமிழ் மட்டுமே முழுமை பெற வேண்டும் என்பது இதன் பொருள். மகாகவி பாரதியார் தொடங்கி நூற்றாண்டுக் காலமாக நடைபெற்றுவரும் தமிழியக்கக் கருத்துகள், கோரிக்கைகள் எந்த அளவில் நிறைவேறியுள்ளன என்பது பற்றிச் சிந்தித்தால் வேதனைதான் மிஞ்சும்.

1. இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஏன் உலகத்திலேயே தமிழ் நாட்டில் மட்டுமே தாய்மொழியை (தமிழை) ஒரு பாட மொழியாகக் கூடக் கற்காமல் பிறமொழி மட்டுமே படித்துப் பட்டம் பெற முடியும். ஆனால் கர்நாடகத்தில் வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகளும் கன்னடமொழி கட்டாயம் பயில வேண்டும். தமிழகத்துத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு, தமிழ் கட்டாய மில்லை.

2. அரசாணைகள் அறிவிக்கப்பட்டும், தலை நகர் சென்னையில் அலுவலகங்கள், வணிக நிலையங்களின் பெயர்ப் பலகைகளைப் பார்த்தால் இது தமிழகுமா? இங்கிலாந்தா? என்று ஐயப்படும் அளவுக்கு ஆங்கிலம் மட்டுமே பட்டொளி வீசும் பலகைகளைக் காணலாம். ஆங்காங்கே ஓரிருவர் தமிழிலும் சிறிய அளவில் பெயர்களைப் பொறித் துள்ளவர்கள். அண்டைமாநிலத் தலைநகர் பெங்களூர்சென்று பாருங்கள்! கன்னடத்தில் மட்டுமோ, கன்னடம் ஆங்கிலம் இரண் டிலும் சம அளவிலோ பெயர்ப்பலகைகளை எழுதிவைத்துள்ளார்கள்.

3. அடிக்கல்விமுதல் முடிக் கல்வி முடிய பயிற்று மொழி தமிழே எற்போம். ஆனால் கலைக்கல்லூரி அளவில் கூட, தமிழ் முழுமை யாகப் பயிற்று மொழி ஆக வில்லை. இருசாதிப் பட்டதாரிகள்; தமிழிற் கற்றவர் தாழ்ந்தவர்; ஆங்கிலத் தில் படித்தவர் உயர்ந் தவர் எனும் நிலை, மழலையர் பள்ளி அளவிலாவது தமிழ் மட்டுமே பயிற்று மொழி, ஆங்கிலம் ஒருபாடமொழி என்று கொண்டு வர முடிகிறதா? 'மம்மி' 'டாடி' கலாச்சாரம் நாளுக்கு நாள் வளரத் தானே செய்கிறது! பள்ளிநேரத்தில் வளாகத்தில் தமிழில் பேசினால் தண்டனை தரும் பள்ளிகளும் காண்கிறோம்.

இவைபோன்று மனக்குமுறல் எத்தனையோ இருக்கின்றன. ஆயினும் நான் இப்போது இந்த வகை ஆய்வில் விரிவாகச் செல்லாமல் தமிழ், இருக்கும் இடத்தில் என்னபாடு படுகிறது என்பது பற்றிச் சில வற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கற்றவர், கல்லாதவர், இலக்கிய வாதி, எழுத்தாளர், பேச்சாளர், வானொலி, தொலைக் காட்சி என்று அவரவரும் தம் பங்குக்குத் தம்மால் இயன்ற அளவு தமிழ்க் கொலை புரிவதைத் தடுக்க முடிய வில்லை. எழுத்துப் பிழை, கருத்துப்பிழை, காலப்பிழை என்ற தவறுகளால் தமிழைச் சிதைத்துவருதல் கண்கூடு.

ஓவியர், பலகைஎழுதுவோர் இவர்க் கெல்லாம் மொழியறிவு முழுதாய் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் மொழியறிவு படைத்த ஒருவர் பார்த்துச் சரி செய்யத்தக்க ஏற்பாடுகள் வேண்டுமன்றோ? ஆங்கிலத்தில் ஓரேழுத்துப் பிழையாக எழுதினால் எவ்வளவு ஏளனம் செய்து சிரிக்கின்றோம். தமிழை மட்டும்

எப்படியும் எழுதலாம், பேசலாம் என்று ஏன் விட்டு விட்டோம்!

பாதிதமிழ், பாதி ஆங்கிலத்துடன் நுனிநாக்கு ஆங்கிலப் பணியில் தமிழ் பேசும் தொலைக் காட்சி வருணனையாளர்கள். நிகழ்ச்சி என்பதை நிகழ்ச்சி என்று சொல் வதைவிடமாட்டார்கள் போலும்! செய்தி படிப்பவர்கள் லகர,ளகர, ழகர பிழைகளோடு, வாக்கியங்களையும் சிதைக்கும் கொடுமை கொஞ்சமன்று, எடுத்துக்காட்டாக

அடையார் பேக்கரி என்று விளம்பரப் பலகை பார்க்கிறோம். இது, அடையமாட்டார் ரொட்டிக்கடையா? அடையாறு அடையார் ஆனது போலவே, செய்யாறு, செய்யார் (செய்யமாட்டார்) ஆழியாறு, ஆழியார் (கடலானவர்) திருவையாறு, திருவையார். (திருவையானவர்) கயத்தாறு, கயத்தார் (குள மானவர்) என்றாகிவிட்டன. ஆறுகள் பெயரால் அமைந்த ஊர்கள் போலவே ஆறுகளின் பெயர்களும், வெட்டாறு, வெட்டார் (வெட்ட மாட்டார்) ஓடம் போகிறது. ஓடம் போக்கியார் (ஓடம் செலுத்தியவர்) கோரியாறு, கோரையார் என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளன. தஞ்சையில் ஓடம் புது ஆறு, புதார் என்றே இன்னும் எழுதப்பட்டுள்ளது.

ஓட்டுதல், நடத்துதல், அனுப்புதல், பெறுதல் என்பன தொழிற் பெயர்கள். இவற்றின் பகுதிகளோடு 'நர்' எனும் விகுதி சேர்த்து ஓட்டுநர், நடத்துநர், அனுப்புநர், பெறுநர் என் றெழுதும் பழக்கம் ஏற்பட்டது. இன்று இதன் அடிப்படை தெரியாமல் ஓட்டுனர் (ஓட்டுன்+அர்) நடத்துனர் (நடத்துன்+அர்) என்று பொருளற்ற சொற்களாக்கி விட்டார்கள்.

அருகில் (சமீபத்தில்) என்னும் கருத்தில் அருகாமையில் என்று பேசியும் எழுதியும் வருகிறோம். அருகு+ஆ+மை எனப்பிரித்து (ஆ-எதிர்மறை இடைநிலை) அருகில் இல்லை, தொலைவில் என்று பொருளாகிவிடுவதை எண்ணிப் பாருங்கள். அருகில் ஒருகால், அருகு+அண்மை+அருகண்மை (மிகஅருகு) என்பது அருகாமை ஆகியதோ மற்றொன்று: முயற்சிக்கிறேன் என்று பலரும் சொல்கிறார்கள். முயற்சி என்பது ஒரு தொழிற்பெயர். முயல்கிறேன் அல்லது முயற்சி செய்கிறேன் என்று தான் சொல்ல வேண்டும். நடத்தல் தொழிற்பெயரை நடத்தலிக்கிறேன் என்று சொல்வோமா? நடக்கிறேன் என்றுதானே சொல்வோம்.

'உம்' என்பது ஓர் இடைச்சொல், இதனை நானும் அவனும், பூரியும், கிழங்கும் என்பது போல இணைப்புச் சொல்லாகப் பயன்படுத்தலாம். தாயினும் சிறந்த நாயினும் இழிந்த என்றபடி உயர்வு இழிவுகளைச் சுட்டப் பயன் படுத்தலாம். ஆனால் இன்று பலரும், 'வரும்போது பணம் எடுத்து வரவும்'' அவரையும் அழைத்துக் கொண்டு வரவும் என்றெல்லாம் எழுதுகிறார்கள். பேசுகிறார்கள். பணம் எடுத்து வருக! அழைத்து வருக! என்றுவியங்கோளாக போவ, பணம் எடுத்து வர வேண்டும், அழைத்து வரவேண்டும் என்று கட்டளையாகவோ எழுதுதல் பேசுதல் தான் முறையாகும். வரவும், போகவும் என்பன தவறானவை, இன்னோன்று இனிப்புக்கள் வழங்கப்பட்டன; கருத்துக்கள் பேசப் பட்டன; தலைப்புகள் தரப்பட்டன என்கிறோம் இவை என்ன கள்? இயல்பாக இனிப்புகள், கருத்துகள், தலைப்புகள் என்றே எழுதிடப் பேசிட வேண்டும்.

இதே நிகழ்ச்சி, இன்னொரு நகரில் நடந்தது. அறில் ஒரு திருக்குறள் கண்டு கேட்டு உண்டு, உணர்ந்து என்று தவறாகச் சொல்லப் பட்டது.

'கண்டுகேட்டு, உண்டு' உயிர்த்து உற்றறி யும் ஐம்புலனும் ஒண்டொடிக் கண்ணே உள'' என்பதுதிருக்குறள்.

உயிர்த்து என்பதை உணர்ந்து என்று உரைத்ததுபிழை. ஐம்புல இன்பமும் பெண்

நாடுகாக்க முந்துவோம்!

பே.ஆ. தமிழ்மறவன் கோலாலம்பூர் - மலேசியா.

கருமேகம் கலைவதுபோல் கருவறை விலகுது
கணக்கற்ற மேடுபள்ளம் வாழ்வுசிறக்க மூடுது!
உருபெறவே பன்னாட்டுத் தமிழுறவு தேடுது
உலகத்து தமிழரெல்லாம் ஓரணியில் திரளுது!

எதிர்கொள்ளும் சவாலுக்கு ஏணியாக இருக்கவும்
எழில்மணிக் கரங்கூப்பி இருபத்தொன்றை வணங்குவோம்!
புதிர்போட்டு வாழ்ந்தகாலம் இனி நமக்கு வேண்டாமே
புத்தெழில் உணர்ச்சிக்கிடை ஊரோடு சேருவோம்!

புதுஉலகு காண்பதற்கு புடம்போட்ட தங்கமாய்
புத்தாடை சுற்றிவந்து கலைபலவும் கற்கவே!
எதுவரினும் நிமிர்வளப் பாற்றொடை ஆகியே
எதிர்காலம் சீர்மைபெற இதயமீந்து வாழ்குவோம்!

அமுக்கப்பெறும் நீதிதனை அரங்கத்தில் ஏற்றியே
அடிதொடையில் ஆக்கம்பெற்ற கவிதைவரி பாயுது!
அமுதான தமிழுடுத்தி இதயமெலாம் நிமிரவே
தீயசக்தி யுள்ளோரையெலாம் இடுப்பொடிய வைக்குது!

உச்சிமீது வானுமீனும் ஒடிந்துவீழ் வதாகவே
அச்சப்பட்டு கூறிவந்த மாயமெலாம் மறையவும்
இச்சகத்தி லோரெல்லாம் அறிவியலைக் கற்றுமே!
நமதுசக்தி உழைப்பினூடே நாலுபேரை சேர்போமே!

அறிவியக்க தொழில்நுட்பம் அன்றாடும் பெறுகுது
தீப்பிழம்பு சுட்டெரிக்க தீயவழி நடையாமோ!
பொறிதட்டும் மக்களுக்கு பட்டறை செய்தியினை
பாங்குடனே சொல்லியினி படிப்பறிவை ஊட்டுவோம்!

புதியதொரு சமுதாயம் பூக்குமென நாமினி
புறமிருந்து பார்ப்பதல்ல அறிவுடையோர் வேலை!
சதிராடும் சாதிமதச் சழக்கர்களைத் குருத்தவே
பன்னாட்டுத் தமிழுறவில் சங்கல்பம் கொள்ளுவோம்!

கண்விழித்து நிலமகளைக் காப்பதற்கே நாளும்
கடும்பணியாய் போர்கோலம் பூண்டுவிட்டோம் பாரீர்!
அண்டையிலே நமதுஇனம் படும்துயரம் பார்த்தும்
அண்டுகின்ற உரிமைகூட தமிழனுக்கு இல்லையே!

இன்றிங்கு கூடுகின்ற மாநாட்டுத் தமிழர்
இன்னல்யாவும் தீரவேண்டி சங்கொலிக்க வேண்டும்!
முன்னேற்றப் பாதையிலே போர்பரணி பாடியே
முக்கனியாய் ஓரணியாய் நாடுகாக்க முந்துவோம்!

ணிடம் உண்டு எனும் கருத்தில், கண் என்பது இப்பொருளில் வந்ததை, கண் (பார்வை) உறுப்பாகக் கொண்டு இதில் பேசப்பட்டதும் பெரும் பிழை. புகழ்மிக்க இயக்குநர் ஒருவரின் சின்னதிரை ஓவியத்தில் (தொடரில்) ஒரு பாத்திரம் வாயிலாக இதழ் குவியாமல் சொல்லக் கூடிய திருக்குறள் என்று யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன் எனும் குறள் சொல்லப்பட்டது. நோதல் என்று உச்சரிக்கும் போது இதழ்குவியலே செய்யும். சரியான திருக்குறள்,

எய்தற்கரிய இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் என்பதாகும்.

இவ்வாறு மக்கள் தொடர்பு சாதனங்கள் பிழையான கருத்துகளைத் தந்து கொண்டிருப் பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், தமிழ் ஆங்கிலம் கலந்து பாடல்கள் எழுதுவோரும் அந்தக்கால மணிப் பிரவாள நடை போல, வேண்டுமென்றே, 'ப்ரியமுடன்' என்றும் ஸ்நேகம்' என்றும் எழுதுகிறார்கள். இன்னும் ரத்த புஷ்பங்கள், ஸ்பரிச ஸ்லோகங்கள் மனசில் ரணங்கள், அக்கினிஜீவாலைகள் என்றெல்லாம் தமிழிற் கலந்து மொழியைச் சிதைக்கிறார்கள்.

☆

தமிழ் உலக மொழியா?

-பேராசிரியர் முனைவர் இ.ஜே. சுந்தர்-

உலக மொழி என்ற தகுதியையும் சிறப்பையும் பெற, ஒரு மொழி கீழ்க்கண்டவாறு அமைதல் வேண்டும்.

அ. உலகம் முழுவதும் பரவலாக, மக்கள் அம்மொழியைப் பயன்படுத்த வேண்டும்.

ஆ. இலக்கிய இலக்கண செழுமை அம் மொழிக்கு அமைந்திருக்க வேண்டும்.

இ. அனைத்து வகைச் சிந்தனைகளையும், அனைத்துத்துறை கருத்தாக்கங்களையும் வெளிக்கொணரும் ஆற்றலை அம்மொழி பெற்றிருக்க வேண்டும்.

ஈ. மக்கள் வழக்கில் நீண்ட காலம் அம்மொழி புழங்கி, பண்பாட்டு அனுபவங்களை உள்வாங்கி நிறைந்த சொல்லாட்சியைக் கொண்டிருக்க வேண்டும்.

உ. நவீன செய்தித் தொடர்பு சாதனங்களை இதழ், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், கணினி இவற்றில் பயன் படுத்தப்படும் அளவுக்கு நெகிழ்ச்சியையும், தன்னைக் காலத்துக்கேற்ப புதுப்பித்துக் கொள்ளும் மறுமலர்ச்சியையும் உடைய தாய் விளங்க வேண்டும்.

ஊ. அம்மொழி பேசாத பிற மக்கள் அம் மொழியின் சிறப்புக்குச் சான்றுரைக்க வேண்டும்.

இந்த ஆறு தகுதிகளும் உடைய மொழிகள் உலகில் மிகச் சிலவே. இத்தகுதிகள் அனைத்தும் தமிழ் மொழிக்கு உள்ளது என்பதை கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

540 கோடி உலக மக்கள் 2796 மொழிகளைப் பேசுகின்றனர். இதில் 10 லட்சம் பேருக்குமேல் பேசும் மொழிகள் ஏறத்தாழ 160 மட்டுமே. ஏழரை கோடி பேரின் தமிழ் இந்த உலக வரிசையில் 17-வது இடத்தில் உள்ளது. உலகின் ஆறு கண்டங்களில் பரவியுள்ள தமிழ் பேசுவோரின் எண்ணிக்கை வருமாறு:

நேபாளம்	500
இராக்	1,000
கம்போடியா	1,000
பிலிப்பைன்ஸ்	1,000
ஜிபுட்டி	1,000
லாவோஸ்	1,500
ஸ்பெயின்	1,500
பின்லாந்து	2,000
வியட்நாம்	2,000
தாய்லாந்து	3,000
ஹாங்காங்	3,000
போர்த்துக்கல்	3,500
காடார்	4,000
ஜோர்டான்	4,000
இத்தாலி	5,000
பஃரெயின்	5,000
ஓமான்	7,000
நார்வே	7,000
சீசெல்சு	7,540
ஸ்வீடன்	9,000
எமிரேட்ஸ்	10,000
கயானா	10,000
குவைத்	10,000
நியூசிலாந்து	10,000
டென்மார்க்	12,000
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	25,000
சவூதி அரேபியா	25,000
ஸ்விட்சர்லாந்து	30,000
ஜெர்மனி	49,000
இந்தோனேஷியா	50,000
ஆஸ்திரேலியா	75,000
சுரிநாம்	1,00,000
பிரான்சு	1,00,000

மொரிஷியஸ்	1,10,000
சிங்கப்பூர்	1,20,000
கனடா	1,50,000
மியன்மார்	2,50,000
பிரிட்டன்	3,00,000
இறியுனியன்	3,50,000
பிஜித் தீவுகள்	4,00,000
தென் ஆப்பிரிக்கா	6,00,000
மலேசியா	16,00,000
ஸ்ரீலங்கா	50,00,000
இந்தியா	6,11,00,000
மொத்தம்	**7,05,46,540**

உலகின் முக்கிய பல்கலைக் கழகங்களில் தமிழ் சொல்லித் தரப்படுகிறது. பல இனத்தவரும் இம்மொழியை விரும்பிக் கற்கின்றனர். உலகத் தமிழ் மாநாடுகள் கடந்த 40 ஆண்டுகளாக உலகின் பல நகரங்களில் நடத்தப்பட்டு பல நாடுகளைச் சார்ந்த தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வம் உடைய பல நாட்டு கலைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தும் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் யுனெஸ்கோ ஆதரவு அமைப்பாக அங்கீரிக்கப்பட்டு உள்ளது.

இந்தியாவிற்கு வெளியே பல நாடுகளில் தமிழ், அந்நாட்டு அரசுகளின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

சிங்கப்பூர் அரசு தமிழை ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்றுள்ளது. மலேசிய அரசு தமிழை அந்நாட்டின் பயன்பாட்டு, மொழியாக அங்கீகரித்துள்ளது. ஸ்ரீ லிங்காவில் தமிழும் ஒரு தேசிய மொழியாக உள்ளது. மொரேசியஸ், சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, ஆகிய நாடுகளின் நாணயங்களில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

மூவாயிரம் ஆண்டு கால இலக்கியமும், இலக்கணமும் தமிழில் உள்ளன. திராவிட மொழிகளிலேயே மூத்த முதல் மொழி தமிழ் என்பதால் அது உயர் மொழியாகிறது. எந்த மொழியின் துணையின்றியும் தன் சொல் ஆற்றால் நிற்கும் தகுதிப் படைத்தது என்பதால் அது தனி மொழியாகிறது. ஆயிரக்கணக்கான தேர்ந்த இலக்கியங்களைக் கொண்டிருப்பதால் அது செம் மொழியாகிறது. இத்தகுதிப் படைத்த உயர் தனிச் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீன், வடமொழி போன்றவை எவையும் இன்று மக்கள் வழக்கில் இல்லை. பழமைக்கும், புதுமைக்கும் பாலமாய் விளங்கும் ஒரே உயர் தனிச் செம் மொழி தமிழ் மட்டுமே ஆகும்.

இந்தியாவில் தோன்றிய சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்களின் இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அதே போல இங்கு நுழைந்து கிறித்துவ, இசுலாமிய சமயங்களின் சிறந்த இலக்கியங்களும் தமிழில் காணப்படுகின்றன. எவ்வகைச் சமயத்தாரும் தம் மொழியாக தமிழைக் கொண்டாடுகின்றனர். ஆறுவகைச் சமயங்களின் சிறந்த தமிழ் இலக்கியங்கள் சில வருமாறு

சைவம் திருவாசகம், வைணவம் கம்ப ராமயணம்; சமணம் - சீவகசிந்தாமணி; பௌத்தம் - மணிமேகலை; கிறித்துவம் தேம்பாவணி; இசுலாம் - சீறாப்புராணம்.

பதினென் சித்தர்கள் ஆழமான அறிவியல், ஆன்மீக தத்துவார்த்தக் கருத்துகளைத் தமிழில் விளக்கியுள்ளார். இயல், இசை, நாடக நூல்கள், தமிழில் நிறைந்துள்ளன தொல்காப்பியம் என்ற இலக்கண நூல், அறிவியல் உண்மைகள் பலவற்றை 3000 ஆண்டுகட்கு முன்பே எளிதாக விளங்கியுள்ளன. சித்த மருத்துவம், சோதிடம், கணிதம், வானவியல், கட்டடக்கலை போன்ற பலதுறை நூல்கள் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுதப்பட்டுள்ளன. நவீன மருத்துவக் கல்வியைக் கூட கடந்த 150 ஆண்டுகளாக ஸ்ரீ லங்காவில் தமிழ் வாயிலாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இன்றைய எல்லாத் துறை நூல்களும் தமிழில் மலிந்துள்ளன.

அணுவைத் துளைத்து ஏழு கடலை உள்ளே திணிப்பதுபோல மிக நுட்பமான வாழ்வில்

உண்மைகளைத் திருக்குறளின் ஒன்றே முக்கால் அடிச் செய்யுட்கள் சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதற்கு ஏதுவாக தமிழ் மொழி வலிமைப் படைத்துள்ளது.

மூவாயிரம் ஆண்டுகளாக இடைவிடாமல் தமிழ் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வாழ்வின் எல்லா வகையிலும் பயன்படுத்தப்பட்டும் வந்திருப்பதால் தமிழில் ஒரு லட்சத்திற்கும் மேல் சொற்கள் உள்ளன. அரி என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் 109 பொருள்கள் உண்டு. பூவின் ஒவ்வொரு நிலையையும் காட்ட அரும்பு, போது, மலர், அலர், வீ, செம்மல் ஆகிய ஆறு சொற்கள் உண்டு. உலக மொழியாக எனப்படும் ஆங்கிலத்தில் Bud, Flower ஆகிய இரண்டு சொற்களுக்கு மேல் இல்லை. பெண்களின் பலவகைப் பருவத்தை விளக்கபேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை ஆகிய ஆறு வகைச் சொற்கள் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் girl, women ஆகிய இருசொற்காளால் மட்டுமே இந்த ஆறு பருவங்களைச் சுட்ட முடியம். யாசிப்பவன் கேட்பதற்கு 'ஈ' என்ற சொல்லும், சமநிலையில் இருப்பவன் கேட்பதற்கு 'தா' என்ற சொல்லும், உயர்நிலையில் கேட்பதற்குக் கொடு என்ற சொல்லும் அமைந்து வேறுபடுத்திக் காட்ட முடியும். தமிழில் ஏராளமான மரபுத் தொடர்களும் (Idioms) சொற்றொடர்களும் (Phrases) பழமொழிகளும் (Proverb) உள்ளன.

கற்களில் செதுக்கப்பட்ட காலத்திலிருந்து கணினியில் பயன்படும் காலம்வரை தமிழ் தன்னைப் புதுப்பித்து கொண்டே வந்திருக்கிறது. தமிழ் எழுத்தின் வரி வடிவம் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் ஏறத்தாழ பத்து முறை புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன! அயல் மொழிச் சொற்கள் தமிழில் நுழைய திசைச் சொல் என்ற ஒரு பாகுபாட்டை அமைந்துள்ளார்கள். தமிழில் ஒலி மரபுப்படி அயல் மொழிச் சொற்களை தமிழ் தம் வயப்படுத்தி தன்னிலை பிறழாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. ஆசியாவிலேயே முதல் முறையாக கி.பி.1555 லேயே முதல் தமிழ் நூல் அச்சு வாகனமேறியது. 18ம் நூற்றாண்டிலேயே தமிழ் இதழ்கள் தோன்றின. திரைப்படம் கண்டுபிடிக்கப்பட்ட சில ஆண்டுகளில் நாடகத் தமிழ் திரைப்படத்திற்குள் நுழைந்து, அதன் சகல உத்திகளையும் தன் மொழிக் கூட்டுக்கள் அடைத்தது. அதிகமான திரைப்படம் எடுக்கப்படும் மொழிகளில் தமிழும் ஒன்றாகும். உலகம் முழுவதும் தமிழுக்காக 100க்கும் மேற்பட்ட வானொலி, தொலைக்காட்சி, அமைப்புகள் இயங்கி வருகின்றன. இன்று கணினி நுட்பத்திலும் கடைத்தேறிய தமிழக்கு மூவாயிரம் இணையத் தளங்கள் இயங்கி வருகின்றன.

இந்திய உலக மொழிகளில் கணினியின் பயன்பாட்டிற்கு வசமாக அமைந்துள்ள மொழி தமிழ் என்று இந்திய அறிவியலார் சங்கம் சான்றுரைத்துள்ளது.

தமிழ் மொழியில் கவரப்பட்டு, அந்த மொழியைக் கற்று, அம்மொழியை உலக மக்கள் அனைவரும் அறிந்தும், பயன்படுத்தியும் மகிழ வேண்டுமென பல நாட்டு அறிஞர்கள் பலரும் பரிந்துரைத்துள்ளனர். அவர்களில் சிலரின் பரிந்துரைகளைப் பார்ப்போம்.

வின்ஸ்லோ: செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியினையும், இலக்கியப் பெருமையில் இலத்தின் மொழியினையும் வெல்ல வல்லது தமிழ் மொழி. அதன் பெயரே இனிமை என்ற பொருள்படுவதற்கு ஏற்ப அதனிடத்தில் கேட்டாரைத் தன் வயமாக்கும் இனிமைப் பொருந்தியிருப்பதற்கு ஐயம் இல்லை.

டெய்லர் : "நிறைந்து, தெளிந்து, ஒழுங்காய் உள்ள மொழிகளுள் தமிழ் மிகவும் சிறந்த தொன்றாகும்"

கிரியர்ஸன்: திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகத் தொன்மை வாய்ந்ததும், பெரு வளம் பொருந்தியதும் ஆகும். அவற்றில் ஒன்றை பண்டைகாலம் பயிற்சி பெறுவதும் ஆகும். ஸ்லேட்டர்: திராவிட

தமிழரும் தரணியும்

எஸ். இளங்கோவன்

தன்மானத்தைக் கருதவில்லை
தமிழதையேக் கருதுகின்றீர்!
தமிழனால் உயர்வு பெற்றீர்!
தலைவரென்றே பெயரும் பெற்றீர்!
தமிமாக வாழுகின்றீர்
தன்மானங் கருதாமல்!
தளராது நடந்தீர்! உழைத்தீர்!
தலைவணங்காமல் மனம் பிழைத்தீர்!
பதவிக்காகப் புகழவில்லை!
தமிழர் உணர்வுக்கே இடமேதந்தீர்!
பழிவசினும் அஞ்சிடாமல்
தமிழ் மகனைப் புகழ்ந்திட்டீரே!
தமிழுக்காகப் புகழ்ந்திட்டீரே!
பணத்திற்கா விற்றீர் உம்மை
குணத்திலே சிறந்திட்டீரே!
தமிழரை ஒன்று சேர்த்தல் தரணியில் முடியாதைய்யா!
இமயத்தை வென்றிடலாம் தமிழரையா ஒன்று சேர்ப்பீர்!
தமிழர் மட்டும் ஒன்று சேர்ந்தால் தரணியே
வணங்கிடுமே! குறளையே வாழ்த்திடுமே

எந்நாடு சென்றாலும் எம் தமிழர் மாறுவரோ?

- கி.ஞானதேவ்

- மண்விட்டு மனம் விட்டு
உடல் மட்டும் வேற்றூரில்
வாழும் மக்கள் இவர்
வண்டமிழை விட்டு மட்டும்
வாழவில்லை.

- கணிப்பொறியின் மொழிதொட்டு
கன்னித்தமிழ் பின் தொட்டு
கணினிக்கு மென்பொருளைக்
கண்டு விட்டார்.

- தாழயர்ந்து வாழ்தல் போல்
தமிழரெலாம் உயர்வுறவே
இணையத்தின் மூலமாய்
இணைந்து விட்டார்.

- பன்னாட்டுத் தமிழுறவு
மன்றம் மூலம்
பைந்ததமிழை, பண்பாட்டை
போற்றி நின்றார்.

மொழிகள் எல்லாவற்றும் மக்கள் பேசும் மொழிக்குரிய தன்மையை மொழி தாய்மொழி. மொழி; தர்க்க அமைப்புடையதும் தமிழ் மொழியே.

மாக்ஸ் முல்லர் : தமிழ் மிகப் பண்பட்ட மொழி, தனக்கே உரியதாக இயல்பாய் வளர்ந்து சிறந்த இலக்கியச் செல்வம் உள்ள மொழி.

பியேர் லொத்தி: மற்ற எந்த மொழியும் வரிவடிவம் அடைவதற்கு முன்னமே தமிழ் எழுதப்பட்டு வந்தது. தமிழின் எழுத்து முறை முழுத்தன்மை உடையது. முதல் தன்மையும் உடையது; இந்த எழுத்துமுறை திடீரென ஏற்பட்டதன்று; இலக்கணப் புலவர் ஒருவரின் அல்லது புலவர் கூட்டம் ஒன்றின் நுண்ணறிவுள்ள நெடுங்காலப் பணியின் பயனாய் அமைந்ததாகும்.

டாக்டர் G.U. போப் என்ற ஆங்கிலேயர் தமிழ் கற்று அதில் தம்மை முழுமையாக இழந்தவர். தம் கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவர் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். என்று எழுதும்படி உயில் எழுதி வைத்தார்.

இன்றைக்கு அமெரிக்க அறிவியல் உலகம் தமிழை உலக மொழியாக ஏற்றுக் கொண்டதற்கு சான்றாக ஒரு நிகழ்ச்சி நடை பெற்றுள்ளது. வேறு கோள்களில் நம்மைப் போன்ற அறிவார்ந்த உயிர்கள் இருக்கக்கூடும் எனக் கருதி அவர்களுடன் தொடர்பு கொள்ள அமெரிக்கா, பயனீர் 4 என்ற விண்கலத்தை விண்வெளியில் ஏவி உள்ளது. விண்வெளி மனிதர்கள் புரிந்து கொள்ள வசதியாக உலகின் சிறந்த சில மொழிகளைத் தேர்ந்தெடுத்து நம் உலகைப் பற்றிய செய்திகளை அதில் பதிவாக்கியுள்ளனர்.

இந்த பயனீர் 4. விண்கலத்தில் நம் தமிழும் விண்ணவருடன் தொடர்பு கொள்ளும் முக்கிய மொழியாக இடம் பெற்றுள்ளது.

தமிழ், இந்த உலகை பிரதிநிதிக்கும் மொழி மட்டுமல்ல; பேரண்டங்கள்புரிந்து கொள்ளும் மொழியாகவும் கருதப்படுகிறது.

☆

ஆட்சி மொழி தமிழ்

-முனைவர் மலையமான்-

மொழி என்பது 'பேசு' என்ற பொருள் தரக்கூடிய 'மொழி' என்ற வினைச் சொல்லின் முதல் நிலைத் தொழிற் பெயர். ஆங்கிலத்தில் கூறப்படும். இச்சொல் "Lingua" என்ற இலத்தின் சொல்லிலிருந்து பிறந்தது. இந்த இலத்தீன் சொல்லுக்கு ''நாக்கு'' என்பது பொருள். எனவே தான் "Lingua-Franka" என்றாலும் "Mother tongue" என்றாலும் ''தாய் மொழி'' என்ற பொருள் கிடைக்கிறது. வினைச் சொல்லே பெயர்ச் சொல்லுக்கு முன் பிறந்தது எனப்படுகிறது. எனவே, நாக்கு என்ற பெயர்ச் சொல்லின் அடிப்படையில் தோன்றிய அயல்மொழிச் சொல்லைவிட, 'மொழி' என்ற வினைச் சொல்லினை அடிப்படையாகக் கொண்ட தமிழ்ச் சொல் காலத்தால் மூத்தது எனலாம். இதன் மூலம் தமிழின் தொன்மையைக் குறிப்பாக உணர்தல் இயலும்.

ஓர் இனத்தை அழிக்க விரும்புவோர், அந்த இனத்தின் மொழியை ஒழித்துவிட்டால் அவர்களின் எண்ணம் எளிதில் நிறைவேறி விடும். பிரான்சு நாட்டில் வாழ்ந்த 'கால்' இனத்தவர் தம்மொழியை ஒதுக்கி பிரெஞ்சு மொழியை ஏற்றனர். அதனால் அந்த இனம் மெல்ல அழிந்தது இன்று. அமெரிக்காவில் வாழ்ந்து வரும் நீக்ரோ இனத்தவர் தம்மொழியைத் துறந்தனர். ஆங்கிலத்தை ஏற்றனர். தம் தனித் தனிமையை இழந்தனர். மொழி ஒற்றுமையை ஊட்டும் இனத்தின் தன்மையைக் காட்டும், அவ்வினத்தின் பண்பாட்டையும் காக்கும். ஆகவே, ஓரினத்தின் மொழி அழிக்கப் பட்டால் இனத்தின் ஒற்றும், சிறப்பியல்பு, பண்பாடு யாவும் அடியோடு அழிந்து விடும்.

எனவே தான் தென்அமெரிக்கப் பழங்குடி மக்கள் பிரிவினரில் சிந்தனை மிக்கவர்கள் தங்கள் மொழிகாக்கும் முயற்சியில் இன்று ஈடுபட்டுள்ளனர்.

அயல் நாடுகளில் 99 விழுக்காடு தாய் மொழியே ஆட்சி மொழியாக உள்ளது. ஜப்பான் நாட்டில் ஜப்பான் தவிர, வேறு மொழிக்கு சிறப்பிடம் இல்லை. பிரான்சு நாட்டில் தாய் மொழிக்கே தலைமை நிலை இருக்கிறது. வேற்று மொழி திணிப்பு எங்கும் எதிர்க்கப் படுகிறது. முந்தைய கிழக்குப் பாகிஸ்தானத்தில் வங்க மொழியே மக்களின், கல்வி மொழி நிலைபெற்றிருந்தது.

அங்கே கல்வித்துறையில் தாய் மொழியை வெளியேற்றி விட்டு, பாகிஸ்தானத்தின் ஆட்சி மொழியான உருது திணிக்கப்பட்ட போது போராட்டம் வெடித்தது. முடிவில் கிழக்குப் பாக்கிஸ்தான் மறைந்தது பங்காளாதேஷ் பிறந்தது.

''இந்தியாவின் ஆட்சி மொழி இந்தி. ஆனால், இது மாநிலங்களின் தாய் மொழி இடத்தைப் பிடித்துக் கொள்ளக் கூடாது. அங்கு ஆங்கிலத்திற்கு இடமே இல்லை ''என்று இந்திய நாட்டின் தந்தை என்று போற்றப்படும் அண்ணல் காந்தி அறிவித்தார். காந்தி அடிகளையே மறந்து விட்ட தாயகம், அவர் கோட்பாட்டையும் அடியோடு மறந்துவிட்டது.

தமிழ் ஆட்சிமொழி என்று ஆணை ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்பே பிறப் பிக்கப் பட்டது. அதன் பின் அடுக்கடுக்காக, தமிழ் ஆட்சிமொழிபற்றிய ஆணைகள் இரு நூற்றுக்கும் மேலாக வெளிவந்துவிட்டன. ஆனால், ஆட்சித் துறையின், நீதித்துறையிலும்; கல்வித்துறையிலும் தாய்மொழிதமிழுக்கு உரிய இடம் முழுமையான வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை.

தமிழகத்தில் பலமொழியினர்

தமிழ் ஆட்சிமொழியாக முழு அளவில் மலர்ந்து மணம் பரப்பாத நிலைக்குச் சில முக்கிய காரணங்கள் உள்ளன. தமிழகம்

அமைதிப்பூக்காடு என்பதாலும் தமிழர்கள் உலகிற்சிறந்த விருந்தோம்பும் பண்பினர் என்பதாலும் தமிழகம் ஒரு குட்டி இந்தியா என்ற கூறப்படும் நிலையில் பல மொழி பேசுவோர் இங்கு உறைகின்றனர். இவர்களுக்கு தம் தாய் மொழியை மங்காமலோ காத்து வருகின்றனர் ஆனால், இம் மண்ணின்மொழியைப் போற்றும் மனம் குன்றி உள்ளனர்.

ஆண்டை மாநிலமான கருநாடகத்திலும் பிற மொழியினர் உள்ளனர். ஆனால் பிற மொழி பேசுவோர் கருநாடகத்தில் வாழும் நிலையில் இருந்தாலும் அம்மாநிலத்தின் மொழியையே ஆட்சித் துறையிலும் கல்வித் துறையிலும் பயன்படுத்தியே தீர வேண்டும் என்ற கட்டாய நிலை அங்கே கொடி கட்டிப் பறக்கிறது.

அளவு மீறிய விருந்தோம்பல்

பிற மாநிலங்களில் மக்கள் தம் தாய் மொழியைப் போற்றுகின்றனர். வேற்று மொழியை சிறப்பாக ஆங்கிலத்தை வெறுக்கின்றனர். வடமாநிலங்களில் ஆங்கிலமே வெளியேறு என்று கொள்கை முழக்கம் பொதுமக்கள் வாயிலிருந்தே பிறந்து பரவிய நிலையும் இருந்தது. மண்ணின் மொழியை மதித்துப் பேசினால் தான் கடைக்காரனும் பொருளை விற்கும் நிலை இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் யார் எம் மொழியில் பேசினாலும் அவர் மொழியிலேயே தப்பும் தவறுமாக இருந்தாலும் பேசி வணிகம் புரிபவரே வாழ்கின்றனர். இதற்கு அளவுக்கு மீறிய விருந்தோம்பும் பண்பும் மொழியை விட வணிகமே பணமே முக்கியம் என்ற கொள்கையும் காரணம் ஆகும்.

ஆங்கில மோகம்

மற்ற மாநிலத்தவர் ஆங்கிலேயரிடமிருந்தும் ஆங்கிலப்பண்பாட்டிலிருந்தும் விடுதலை பெற்றனர். ஆனால் தமிழர்கள் 1947க்குப் பிறகு ஆங்கில மொழியின் கொத்தடிமைகளாகத் தாங்களே விரும்பி முன்வந்து மண்டியிட்டுவிட்டனர். (வடநாட்டு இதழ் ஒன்று தமிழரின் இவ்வழி நிலையைக் கேலி செய்திருக்கிறது) ஆங்கிலம் படித்தால் அறிவாளியாக விடலாம். அவனுக்கு விரைவில் வேலை கிடைக்கும் என்ற தவறாக கருத்துகளே இதற்கு மூலகாரணமாகும். ஆங்கிலம் வாழும் நாட்டில் முட்டாள்களும் இருக்கிறார்கள். திருடர்களும் இருக்கிறார்கள். காவல் நிலையங்களும் சிறைக் கூடங்களும் அங்கேயும் உள்ளன. என்பதைத் தமிழர்கள் ஏனோ மறந்துவிட்டார்கள்.

தாழ்வு மனப்பான்மை

தமிழகத்தின் மேல் 13 அயல் மொழி அரசர்களின் படைஎடுப்புகள் நடந்தன என்று 5 வரலாறு கூறும் பிற இனப்பண்பாடுகள் தமிழினைத்துடன் கலந்துவிட்டன. பல்லவர், மராத்தியர், முகமதியர், தெலுங்கர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சியின்கீழ் ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகம் அடிமைப் பட்டிருந்தது. பிற மொழயினருக்கும் பிற பண்பாட்டினருக்கும் அடங்கி அடங்கியே வாழ்ந்த தமிழரின் நெஞ்சில அடங்கிவாழும் தன்மையே குடிகொண்டு விட்டது. இது தாழ்வு மனப்பான்மைக்கு வழி அமைத்தது. தமிழைத் தாழ்வாக நினைப்பதும் பிறமொழிகளை மேலான்தாக மதிப்பதும் தமிழர்களின் இயல்பாகிவிட்டது. இது தமிழ் ஆட்சிமொழி முழுமையாக்குதற்கு பெருந்தடையாகிவிட்டது. தமிழரின் தாழ்வு மனப்பான்மையை மாற்ற வேண்டும். இதற்கு அரசியலாரும் அறிஞர்களும் ஆசிரியர்களும் அமைப்புகளும் பெரிதும் முயற்சி செய்ய வேண்டும்.

அலுவலர்கள்

ஆட்சித்துறை அலுவலகங்கள் இந்திய ஆட்சிப் பணியினரின் அடிக்கீழ்க் கிடக்கின்றனர். தமிழகத்தில் உள்ள இ.அ.ப. அலுவலர்கள் பெரும் பான்மையினர், பிற மாநிலத்தவரே, அவர்கள் ஆட்சித் தமிழுக்கு ஆதரவு தராமல் இருப்பது வியப்புக்கு உரியதல்ல. ஆனால் ஆட்சியமைப்பில் முடியும், ஆளப்படுவோரின் அடிநிலையும் நெருக்கினால் இ.ஆ.ப.வினர் தாமாக மாறி விடுவார்கள்.

முத்தமிழ் தோன்றச் செய்வாய்!

-வேலூர் க.பார்த்தசாரதி-

ஆங்கிலப் பாட திட்டம் அமைந்துளப் பள்ளி தன்னில்
தீங்கிலாத் தமிழும் கற்கத் திட்டமே அளிப்பாய்! கற்போர்
தாங்குவார் இலக்கி யத்தை! தமிழினில் பற்றே கொள்வார்!
மூங்கிலில் இசையை தோன்றும்! முத்தமிழ் தோன்றச் செய்வாய்!

துறைதொறும் தமிழில் கற்றால், துளிர்த்திடும் அறிவு! எங்கள்
இறைவனே முருகா! நீயே எழுதிடு புதிய சட்டம்!
மறையெனும் குறளே! நாடு மதித்திடும் நூலா கட்டும்!
நிறைகுடம் தளும்பி டாதே! நின்தமிழ் ஒளிவீ சட்டும்!

தமிழனே தமிழைத் தூற்றித் தரங்கெட வாழு கின்றான்
தமிழவேள் நீரே காத்துத் தகுவழி செய்வீர் ஐயா!
அமிழ்தெனும் தமிழே! கோயில் அர்ச்சகர் வாய்வ ரட்டும்!
உமிழ்ந்திடு எச்சில் மீண்டும் உதட்டினில் சேர வேண்டாம்!

விளம்பரப் பலகை எல்லாம் விழுமியத் தமிழா கட்டும்;
களம்பல கண்ட நீயே கருதிடில் செயலாய் மாறும்;
வளத்தமிழ் வேண்டுகின்றோம்! வறுமைதான் தமிழ்க்கே வேண்டாம்!
உளத்தமிழ் கவிதை செய்யும்! உயிர்த்தமிழ் நீயே வாராய்!

வேண்டுதல் தமிழா கட்டும்; வேதனை தூளா கட்டும்;
தூண்டுதல் தமிழா கட்டும்; துலங்குதல் தமிழா கட்டும்;
மாண்டனம் உணர்வே இன்றி; மதித்திடு தமிழை எங்கும்
ஆண்டசெந் தமிழே! உன்னை அழிப்பவர் அழிந்தே போவார்!

துதித்திடு தமிழே! இன்பம் தோய்ந்திடு தமிழே! நெஞ்சம்
மதித்திடு தமிழே! பாவால் மகிழ்ந்திடு தமிழே! ஏங்கிக்
கொதித்திடு உள்ளம் தன்னைக் குளிர்ந்திடச் செய்வாய்! சான்றோர்
பதித்திடு தமிழே! கந்தன் பதத்தினை தொழவே வாராய்!

வேலை தேடும் நோக்கம்

இன்று கல்வி, அறிவின் விரிவிற்கு உறு துணைக் கருவியாக கொள்ளப்பட வில்லை. அது வேலை வாய்ப்புக்கு பணம் ஈட்டும் தொழிலுக்கு உதவும் படித்தல் என்றே தீர்மானிக் கப்பட்டுவிட்டது. எனவே தமிழில் படித்தால் வேலை கிடைக்காமல் வயிறு காய்ந்துவிடுமே என்று இளந்தலைமுறையினர் அஞ்சுகின்றனர். அவ்வச்சம் நீக்கப்பட்டுவிட்டது. தமிழைப் படிக்கும் மாணவர் எண்ணிக்கை பெருகும்.

கல்விநிலை

மழலையர் பள்ளிகளில், படிக்கும் பிஞ்சு நெஞ்சுமாக வெகு ஆங்கிலம் தாய்மொழி யாகவும் அருந்தமிழ் அயல் மொழியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலை நீடிக்கு மானால், மொரீசியஸ், ரீயூனி, நாடுகளில் தமிழினத்தவர் வாழ்ந்து வந்தாலும் தமிழ் அழிந்து விட்டதுபோன்று நிலை தமிழகத்தி லேயே ஏற்பட்டுவிடும். வழக்கொழிந்த வடமொழியின் பின்னால் தமிழ், தலைகுனிந்து நிற்கும் நிலை ஏற்பட்டு விடும். இதை மாற்றி உடனடியாக முனைப்புடன் நடவடிக்கை மேற் கொள்ளுதல் வேண்டும். பட்டப்படிப்பு வரை தாய் மொழிக்கு முதன்மை தரப்பட வேண்டும்.

தமிழ் ஆட்சி மொழி பெற செய்ய வேண்டுவன

1. எல்லா நிலையிலும் தமிழிலேயே கல்வி கற்பிக்கப் பட வேண்டும்.
2. தமிழ் வழிப்படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை தரப்படல் வேண்டும்.
3. ஆங்கில மோகம் அறவே நீக்கப் பட வேண்டும்.
4. அலுவலர்களுக்கு பரிசு (அ) தண்டம் தரு வது, அவர்களை வழிக் கொணர வேண்டும்.
5. எயிட்சு நோய் பற்றி விளம்பரமும் செய்தி பரப்பலும் நடைபெற்றல் போல் தாழ்வு மனப்பான்மை நீக்க அனைத்து முயற்சி களும் மேற் கொள்ளப் பட வேண்டும்.
6. ஆட்சிமொழி ஆணைகளில் விதிவிலக்கு பற்றியவை அகற்றப்படவேண்டும்.
7. தமிழகத்தின் ஆட்சி மொழி தமிழ்தான் என்பதை எல்லா நிலை மக்களும் உணரும் படி செய்ய வேண்டும்.

இவை முறையாக நடப்பதற்கு அனைவரும் பாடுபடுதல் வேண்டும். ☆

தஞ்சை மண்ணில் கட்டடக் கலை

முனைவர் ந.வீர. அருணாசலம், முனைவர் கிருஷ்ணவேணி அருணாசலம்

முன்னுரை

தஞ்சை மாவட்டம் என்று எண்ணும்போது அதன் தனிச்சிறப்பாகிய கோயில்களும் குளங்களும் நம் கண்முன்னே தோன்றும். குறிப்பாக பெரிய கோயிலும் கல்லணையும் கட்டாயம் முன்னிலை வகிக்கும். தமிழனின் கட்டுமானத் திறமைக்கு இன்றும் சான்று கூறிக்கொண்டிருக்கும் கலைப் பொக்கிஷமாகும். ஆனால்...!

என்ன ஆனால் என்கிறீர்களா? இதோ! அதற்கான காரணம்.

யாராவது ஒருவர், போதுமான விவரங்களோடு பண்டைத் தமிழன் எவ்வாறு இக்கட்டடங்களைக் கட்டினான் என்று கூற முடியுமா? முடியாது! ஏனெனில் நம் முன்னோர்கள் செய்த தவறுகளில் இதுவும் ஒன்று. எதையுமே எழுதி வைக்கத் தவறிவிட்டார்கள். என்னையா! கதைவிடுகிறேன் என்கிறீர்களா! வாருங்கள் என்னோடு!

கல்லணை

தமிழ்நாட்டில் பொறியியல் அறிஞர்கள் பலர் மேல் நாட்டார்க்கு ஈடாக பணிபுரியும் திறமையோடு தோன்றியுள்ளனர்; இனியும் தோன்றுவர் என்பதில் ஐயமில்லை. அத்தகைய பொறியாளர்களில் ஒருவரான பொறியியல் திலகம் பேரறிஞர் மு. துரைராசன் என்பவரின் குமுறலைக் கொஞ்சம் கேளுங்களேன்.

அணை கட்டுவது எப்படி என்று தெரியாத காலத்தில் பொறியியல் கல்வி பூஜ்யமாக இருந்த காலத்தில், அணை கட்டுவதற்குப் பல வகைகளில் பயன்படும் பல்வேறு இயந்திரங்கள்.. இல்லாத காலத்தில் கல்லோடு கல்லையும், செங்கல்லோடு செங்கல்லையும் மற்றும் கல்லோடு செங்கல்லையும் உறுதியாக ஒட்ட வைக்கும் சிமெண்ட் என்னும் விசித்திரப் பொடியைப் பற்றிக் கேள்விப்படாத காலத்தில் இவ்வரும்பெரும் அணையை எப்படிக் கட்டினார்கள் என்ற வியப்பு மேலிட்டது -கல்லணை (பக்கம் 22)

இன்னும் கேளுங்கள்

... இத்துணை அபாயம் நிறைந்த ஆற்றில் யாதொரு விதமான பொறிகளின் உதவியில்லாமல் இதற்கு முன் அணை கட்டிய அனுபவ அறிவுமில்லாமல் எப்படி அணையைக் கட்டினார்கள் என்று தெரிய ஆவல் கொண்டேன். கல்லணையைக் கட்டிய வல்லமையைச் செப்பும் நூல்களோ, ஏடுகளோ, சுவடிகளோ, கரிகாலர் நெஞ்சுரத்தைப் பாடும் நாடோடிப் பாடல்களோ ஏதாவது கிடைக்காதாவென்று தேடினேன். தஞ்சாவூர் மன்னர் சரபோஜியின் புகழ்மிக்க சரஸ்வதி மஹால் நூலகத்தில் பல நாள்கள் தேடினேன். ஒன்றும் கிடைக்காது ஏமாந்தேன். கல்லணை (பக்கம் 26-27)

இப்பொறியியல் அறிஞர் கல்லணையைக் கரிகாலன் இப்படி கட்டியிருப்பானோ அல்லது அப்படி கட்டியிருப்பானோ என்று எண்ணுகின்றார். அந்த எண்ண ஓட்டத்தில் விளைந்த அவரது ஊக்கத்தை - இப்படித்தான் கட்டியிருக்க வேண்டும் என்று தன் நூலில் ''கல்லணை'' - எழுதுகின்றார் பொறியாளர் மு. துரைராசன்.

அக்காலத் தமிழனின் பொறியியல் அறிவு பூஜ்யம் என்பதையும், அணை கட்டுவது, கட்டடங்கள் கட்டுவது போன்றவற்றை அறியாதவன் தமிழன் என்பதையும் பல்வேறு இயந்திரங்களை அக்காலத்தில் தமிழன் பயன்படுத்தவில்லை என்று பொறியாளர் மு. துரைராசன் கூறுவதை ஒத்துக் கொள்ள என் மனம் ஒப்பவில்லை. இருந்தாலும் அவரது ஊகம் தவறு என்று அடித்துச் சொல்வதற்கு என்னால் வேறு சான்றுகளைச் சுட்டிக்காட்ட முடியாது; ஏனெனில் அத்தகைய சான்றுகள் எங்குமே கிடைக்கவில்லை என்று அப்பொறியாளர்

கூறுவது முற்றும் உண்மையே என்பதை நாம் ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும்.

பெரிய கோயில்

தஞ்சாவூர் மண்ணுக்கு அடுத்து பெருமை சேர்ப்பது பெரிய கோயில்தான். இக்கோயிலின் பெருமைகள் பல.

தன்னுடைய நிழல் தன்னுடைய அடித் தளத்தைத் தாண்டி வெளியே விழாத பெருமை பெற்றது பெரிய கோயில்.

ஏறக்குறைய பதினைந்து டன் எடை யுடைய ஒரே கல்லால் ஆன விமானத்தைத் தாங்கியிருப்பது பெரிய கோயில்.

ஒரே கல்லால் ஏறக்குறைய பதினைந்து அடி உயரத்திற்கு அமைந்த நந்தியைக் கொண்ட பெருமை பெற்றது பெரிய கோயில்.

இப்படிப் பல பெருமைகள்.

இக்கோயிலும் நம் முன்னோர்களின் பொறியியலறிவுக்குச் சான்று என்பதை நாம் மறுக்க முடியாது.

ஆனால்...!

இக்கோயிலை எப்படிக் கட்டினார்களா? இதன் அடித்தளத்தை எப்படி அமைத்தார்கள்? சூரியனின் போக்கைக் கணக்கிட்டு, கோயிலின் உயரத்தையும் அடித்தளத்தின் அளவையும் முடிவு செய்ததால் தானே இன்றும் கோபுரத்தின் நிழல் அடித்தளத்தைத் தாண்டி விழவில்லை. இது எப்படி சாத்தியமாயிற்று?

நெடிதுயர்ந்து நிற்கும் கோயிலின் அடித் தளத்தை எப்படிக் கணக்கிட்டு கட்டினார்கள்?

பதினைந்து டன் எடை கொண்ட பாறாங் கல்லை எப்படி கோபுரத்தின் உச்சிக்குக் கொண்டு போனார்கள்?

நெடிதுயர்ந்து நிற்கும் பதினைந்து அடி உயர நந்தி எப்படி செதுக்கப்பட்டு, இப் போதுள்ள நிலையில் வைக்கப்பட்டது?

இப்படிப் பல கேள்விகள்.

நம்மால் பதில் அளிக்க முடியவில்லையே!

இந்த இடத்திலே நம் தலை ஏமாற்றத்தி னால் குனிகின்றது அல்லவா!

கர்ணபரம்பரை என்று சொல்லும் செவி வழிப் பறிமாற்றம் மூலம்தான் சிலவற்றைப் பற்றி கேள்விப்படுகின்றோமே தவிர அறுதி யிட்டுச் சொல்ல தேவைப்படும் சான்றுகள் ஒன்றுமில்லையே!

தமிழனின் கட்டடக் கலைத் திறமைக்கு இதோ இன்னொரு எடுத்துக்காட்டு.

இராமேஸ்வரம் தாழ்வாரம்

இராமேஸ்வரம் கோயிலுக்கு பெருமை சேர்ப்பது இந்தத் தாழ்வாரம் (Corridor) என்பதை அக்கோயிலைப் பார்த்தவர்கள் யாரும் மறுக்கமாட்டார்கள்.

அதன் அழகு, மேலும் நூல் பிடித்தாற் போன்று அத்தாழ்வாரம் நிற்கும் கம்பீரம் பலமணி நேரம் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசையை நம்முன் தூண்டு கின்றன அல்லவா!

இதை நம் முன்னோர்கள் தானே அமைத்தார்கள். மட்டக்கருவி (Level). கோண அளவைக் கருவி (Theodolite) இவைகள் இல்லாத அந்நாட்களில் இது எப்படி சாத்தியமாயிற்று?

எங்காவது இதற்கு சான்று கிடைக்குமா என்றால் எங்குமில்லை என்ற பதில்தான்.

சான்றுகள்

வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் போயிருக்கின்றீர்களா! அத்தகைய பயணத்தில் பல பழமை வாய்ந்த கட்டடங்கள் சர்ச்சுகள் இவைகளைக் காணுவதற்கு ஏற்பாடு செய்திருப் பார்கள். உடன் வரும் வழிகாட்டி (Guide) அக்கட்டடங்கள் எப்போது, யாரால் எதைக் கொண்டு கட்டப்பட்டது என்ற உண்மைகளை கற்பனைக் கலவாது சான்றுகளோடு விளக்கும் போது நாம் நம்முடைய பழந்தமிழ் கலைப் பொக்கிஷங்களைப் பற்றி இவ்வாறு சொல்ல இயலவில்லையே என்ற எண்ணத்தால் என் தலை தாழ்ந்து போகும்.

கல்லணை, பெரியகோவில், இராமேஸ்வரம் தாழ்வாரம் போன்ற பல அரிய கட்டடங்களைஎப்படிக்கட்டினார்கள்என்பதைச்செப்பும் செப்போடுகளோ கல்வெட்டுகளோ, எழுதி வைத்த ஓலைச் சுவடிகளோ ஒன்றுமில்லையே!' ஏன்?

அந்தக் கோயிலுக்கு இவ்வளவு நிலம் கொடுத்தான்; இந்தப் புலவர்க்கு இவ்வளவு பரிசளித்தான் என்றெல்லாம் பறைசாற்றும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஓலைச் சுவடிகளும் உள்ளன.

ஆனால் தமிழன் தன் பொறியியல் திறமையை எவ்வாறு செயல்படுத்தினான் என்பதைச் சொல்வதற்கு என்றும் அழியாதிருக்கும் கோயில்கள் அரண்மனைகள் மற்றும் கல்லணை போன்றவைகள் மட்டுமே சாட்சியம் பதிக்கின்றனவே தவிர, எழுதி வைத்த ஏடுகள், செதுக்கிய கல்வெட்டுகள், செப்பேடுகள் இவைகள் இல்லையே!

ஏனிந்த நிலை?

இப்போதுங்கூட, மருத்துவர்கள் பலர் கிராமங்களில் பிணி போக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் செவி வழியே தன் தந்தையிடம் கேட்டுப் பயின்று பல மூலிகைகளைப் பயன்படுத்தி நோய்களைப் போக்கி வருகின்றனர். ஆனால் எழுத்தில்... இன்னும் இல்லை.

ஏன் இப்படி?

தன் திறமையை மற்றவர்கள் அறிந்து கொண்டால் தனக்கு வேலை இல்லாதுபோய் விடுமே என்ற சுயநலம் கலந்த பயமா!

அப்படி இருக்க முடியாது.

தான் கற்ற செல்வங்களை மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற சீரிய நோக்கம் கொண்டவன்தானே தமிழன்.

பழைய நூல்கள், கூட கோபுரங்கள், மாட மாளிகைகள் இவைகளைப் பற்றிக் கூறுகின்றனவே தவிர, அவைகள் எப்படிக் கட்டப்பட்டன என்பதை எடுத்தியம்பவில்லை. இதுதான் நம்முடைய இன்றைய நிலை!

திருக்குறள்

நான் மேற்சொன்ன ஏக்கத்தோடு திருக்குறளைப் புரட்டிக் கொண்டிருந்தபோது திருவள்ளுவர் ஓரிடத்தில் கட்டடக்கலையைப் பற்றி இலைமறைவு காய்மறைவு என்ற முறையில் சொல்லியிருப்பது கண்டு என்மனம் மிகவும் மகிழ்வுற்றது.

அரண் என்ற அதிகாரத்தைப் பாருங்கள்.

உயர்வகலம் திண்மை அருமை இந்நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல் - குறள் 743

இது அரணுக்கு கூறியிருந்தாலும், இக்கட்டுமான இயலுக்கும் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

கட்டடங்கள் அமைய வேண்டிய அழகைப் பற்றிக் கூறும்போது வாழ்வதற்கு ஏற்ற உயரம், அகலம், காலங்காலமாக எழிலோட அமைந்திருக்கும் உறுதி, வெள்ளம், தீ போன்றவைகளால் (பகைவர்கள்) அழிக்க முடியாத வல்லமை (அருமை) போன்ற இந்நான்கும் இருக்க வேண்டும் என்று இயம்புகின்றது இக்குறள்.

அப்பாடா! தமிழ் நூலில், குறிப்பாக உலகப் பொதுமறையில் கட்டடக்கலை எப்படி அமைய வேண்டியது என்ற குறிப்பைக் கண்டுவிட்டோம். மகிழ்ச்சிதானே!

நிறைவுரை

இப்போதாவது நாம் விழித்துக் கொள்வோம். சான்றுகளைத் தேடுவோம்; கண்டு பிடிப்போம்.

இப்போது கட்டப்படும் பல அரிய கட்டடங்கள் எவ்வாறு கட்டப்படுகின்றன என்பதை எழுதி வைப்போம். அப்போதுதான் நம் பின்வரும் நம் தலைமுறைகள் நாம் எவ்வாறு கட்டினோம், எவ்வளவு திறமையோடு வாழ்ந்தோம் என்று அறிந்து பெருமை அடைவார்கள் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

செய்வோமோ? ☆

தமிழ் ஓர் இணையப் பூக்காடு

பாவலர். கருமலைத்தமிழாழன்

எழுத்திற்கும் சொல்லிற்கும் நெறிவ குத்தே
எழுதுகின்ற உலகத்து மொழிகளுக்குள்
எழுத்திற்குள் அடங்காத உணர்வை; காதல்
எழுப்புகின்ற மெய்ப்பாட்டை இல்ல றத்தை
தமிழுவுகின்றக் கூடலினை ஊடல் தம்மை
தாய்செவிலி பாங்கிபாங்கன் வாயில் கூற்றை
வழுவாத மறத்தை வாழ்வின் பொருளைக் கூறும்
வண்டமிழே இலக்கணத்துப் பூக்கா டென்பேன்!

நிலம்ஐந்தாய்ப் பகுத்ததனைத் திணைக ளாக்கி
நிகழ்கின்ற நிகழ்வுகளைத் துறைக ளாக்கிப்
புலப்பண்பைக் கருஉரியாய் அகத்தில் வைத்தும்
புகழ்வீரம் புறமாக்கிப் பத்துப் பாட்டாய்
நிலவிடும் எட் டுத்தொகையாய் அறமு ரைக்கும்
கீழ்க்கணக்காய்க் காப்பியமாய் தொண்ணூற் றாறாய்ப்
பலப்பலவாய் வாழ்வியலை எதிரொலிக்கும்
பசுந்தமிழோ இலக்கியத்துப் பூக்கா டென்பேன்!

நங்கையிடம் தூதாக நடக்க வைத்து
நரிதன்னைப் பரியாக்கி சாம்பல் தன்னை
மங்கையாக உயிர்ப்பித்து முதலை யுண்ட
மதலையினை உமிழவித்துப் பாய்சுருட்டி
இங்குனக்கோ இடமின்றேல் எனக்கு மில்லை
என்றாழ்வார் பின்செல்ல வைத்துப் பாட்டால்
எங்குமுள்ள இறைவனையே ஆட்டி வைத்து
எழிற்றமிழோ பக்திமணப் பூக்கா டென்பேன்!

கீர்த்தனைகள் எனப்புரியா மொழியில் பாடக்
கீழ்மேலாய்த் தலையாட்டும் மாடாய் ஆனோம்
சீர்த்தகுரல் கைக்கிளையும் துத்தும் தாரம்
விளரியொடு உழைஇளியும் ஏழாய் நின்று
ஆர்த்தசுரம் பன்னிரண்டு பாலைக் குள்ளே
அரும்பண்கள் நூறோடு மூன்றில் தோனைச்
சேர்த்தளிக்கும் துளை நரம்பு கருவி கொண்டே
செந்தமிழோ இசைநிறைந்தப் பூக்கா டென்பேன்!

கொடிபடரத் தேரீந்தும் காட்டுக் குள்ளே
கோலமயில் குளிர்போக்கப் போர்வை தந்தும்
துடித்திட்டப் பறவைக்குச் சதைய ரிந்தும்
துலக்கிட்டால் கருணையொன்றே துணையா மென்று
வடித்திட்ட யாதும் ஊர் கேளிர் என்னும்
வகையானக் கருத்தாலே உலகைச் சேர்க்கும்
விடியலுக்கோ அன்பென்னும் விளக்கைக் காட்டும்
வியன்தமிழோ மனிதநேயப் பூக்கா டென்பேன்!

வானத்தில் ஊர்தியினைப் பறக்க விட்டு
வளியடக்கிக் கடல் நீரில் கலத்தை விட்டு
ஞானத்தால் அணுபிளந்து பூமிக் கோளோ
ஞாயிற்றைச் சுற்றுகின்ற செய்தி சொல்லி
வானளாவ நிற்கின்றக் கோபு ரங்கள்
வழியடைத்து நீர்தேக்கும் அணைகள் என்றே
நானிலமும் வியக்கின்ற அறிவைப் பெற்ற
நற்றமிழோ அறிவியலின் பூக்கா டென்பேன்!

முத்தமிழோ அறிவியலின் மொழியாய் ஓங்கி
முன்னேறிக் கணிப்பொறியில் இடம்பி டித்தே
எத்திசையில் இருப்போரும் அறியும் வண்ணம்
ஏற்றவகைக் குறியீட்டில் எழுத்த மைத்து
வித்தாக மென்பொருளும் சொல்தொகுப்பும்
விசைப்பலகை எனப்பொதுவாய் ஆக்கி ஞாலம்
மொத்தமுமே ஒருநொடியில் படிக்கு மாறு
முகிழ்ந்ததமிழ் இணையத்துப் பூக்கா டென்பேன்!

ஆட்சிமொழி தமிழ்என்றும் பூவைச் சேர்த்தே
அங்காடிப் பெயரெல்லாம் தமிழ்ப்பூ வாக்கி
மாட்சிதரும் மழலையர்தம் பள்ளி யெல்லாம்
மணக்கின்றத் தமிழ்ப்பூவை மலரச் செய்து
காட்சிதரும் பொறியியலை மருத்து வத்தைக்
கவின்கெஞ்சும் தமிழ்ப்பூவின் தோட்ட மாக்கி
நாட்டிலெல்லா துறைகளிலும் பதியம் வைத்து
நற்றமிழின் பூக்காட்டை வளர்ப்போம் நன்றாய்

சங்ககாலத் தமிழர் வாணிகம்

-க.வீ.செ. பாண்டியன்-



கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்க் குடியினர் நாம். சங்க காலத்திலேயே கடல்கடந்து வாணிகம் செய்த பெருமை உடையவர்கள்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலமக்கள் வாணிகம் செய்து பொருள் ஈட்டிய செய்திகளைச் சங்க நூல்களில் விரிவாகக் காணலாம்.

மலைவாழ் குறிஞ்சி நில மக்கள் தேன், கிழங்கு, மான்தசை, மது முதலியவற்றையும், முல்லை நில மக்கள் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றையும், மருத நில மக்கள் அவல், நெல், கரும்பு முதலியவற்றையும், நெய்தல் நில மக்கள் மீன், உப்பு, நறவு முதலியவற்றையும் பிற நிலத்து மக்களுக்கு விற்றுத் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொண்டனர். இத்தகைய பண்டமாற்று முறை சங்க காலத்தில் நிலவி வந்தது.

உப்பு வாணிகம்:

உணவுப் பொருள்களுள் மிகச் சிறந்த உப்பை வாணிகர்கள் உப்பளங்களிலிருந்து வண்டிகளில் ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்றனர். வண்டியிழுக்கும் மாடுகளைப்யும் வேறு எருதுகளையும் வண்டி யில் பூட்டுவதற்குத் தயாராக அழைத்துச் சென் றனர் என்பதைப் பெரும்பாணாற்றுப் படை.

''சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத்து மணர் பதியோடு நெடுநெறி''

எனக் கூறுகிறது.

மிளகு வாணிகம்

சேர நாட்டு வாணிகர்கள் தம் நாட்டில் விளையும் மிளகினைக் கழுதைகளின் மீதேற்றி ஊரூராய்ச்சென்று விற்ற செய்தியை

மிரியற் புணர்ப் பொறைதாங்கிய வடுவாழி நோன்புறத்
தணர்ச் செவின் கழுதைச் சாத்தோடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்

என்று பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது.

உள்நாட்டு வாணிகம்

தமிழ்நாட்டு மன்னர் உள்நாட்டு வாணிகத்தையும் வெளி நாட்டு வாணிகத்தையும் வளம்பெற வளர்த்தனர். தமிழ்நாடு முழுதும் வண்டிகள் செல்லக்கூடிய நல்ல பாதைகளை அமைத்தனர். வாணிகப் பொருள்களைப் பாதுகாக்க ஆங்காங்கு காவலர்களை நியமித்தனர். பெருவழிகளிலும் காவல் வழிகளிலும் விற்படை வீரர்கள் காவல் காத்தனர். பாதைகளில் செல்லும் வணிகப் பொருள்களுக்கு (உல்கு) வரி வசூலிக்கப்பட்டது. அதற்குரிய சுங்கச்சாவடிகளும் அமைக்கப்பட்டன என சங்க இலக்கியங்கள் விவரிக்கின்றன.

பீடுமிக்க மாநகர் மதுரையில் மகளிரும் வாணிகம் செய்தமையை மதுரைக் காஞ்சி

காழ்சாய்த்து தொடை நவில்
நெடுகடையடைத்து
மடமாதர் ஒள் இழை மகளிர் பள்ளி அமர

என்று இயம்புவதால் அறியலாம்.

பூம்புகார் நகரில் கரிகாலன் காலத்தில் வாழ்ந்த வணிகர் தம் பண்டங்களையும் பிற பண்டங்களையும் விற்கும்போதும் வாங்கும் போதும் கொடுக்கும் பண்டத்தையும் முறையே மிகையாகக் கொள்ளாமலும், குறைவாக கொடுக்காமலும் நடந்து கொண்டனர்.

"கொள்வதூம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசம்....."

என்பது பட்டினப் பாலை கூறும் செய்தியாகும்.

இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்றதுடன், அறவழியில் நடந்தனர். உயிர்க் கொலை தவிர்த்தனர். பசுக்களைக் காத்து

வேள்விகளைச் செய்து, ஏழைகளுக்குத் தானியங்கள் செய்து மகிழ்ந்தனர்.

இருபாக்கங்களை உடைய புகார் பட்டினத்தின் நடுவே பெரிய அங்காடி அமைந்திருந்தது. பகலும் இரவும் பண்டமாற்று நிகழ்ந்த அப்பட்டினத்தில் நாளங்காடியோடு அல்லங்காடியும் நடைபெற்றது. இன்றோ அங்காடி என்னும் சொல் மறைந்து மார்க்கெட், பஜார் எனும் சொற்கள் தமிழில் புகுந்தமை வருந்துதற்குரியது.

கடல்வாணிகம்

கி.மு. ஆயிரத்தில் வாழ்ந்த சாலமன் அரசர் காலத்திலிருந்தே தமிழர் கடல் வாணிகம் செய்து வந்தனர். தமிழரின் கப்பல்கள் தேக்குமரங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்றுள்ளது. எகிப்துக்கும், சிரியாவிற்கும் பாபிலோனியாவிற்கும் தமிழ் நாட்டிலிருந்து பலபொருள்கள் ஏற்றுமதியாகின. மயில்தோகை, பானை, அரிசி, சந்தனம், முத்து, அகில் முதலியன சிறப்பாக ஏற்றுதி செய்யப்பட்டன. தோகை துகி, அரிசி-அரிசி, சந்தனம்-சந்தல், முத்து-முத்தா, அகில்-அஹலீம் அஹ்லத் எனப் பிறமொழிகளில் தமிழ்ச் சொற்கள் வணிகத்தால் கலந்தன.

கடல் வாணிகத்தில் ஈடுபடும் கப்பல்கள் வந்து தங்கவும், பொருள்களை ஏற்றவும், இறக்கவும், வசதியான துறைமுகங்கள் சங்க காலத்தில் இருந்தன. அவை எயிற்பட்டினம் எனப்படும். மாமல்லபுரம், கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் முதலியன.

எயிற் பட்டினத்தில் மேலை நாட்டுக் குதிரைகள், இறக்குமதி ஆயின, இத்துறை முகத்தில் மிக உயர்ந்த கலங்கரை விளக்கம் இருந்தது.

"நெகிழி, பரவுநீர், அழவத்தோடு கலங்கரையும் துறை"
என்பது பெரும்பாணாற்றுப்படை

கொற்கை துறைமுகத்தில் உப்பு, கருப்பட்டி, புளி, உப்பிட்டு உலர்த்தப்பட்ட மீன்கள் முதலியன ஏற்மதி செய்யப்பட்டன. குதிரைகள், யவன நாட்டுப் பாவை விளக்குகள் மதுவகைகள் இறக்குமதி செய்யப்பட்டன என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது.

காவிரிப்பூம்பட்டிணத்தில் அரிய காவலை உடைய பண்டகசாலை, துறைமுகத்தில் அமைந்திருந்தது. பண்டப் பொதிகளில் சோழனின் புலி முத்திரை பதிக்கப்பட்டது. சுங்கச் சாவடியும் அமைந்திருந்தது. குதிரைகள், மிளகுப் பொதிகள், சாம்பூநாதம் எனப்படும் பொன் பாண்டிநாட்டு முத்துகள், குடகுமலை சந்தனக் கட்டைகள் கடாரம் (மலாயா) சீனம் முதலிய நாடுகளிலிருந்து வந்த கருப்பூரம், பனிநீர், குங்குமம் போன்றவைகள் இறக்குமதி ஆயின என்றும் மதுரைக் காஞ்சி விளக்குகிறது.

கப்பல்களில் வந்து துறைமுக நகரங்களில் இறக்குமதியான முத்து, பவளம், மாணிக்கம். சந்தனம் முதலிய பொருள்கள் உள்நாட்டு வணிகரால் விற்கப்பட்டன என்பதைப் பெரும்பாணாற்றுப் படை.

''மலையவும் கடலவும் மாண் பயந்தரும்''
எனக் கூறுகிறது.

முடிவுரை:

சங்க காலத் தமிழ் வணிகம் கடல் கடந்து உலகம் முழுதும் பரவி நின்றது. இவ்வாணிபத் தொடர்பே உலகெலாம் பரவிய தமிழர்களை இன்றுவரை ஒன்றுபடுத்தி நிற்கிறது. தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டு உகந்து வாணிகம் செய்தால் சங்ககாலம் மீண்டும் மலரும். உலகத் தொழில்கள் அனைத்தும் உவந்து செய்வோம் என்னும் பாரதியின் கொள்கைக் கேற்ப தொழில்வளம் பெருக்கித் தமிழ்ச் சமுதாயம் வளர்ப்போம், ஒன்றுபட்டு உயர்வோம், உறவை வளர்த்து மகிழ்வோம்.

வாழ்க தமிழ்.

ஒன்பதாம் தொகையார்

கவிஞர் ஆற்றலரசு

கல்லுக்குள் பல்வேறு வகைதா னுண்டு;
கல்லுக்குள் வைரக்கல் மன்ன னாகும்!
கல்லுக்குள் கருங்கல்லே உறுதி யாகும்;
கனலுக்குள் மண்வெந்தால் செங்கல் லாகும்!
கல்லுக்குள் சலவைக்கல் வெள்ளை யாகும்;
கல்லுக்குள் வண்ணக்கல் அணிகட் காகும்!
கல்லுக்குள் மாக்கல்லில் (பாண்டம்) ஆகும்;
கல்வகையின் ஆய்வென்றால் சிக்கல்! சிக்கல்!!

கல்லுக்குள் உரைகல்லே பொன்னைக் காட்டும்
கல்லுப்புக் கல்லேதான் சுவையைக் கூட்டும்!
கல்லாகும் நீர்மயங்கின் பனிக்கல் லாகும்;
கன்னற்சா றுறைந்திட்டால் கற்கண்டாகும்!
கல்எரிகற் களெல்லாமே வானில் காணும்
கல்லாகும்; முலைப்பாலும் உறைந்தே போனால்,
கல்லாகி அது தயிராய் மாறிப் போகும்;
கல்சிக்கி முக்கிக்கல் கனலைத் தோற்றும்!

கல்லோடு கல்லுரச் செய்தே அந்தக்
காலத்து மக்களவர் தீயைக் கண்டார்!
கல்லாலே கருவிகளைச் செய்தே தம்மைக்
காக்கின்ற வழிகண்டு நலமே கொண்டார்!
கல்லாலே உருவான பொருள்தா னிங்கே
காலத்தால் அழியாத கல்லே யாகும்!
கல்லாலே முன்னோரின் வாழ்வை ஆய்ந்தார்;
கல்லாலே காலத்தை முடிவு செய்தார்!

கல்யானை ஒன்றுக்கே கரும்பைத் தந்த
கனிவான வரலாறு உண்டே அந்நாள்;
கல்கிட்டாத் தஞ்சையிலே கோயில் கட்டிக்
காட்சியினைத் தந்தானே இராச ராசன்!
கல்லணையைக் காவிரியில் கட்டச் செய்தே
கழனிக்கு நீர்ந்த்தான் கரிகாற் சோழன்!
கல்லுக்கே தம்விழிகள் ஈந்தார்; அந்தக்
கண்ணப்பர் இறையன்பைக் கண்டோம் நாமே

கல்லதனை இமயத்தை எடுக்கச் செய்து
கனித்தமிழைப் பழிதிட்ட வடவர் தம்மைக்
கல்லதனைத் தலைமேலே ஏற்றி வந்தே
கற்பரசி கண்ணகியின் வடிவே யாக்கிக்

கல்தோளைக் கொண்டுள்ள சேர மன்னன்
கண்ணகிக்கே கோயிலினை எடுத்தான் முன்னே!
கல்லெறிந்தே வணங்குதலை ஹஜ்ஜின் போது
கருத்தாக முகமதியர் கொண்டா ரன்றோ?

கல்தோன்றி மண்தோன்றாக் காலம் தந்த
கனித்தமிழின் பாலன்பு கொள்ளல்வேண்டும்!
கல்போன்று உறுதியுடை நெஞ்சங் கொண்டு
கவித்தமிழுக் குயிர்த் தொண்டே ஆற்றல் வேண்டும்!
கல்லுக்கே உயிர்த்தந்தார் சிற்பம் செய்வோர்
கல்மேலே வரலாற்றை வடித்துச் சென்றார்!
கல் மழைதான் பெய்யும்முன் கார்மே கத்தை
'கருக்கில் பார்' என்றிடுவார் சிற்றூர் மக்கள்!

கல்லெல்லாம் கவிபாடும் என்றாற் கொப்ப
கவிபாட வந்தாரோ நாமக் கல்லார்!
கல்லுக்குள் தேரையெனின் குறையே காணும்
கல்வாழை நீருண்டு மேலும் நீளும்!
கல்லாயி னும்கணவன் என்னும் பெண்டிர்
கல்லானைத் துணையாக்கிக் கொள்ளார்; இன்றே
கல்லுப்பிள் ளையாக இருத்தல் வேண்டா.,
கல்விக்கே பிள்ளையென உயரல் வேண்டும்.

கல்நாட்டிக் கல்லூரி அன்றி யின்னும்
கட்டுமனை எழுகின்ற நிலையிங் குண்டே!
கல்லாமை வாழ்வுக்குத் தீமை நல்கும்,
கல் ஆமை நீருக்குள் இருளில் வாழும்
கல்லாதார் நம் நாட்டில் பலபே ருண்டே;
கற்றாரின் முயற்சியினால் படித்தா ராவார்!
கல்லதனை இந்நாளில் உணவு தம்மில்
கலக்குகிறார் செயலாலே பல்லும் நோகும்?

கல் செய்யும் நன்மைதனை எண்ணும் போது
கல்நெஞ்சும் உருகிடுமோ? சொல்வீர்! செல்வீர்!!
கல்லளையில் கள்வரெலாம் வாழ்வார்; அன்றிக்
கானகத்து வரிப்புலியும் ஆங்கே வாழும்!
கல்கொண்டு முடிகின்ற ஊர்கள் தம்மைக்
கண்டீரா? திண்டுக்கல் குண்டக் கல்லே!
கல்சொல்லும் கதைகேட்கக் காலம் போதா!
கணக்கிட்டால் நாமெல்லாம் கல்லே! கல்லே!!

தமிழ்ப் பேரறிஞர் பெருஞ்சித்திரனார்

-முனைவர் கடலூர் மணிமாறன்-



இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழ்க் கவிதை உலகில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குப் பிறகு தலைமை இடத்தைப் பெற்றுச் சிறந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார். இவரின் இயற் பெயர் துரைமாணிக்கம் என்பதாகும். தனித் தமிழ்க் கொள்கையைத் தழைக்கச் செய்த இவர், சேலத்தில் *1933* ஆண்டு மார்ச்சுத்திங்கள் *10*ஆம் நாள், துரைசாமி, குஞ்சம்மாளுக்கும் கனாகப் பிறந்தார்.

சேலம் நகரவைக் கல்லூரியில் இடைநிலை வகுப்புவரை பயின்றவர். தம் பன்னிரண்டாம் அகவை முதலே பாடல் புனையத் தொடங்கிய இவர், 1959-ஆம் ஆண்டு 'தென்மொழி' என்னும் தூய தமிழ்த் திங்களிதழைத் தொடங்கினார். பின்னர் 'தமிழ்ச்சிட்டு' என்னும் பெயரில் சிறுவர் இதழையும், 'தமிழ்நிலம்' என்னும் பெயரில் கிழமை இதழையும் நடத்தி வந்தார்.

பாரதிதாசனுடன் தொடர்பு

*1954*ஆம் ஆண்டு முதல் *1959*ஆம் ஆண்டு இறுதிவரை புதுச்சேரி தலைமை அஞ்சலகத்தில் எழுத்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது பாரதிதாசனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. கள்ளம் இல்லாத நெஞ்சினர். முத்தமிழ் அன்பர்; பெருங் கொள்கையுடையவர்; குணம் நிறை மாணிக்கனார்'' என்று பாரதிதாசனால் பாராட்டப் பெற்றவர்.

பாவாணர் தொடர்பு

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருடன் நாற்பது ஆண்டுகள் பழகி அவரின் தலை மாணாக்கர் என்னும் தகுதியைப் பெற்றார். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தை அமைத்து அதனை நூலாக வெளியிடத் துணைநின்றார். பாரதிதாசன் குடும்பத்துக்கும் தேதுக்வ நேயப்பாவாணர், ஈழத்தடிகள், கா.அப்பாதுரையார் ஆகியோர் குடும்பத்துக்கும் நன்கொடை திரட்டி உதவி தொண்டுள்ளத்திற்கும் நன்றியுணர்வுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார். உலகத்தமிழ்க் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த இவர், பாவாணர் மறைவுக்குப் பின் உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தை அமைத்தார்.

தமிழ், தமிழினம், தமிழ்நாடு இவற்றையே உயிர்மூச்சாகக் கொண்ட உரத்த சிந்தனையாளர் இவர். சொல்வேறு, செயல்வேறு என்பதை அறியாத நிலைமாறாத, விலை போகாத நெஞ்சுரம் மிக்கவர். தமிழ்ச் சமூகத்தின் முகம் தெரியாமல் மூடிமறைத்துக் கொண்டிருந்த அழுக்குகளையும், இழுக்குகளையும் அகற்றத் துடித்த தமிழ்ப்போராளி இவர்.

படைத்த நூல்கள்

''கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை'' என்ற கொள்கை இடுக்கினைப் பறைசாற்றிய பெருஞ் சித்திரனார், கனிச்சாறு, மூன்று கொய்யாக்கள்; ஐயை, பள்ளிப்பறவைகள், உலகியல் நூறு, மகபுஞுகுவஞ்சி, பாவியக் கொத்து, கற்பனை ஊற்று, நூறாசிரியம், செயலும் செயல்திறனும், வாழ்வியல் முப்பது, தமிழீழம், பாவேந்தர் பாரதிதாசன், எண்சுவை எண்பது, திருக்குறள் மெய்ப்பொருள்) உரை போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட உயரிய படைப்பிலக்கியங்களை வழங்கியவர்.

பெருஞ்சித்திரனார் ஒரு பாவலராக, நூல் வெளியீட்டாளராக, தமிழ்க்கழகத் தலைவராக, தனித்தமிழ்த் தொண்டராக, சொற்பொழிவாளராக, எதற்காகவும் எவரிடத்தும் வளைந்து கொடுக்காத தறுகண்மறவராகத் திகழ்ந்தார்.

இவர் சொற்களைத் தேனில் தோய்த்துக் கொடுப்பதில்லை. இரும்பைக் காய்ச்சிய நெருப்புக் குழம்பில் சொற்களைத் தோய்த்துக் கொடுப்பவராக இருந்தார்.

தமிழ்க்கல்வி

பிறமொழித் தாக்குதலில் இருந்து தமிழைக் காக்கத் தம் உயிரையும் தர அணியாக இருப்பதை, அன்னை மொழியைக் காத்திட வேண்டி என்னைத் தூக்கிலிடு என்று குறிப்பிடும் இவர், தமிழ்ப்பற்றை ஊட்டாத தமிழ்க் கல்வி தமிழர்க்குத் தீங்கு செய்யும் என உறுதிபட உரைக்கின்றார். செந்தமிழ் பேசாத ஊரில் உயிர் வாழ மாட்டேன்; செந்தமிழ் பேசாத தெருவில் குடியிருக்க மாட்டேன் என்னும் கருத்துடைய இவர், பகலிரவாய்த் தெருத்தெருவாய், ஊர் ஊராய்ச் சென்று அயர்வின்றித் தமிழ்த் தொண்டாற்ற வேண்டுகின்றார். தாயின் துயரை விடத் தமிழ்த்தாயின் துயரமே பெரிதெனப் பாரதிதாசனைப் போலவே இவரும் எண்ணு கிறார்.

தமிழன் தனித்தன்மை

மறைமலையடிகள், திரு.வி.க. போன் றோர்க்குப் பிறகு பாவாணர் வழியில் தனித் தமிழை எழுத்திலும், பேச்சிலும் பின்பற்றித் தனித்தமிழுணர்வைச் செழிக்கச்செய்தவர், பாவலரேறு பெருஞ்சித்திரனார். தனித்தமிழ் வளர்ச்சியில் தென்மொழியின் பங்களிப்பு மிகப்பெரியது.

நூற்றுக்கணக்கானோர் தங்கள் பெயர் களையும் குடும்பத்தார் பெயர்களையும் தனித்தமிழில் கூட்டிக் கொள்ளவும், எழுத்திலும் பேச்சிலும் தனித்தமிழையே பின்பற்றவும் தென்மொழி வழிகாட்டியது; அறிவுறுத்தியது. அதனைத் தன் தேர்ந்த தொண்டாகக் கருதி இன்றளவும் செயல்பட்டு வருகிறது.

தமிழ்ப் பெயர்கள்:

'கமலம்' என்னும் தன் துணைவியாரின் இயற்பெயரைத் 'தாமரை' என மாற்றியமைத்தவர் இவர். பூங்குன்றன், பொழிலன், பொற்கொடி, தேன்மொழி, செந்தாமரை எனத் தம்பிள்ளை கட்குத் தமிழ்ப்பெயர் சூட்டியவர் இவர். இறைக்குருவனார், அருளி, ஆறிறைவன் என்னும் இவரின் மூன்று மருகர்களின் பெயர் களும் தமிழ்ப்பெயர்களே. மேற்கூறப்பெற்ற அனைவருமே எழுத்திலும் பேச்சிலும் எப் போதும் தனித்தமிழையே பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறைவாழ்வு:

1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது வேலூர்ச் சிறையில் அடைக்கப்பெற்றார். அப்போது நடுவன் அரசுப்பணியையும் இழந்தார். மதுரையில் தமிழக விடுதலை மாநாடு நடத்தியதையொட்டி 1972-இல் சிறைப்பட்டார். பின்னர் 1974-ஆம் ஆண்டு சென்னையில் தமிழக விடுதலை மூன்றாம் மாநாட்டைத் தொடர்ந்து சிறைப்பட்டார். 1976இல் ''மிசா'' என்னும் கொடிய அடக்குமுறைச் சட்டத்தின்மூலம் ஓராண்டுக்கும் மேற்பட்ட காலம் சிறையில் இருந்தார். கொடிய ஒடுக்குமுறைச் சட்டமாகிய 'தடா' வின்மூலம் பல மாதங்கள் சிறையில் வாடினார். பல ஆண்டுகள் சிறைவாழ்வை மேற்கொண்ட போதிலும் உள்ளம் தளராமல் உறுதிகுலையாமல் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தவர் பெருஞ்சித்திரனார்.

சிறைப்பறவையாய் இருந்தபோதெல் லாம் நூல் எழுதுவதும் சிறையாளிகளுக்குத் திருக்குறள், வரலாறு போன்றவற்றைக் கற் பித்து அவர்களை நன்னெறிப்படுத்திச் சிறை வரலாறுகளிலேயே ஒரு புதுமைத் தலைவராக விளங்கிய பெருமை இவருக்கு மட்டுமே வாய்த்தது.

அயல்நாட்டுப் பயணம்

1974-இல் முதன்முதலாக மலேசியா, சிங்கப்பூர் நாடுகட்குச்சென்று 35க்கும் மேற்பட்ட இலக்கியப் பேருரையாற்றிப் பேரும் புகழும் பெற்றுத் தாயகம் திரும்பினார். 1977இல்

ஊமை உச்சரிப்புகள்

-கவியரசு நா.காமராசன்-

தமிழ் தேடிப் படிச்சவுங்க
தாய்லாந்தில் ஒண்ணு கூடி
கிறுக்கிப்புட்டுத்
தறுக்குடனே பேசப் போறோம்!
அந்தக் கீழ்வானம் சிவந்ததையும்
பார்க்கப் போகிறோம்!

ஒசந்தொசந்து போன மொழி
ஒசத்தியாக ஆனமொழி
வசனமெல்லாம் கவிதையாக
மாறிப் போச்சுதே - ஊமை
வாய்தொறந்து பேசப் போகும்
காலம் ஆச்சுதே!

உட்பகையில் கெட்டவுங்க
ஒண்ணு கூடி தலை நிமுந்து
ஒருதரம் தான் கத்தி வீசி
ஆடப்போறோம் பாருங்க
ஒசத்தியான பாட்டு ஒண்ணு
கேக்க வாரோம் பாடுங்க!

முப்புறமும் குப்புறவே
முதுகொடிய விழுந்திருந்தோம்
ஒரு தப்படியே இல்லாம தாளங்கட்டி
வச்சிப் புட்டோம் கேளுங்க!
சமத்தான பாட்டு ஒண்ண
சமத்துவத்தின் உச்சரிப்பில்
பாடப் போறோம் பாருங்க!

இலங்கைக்கும், 1978இல் அந்தமான் தீவுகளுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். 1983-84 இல் ஐரோப்பிய நாடுகளில் வலம்வந்தார். வண்டமிழ்த் தேனருவி வழிந்தோடச் செய்து வந்த இவர் ஓர் இனத்தின் வீரவரலாறாக வாழ்ந்து காட்டியவர்.

தாங்கள் அரசியல் அதிகாரப்பதவி நலன்களுக்கு இத்தகைய சிறைவாழ்வுகளையும் போராட்டங்களையும் பயன்படுத்திக் கொள்வதில் முனைப்பாக இருக்கும் அரசியல்வாதிகளைப்போல் இல்லாமல் எப்போதும் விதிவிலக்காகவும் தனித்தன்மையுடனும் இருந்தவர் அவர்.

பெருஞ்சித்திரனாரின் சிந்தனை, தமிழர்களைப் பற்றியே இருந்தது. அவரின் எழுதுகோல் தமிழின் முன்னேற்றத்துக்காக எழுதியது.அவரின்வாய், தனித்தமிழ்ச் சொற்களையே உரக்க ஒலித்து வந்தது. அவரின் நெஞ்சம் தமிழ்மொழி, தமிழ்நலம், தமிழினம் என்ற எண்ணங்களிலேயே தோய்ந்திருந்தது.

தமிழ்த் தேசியம், தமிழ்ஈழம், தனித்தமிழ் இவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தார். 62 அகவையிலும் சிரித்த முகத்தோடு செந்தமிழுக்காகச் சிறைக்களம் புகுந்த செம்மல் இவர் அலான ஆலருபதைக்கலோ நத்திப் பிழைக்கவோ இவர் எப்போதும் விரும்பியதே இல்லை.

நமது கல்விநிலை

பல நூற்றாண்டுக் காலமாக அகலாத அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் உழன்று கிடந்த மக்களைத் தட்டி எழுப்ப அரை நூற்றாண்டுக்காலமும் இவரின் எழுத்தும் பேச்சும் போதுமானவை அல்ல என்றும் அதற்குக் கூட்டுமுயற்சியினாலான 'வீரியமான புரட்சி தேவை, என்றும் முதல் தேவையாக நமது கல்விமுறையில் ஒரு மாற்றம் வேண்டும் என்றும் பரப்புரை செய்து வந்தவர் பெருஞ்சித்திரனார்.

போலிப் பகட்டுகளையும் ஆரவாரங்களையும் இவர் அடியோடு வெறுத்தும் ஒதுக்கியும் வந்தமை பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளோர் இவரைப் பின்பற்றி ஒழுகத்தக்க சீரிய நெறியாகும். அடக்கமும், எளிமையும், எப்போதும் இவரை ஆட்கொண்டு இருந்த போதிலும், எரிமலைக் குழம்பாய்ப் புரட்சிப் பாடல்களைப் படைத்திட இவர் தவறியதில்லை.

வாழ்நாள் முழுதும் வறுமையோடும் போராடி வந்தாலும், எனக்கென எதுவுமில்லை; இந்த இனம்கெட்ட தமிழனின் நிலை தவிர என்ற உரிமை முழக்கத்தைப் பாட்டுக்குயிலென எப்போதும் பறைசாற்றி வந்தார். பட்டம், பதவி, விருதுகளைக் கால்தூசாகக் கருதியவர் இவர். செம்மாந்த வாழ்க்கையில் இருந்து சிறிதும் பிறழாத இவரின் மறைவுக்குப் பிறகே தமிழ்கூறு நல்லுலகம் இவரைச் சரியாகப் புரிந்து கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(கட்டுரையாளர், பாரதிதாசனையும் பெருஞ்சித்திரனாரையும் ஒப்பாய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்)

தமிழால் உயர்ந்தேன்

-கலைமாமணி எஸ்.எம். உமர்-

பாரத நாட்டில் இன்று வழங்கும் மொழிகளில் மிகப் பழமையானது தமிழ். திராவிட இனம் என்று சொல்லும் மொழிக் குடும்பத்தின் தலைமகள் தமிழென்று சொல்லலாம். தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் ஆகியவை அத்தலைமகளின் சகோதரிகள். திராவிட இனமொழிகள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவி இருந்தன என்ற ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஹரப்பா, மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், சுமேரிய நாகரிகத்திற்கு இணையான திராவிட நாகரிகத்தை - தமிழ் நாகரிகத்தைக் கொண்டிலங்கியது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றும், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்றும் பாரதியார் தமிழின் உயர்வினையும் இனிமையினையும் பாராட்டினார். மாக்ஸ் முல்லர் என்னும் மொழி நூலறிஞர், 'தமிழே மிகவும் பண்பட்ட மொழி' என்றும், 'தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி' என்றும் பாராட்டியிருக்கிறார். 'ஆற்றல் மிக்கதாகவும், சொல்ல வந்த பல கருத்துகளைச் சில சொற்களால் புலப்படுத்துவதாகவும் தமிழ் மொழி போல் வேறு எம்மொழியும் இல்லை' என்று பெர்சிவல் பாதிரியார் கூறுகின்றார்.

ஆக - தமிழ்மொழி பழைமையிலும், சொல் வளத்திலும், இலக்கண வரம்புடைமையிலும், செய்யுள் வகையிலும், பண்பாட்டுச் சிறப்பிலும் தலைசிறந்தது என்பது வெள்ளிடைமலை.

அப்படிப்பட்ட தமிழால் இன்று நான் உயர்ந்திருக்கிறேன் என்றால், அது மிகையில்லை.

1739 பிப்ரவரி 14-ஆம் தேதி முதன் பிரஞ்சுக்கொடி காரைக்காலில் பறக்கத் தொடங்கியது. 1760இல் பிரஞ்சுக்காரர்கள் காரைக்கால் பகுதியில் 113 கிராமங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தனர். ஆனால் கி.பி.8 - 9ஆம் நூற்றாண்டிலிருந்தே முஸ்லீம் குடியிருப்புகள் காரைக்கால் பகுதியில் தோன்றியிருந்தன. அங்கு வாழ்ந்த முஸ்லீம் மக்கள் மரைக்காயர்கள் என அழைக்கப்பட்டனர். அப்படிப்பட்ட மரைக்காயர் குடும்பத்தில் 1925 நவம்பர் மாதம் 26ஆம் தேதி பிறந்தேன்.

முதல் மூன்று ஆண்டுகள் குரான், இஸ்லாமின் மற்ற விஷயங்களைத் தெளிவாகக் கற்றுக் கொண்டேன். பிற்காலத்தில் பிரஞ்சு மொழியில் பி.ஏ. வரை (பிரவே) படித்தாலும் - ஆறு வயதில் பிரெஞ்சு அரசு பள்ளியில் நான் தேர்ந்தெடுத்து படித்தது தமிழ்தான்.

நான் படிக்கிற காலத்தில் பாரதிதாசன் அவர்கள் காரைக்காலில் நிரவி பகுதியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தார். என் தகப்பனாரின் நெருங்கிய நண்பர். என் தகப்பனார் பாண்டிச்சேரியில் 34 ஆண்டுகள் எம்.எல்.ஏ. வாக இருந்ததால் நெருக்கம் அதிகம். அவர்தான் எனக்குத் தமிழ்ப் பாடங்களைச் சொல்லித் தந்தவர். எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். 'வாத்தியார், வாத்தியார்' என்றுதான் அழைப்போம். அவர் எனக்கு ஊட்டிய தமிழ்ப் போதையும் ஏராளமானது.

'முஸ்லீம் வித்யா சங்கம் கலாசாலை' என்ற பள்ளியில் நான் விரும்பி படித்த மொழி தமிழே! அந்தக் காலத்தில் அனைவரும் பிரஞ்சு மொழியை அவசியம் கற்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தாலும் தமிழ் மொழி மீது இருந்த ஆர்வம் இன்று வரை எனக்குக் குறையவேயில்லை.

1943இல் நான் காரைக்காலில் 'கதம்பம்' என்ற பெயரில், கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினேன். அதில் நண்பர் ஏ.எம். யூசுப் என்னுடன் பணியாற்றினார். அவர் பிற்காலத்தில் 'முஸ்லீம் லீக்' கட்சியின் செயலாளராகி 'நாவலர்' என்கிற பட்டமெல்லாம் பெற்று 'மறுமலர்ச்சி' என்ற பெயரில் திருச்சியில் ஒரு வாரப் பத்திரிகை நடத்தினார். மிக பிரபலமானவர். இன்றும் திருச்சியில் அப்பத்திரிகை தொடர்ந்து நடைபெறுகிறது. தமிழ் ஆர்வம் என்னை அப்பத்திரிகையில்பல கட்டுரைகளை எழுத வைத்தது. காரைக்காலில் 'கதம்பம்' பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்த அதே சமயம் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திருவாரூரில் 'முரசொலி' என்ற பெயரில் ஒரு கையெழுத்து பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார். அது அப்போதே புரட்சிகரமான பத்திரிகையாக இருந்தது. என் 'கதம்பம்' பத்திரிகையைக் கொண்டு சென்று அவரிடம் காண்பிப்பேன். அவர் நடத்திய பத்திரிகையை என்னிடம் தருவார். தமிழால் நடத்தப்பட்ட பத்திரிகையால் எங்கள் தொடர்பு இன்றுவரை வளர்ந்து கொண்டேயிருக்கிறது. பற்றும் பாசமும் ஏற்பட்டது.

'பால்ய முஸ்லீம் அஸோசியேஷன்' என்று சங்கம் அப்போது காரைக்காலில் இயங்கியது. முன்னேற்றமாக அந்தச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. காரைக்காலில் அச்சங்கம் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தது. 'இளம்பிறை' என்ற பெயரில் ஒரு பத்திரிகை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக யாரைப் போடுவது என்று யோசித்து ஒட்டு மொத்தமாக சங்க செயற்குழு உறுப்பினர்கள் - நிர்வாகிகள் ஒன்று சேர்ந்து என்னை அணுகினார்கள். என்னை கேட்டார்கள். நானும் 'சரி' என்று ஒப்புக் கொண்டேன்.

அந்தப் பத்திரிகைக்குக் கடுமையாக உழைத்தேன். அந்தப் பத்திரிகையில் வளர்ச்சியால் நானும் வளர தொடங்கினேன். 'இளம்பிறை' பத்திரிகை எனக்கு ஒரு படகு போல நான் யார் யாரையெல்லாம் பார்க்க வேண்டும் என்று விரும்பினேனோ அவர்களையெல்லாம் சந்தித்தேன். தமிழ் அறிஞர் பெருமக்கள் என் நண்பரானார்கள். திரையுலகத் தொடர்பும் அதிக மானது.

'பால்ய முஸ்லீம் அசோசியேஷன்' என்ற சங்கத்தின் நிர்வாக விருப்பமின்மைக் காரணமாக 'இளம்பிறை' பத்திரிகை நின்று போனாலும் கூட என் தமிழ் ஆர்வம் காரணமாக 1949ஆம் ஆண்டு சொந்தமாக நண்பர்களுடன் சேர்ந்து 'குரல்' என்ற பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தினேன்.

லாபமில்லாமல், நஷ்டமுமில்லாமல் அந்தப் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்த போது வியட்நாமிற்குப் போகும் வாய்ப்பு ஏற்பட்டது. 25 ஆண்டுகள் வியட்நாமில் வாழ்ந்தாலும் என் தமிழ் என்னை விட்டு அகலவில்லை.

வியட்நாமில் பணியாற்றிக் கொண்டிருந்த போது இந்தியத் திரைப்படங்களை 'ஸப் டைட்டில்' போட்டு திரையிட்டுக் கொண்டிருந்தனர். எனக்கு ஒரு யோசனைத் தோன்றியது. தெலுங்குப் படங்களை 'டப்பிங்' செய்து தமிழ் மொழியில் திரையிடுவது போல - தமிழ்ப் படங்களை வியட்நாம் மொழியில் 'டப்பிங்' செய்து திரையிட்டால் என்ன என்ற யோசனை தோன்றியது. என் யோசனைச் செயலாக்கினேன். முதல் இரண்டு படங்களில் தோல்வியடைந்தாலும் மூன்றாவது படத்தின் மூலம் மாபெரும் வெற்றி அடைந்தேன். நம் தமிழ்த் திரைப் படங்களை டப்பிங் செய்து வியட்நாமில் கிட்டத்தட்ட 500 திரைப்படங்கள்.

ஆக - தமிழ் மொழியால் வளர்ந்து இன்று உயர்ந்திருக்கிறேன் என்றால் அது மிகையில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்று பல்வேறு துறைகளிலும் அமிழ்தினும் இனிய நம் செந்தமிழ் மொழியானது வளர்ந்து செழிந்து நிற்கின்றது. தமிழ் வாழ நாமும் வாழ்ந்து, தமிழ் உயர நாமும் உயர்வோம்! ☆

வேளாண்மையில் தமிழரின் சாதனைகள்

-வேளாண் டாக்டர். கே.எம். இராமானுசம்-

உலகத்திலேயே எல்லா நாடுகளிலும் உயர் தொழிலாகத் திகழ்வது வேளாண்மையே. பழம்பெரும் நாடான தமிழகமே வேளாண்மைக்கு தாய்நாடு என்று சொல்லலாம்.

ஆதி மனிதன் கற்ற முதற் கலை வேளாண் கலையே. உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும் ஆதாரமாகயிருப்பது உழவுத் தொழிலேயாகும். சங்க காலத்திலேயே தமிழ் மண்ணில் ஏர்த்தொழில் ஏற்றம் பெற்றிருந்ததை இலக்கியம் சான்று கூறுகிறது. மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று எண்ணி, யானை கட்டிப் போரடித்த அழகான மதுரைக்குச் சொந்தக்காரர்கள் அல்லவா தமிழர்கள்.

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்று உலகமே வியக்கும் வண்ணம் கன்னலும், நெல்லும், தென்னையும், வாழையும், காயும், கனியும், பயறும், பருத்தியும், எள்ளும், கொள்ளும் விளைகின்ற நிலவளம், நீர்வளம் நிறைந்தது நம் தமிழ்நாடு.

வேளாண்மையில் அன்றும், இன்றும், என் என்றுமே உலக அளவில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாட்டின் உயர் விளைச்சல் தரும் கரும்பு வகைகள் பல நாடுகளில் பரவியுள்ளன.

நம் நாட்டு முந்திரி, பழங்கள், வாசனைத் திரவியங்கள், மூலிகைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் நல்ல விலை போகின்றன. இங்கு பூத்துக் குலுங்கும் அழகு மலர்களும், காய் கறிகளும் கூட உலகச் சந்தையில் போட்டியிடுகின்றன.

இத்தனைப் பெருமைகளையெல்லாம் ஈட்டித் தந்த வேளாண் விஞ்ஞானிகளும், உழவர் பெருமக்களும் தமிழர்களே என்று எண்ணும் போது இறும்பூய்துகிறோம்.

உலக அளவில் வேளாண்மை ஆராய்ச்சிகளிலும் தமிழ்நாட்டு சாதனைகள் சரித்திரம் படைத்துள்ளன.

கோயம்புத்தூரிலுள்ள கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டு பிடிக்கப்பட்ட கரும்பு இரகங்கள் தான் அமெரிக்கா, கியூபா, மௌரிஷியஸ் ஆகிய பல்வேறு நாடுகளில் கோலோச்சுகின்றன.

இந்த கன்னல் இரகங்களை தமிழக விஞ்ஞானிகள் தான் கண்டு பிடித்து உலகிற்கு வழங்கியுள்ளனர். வேளாண் விஞ்ஞானி சர். வெங்கட்ராமன் இதில் தலைசிறந்த சாதனையாளர்.

கரும்பு மட்டுமல்ல, தமிழகம் ஒரு நெற்களஞ்சியமும் கூட.

ஆற்காட்டு அரிசிக்கும், சீரக சம்பாவிற்கும் பெயர் பெற்ற தமிழ்நாடு தான், பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட ஆடுதுறை 27 என்ற உயர் விளைச்சல் இரகத்தையும் வழங்கி பெருமை பெற்றது.

இந்திய நாட்டில் பசுமைப்புரட்சியைக் கொண்டு வந்த உணவு இறக்குமதியை நிறுத்தி, உணவில் சுயதேவையை பூர்த்திசெய்து சரித்திரம் படைத்த இந்திய அரசின் அறிஞர் பாரத ரத்னா சி.சுப்ரமணியம் அவர்களும், உலகப் புகழ் பெற்ற வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களும் தமிழ் மண் பெற்றெடுத்த வரலாற்று நாயகர்கள் அல்லவா?

தமிழ் நாட்டிலுள்ள கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு உலகத்தின் பலநாடுகளில் தமிழக வேளாண் விஞ்ஞானிகள் சிறந்த ஆராய்ச்சியாளர்களாகத் திகழ்கிறார்கள்.

அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, தைவான், நியூசிலாந்து, பிலிபைன்ஸ், சிங்கப்பூர், மலேசியா என பல நாடுகளிலும் ஆராய்ச்சிக் கூடங்களை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்ந்து கொண்டிருக்கும் வேளாண் விஞ்ஞானி வளங்குன்றா வேளாண்மைக்கு வித்திட்டவர். அழிந்து கொண்டிருக்கும் அரிய இயற்கைச் செல்வங்களையும், தாவரங்களையும், கதுப்பு நிலக்காட்டு வளங்களையும் காத்து நிற்கும் காவல் தெய்வமாக காட்சியளிக்கிறார் டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன்.

இயற்கையோடு இசைந்து வாழும் ஊர்களை உருவாக்கி வருகிறார். வறுமைப் பிணியோடு பசிப்பிணியையும் ஒழிக்கும் அறப்போரில் ஈடுபட்டு வருகிறார்.

உலக உணவுப் பரிசை முதன் முதலாகப் பெற்ற பெருமையும் நம் தமிழக வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனையே சாரும்.

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள உலக நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக இருந்த முதல் இந்திய விஞ்ஞானியும் டாக்டர் சுவாமிநாதனே ஆவார்.

காமன்வெல்த் நாடுகளுக்கெல்லாம் சென்று விவசாய ஆலோசகராக அரிய சேவை செய்த வேளாண் மூதறிஞர் டாக்டர் ஜி. ரங்கசுவாமி அவர்கள்தான் தமிழ்நாட்டில் வேளாண்மை பல்கலைக் கழகத்தைத் தொடங்கி அதன் முதல் துணை வேந்தராகவும் திகழ்ந்தார். உலக அளவில் இப்பல்கலைகழகத்திற்கு பல பாராட்டுகளையும், பரிசுகளையும் பெற்றுத் தந்தார்.

21-ஆம் நூற்றாண்டில் வேளாண் தொழில், வணிகத் தொழிலாக பரிமளிக்க வேண்டுமென ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மேற்கொண்டு "வளமை 2000" என்ற அரிய நூலையும் உருவாக்கித் தந்துள்ளார்.

நெய்வேலியைச் சார்ந்த டாக்டர். சண்முக சுந்தரம், அமெரிக்க விஸ்கான்சன் பல்கலைக் கழகத்தில் உயர்நிலை ஆராய்ச்சிப் பட்டம் பெற்று, இன்று தைவான் நாட்டில் உலக காய்கறி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக பணியாற்றிக்கொண்டிருக்கிறார். சீனப் பசு என்று செல்லமாக அழைக்கப்படும் சோயா மொச்சையை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை டாக்டர். சண்முக சுந்தரத்தையே சாரும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் துணை வேந்தராகத் திகழ்ந்து அரும்பணி ஆற்றிய டாக்டர் அ. வேங்கடராமன், தமிழ்நாடு அரசில் வேளாண் துறை இயக்குநராகவும், செயலராகவும் இருந்தவர். இன்றும் உலக வங்கிக்கு வேளாண்மை ஆலோசகராக பணியாற்றிக் கொண்டிருக்கும் டாக்டர் வேங்கடராமன் தமிழ் நாடு திட்டக் குழுவின் உறுப்பினரும் கூட.

தமிழ்நாடு, உழவர் பெருமக்களுக்கு 'பொன்னி' என்ற உயர் ரக நெல் மணியை அனுசரணை ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து வழங்கிப் புகழ் பெற்றவரும் அவரே.

வேளாண் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர். வி.இராசகோபாலன் உலக அளவில் தலை சிறந்த விவசாய பொருளியல் அறிஞர் ஆவார். அவர் இந்திய திட்டக் குழுவின் ஆலோசகராகவும் திகழ்கிறார்.

வேளாண் மூதறிஞர் டாக்டர். சுந்தரம் கிருஷ்ணமூர்த்தி வேளாண்மைக் கல்லூரி முதல்வராகவும், வேளாண் துறை இயக்குநராகவும் இருந்தவர். ரஷ்யாவிற்கு தமிழ்நாட்டு வாழைப்பழங்களை கப்பலில் அனுப்பி வைத்தவர். ஓய்வு பெற்ற பின்னரும் உலக வேளாண்மை மேம்பாட்டு நிறுவனத்தைத் தொடங்கி நாட்டில் வனவளத்தை வளர்த்த பெருமைக்குரியவர். தோட்டக்கலையில் வல்லுநர் தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்த வேளாண் விஞ்ஞானிகளில் பிதாமகனாவார்.

தமிழ்நாட்டு வேளாண் விளைபொருள்கள் இன்று பல உலகநாடுகளில் விரும்பி வரவேற்கப்படுகின்றன. மதுரையில் மணக்கும் முல்லையும், மல்லிகையும், வெளிநாடுகளில் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

ஓசூர் ரோஜா ஹாலந்து சந்தையில் விற்பனையில் முந்துகிறது.

ஜெர்கின்ஸ் என்ற விரல் வெள்ளரிக்காய் இங்கு விளைவிக்கப்பட்டு ஊறுகாயாக உரு மாறி அமெரிக்கா வரை சென்று கொண்டிருக்கிறது.

வாடா மலர்களான ஆர்கிட்ஸ், கொய் மலர்கள் செங்கல்பட்டிலிருந்து ஜப்பான் வரை செல்கிறது.

மதுராந்தகத்து பட்டன் காளான் வெளி நாட்டவருக்கு அறுசுவை உணவாகிறது.

கனிகளின் அரசன் மாம்பழம், கனியாகவும், பழச்சாறாகவும் பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது.

தமிழ்நாட்டு வாழைப்பழங்கள் ரஷ்யாவிற்கு சென்றதும் உண்டு.

நம் நாட்டு மூலிகைத் தாவரங்கள் பல மருந்துகளாகவும், மாத்திரைகளாகவும் உருமாறி உலக மக்களின் நோய்களைத் தீர்த்துக் கொண்டிருக்கின்றன.

நம் நாட்டுத் தட்ப வெப்ப நிலை, நில, நீர் வளங்கள் எந்த வேளாண்மைக்கும், எவ்வகைப் பயிருக்கும் ஏற்றவையாகும். ஆண்டு முழுவதும் பசுமை போர்த்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு ஒரு வேளாண் கருவூலம். இங்கு ஆட்செலவும் குறைவாகயிருப்பதால், வெளிநாட்டவர் இந்திய நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் வேளாண் தொழில் தொடங்க ஆர்வம் காட்டுகிறார்கள்.

நவீன வேளாண்மை, ஹைடெக் வேளாண்மை வணிக வேளாண்மையுடன், இயற்கைவேளாண்மை, பாரம்பரியவேளாண்மை, வளங்குன்றா வேளாண்மை, சுற்றுச் சுழலுக்கு கந்த வேளாண்மையும் இங்கு வருவது பாராட்டுக்குரியதாகும். உயர் தொழில் நுட்பங்கள் இஸ்ரேல் நாட்டு நீர் அறுவடை, நீர் நிர்வாகம் இங்கு கையாளப்படுகின்றன.

வானம் பார்த்த பூமியெல்லாம் வளம் கொழிக்கும் பழமுதிர்ச் சோலையாக மாறி வருகிறது. வேளாண்மை ஒரு வாழ்க்கை முறை என்ற நிலை மாறி உழவும் மற்ற தொழில்கள் போல ஒரு வணிகத் தொழில் என்ற முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. உழவன் கணக்கு பார்த்தால் உழக்குக்கு மிஞ்சாது என்பது அந்தக் காலம். இன்று கணக்கு எழுதி காசு பார்க்கும் கலையாக, தொழிலாத வயல் வளம் பெருகி வருகிறது.

ஆண்டு தோறும் ஒரு கோடி உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் மாநிலம் தமிழ் நாடு. ஆண்டுக்கு 80 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்து சரித்திர சாதனை புரிந்துள்ளது தமிழ்நாடு. ஊட்டச்சத்து மிக்க சிறு தானியங்களாகிய சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு ஆகியவையும் இங்கு சிறப்பு பெற்ற தானிய மணிகளாகும்.

எண்ணெய் வித்து, சிறு தானியங்கள் கரும்பு, தென்னை ஆகிய பயிர்களில் இந்தியாவிலேயே உற்பத்தியில் முதலிடத்தில் இருப்பது தமிழ்நாடே.

வாழையை அதிக அளவில் உற்பத்தி செய்வதும் செந்தமிழ் நாடே. தக்காளி, ஏலக்காய் உற்பத்தியிலும் தமிழ்நாட்டிற்கு முதலிடம். உலகிலேயே கரும்பு உற்பத்தித் திறனில் முதல் இடத்தைப் பெற்று புகழ் பெற்றதும் நம் தமிழ்நாடே.

உணவுப் பஞ்சத்தை விரட்டிவிட்டோம். வறுமைப் பேயையும் விரட்ட வேண்டும். மேலும் பசிப்பிணியில்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

அதற்கு ஒரே வழி வேளாண்மையில் மீண்டும் ஒரு பசுமைப்புரட்சியைத் தொடங்கி வெற்றி காணவேண்டும்.

நஞ்சை விளைந்தால் மட்டும் போதாது. புஞ்சையிலும் புதுமைகளை புகுத்திட வேண்டும். புஞ்சையும் விளைந்தால் தான் பஞ்சம் நிரந்தரமாக நீங்கும்.

உயர் தொழில் நுட்பங்களைக் கொண்டு தரிசு நிலங்களையெல்லாம் தங்க வயல்களாக மாற்றிடவேண்டும். தமிழக உழவர்கள் கடும்

தமிழ்த் தேனீ பெருங்கவிக்கோ

-பேராசிரியர் செ. ஏழுமலை-

ஓயாது உழைக்கும்
தமிழா!-
கவிதை வாளேந்தி
உலகை
வலம் வரும்
தமிழா!-

எம் கடன்
தமிழ்பணியே
என
பவனிவரும்
தமிழா!-
இத்தரணிக்கு,
தமிழ்ப்பணிக்கு
நீ ஒரு
வித்தகன்!

ஆயிரமாயிரம்
கவிதைகளால்
ஆயிரமாயிரம்
இதயங்களுக்கு
இதயக் கனியாகி
நின்றாய்!
நீ
சங்கத் தமிழனாய்
இருந்து
மீண்டும் பிறந்தவனா?

ஏனெனில்,
ஏளனப்படும்
கவிதை நடுவே
உன் கவிதைகள்
ஏற்றம் பெற்று
இமயமென
நின்கின்றது-

உன் கவிதை
கற்பதற்கோ
தனியொரு
கலைக் களஞ்சியம்
தேவை!
உன் கற்பனை
வரிகளில்
வீரமும் உண்டு
விவேகமும் உண்டு...
உன் தமிழுணர்வான
கவிதைகளைக்
கற்பவன்
தள்ளாடும்
மூத்தோனாய் இருந்தாலும்
தீரமிட்டு எழுவான்-
உன் கவிவீச்சால்
தூய தமிழ் வரி
மூச்சால்-

ஆடம்பரமில்லா
உலகை பவனிவரும்
தீரக்கவிஞன் நீ...

உன்னைப் போல்
எண்ணிலா
கவிதையாத்தவர்
இன்றும் எவரும்
இலர் புவியில்-

உலகம் உருண்டையா
நீ உருண்டையா
தமிழ் என்ற
விதைகளை
தரணி எங்கும்
முழங்கு கின்ற
உன் பெருமையோ
உயரியது-

கவிதைக்கோர்
சங்கம் அமைத்தால்
அதற்கு நீயே தலைவன்-
உனக்கு நிகர்
எவரு மிலர்
இப்புவியில்-
உரமிலா நெஞ்சமும்
வரைவிலா வஞ்சமும்
பொறை மறைவான

உள்ளமும்
கொண்ட பூமியில்...
நெஞ்சில் உரத்தோடும்
நேரிய திறத்தோடும்
ஏறுநடைபோடும்
மீசையை சுழற்றிவரும்
ஏறு கவிஞன் நீ...

எத்தனை எத்தனை
கவிதைகள் யாத்தாய்
தமிழகத்தில்
எத்தனை முறைகள்
கவிப்பயணம் போத்தாய்...
தமிழால்
நீ உயர்வு கண்டாய்
இல்லையோ!
தமிழும் உன்னால்
பெருமிதம் கொண்டது...
அல்லவோ!
வாழிய நின் பணி
தாய்லாந்து மண்ணிலும்
தேவர்கள் மலர் மழை
பொழியாவிடினும்...
சரித்திரம் தன்
கால மழையால்
உன் கவிபுகழ் பாடும்.

உழைப்பாளிகள், புதிய தொழில் நுட்பங்களைத் தயங்காமல் கையாண்டு சாதனை படைக்கக் கூடியவர்கள்.

இன்றும் கூட பொள்ளாச்சி, தேனி பகுதி விவசாயிகளில் சில முன்னோடிகள் நெற்பயிரில் எக்டேருக்கு 22 டன் நெல் விளைவித்து மாநில பரிசு பெற்று, வேளாண்மைச் செம்மல்களை பட்டங்களும் பாராட்டுகளும் பெற்றுள்ளனர். கிராம மகளிர் கூட டென்மார்க் நாட்டு உதவியுடன் வேளாண் பயிற்சி பெற்று ஆணுக்கு நிகராக பயிர்த்தொழிலை பாங்காகச் செய்து வருகிறார்கள்.

கோவையைச் சார்ந்த ஒரு பெண் விவசாயி பாரத விவசாய மன்றத்திலிருந்து ஒரு டிராக்டர் பரிசு பெற்றுள்ளார். இளம் விவசாயிகளும் எழுச்சி பெற்று களம் இறங்கியுள்ளார்கள்.

வயலெல்லாம் பயிராக,
பயிரெல்லாம் மணியாக,
மணியெல்லாம் விலையாக,
விலையெல்லாம் வளமாக,
வளமெல்லாம் வாழ்வாக
மலர, தமிழக விஞ்ஞானிகளும்,
விவசாயிகளும் பல சாதனைகளைப்
புரிந்து வரலாறு
படைத்து வருவது
பாராட்டுக்குரியதாகும்.

வள்ளுவர் வகுத்த வயலோவியமாகத் திகழும் தமிழ்நாடு வேளாண்மையில் தலை சிறந்த நாடாக வளர்ந்து வருவதைக் கண்டு உலகமே வியக்கிறது.

உலகம் இருக்கிறது எப்படி?

பி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி

பழந்தமிழ் இலக்கியங்கள் இன்றுவரை பாராட்டிப் போற்றப்படுவதற்கு அவற்றின் சமூக சுவாச உணர்வுகளே காரணம். பண்டைப் புலவர்களின் வாக்கு மட்டுமன்று, அவர்கள் வாழ்க்கையும் பண்பெனும் தளத்தில் எழுந்து நிற்பவையாகும். எப்படியாவது வாழக்கைக் குரிய செல்வம் கிடைத்தால் போதும் என்று புலவர் எண்ணியவர் அல்லர்; சிறிது காலம் தாழ்த்தித் தானும் அந்தப் பரிசிலைப் பெற்றுக் கொள்ளாத செம்மாப்பு இன்றும் நமது புருவங்களை உயரச் செய்யும் **''எத்திசைச் செலினும் அத்திசைச் சோறு''** என்று தம் புலமைப் பெருமிதம் தோன்ற உரைத்தமை, தமிழ் அறிந்தவர் முன்பு தண்டு கொண்டு ஆளும் தார் வேந்தர் ஆயினும் அவரினும் மிக்கவர் அல்லர் என்பதை மௌன மொழி களில் உரத்துக் கூறுவதாகும் .

''கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று''

என்று ஒரு மன்னனிடமே கூறுகிற மாட்சிமை புலவருக்கு இருந்தது. புரவலரும் இதை உணர்ந்து வழங்கினர்.

உலகம் எவ்வாறு அழியாமல் நிலை பெற்றிருக்கிறது என்கிற வினைவைத் தன் சிந்தையில் எழுப்பிக் கொண்டு அதற்குச் சிறந்த விடை ஒன்றைத் தருகிறான் ஓர் அரசன். உலகம் பிற கோள்களின் ஈர்ப்பாற்றலால் ஓர் ஆதாரமும் இன்றி நின்று சுழன்று கொண்டுள்ளது.

உலகம் சுழன்று கொண்டிருக்கிறது என்பதை,

''சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

என்கிற குறட்பாவும் உணர்த்தும்

ஆதாரமின்றி உலகம் தொங்கிக் கொண்டுள்ளதைத் தமிழர் அறிந்து வைத்திருந்தமை உலகை, ஞாலம் என்று வழங்கும் சொல்லாட்சியால் விளங்கும். விஞ்ஞானி என்கிறவன் விரிந்த இவ்வுலகத்தின் பஞ்ச பூதங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்து அறி கிறான். மெய்ஞானி, மனித உடலில் உள்ள பஞ்ச பூதங்களைக் கொண்டு ஆய்ந்து உணர்கிறான். அற்புதங்களை நிகழ்த்துகிறான். விஞ்ஞானியின் ஆய்வு பஞ்ச பூதங்களைக் கொண்டு வெளியில் நிகழ்வது. மெய்ஞ் ஞானியின் ஆய்வு - பஞ்ச பூதங்களைக் கொண்டு தனக்குள் - ஆன்மாவுக்குள் தேடுதல் நிகழ்த்துவது.

விஞ்ஞானியின் ஆய்வு முடிவுகளைத் தமிழ் மெய்ஞ்ஞானிகளாம் புலவர்கள் அன்றே கண்டு உரைத்தமை நாம் விளங்கிக் கொள்ள முடியாத வியப்புக் குறிகளாகும். ஞாலம் என்கிற சொல்லாட்சி நாம் ஞாலத்தில் நிமிர்ந்து நிற்கச் செய்வது.

'இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது
எனத் தமியர் உண்டலும் இலர்''

இப்படித் தொடங்கி உலகம் நிலைப் பெறப் பண்புடையாரின் பெருமையே காரணம் என்று கட்டியம் கூற வருகிறான் மன்னன். நன்றாகச் சாப்பிட்டு விட்டால் உடன் வருவது அயர்வு: சோம்பல். அத்தகைய சோம்பலால் உறங்காதவராய் இருக்க வேண்டும். ''துஞ்சலும் இலர்'' தனக்குப் பெருவாழ்வு வந்து விட்டால் பிறரைக் காரணம் இன்றியே வெறுக்கும் இயல்பு வந்து சேரும். உயர் மாந்தர் வெறுப்பு அற்றவராய் இருப்பர்; வழுதி அவரையே வியந்து கூறுகிறான். ''முனிவு இலர்'' என்று

''அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுதற்கு
அஞ்சல் அறிவார் தொழில்''

மூன்றாம் இயக்க விதி

-குமரி நாடன் தனசேகரன்-

இறைந்து கிடக்கும் பொருளனைத்தும்
இறைமை என்றார்கள் - தமிழர்
இறைமை என்றார்கள்

கடந்தும் உள்ளும் இருக்கும் மகவை
கடவுள் என்றார்கள் - தமிழர்
கடவுள் என்றார்கள்

தொய்ந்து உண்மை சொன்னவரை
தெய்வம் என்றார்கள் - தமிழர்
தெய்வம் என்றார்கள்

தூய்மை நிறைந்த உள்ளங்களை
வணங்கி நின்றார்கள் - தமிழர்
வணங்கி நின்றார்கள்

ஐந்து பெரும் ஆற்றல்களின்
தன்மை கண்டார்கள்
அவை நமது அடிப்படையெனப்
போற்றி நின்றார்கள் - தமிழர்
போற்றி நின்றார்கள்

குழந்தைக்கு நீ செய்வதெல்லாம்
உனக்கும் வந்திடும் என
தெய்வத்திற்கு சேயோன் குமரன்
பெயரைத் தந்தார்கள் - தமிழர்
பெயரைத் தந்தார்கள்

விசும்பு உந்தன் பதிவுகளை
விரைந்து ஏற்றிடும் காலம்
விளங்கும் போது அது உனக்கு
பாதை சமைத்திடும் - விசும்பு
பாதை சமைத்திடும்

தொடர்ந்து வந்த தொல்லை தரும்
புராணச் சிக்கலில்
தமிழரது மெய்யியலோ
சேர்ந்து மறைந்தது - உண்மை
சேர்ந்து மறைந்தது

இயற்கையை நாம் போற்றுவதால்
இன்னல் இல்லையே
வேண்டுவதால் வரும் தொல்லை
இல்லை இல்லையே - என்றும்
இல்லை இல்லையே

ஆரியத்தின் முன்னிருந்த
அருமை மெய்யியல்
அகன்ற வாழ்வியல் ஆழம் தரும்
பண்பு வென்றிடும் - உலகில்
மனிதம் நின்றிடும்

அதனை மீட்க அருமைத் தமிழர்
இணைந்து முனைந்திட்டால்
ஆக்கம் வரும் ஆக்கம் வரும்
அமைதியும் வரும்

''அஞ்சுவது அஞ்சுதல்'' அறிவார் தொழில் ஆதலின் வழுதியின் மனிதன் ''அஞ்சுவது அஞ்சுகிறான்''.

செல்வம் எப்படிக் கிடைத்தாலும் போதும் என்று சிந்தை செய்யாமல், நேரிய முறையில் வருதல் வேண்டும் என்று நினைத்தல் வேண்டும்.

மலையளவு செல்வம் ஆயினும் பழியொடு வந்தால் வேண்டா என்கிற உறுதிப்பாடு உடையார் வேண்டும். புகழ் வருவதாயின் தன் உயிரையும் கொடுத்திட மகிழ்வார். மற்றவர் நலனுக்காகவே உழைத்துத் தனக்கெனும் தன்னல முனைப்பின்றி இருப்பவர் எவரோ அவரே சால்பு உடையவர் ஆவார்.

வள்ளுவரும் வாழ்வியலும்

-டாக்டர் சி. உலகநாயகி பழனி-

'கடவுளுக்கு மனிதன் கூறியநூல் திருவாசகம்
மனிதனுக்குக் கடவுள் கூறியநூல் கீதை
மனிதனுக்கு மனிதன் கூறிய நூல் திருக்குறள்

என்ற பெருமை பெற்ற நூல் திருக்குறள். எல்லா மதத்தினரும் எல்லாச் சமயத்தினரும் எல்லாக் காலத்தவரும் எல்லாத் தேசத்தவரும் ஒருங்கே ஒப்புக்கொண்டு மனிதனின் வாழ்வியல் பெட்டகமாகத் திகழ்கிறது திருக்குறள். வள்ளுவச் சிந்தனைகளை மனிதனின் மூன்று ஞானத்தோடும் ஒப்பிடலாம். அதாவது விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம். மனிதன் அஞ்ஞானத்தை விலக்கி, மெய்ஞ் ஞானத்தை உள்ளத்தில் ஏற்று அதன் வழி விஞ்ஞான அறிவினைப் பெற்றால் இந்த உலகம் நின்று நிலைக்கவும், மானுடம் பெருமை பெறவும் வழியாய் அமையும்.

மனித வாழ்வில் பெரும் தோல்விக்குக் காரணமாய் அமைவது ஆசை ஒன்றுதான். இந்த ஆசையை அடக்கினாலே வாழ்வில் மனிதன் வெற்றியின் முதல் படியைக் காணலாம். 'ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள், ஈசனோடா யினும் ஆசை அறுமின்கள் என்பது திருமூலர் வாக்கு.

அருள் ஞானி போதி மரத்துப் புனிதர் புத்தர்பிரானின் புனிதமொழியும் 'ஆசையறு மின்' என்பதே. துன்பத்திற்கு மூல காரணம் ஆசையே என்றார். முழுவதும் துறந்து முற்றுமுணர்ந்த அவ்வருள் ஞானி.

ஆசை கொள்ளுதல்- பிறன்பொருளை விரும்பி எவ்வாறேனும் கவர முயலுதல் - நல்லறமன்று. எனவேதான் இல்லற வியலில் வள்ளுவர் வெஃகாமையைக் கூறினார். நீர் வேட்கையால் வருந்திச் சாவ நேரினும் ஆவிற்காக இரத்தல் தீது என்ற வள்ளுவப் பெருந்தகை பிறர் பொருளைக் கவர்தலையும் தீதெனவே வலியுறுத்துகின்றார்.

'வறுமையே வந்தாலும் பிறர் பொருளை விரும்பாதே! ஐம்புலன் களையும் வென்ற அறிவுடையோர் செயல் அதுவே'' என்பது தமிழ் மறை தந்த வள்ளுவரின் தனிக் கொள்ளை யாகும். சீன நாட்டுச் சிந்தனையாளரான கன்பூசியசும், 'பட்டினியால் வாடும் மாண்பு மிகு மனிதன், ஒரு வேளை உணவு கிடைக்கிறது என்றால்கூட அதற்காக அவன்தான் வாழ் வாங்கு வாழ நினைத்த, பண்பாடு நிறைந்த அந்த உயர்ந்த அற நெறியிலிருந்து பிறழமாட் டான்'' என்று கூறுவதும் எண்ணுதற்குரியது.

வாழும் நெறி முறைகள் இவை எனத் தெரிந்தும் 'ஆசைமனம்' அவற்றை மறந்து - மறுத்து அறநெறியை மீறிச் செல்லுகிறது. திருடுவது. பொய் சொல்லுவது. ஏமாற்றுவது முதலான குற்றங்கள் எவ்வளவு திறமையாகச் செய்யப்பட்டாலும் அவை அறிவின் செயலன்று. ஆசையின் செயல்களே! இவை தவறுகள் என உணர்த்தி நல் வழியில் செலுத்தத் தூண்டுவதே அறிவின் செயல்.

ஆகவே ஆசையை விலக்கி நல்லறிவு பெற்று வாழ்வதே வாழ்க்கை! இத்தகைய வாழ்க்கை வாழ்வது தான் மனித வாழ்வு. இந்த உயர்ந்த குறிக்கோள் உள்ளத்தில் வளர்ந்தால் நம் மனம் இலட்சங்களை நாடாமல் இலட்சி யத்தை நாடி வெற்றி பெறும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாழ்வியல் உண்மை.

வள்ளுவரின் ஓரங்க நாடகம்

-டாக்டர் கி.மைதிலி

மொழி தோன்றுவதற்கு முன்பே மனிதனிடம் நடிப்பு என்பது தோன்றி வளர்ந்துவிட்டது. சைகையால் தன் கருத்தை உணர வைத்தான். 'போலச் செய்தல்' எல்லாருக்கும் ஏற்றதாக இருந்தமையால் நடிப்பு வளரலாயிற்று. பொழுது போக்கிலும் இடம் பெறலாயிற்று. நெஞ்சம் கவர்ந்து நிலைத்த இன்பம் தரும் நிலையையும் அடைந்தது.

இந்தப் புகழை எய்திய நாடகம் முத்தமிழுள் ஒன்று. முத்தமிழ் என்று கூறினாலும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க இயலா நிலையை உள்ளடக்கியே மூன்றும் திகழ்ந்தன. கவிதையில் இசையும், நாடகப் பாங்கும் இருந்தன. நாடகத்திலும் கவிதை இசை நயம் இருந்தன. உரைநடை பெரு வழக்குப் பெற்றபோது நாடக வடிவங்களில் மாற்றங்கள் நிகழ்ந்தன. அப்போதும் இயலும் இசையும் அதில் பின்னியிருந்தன. இன்றும் அந்நிலையே பெரும்பான்மையாக உள்ளது. வாழ்க்கையை நாடகமாகக் கண்டவர்கள் மக்கள். அதனால் நாடகத்தின் வாழ்க்கைப் போக்குகளே இடம் பெறுகின்றன.

வள்ளுவர் புனைந்தது கவியானாலும் இசை நயமும், நாடகப் போக்கும் இணைந்தே காணப்படுகின்றன. சங்க இலக்கியத்துள்ளும் நாடகப் போக்குள்ள பாக்களே உள்ளன. சிலப்பதிகாரத்துள்ள கானல் வரி, மாதவி கோவலனின் ஊடல், நடத்தை நாடகப் பாங்கில் அழகுற விளங்குகின்றது. வள்ளி குறவஞ்சி போன்ற நாடகங்களிலும் காணும் கதை மாந்தர்களிடையே ஊடல் பொருளே இன்றியமையாததாக இடம் பெறுகின்றது. கலை நயம் தெரிந்த மாதவியிடமும், கல்லாத பாமரரிடையேயும் ஊடற் பொருளே கருத்தாயமைந்தது சிந்திக்கத்தக்கது. எல்லாரும் சுவைக்கும் பொருளாக ஊடல் இருக்கின்றமையை இச்சான்றுகள் காட்டும். வள்ளுவரும் புலவி, புலவி நுணுக்கங்களை அழகிய நாடகப் பாங்கில் எடுத்துரைக்கின்றார்.

எத்தகைய 'நாடக வடிவமாக இருந்தாலும் அதற்கு இன்றியமையாததாகக் கருதப் படுவது சக்தி என்னும் உறுப்பாகும். இது முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என ஐந்து வகைப்படும் என்று பரிதிமாற்கலைஞர் தம் நாடக நூல் பற்றிய ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளார். தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி, உச்சகட்டம், முடிவு அல்லது வீழ்ச்சி என இன்று நாடக நிலைகளாகக் கூறுவன வற்றோடு இவற்றை ஒப்பிடலாம். ஓரங்க நாடக வடிவத்திற்கும் இந்நிலைகள் உள்ளன.

ஊடலின் நுணுக்கம் மட்டும் பாடு பொருளாகக் கொண்டு 'புலவிநுணுக்கம் படைத்தமையைச் சான்றாகக் காட்டலாம். ஓரங்க நாடகம் மிகக் குறைந்த நேரமே நடிக்கப் படுவதாகும். மிகக் குறைந்த பாத்திரங்களே இடம்பெறும் மிக இனிய பொருளே கதைக்கு மையமாக இருந்து விளக்கமோ வருணனையோ தேவையற்றதாக அமைய வேண்டும். வள்ளுவரும் இவற்றை நன்கு உணர்ந்திருக்கின்றார். மிகக் குறைந்த நேரத்தில் இரு பாத்திரங்களே இடம்பெறும் ஒரேகாட்சியை அமைத்திருக்கின்றார். கணவன், மனைவியே இடம் பெறுகின்றனர். புலவியே மையப் பொருள் என்பதை மனைவி பேசும் முதல் பேச்சிலேயே உணர வைக்கின்றார். எனவே ஓரங்க நாடகத்திற்கு முழு இலக்கணமாக வள்ளுவர் புலவி நுணுக்கத்தினைப் படைத்துள்ளமையை அறியலாம். வாழ்க்கையில் அறிவும், உணர்வும் கலந்துள்ள இனிய நிலையை எடுத்துரைக்கின்றார்.

கணவன் நேரங் கழித்து வருகின்றான். மெல்ல நடந்து வருவதனாலேயே நேரமாகி விட்டதைப் போல உணர்கிறாள் மனைவி. அதனால் ஊடலுக்கு ஒரே காரணத்தை ஏற்படுத்திக் கொள்கிறாள். பெண்மை உள்ளவரெல்லாம் உன் அகன்ற மார்பினைக் கண்ணால் திளைப்பார். அதனால் உன்னை நெருங்க

மாட்டேன் என்கின்றாள். 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்னும் அவனுடைய அழகுருவைப் பெருமையோடு பார்க்கின்றாள், மகிழ்கின்றாள். ஊடலுக்கும் காரணமாக்கு கின்றாள். புலவி நாடகம் தொடங்குகின்றது. ஓரங்க நாடகத்தின் தோற்றத்தை, மனைவி பாத்திரம் மையப் பொருளை விளக்கித் தொடங்குகின்றது.

"பெண் இயலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்
நண்ணேன் பரத்த நின்மார்பு"

பரத்தநின் மார்பு என்னும் தொடர் அகன்ற மார்பு என்றும் எல்லாரும் திளைப்ப தால் பொதுப் பெண்டிர் போலப் பொது ஆடவன். பரத்தன் என்றும் பொருள் தரும். மனைவி சினம் கொண்டிருக்கிறாள் என உணர்வு வயப்பட்ட கணவன் சிலேடையை உணரும் நிலையில் இவன் ஊடலைப் போக்கும் வழி எதுவென்றே சிந்திக்கின்றான்.

ஒருமுறை தும்மியபோது எல்லாவற்றை யும் மறந்து மனைவி வாழ்த்தியதை நினைவு கூறுகின்றான். அதனால் மீண்டும் தும்மினான் முதன் முறை தம்மையறியாமல் வாழ்த்தியதை மனைவியும் நினைவு கூர்கின்றாள். அதனால் இந்த முறை அவள் ஒலித்து வாழ்த்தவில்லை. நாம் வாழ்த்துவோம் என்பதறிந்தே வேண்டு மென்றே கணவன் தும்மியதை அறிந்து கொண்டதினால் அவன் கேட்கும்படி வாழ்த் தாமல் மனத்திற்குள் வாழ்த்துகின்றாள். வேண்டுமென்றே புலவியைத் தொடங்கியிருக் கின்றாள். அதனால் எச்சரிக்கையோடு இருக் கின்றாள். ஊடல் தொடங்கியதிலிருந்து ஒருபடி முன்னேறி இருக்கின்றது.

தன் முயற்சி வெற்றியடையவில்லை என்பதை உணர்ந்த கணவன் அவள் மிகுந்த சினம் கொண்டிருப்பதாகவே கருதுகின்றான். முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கின்றான். மேலும் ஒரு நினைவு அவனுக்கு வருகின்றது. இது மகிழ்வூட்டும் நினைவு அன்று. அதனை மீண்டும் செய்தால் அவளுடைய சினம் உச்சத்திற்குப் போய்விடுமோ என அஞ்சுகின்றான். அவளை மகிழ்வூட்டுவ தாக எண்ணிக் கொண்டு எவரும் சூடும் நீர்ப்பூ, கொடிப்பூ, செடிப்பூ போன்றவற்றைச் சூடாமல் மரக்கிளையில் பூத்த பூவை ஒரு முறை சூட்டிக் கொண்டான். இதைக்கண்டு அவள் சிரிப்பாள் என்பது அவன் எண்ணம். மாறாகத் தனக்குப் பிடித்த பூவை சூட்டிக் கொள்ளாமல் வேறு எவருக்கோ பிடித்ததைச் சூட்டிக் கொண்டதாக அவள் சினங் கொண்டதை நினைவு கூர்கின் றான். மனைவியைச் சிரிக்க வைக்க எண்ணி வேறொன்றாகிவிட்ட நிலை இப்போது நினை வுக்கு வர அம்முயற்சியை கைவிடுகின்றான்.

'நகையை விளக்கும் செயலைவிடச் சொல் கொஞ்சம் இரக்கத்தை உண்டு பண்ணும் என்னும் முடிவுக்கு வருகின்றான். அதனால் எல்லாரைக் காட்டிலும் காதலை உன்னிடம் நிரம்பவே காட்டுகின்றவன் நான் என்கின்றான். உடனேயே பொருளை மாற்றிப் புரிந்து கொண்டு போருக்கு வருகின்றாள் மனைவி. 'எல்லாரைக் காட்டிலும்' என்றால் இன்னும் உனக்கு எவர் எவர் உள்ளனர்? எவரைக் காட்டிலும் என்னிடம் அன்பு மிகுதி? என வினாவைத் தொடுக்கின்றாள். தன் பேச்சுக்கு இப்படி ஒரு பொருள் உள்ளமை அவனைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றது. நாடகத்தின் வளர்ச்சியும் நன்கு புலப்படுகின்றது.

தான் விளக்கியதை அவளுடைய வெகுளி யால் முறையாக உணர்ந்து கொள்ளவில்லை என்று கருதிய கணவன் அவளுக்கு உறுதி தருகின்றான். இந்தப் பிறப்பில் உன்னை பிரியமாட்டேன் என்று உறுதி கூறுகின்றான். உடனே அவள் கண்களில் நீர் கலங்குகின்றது. அப்படியானால் அடுத்த பிறவி முதல் என்னைப் பிரிவதற்கு முடிவு செய்து விட்டாய் அல்லவா? என்று கண்ணீர் வினா எழுப்புவதை உணர்கின்றான் கணவன். நாடகம் முதிர்ச்சி யைப் பெறத் தொடங்கிவிட்டது.

பேசாமலிருந்தவள் கண்ணீர் விடத் தொடங்கினாள். அது நாடகத்தின் வளர்ச்சி

யைக் காட்டியது. அழுதவள் அடுத்து வெகுளி யோடு பேசத்தானே வேண்டும்.அது நாடகத் தின் முதிர்ச்சி நிலையாகும். எப்படியோ அவள் பேசிவிட்டாள். இனி ஊடல் தீர்ந்தது என்று கருதுமாறு அவள் பேச்சு அமையவில்லை. நாடகத்தின் சிக்கல் முதிர்ச்சியடைந்த நிலையையே இது காட்டுகின்றது.

கணவன் இருமுறை இந்த ஊடலின் போது பேசினான். ஆனால் பொருளில் மாற்றம் வருமாறு அவை அமைந்துவிட்டனவே என வருந்தினான். இந்த முறை சரியாகப் பேசிட வேண்டும் என்னும் எண்ணத்தால் 'நான் உன்னையே நினைத்தேன் நீதான் தவறாகப் புரிந்து கொண்டாய்' என்று பொருள்பட 'நான் உன்னை நினைத்தேன்' என்கின்றான். அழுகை ஒப்பாரியாகின்றது. என்னை நினைத்தாய் என்றால் இதுவரை என்னை மறந்தாய் என்று தானே பொருள்? ஏன் என்னை மறந்தாய்? என்று பேச்சாலேயே அவனை மடக்குகின்றாள். நாடகத்தின் முதிர்ச்சி நிலையினை மேலும் சில பேச்சுகள் காட்டவேண்டும். அதற்கும் நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன.

பேசினால் அது இன்னொரு பொருளைத் தருவதை உணரும் கணவன் பழைய செயலைச் செய்யத் தொடங்குகின்றான். அவள் தான் பேசத் தொடங்கிவிட்டாளே 'இனி ஒருமுறை தும்மினாள் வாழ்த்துவாள்' ஊடல் முடிந்து விடும் என முடிவுக்கு வருகின்றான். அதற்காகத் தும்முகின்றான். அவளும் வாழ்த்துகின்றாள். புலவி முடிந்ததா என்றால் இல்லை. வாழ்த்திய வாயினாலேயே போருக்கும் ஆயத்தமா கின்றான்.

பிறர் நினைத்தால் தும்மல் வரும். நான் எதிரிலேயே இருக்கின்றேன்.. இப்போது தும்மல் வருகிறது என்றால் வேறு எவளோ நினைக்கின்றாள் என்றுதானே பொருள்? யார் நினைக்க உனக்கு இத்தும்மல் வந்தது என வினவுகின்றாள்.

பேச்சைப் போலவே செயலும் ஊடல் கூட வழி செய்து விட்டதே என வேதனை கொள்கின்றான். அப்போது உண்மையாகவே அவனுக்கு தும்மல் வருகிறது. இம்முறையும் தும்மினால் வேறொருத்தி தன்னை நினைப் பதை உறுதிப்படுத்திவிடுவாள் என்பதனால் தும்மலை அடக்குகின்றான். ஆனால் அதனைக் கண்ட அவள் அவனைவிடவில்லை. உன் னவள் நினைப்பதை எனக்கு மறைக்கத்தானே தும்மலை அடக்குகின்றாய் என்று கேள்வி கேட்டு அவனுடைய பேச்சு செயல் எல்லா வற்றையும் தடுத்து விடுகின்றாள். நாடகத்தின் முதிர்ச்சி முழுமையாகிவிட்டது இனி வீழ்ச்சிதான்.

மனைவியிடம் வீழ்ந்த கணவன், அவள் ஊடலைத் தீர்க்க தன்னை அவளிடம் ஒப் படைக்கின்றான். இந்த நிலையையும் அவள் விடவில்லை. மனம், மெய், வாக்கு அனைத்தும் செயலற்ற நிலையில் அவனுடைய கண்கள் அவளையே நோக்கச் செய்வதறியாது நிற் கின்றான். இவ்வளவு அறிவுள்ளவளா என நினைத்திருந்து நோக்குகின்றான். அவன் உணர்வுகளைப் புரிந்து கொண்ட அவள் எவளோடு என்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் எனக் கேட்டு கனவுலகத் திற்குக் கொண்டு வருகின்றாள். அப்போதும் அவன் பேசவில்லை. அமைதியே குடி கொண்டது. முதிர்ச்சி வீழ்ச்சியுற்றது நன்றாக நாடகமும் முடிகின்றது.

நாடகம் நன்கு முடிவதை அடுத்த இயலான 'ஊடலுவகையில்' முதற்குறள் வழி வள்ளுவரும் உணர்த்துகின்றார். மனைவி தோழியிடம் கூறுவதைப் போல அக்குறள் உள்ளது. அவரிடம் தவறு இல்லையானாலும் ஊடல் கொண்டேன். அது அவரை என் மீது பேரன்பு செலுத்தச் செய்யும் தகைமை வாய்ந்தது என்பதால் அவ்வாறு ஊடல் கொண் டேன் என்று மகிழ்வோடு கூறுகின்றாள். புலவி நுணுக்கத்திலேயே அது நம்மால் உணர்ந்து கொள்ளப்படாமலும் உணராதார்க்கு உணர்த்த அமைத்தார். அடுத்த ஓரங்க நாடகத் தின் முதற் காட்சியாகவும் அது அமைகின்றது. ❋

தென்னகமும் தெற்காசியாவும்

முனைவர் வா.மு.சே ஆண்டவர்



தெற்காசிய நாடுகளுக்கும் பழந்தமிழகத்திற்கும் பண்பாட்டுத் தொடர்புகளும், குடியேற்றத் தொடர்புகளும், போர்வழித் தொடர்புகளும் உலக வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

தெற்கு ஆசியா முழுமையும் இந்தியப் பண்பாடு, மற்றும் சீனப் பண்பாட்டின் தடயங்களை முழுமையாகக் காணலாம். மதங்களைப் பொறுத்தவரை, இந்துமதம், புத்தமதம், இசுலாமிய மதம் என மதங்கள் ஒட்டியும் உறவாடியும் பல நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளன. இதன் ஊடாக தமிழ்ப் பண்பாட்டின் வேர்எவ்வாறு பரவியுள்ளது கண்டறிவது தமிழர் கடமையாகும்.'

தெற்காசிய நாட்டு வரலாற்றைப் பொறுத்தவரை கனி வளங்கள் நிறைந்த பரப்பாகும். மலேசியாவைப் பொறுத்தவரை ஈயவளங்கள் நிறைந்தபகுதி. தாய்லாந்து நவமணிகளுக்கு பேர்போன இடம். இந்தோனிசியத் தீவுகளில் பல உலோகங்கள் கிடைக்கின்றன. ஜாவா, சுமத்திரா, தானியங்களின் களஞ்சியம் என போற்றப்பட்ட நாடுகள்.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் மிகவும் செழிப்படைந்திருந்த மக்கள், ஐரேப்பியரின் சுரண்டல்களால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டனர். தாய்லாந்து நாட்டைப் பொறுத்தவரை மேனாட்டார்கள் அதிகார வர்க்கத்தின் அகோரப் பசிக்கு இந்த மக்களைப் பயன்படுத்திக் கொண்டார். விடுதலைக்குப் பிறகும் இவர்கள் வந்து செல்லும் ஆண்டிமடமாக வைத்து செயல் பட்டு வருவது உலகப் பண்பாட்டிற்கே இழிவைத் தரும் செயலாகும். தாய்லாந்து பண்பாட்டு வளம் பாரம்பரியச் செல்வாக்கும் தாய்லாந்தை தெற்காசிய நாடுகளுக்குள்ளேயே தனித்துவம் மிக்க நாடாக உருவாகிறது.

இங்கு வாழும் மக்கள் தங்கள் தாய் மொழிக்கே முதலிடம் தருகின்றனர். அன்னியர் சுரண்டலால் வெறுப்படைந்து மக்கள் அந்நியப் பண்பாட்டையும் அந்நிய மொழியையும் புறக்கணிக்கின்றனர். எல்லா நிலைகளிலும் அவர்கள் தாய்மொழியான ''தாய்'' மொழிக்கே முக்கியத்துவம் தருகின்றனர்.

இந்த நாட்டின் அரச பாரம்பரியம் முடிசூட்டும் விழாவின் போது செய்யப்படும் சமயச் சடங்குகள் தென்னகச் சடங்குகளோடு பெரிதும் தொடர்புடையவை.

தெற்காசிய நாடுகளின் பண்பாட்டுச் செல்வங்களான அங்கோவார்ட் கோயில், போராபுதூர், மற்றும், ஓம்பா, அங்கார், ஸ்ரீவிஜயா, மகிஜபாட் போன்ற நாகரிங்கள் பெருமையான பிரான்சு, டச்சு அறிஞர்களே உலகிற்கு எடுத்துக்காட்டினார்.

சைலேந்திரா என்ற மன்னனின் ஆட்சி அமைந்த சைலேந்திரப் பேரரசு தெற்காசிய நாடுகள் அனைத்திலும் கொடி கட்டிப் பறந்தது. தெற் காசிய நாடுகளில் தாய்லாந்திற்கென்று தனித்த வரலாறு உண்டு.

பண்பாட்டு வழித் தொடர்பு

தெற்காசிய நாடுகள் முழுமையுமே இந்தியப் பண்பாட்டின் மறுபதிப்புகளாகவே காணப்படுகின்றன. கிறித்துவுக்குப் பிறகு ஏற்

பட்ட வைதீகச் செல்வாக்கு தெற்காசிய நாடுகள் முழுவதும் பரவியது. ஆனால் பர்மா, தாய் லாந்து, இந்தோசீனா ஆகிய நாடுகளில் சீனப் பண்பாட்டின் தாக்குரவு அதிகம். மற்றைய தீவுகளான மலேசியாவும் பிற இந்திய தாக்குரவிற்கு உள்ளானவை.

புத்தசமயத்தின் தாயகமான இந்தியாவி லிருந்து தான் புத்த சமயம் தெற்காசிய நாடு களுக்குள் பரவியது. புத்த மதம் வைதீக மதத்தின் செல்வாக்கம் மகாயாண புத்தமதமாக மாறி புத்தர் பெருமானே பத்து அவதாரங்களில் ஒன்றாக ஆக்கப்பட்டார். வைதீக கலையும் புத்த மதக் கலைகளும் ஒன்றிணைந்த ஒரு கலைப் பண்பாடு தெற்காசிய நாடுகளில் பரவியது. தாய்லாந்திலும் இத்தகைய வைதீகம் கலந்த பண்பாட்டையே நாம் காணமுடியும்.

தாய்லாந்து நாட்டின் இன்னொருபெயர் ''சியாம்'' என்பது. இதற்கு சிங்கம் என்று பொருள். தமிழர்களின் வரலாற்றில் 'சிங்கம்' பல்லவர்களின் சின்னமாக இருந்தது. நரசிம்ம வர்ம பல்லவன், மகேந்ததிர வர்மன் போன்ற பெயர்களைக் எடுத்துக்காட்டாகக் கொள்ள லாம். வர்மன் என்று பல்லவ மன்னர்கள் பெயர்கள் முடிவது போல சூரியவர்மன் ஜெயவர்மன் இந்திரவர்மன் என்ற தெற்காசிய நாடுகள் மன்னர்களின் பெயர்களும் முடி கின்றன. இது ஆராய்தற்குரியதாகும்.

தெற்காசிய் நாடுகளில் திட்டமிட்டக் குடியேற்றம் பல்லவர் ஆட்சிக் காலத்தில்தான் நடந்தது என பண்டித நேரு அவர்கள் கண் டுணர்ந்த இந்தியாவில் என்ற நூலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னொரு முக்கிய செய்திதாய்லாந்து தமிழ் பண்பாட்டு ஒற்றுமை இந்த இரண்டு இன மக்க ளிடையே மன்னனையே தெய்வமாகப் போற்றும் மரபு பழங்காலத் தொட்டே இருந்து வருகிறது.

நெல்லும் முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

புலிபுறங் காக்கும் குருளை போல
பொலிவில்செங்கோ னீபுறங் காப்ப (புறம் - 186)

என்ற புலி எவ்வாறு தன் குருளை தன் உயிர்போகும் வரைக்கும் காக்கிறதே அது போல மன்னனும் மக்களை காப்பாற்ற வேண்டும்.

இந்தப் பழந்தமிழ் மன்னர் மரபு தாய் லாந்தில் பின்பற்றப் படுகிறது. மன்னனை தெய்வமாக மதிக்கின்றனர். ஒவ்வொரு இல்லத் திலும் தாய்லாந்தின் அரச தம்பியம் படங்களை மாட்டி வைத்திருக்கின்றனர். இதன் மூலம் மன்னர் மீதுள்ள பக்தியை வெளிப்படுத்து கின்றனர்.

தாய்லாந்து மன்னகர்ள் போற்றும் மரபிற்கு, நம் உலகப்பொது மறையில் உள்ள ஒரு திருக்குறள் வரைவிலக் கணமாக உள்ளது.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் (குறள்)

தாய்லாந்தை ஆண்ட மன்னர்கள் நம் காப்பிய நூல்களின் பெயர்களை சூட்டியுள்ளது வியப்பாக உள்ளது.

முதலாம் இராமன், இரண்டாம், மூன்றாம் இராமன் என இராமன் பெயர்கள் காணப்படு கின்றன. தாய்லாந்தில் உள்ள மரகத புத்தருக்கும் இராமநாத புரத்தில் உள்ள உத்திர கோச மங்கை யில் உள்ள மரகத சிவபெருமானுக்கும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

தாய்லாந்தின் நெற்களஞ்சியப் பண்பாடும் தமிழகத்தின் நெற்களஞ்சிய பண்பாடும் ஒப்பு நோக்கி ஆராயத்தக்கன.

தாய்லாந்து மன்னவர்கள் முடிசூட்டு நாளில், நம்முடைய ''திருப்பாவை''ப் பாடல் கள் பாடப்படுகின்றன. இலண்டன் பல்கலைக்

வண்ணம்

-பாவலர் மணிவேலன்-

தித்தித்திடும் முத்தமிழ்
சித்தத்தினில் நித்தம்நடம்
தித்திம்திமி தித்திம்திமி
திருக்குத்திகு திக்குத்திகு என ஆடும்!

புத்தம்புது எட்டுச் சுவை
கொட்டித்தரும் மட்டுத்தமிழ்
சொட்டும்துளி பட்டுச்செவி
முற்றும் சுவை பற்றுத்தினம் அதை நாடும்

முத்தம் தர முத்தம்தர
தித்தித்திடும் தித்தித்திடும்
முத்துத் தமிழ் நித்தம்படி
சித்தம்வெறி கொள்ளும்படி மொழி தேடும்

தத்துங்கிளி கத்தும் மொழி
கத்தும்குயில் பற்றும்செவி
முத்தத்தமிழ் தித்தித்திடும்
நித்தம்படி மெத்தப்படி உணர் வோடும்;

எட்டுத்திசை எட்டிப் பிடி
எட்டும்மொழி கற்றுத்தெளி
பட்டம்பல பெற்றுத் திகழ்
எட்டாமுகில் எட்டிப்பிடி என்றாலும் நீ

கட்டித்தமிழ் சொட்டும்மடி
முட்டிக்குடி, முற்றக்குடி;
எட்டிக்குடி விட்டுக்குடி
தொட்டுக்குடி நெட்டிக்குடி மறவாதே.

மட்டிப்பயல் என்னும்படி
தட்டில் தரு கட்டிச்சுவை
விட்டுப்பிறர் எச்சில்மொழி
தொட்டுச் சவை பெற்றுத் தினம் மயங்கவே

கட்டித்தயிர் சொட்டும் மது;
முற்றும்சுளை; விட்டுப் பிறர்
எச்சில்இலை நச்சித்திரி
குக்கல்நிலை விட்டுத்தொலை இன்றோடு.

கழக பேராசிரியர் மார் என்பவரும் மலேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சிங்காரவேலு என்பவரும் இது குறித்து ஆராய்ந்து கருத்துக் களை வெளியிட்டுள்ளார்.

தமிழும் பிறபண்பாடும் என்ற நூலில் தொ.பெ.மீ. தாய்லாந்து பண்பாட்டில் தமிழின் செல்வாக்கு குறித்து விரிவாகக் குறித்துள்ளார்.

தாய்லாந்தில் உள்ள ''குருமார்கள்'' இராம நாதபுரத்தில் இருந்து சென்றவர்கள் என்று இவர் குறித்திருப்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்றாகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டு அளவில் சைலேந்திரப் பேரரசு தெற்காசிய நாடுகள் முழுமையினையும் வெற்றி கொண்ட அரசாக இருந்தது. இந்த சைலேந்திரன் என்ற அரசனின் வெற்றிகள் பற்றி டாக்டர் ஜி.குவாரிட்ச் என்ற அறிஞர் வியந்து கூறுகிறார். இந்த சைலேந்திரப் பேரரசை முடிவுக்கு கொண்டு வந்தவன் நம் சோழமன்னர்களே. சோழர்களின் கடற்படை வலிமையால் தெற்காசிய நாடுகள் பலவற்றை வென்றனர். சோழர்களின் சம கால கட்டத்தில் மிகத்தரம் வாய்ந்த கடற்படையை உலக வரலாற்றில் யாருமே வைத்திருக்கவில்லை. சோழர்கள் மட்டுமே வைத்திருந்தனர். சோழர்கள் தொடர்ந்து 50 ஆண்டுகள் தெற்காசிய நாடுகளின் மீது கடலாதிக்கம் செய்தனர். இது வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த ஒன்று.

இத்தகைய போர்த் தொடர்பால் பல வகையான பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. ▢

தமிழாக வாழ்வோம்

(கவிமாமணி பெரி.நீல.பழநிவேலன்)

(1)

பன்னாட்டுத் தமிழருக்கும் பாதையொன்றே வேண்டும்,
பைந்தமிழின் குறள்நெறியே பாலமாக வேண்டும்.
பன்னாட்டுத் தமிழருக்கும் பற்றுக்கோ லொன்றாம்
பாரிலுயர் தமிழென்ற பணியோங்க வேண்டும்

(2)

தமிழினத்துக் கென்றேதான் தனிநாடு வேண்டும்
தமிழ்மறையாம் குறள்,ஆட்சி நெறியாக வேண்டும்!
தமிழினத்தார் தலைத்தூக்கி வாழவேண்டும் என்றால்
தமிழ்மொழிதான் அதனாட்சி மொழியாக வேண்டும்!

(3)

தமிழ்நாடு தமிழனுக்கே என்றநிலை வந்தால்
தமிழனுக்கும் உலகரங்கில் தனிப்பெருமை யோங்கும்,
தமிழ்போற்றும் இலக்கியங்கள் உலகமொழி பெற்றால்,
தமிழ்,உலகின் மூத்தமொழி என்றநிலை வெல்லும்:

(4)

ஒன்றொன்ப தேழேழாம் ஆண்டில்தான் நன்றே
உலகளாவும் தமிழுறவை உயர்த்துகின்ற நோக்கில்
பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தை அன்று
பயனாக அமைத்தபுகழ் சேதுராமன் வாழ்க!

(5)

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் தந்தை
பைந்தமிழ்க்கோ சேதுராமன் உள்ளத்தில் நாளும்
தன்னாட்சிப் பெற்றுயரும் தமிழுறவே வாழும்
தமிழனுக்கு உணர்வூட்டும் உரமாகும் நன்றே!

(6)

பெருங்கவிக்கோ வா.மு.சே. பெற்றெடுத்தப் பிள்ளை
பெரும்பிள்ளை 'வா.மு.சே. திருவள்ளு வர்'தான்
அருந்தமிழர் உலகரங்கில் ஒன்றிணைத் தானே
அழைக்கின்றார் மாநாட்டின் வழிவாழ்க நன்றே!

தமிழ் மக்களின் நிலை ஐரோப்பாவில்

- நாவலர் க.த.ச. தவகுசதாசலிங்கம், ஜெர்மனி

1977-ஆம் ஆண்டிற்குப் பின் தமிழர்கள் பலர் வெளி நாட்டிற்குப் புறப்பட்டார்கள். அன்றை அரசியல் நெருக்கடி காரண மாகத்தான் அவர்களது பயணம் அமைந்தது எனலாம். அதோடு 1974-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டுவரை வெளிநாட்டிற்கு யாரும் செல்லமுடியாது. அவ்வாறான அரசியல் சூழ்நிலை அன்றிருந்தது. ஆனால் 1977-ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கலவரமே கூடுதலான தமிழர் அன்று வெளிநாட்டிற்கு வரக்காரணம். அப்படி வந்தவர்களின் தொகை கிட்டத்தட்ட செருமன் நாட்டில் 5,000 மக்கள் வரையில்தான் இருப்பார்கள் எனலாம். இவர் களில் கூடுதலானவர்கள் இளைஞர்கள். அத்தோடு அவர்களது வயதெல்லை 25-30 வரை குறிப்பிடலாம். இவர்கள் இன்று உழைத்ததில் பெரும்பகுதி நமது நாட்டில் முதலீடு செய்யப்பட்டது. ஆனால் 1983 - ஆம் ஆண்டு ஏற்பட்ட மாபெரும் கலவரத்தால் (வடபகுதி யிலும், ஈழப்பகுதியிலும்) அனைத்து சொத்து களும் சூறையாடப்பட்டன. தீவைத்துக் கொளுத் தியும், கொள்ளையடித்தும் மக்கள் விரட்டி யடிக்கப்பட்டார்கள். தென்பகுதியிலிருந்து வடகிழக்கு மாகாணங்களுக்கு, உடமை இல்லாமலும் உறவு இல்லாமலும் பல மக்கள் அநாதைகளாக வந்து சேர்ந்தார்கள். அன்றிலிருந்து சிந்திக்கத் தொடங்கிய தமிழ் மக்கள் என்ன செய்யலாமென அங்கலித் தார்கள். இதன் முடிவாகப் பெருந்தொகையான தமிழர்கள் ஐரோப்பிய நாட்டிற்குப் புலம்பெயர ஆரம்பித்தனர். ஆனால் 1984 - ஆம் ஆண்டி லிருந்து 1987-ஆம் ஆண்டுவரை செருமனிக்கு வந்த தமிழ்மக்களில் கிட்டத்தட்ட 80,000 மக்களுக்கு மேல், கொலன், இத்தாலி போன்ற நாடுகளுக்கும் பிரிந்து சென்றார்கள் செருமனி யின் அன்றைய அகதிகள் வருகைச்சட்டம் நமக்கு நல்ல சாதகமான பலனை ஏற்படுத்தியது எனலாம். ஆனால் 1985 - ஆம் ஆண்டிற்குப்பின் நமது அரசியல் தஞ்சக் கோரிக்கையை செருமன் நாட்டு அரசாங்கமானது ஏற்றுக்கொள்ள வில்லை. இருந்தும் சில மாநிலங்களில் இருந்த நீதிபதிகள் மக்களை ஏற்றுக்கொண்டு 200 பேர் வரையில் ஒருநாளில் கடவுச்சீட்டு (Passport) (செருமன்) வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமக்கென்றோர் பாலிய மரபுகளைக் கொண்ட இனம் தமிழினம் என்பது உலகறிந்த உண்மை. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய இனம் என்பதும் உண்மை. ஆனால் மற்றைய இனங்களுக்கு நமது கலாச்சாரப் பண்பைப் பகிர்ந்து கொடுத் தவர்கள் வரவேற்கும் பண்பில் முதன்மை பெற்றவர்கள். இதற்கு மாறாக, சண்டை சச்சரவுகளைப் போக்கிச் சமாதானம் செய்வதில் சனநாயகத்தை கடைப்பிடிப்பவர்கள் என்பது வரலாற்று உண்மைகள். ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் பலர் நமது மொழியை யும், கலாச்சாரத்தையும் மறந்து வாழ்கின்றதை யும் காணமுடிகிறது.

இந்தவகையிலே செருமனியில் இருக் கின்ற கிட்டத்தட்ட 24,000 தமிழர்களின் இன்றைய நிலையை எண்ணும் பொழுது இவர்கள் அனைவரும் செருமனியின் வெவ் வேறு பகுதிகளில் வாழ்கின்றார்கள் என்பதை உணரலாம். பேர்லின் என்ற பகுதியிலும் வடமேற்கு மாநிலத்தின் தென் பகுதியிலும் தமிழர் பரந்து வாழ்ந்தாலும் வடமேற்கு மாநிலத்தில்தான் கிட்டத்தட்ட 15,000 பேர்களுக்கு மேல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களது வாழ்க்கை வரலாற்றையும் அரசி யல் அனர்த்தங்களையும் அகதிகள் சட்டத்திட்டங்களையும் ஆராயும்பொழுது மற்ற மாநிலங்கவிட நல்லமுறையில் தான் அமைந்துள்ளது எனலாம். 1990 - ஆம் ஆண்டு

மாநில அரசாங்கம் எடுத்த முதன்மை பொருந்திய சட்டம் (S.P.D.) ஒன்றினால் நமது மக்களுக்குக் கூடிய பலன் ஏற்பட்டது. அதாவது ஐந்து ஆண்டுகள் ஒருவித குற்றமும் செய்யாது இருந்திருந்தால் அவர்களுக்கு நிரந்தர விதி விடத்திற்கு ஒப்பான விசா வழங்கப்படும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது அதன்படி வட மேற்கு மாநிலத்தில் வாழ்ந்த தமிழ்மக்களில் அநேகமானோருக்கு அவ்வாறான வதிவிட விசா வழங்கப்பட்டது. அது மட்டுமல்ல (S.P.D.) என்னும் அரசியல் கட்சி ஆட்சியிலிருந்த மாநிலங்கள் அனைத்திலும் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் இதனை மத்திய அரசானது (C.D.U.) எதிர்த்தது. இருந்தும் ஒரு வருட முடிவில் இந்த விசா மாற்றப்பட்டு இதற்குப் பதிலாக குறைந்த அதிகாரம் உள்ள விசா வழங்கப்பட்டதையும் குறிப்பிட வேண்டும்.

கல்வி சம்பந்தமாகச் செருமனியில் உள்ள தமிழர்களை ஆராய்வோமானால் அவர்களில் 25-35 வயதினர் ஓரளவு தங்கள் தொழில்களையும் மற்றும் அரசு அலுவல்களையும் பார்க்கும் அளவிற்கு செருமன் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது குறிப்பிட்டத்தக்கது. அதேபோன்று ஒரு சதவிதத்தினர் மொழி பெயர்ப்பு வேலைகளையும் செய்கின்றனர் எனலாம். ஆனால் 1988-ஆம் ஆண்டு தொடங்கி 1994 - ஆம் ஆண்டு வரை வருகின்ற இளம் சந்ததியினர் - அதாவது வயது குறைந்தவர்கள் - 10 வயது முதல் 20 வயது வரையிலான இளையர்களும், யுவதிகளும் பாடசாலைக்குச் சென்றுக் கல்வி கற்பதால் செருமன் மொழியில் நல்ல தேர்ச்சி பெறுவதனால் எமது தமிழ்மொழியை காலப்போக்கில் மறந்து விடுவார்களோ என்ற பயமும் உண்டு. சில வைபவங்களில் தமிழ்ப் பிள்ளைகளே தமது மொழியை மறந்து அந்நிய செருமன் மொழியால் உரையாடுவதையும் அவதானிக்க முடிகிறது. அடுத்து மூன்றாவது பிரிவினரை எடுத்துக் கொண்டால் இவர்கள் செருமனியில் பிறந்தவர்கள். இவர்களின் நிலையில் பெரிதும் பெற்றோர்கள் கவனம் எடுக்கவேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் ஆரம்பம் முதல் இங்கேயே அதாவது செருமன் நாட்டிலேயே கல்வியைத் தொடர்வதால் அவர்களுக்குத் தாய் மொழியான தமிழ் மொழியை பெருமுயற்சியோடு புகுத்த வேண்டிய நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. வீடுகளில்கூட பல இடங்களில் தமிழை மறந்து வாழ்கின்றார்கள். இருந்தும் பெரும்பாலான இடங்களில் தமிழ்க் கல்விச் சேவைகளும், தமிழாலயமும் பரவலாகத் தமிழ்மொழிச் சேவை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனலாம். இருந்தும் செருமனியில் வாழ்கின்ற முழுத் தமிழர்களும் நமது தாய்மொழியை மறந்து விடக் கூடாது.

அத்தோடு இளம் யுவதிகளைப் பொறுத்த வரையில் பரவலாக பரதக்கலையையும் கற்றுச் சிலர் அரங்கேற்றமும் கண்டுள்ளனர். கடல் கடந்து வாழ்ந்தாலும் ஐரோப்பிய மண்ணில் நமது பண்பாட்டுக் கலைவளர்ச்சியும் - குறிப்பாக செருமனியில் வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரான்சில் தமிழ் மக்கள்

ஐரோப்பிய நாடுகளில் ஈழத்தமிழர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தை வகிப்பது பிரான்சு ஆகும். ஆனால் மக்கள் தொகையில் செருமனியை விட ஐயாயிரம் முதல் ஆறாயிரம் வரை கூடுதலாக இருக்கும் எனலாம். ஆனால் இங்கு வாழும் முழு ஈழத்தமிழ் மக்களிலும் 90 சதவீதத்தினர் செருமனி வந்து 1985 - ஆம் ஆண்டு தொடக்கம் முதல் 1992 - ஆம் ஆண்டு வரை சென்றவர்களே அதிகமெனலாம். நேரடியாக வந்தவர்களும் வேறு நாடுகள் மூலம் வந்தவர்களும் பத்து சதவீதத்தினர் எனலாம்.

இவர்களது அரசியல் தஞ்சநிலைமையை எண்ணும் பொழுது பிரான்சு நாட்டு அரசாங்கம் (அதாவது சோசலிசக் கட்சி) சனாதிபதி மித்திரோன் அவர்களது ஆட்சியில்

கூடுதலான வெளிநாட்டவர்களை அந்த நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக்கொண்டமை இங்குக் குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் நமது மக்களுக்கும் ஏறக்குறைய 95 விழுக் காட்டினருக்கு அந்த நாட்டு வதிவிட உரிமை கிடைத்திருக்கின்றது. ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழ் மக்களில் இங்குத் தான் வதிவிட உரிமை பெற்று வாழ்கின்றார்கள் என்றால் அதுவும் பெருமைதான்.

கல்வியைப் பொறுத்தளவில் எல்லோரும் பிரெஞ்சு மொழியில் சரளமாகப் பேசக்கூடியவர் களாகக் காணப்பட்டாலும், தமிழ்மொழிக் கல்வியையும் படிக்கின்றார்கள். சிறுவர்கள். அதாவது 10 வயது முதல் 18 வயதுக்குட் பட்டவர்கள் - பாடசாலைக்குச் சென்று படிப்பவர்களாய் இருக்கின்றார்கள். மிகுதி நேரங்களில் தமிழ் படிக்கிறார்கள். இருபது வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் தொழில் செய்வதற்கெனத் தொடர்ந்து படிப்பவர்களும் உண்டு. எமது பாரம்பரிய பரதக்கலை மற்றும் நாட்டுக்கூத்து, கிராமிய நடனங்கள் போன்ற வற்றிலும் ஈடுபாடு கொண்டவர்களும் அதிகம் உண்டு. பெரும்பகுதியினர் நமது கலை, கலாச்சாரத்தை மதிக்கின்றார்கள். சிறுஅளவினர் மறந்து வருவதையும் காணலாம்.

தொடர்ந்து, தொழில்ரீதியில் பிரான்சில் பிரச்சனை இல்லை என்றே கூறவேண்டும். பெரும்பாலோர் தனிப் பட்ட தொழில் செய்கின்றார்கள். மற்றும் பலர் ஏதோ ஒருவகை யில் தொழில் செய்பவர்களாகத்தான் இருக் கின்றார்கள். இல்லையென்றால் இங்கு வாழ்க்கையை நடத்துவது கடினம். அதே நேரம் இருப்பிட வசதிக்குறைவு உள்ளது. சேர்ந்து இருப்பவர்களும் வாடகை கட்டத்தான் வேண்டும். எனவே கட்டாயம் வேலை செய்யத்தான் வேண்டும்.

நெதர்லாந்தில் தமிழ் மக்களின் நிலை

நெதர்லாந்திற்கு நமது மக்கள் கிட்டத் தட்ட 1983-ஆம் ஆண்டிலிருந்து அரசியல் தஞ்சம் கோரிச் சென்றார்கள்.

கிட்டத்தட்ட 12,000 பேர் கொலண்டில் வாழ்கிறார்கள். ஒரு பகுதியினர் சில குறைந்த வதிவிட உரிமை கிடைத்து வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் காலப்போக்கில் வதிவிட உரிமை கிடைக்கும். அடுத்து அந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு இவ்வளவு சலுகை யும் கிடைப்பதற்கு ஆரம்பத்தில் ஒருசில தமிழ் இளைஞர்கள் உயிர்த் தியாகங்கள் செய்தமை யையும் குறிப்பிட்டாக வேண்டும். அதனால் அந்த நாட்டு அரசாங்கம் நல்ல நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு காரணம் அமைந்தது எனலாம்.

அடுத்து அந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஆராயும் பொழுது அவர்கள் தங்கள் தங்கள் தொழி லோடும் அந்த நாட்டு மக்களோடும் அன்பாக வும், ஒற்றுமையாகவும் சேர்ந்து வாழ்வதைக் காணலாம். அதில் குறிப்பிடத்தக்கது என்ன வென்றால் நமது நாட்டை ஆண்ட பெருமை நெதர்லாந்துக்காரர்களுக்குண்டு என்பதால் அவர்களும் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். இங்கே வெளிநாட்டவர்க்கு எதிரான தாக்குதல்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

அடுத்து தமிழர்கள் அவர்கள் எந்த வகையான கலாச்சாரத்தைப் பின் பற்று கிறார்கள் என்றால் நமது நாட்டு கலாச் சாரத்தைக் கடைப்பிடிப்பவர்களாய் உள்ளனர்.

தமிழ்க் கலாச்சாரத்தை விட்டு ஒதுங்கிச் செல்பவர்களும் உண்டு. கூடுதலான மக்கள் தமிழ்க் கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும் கூடிவாழ்பவர்கள் அங்குக் குறைவுதான். அதற்கு மூலகாரணம் ஒவ்வொரு இடத்திலும் குறைந்தளவு மக்கள் வாழ்வதே காரணம் எனலாம். செருமனி, பிரான்சு, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் ஒவ்வொரு நகரத்திலும் கூடிய செறிவான மக்கள் அங்கில்லை என்பதுவே மூலகாரணமாகும். அப்படியிருந் தும் எமது கலாச்சாரத்தைப் பின்பற்றுபவர்கள் தான் அதிகம் எனலாம். கல்வியைச் சிந்தித்துப்

பார்த்தால் இளம் சந்ததியினர் தமிழை மறந்து வருவதைக் காணலாம். ஆனால் ஆங்காங்கே தமிழ்க் கல்வியையும் ஊட்டிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

தொழில் ரீதியில் அவர்களுக்கு எல்லாத் தொழிலிலும் பங்கு பற்றக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. பிரான்சு நாட்டைப் போன்று படித்தவர்களுக்கு ஏற்ற தொழில்களும் உண்டு. படிப்புக் குறைந்தவர்களுக்குரிய தொழில்களும் உண்டு. ஒருசிலர் தனிப்பட்ட தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகவே நெதர்லாந்து தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தொழில் பாதிப்பு இல்லை.

இத்தாலியில் ஈழத்தமிழ் மக்களின் நிலை

இந்த நாட்டில் நமது தமிழ் மக்களின் நிலை மிகவும் கஷ்டமான ஒரு நிலையே. அதாவது இங்கு 1979-ஆம் ஆண்டளவில் இருந்து பெருத்ததொகையான இளைஞர்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களை விட 1983-ஆம் ஆண்டிற்குப் பின் குடும்பங்களுடன் வந்து குடியேறி வாழ்கின்றார்கள். எல்லாமாக கிட்டத்தட்ட 25,000 பேர் வரையில் இருப்பார்கள் எனலாம். அங்கு 1979-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை அரசியல் தஞ்சம் இல்லை. ஆனால் 1992 - ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்பொழுது அரசியல் தஞ்சம் கொடுக்கப்படுகின்றது.

இத்தாலி நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்க்கையில் வித்தியாசமான போக்குத் தான். ஏனென்றால் அங்கு வசிப்பவர் அனைவரும் தங்கள் சொந்தச் செலவிலேயே தங்களது குடும்பச் செலவுகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. மற்றைய ஐரோப்பிய நாடுகள் போன்று எந்தவித சலுகைகளும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் வதிவிட சலுகை பழைய ஆட்களுக்கும் மூன்று வருடம் முடிந்தவர்களுக்கும் அந்த நாட்டு குடிவரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இது மற்றைய நாடுகளைவிட போற்றப்பட வேண்டிய ஒன்று.

தற்பொழுதுள்ள சிறுவயதினரை எண்ணிப்பார்த்தால், இவர்கள் இத்தாலிய மொழியிலேயே படிக்கின்றார்கள். தமிழை வீடுகளில் பேசுகின்றார்களே யொழிய தமிழ்ப் பாடசாலைகளோ கல்வி நிறுவனங்களோ இங்கு இல்லை என்றே கூறவேண்டும். சில வீடுகளில் துப்புரவாக தமிழ் பேசுவதே யில்லை. மொழியை ஆராயும்போது மற்றைய ஐரோப்பிய நாடுகளைப் போல் அல்லாது தமிழ்மொழி அழியும் நிலையே இத்தாலியில் உண்டு எனலாம். ஆனால் தற்பொழுது ஆங்காங்கே இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருவது குறிப்பிடவேண்டிய ஒன்றே. எது எப்படியானாலும் நமது தமிழ்மொழியும் நமது தமிழ்ப் பண்பாடும், கலாச்சாரமும் பாதுகாக்கப்பட வேண்டியது எல்லாத் தமிழ் மக்களுடைய கடமையாகும் என்பதை மறக்கக்கூடாது.

பெல்சியத்தில் ஈழத்தமிழ் மக்களின் நிலை

இந்த நாட்டில் நமது மக்கள் கிட்டத்தட்ட ஒரு 150 பேர் வரையில் தான் இருப்பார்கள். கூடுதலாக இளைஞர்களே வாழ்கின்றார்கள். இவர்கள் குறிப்பாக செருமனி, கொலன், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து சென்று அங்குக் குடியேறி வாழ்கின்றார்கள். இவர்களுக்கு அந்த நாட்டில் அரசியல் தஞ்சம் கிடைத்திருப்பவர்களே அதிகம் பேர் எனலாம்.

இருந்தும் நமது கலாச்சாரத்தை கடைப் பிடிப்பவர்களாகத்தான் முக்கால் பங்கினர் இருக்கின்றார்கள். கால் பங்கினர் அந்த நாட்டு கலாச்சாரத்தைப் பின்பற்றித் திருமணம் செய்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இவர்கள் நமது தாய்மொழியை மறக்காமல் பேசுவார்கள். வேலைவாய்ப்புகள் குறைவு தான். அந்த நாட்டுச் சலுகைகளும் குறைவு தான். உழைத்துச் சாப்பிட வேண்டிய கஷ்டமான சூழ்நிலையில் தான் வாழ்கிறார்கள்.

பிரித்தானியாவில் ஈழத்தமிழ் மக்கள் நிலை

பிரித்தானியாவில் ஈழ்த்தமிழ் மக்களின் நிலை ஒரு வித்தியாசமான போக்கில் தான் இருக்கின்றது. இங்கு முற்காலத்தில் இருந்தே ஒருசில மக்கள் குடியேறியுள்ளார்கள். இவர்களில் கூடுதலான மக்கள் படிப்பதற்காகவும் வேலைவசதிகளைப் பெறவும் சென்றவர்கள் எனலாம். கிட்டத்தட்ட 1965-ஆம் ஆண்டு காலப்பகுதியில் சென்றவர்களும் உண்டு. இவர்களில் கூடுதலானவர்கள் அந்த நாட்டுக் குடியுரிமை பெற்று வாழ்பவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆனால் 1983-ஆம் ஆண்டிற்குப் பின் சென்றவர்கள் கூடுதலானவர்கள் அரசியல் தஞ்சம் பெற்றவர்கள்தான்! இவர்களில் பெரும்பாலானோர் வேலை செய்பவர்களாகவும் சிலர் தொடர்ந்து படிப்பவர்களாவும் இருக்கின்றார்கள். ஆனால், 1984-ஆம் ஆண்டு முதல் 1992-ஆம் ஆண்டு வரை சென்ற மக்களில் கூடுதலானவர்கள் அரசியல் தஞ்சம் கேட்டே சென்றவர்கள் எனலாம். இவர்களில் பெரும்பகுதியினரை அந்த நாட்டு அரசாங்கம் ஏற்றுக் கொண்டும் இருக்கின்றது.

வயது குறைந்தவர்கள் மாணவர்களாகத் தொடர்ந்து படிக்கின்றார்கள். எனவே, இவர்களுக்குக் காலப்போக்கில் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடியதாக இருக்குமெனலாம். படிக்கின்ற மாணவர்கள்கூடப் பகுதிநேர வேலை செய்துதான் படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் இங்குக் காணப்படுகின்றது. ஆனால் மற்ற ஐரோப்பிய நாடுகள் போல் அல்லாது இங்கு முழு உரிமை கொடுத்துப் பராமரிக்கின்றார்கள். இதற்கு மூலகாரணம் நம்மை 1948-ஆம் ஆண்டு வரை அடிமைப் படுத்தியவர்களும் பிரித்தானியர்களேதான்! ஆனாலும் அங்கு எமது மக்களின் அரசியல் நிலையைப் பொறுத்தளவில் ஓரளவு பரவாயில்லை என்று கூறலாம்.

அடுத்து நமது மக்களின் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை எடுத்து ஆராய்ந்தோமானால் 90 சதவீத மக்கள் நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றுகிறார்கள். இலண்டன் கலாச்சாரமும் எமது கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளும் என்பதால் நமது மக்கள் கலை, கலாச்சாரத்தை கடைப் பிடிக்கின்றார்கள். அதேபோன்று நமது மக்களின் சகலவிதமான விழாக்களும் நம் நாட்டில் நடப்பது போன்று நடைபெறுகின்றது. இன்றுகூடும் ஒற்றுமை இலண்டன் வாழ் மக்களிடையே பெரிதாகக் காணப்படுகின்றது. ஆகவே நமது மக்களின் சகல சடங்குகளும் யாழ்ப்பாணத்தில் நடந்தது போல் நடைபெறுவதைக் காணமுடிகின்றது.

1985-ஆம் ஆண்டிற்குப் பின்வந்த மக்களின் நிலை கேள்விக்குறியாகத்தான் உள்ளது. சகல ஐரோப்பிய நாடுகளிலும் இது கவலைக்குரிய விடயம்தான். இருந்தும் லண்டன் மக்களின் நிலை ஒருவித வித்தியாசமான போக்கில்தான் உள்ளது எனலாம்.

சுவிட்சர்லாந்தில் ஈழத்தமிழ் மக்களின் நிலை

சுவிட்சர்லாந்தில் உள்ள ஈழந்தமிழ் மக்களின் நிலை பரிதாபமானது. எந்த வித சலுகையும் அந்த நாட்டு அரசாங்கம் வழங்குவதில்லை என்றே கூறவேண்டும். இவர்களது அரசியல் தஞ்சக் கோரிக்கையை ஆராய்ந்து பார்ப்போமேயானால் அங்கு அந்த நாட்டில் ஏற்றுக் கொண்டவர்களின் தொகை மிகமிகக் குறைவென்றே கூறவேண்டும். ஆனால் ஆறு மாத காலம் வரைக்கும் சலுகை உண்டு. அதுவும் அவர்கள் கொடுக்கும் இடத்தில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம்.

நமது கலாச்சாரத்தை எடுத்து ஆராய்ந்தால் பெரும்பகுதியினர் நமது கலாச்சாரத்தைப் பின்பற்றுகின்றார்கள். சிறுவீதத்தினர் மற்ற கலாச்சாரத்தை பின்பற்றுகின்றனர். ஆனால் ஒரு தமிழ் நிகழ்ச்சி என்றால் எல்லாத் தமிழ் மக்களும் கூடுகின்ற ஒரு சந்தர்பபம் உண்டு என்றே கூறவேண்டும். அதே நேரம் கலாச்சாரத்தை, மொழியை, மதத்தை மறந்தவர்களும் சுவிட்சர்லாந்தில் உண்டு. மற்றைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது உழைக்கின்ற

புதுமைகள் மலர வேண்டும்

-நெல்லை மணி பாரதி-

அரசாண்ட தமிழினம் பைந்தமிழால் ஒன்றுபட்டால்
இமயமும் தமிழனுக்கு இருக்கை தந்திடும்
உலகாண்ட மொழியாம் எம்தமிழ் மொழிபேசும்
உலகத்தமிழர் உழைப்புக் கேற்றபடி உயர வேண்டும்
பூமியில் பலவிதமாய்த் தொழில்கள் வளர்ந்திட
புதுநெறிகள் வகுக்கும் தமிழர்கள் வேண்டும்
ஊமையாய் உறங்கிக் கிடந்தஎம் தமிழரினம்
உணர்வுபெற்ற வாழ்வுக்கு "தொலைநோக்கு" வேண்டும்!

உலகெங்கும் வாழும் தமிழரிடையே சாதிசமய
உணர்வுகள் பற்றிஎரியாத சமநிலைகள் வேண்டும்
உலகெங்கும் அடிமைத் தொழில்செய்த தமிழரினம்
அடிமைத் தளையறுத்து சுதந்திரமாய் வாழவேண்டும்
தமிழனுக்கு எதிரிகளை வெல்லும்நெஞ் சுரம்வேண்டும்
தமிழன் புதியதொரு வாழ்வுப்பாதை காணவேண்டும்
தமிழ்க்கலை 'எழுச்சியும்' 'அறிவுப்புரட்சியும்' பெறவேண்டும்
'தேன்தமிழ்' உலகஅரங்கில் முரசொ லிக்கவேண்டும்!

மூப்பறியா மூத்ததமிழ் முச்சங்கம் கண்டதமிழ்
மாஉலகினில் மழலையர் பேசிடுதல் வேண்டும்
கூப்புகிற கைகளுக்குள் அடங்கிடும் கணினிச் சுருளில்
எம்தமிழ் மொழிஅதிசயங்கள் வளர்ந்திட வேண்டும்
பூந்தமிழறிஞர் கலைஞர்போல் பாவேந்தர் புகழ்பரப்பும்
பைந்தமிழ்க் கவிஞர்கள் தேனீக்களாய்ப் பாடவேண்டும்
பூமிதனில் எங்கணும் வாழுகின்ற பைந்தமிழர்கள்
பூவிழிகளில் எப்போதும் புதுமைகள் மலரவேண்டும்!

வர்கள் இங்குதான் கூடுதல் என்று கூற வேண்டும். எது எப்படி இருந்தாலும் நமது மொழியையும் மதத்தையும் கலாச்சாரத்தையும் பின்பற்றியவர்களே அதிகம் எனலாம்.

செக்கோசுலோவாக்கியாவில் ஈழத்தமிழ் மக்களின் நிலை

செக்கோசுலோவாக்கியாவில் ஈழத்தமிழர் களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இங்கு விரல்விட்டு எண்ணிக்கூடிய தமிழர்களே வாழ்கின்றனர். குறிப்பாக, ஈழத்தில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தவர்கள், இந் நாட்டைக் கடந்து வரவேண்டிய ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. கிட்டத்தட்ட 1989-ஆம் ஆண்டிற்குப் பின் இவ்வாறு வந்தவர்களுள் ஒரு வீதத்தினர் அங்கும் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர் களே. இவர்கள் அந்த நாட்டுக் கலாச்சாரத்தையும் அந்த நாட்டு யுவதிகளையும் மணந்து வாழ் கின்றவர்கள். ஓரிரு தமிழ்க் குடும்பத்தின ரும் இருக்கின்றனர். இவர்கள் எமது கலாச் சாரத்தோடு வாழ்கின்றார்கள். இங்கு இருக் கின்ற இளம் வயதினர் இந்த நாட்டு மொழி யைப் படிக்கின்றார்கள். காலப்போக்கில் இவர்களது வாழ்க்கை கேள்விக்குறியே.

யூகோசுலோவாக்கியாலில் ஈழத்தமிழ் மக்களின் நிலை

இந்த நாட்டில் நமது மக்கள் மிக மிகக் குறைவு. இருந்தும் சிறுதொகையினர் வாழ் கின்றனர். இவர்களில் தொழில் ரீதியாகவும் படிப்பு ரீதியாகவும் சென்றவர்கள்தான் உண்டு. இதைவிட மற்றைய நாடுகளுக்கும் வரும் தமிழ் மக்கள் இங்கு நின்றுதான் வருகின்றார்கள்.

அடுத்து, இங்கும் பெல்சிய நாட்டின் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இங்குதான் ஓரளவு நல்ல வசதிகள் உண்டு. வாழ்கின்ற வர்களில் பெரும் தொகையினர் இளைஞர்களே அதிகம். இவர்கள் அந்த நாட்டு மக்களோடு ஐக்கியமாக இணைந்துதான் வாழ்க்கை நடத்து கின்றார்கள். ஆனால் நமது மொழியை மறக் காமல் பேசுபவர்களாகத்தான் இருக்கின் றார்கள். ஆனால் குடும்பங்களைப் பொறுத்த மட்டில் சேர்ந்து பழகுவதற்கு கூடுதலான மக்கள் இல்லாத குறையுடன்தான் வாழ் கின்றார்கள் எனலாம். நமது கலாச்சாரத்தை மறக்கவில்லை. கலாச்சாரத்தை நடத்துவதற்கு போதிய அளவு மக்கள் இல்லாத நிலையில் தான் யூக்கோசுலோவாக்கியாவில் ஈழத்தமிழ் மக்களின் நிலை உள்ளது எனலாம்.

- க.த.ச. தவகுசதாசலிங்கம்

புதுமைப்பித்தன்

- எ. பி. மருதழகன்

1948 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் வாரத்தில் ஒரு நாள் வடக்கே பூனா நகரிலிருந்து தென்னகம் நோக்கி வந்துக் கொண்டிருந்த ரயில் வண்டி கரும் புகையை கக்கிக் கொண்டு, திண்டாடித் திணறிக் கொண்டு திருவனந்தபுரம் நிலையத்தில் வந்து நிற்கிறது. அந்த ரயிலுக்குத்தான் அன்றயதினம் எத்தனை இறுமாப்பு! உலக தமிழ்ச் சிறுகதை மன்னன் ஒருவனை ஏற்றிவந்த பெருமையில் ''இதுதான் உனது இறுதிப்பயணம்! இனி நாம் சந்திப்பது எப்போது?'' என்று கேட்டுக்கொண்டே அந்த ரயில்-

திருவனந்தபுரம் பிளாட்பாரத்தில் அந்த ஏழை எழுத்தாளனை இறக்கி விடுகிறது. நாற்பத்திரண்டே வயது. ஆம்! ஆனால் அவனது தோற்றம் எழுபதைக் கடந்து விட்டது போன்று ஒரு தோற்றம்! இயற்கையின் விதி!

அவன் ஏற்கனவே நோஞ்சான், இயல்பாகவே மிகவும் ஒல்லி. மெல்லிய தேகத்தில் சுருங்கிக் கிடந்த அந்த இதயத்தில் தான் கற்பனைகளை குவித்து வைத்திருந்தான் அவன்! திருவனந்தபுரம் வந்த ரயிலில் இருந்து அவன் இறங்கிய போது யாருக்குமே அடையாளம் தெரியாதவனாகிப்போனான்.

எப்போதுமே சுத்தமாக தூய்மை யாக வாழ்ந்து பழக்கப்பட்ட அந்த மேதையா... இப்படி இன்று! நீண்டு வளர்ந்த தென்னை போன்று கம்பீரமாக, வாயில் சிவக்கச் சிவக்க வெற்றிலையுடன் சுருட்டையும் இழுத்து புகைவிடும், அந்த வேளூர் கந்தசாமி கவிராயரா இவர்?

ஆம்! அவனை இப்படியும் பார்க்கமுடியும். ஆச்சரியப்படாதீர்கள்! அதற்கு இதோ சிலவான்றுகள்!

''இத்தனைக்கும் மேலே
இனி ஒன்று
ஐயா நான்
செத்ததற்கு பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவு விளிம்பு கட்டி
கல்லில் வடித்து
வையாதீர்!
'வானத்து அமரன்
வந்தான் காண்!
வந்தது போல்
போனான் காண்'
என்று புலம்பாதீர்
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடு!

அன்றொரு நாள் ''வேளூர் கந்தசாமி'' கிராம ஊழியன் என்ற பத்திரிகையில் எழுதி யிருந்த கவிதையைத் தான் மேலே நீங்கள் படித்தீர்கள்.

யாரிந்த கவிஞன் என்று கேட்கத் தோன்று கிறதா? ''வேளூர் கந்தசாமி கவிராயர்'' பெரும் பாலும் அதிகமாக கவிதை எழுதுவதில்லை. ஒரு எழுத்தாளன் என்றால் அவன் எல்லாவற்றையும் எழுதவேண்டும்! அவனுக்கு பெயர்தான் எழுத்தாளன்.

கவிஞர் தன்னை மறந்து, தன் மனைவி மக்களை மறந்து கற்பனை வானில், வெண்குதிரை சிறகுகள் கட்டிப்பறப்பதால் அவன் ஏழையாகவே வாழ்ந்தான்; வாழ்ந்துக் கொண்டிருக்கிறான்.

மனிதனுக்கு இரண்டு பக்கம் என்பது சிலரது தத்துவம் இந்த ''வேளூர் கந்தசாமி கவிராயரின்'' தோற்றம் பற்றி நிறைய வாசகர்களுக்கு ஏன் எழுத்தாளர்களுக்கும் கூடத் தெரியாது! மறுபக்கம் என்பார்களே அதுதான் இது!

''வட்ட முலை மின்னர்
வசமிழந்த காமத்தால்
நீலமணி மாடத்து நெடிய தொரு சாளரத்தைத்
தொட்டுத் தடவி வந்து
தோயும் நிலாப் பிழம்பை
எட்டி, எடுத்து

இடை சுற்றி, சேலையென ஒல்கி நடப்ப தாய் உவமை சொல...

இந்தக் கவிஞர் மரபோடு பிறந்தவர். வாயைத்திறந்தால் கவிதை வரிகள் சரளமாக வந்து விழும்! ஆனால், இவர் தன் கவிதைகளால் தமிழ் உலகத்துக்கு அறிமுக மானவர் அல்ல!

'பண் என்பார்'' பாவம் என்பார்; பண்புமாமென்றிடுவார் கண்ணைச் சொருகி என்பார் அண்ணா கொட்டாவி விட்ட தெல்லாம் கூறு தமிழ்ப் பாட்டாச்சே!

இவர் எதை எழுதினாலும் அது பற்றி, படு விமர்சனம் எழவே செய்தது! வேண்டு மென்றே சிலரை வளரவிடாமல் தமிழகம் அன்று கொன்று கொண்டிருந்த உண்மை சிலருக்கு மட்டுமே தெரியும்!

கவிதை, கட்டுரை, கதை, விமர்சனம், திரைப்படக்கதை மற்றும் வசனம் எல்லா துறைகளிலும் கால் பதித்தவர்தான் இந்த ''புதுமைப்பித்தன்'' ஆம் புதுமைப் பித்தனே தான் அவர்!

புதுமைப்பித்தனை சிறுகதை மன்னாகவே இதுவரை பேசிவந்த வாசகர்கள், அவர் நல்ல கவிஞரும்கூட என்று சுட்டிக் காட்டவே அவருடைய ஒரு சில கவிதைகளை உங்கள் பார்வைக்கு கொண்டு வந்தேன்.

புதுமைப்பித்தன் கவிதைத் துறையில் தன்னை ''வேலூர் கந்தசாமிக் கவிராயர்'' என்றே அறிமுகப்படுத்திக் கொண்டார்! 1944லேயே கவிதை எழுத தொடங்கி விட்டார்.

அது மட்டுமல்ல. ஒவ்வொரு துறைக்கும் அவர் ஒரு புனைப் பெயரை பயன்படுத்தியே வந்துள்ளார். செ.விருத்தாசலம் என்ற தமது சொந்தப் பெயருடன், சொ.வி. ரச மட்டம், கூத்தன் தந்தி, கபாலி, சுக்ராச்சாரி என்று காலச் சூழலுக்கேற்ப பல பெயர்களில் பல புரட்சி கரமான கருத்துகளை எழுதி வைத்துச் சென்றுள்ளார்.

கடைசிக் காலத்தில் புதுமைப்பித்தன் மிகவும் வறுமையில் வீழ்ந்து போனதால் அவரை மதிக்கத்தவறிய நண்பர்களும் அரசும் அவருடைய ஏராளமான படைப்புகளை கவனிக்காமல் விட்டு விட்டார்கள்!

எத்தனை எதிர்ப்பு வந்த போதிலும், ஒரு வேளை சாப்பாடு கிடைக்காத போதிலும், புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயரில் அவர் எழுதிய சிறுகதைகள் இன்றுஉலகப் புகழ் பெற்ற கதைகளாக மாறிவிட்டது! (தமிழ் எழுத்துலகில்)

இவருடைய தந்தையார் சொக்கலிங்கம் பயங்கரமான கெடுபிடியாளர். புதுமைப் பித்தனுக்கு எட்டு வயதிருக்கும் போது அவருடைய அன்னை பார்வத்தம்மாள் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்த கையுடன் இறந்து போனார். புதுமைப்பித்தனுடைய தந்தை சொக்கலிங்கம் மறுமணம் செய்து கொண்டார். இந்த சொக்கலிங்கம் என்பவரும் ஒரு பெரிய எழுத்தாளர்தான்! இவர் எழுதிய இந்திய ஐரோப்பிய இனங்கள் என்ற நூல் மூன்று பாகங்களாக வெளிவந்த புகழ்பெற்றது. யாராவது நண்பர்கள் இவரைப் பார்த்து நீங்கள் விருத்தாசலத்தின் (புதுமைப் பித்தனின்) அப்பாவா? என்று சொல்லி விட்டால் நிறைய கோபப்படுவாராம். உங்களுடைய மகனா விருத்தாசலம்?'' என்று கேட்க வேண்டுமாம்! அத்தனை வரட்டு கௌரவம் கொண்டவர்! ஆனால், புதுமைப்பித்தன் ஒரு தனிப்பிறவி! வசதியான வாழ்க்கை இருந்தும் எல்லாவற்றை யும் துறந்து விட்டு ஒரு புத்தனைப் போல் 'பூனா' சென்று தங்கி விடுகிறார். நிரந்தர வாழ்க்கையாக அல்ல! அன்றைய பிரபல நடிகர் எம்.கே.தியாகராஜ பாகவதர் நடிப்பதாக இருந்த ராஜமுக்தி, படத்திற்காக!

நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்த புதுமைப்பித்தன தன் தந்தையுடன் ஏற்பட்ட மனக்கசப்பால் குடும்பத்ததை விட்டுப் பிரிந்து, குடும்பத்துக்காக போராட்டம் நடத்தி நீதி

மன்றம் வரை சென்றவர், வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களை அவ்வப்போது உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய அத்தனை சிறுகதை களும் இன்னமும் கூட விமர்சனம் செய்யப் பட்டு வருகிறது. அவர் பட்ட துன்பங்கள் ஒவ்வொன்றும், அனுபவித்து சிறு கதைகளாக பிரசவமானவைகள்.

அவருக்கு, அவர் உயிரோடு இருந்த வரை தன் எழுத்தின் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார். அவர் எழுதிய இருநூற்றுக்கும் மேற்பட்டகதைகளையும் குறைவாக மதிப் பிட்டதே இல்லை. என்னுடைய படைப்புகள் எதுவுமே குறை பிரசவம் கிடையாது! என்று அவரே கூறிவந்துள்ளார்.

புதுமைப்பித்தன் என்றால் சுத்தத்திற்கு பெயர் போனவர் என்று அவரைச்சுற்றியுள்ள அனைத்து நண்பர்களும் ஒப்புக்கொள்வர். இரவில் எவ்வளவு நேரம் கண்விழித்தாலும், வழக்கம் போல் அதிகாலையிலேயே எழுந்து விடுவார். காலைக்கடனை முடித்து விட்டு குளித்து சுத்தமாக வெண்ணிற ஆடை உடுத்து வது அவருக்கு நிரம்பப் பிடிக்கும்.

ஒரு எழுத்தாளன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவர்தான் இலக்கணம் கற்பித்துக் கொடுத்தவர். அவரைப்பின் பற்றியே இன்றும் வேட்டி ஜிப்பா என்று சிலர் அலைந்துக் கொண்டிருக்கிறார்கள்.

எப்போதும் அதிகமாக பேசும் அவருக்கு சாப்பாட்டை விட வெற்றிலைப் பாக்குதான் உயிர். நண்பர்கள் யாராவது மதிய நேரம் வந்து என்ன சாப்பிட வேண்டாமா? என்றால் அப்படி ஒரு விஷயம் பாக்கியிருக்கா! என்று சிரித்துக்கொண்டே பதில் கூறுவாராம்!

சுத்தத்துக்கு பெயர் போன புதுமைப் பித்தன் தன்முன் யாராவது குளிக்காமல் அசுத்தமாக ஆடை அணிந்துக் கொண்டு பேச வந்தால், பேச மறுத்து ஒதுங்கி விடுவாராம். நோயாளிகளைக் கண்டால் வெறுத்து ஒதுக்கி விடுவாராம். சுத்தமாக சுகாதாரமாக இல்லாத தால் தானே இந்த நிலை என்று புலம்புவாராம்! ஒரு எழுத்தாளன் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதில் அவர் தீவிர கவனம் செலுத்துவாராம்! சொல்வது ஒன்றாகவும் எழுதுவது ஒன்றாகவும் இருக்கக்கூடாதாம்!

மணிக்கொடி பத்திரிக்கையில் அவர் எழுதிக் கொண்டிருந்தபோது பல துன்பங்களை அனுபவித்துள்ளார். இருந்தும் மற்றவர்களுக்கு எந்த தீங்கும் செய்வதில்லை.

கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே, இது தானய்யா பொன்னகரம் என்று கூறி அம்மாளுவை அறிமுகப்படுத்தி வைக்கும் பொன்னகரம் என்னை என்ன பிச்சைக் காரின்ன நினைச்சே? என்றுகேட்கும் தொழில்யுவதிக் கதையான கவந்தனும் காமனம் சொந்த மனைவியிடமே விபச்சாரம் புரிந்து விட்டுப் போன, தெம்பும் திரனுமற்ற கோழைப்பிறவி சீமாவை அறிமுகப்படுத்தும் 'ஆண்சிங்கம்' முதலிய கதைகள் எல்லாம் மணிக்கொடியில் வெளிவந்தன.. இந்தக் கதைகள் வெளிவந்த காலத்திலேயே புதுமைப்பித்தன் இலக்கிய உலகில் ஒரு விவாதப் பிரச்சனையாகி விட்டார்.

புதுமைப்பித்தன் மணிக்கொடி பத்திரிகை யில் எழுதிய காலம் ஓர் பொற்காலம் அங்கே அவருடைய எழுத்துக்கு முழு சுதந்திரம் இருந்தது. பின்னர் அவர் மணிக்கொடியி லிருந்து வெளியேறி ஊழியன் பத்திரிகையில் இணைந்தார். இங்கே அவருக்கு உதவி ஆசிரியர் பதவி கிடைத்தது! ஆனால் எழுத்து சுதந்திரம் பறிபோனது இருப்பினும் முதலாளி யின் கெடுபிடியிலும் 'அகல்யை' 'தேக்கங் கன்றுகள்' தெரு விளக்கு போன்ற நல்ல கதைகளும் எழுதவே செய்தார்.

புதுமைப்பித்தனுக்கும் எழுதுவதுதான் வயிற்றுத்தொழில் இதை விட்டால் வேறு வேலை தெரியாது.

தன் தந்தையோடு ஒரே வீட்டில் இருந்த காலத்தில் எப்படியாவது மகனுக்கு அரசாங்கத்

தில் வேலை வாங்கி கொடுத்திட வேண்டும் என்று தந்தை நினைத்ததுண்டு. ஆனால் புதுமைப்பித்தனோ அப்பாவுக்கு எதிரானவர்.

''அரசாங்க வேலையும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்'' என்று வந்தவர் இன்று நிலையில்லாத இந்த எழுத்துத்துறைக்கு வந்து ஒரு வேளை சாப்பாட்டிற்கு கஷ்டப்படுகிறார். எத்தனையோ நண்பர்களின் புலம்பல்தான் அது!

1930-களில் புதுமைப்பித்தன் காந்தி மணிக் கொடி பத்திரிகைகளில் எழுத் தொடங்கிய போது, மணிக்கொடி சொக்கலிங்கம் மற்றும் வ.ரா.போன்றவர்களின் தொடர்பு கிடைத்தது. இந்தப் பழக்கத்தை மனதில் கொண்டு தன் தந்தையுடன் சண்டைப்போட்டுக் கொண்டு புதுமைப்பித்தன் சென்னை வந்து சேர்ந்தார்.

புதுமைப்பித்தனுடைய அப்போதைய நண்பர்களாக பத்திரிகை துறையில் கை கோர்த்து நின்றவர்களில் சிலர் வ.ரா., கே. சீனிவாசன், ரகுநாதன், டி.எஸ்.சொக்கலிங்கம், பி.எஸ். இராமையா இப்படி சிலர். புதுமைப் பித்தன் ஒரு பி.ஏ. பட்டதாரி.

1931 ஜூலைத் திங்களில் திருவனந்த புரத்தைச் சேர்ந்த பிடி.சுப்பிரமணியம் என்பவ ரின் மகளான கமலாம்பாளை முறைப்படி திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தன. முதலில் பிறந்த ஒரு ஆணும் பெண்ணும் இறந்து விட்டனர். அதன் பிறகு மூன்றாவதாக பிறந்தவர்தான் தினகரி என்ற பெண்.

புதுமைப்பித்தனை எப்படியாவது சட்டக் கல்லூரியில் சேர்த்துவிட வேண்டுமென்ற அவரது மாமனாரின் ஆசையும் நிறைவேற வில்லை. இது பித்தனுக்கு பிடிக்கவில்லை. சட்டம் படிக்காமலேயே கதைகளில் சட்டத்தை அமல்படுத்தியவர் இந்த புதுமைப் பித்தன்.

எழுத்துலகில் அவருக்கு கிடைக்க வரவேற்பு புகழ் வீட்டில் இல்லை! ஆகவே, மனைவி பிள்ளைகளையும் கூட பிரிந்து தனி வாழ்க்கை வாழ்ந்த காலங்கள்தான் ஏராளம்.

''செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு!''

வேலை வெட்டி இல்லாதவனுக்கு கல்யாணம் மனைவி தேவையா? என்ற விரக்தியில் இப்படியொரு கவிதையும் எழுதி வைத்தார்.

அவர் வாழ்ந்த கொஞ்ச காலத்தில் சில நல்ல நண்பர்களையும் கூட பகைத்துக் கொண்டதுண்டு. சிலர் பாராட்ட வேண்டு மென்றோ அல்லது ஒரு வேளை சாப்பாட்டுக் காகவோ அவர் தம் 'ஷீப்பார் பேனாவை பயன்படுத்தியதே இல்லை.

எழுத்துத் துறையில் எதை இந்த உலகத் துக்கு சொல்ல நினைத்தாரோ அதை எல்லாம் துணிந்து எழுதி விட்டுச் சென்றுள்ளார். புதுமைப்பித்தன் பேசி நீங்கள் கேட்டதுண்டா? இதோ அவரே பேசுகிறார் கேளுங்கள்.

'இதை எழுதக்கூடாது அப்படின்னு பாத்தி கட்டிப் பூச்சி புடிக்கிறார்களே! அவர்களுக்கு நம்ம கதை பிடிக்காது. நான்தான் கேட்கிறேன். ஏனைய்யா? எதை எழுதினா என்ன? அதுக்குகூட எனக்கு சுதந்திரம் கிடையாதா? பெரியவர்கள்... சொல்றாங்ககிங்றத்துக்காக உண்மைய மறைக்க முடியுமா? கருவை தடை செய்யலாம், கருத்தை தடைசெய்யலாமா?

நீங்கள்தான் என் கதையை படிக்கி றீர்களே. எப்படியிருக்கு? என்னங்க கொஞ்சம் சொல்லுங்க...! காதல் கதையாம் காதல் கதை! முத்துச் சுடர்போல நிலா முன்னே வரணும்னு பாரதி பாடிவச்சான் பாருங்க, அது இந்தக் கதாசிரியர்களுக்காகதான்! நம்ம கதாசிரியர் களுக்கு நிலாவும் தென்றலும் இல்லாவிட்டால் கதையே வராது. ஆனா என் கதையிலே காதல் என்ற சொப்பன வார்த்தை கிடையாது. என் அம்மாளு புருஷனுக்கு கஞ்சி காச்சி ஊத்தற துக்கா, கற்பை விலை பேசுவார். தொழில் செய்து வாழும் விபச்சாரி கூட மானமாகப்

பிழைப்பாள். பிச்சை எடுக்க மாட்டாள். என கதையிலே நிலவும் கிடையாது தென்றலும் கிடையாது என்று கூறும் அவர்,

வாழுகின்ற காலத்தை ஒட்டி சூழ்நிலைக்கேற்ப உண்மைச் சம்பவங்களை கருவாக சிருஷ்டி செய்து வைத்த புதுமைப்பித்தனுடைய கதைகள் தமிழ் இலக்கிய உலகில் சாகாவரம் பெற்றவை.

'வறுமையின் நிறம் சிவப்பு' என்பதைக் காட்டவே கலரை இணைப்பதுண்டு! இது அரசியல்! ஆனால் நம்ம புதுமைப்பித்தனும் ஒரு கம்யூனிஸ்டு தான்! கொடியில் சிவப்புக் கலரைப் போலவே பேசுவார், எழுதுவார். இவருக்கும் மாப்பஸான் கதைகளை நிரம்ப பிடிக்கும். மொழி பெயர்ப்புகளும் செய்துள்ளார். உலகத்துச் சிறு கதைகள் பளிங்குச் சிலை, தெய்வம் கொடுத்தவரம், மணியோசை, உயிராசை, பிரேதமனிதன், உலக அரங்கு இப்படி சகல மொழி பெயர்ப்புகளும் வெளி வந்துள்ளன.

அவர் எழுதிய நூல்களில் மிகவும் புகழ் பெற்றவை இன்றும் பேசப் படுபவைகளாக உள்ளன. புதுமைப்பித்தன கதைகள் ஆறு கதைகள், நாசக்கார கும்பல், பக்தகுசேலா, ஆண்மை, காஞ்சனை, சிற்றன்னை இப்படி சிலவற்றைக் கூறுலாம்.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு பாது காக்கப்படாமல் அல்லது நூலுருவில் வெளி வராது போனவை ஏராளம். சிறு கதைகள் 80, கட்டுரைகள் 50, மொழி பெயர்ப்புக் கதைகள் 5க்கும் மேல், வசந்தா தொடர் நாவல் இப்படி ஏராளமான எழுத்துப்படிவங்கள் புதுமைப் பித்தன் எனும் மாபெரும் இலக்கியவாதியை இந்த தமிழ் இலக்கிய உலகம் ஒளித்து வைத்து விட்டது. மறைத்து விட்டது. மறந்தே விட்டது.

ஒரு சமயம் பர்வதத் குரி புரொக்ஷன் எனும் பெயரில்படக் கம்பெனி ஒன்றை உருவாக்கி முதலாளி எனும் அந்தஸ்தை தாமே உருவாக்கிக் கொண்டவர்! இந்த சினிமா உலகத்தில்தான் உயரமுடியுமென்று கடைசி காலத்தில் அவர் ஆசைப்பட்டதுண்டு!

சினிமா ஆசையே புதுமைப்பித்தனை படுத்த படுக்கையாக்கியது! பூனாவில் ராஜ முக்தி படம் எடுக்கச் சென்ற போதுதான் அவர் காசநோயில் விழுந்தார். தன் மனைவிக்குத் தெரியக்கூடாது என்று உண்மையை மறைத்து அவர் அங்கே வாழ்ந்த வாழ்க்கை நமது கண்களில் இன்னமும் நிழலாடுகிறது. 1948 ஜூன் மாதம் அவர் இன்னும் சில நாட்களே வாழ முடியும். கடைசி நேரத்தில் இப்படி புலம்பிக் கொண்டிருந்தார் அவர்.

இலக்கியம் வாழ்ந்துக் கொண்டிருக் கிறதா? பின்னே என்ன செய்யும்! நான் ஒருத்தன் செத்துப் போறதாலே இலக்கியம் சாகணும்னு நினைக்கணுமோ? செத்துப் போனா வேண்டியவர்கள் எல்லாம் கட்டுரை எழுதி துக்கம் கொண்டாடி, கொஞ்சம் நாள் கழித்து மறந்தே போவார்கள்.

எங்கேயோ பிறந்தேன்; எங்கேயோ வளர்ந்தேன்; யார் யாரோ என்னை வளர்த்தார்கள் கடைசியில் திருவனந்தபுரத்தில் தான் நம்ம முடிவு போல இருக்கு! மணியார்டர் வந்தா எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். நான் இப்போ எனக்கு வரப்போகிற மணி யாடரைத்தான் எதிர்ப்பார்த்துக்கிட்டிருக்கேன். புரியலையா சாவைத்தானப்பா நான் மணி யார்டரை எதிர்பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருக்கேன்..

எழுத்தாளனுக்கே ஒளி பெயரில்தான் போலிருக்கு. நான் போகிற பாதை எல்லாம் வெளிச்சமாக்க விரும்பினேன். இப்போ இருட்டிலே நடக்க ஒளியை விரும்புகிறேன்.

1948 ஜூன் மாதம் 30ஆம் தேதி இரவு நேரம். தமிழ்ச் சிறுகதை உலகை ஆட்டிப் படைத்த புதுமைப்பித்தன் தன் அன்பு மனைவி கமலாவிடம் இறுதியாக பேசுகிறார்! வாசற் படியில் வந்து நிற்கும் எமன் கண்ணீர் விடுகிறான். அந்த வீட்டில் புதுமைப்பித்தனைத்

மன்றம் முழங்கிவரும் மங்காத தமிழுறவு

-கவிஞர் கல்கிதாசன் (கனடா)-

அன்றம் மதுரையிலே அழகுதமிழ் காத்தவர்கள்
ஆடிவந்த பொதிகையிலே பாடிக்கவி மகிழ்ந்தவர்கள்
குன்றம் பழனியிலேயழகு குமரனிடம் படித்தவர்கள்
குற்றால ஓடையிலே குதூகலிக்கப் பேசியவர்கள்
இன்றெம்மையாட்டிவைக்கும் இழிவு துடைப்பவர்கள்
இனிய தமிழுமதன் எல்லை கடலாட்சியும்
மன்றம் முழங்கிவரும் மங்காத தமிழுறவும்
மதிக்குமன்பர்கள் தம் மாவிதயம் வாழியவே!

பாடுபட்டுத் தமிழ்ப்பணியில் பாட்டாளிக் கூட்டம்
பார்த்ததனைப் பரிகசிக்கும் பஞ்சத்திலாண்டிகள்
கேடுகெட்டுப் போனயினம் கேட்காது தமிழுறவைக்
கேலியே செய்வர் கிராவாதி யுள்ளமவர்க்கு!

நாடுவிட்டு நாடுவந்தும் நண்டமிழின்
நயமறிந்தோர் நாலுபேர்களானாலும் நற்றமிழ்
சூடுபோட்டுப் பொலிதூற்றுஞ்சுவாதீனர்கள் வாழ்க!
சுந்தரத் தமிழுறவில் சுகம்பெறுவோர் வாழ்க!!

தேனோடு மீன்பாடும் தென்னீழ மண்ணிலே
தென்னைசூழ் திருக்கோயிலென்னுமோர் பட்டினம்
வானாடுமால் மருகன் வண்ணக் கோயிலடியில்
வளமான குடும்பத்தில் வைத்தியர் மகனாய் வந்துதித்தே
மேனாடு சென்றேன் மேன்மை கொள்தமிழின்
மேதைகளைக் கண்டேன் மெய்சிலிரிக்கும்பல
மாநாடு வைத்தார்கள் இன்றது போல் தாய்லாந்திலும்
மதிப்புறு தமிழுறவை வளர்ப்போர்கள் வாழியவே!

தவிர யாருக்கும் தெரியவில்லை அவன் வந்திருப்பது.

'கமலா கடைசியாக இந்த உலகத்துக்கு நான் விட்டுச்செல்வது ராஜமுக்தி படமும் தினகரியும்தான் கவலைப்படாதே. உன்னை நல்ல நிலையில் வைக்க விரும்பினேன். ஆசைப்பட்டேன் ஆனால் விதி என்னை இந்த கோலத்தின்தான் கொண்டு வந்து விட்டது...'' இதுதான் புதுமைப்பித்தனின் கடைசி வார்த்தைகள் புதுமைப்பித்தனுடைய வாழ்க்கை வரலாறு நூலைத் தொகுத்த ரகுநாதன் அவர்கள் புதுமைப்பித்தனை இப்படி வருணித்து எழுதியுள்ளார்.

அன்றிரவுக்குப்பின் உலகுக்கெல்லாம் விடிந்தது. ஆனால்,புதுமைப்பித்தனுக்கு அன்றிரவு விடியவே இல்லை. புதுமைப்பித்தன் காலமானார்... அவரது மனைவியும் உறவினரும் கண்ணீர் வடித்தார்கள்; கதறினார்கள்; புலம்பினார்கள்.

'வானத்து அமரன் வந்தான் காண வந்தது போல் சென்றான்! என்று புலம்பவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக சில வரிகள்.

புதுமைப்பித்தனுடைய வாழ்க்கை மிகவும் சோகமானது. அவருடைய காலத்தில் அவர் பட்ட துன்பங்கள் ஏராளம். இந்தக் கட்டுரையில் முழுமையாகச் சொல்ல முடியவில்லை. துன்பங்களை அனுபவங்களை சுவைத்து அனுபவித்து அவர் எழுதியதால்தான் இன்றும் அவருடைய 50-வது ஆண்டிலும் அவர் மறைவை எண்ணிப்பார்க்க முடிகிறது, அசையோட முடிகிறது. புதுமைப்பித்தன் என்ற ஒரு எழுத்தாளனை காலம்தான் உருவாக்கியது. அவன் உருவாக்கிய பாத்திரப்படைப்புகளும் அப்படியே! அவரைப் போன்று ஒரு எழுத்தாளரை நாம் இனி பெற முடயாது! காலமும் சூழ்நிலையுமே ஓர் வலுவான இலக்கியத்தைப் படைக்க முடியும் என்பதற்கு உதாரணம் புதுமைப்பித்தன். ஐம்பதுக்குப் பிறகு உயிரான இலக்கியம் பிறந்துள்ளதா? இன்றும் பேசப்படவிலலையே!

சிறுகதை என்றால் அது புதுமைப்பித்தன் தான்! எனவே, ஒவ்வொரு சிறுகதை எழுத்தாளனுக்கும் முன்னோடி புதுமைபித்தன். ❄

-ஏ.பி. மருதழகன், மலேசியா-

ஒரு தமிழ் மாணவனின் கல்லறை

ஐ.சண்முகநாதன் (நாதன்) முன்னாள் ஆசிரியர் ''தினத்தந்தி''

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களாக விளங்கும் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு களைப் படிக்கும்போது, என்மனதை வெகு வாகக் கவர்ந்தவர், ஜி.யு.போப்.



பிறப்பினால் ஆங்கிலேயராக இருந்தாலும், உள்ளத்தால் உணர்வினால் தமிழராக வாழத்தவர் அப் பெருமகன்.

24.4.1820 இல் கனடா நாட்டுக்கு அருகேயுள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பிறந்தவர் ஜி.யு.போப். கிறிஸ்துவப் பணிக்காக 1839-ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு வந்த அவர், தமிழ் மொழியின் சிறப்பைக் கண்டு, தமிழ்த் தொண்டராகவே வாழ்ந்தார்.

தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூல்களை மாணவர்களும் சுலபமாகக் கற்றுணரும் வண்ணம் எளிமைப் படுத்தி வெளியிட்டார். திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலான நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

போப் காலத்திற்கு முன்பே திருக்குறள் சில மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இருந்தது. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முயன்றவர்கள், அரை குறையாய் அப்பணியை விட்டுச் சென்றனர். திருக்குறளை முற்றும் ஆராய்ந்து சிறந்த முறையில் மொழிபெயர்த்து வெளியிட்ட பெருமை போப் அவர்களையே சாரும்.

இவ்வாறு அரிய தமிழ் நூல்களை மொழிபெயர்த்து வெளியிட தன் கைப் பொருளை மிகுதியாகச் செலவிட்டார்.

திருக்குறள் ஆங்கிலப் பதிப்பு முன்னுரையில் தமிழின் சிறப்பு பற்றி ஜி.யு. போப் கூறுகிறார்.

''தமிழ் மொழி பண்பட்ட மொழி, சொற்செல்வம் படைத்த தனி மொழி. தென்னிந்திய மொழிகளுக் கெல்லாம் அது தாய்மொழி, தமிழின் இலக்கியங்கள், ஒழுக்கத் தையும், அறநெறிகளையும் உருவாக்குவதற் கென்றே உருவானவை. அதற்கோர் எடுத்துக் காட்டு: திருக்குறள்.

''உயர்ந்த அறநெறியும், உயிரினம் சிறந்த ஒழுக்கமும் பேணப்பெறும் மக்கள் வாழும் நாட்டில்தான் திருக்குறள் போன்ற நீதி நூல் உருவாகும்; உருவாக இயலும். அழுக்கு இல்லாத தூய நீரூற்றுப் போலத் திருக்குறள் தோற்றம் தருகிறது. ஆம்; உலகின் அழுக்கைப் போக்க வந்த உயர் தனித் தமிழ் நூல் திருக்குறள்.

''யான் தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கிய சிறிது காலத்திலேயே, திருக் குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன் பெற வேண்டுமென்ற எண்ணத்தில், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கினேன். இப்பணி பல்லாண்டுகளுக்குப்பின் முற்றுப் பெற்றமை கண்டு இறைவனுக்கு நன்றி படைக்கின்றேன்!'

இவ்வாறு போப் எழுதியிருக்கிறார் என்றால், அவர் தமிழ் மீதும் திருக்குறள் மீதும் கொண்டிருந்த பற்று எத்தகையது என்பதை உணரலாம்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 42 ஆண்டுக் காலம் வாழ்ந்த ஜி.யு.போப், 1882 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைப் போதிக்கும் பேராசிரியரானார்.

விக்டோரியா மகாராணியின் வைரவிழா வின் நினைவாக, சிறந்த சேவை செய்தவர்

களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் தங்கப்பதக்கம் 1906-ஆம் ஆண்டு போப் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழ் மாணவன்

1900, அக்டோபர் 20-ஆம் தேதி, ''சித்தாந்த தீபிகா'' நூலாசிரியர் ஜே.எம்.நல்ல சாமி பிள்ளைக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில், நான் இறந்த பின் அமைக்கப் படும் கல்லறையில் ஒரு தமிழ் மாணவன் என்று பொறிக்கப்படும்'' என்று குறிப் பிட்டிருந்தார்.

அத்துடன் எனது கல்லறைக்குச் செல விடும் தொகையில் ஒரு சிறு பகுதியையாவது, தமிழ் பிரபுக்களின் நன்கொடையால் அமைய வேண்டும்'' என்று விருப்பம் தெரிவித் திருந்தார்.

1908-ஆம் ஆண்டு பிப்ரவரி 11ந்தேதி போப் காலமானார். அவருக்குக் கல்லறை அமைக்க, அவர் இறுதி விருப்பப்படி சென்னை பச்சை யப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் செல்வ கேசவராய முதலியார், தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி லண்டனுக்கு அனுப்பி வைத்தார்.

கல்லறை எப்படி இருக்கிறது?

லண்டன் செல்லும் வாய்ப்புக் கிடைத் தால், இக்கல்லறையைக் காணவேண்டும் என்ற ஆசை, என் போன்ற பலருக்கு இருக்கக் கூடும்.

பிரபல எழுத்தாளரும், அகில இந்திய வானொலியில் பல்லாண்டுகள் பணியாற்றி வரும், பேராசிரியர் ''கல்கி'' யின் மறைவுக்குப் பிறகு ''கல்கி'' இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய வருமான மீ.ப. சோமசுந்தரம் (''சோமு'') 1961-ஆம் ஆண்டில் போப் கல்லறையைத் தேடிக் கண்டுபிடித்து, அஞ்சலி செலுத்தினார்.

இது பற்றி தமது அக்கரைச் சீமையில் என்ற நூலில் மீ.ப. சோமு எழுதியிருப்பதாவது.

''லண்டன் நகரத்தில் எனக்குத் தெரிந்த நண்பர்களிடமெல்லாம் விசாரித்தும்கூட போப் அறிஞரின் கல்லறை ஆக்ஸ்போர்டில் எங்கே இருக்கிறது என்று யாராலும் சொல்ல முடியவில்லை.

ஆங்கிலேயர்களில் பெரும் சாதனை புரிந்தவர்கள் பற்றிய ஒரு நூலில், போப் அறிஞரின் சமாதி, ஆக்ஸ்போர்டின் செயின்ட் செபல்கள் செமெட்ரி' என்ற கல்லறைக் கூடத்தில் இருக்கிறது என்று தெரிய வந்தது. இந்தக் கல்லறைக் கூடம் வால்ட்டன் என்ற ஒரு பழைய வீதியில் இருப்பதாகவும் தெரிந்து கொண்டேன்.

ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாளில் அங்கு புறப்பட்டேன். துணையாக மா. கோபால கிருஷ்ணன் என்ற தமிழ் இளைஞரும் வந்தார்.

நாங்கள் ஆக்ஸ்போர்டு போய்ச் சேரும் போது பகல் 12 மணி. வால்ட்டன் தெருவை விசாரித்துக் கொண்டு சென்றோம். 'செயிண்ட் செபல்கள் செமெட்ரி'க்குப் போனால் அங்கே வாசல் அடைத்து, இரண்டு கதவுகளும் பூட்டிக் கிடந்தன!

பெருத்த ஏமாற்றமாகிப் போய் விடவே, எதிர் வரிசையிலே இருந்த ஒரு சிகரெட் கடைக்குப்போய், தகவல் கேட்டோம். அங்கே ஒரு கிழவி அம்மாள் உட்கார்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தாள். எங்கள் முகத்திலே இருந்த கவலைக் குறியைக் கண்டு மிகவும் பிரிவோடுச் சொன்னாள் ''நண்பரே! உங்களுக் காக மிகவும் அனுதாபப்படுகிறேன். இப் பொழுது இந்தக் கல்லறைக் கூடத்தைப் பூட்டி விட்டார்கள். இங்கே நாலாயிரம் கல்லறைகள் இருக்கின்றன. 12 ஆயிரம் பேர்களை அடக்கம் செய்திருக்கிறார்கள். இனிமேல் நிச்சயமாய் இடம் கிடையாது என்று இந்தக் கூடத்தையே அடைத்து விட்டார்கள்.

இவ்வாறு அந்த அம்மாள் சொன்னதும், என்னுடைய கவலை எப்படி இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்.

''நண்பரே! உங்களுடைய முன்னோர் ஒருவர் இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக் கிறார் என்பது உங்கள் கவலையில் இருந்து எனக்குப்புரிகிறது. நீங்கள் ஒன்று செய்து பாருங்கள். கல்லறைகளின் பாதுகாவலர், முகப்பிலேயே குடியிருக்கிறார். போய், உங்கள் மூதாதையரின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்த வந்திருப்பதாகச் சொல்லிப் பாருங்கள் என்று கூறினார், அந்தக் கிழவி அம்மாள்.

''இங்கே உள்ள கல்லறையில் நித்திரை செய்கிறவர் என்னுடைய மூதாதையர் மட்டு மல்ல; தமிழன் ஒவ்வொருவனுக்கும், தென்னிந்தியர் ஒவ்வொரு வனுக்கும் மூதா தையர் என்று கூறிவிட்டுக் காவலாளியைப் போய்ப் பார்த்து, அவருடைய அனுமதியோடு உள்ளே சென்றோம்.

நாலாயிரம் கல்லறைகளில் போப்பின் கல்லறை எது என்று கண்டுபிடிப்பது எளிய காரியமா? மூடப்பட்ட கல்லறைக் கூடமான தால், பதிவுப்புத்தகமும் கல்லறைகளின் விவரப் பட்டியலும் அங்கு இல்லை. நானும் மா. கோபால கிருஷ்ணனும் போப்பின் பெயர் தென்படுகிறதா என்று ஆளுக்கொரு மூலையில் தேடினோம். அகப்படவில்லை.

காவலாளியும் எங்களோடு வந்து தேடினார்.

எங்களுடைய திண்டாட்டத்தைப் பார்த்து, போப் அறிஞரின் ஆத்மாவுக்கே இரக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென் றால், எங்கோ ஒரு புதருக்குள்ளேயிருந்து, ''போப்...'' என்று காவலாளி கூப்பாடு போட்டார். ஓடிப்போய் பார்த்தோம். வாசலின் முகப்பிலேயே வலது புறத்திலே வளர்ந்து நின்ற ஒரு ''யூ'' மரத்தின் அடியில், செடியும், கொடியுமாய் பின்னிப் படர்ந்து மறைத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய புதரின் கீழே, சலவைக் கல்லினால் ஆன கல்லறையின் புதரைச் சற்றே களைந்ததும், எழுத்துக்கள் மங்கலாகத் தெரிய ஆரம்பித்தன.

கோபாலகிருஷ்ணன் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்தார். கைக்குட்டைகளை அதில் நனைத்துக் கல்லறையிலே தேய்த்தோம். கீழ்க் கண்ட வாக்கியங்கள் கல்லறையின் மேலே மிக நன்றாகத் தெரிந்தன.

"George Uglow pope D.D. of South India sometime lecturer in tamil and telegu in the university and chaplain of balliol collge, oxford, born 24th April 1820. Died 11th February 1908. This stone has been placed here by his family and by his Tamil friends in south india in loving admiration of his life long labours in the cause of oriental literature and philosophy"

இந்த வார்தைகளைப் படித்ததும் எனக்கு உடம்பு புல்லரித்தது! இந்தக் கல்லை இங்கே நிறுவுவது போப்பின் குடும்பத்தார் மட்டுமில்லை. தென்னிந்தியாவில் உள்ள அவருடைய தமிழ் அன்பர்கள் என்று எழுதியிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தேன். அவரை ஒரு தென் இந்தியர் என்றே அந்தக் கல்லறையில் குறிப்பிட்டிருப்பதும் இந்தக் கல்லறையைக் கட்டுவதிலே தமிழ் மக்களுடைய நன்கொடையும் சேர்ந்திருக்கிறது என்பதும் தமிழ் வரலாற்றில் மணிமணியாகச் செதுக்கி நிறுத்த வேண்டிய எழுத்துக்கள் அல்லவா? அந்த எழுத்துக்களின் மேலேதான் இப்பொழுது காட்டுக்கொடி படர்ந்திருக்கிறது.

போப்பின் கல்லறைக்குப் பக்கத்திலே அவருடைய மனைவியின் கல்லறையும் இருக்கிறது. இந்த இரண்டு கல்லறைகளையும் நானும் கோபால கிருஷ்ணனும் தமிழ்மக்களின் சார்பிலே தமிழ் முறைப்படி சுற்றி வந்து வணக்கம் செலுத்தினோம். இதைப் பார்த்ததும், காவலாளிக்கும் ஒரு புதிய பக்தி உண்டாகி விட்டது. அவரும் கிறிஸ்துவ முறையிலே கல்லறைக்கு மரியாதை செலுத்தினார்.

''என் நண்பனே! இனிமேல் நீ இந்தக் கல்லறையிலே கொடி படரும் படி விடாதே.

இது எங்கள் முன்னோர் ஒருவருடைய சமாதி. இவருடைய பரம்பரையிலே வந்த மக்கள், ஆயிரம் ஆயிரமாகத் தென்னிந்தியாவிலே வாழ்கிறோம். இனிமேல் யாராவது இந்தப் பக்கமாக வந்தால் இந்தக் கல்லறையைக் கண்டு பிடிப்பதற்காக நாங்கள் பட்ட கஷ்டம் எல்லாம் அவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாது. அவ்வப் போது எண்ணெய் தடவி இந்த எழுத்துக்களை பளபளப்பாக வைத்துக் கொள். உனக்குப் புண்ணியம் உண்டு. எங்கள் நாட்டு மக்கள் உனக்கு நன்றி செலுத்துவார்கள். என்ற சொல்லி எங்கள் அன்பையும் காவலாளிக்கு வழங்கி னோம்.

''இவ்வாறு சோமு எழுதியிருக்கிறார்

இதிலிருந்து என்ன தெரிகிறது.

(1) போப் கல்லறை சரிவர பரமாமரிக்கப் படாமல், புதர் மண்டிக்கிடக்கிறது. நாற்பது ஆண்டுக்கு முன்பே இப்படி என்றால், இப்போது எப்படியோ!

(2) கல்லறை **நினைவுக் கல்லின்** என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, **தமிழ் மாணவன் என்று குறிப்பிடப்பட வில்லை.**

லண்டன் தமிழர்களுக்கு வேண்டுகோள்

ஜி.யு. போப் பிறப்பில் ஆங்கிலேயர் ஆயினும், அவர் தமிழர், பச்சைத்தமிழர். தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களில் ஒருவர் ''கன்னித் தமிழை வளர்க்கக் கடவுளால் படைக்கப் பெற்ற செஞ்ஞாயிறுகள் சில. அச்சில வற்றுள் ஒன்று டாக்டர் ஜி.யு.போப் என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர்.

அத்தகையவருக்கு, தமிழர்களாகிய நாம் செய்யவேண்டிய நன்றிக் கடன் ஒன்று இருக்கிறது.

அவருடைய கல்லறை இப்போது எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதை அழகு படுத்த வேண்டும். நினைவுக்கல் ஒன்றை சலவைக் கல்லால் செய்து அங்கு நிறுவ வேண்டும். அந்தக்கல்லில், ஜி.யு. போப் செய்த தமிழ்த் தொண்டுகளைப் பற்றி தமிழிலும், ஆங்கித்திலும் குறிப்பிட்டு விட்டு

தமிழ் மாணவர்

டாக்டர் ஜி.யு. போப்

இங்கு உறங்குகிறார்.

தோற்றம்	**மறைவு:**
24.4.1820	11.2..1908.

என்று தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பொறிக்கவேண்டும்.

போப் செய்த சேவைக்கு அவர் கல்லறை உள்ள இடத்தில் பெரிய நினைவுச் சின்னமே எழுப்பலாம். ஆனால் அயல்நாடாக இருப்பதால், அது சாத்தியம் இல்லை. ஆனால் நினைவுக் கல் பதிப்பதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது.

இதை அரசாங்கத்தின் மூலம் செய்வ தென்றால், வெளிநாட்டு அரசு சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால், கோப்புகள் நகருவதற்கே பல ஆண்டுகள் ஆகும்.

லண்டன் தமிழர்கள் மனம் வைத்தால், இதை ஒரே மாதத்தில் நிறைவேற்ற முடியும்.

நன்கொடை வேண்டுமா?

தமிழ்நாட்டில் வாழும் தமிழ்ச் சான்றோர் களும், பிறநாடுகளில் வாழும் தமிழன்பர்களும் அள்ளிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

லண்டன் வாழ் தமிழ் மக்களே!

நீங்கள் மனம் வைத்தால்- முயற்சி எடுத்தால், ஈடு இணையற்ற தமிழரான ஜி.யு. போப் அவர்களுக்கு இந்த நினைவுக் கல்லை வெகு விரைவில் அமைக்க முடியும்.

இதைச் செய்யுங்கள்; விரைந்து செய்யுங் கள், அப்போதுதான் போப் ஆன்மா சாந்தி அடையும். ❑

21-ஆம் நூற்றாண்டில் தமி‘ள’கம் தமி‘ழ’கமாக மாறிவிடும்?

-ழகரப்பணி கடலூர் அ.தேவநாதன்-

தமிழ் மொழி என்பது என்ன? அஃது யாரால், எப்பொழுது, ஏன் உண்டாக்கிப் பேசப்பட்டது? அம்மொழி உண்டானது முதலே இப்போதுள்ளவாறுதான் இருந்ததா? இல்லையெனில் அவ்வப்போது மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு செம்மையடைந்ததா? அதற்கு எழுத்துக்கள் இப்போதுள்ளவாறுதான் எப்போதும் இருந்ததா? அஃது வழங்கும் நிலப்பகுதி எது? தமிழுக்குப் பகைவர்கள் உண்டா? என்பன போன்ற வினாக்களுக்கு விடை பகரும் போக்கில் சுருக்கமாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

380 மில்லியன் (38 கோடி) ஆண்டுகளுக்கு முன் இப்போது தனித்தனியே சிதைந்துள்ள நிலக் கண்டங்கள் யாவும் ஒரே கொத்தாக ஒரே இடத்தில் சேர்ந்து குவிந்து ஒட்டிக் கொண்டு மாபரந்த நிலப்பரப்பாக, இப்போதுள்ள அண்டார்ட்டிக்கா நிலப்பரப்பைச் சுற்றி இருந்ததாகவும் சகாரா பாலைப் பகுதிதான் அண்டார்ட்டிக்கா உள்ள இடத்தில் அப்போது இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

புவி தோன்றி 322 கோடி ஆண்டுகள் கழித்து, அதனுடைய மேல் பகுதியின் கெட்டித் தன்மை பொடிந்து தளர்ந்து, பூமியின் சுழற்றி வேகத் தாக்கத்தால் பெரும்பாளங்களாக உடைந்து பிரிந்து நகர ஆரம்பத்தின் விளைவு தான் தற்போதுள்ள கண்டங்களின் அமைவிடம் ஆகும். இன்னும் பல கோடிக்கணக்கான ஆண்டுகளில் தற்போதுள்ள கண்டங்களின் இருப்பிட நிலையும் நிச்சயம் மாறுபடும். இந்தியா இருக்குமிடத்தில் ஆஸ்திரேலியாவும், இங்கிலாந்து இருக்குமிடத்தில் இந்தியாவும் இடம் மாறும் நிலை உருவாகலாம்.

இப்படி பிரிந்து சென்றவை போக, இப்போதுள்ள இந்து மாக்கடல் பகுதியில் இருந்த ஒரு பெரு நிலப் பரப்பே லெமுரியாக் கண்டம். அதில் 50-க்கு மேற்பட்ட சிறு நாடுகளைக் கொண்ட ஒரு பெரிய நாடாகத் திகழ்ந்ததுவே குமரி நாடு. பஃறுளி ஆறு, மேரு மலை, முதல் மூன்று தமிழ்ச் சங்கங்கள் யாவும் இருந்த பழம்பெரும் பாண்டி நாடு தொடர்ந்து ஒரே அரசாக, ஒரே அரச பரம்பரையில் 70 தலைமுறைக்கும் மேல் ஆண்டு வந்துள்ளனர். தட்சன் வாழ்ந்து வரலாறு படைத்ததும் அந்நிலப் பரப்பில்தான்.

இப்போதுள்ள இந்தியா நாவலந் தீவாக இருந்த காலம். குமரிக் கண்டமே நாளாவட்டத்தில் கடல்கோளால் மூழ்கிய போது, மாண்டு போன தமிழர்கள் போக எஞ்சியவர்கள், படகுகள், மிதவைகள் மூலம் கடல் கடந்து புலம்பெயர்ந்தார்கள். அதன் வட பகுதியில் இருந்தவர்கள் அருகில் வடதிசையில் இருந்த நாவலந்தீவல் நிலம் பெயர்ந்தார்கள். இப்படி நிலம் பெயர்ந்தவர்கள்தான் தற்போது இந்தியாவெங்கும் பரவி திராவிட மொழிகள் பேசும் மக்களாவர். புலம் பெயர்ந்தவர்கள்தான் உலகின் பல்வேறு இடங்களில் பல நாகரிகங்களை உருவாக்கியவர்களாவர்.

குமரி நாடு கடல் கோளால் அமிழ்ந்த போது நாவலந்தீவுக்கு வடக்கே இருந்த கடல் பகுதி இமயமலையாக மேலெழுந்து ஆசியாக் கண்டத்துடன் இணைத்துவிட்டது. அதுதான் தற்போது இந்தியாவாக உள்ளது. இதுவே தமிழர்களின் தாயகமாகவும் மாறிவிட்டது.

உலகில், குமரி நாட்டில் தோன்றிய முதல் மனிதன் தமிழன்தான். அவனது முதல் மொழி தமிழ்தான். அதன் முதல் எழுத்து அகரம்தான். அதை இன்றும் தெளிவாக முதற் குறளில் விளக்குகிறார் திருவள்ளுவர்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு". (குறள் - 1)

ஆதி அவன் - ஆதவன்; பகல் அவன் - பகலவன்; பகவன்; ஆதிபகவன் என்பது ஆதி அகவன், ஆதி அவன், ஆதவன் என்பதை நேரடியாகவே குறிக்கிறது. ஆதிஅகவன் - மூத்த வயதுடைய முதல்வன் - முதலில் தோன்றி யவன். ஆதிபகவன் என்றால் முதலில் தோன்றிய பகலவன். ஆதி அவன் - முதல் அவன் (ஆதி என்றால் முதல்) என்பதை வெகு எளிதாக புரிந்து கொள்ளும்படி சொல்லியுள்ளார்கள் ஆதித் தமிழர்கள். ஆதித்தன் என்றால் ஆதித்தமிழன் என்றும் ஆதவன் என்றும் பொருள்படும். ஆதிபகவன் என்றால் - பகலவன்; யாவற்றுக்கும் முதன்மையானவன்.

பகலவன் நமது அண்டத்தில் முதலில் தோன்றி 500 கோடி ஆண்டுகள் ஆகின்றன. அவனது 40-ஆவது கோடி அகவையில், புவியைப் பிரித்துப் பிறப்பித்தான். அதாவது பூமியை 50 வயதுடைய ஒருவன், தனது 12½ ஆவது வயதிலேயே முதல் பிள்ளையாக முதற்காலத்திலேயேப் பெற்றான் என்பதால், முதற்றே உலகு என்று சொல்லியுள்ளார்.

அடுத்து - அகர முதல என்பதால், குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் கண்ட முதல் மொழி தமிழ். அதன் முதல் எழுத்து அகரம். அதாவது முதற்குறள் சொல்லிய ஆதிபகவன் முதன்மையானவன். முதற்றே உலகு- ஆதவனுக்கு உலகமே முதன்மையானது. முதல் மனிதன் தமிழன், முதல் மொழி தமிழ், அதன் முதல் எழுத்து அகரம் ஆக முதற் குறள் சொல்லியதெல்லாம் முதன்மையானவை என்று இக்குறளுக்குப் பொருள் கொள்ள வேண்டுமே யன்றி கடவுளையெல்லாம் இதில் தேவையின்றி இழுத்தல் வேண்டாம் என்பது என் கருத்து.

நம் மூதாதையர்கள் தமிழ் மொழியை மென்மையாக இலக்கிய நயத்துடன் வளர்த் தார்கள். மொழி ஒன்றாக இருப்பினும் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள் ஒரு பொருளுக்கு பல சொற்களைப் பயன்படுத்திப் பேசியதைச் சான்றோர்களைக் கொண்டு சங்க காலத்திலேயே தொகுத்து வைத்திருக்க வேண்டும். ஒரு நாட்டில் அரசன் என்றும், ஒரு நாட்டில் மன்னன் என்றும், ஒரு நாட்டில் காவலன் என்றும், ஒரு நாட்டில் வேந்தன் என்றும் ஒரு நாட்டில் புரவலன் என்றும் வழங்கி வந்ததைத் தொகுத்து நாட்டை ஆள்பவனுக்கு - மன்னன்; அரசன்; காவலன்; வேந்தன் புரவலன் என்று வகுத்தனர், தொகுத் தனர். தமிழ் மொழி இப்படி பல சொற்களில் வளர வளர முதலில் கூத்தும், பின்னர் இலக்கியமும், அதன்பின் இலக்கணமும் என்று வளர பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கும்.

முதலில் அகவுதலைப் போலப் பாடல் களை, அகவற்பாவில் எளிதாக எழுத ஆரம்பித் தார்கள். பின்னர் சற்று மேம்பாட்டுடன் (அ) விருத்தி செய்து) விருத்தப்பாக்களை எண்சீர், எழுசீர், அறுசீர், ஐஞ்சீர், நாற்சீர் என (சுலப) எளிய முறையிலிருந்து கடின நிலைப் பாடல் களைப் புனையும் திறன் பெற்றனர். பின் அதனினும் கடினமான வெண்பா முறையையும் அறிமுகப்படுத்தினர். வெண்பாவில் கடினமான குறள் வெண்பாவை முதன் முதலில் திருவள்ளுவ நாயனார் அறிமுகம் செய்ததுதான் திருக்குறள் ஆகும்.

அக்காலத்தில் இந்தியா முழுவதும் திராவிட இனம் பிரிந்து ஏறத் தாழ 25 திராவிட மொழிகள் பேசியவர்கள், பலுசிஸ்தானம், பீகார், கிழக்கு மத்தியப் பிரதேசம், ஒரிசா, ஆந்திரா, கர்நாடகா, கேரளம் ஆகிய பகுதி களிலும் தமிழகத்தில் தமிழ் மொழியையும் பேசி வருகிறார்கள். இவற்றை தென் திராவிட மொழி, நடு திராவிட மொழி, வட திராவிட மொழி எனப்பிரித்தனர். ஆரியர்களின் வருகையால் அழிந்த சிந்துவெளித் தமிழ் மக்கள் பெரும் பாலானோர் தெற்கு நோக்கி வந்து முக்கோண இந்தியாவில் (தக்காண) வந்தமர்ந்தனர். அத் தமிழர்கள் இங்கு வந்ததின் பின்னர், ஆரியர் களும் தொடர்ந்து வந்து தற்போதைய ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் குடியமர்ந்து அவர்களது வடமொழியை மெல்லப் புகுத்தி

அப்பகுதித் தமிழை தெலுங்காகவும், கன்னட மாகவும், கடைசியாக மலையாளமாகவும் பிரித்துவிட்டனர். இப்படி தமிழகம் தற் போதைய நிலைக்குக் குறுகியது. தமிழகத்தில் வடமொழி ஆதிக்கத்தை நாம் ஒழித்தோம். அதற்குப் பழிவாங்கும் போக்காக ஆரியர்கள் சந்தடியின்றி தமிழே இல்லாத ஆங்கிலப் பள்ளிகளை ஆரம்பித்து வீட்டில், தெருவில் என்று எங்கும் ஆங்கிலம் பேசுவது ஆங்கில கலாச்சாரங்களை வளர்த்து தமிழை இல்லாமல் ஒழிக்கச் செய்ய வேகமாகத் திட்டமிட்டு செயல்படுகின்றனர். இந்த உள்நோக்கம் புரி யாதத் தமிழர்களும், அரசும் கூட அதற்குத் துணை போகின்றனர்.

உலகம் முழுவதிலும் பரவிக்கிடக்கும் தமிழர்களின் மொத்தக் கணக்கு 11 கோடிக்கு மிகுகிறது. இப்படி இவர்கள் சிதறிவிட்டதால் தமிழர்களுக்கென ஒரு தனி நாடு இல்லாத சூழ்நிலை உருவாகிவிட்டது.

தமிழ் எழுத்துக்கள் சிந்துவெளி காலத்தில் சித்திரை முத்திரை எழுத்துக்களாக இருந்து, சிந்துவெளி நாகரிக அழிவிற்குப் பின் அசோகர் காலத்தில் 'தமிழ் பிராமி' எழுத்தாகவும் மாறி, 'தமிழி' என்று வழங்கிய காலம் கிமு. 3-லிருந்து கி.பி 3-ம் நூற்றாண்டு முடிய எனலாம்.

புதுச்சேரிக்கு பக்கத்தில் உள்ள அரிக்க மேடு என்ற ஊரில் அகழ்வாய்வு மூலமும், சிந்துவெளி எழுத்துகள் இங்கெல்லாம் புழங்கி யுள்ளன என்பதை எடுத்துக்காட்டி மெய்ப்பித் துள்ளனர். இதிலிருந்துதான் இந்தியா முழுக்க ஒரு காலத்தில் ஒரே மொழி ஆதிக்கத்தில் இருந்துள்ளது என்பதை நம்ப முடிகிறது.

துரோனிக், செமிட்டிக், ஆரியம் இம் மூன்றுமொழிகளும் ஒரு மூலத்தினின்று சிதைந்திருக்க வேண்டும் என்று மாக்ஸ் முல்லரும், அம்மூலத்திற்கு திராவிடம் (தமிழ்) மிக நெருங்கியது என்று கால்டு வெல்லும் கூறியுள்ளனர்.

கி.மு. 31-ல் பிறந்த திருவள்ளுவப் பெருந்தகையவர்களும், அசோக மன்னன் பயன்படுத்திய பிராமி எழுத்துக்களையே திருக்குறள் எழுதுவதற்குப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அப்போது பயன்பாட்டிலிருந்த எழுத்துக்கள் வட்டெழுத்து அல்லது வெட்டெழுத்து (கல்வெட்டு எழுத்து) ஆகமாறி தமிழி - தமிழ் என்றும் மாறி படிப்படியாக மெருகேறி உருமாறி 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வருகைக்குப் பின் அச்செழுத்து கண்டுபிடித்ததால் தமிழ் எழுத்துக்கள் ஒரு நிலைப்பட்டு தற்போதுள்ள சதுர எழுத்து நிலையை எய்தின.

புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் சப்பானி யர்கள் என்பதை மெய்ப்பிக்க பொற்கோ அவர்கள் சொன்னார்கள் - தமிழர்கள் நாம் கொண்டாடும் பொங்கல் பண்டிகையை பொங்கலோ பொங்கல் என்று சொல்வதைப் போலவே அதே நாளில் அவர்கள், ஹொங்கரே ஹொங்க என்றுச் சொல்லிக் கொண்டாடுவதை வைத்து ஒப்பிட்டு விளக்குவார்கள். நானும், சப்பானியர்களின் மூக்கு, கண், குள்ள உருவம், முக அமைப்பு ஆகியவற்றை வைத்து இவர்கள் தமிழர்களாக இருந்திருப்பர் என்று கணித்திருந் தேன். அதனை உரமுட்டி மெய்ப்பித்தார் பொற்கோ என்ற பேரா.பொன் கோதண்டராமன் அவர்கள்.

சப்பானியர்கள் நல்ல நிறத்துடன் உள்ளார் களே என்றால் - நாம் நமது உணவுமுறைப் பழக்கங்களை - வரகு, கேழ்வரகு போன்ற வரட்சி தான்ய உணவு, வெயில் உழைப்பு போன்றவற்றால்தான் கருமை நிறம் உள்ளவர் களாக உள்ளோம்.

தமிழர்கள் உணவு முறையை மாற்றி பழம், பால், அரிசி, கோதுமை, பச்சைக் காய்கறிகள் எனவும், வெய்யில் உழைப்பைத் தவிர்த்து நிழல் உழைப்பாக மாற்றியும் வாழ ஆரம்பித்தால் 150 ஆண்டுகளில் நல்ல நிறத்துக்கு மாறிவிடலாம்.

இன்று நாம் பேசும் தமிழில் தமிழ்ச் சொற்கள் எனக் கருதியே நம்மையும் அறியாமல் சுமார் 600க்கும் மேற்பட்ட வடசொற்களைத் தினமும் பயன்படுத்திப் புழங்குகிறோம். 12 திங்கள் பெயர்கள், 27 நாள் மீன்கள் பெயர்கள், 60 ஆண்டுகளின் பெயர்கள், இசையில் கையாண்ட இராகங்களின் பெயர்கள், அனைத்து கோயில் கள், தெய்வங்கள், மலைகள், ஆறுகள் பெயர்கள் மற்றும் மனிதர்களின் பெயர்கள் என்று எல்லா வற்றையும் வடசொல்லாக மாற்றிப்பேச வைத்து விட்டனர்.

சிந்துவெளி எழுத்துக்களில் ல,ள,ழ இம் மூன்றுக்கும் ஒரே மாதிரியான எழுத்து வடிவம் (ℓ ஒரு மீன் வடிவத்தில்) சிறு வேறுபாடுகளோடு பயன்படுத்தியுள்ளனர். தற்காலத் தமிழுக்கு வருவோம். தமிழ் நாட்டில் தமிழர்கள் மட்டுமல்ல, பெருவிலக்கத்தினர் தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள், முகம்மதியர்கள், சௌராட்டிரர்கள், இந்தி பேசும் வடஇந்தியர்கள் எனப் பல மொழிக்காரர்களும் வசிக்கிறார்கள். தமிழர்கள் அயலிடங்களுக்குச் சென்று வாழும் நிலைக்கும், அயலவர்கள் தமிழகத்தில் வந்து வாழும் நிலைக்கும் மடுவுக்கும் - மலைக்கும் உள்ள வேறுபாடு உள்ளதை நினைத்தால் உள்ளம் வேதனையுறுகிறது.

தமிழில் சிறப்பெழுத்தாக **'ழ'கரம்** உள்ளது. அடுத்து பிரெஞ்சு, மலையாளம் தவிர மற்றவற்றில் இல்லையெனப்படுகிறது. தமிழ கத்தின்மீது அரசியலாதிக்கம் செய்த தெலுங்கு, மராட்டி, முகம்மதிய, போர்ச்சுகீசிய, ஆங்கிலே யர்கள் இங்கு வந்து குடியேறி அவர்தம் இனமக்களையும் பெருமளவில் குடியமர்த்தி அரசாண்டபோது அவர்கள் மொழியில் 'ழ'கரம் இல்லாத காரணத்தால், அவர்கள் தமிழில் பேசினால் 'ழ'கரத்தை மாற்றித்தான் பேச முடியும். 'ழ'கரத்துக்கு பதில் 'ல'கர அல்லது 'ள'கர ஒலிப்பைத்தான் அவர்களால் கொடுத்துப் பேச வரும். தமிழர்களான நாம் அதைக் குறைகூற முடியாது. நம் நாட்டில் வந்து அப்படிப் பேசியவர்களை நாம் திருத்தியிருக்க வேண்டும். திருத்தவில்லையாயினும் தவறுமில்லை. நாம் அவர்களைப் போலவே 'ழ'கரம் விடுத்து, 'ல'கர, 'ள'கர மாக மாற்றிப் பேசாமல் என்றைக்கும் 'ழ'கரமே பேசியிருந்தால் தொல்லை வந்திருக்காது. 'ழ'கரம் பேசினால் இழிவு என்பதைப் போன்ற நிலைமையைக்கூட தமிழகத்தில் உருவாக்கி விட்டார்கள் தமிழர் களே என்றால், யாரை நோவது? தமிழ் என்பதிலேயே சிறப்பெழுத்தாய் உள்ள 'ழ'கரத்தை, மொழி என்பதிலேயே உள்ள 'ழ'கரத்தை, அழகு என்பதிலேயே உள்ள 'ழ'கரத்தைப் புகுத்திய இனம்; 'ழ'கரம் பலுக்குவது கடினமாக இருக்கிறது என்ற நிலைக்கு வந்து அதைச் சிதைத்து 'லகர, ளகரமாக எளிதாக மாற்றி உளறுவது எந்த விதத்தில் நியாயம் என்பதை தமிழர்களே சிந்தியுங்கள் என்றால் - பழக்கப் பட்டுப்போன தமிழர்கள் முகம் சுளிக்கிறார்கள், கோபப்படு கிறார்கள, எரிந்து விழுகிறார்கள்.

சங்க காலத்தில் வணிகத்துக்காக வந்த அரேபியர்களும், யவனர்களான ரோமானியர் களும், கிரேக்கர்களும் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய அயலவர்களும் - தவறு செய்தளித்தத் தவறினை நாம் ஏன் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று ஒரே வொரு தமிழனாவது இதுவரை சிந்தித்தானா? தவறைத் தவறு என்றாவது உணர்ந்தானா? உணர்ந்திருந்தால் திருந்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பானே? ஆயிரக்கணக்கான ஆண்டு களாகியும் இதுவரையில் கவலைப்படாமல் இருந்துவிட்டு இப்போது ஒழுங்காகத் தமிழ் பேசிக் கொண்டிருந்த பகுதி மக்களிடையேயும் வணிகர்களாக வந்த தென்பகுதியினர் ளகரத்தை வெகு வேகமாகப் பரப்பி வருகின்றனர். இதை ஒரு தவறு என்று தெரியாமலேயே இவ்விதம் தமிழர்கள் தொடர்ந்து இழிவாகப் பேசி வந்தால் விரைவில் ழகரம் ஒழிந்து போகும் நிலை ஏற்படும் அல்லவா?

நாக்கைப் பார்த்துத்தான் மனிதனுக்குள்ள நோயை மருத்துவர்கள் அறிந்து கொள்வார்கள். அதற்கு நா ஒரு கண்ணாடி போன்று உதவும்

கருவி. அதைப் போன்று அறிவாளிகள், ஒருவரது பேச்சைக் கொண்டு அவருடைய மொழிப் புலமையை, மொழித் தரத்தை அளந்து விடுவார்கள்.

மனித உறுப்பில் மிக நல்ல உறுப்பு நாக்குதான். அதே சமயம் மிகவும் பொல்லாத உறுப்பும் அதுவேதான். நாவைப் பயன்படுத்தும் முறையைக் கொண்டு ஒரு புலவன் உயரவோ, தாழவோ வாய்ப்பு உண்டு.

தமிழ் எழுத்துகளும் உள்ள மிகச் சிறப்பு என்னவெனில் - ஒரு எழுத்தைச் சொல்லி எழுதும்போது உச்சரிக்கும் ஒலியே பேசும் போதும் மாறாது ஒன்றாகவே இருக்கும் (எ-கா) வ--ந்--தா-ன், என்று ஒவ்வொரு எழுத்தையும் சேர்த்து எழுதிய அதே ஒலியில்தான் --வந்தான்-- என்று எழுத்துக்களைச் சேர்த்துச் சொல்லிப் படிக்க வேண்டும், பேசவேண்டும். இப்படி ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்பொலியை அப்படியேக் கூட்டி மாற்றாது சொன்னால் சொல்லாக (வார்த்தையாக) வரும். பின் சொற்றொடராக வரும்.

அவன் வந்தான் என்பதை ஆங்கிலத்தில் He Came என்று எழுதுவதைப் படிக்கும் போதும், பேசும் போதும் He Came (ஹி கேம்) என்று சொல்லுவர் (உச்சரிப்பர்). ஆனால் எச்-இ=என்று உச்சரித்து எழுதிவிட்டு - ஹி என்றும்; சி--ஏ--எம்--இ, என்று உச்சரித்து எழுதிவிட்டு Came (கேம்) என்றும் படிக்கிறார், பேசுகிறார் என்றால் சிரிப்பாக வரவில்லையா? நமது மொழி வழி உச்சரிப்புப்படி பார்த்தோமானால் --எச்இ-சிஏஎம்இ- என்றுதான் படிக்க வேண்டும். ஆனால் அவர்கள் மொழி முறைப்படி (He) ஹி (Came) கேம் என்று பொருத்தமற்ற விசித்திரப் போக்குடன் பேசுவது, படிப்பது சரியாக இருக்கலாம்.

அதை நாம் ஒன்றும் குறை சொல்ல முடியாது. ஐரோப்பிய மொழிப் பாணி எல்லாம் அப்படித்தான் இருக்கும். காரணம் அவர்கள் மொழியில் உள்ள மொத்த எழுத்துக்கள் 25 (பிரெஞ்சு), 26 (ஆங்கிலம்) தான் எனும்போது, இவ்விதமான உச்சரிப்புக் கொள்கைகளைக் கையாண்டால்தான் இலட்சக் கணக்கான சொற்களை உருவாக்க முடியும். எழுதும்போது இவை 50, 52 எழுத்துகளாகி விடும். (சிறிய + பெரிய) எழுத்துக்கள்

சர்ச்	Church	சாய்ஸ்	Choice
சிட்	Chit	சூஸ்	Choose
சோக்	Chock	கார்ட்	Chort
க்ரானிக்	Chronic	கோரஸ்	Chorus
சால்க்	Chalk	சேன்ட்	Chant
சைனா	China	சௌல்ட்ரி	Choultry
கேரக்டர்	Character		

Ch (சி, எச்) என்ற இந்த இரண்டு எழுத்துக்களை எழுத ஆரம்பித்து அடுத்து, அதற்கடுத்து என்ன எழுத்து வருகிறதோ அதைப்பொறுத்து மேற்கண்டவாறு 13 விதமாக ஒலி மாறி வந்துள்ளதை அறியலாம். இதைப்போலவே ஒவ்வொரு சொல்லும் ஒரே விதமாக அல்ல பல்வேறு விதமாக சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். (எ.கா) Put ப்பி.யு.ட்டி என்று எழுதி புட் என்றும் But பி.யு.ட்டி என்று எழுதி பட் என்றும் படிக்க வேண்டும். இப்படியானவொரு மொழியைத் தான் நாம் உயர்ந்த மொழி என்று சான்றளித்துக் கொண்டு இருக்கின்றோம்.

கி.மு. முதல் நூற்றாண்டில் வழக்கில் இருந்த தமிழ் (தமிழி) உயிர் மற்றும்மெய் எழுத்துக்கள் 30 ஐயும் வரிசையாக எழுதிவிட்டு அவற்றின் கீழ் 26 ரோமன் லிபி ஆங்கில எழுத்துக் களை எழுதி பொருத்தமானதை சற்றே ஒப்பிட்டால், 20 தமிழி எழுதுக்களை தலை கீழாகவும், படுக்கையாகவும், நிமிர்த்தியும் இருப்பவைகளாக நிலைப்படுத்திப் பார்த் தோமானால் - ஆங்கில எழுத்துகளுக்கு, எது அடிப்படையாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். மேலும், உலகமொழி எழுத்துக் களில் அழகுடன் இருப்பதில் சிறந்தவை ஆங்கிலமும் தற்போதைய தமிழும் தான்.

எனக்குத் தெரிந்து தமிழில் உச்சரிப்பு சற்றே மாறி வரக்கூடிய சொற்கள் வெற்றி, பற்றி, மாற்றி என்பதுபோல் - ற் வருபவை மட்டுமே யாம். சரியாக உச்சரித்தால் இவற்றை வெ-இற்--றி; ப--இற்--றி; மா--இற்--றி என்றுதான் பலுக்க வேண்டும். ஆனால் ட் ஒலி சேர்த்துத் தந்து -- ஏறத்தாழப் பேசுகிறோம். அதாவது ற் ஒலியும், ட் ஒலியும் சேர்ந்து வருவது போல ஒலிப்பது தெரியும்.

தமிழில் மொத்தம் உயிர், மெய், ஆய்தம் 31 எழுத்தொலிகள் தான் அடிப்படை. மீதி உள்ள 216 எழுத்துகளும், ஒலிகளும் உயிர், மெய் - 30 எழுத்துகளைச் சார்ந்து வருபவையே. ஆகவே 247 எழுத்துகளின் ஒலியைத் தெரிந்து கொண்டால், இந்த ஒலிப்பான் முறையை வைத்தே இலட்சக் கணக்கானத் தமிழ்ச் சொற்களையும் படிக்க, பேச முடியும். ஆனால் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக ஒலித்துப் பேசிட வேண்டிவரும். ஆக அத்தனை வித ஆயிரக் கணக்கான ஒலிப்பு முறையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஆங்கிலத்தில் ஏற்படுகிறது. படிக்கப் படிக்க எளிதாகிவிடுகிறது என்பது வேறு. தமிழில் எந்த எழுத்தும், சொல்லும் ஒலிப்பு, எழுத்து, பேச்சுத் தன்மையில் மாற்றமே இல்லாமல் சீராக இருக்கும்போது, 247 எழுத்துகள் எண்ணிக்கை யில் உள்ளன என்ற காரணத்துக்காகவே தமிழ் ஒரு கடினமான மொழி என்று பட்டம் சூட்டுவது கயமை அல்லவா? சொல்லப்போனால் உலக மொழிகளிலேயே மென்மையான, சுலபமான மொழி தமிழைப் போல் வேறு இல்லை எனலாம். ஜப்பான், சீன மொழிகளில் எழுத்துகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அவர்கள் ஆங்கிலத்தை தலையில் தூக்கி ஆடுவதில்லை.

தமிழில் முதல் எழுத்து அ. திருவள்ளுவர் தன் முதற்குறளில் 'அகர' என ஆரம்பிக்கிறார். இந்த அகரம்தான் உலக மொழிகள் பெரும்பாலானவற்றுக்கும் முதல் எழுத்தாக அமைந்துள்ளது ஆச்சரியம் அல்லவா? மேலும் உலக நிலப் பகுதிகளின் பெயர்களைப் பார்த்தோமானால் -- ஆசியா, அய்ரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆர்ட்டிக், அண்டார்டிக்கா என்றும், நீர்ப் பகுதிகள் அட்லாண்டிக், ஆர்க்டிக், அண்டார்டிக் என்று 'அ' எழுத்து முதலில் வருமாறுதான் அமைத்துள்ளார்கள்.

தமிழ் ஆய்வு மன்றம், தமிழ்ச்சங்கம் என்று நடத்துபவர்களே ழகரச் சொல் உச்சரிப்புகளாகச் சொல் சரியாகப் பேசத் தெரியாதவர்களாகவே உள்ளார்கள் என்னும் போது இவர்களுக்கு எதற்கு ஆய்வு மன்றமும், தமிழ்ச்சங்கமும் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? பாடம் சொல்லித் தரத் தெரியாத, எவருக்கும் ஆசிரியர் பணி தரமாட்டார்கள். அதைப் போல ழகரம் பேசத் தெரியாதவர்களுக்கு மன்றமும், சங்கமும் தேவையா?

தமிழை நன்று உணர்ந்து படித்தவர்கள், பண்பாடு தெரிந்தவர்கள், எந்த உச்சரிப்புக்கு எந்த பொருள் வரும் என்று மிக நன்றாகப் பகுத்தறியும் தற்காலத் தமிழர்களும், ஒட்டு மொத்தமாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் முதல் கல்வித் துறையில் துணை வேந்தர்கள் வரையில், ஐ.ஏ.எஸ்; ஐ.பி.எஸ்; யென்று மெத்தப்படித்த தமிழ் அலுவலர்கள், மருத்துவர்கள், பொறி யாளர்கள், புலவர்கள், கவிஞர்கள், வணிகர்கள், மாணவர்கள் என்று எல்லாத் தமிழர்களுமே இன்று தமிள், தமிளன், தமிள்மொளி, வால்க்கை, எளுத்து, களகம் முணுக்க முணுக்க என்று செவி கூசும் வண்ணம் எல்லா ழகரச் சொற்களையும் லகர, ளகரச் சொற்களாகவேப் பேசி பொருளையே மாற்றித் தமிழையே கொச்சைப் படுத்துகின்ற னர். (ஒழுங்காகப் பேசுபவர்களுக்கு இது பொருந்தாது)

தமிழைச் சரியாகப் பேசாதவர்கள், உச்சரிக் காதவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது என்று ஒரு மாபெருங்கூட்டத்தில் ஒரு மாபெருந் தமிழ் அறிஞர் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் இது மற்றவர்களுக்கு மட்டும் போதனைப் பேச்சாக இருந்ததை அறிந்து மனம் மிகவும் வேதனைப்பட்டது.

ஏனெனில் அவரே ழகரத்தை ளகரமாக மாற்றிப் பேசுபவராக இருந்தது தான்.

ழகரம் விடுத்து ளகரம் பேசுகிறோம் என்று தன்னை அறியாமலேயே தன்னுணர்வற்றுப் பேசுகிறார்கள். பேசுபவன் பேசினால், கேட்கும் தமிழனாவது தவறை எடுத்துச் சொல்லி திருத்து கிறானா என்றால் அதுவும் இல்லையே!

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் வடதமிழ் நாட்டின் மக்கள் மட்டுமே ஒழுங்காகப் பிழை யின்றி பேசி வந்தவர்கள் இப்போது தென்ன கத்து மக்கள் வணிகர்களாக தமிழகமெங்கும் பரவியகாரணத்தால், ழகரத்தை இப்பகுதியில் ஒழித்து, ளகரத்தைப் பரப்பிவிட்டனர். இது எதற்கு ஒப்பாகும் எனில் ஆதியில் ஆரியர்கள் எப்படி கோயில் குருக்கள், புரோகிதர்கள் என்ற பெயரில் எல்லா ஊர்களிலும், குடும்பங்களிலும் திருமணம், பெயர் வைத்தல், காரியம், புதுமனைப் புகுவிழா என்று பலவிதங்களிலும், எல்லா வீடுகளிலும் புகுந்து தமிழ்ச் சொற்களைப் பேசாது, வடமொழிச் சொற்களைப் புகுத்தினார் களோ அதைப்போல இவர்கள் ளகரச் சொற் களைப் புகுத்தி பரப்பி வருகிறார்கள். 'ஒழுங் காக' இருந்தவர்களும், இப்போது 'ஒளுங்காக' என்று பேசுகிறார்கள்.

வானொலி, தொலைக்காட்சி, சினிமாத் துறையினர், இவர்களோடு கல்வித் துறையின ரும் சேர்ந்து ளகரம் பரப்பி வருகிறார்கள். இப்படிப்பட்ட இழி நிலையை தமிழுக்கு உண்டாக்கி, ஊக்கப்படுத்திப் பரப்புபவர்கள் மற்ற மொழிகாரர்கள் மட்டுமல்ல - தமிழர்களும் தான் எனும்போது - தமிழ்ப் பகைவர்கள் யார்? என்று பார்த்தால் நமக்கு நாமேதான் பகைவர்கள் என்பதை அறிந்து வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா?

இத்தகு இழி நிலை மாற வேண்டுமெனில் இந்த நான்கு துறையினரும் ஒருசேர முயன்றால் தான் இம்மொழியழி நிலையைப் போக்க முடியும். கல்வித் துறையும், அரசும் சற்று கவனம் எடுத்து வழிமுறைகளுக்குத் திட்டம் வகுத்துச் செயல் பட்டால்தான் இக்குறையை எளிதில் விரைந்து போக்க முடியும். இன்றைக்குத் தேவைப்படும் பெருந் தமிழ்த் தொண்டு இதுதான்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் உலகளா விய தமிழர்களைக் கூட்டி 4-வது மாநாடு நடத்தவும், 21ம் நூற்றாண்டை நோக்கி தமிழ் - தமிழர்கள் என்றதொரு உயர்ந்த கருப்பொருளை யும் தேர்ந்தெடுத்து வெற்றி நடைபோட அயராது பாடுபடும் அதன் நிறுவனர் திருமிகு பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களுக்கும், வா.மு.சே. திருவள்ளுவர் அவர்களுக்கும் நன்றி பாராட்ட கடப்பாடுடையோம். அவர்களது சக்திக்கு அப்பாற்பட்ட ஆற்றலைக் கண்டு வியந்து வியந்து பாராட்டு கிறோம், போற்றுகிறோம்.

தமிழ் என்பதில் ழகரம் இருக்கிறது. மொழி என்பதில் ழகரம் இருக்கிறது. அழகு என்பதில் ழகரம் இருக்கிறது. இப்படிப்பட்ட அழகு ழகரத்தையெல்லாம் மாற்றி ளகர, லகரமாக்கி உளறிப் பேசுவது எவ்விதத்தில் நியாயம் என்று தமிழறிஞர்களிடம் நீதி கேட்கின்றேன். தமிழர்களே மேடையிலே பேசும்போது ஒருமுறை தமிழ் என்கிறார்கள். உடனே அடுத்துப் பேசும்போது தமிள் என்கிறார் கள். முதலில் மொழி என்றும் அடுத்து மொளி என்றும் பேசினால் இது உளறல் இல்லாமல் வேறென்னவாக இருக்கும்? தமிழர்கள் என்பதற் குப் பொருள் -உளறு வாயர்கள் என்று சொல்லலாம் போல் தோன்றுகிறது எனக்கு. இத்தகு கொடுமையைத்தான் பெரும்பாலான தமிழர்கள் இன்றைக்கு நா கூசாது செய்து கொண்டு இருக்கிறார்கள். ழகரம் இல்லையேல் தமிழ் இல்லை என்பதையாவது உணர்ந்து, இம்மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள உலகத் தமிழ்ச் சான்றோர்கள் அனைவரும் ஒருமித்து இதில் உள்ள உண்மைகளைச் சீர்தூக்கி, தமிள்(ழ்) ஒலிப்புப் பேச்சு முறையை உலகளாவிய முறையில் திருத்த என்ன நடிவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதனை இம்மாநாட்டில் முடிவு செய்து நமது

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் 4 வது உலகளாவிய மாநாடு வாழி வாழி

-செ. நாகேந்திரன், பிரிட்டன்

இறைவனே எழுதி வரிவடிவமைத்து
முறையோடு தந்த முதுபெரும்மொழியாம்
கறையற்ற தமிழினைச் சொரியும்
நிறைமிகு அறிஞரின் மாநாடு வாழிவாழி!

எம்மொழியுங்காணா எண்ணற்றப் படைப்பால்
செம்மையுற்றோங்கி நிற்கும் செந்தமிழில்
நம்பிக்கை கொண்ட உலகப் பெருமக்களாம்
எம்மினிய இதயங்களின் மாநாடு வாழிவாழி!

உழைப்பினாற் தமிழரை உலகிலுயர்த்த
களைப்பின்றிக் கன்னித் தமிழைப் பரப்ப
திளைத்தென்றுந் தமிழரொற்றுமை வளர்க்க
அழைத்த இம்மாநாடு வாழி வாழி!

பாரதத்தில் தலைமைப் பணிமனையேற்றுத்
தரணியெங்குங் கிளைகள் திகழ்ந்தாலும்
ஓரணியாகத் தமிழரையாக்க வழிகோலப்
பேரணிதிரட்டும் மாநாடு வாழி வாழி!

ஓதிய உயர் தமிழால் ஒப்பற்ற தமிழரெல்லாம்
சாதிமதபேதமற்றுச் சமத்துவமா யோரினமாய்
நீதிநெறி நின்று நாட்டுப் பிரிவுமற்று
மேதினிக்கு வழிசொல்லும் மாநாடு வாழி வாழி!

ஆக்கமாந்தமிழ் நூல்கள் அகிலஞ் செறித்துனன்
நோக்குடையாசான்மார் கலைஞர்களை யனுப்பி
ஊக்கமுடன் தமிழையும் இனத்தையுஞ் செவ்வனே
காக்கும் பணியக மாநாடு வாழி வாழி!

நலமே இனிது பெற்று நற்றமிழே வளர்த்துப்
புலம்பெயர்ந்த பன்னாட்டுத் தமிழரெல்லாம்
பலம்பெற்று வாழப் பலவழி சமைக்குங்
கலங்கரை விளக்கான மாநாடு வாழிவாழி!

தேடியொரு நாட்டிற் திரவியஞ் சேர்த்தாலும்
ஓடியுழைத்து உயர்நிலை யடைந்தாலும்
ஈடில்லாத் தமிழப் பண்பு கலாச்சாரம் பேணத்
தேடியுதவி நல்கும் மாநாடு வாழிவாழி!

தூங்காது சோராது தைரியமா யுழைத்து
பாங்காகப் பன்னாட்டுதம் தமிழரைத் திரட்டி
நீங்காத குட்டங்கள் தரணிக் குணர்த்தும்
பாங்காக் மாநகர் மாநாடு வாழிவாழி!

தாய் நாட்டைப் பிரிந்து வாழுந்த தமிழர்க்கு
ஆய்வுரை கேட்டுநல் அறிவினைப் பகிர
வாய்ப்பினையளிக்கும் வையப்பெரும் புகழ்
தாய்லாந்து நாட்டின் மாநாடு வாழிவாழி!

வான்புகழோங்க வையகம் வாழ்த்துரைக்க
தேன் தமிழர் திரண்டு தமிழ்த்தாயை யுவப்பிக்க
மேன்மைமிகு பன்னாட்டுத் தமிழ்த் தமிழுறவு மன்றத்தின்
நான்காவது நேச மாநாடு வாழி வாழி!

சலசலப்புக்கஞ்சாது சரித்திரம் படைத்துக்
கலங்காது நின்று கணினியில் முன்னேறித்
துலங்கு நற்றமிழரின் பெருமைகள் பகரும்
உலகளாவிய மாநாடு வாழி வாழி!

மொழியைக் காப்பாற்ற வேண்டும். 21-ம் நூற்றாண்டில் ஒட்டுமொத்தத் தமிழர்களின் முயற்சியும், இதற்குத் தேவைப்படுகிறது. இன்றேல் தமிழகம், தமிளகமாக 21ம் நூற்றாண்டில் மாறிவிடும் அபாயம் உள்ளது என்பது உறுதியாகும் என எச்சரிக்கிறேன். எனவே 20-ஆம் நூற்றாண்டில் தமி'ள'கமாக உள்ளதை 21-ல் தமிழகமாக மாற்றிக் காட்ட வேண்டும்.

அடியேன் இம்முறையைத் திருத்துவதற்காக **'தமிழ் ழகரப் பணி மன்றம்'** வைத்து நடத்தி வருகிறேன். அதற்காக கூட்டங்களில் துண்டறிக்கை தருகிறேன். கூட்டங்களில் எடுத்துச் சொல்லுகிறேன். பத்திரிக்கைகளில் செய்திகள் தருகிறேன். இவ்விதம் பலவிதங்களில் விளம்பரம் செய்து மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டி என்னாலானத் தமிழ்த் தொண்டைத் துவளாது செய்து வருகிறேன். இதற்கு தமிழக அறிஞர்கள் அனைவரும் நல்ல ஆதரவை நல்குகிறார்கள்.

என் இப்பணிக்கு முன்னின்று ஊக்கம் அளிப்பவர்கள்தான் பேருள்ளம் கொண்டப் பெருமகன் டாக்டர் பெருங்கவிக்கோ மற்றும் அவரது மூத்த மகன் திருவள்ளு வர் ஆவார்கள். பன்னாட்டுத் தமிழறிஞர்களும் இக்குறைபாட்டை நீக்க துணை நிற்க மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ●

பரம் பொருள்

-கவிமுரசு தி.பொன்னுச்சாமி-

'பரம்பொருள்' என்ற சொல்லுக்குச் சரியான விளக்கம் என்னவென்று தமிழ்ப் புலவர் ஒருவரிடத்திலே நான் கேட்டபோது முழு முதற்கடவுளை பரம்பொருள் என்று அழைப்பதாக விளக்கமளித்தார். அஃறினையைக் குறிக்கும் பரம்பொருள் என்ற சொல்லுக்கு உயர்திணையாகிய தெய்வம் கடவுள் என்று பொருள் கொள்வது சரியல்ல!

பரம்பொருள் என்ற சொல்லை ஆய்வுசெய்தால் பழங்காலத் தமிழர்களின் அறிவியல் புலப்படும்! தமிழில் எந்தவொரு சொல்லும் அடிப்படையான காரணங்களைக் கொண்டே உருவாகி இருக்கிறது. பரம் பொருள் என்ற சொல்லும் அறிவியல் அடிப்படையில் உருவாகி பிற்காலத்தில் ஆன்மிகச் சொல்லாக மட்டும் கருதப் பட்டுவருகிறது. அந்தச் சொல்லிலுள்ள அறிவியல் அடிப்படையில் உருவாகி பிறகாலத்தில் ஆன்மீகச் சொல்லாக மட்டும் கருதப் பட்டுவருகிறது. அந்தச் சொல்லிலுள்ள அறிவியல் கருத்து மறக்கப் பட்டதா அல்லது மறைக்கப்பட்டதா என்று தெரியவில்லை. இதைப்பற்றியெல்லாம் பிற்காலத் தமிழர்கள் எண்ணிப்பார்க்காமல் தமிழில் அறிவியல் இல்லை என்று யாரோ சொல்வதை தமிழனும் சேர்ந்து சொல்லுகிறான்! தமிழில் இருந்த அறிவியலை வளர்க்கத் தவறிய தமிழன், தமிழ்மொழி மீது பழியைச் சுமத்திவிட்டான்!

இன்றுஅறிவியலார் பல ஆண்டுகள் ஆய்வுக்குப் பின் கூறிவரும் கருத்துக்களை தமிழன் பரம்பொருள் என்ற சொல்மூலம் அன்றே அந்தச் சொல் தோன்றிய காலத்திலேயே கூறி இருக்கிறான்!

பண்ணையார் பரம்பரை என்று சொன்னால் என்னபொருள்! இவருடைய தாத்தா ஒரு பண்ணையாராக இருந்திருப்பார். அவர் மகன் வழிவந்த பேரனை பண்ணையார் பரம்பரை என்று சொல்லுவார்கள். ஒருவரிலிருந்து தோன்றித் தோன்றி வரும் சந்ததியை பரம்பரை என்று உயர்திணையில் குறிப்பிடுகிறோம். அதுபோல ஒருபொருளிலிருந்து அடுத்தடுத்து தோன்றிய அல்லது பிரிந்த பொருளை, பரம்பொருள் என்று அஃறிணையில் குறிப்பிடுகிறோம்.. இதன்மூலம் நாம் அறியும் அறிவியல் கருத்து என்ன?

பிரபஞ்சம் (Universe) பல பிரபஞ்சங்களைப் பெற்றுப் போட்டுக் கொண்டே இருக்கின்றன. நமது பிரபஞ்சமும் அதில் ஒன்று! பிரபஞ்சத்திலிருந்து பல உடுமண்டலங்களை (Galexy) தோன்றியது. அதில் நமது உடுமண்டலமும் ஒன்று! நமது உடுமண்டலத்தில் மிகச் சிறிய விண்மீன் நமது சூரியன்!

சூரியனைவிட 2000 மடங்கு ஒளியுடையதும், 6000 டிகிரி வெப்பமுடையதும், 6000 ஒளியாண்டுத் தொலைவிலும் (ஒளி இப்படி 6000 ஆண்டு பயணம் செய்தால் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரத்தில் சில விண்மீண்கள் உள்ளன) பல விண்மீன்கள் நமது உடு மண்டலத்தில் இருக்கின்றன! இவற்றுடன் ஒப்பிடும் போது சூரியன் மிகச் சிறிய விண்மீன்.

சூரியனில் ஏற்பட்ட வேதியல் மாற்றத்தினாலும் சுழற்சி வேகத்தினாலும் பிறந்தவைகள் தாம் பூமியும் மற்றக் கோள்களும்!

பிரபஞ்சம் என்ற மிகப்பெரிய பொருளிலிருந்து உடுமண்டலங்கள் தோன்றி, உடு மண்டலத்தில் தோன்றிய சூரியனிலிருந்து கோள்கள் தோன்றி அதில் ஒன்றாக பூமியும் அதிலிருந்து நிலவும் தோன்றியதாக இன்றைய அறிவியல் கூறுகிறது.

தமிழன் இவற்றை அன்றே அறிந்திருந்தான்!

பிரபஞ்சம் அதிலிருந்து உடுமண்டலம் கோள்கள் என்பதெல்லாம் ஒரு மூலப் பொருளிலிருந்து தோன்றிவந்த பொருள்கள். ஆகையால் இவற்றை உள்ளடக்கிய சொல்லாக இதை பரம்பொருள் என்றான்!

எந்தமிழர் வாழ்க இனிது

-கவிஞர் கோ.பெ.நா.-

கன்னித் தமிழும்
பொன்னி வளஆறும்
முன்னைப் பிறந்த
முதற்பொருளாம் இவ்வுலகில்

அந்நாள் தமிழ்தான்
ஆந்திரமும் கன்னடமும்
இந்நாள் மலையாளம்
என்இன்றைத் தென்மொழிகள்

பண்டைத் தமிழகத்தே
பைங்குடகு நாட்டினிலே
தண்டை குலுங்க
தளர்நடையில் தான் தொடங்கி

பொன்னியெனும் பேர் தாங்கிப்
பூம்புகார் சென்றடைந்தாள்!
வண்ண மலர்ச்சோலை
வழியெல்லாம் செய்துவைத்தாள்!

செந்நெல் கரும்பும்
செழிக்குந்தன் கைபரப்பி
அந்நாள் அவர்களை
ஆலயங்கள் கட்டவைத்தாள்!

நல்லிசையும் நாட்டியமும்
பண்ணிசையின் வெற்றிகளும்
தொல்வானம் எல்லாம்
துளிர்த்தது காவிரியால்!

காவிரியும் செந்தமிழும்
கைகோத்து நின்றமைக்கு
பாவிரியும் கானல்
வரியொன்றே சான்றாகும்!

நீர்வழியில் நீள்துறைகள்
நீண்ட பயணத்தில்
கூர்கொம்பு யானை
குருவிகளும் நீர்பருகும்

சீர்த்துறைகள் கொண்ட
செந்தமிழும் காவிரியும்
ஏர்துறையில் சிந்தித்தால்
உண்மை மகிழ்வாகும்

காவிரியின் கல்லணையைக்
கண்டேதான் நைல்ஆற்றில்
நாவிரித்துப் பேசுகிற
நல்லணையைக் கட்டினாராம்!

ஆலமரம் என்ன
அடிமரமாம் நம்நாட்டில்
ஆழவேர் ஊன்றி
அகன்று உலகமெலாம்

கூர்விழுது ஊன்றி
விழுதின்வேர் ஆங்கமைத்து
சீர்பெறவே வாதிடுவோம்
செல்வம் அறிவெல்லாம்

நந்தமிழில் சேர்த்து
நம்பண்பில் ஒவ்குகிறார்
எந்தமிழர் வாழ்க இனிது!

அதுபோல ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தடுத்து வந்த தலை முறையைப் பரம்பரை என்றான்!

பரம்பரை உயர்திணை

பரம்பொருள் அஃறிணை

பரம்பொருள் என்ற சொல் என்று தோன்றியதோ அன்றே விண்வெளி அறிவியலைத் தமிழன் அறிந்திருந்தான். அந்த அறிவியல் சிந்தனைகள் பின்னாளில் மறைக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்டுவிட்டன. தன் மொழியில் பெற்றிருந்த அறிவியலை வளர்த்திடாத தமிழன் இன்று தமிழில் அறிவியல் ஏது என்று கேட்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டான். இனிமேலாவது மொழி உணர்வு பெற்று, தமிழில் அறிவியலை வளர்ப்போம்! இழந்துவிட்ட அறிவியல் செல்வங்களை மீண்டும் பெறுவோம்! அதற்கு முதல் தேவை மொழி உணர்வு!

சங்கத்தமிழர் பண்பாட்டுக் கூறுகளே உலக விழுமியம்

புலவர் வே. பிரபாகரன்

தமிழர் தொல் மரபுக்குச் சிறப்புச் சான்றுகள் அமைந்துள்ளன. அது பழைமையிற் பழமைப் பண்பும் புதுமையிற் புதுமைப் ப்ண்பும் ஒருங்கே அமையப் பெற்றது என்பர் அறிஞர் கா.அப்பாத்துரையார். உலகில் தம் பழமையாலும் கலை இலக்கிய வளத்தின் ஆற்றலாலும் உயர்தனி நாகரிகச் சிறப்பாலும் கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சமஸ்கிருதம், சீனம் முதலிய மொழிகள் உயர்தனிச் செம் மொழிகளாகப் போற்றப்படுகின்றன. காலப்பழமையால் வழக்கற்றுப் போகாத கணினிக் காலத்திலும், நிகழ் காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் வழி காட்டும் தகுதி உடைய தனிச் சிறப்பு வாய்ந்த உயர்தனிச் செம் மொழியாக விளங்குவது தமிழாகும்.

''இயற்கையோடு இயைந்த எண்ணங் களின் உந்துதலோடு எக்காலத்திற்கும் வழி காட்டுதலாக அமைவது தமிழிலக்கியத் தனிப் பண்பு. புறநாகரிகத்தில் மட்டுமின்றி, மரபு வழிப்பட்ட பண்பாட்டால், நெஞ்சகத்துச் செழித்திடும் இனிய இயல்புகள் ஒளிரும். ஆக நாகரிகத்தினும் தமிழர் மேம்பட்டிருந்தனர். (பேரா.க. அன்பழகன். சங்க இலக்கியத்தேன் முன்னுரை)

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தது மொழிக்கு மட்டும் இல்லை. வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்துக் கூறும் தொல்காப் பியத்தைப் பெற்றது. சங்க இலக்கியம் தமிழரின் மண்ணியல், விண்ணியல், மன வியல், மனையியல், குணஇயல் சேர்ந்து இனமான வரலாறுகளை நுணுக்கமாகக் கொண்டுள்ளது.

''தமிழ் சொற்செல்வம் படைத்த ஒரு தனிமொழி. அதன் இலக்கண நெறிகள் ஏரண (தருக்க) உண்மைக்குப் பொருந்தியன ஆயினும் தெளிவாக விளங்கக் கூடியன. தமிழ்மொழி ஒருபண்பட்ட மொழி. அது திராவிட மொழிகளை ஈன்ற அன்னை. சொற்பெருக்கம் கலை நுட்பமும், பண்பட்ட தூய்மையும் உடைய மக்கள் பேசம் மொழிகளும் தமிழும் ஒன்று என்பர் அறிஞர் டெய்லர். இவை யனைத்தையும் ஒருங்கே சுருங்கச் சொல்லி விளக்குவது சங்க இலக்கித் தனிப் பண்பாகும்.

சங்க இலக்கியத்துள் கற்காலப் பாமரத் தன்மையும் உண்டு; தற்கால நிகழ்காட்சிக் கணினித் தன்மையும் உண்டு. இரண்டாயிரம் ஆண்டு முற்பட்ட தொல்காப்பியம் இவைகளுக்கு முன் பற்பல நூற்றாண்டுத் தொடர் வாழ்வியல் உணர்த்தல்களின் தொகுப்பே சங்க இலக்கியங் களாகும். இத்தகைய சங்க இலக்கியங்கள் ஒரு கால வரையறையோடு நிறைவும் முதிர்ச்சியும் பெறுவன இல்லை. வளரும் உலகப் பண்பாட்டியல்களின் தொட்டில்தான் சங்க காலப் பண்பாட்டுக் கூறுகளாகும்.

இருபது நூற்றாண்டுகளின் நினைவு களோடு இருபத்தொன்றாம் நூற்றாண்டினை நோக்கித் தமிழர், தமிழ்மொழி நாகரிகத்தினைக் கொண்டு செல்லும் இயக்கநிலையிலே உள்ளனர். சங்க காலப் பண்புக் கூறுகளைப் பழையன கழிதல் என ஒதுக்கிவிட முடியாது. புதியன படைத்தல் எனும் சிந்தனைத் தெளிவினை சங்க காலப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டே நாம் தேர்ந்தெடுத்து எதிர்கால உலகை வழிநடத்த வேண்டும்.

வான்மீகி இராமாயணத்தில் சுக்ரீவன் அநுமனிடம் தென்திசையிலுள்ள பாண்டியர் தலைநகரான கபாடபுரத்தைப் பற்றிக் கூறுகிறான். அநுமன் சீதையிடம் தமிழ் மொழியல் பேசியதாக (சுந்தர காண்டம் : சருக்கம் 30, 43 ஆம்பாடல்) வான்மீகர் மொழிகிறார்.

கி.மு. 300க்கு முந்தியதென மொழியப் படும் மாபாரதப் போரில் பெருஞ்சோற்றுவுதியன் சேரலாதன் இருதிறத்தாருக்கும் உணவு கொடுத்துப் பெருமை கொண்டதைப் புறநானூறு எடுத்துரைக்கிறது. இவை போன்ற உயர்வகை நிகழ்வுகளின் பாவரிப் பதிவுகளே சங்க இலக்கியங்கள்.

நாள் மலர்கள், நீலோற்ப, குறிஞ்சி மலர்கள் இந்தத் தமிழ் மண்ணுக்கே உரியவை. வலம்புரிச் சங்குகளும் முத்துக்களும் தமிழ்க் கடல் நீரின் விளைச்சல், இங்குமன ஒட்டுதல் செய்யும் ஐந்திணையும், எலும்புகளை ஒட்டுதல் செய்யும் எலும்பொட்டித் தழையும் இங்குதான் உண்டு. தமிழரின் சங்ககாலப் பண்பாட்டுக் கூறுகளை வளரும் உலகப்பண்பாட்டு இயல்நெறி கணினித் தொட்டில்களிற் கிடத்தித் தாலாட்டுவோம்!

ஒன்றையொன்று சார்ந்து வாழ்வதே உலகியற்கை. சேர்ந்து வாழ்வதே உயிரியற்கை. இதனைத்தான் ஊதியம் கருதிய ஒருதிறம் மிதால் பொருள் 1:41 என்பர் தொல்காப்பியர்

முதலிலார்க்(கு) ஊதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை

(குறள் : 449)

நம்முடைய முன்னோர்களை நாம் பின்பற்ற வேண்டிய கடமையை குறிப்பிடுகின்றார். முன்னோரின் முதலீடாகச் சங்க இலக்கியங்களே உள்ளன.

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை

(புறம் : 2)

அணுச் செறிந்த மண்ணும், விண்ணும், காற்றும், தீயும், நீரும் ஒன்றற் கொன்று முரண் பட்டன. எனினும் யாவும் இணையும் போது தான் புதுமை பிறக்கிறது. எதிர்கால இலக்குகள் இவ்வரிகளுள் புதைந்து கிடக்கின்றன.

முரண்பாடுகளைக் கூட்டாக்கி முன்னேற்றப் பண்பாடுகளை முன்னுரைப்பன. விஞ்ஞான இயற்கைக் கூறுகளை எடுத்தியம்புவன சங்க இலக்கியங்கள்.

இன்று, ஊர்திப் புகை, தொழிற்சாலைக் கழிவுகளால் உலகம் மாசுபட்டு, பெருங் கேடுற்று வருகிறது. இதற்கு மாற்று முறை என்ன? நிலனேந்திய விசும்பு, இதன் உணர்த்தல் செயற்கைக் கோள், இதன் தொடர்ச்சி கணினி, இணையச் செயற்பாடு, கோள்களின் ஆய்வு வான்சிறப்பாகிய மழையும், ஓசோன் மண்டலத்தூய்மையும் நன்கமைய மண்ணரங்கு பசுமை பெற வேண்டும்.

உலகின் எதிர்பார்ப்பும் இதுவாகும்!!

காற்றையும் கதிரொளியையும் பயன் படுத்தி நாளும் தொழில் முன்னேற்றங்கள் வளர்ச்சியடைய வேண்டும்!

மேனாடுகளில் மரம், செடி, கொடிகள், மலர்கள் அனைத்தையும் செயற்கையாகத் தயாரித்து அழகு படுத்துவதிலே முன்னேறியுள்ளனர். வீட்டுக்கு ஒரு மரம் என அரசு விளம்பரம் செய்கிறது. உலகப் பசுமை உயிரின வளர்ச்சிக்கு உற்ற துணையாக விளங்குவது இதன் அடிப்படையாகும்.

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி

மறந்தனம் துறந்தகாழ் முளை அகை
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது 'நுவ்வை' ஆகும் என்று,
அன்னை கூறினள் புன்னையது நலனே

(நற்றிணை: நெய்தல்-172)

நெய்தல் நிலத்து அன்னை, பெற்றெடுத்தப் பெண்ணினை மட்டும் வளர்க்கவில்லை, புன்னையினையும் வளர்த்தாள். இப்பண்பு எதிர்கால உலகிற்கு உகந்த தொரு வழி காட்டுதல் ஆகும். உலகோர் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நற்பண்புகளில் இஃதும் ஒன்றாகும்.

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
செல்வத்தும் பயனே ஈதல்

(புறம் 189)

நன்கு கற்று அறிவுமேம்பாடுடைய பண்பாளர்க்கும் கல்லா நிலையில் காடுமேடு திரிந்தலையும் மாந்தர்க்கும் உண்பதிலும் உடுப்பதிலும் நல்ல நெறி முறைகள் இருந்தன. கட்டுப்பாடு இல்லாமை ஒதுக்கப்பட்டிருந்தது. செல்வர், வறியர் எனும் பாகுபாடு இல்லா திருந்தது. செல்வம் பெற்றதன் பயனே பிறர்க்கு ஈவதுதான். ஒருவருக் கொருவர் உதவுவதும் ஒரு நாட்டுக்கு மற்றொருநாடு உதவுவதும் எனக்கொள்ள வேண்டும். தேவைகளைக் குறைத்துக் கொள்வது மட்டுமல்ல தேவை களுக்கும் ஒரு அளவீடு கொள்வதும் நிகழ் காலப் பண்பாகும். சங்க காலம் எதிர்காலத் திற்கு இனிய அழைப்பு விடுக்கிறது.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயர்க்கு

(குறுள்:231)

என்பது புகழ்மட்டுமாம் அறமும், பயனும் இல்லறம் கைக்கொள்ள வேண்டுவோம் என்க. உயிர்க்கு என்பதனால் இது மனித குலத்துக்கு மட்டும் என வரையறுக்கக் கூடாது. பகுத் துண்டு பல்லுயிரோம்பும் பண்பினை உயி ரோவியமாகக் கொண்டதாகம்.

'ஆற்றுதம லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையர் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறை யெனப் படுவது மறைபிற ஏறியாமை
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

(கலித் : செய்தல் : 17)

இப்பண்புகள் சங்க காலத்தில் நிலவின. எதிர்வரும் இருபத்தொன்றாம் நூற்றாண்டு, குறிப்பாகத் தமிழ் உலகுக்குத் தேவையான உணர்த்தல்கள் இவை. தமிழ் வரலாறு இன்னும் புதைபொருளாகவே இருந்து வருகின்றது. வெளிவந்துள்ள வரலாற்று நூல்களில் தமிழரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளுள் பல உண்மையொடு பொருந்தாதனவாய் உள்ளன. தமிழிலக்கியமே பழந்தமிழர் வர லாறு. அறிவிக்கும் மூலங்களுள் முதன்மை பெற்று நிற்கிறது என்பர் அறிஞர் சி. இலக்குவனர்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என உயரிய தத்துவத்தை உலகிற்கு முதன் முதல் உணர்த்தியவன் தமிழன் எனினும் உலகத் தமிழர் ஒருங்கிணையா நிலையே இன்றுள்ளது. உலகத்தமிழர் ஒரே குறிக்கோளுடன் செயல்பட ஒருங்கிணையும் காலம் வெகுதூரத்தில் இல்லை. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது அடுத்த வரியாகும். அணுக் குண்டுகளை அடுக்கிப் போர் புரியும் இந்த வேளையில் சங்கப் பண்பு சுட்டிக் காட்டப்பட வேண்டியது சரியானதாகும்.

இயற்கைக்கு உலக நாகரிகம் அனைத்தும் தமிழர் நெஞ்சிற் குடிபுகுந்து தமிழகத்தே பல்வேறு விளைவுகளைச் செய்தாலும் உலகம் முழுமைக்கும் சங்ககாலப் பண்பாடே வழி காட்டுதலாக விளங்கி வருகின்றது.

சங்க கால இலக்கியங்களில் சிற்சில கற்பனைகள் இணைந்துள்ளன. அடிப்படை உண்மைகள் என்றும் முளைப்புத்திறன் கொண்ட 'வரகு' போலத் தயார் நிலையில் உள்ளன. சுட்டிக் காட்டுவது பிறநலம் பேணலாகும்.

'கற்பனை எவ்வளவு உயரச் சென்று பறப்பதே ஆயினும் அது மக்களின் தொடர் பற்றுப் பறக்கும் கழுகுபோன்றது. அன்று மக்களின் கையில் பற்றிய நூலால் தொடர்பு உற்றுப் பறக்கும் காற்றாடி போன்றதே ஆகும். என்பர் மு.வ. என்றென்றைக்கும் மக்களுக்காக

மகாத்மாக்களாம் சங்கப்புலவர்களால் செய்யப் பட்ட எழுத்துப்பண்பாடுகளை எடுத்தியம்பு வது கற்ற தன் பயன்.

'ஒன்று இரப்பான்போ எளிவந்தும் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்
வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல
நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்
இல்லோர் புன் கண் ஈகையிற் தணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையும் உடையன்

(கபிலர் : குறிஞ்சிக்கலி : 47)

அடக்கமும் பணிவும் கொண்ட எளிமை யும் உலகக்காவல் செய்தல் போன்ற வெற்றி விழைவும் வறுமை ஒழிக்கும் ஈகையும் வள்ளண்மையும் கொண்டியங்கும் பண்பாடு அன்று மலர்ந்து இன்றைக்கும் உலக வழி காட்டுதலாக விளங்குகிறது.

புறங்கூறிப்பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்

(குறள்183)

என்ற பண்பே பண்டைத்தமிழர் வாழ்வியல் வரலாறாக அமைந்தது. இன்றும் வழிகாட்டு கிறது.

பகையரசன் புறப்புண் பட்டமைக்குத் தான் காரணனாய் அமைந்தமைகருதி வடக் கிருந்து உயிர்நீத்த பண்பட்ட மானமுடையோர் வாழ்ந்த நிலம் இது. மறைந்து நின்று தாக்குவதே மாபெரும் வெற்றி எனும் நிலை இன்று உருவாகி விடுகிறது. புறமுது கிலே குத்துவது சிறந்த போர் முறையாகி வருகிறது. நேர்மையின் நிலைக்களன்களை இலக்கியங்கள் எடுத்துவைத்து நம்மைப் பண்படுத்துகின்றன. உலகிற்கும் உணர்த்துகின்றன.

தமர்தன் தப்பின் அதுநோற்றலும்
பிறர் கை யறவு தான் நா ணுதலும்
படைப் பழி தாரா மைந்தின னாகலும்
வேந்துடை யவையத் தோங்கும் நடத்தலும்

(புறம் : 157)

1. தனக்குச் சிறந்தோர் தன்னைத் தப்பின் தவறே புரியினும் அதனைப் பொறுத்தல்
2. பிறருடைய ஒழுக்கக் கேட்டிற்குத் தான் நாண்படுதல்
3. படையிடத்து பிறர் பழிக்கப்படாத வலிமை யுடையனாதல்
4. அறிவுடையோர் முன் செம்மாந்த நடையுடைப் பண்புடன் நடத்தல்.

இப்பண்புகள் என்னும் வழிநடத்துபவை எனினும் படைநடத்துதல் என்பது இன்றைய உலகில் தொழில் துறை நுண்ணறிவைக் காட்டும். உலக நாடுகளில் தொழிலில் முன்னேறிய நாடுகளே பொருளாதாரத்தில் முதன்மைபெற்று விளங்குகின்றன.

எதிர்வரும் இருபத் தொன்றாம் நூற்றாண் டுக்கு தமிழரின் சங்க காலப் பண்புகள் விடியல் விளக்கமாக அமைகின்றன.

வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்.
மெய் கூறுவல்

(புறம் 139) என்றார் மருதனிள நாகனார்.

'மரபுநிலை திரிதல் செய்யுட்இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லினான'

(தொல் மரபு 92,2)

'மரபு நிலை திரியின் பிறிது பிறதாகும். இது நூன்மரபு மட்டுமில்லை. தமிழரின் வாழ் புவியல் வாழ்வாங்கு வரலாறு ஆகும். சங்க காலப் பண்பாடுகள் சமகாலத் தத்துவங்கள்.

பூத்தமலர் போலப் புதுமணம் வீசி வழிநடத்துபவை சங்க இலக்கியங்கள்.

அரம்போலும் கூர்மையை ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண் பில்லாதவர் (குறள்:997)

அன்பின் வழியது உயர் நிலை. பண் புடையர்ப் பட்டுண்டு உலகம். பண்பாடுகள் தாம் நம் பரம்பரைக்கு வழிகாட்டிகள், கலங்கரை விளக்கங்கள். சங்க காலப் பண்புகளே உலகைக் கரை சேர்க்கும் வளரும் உலகப்பண்பாட்டியல்களின் தொட்டில். ★

சங்கத் தமிழர்களின் கடல் கடந்த வணிகம்

-மணவை வே.வரதராசன்

வேங்கடம், குமரி, தீம்புனற் பௌவம் எனத் தமிழக எல்லை தமிழக வரலாறு கொண்ட கால்முதலே நான்கெல்லையாக அமைந்ததாகும். தமிழக எல்லையின் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகள்கடல்சூழ்ந்த பகுதியாகும். வட எல்லை வேங்கடம் மலைப் பகுதியாகும். எனவே சங்க காலத்தமிழர்கள், தாம் வாழும் நிலங்களை ஐவகையாகப் பிரித்தனர். அவை குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல் எனவும்; முல்லையும், மருதமும் திரிந்தால் பாலை எனவும் பிரித்து, அவற்றிற்கான ஐந்திணை ஒழுக்கத்தையும் வகுத்து வாழ்ந்தனர். முப்புறம் கடல் சூழ்ந்த பகுதியாதலால், கடலும் கடல் சார்ந்த பகுதிகளையும் பற்றி நெய்தல் திணையென சங்க இலக்கியத்தில் கூறியுள்ளனர் தமிழர். நெய்தல் கருப்பொருளாகக் கொண்டவை எல்லாம் தமிழ் மக்களின் கடல் சார்ந்த வாழ்வினைக் கூறுவதாகும்.

தமிழர்களின் கடல் வாழ்வின் சிறப்பினைக்கூற சங்க இலக்கியங்களில் கடலையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் எனப் பல சொற்கள் உள்ளன. பழந்தமிழர்கள் கடலில் பயணம் மேற்கொள்ள அவர்களின் பயண தூரத்தையும், கடல் நிலையையும்காலத்தின்தன்மைக்கும், செய்யும் தொழிலுக்குமேற்ப பலவித சிறப்புகள் கொண்ட மரக்கலங்களைப் பயன்படுத்தினர். அவற்றை பலகை, மிதவை, தெப்பம், கட்டு மரம், புணை, திமில், ஓடம், நாவாய், அம்பி, கலம், தோணி, வங்கம், படகு எனப்பிரித்து அதனை அந்தந்த நிலைக்கேற்பத் தேர்ந்தெடுத்துப் பயணம் செய்தனர்.

சங்க காலத்திற்கு முற்பட்ட காலமாகிய கி.மு. நாலாயிரம் ஆண்டு கட்கு முன்பே பழந்தமிழர்கள் கடற் பயணம் மேற்கொண்டு யவனர் - கிரேக்கர், உரோமானியர் ஆகிய அயல் நாட்டினருடன் தொடர்பு கொண்டனர். அந்த அயலவர்களும் தமிழகம் வந்து பண்டங்களைப் பரிமாற்றிக் கொண்ட தற்கான இலக்கியச் சான்றுகள் நிறைய உள்ளன.

சால்டியத் தலைநகரான 'ஊர்' என்னுமிடத்தின் அழிபாடு களிடையே கிடைத்த தேக்கு மரத்துண்டு சேரநாட்டைச் சேர்ந்ததெனக் கருதப்படுகிறது. யூதத்தலைவரான மோசசு நடத்திய வழிபாட்டில் தமிழகத்து ஏலக்காய் பயன் பட்டதெனவும், கி.மு.1490 - 1462ல் எகிப்தில் இறந்த மன்னர்களின் உடல்கள் தமிழகத்தில் நெய்யப்பட்ட மெல்லிய ஆடைகளால் போர்த்தப்பட்டன வென்றும் தெரிகிறது. கி.மு. ஆயிரமாவது ஆண்டில் சாலமன் காலத்தில் சந்தனக் கட்டை, குரங்கு, மயில், முதலியன தமிழகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டன வெனவும் அறிய முடிகிறது.

கிரேக்க விவிலியத்தில் காணப்படும் 'துகிம்' எனும் சொல் மயில் தோகை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். தமிழகத்தின் அரிசியை கிரேக்க மொழியில் ஒரிசா எனவும் இஞ்சியை ஜிஞ்சிபேர் எனவும் திப்பிலியை, பிப்பிலி எனவும் கிரேக்கத்தில் ஒலி மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. யானைத் தந்தத்தைக் குறிக்கும் இபம் என்னும் தமிழ்ச் சொல் எபிரேய மொழியில் ஹபிம் எனத்திரிபாகியுள்ளதாகத் தெரிகிறது.

பாபிலோனிய பழங் கல்வெட்டுகளில் ஆடையைக் குறிக்கச் சிந்து என்னும் சொல் தமிழகத்தினின்று சென்ற ஆடைவகையினைக் குறிக்கிறது. கன்னடத்திலும், துளுவிலும் சிந்து என்ற சொல் ஆடையைக் குறிப்பதாக இன்றும் வழங்குகிறது. சீனம், மலேசியா, சாவகத்தீவு போன்ற கிழக்கு நாடுகளோடும் கி.மு.ஆயிர

மாவது ஆண்டிலிருந்தே வணிகத் தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது. சீனி, சீனம் என்ற சொற்களும், சீன அடைமொழி கொண்ட சீனச்சரக்கு சீனக்காரம் போன்ற பல சொற்களும் தமிழகத்ததுக்கும், கீழை நாடுகளுக்கும் வணிகத் தொடர்பு இருந்த தற்கான சான்றாக உள்ளது.

கி.பி. 70-ல் வாழ்ந்த 'பிளைனி' என்றப் பயண நூலாசிரியர் இந்தியக் கடற் பயணத்தைப் பற்றி விரிவாகக் கூறியுள்ள செய்தி- யவனக் கப்பல் தனலைவன் 'ஹிப்பாலசு' தமிழகம் வருவதற்கு சாதகமான பருவக்காற்றின் இயல் பினை ஆய்ந்துணர்ந்து எளிதாக தமிழகம் வந்தடைந்தான். அதனால் அந்தப் பருவக் காற்றையே அவன் பெயரால் அழைக்கப் படுகிறது. அக் காற்று முறையாக வீசினால் அரேபியாவிலிருந்து முசிறித் துறை முகத்தை 40 நாட்களில் அடையலாம் என்கிறார். மதுரையை ஆண்ட பாண்டியனையும் குறிக்கிறார். கொட்ட னாரா என்னும் இடத்திற்கு மிளகு கொண்டு வந்ததாகவும் கூறுகிறார். ரோம் நாட்டின் பெருஞ்செல்வம் ஆண்டு தோறும் தமிழகத் திற்குச் சென்றுவிடுகின்றதே என அவர் அங்கலாய்த்த செய்தியும் தெரிகிறது. உரோ மானியர்கள் வணிகத்தின் பொருட்டு தமிழகத் தில் பல விடங்களில் பல்லாண்டுகள் வாழ்ந்து வந்தனர் என்ற குறிப்பும் பிளைனியின் நில நூலில் உள்ளது.

அதுபோன்று சோழமன்னன் கரிகாற் பெருவளத்தானை, வெண்ணிக்குயத்தியார் குறிப்பிடும் போது அவன் பெருங்கடலில் நாவாய் செலுத்தக் காற்றின் போக்கும். காலமும் அறிந்து பயன் கொள்ளும் மரபாலன் என்னும் கருத்தில்

"நளி யிருமுந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழிலாண்ட உரவோன் மருக

எனக் கூறுகிறார். இதில் வளி தொழிலாண்ட எனும் சொற்றொடர் காற்றின் இயல்பறிந்து நாவாயினை செலுத்தி பயன் கொள்ளும் ஆற்றலைக் குறிக்கிறது.

தமிழர்கள் தொன்று தொட்டு கடலில் பயணம் செய்தவர்களாதலால் இடைக்கால சோழப் பேரரசில் மாமன்னராகத் திகழ்ந்த இராசேந்திர சோழன் பெருங்கடற் படை கொண்டு கடாரம் முதலிய நாடுகளைக் கடல் கடந்துச் சென்னு வென்றதற்கான கடலாதிக்க அடிப்படை அமைந்தது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடல் நடுவில் உற்ற பகைவர் தம் கடம்பினை அழித்து பெற்ற கடல் வெற்றியைப் பதிற்றுப் பத்து கூறுகிறது.

கடற் பயணத்தில் கலத்திற்கு ஏற்படும் ஊறுகளையும் சங்க இலககியத்தில் காணலாம்.

'கால் ஏமுற்ற பைதரு காலை
கடல் மரம் கவிந்த தெனக் கலங்கி உடன் வீழ்பு
பலர் கொளற் பலகை போல
வாங்க வாங்க நின்றூ உங்கு அஞர் நிலையே

(நற்றிணை-30)

இதன் பொருள்:

கடிய புயல் வீசி சுழல்வதாலே, தாம் ஏறியிருக்கும் மரக்கலம் கலக்க முற்றுத் தாமும் ஒருசேர வீழ்ந்தனர். அவ்வாறு விழுந்த பலரும் அங்கு மிதந்து வந்த ஒரு பலகையைப் பற்றிக் கொண்டு ஒவ்வொருவரும் தனித்தனியே இழப்பது போல.

அடுத்து

பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒரு மரப்பாணியில் தூங்கியாக்கு

(பெரும் பாணாற்றுப்படை வரி 432-433)

எனச் சங்க இலக்கியத்தில் கூறுகிறது.

மிகப்பெரிய கப்பல்களில் தமிழர் கடல் பயணம் மேற்கொண்டது பற்றி சங்க இலக்கியங் களில் பல குறிப்புகள் உள்ளன.

உலகு கிளர்ந்தன்ன உரு கெழ வங்கம்
புலவுத் திரைப் பெருங்கடல் நீரிடைப் போழே
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரை செலல் இயற்கை வங்கூழ் ஆட்டக
கோடுயர் திணி மணல் அகன்துறை நீகான்
மாட ஒள் ளெரி மருங் கறிந் தொய்ய

(அகம் 255)

இதன் பொருள்

உலகு இடம் விட்டுப் பெயர்வது போல தோற்றமளித்து நகர்ந்து செல்லும் நாவாய், பேரலை எழுப்பும் கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்கிறது. இரவு பகல் என நாள் முழுவதும் விரைந்து வீசும் காற்றின் போக்கு அறிந்து நாவாயைச் செலுத்தும் அதன் தலைவன், மணல் செறிந்த கரைகள் அமைந்துள்ள கலங்கரை விளக்கொளி கொண்டு கரை அறிந்து பொருள் தேடும் முயற்சியில் செலுத்துகிறான் என மதுரை மருதனிள நாகனார் ஓர் உவமையில் கூறியுள்ளார்.

புறநானூற்றில் பரணர்

கலிச் சும்மைய கரை கலக்குறுந்து
கலம் தந்த பொற் பரிசம்
கழித் தோணியால் கரை சேர்க்குந்து (புறம் 343)

இதன் பொருள்

பெரிய நாவாய்களோடு ஆழ்கடல் சென்று பொருளீட்டி வந்தவர்கள் அப்பொருட்களைச் சிறிய தோணிகளின் உதவியால் இறக்கிக் கரை சேர்க்கிறார்கள் என்பதாம்.

இவ்வாறு வணிகத்தின் நிமித்தம் மட்டுமின்றி, நாடுகாக்கும் பணியிலும் கடற் படை பெரும் பணியாற்றியது. இது குறித்துப் பதிற்றுப் பத்து இமயவரம்பன் கடற்படை கொண்டு கடற் கொள்ளையர்களை வென்றுஅவர் தம் காவல் மரமாகிய கடம்பினை வெட்டிய செய்தியினைக் கூறுகிறது.

"இரு முந்நீர் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கடம் முதல் தடிந்த கருஞ்சினமுன்பின்
நெடுஞ்சேரலாதன் (பதிற்றுப்பத்து 29 வரி 2-5)

அவ்வாறே சேரன் செங்குட்டுவன் கடலில் ஈற்றிய வெற்றியினை

கோடு நரல் பௌவம் கலங்க வேலியிட்டு
உடை திரைப் பரப்பில் படுகடல் ஓட்டிய
வெல் புகழ்க் குட்டுவன்
(பதிற்றுபத்து 46 வரி 11-13)

என புகழ்ந்துரைக்கிறது

அதே போன்றுசோழன் நலங்கிள்ளியைக் குறிக்கும் போது கோவூர்கிழார்,

கடற்படை அடற் கொண்டி
மண்டுற்ற மலி நோன்றார்
தண் சோழ நாட்டுப் பொருநன்

எனப் பெருமைப் படுத்துகிறார்.

மலையமான் திரு முடிக்காரியை மாறோகத்து நப்ப சலையார் பாடிய பாடலின் ஒரு பகுதி.

சினம் மிகு தானை வானவன் குட கடல்
பொலம் தரு நாவாய் ஓட்டிய அவ்வழி
பிறகலம் சொல்கலாது அனையேம் அத்தை
(புறம் 126-வரி 14-16)

பொருள்

சின மிக்க படைகளுடைய மன்னன் மேற்குக் கடலில் பொன்னைத்தரும் நாவாய் களைச் செலுத்திய பகுதிகளில் மாற்றோருடைய மரக்கலம் செல்ல இயலாது எனக் கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில் அக்கால மாமன்னர்களிடம் ஆற்றல்மிக்க கடற்படை இருந்தன என்பதை அறியமுடிகிறது. இதன் மூலம் நாட்டுப் பாதுகாப்புக்கு உதவியதோடு, நாட்டுவளம் பெருக்கி வணிகத்துறையிலும் ஈடுபட்டு பெரும் பொருள்களை ஈட்டினர்.கடல் கடந்த அந்நிய நாட்டு அரசின் உறவும் பேணப் பட்டது. கிரேக்கம், உரோமம், சீனம், சாவகம் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டு, பொருள் வாங்குவதிலும், விற்பதிலும், பண்ட மாற்று மூலமும் பொருளீட்டினர்.

தமிழகம் மேலை நாடுகளோடு கொண்டிருந்த வணிக உறவைப் பற்றிய பல செய்திகளை 'பெரிபுளூஸ்' என்பவரின் "இந்து மாக் கடலின் வழிகாட்டி நூல்" கூறுகிறது. தொண்டி, முசிறி, குமரி ஆகிய துறை முகங்களை திண்டிஸ், முஸ்ரிஸ் கொமெரி என்றும் முத்துக் குளிப்புத் துறைமுக நகரமான கொற்கையை 'கொல்காய்' எனக் குறிப்பிடுகிறது. உறையூரில் முத்துக்கள் விற்பனை பற்றியும் கூறுகிறது. தமிழகத்தில் இருந்த வணிகப் பெருநகரங்களும்,

இங்கிருந்தது அயல் நாட்டுக்கு ஏற்றுமதியான பொருட்களும், அயல்நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியான பொருட்களைப் பற்றிய செய்திகளும் அந்நூலில் வெளியாகியுள்ளன.

அமோனியர்கள் என்ற சொல்லின் திரிபே 'யவனர்' முதலில் வணிகத் தொடர்பாக இங்கு வந்த கிரேக்கர்களையும் அடுத்து வந்த உரோமானியர்களையும் பிற்காலத்தில் வந்த அரேபிய பாலஸ்தீனம் போன்ற மேலை நாட்டு மக்கள் அனைவரையும் யவனர் என்றே விளிக்கப்பட்டனர். இவர்களைப் பற்றி சங்க இலக்கியங்களில் மிகுந்த செய்திகள் உள்ளன.

யவனர்கள் அவர்கள் நாட்டிலிருந்து மரக்கலங்களில் ஏற்றிக் கொண்டு வந்த மதுவைப் பொற்கிண்ணங்களில் ஏந்தி மகளிர் கொடுக்க மன்னர் அருந்திய செய்தியினைப்பற்றி புறநானூறு கூறுகிறது. பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் புறநானூற்றில் பாடிய பாடலொன்றின்பகுதி

யவனர் நன் கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனை கலத்து ஏந்தி, நாளும்
ஒண் தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கு இனிது ஒழுகுமதி ஓங்குவாள்மாறா

(புற 56 வரி 18-21)

அடுத்து யவனர்கள் கைத்திறனால் உருவாக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்ட பாவைவிளக்குகள் தமிழ மன்னர்களின் அரண்மனைகளில் இருள் நீங்கி ஒளியூட்டி அழகு பெறச்செய்தன என்பதை பரிபாடலில் வருணனை பெறுகிறது.

யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கையேந்து ஐ அகல் நிறைய நெய் சொர்ந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி
அறு அறு காலை தோறு, அமைவரப் பண்ணி,
பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க

மேலும் அந்த விளக்கு 'அன்ன வடிவில்' உள்ளதென அதன் அழகை பெரும்பாணாற்றுப் படையில் (வரி.316-319)

ஓதிம விளக்கின்உயர் மிசைக் கொண்ட
வைகுறு மீனின், பையத் தோன்றும்
நீர்ப் பெயற்று எல்லைப் போகி"

எனக் கூறுகிறது.

யவன வீரர்கள் தமிழக அரண்மனைகளில் வாயிற் காவலராக இருந்ததைச் சிலப்பதிகாரம்

'கடி மதில் வாயில் காவலில் சிறந்த
அடல் வாள் யவனர்' எனக் கூறுகிறது.

இதைத்தற்கால நேபாள கூர்க்காக்கள் போன்றதாகும்.

அவர்களுடைய தோற்றப் பொலிவையும், அஞ்சத்தக்க வீரச் செறிவையும் முல்லைப் பாட்டில் கூறுகிறது.

மத்திகை வளை இய, மறிந்து வீங்கு செறிவு உடை,
மெய்ப்பை புக்க வெரு வரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வண் கண் யவனர்.

தமிழக துறைமுகத்தின் சிறப்பு

சேர மன்னர்களுடைய கள்ளி என்னும் பெரிய ஆற்றின் நுரை சிதறிக் கலங்கு மாறு யாவர்களுடைய மரக்கலங்கள் பொன்னொடு வந்து மிளகொடு திரும்பின எனும் வணிகத் தன்மையையும் துறை முகச் சிறப்பையும்

கள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினை மாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியோடு பெயரும்
வளம் கெழு முசிறி

என அகநானூற்றில் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் கூறியுள்ளார்.

கலம் தந்த பொற் பரிசம்
கழித் தோணியான், கரைசேர்க்குந்து
மலைத் தாரமும் கடல் தாரமும்
தலைப் பெய்து வரு நர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க்குட்டுவன்
முழங்கு கடல் முழவின் முசிறி

(புறம் 343 வரி5-10)

மற்போர்ப் பாண்டியர் அறித்திற்காக்கும்.
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன

(அக்27-வரி 8-9)

மாநாட்டு தமிழ்த் தாய் வாழ்த்து

வாசுகி கண்ணப்பன்

பல்லவி

தாய்த்தமிழே எந்தன் முதல் வணக்கம்!
தமிழைச் சுவைக்க வந்த உந்தன் சேய்கட்குத் தனிவணக்கம்
(-தாய்த்தமிழே)

அனு பல்லவி

பைந்தமிழ் பாடினால் நாவெல்லாம் மணக்கும்
செந்தமிழில் நூல்களுக்கு உண்டோ ஓர் கணக்கும்
(-தாய்த்தமிழே)

சரணம்-1

பன்னாட்டுத் தமிழுறவு வளர்த்திடவே நினைத்தோம்
பன்னாட்டு மக்கள்நாம் அறிவியலால் உயர்வோம்
பன்னாட்டுத் தமிழ் மன்றத்தால் நாம்இங்கு இணைந்தோம்
பன்னாட்டு மக்கள் நாம் பயன்பெறவே வளர்வோம்
(-தாய்த்தமிழே)

சரணம்-2

நெஞ்செல்லாம் அணுவெல்லாம் நிறைந்தவள் நீயே
செஞ்சொல்லால் அண்டத்தை அளந்தவளும் நீயே
பாங்காக பலவழியில் உயர்ந்திடவே நீயே
பாங்காக் மாநாட்டை வாழ்த்திடுவாய் தாயே
தாய்த் தமிழே எங்கள் முதல் வணக்கம்!
உயர் வணக்கம்! நல் வணக்கம்!

**"வினை நவில் யானை விறற் போர் பாண்டியன்
புகழ் மலி சிறப்பின் கொற்கை முன் துறை**
(அகம் 201 வரி 3-4)

"காவிரி மண்டிய சேய்விரி வனப்பில் புகார்"
(பதிற்றுபத்து 73 வரி 12-13)

**"மீப்பாய் களையாது முசைப்பரம் தோண்டாது
புகார் புகுந்த பெருங்கலம் தகா அர்"**

என முசிறி, கொற்கை, புகார் போன்றதுறை முகங்களைச் சங்க இலக்கியம் புகழ்பாடுகிறது.

சங்க காலத்தில் யவனர்கள், தங்கள் வணிகம் பெருகியிருந்த நிலையில் மிக அதிக அளவில் தமிழகம் வந்தனர். அவர்களுடைய நாணயச் சாலையை இங்கு அமைத்து நாண யங்கள் தமிழகத்தில் பல் வேறு பகுதிகளில் கண் டெடுக்கப்பட்டன 'ரோமாபுரிராணி', கிளியோ பாத்ரா எண்பதினாயிரம் பவுன் விலை மதிப் புள்ள ஒரு முத்தினை, மதுவில் கரைத்துக் குடித்தாள் என்றும் மற்றொரு முத்தைக் கரைக்கும்போது தடுக்கப்பட்டாள் என்ற ஒரு செவிவழிச் செய்தியும் உண்டு.

கி.பி.150 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த கிரேக்க நில நூல் வல்லுநர், தமிழகத்தை, 'தமரிக்கே' எனக் கூறியுள்ளார். இங்குள்ள ஆறுகளையும் துறைமுகங்களையும், வணிக நிலையையும், அவருடைய நூலில் குறிப்பிடு கிறார். அண்மைக் காலத்தில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகளும் இவற்றை உறுதி செய்வனவாக உள்ளன.

எனவே சங்க காலத் தமிழ் மக்களின் கடல் கடந்த வணிகம், அவர்களுடைய உள்நாட்டு வணிகம் போன்றே சிறந்திருந்தது என்பதை தமிழக வரலாற்றின் கருவூலமான சங்க இலக்கி யத்தில் அகழ்ந் தெடுக்கப்பட்ட ஊற்று. ❑

எங்கே இன்பம்?

- ந. அம்மையப்பா

அந்தக்காலத்துப் புலவர்கள் மற்றவர்களிடம் கையேந்தி வாழ்ந்து மன்னர்களிடம், பிரபுக்களிடம் பெற்றுவந்த பொருட்களால் பெறும் இன்பத்தைத் தாங்களே அனுபவிக்க விரும்பாமல், பிறருக்கும் வழங்க விரும்பினர். அறிஞர்கள் தங்களைப் போன்று தான் வறுமை யால் வாடுவார்கள் என்பதை அறிதிருந் திருந்தனர். மற்றவர்கள் தங்களிடம் அன்பு காட்டுவது போல அவர்களும், பிறரிடத்தில் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். என நினைத்தனர். அதனாலே உண்மை இனம் உண்டு என்பதையும், செல்வத்தின் நிலையாமையையும், உணர்ந்திருந்தனர். எனவே மற்றறிஞர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

ஓர் ஆண் என்னதான் புகழுடனும், திறமையுடனும், வாழ்ந்து வந்தாலும், மனைவியின் ஒத்துழைப்பு, விட்டுக் கொடுக்கும் தன்மையில்லாமல் சிறப்பாக வாழ முடியாது. உலகில் சாதனை படைத்துள்ளவர்களின் பெரும்பான்மையோர் தம்முடைய பின் பலத்தால் தான் சிறப்படைத்துள்ளனர், மகாத்மா காந்தியைப் போல. ஆகவே, நல்லபண்புடைய மனைவி அமைவதற்குக் கொடுத்து வைத்திருக்கவேண்டும். பெரும்பான்மையோருக்கு அப்படி அமைவதில்லை. வேறு வழியில்லாததால், விட்டுக் கொடுத்துத் தான் சரிப்படுத்திக் கொண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

"இல்லதென் இல்லவன் மாண்பினால், உள்ளதென்
இல்பவன் மாணாக்கடை

(திறக்குறள் - 53)

\நல்ல பண்புடைய மனைவி அமைந்த வாழ்க்கையில் எல்லாச் சிறப்பும் இருக்கும். அப்படியில்லாவிட்டால், அது வாழ்க்கையே அல்ல. அவன் எதையுமே பெற மாட்டான்.

புலவர்கள் தங்கள் மனைவியரிடத்திலும் இம்மனப் பண்பு வளர வேண்டும் என்று விரும்பினார்கள். அதனால், அவர்கள் பரிசில் பெற்று வந்த பொருளைத் தங்கள் மனைவியரிடத்தில் கொடுத்து, அவர்களிடம், உனக்குச் சார்வாய் உள்ளவர்களுக்கும், உன் சுற்றத்து மகளிருக்கும், நமது வறுமை நீங்க முன்பு நமக்குத் தந்தோர்க்கும், அவர் தன்மையைக் கருதாது, என்னையும் கேளாமல் கொடு. நாம் மட்டும் செழிப்புடன் வாழ வேண்டும் என்று நினைக்காமல், எல்லாருக்கும் வழங்கு, நானும் வழங்குகிறேன் என்று கூறினார்கள். சுருங்கக் கூறின் அவர்கள் செல்வத்தின் உண்மையான இன்பம் என்ன என்பதை உணர்ந்து, நுகர்ந்தார்கள் எனலாம். இது சங்ககாலச் சாட்சி.

உண்மை இன்பம் மக்களிடத்திலேயே நிலைத்திருக்கும் இயல்பானது. பணத்தி னால் மட்டும் இவ்வின்பம் பெறலாமென்று நினைப்பது அறியாமையாகும். நீரோடு சேர்ந்த உப்புப்போல், இரண்டறக் கலந்து கிடக்கிறது. எனவே,நேர்மை தவறிய வாழ்வு தாழ்வை உண்டாக்கும். அப்படிப்பொய்மையும், தாழ்வும் பெற்ற வாழ்க்கை உண்மையுள்ள உயர்ந்த வாழ்க்கையாகுமா?

உடல் இன்பம் கருதி, பெரும்பான்மையான மக்கள் பணம் ஒன்றையே நாடி அதைச் சம்பாதிக்க அதன் பின்னே பதறியடித்து ஓடிக் கொண்டிருக்கிறார்கள். பணத்தால் மட்டும் உண்மை இன்பம் காணலாம் என்பது அவர்கள் கருத்து. ஆனால், உண்மை இன்பம் மனவியல்பை அப்படியாகக் கொண்டதாகும். செல்வம் நிலையாமையைப் பற்றிக் கூறும்

திருவள்ளுவரே, ஒரு அதிகாரத்தில் செய்க பொருளை என்று குறிப்பிட்டுள்ளார். மற்றும் ஒன்றில் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை, யென்றும் கூறியுள்ளார். ஆனால் நாம் சம்பாதிக்கும் பணத்திற்கு நாம் அடிமையாகக் கூடாது. அதற்கு நாம் எஜமானனாக இருக்க வேண்டும். எண்ணமே வாழ்வு! திண்ணிய நெஞ்சம் வேண்டு தெளிந்த நல்லறிவு வேண்டும்.

''அதாவது என் மனமே நான் ஆளும் எனது நாடு'' என்று ஒரு ஆங்கிலப் புலவன் கூறியிருக்கிறான். ''மனமது செம்மையானால், மந்திரம் செம்மையாமே'' என்பது சித்தர் வாக்கு. மனத்துக்கண் மாற்றோர், வளமாக்கப் படுவர், அன்னார் ஆண்டவன் அருளைப் பெற்றவர் என்பது கிறித்து பெருமானாரது பொன் மொழி. இவ்வுண்மையை உணர்த்தவர் ஒரு சிலரே.

ஒருவனது மனம் தான் இவ்வுலகத்தை இன்பமாகவும் துன்பமாகவும் செய்து கொள்ளக் கூடியது. இன்பம் பணத்தாலும், இழிச் செயலாலும் வாங்கப்படுவது ஒன்றுஅன்று. இல்லறத்தில் வழுவாதிருத்தல், வறியோர்க்கு ஈதல், இன்சொல் கூறல், நல்வாழ்வில் மன அமைதி கொள்ளுதல், நோயாளிகளுக்கு உதவி செய்தல், ஆறுதல் கூறுதல் முதலியவற்றால் கொள்ளும் இன்பம் உயரிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

உண்மையான இன்பம் பெறுதல் எளிதேயாகும். ஆயினும் அதை அவ்வளவு எளிதென்று பலர் ஏற்றுக் கொள்வதே இல்லை. செயற்கரியவற்றைச் செய்வதாலும், அல்லது அறியவும் பெரியவுமானவற்றை அடைவ தாலும் இன்பம் வருகிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆயினும் அடக்கம், பணிவு, நேர்மை, இன்சொல், சான்றாரோடு பழகுதல் முதலியவற்றிலிருந்து தான் உண்மை இன்பம் மலர்கின்றது.

நட்புக்கு எடுத்துக்காட்டான பிசிராந்தை யாரது வாழ்க்கை இன்பமாய் இருந்தது. அக்காரணத்தால் அவர் நீண்டநாட்கள் வாழ்ந்திருந்தும், நரையே இல்லாதிருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஒரு நாள் சான்றோர் சிலர் அவரைக் கண்டு புலவர்பெருமானே, உம்மைப் பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்பே கேள்விப்பட்டிருக்கின்றோம். இத்தனை ஆண்டுகளாகியும், உமக்கு நரை இல்லையே என்று வியப்போடு கேட்டனர். அதற்கு அவர்,

''மாண்ட வென் மனைவி யொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனைய என் இளையரும் அதன் தலை,
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வரமும் ஊரே''.

என்று விளக்கமும் கூறினார்.

இப்பாடலை அலசிப்பார்ப்பின், அவ ருடைய இன்பத்தின் ஊற்றுத் தோற்றுவாயை எளிதில் தெரிந்து கொள்ளலாம். அவருக்கு மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவி, ஒழுக்கமும் அறிவும் நிறைந்த புதல்வர், அவர் கருதிய அதனையே ஏவல் செய்யும் ஏவலாட்கள் இருந்தனர். அவன் முறையற்ற வற்றைச் செய்யாமல், அதற்கு மேல் அவர் வாழ்ந்த ஊரில் சான்றோர் பலர் இருந்தனர். ஒருவனுக்கு இத்தகைய வாழ்வு கிடைப்பின், அவன் உண்மை இன்பம் நுகராமல் இருப்பனோ?

''பிசிராந்தையார் மாதிரி, கணியன் பூங்குன்றனாரையும் பார்ப்போம்''

உள்ளத் தனையது உயர்வு. ஒருவன் வன்செயலில் உலகத்தை தன தாக்கலாம்! வன் சொல்லால் மக்கள் அனைவரையும், சுற்றத் தாராக்க நண்பனாக்க இயலுமோ? இங்ஙனம் நீ செய்க என்று பிறருக்கு எடுத்துச் சொல்வது எளிது. ஆனால், சொற்படி செய்தல் எளிதன்று, பூங்குன்றனார் தாம் கொண்ட கொள்கைப்படி நடவாதிருந்தால்.

''யாதும் ஊரே; யாவரும் கேளீர்,
தீதும் நன்றும், பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோன், அன்ன''

என்ற சிறந்த கருத்து அவர் உள்ளத்திலே தோன்றியிருக்குமோ? உலகம் அதில் வாழும் மக்களுக்குச் சொந்தமாகுமாறு அவர் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டார். தமது பழக்கத்திற்குக் கொண்டு வந்தார். அவருடைய உள்ளக்கணிப் பால், மேற்படி பாடல் தோன்றினது.

ஆனால், நாம் எல்லோரும், அவரைப் போன்று இருக்க முடியுமா? நல்லோரையும், தீயோரையும் கொண்டது இவ்வுலகம். தீயோர் தீமை செய்யுங்கால், அத்தீமையை நினைத்துக் கோபித்தல் இயல்பே ஆயினும், அத்தீமை பிறரால் தோன்றுவதில்லை என்று நினைக்கும், சீரிய பண்பைப் பெற்றவராதலின் புலவர் நன்மையும், தீமையும் பிறர் தரவாரா என்று கூறினார். வாழ்க்கையில் தோன்றும் இன்ப துன்பங்களுக்கு அவர் அப்பாற் பட்டவரா யிருந்தார், யாவரையும் ஒப்பநோக்கும் உள்ளத் தினராயிருந்தார். ஆகவே, இத்தகைய சான் றோர் உண்மை இன்பம், பெற்றிருந்தார் என்பதில் என்ன ஐயம் உள்ளது?

சோம்பி இருப்பவனுக்கு இன்பமே இல்லை. கடிகாரம் ஓடிக் கொண்டிருப்பின், மணியைக்காட்டும். அதுபோல் ஒருவன் தனது வேலைகளைச் செய்து கொண்டேயிருப்பின், அவனுக்குப் பெரிய இன்பம் உண்டு. செய லாற்றவே மக்கள் படைக்கப்பட்டுள்ளார்கள்.

அதைக் கை என்ற சொல்லே வலியுறுத் தும். கையால் வினை செய்து பெறற்கரிய பொருள்களைக் கண்டு, மகிழ்கிறோம் அன்றோ?

செல்வர் பலர் உலகத்தோடு ஒட்ட ஒழுகாமை. கலக மூட்டுதல்; திருமண விலக்கு செய்தல், சீரும் சிறப்புமாக வாழ்கின்ற செல்வருடைய குடும்பங்களைப் பிரித்து வைத்தல், முதலியவற்றால் இன்பம் காண முயல்கின்றனர். இக்கொடுஞ்செயல்களால், அவர்களுக்கு இன்பங்காணுவது போல் தோன்றினாலும், உண்மையில் துன்பம் பயப்பனவாகும். இழிந்த குறிக்கோள், அள வற்ற தன்னலம், மடிமை, பொறாமை முதலியன உள்ளவர்களிடத்தில், இன்பம் தங்கியிராது. இனிமை, உண்மை, அழகு, அன்பு, நேர்மை முதலியவைகள் தான் இன்பத்தின் இருப்பிடங் களாகும்.

ஒருவன் தன் திறமைகளையும் வாய்ப்பு களையும் பணம் தேடுவதிலேயே கழிக்கின் றான். அவன் குறித்த காலத்தில் உண்ணுவ தில்லை. தூங்குவதுமில்லை இப்படி அவன் அன்றாட வேலைகளையெல்லாம், காலந் தவறியே செய்தல், உயிர் ஊற்றுகளாகிய உடலில் உட்கருவிகளுக்குப் பயிற்சி கொடாத தாகவே முடியும். அதன் காரணமாக கருவிகள் தம் வேலையைச் செய்யாததால், பழுதடைந்து விடுகிறது. குறிப்பிட்ட காலத்தில், அன்றாட வேலைகளைச் செய்தல், இயந்திரங்களுக்கு எண்ணெய் விடுவது போலாகும்.

நாம் உயிரோடு வாழ்வதற்கு, இன்பமே அடிப்படைத் தேவையாகும். அஃது உடல் நலம், தெளிந்த அறிவு, மனவமைதி, ஆள் வினையுடைமை, முதலியவற்றைக் காட்டும், அறிகுறியாகும். ஆனால் துன்பமோ, மறை பிறழ்தலையும், நோயினையும் காட்டும் அறிகுறியாகும்.

செம்மையான நினைவிலிருந்தும், நேர்மையான வாழ்வின் முறைகளிலிருந்தும், விலகி மறநெறி சென்றமனம் உண்மையான இன்ப துன்பங்களுக்குத் தகுதியற்றதாகி விடுகிறது. வினைத்தூய்மை இயன்ற அளவு நன்மை செய்ய வேண்டுமென்ற மன உறுதி மற்றவர்கள் ஒரு சிறிதாவது, நல்வாழ்வு பெறுவதற்குச் செல்லும் வழிகளில் குறுக்கே இல்லாமை முதலியன உண்மையான இன்பத்தைக் கொடுக்கும்.

மெய்ஞ்ஞானம்

கேட்டல், சிந்தித்தல், தெளிதல்

-ஆர்.ஐ. துரைமுருகர்-



அன்பு முழுமையாக இருக்கும் உள்ளத்தில்தான் 'ஆண்டவன் குடியிருக்கின் றார் என்று பன்னாட்டு ஞானி களும் கூறியிருக் கின்றனர். அதை யாரும் மறுப்பதற் கில்லை.

நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் நம் தமிழ்மொழியின் துவக்கமே நம்மை உணர வைக்கும் 'அ' என்றால் அன்பு, 'ஆ' என்றால் ஆசை, இந்த இரண்டும் கலந்தால்தான் 'இ' என்ற இறைவனை அடைய முடியும்

அன்பு + ஆசை = இறைவன்

'இ'றைவனை அடைய 'ஆ'சைப்பட வேண்டும்.

அது எப்படி? 'அன்புடன் 'அனுபவம் முந்தியது; வேதம் பிந்தியது. அதாவது ஒருவர் அனுபவப்பட்டுத்தானே ஒன்றைக் கூற முடிகிறது. இப்படிப் பல ஞானிகள் அனுபவப் பட்டுத்தான் 'அன்பே சிவம்' என்று கூறினர்.

ஆங்கிலத்தில் விஞ்ஞானம் நிரம்பியிருக்க லாம். ஆனால் தமிழில் மெய்ஞ்ஞானம் மண்டிக்கிடக்கிறது. உதாரணமாக A for என்ன என்று ஒரு குழந்தையை கேட்டுப் பாருங்கள் என்று சாப்பாட்டுப் பொருளைக் கூறும். அதே தமிழ்ப் பள்ளியில் படிக்கும் குழந்தையைப் பார்த்து 'அ' என்றால் என்ன கேளுங்கள் 'அ' என்றால் அம்மா என்ற அன்புத் தாயைக் கூறும். இதனால்தான் நமது தொடக்கமே அன்பு மயமாகி வாழ்க்கை அன்புக் கோட்டைக்குள் நிற்கிறது. இன்று மேலை நாடுகளில் வண்டிக்கு 'டயர்' மாற்றுவது போல் வாழ்க்கைத் துணை வரை மாற்றுகின்றனர். போதாக் குறைக்கு 'ஸ்டெப்னி' டயர் போல் சிலர் வைத்துக் கொள்கின்றனர். கற்பு என்பதே ஆரோக்கியம். ஆரோக்கியம் என்பதே மெய்ஞ்ஞானம். இந்த வாழ்க்கை நெறிக்கு எடுத்துக்காட்டாக நிற்பது நம் தமிழ்ப் பண்பாடு. காணும் பொருட்கள் யாவும் கடவுளின் மயமே (மெய்ஞ்ஞானம்) காணும் பொருட்கள் யாவும் அணுக்களின் சேர்க்கையே (விஞ்ஞானம் காணக் காண முற்பட்டவன் கடவுளாகிறான்) (அன்பை, அமைதியை).

எங்கெல்லாம் அன்பு கலந்துள்ளதோ அங்கெல்லாம் அமைதி நிலவும்; பொதுவாக நிலம், இருக்குமிடத்திலேயே இருக்கிறது. ஆனால் அதில் எத்தனையோ வகை வகையான மரம், செடி கொடிகள் வளர்ந்து அழிந்தாலும், தான் அந்த நிலையை விட்டு மாறுபடுவ தில்லை. நிலம் போன்றது மெய்ஞ்ஞானம், தாவரங்கள் போன்றது விஞ்ஞானம். மெய் ஞானத்திற்கு அழிவில்லை. ஆனால் விஞ் ஞானத்திற்கு அழிவுண்டு.

மெய்ஞ்ஞானம் என்பது ஒவ்வொருவரிட மும் உள்ள பொக்கிஷம். அதையறியாது ஏமாற்றம் அடைபவர்கள் பலர். ஆனால் அதை உணர்ந்து பலன் பெறுபவர்கள் சிலர். சின்ன கதை ஒன்று கூறுகிறேன். கொஞ்சம் கவனியுங்கள்.

கிராமங்களில் நெல் போட்டு வைக்க நெற்குதிர் என்று வைத்திருப்பர். அதில் உள்ள நெல்லை முழுமையாக எடுத்து விடமாட் டார்கள். கொஞ்சம் எப்பொழுதும் இருக்கும். இதற்கெல்லாம் காரணம் தானியக் களஞ்சி யத்தை துடைத்துப் .... எடுக்கக் கூடாது என்று ஒரு எண்ணம் நம் மக்களிடம் என்றும் உண்டு எது எப்படியோ விஷயத்திற்கு வருவோம். ஒருபெரிய வசதியான விவசாயக்குடும்பம். அதில் வயதான ஒரு பாட்டி, அவளுக்குக் கணவர் இல்லை. தனது ஒரே மகனுக்கு மூன்று

தமிழர்கள் நாம் இன்று சேர்வோம்!

கவிமாமணி அறிவுச் சுடர். எம்.ஏ.
செயலாளர் (பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் வேலூர் மாவட்டம்)

உலகிற்கோர் அறநூல் குறளே ஆகும்,
உலகத்தின் ஒற்றுமைக்கு இந்நூல் வாயில்,
உலகோரை ஒன்றிணைத்து ஆட்சி செய்ய
உகந்தமொழி தமிழ்மொழியே! தமிழர் பண்பை
உலகோர்க்கு எடுத்துரைக்கத் தமிழ்த்தொன் னூல்கள்,
ஒருகுடும்பப் பாசத்தை எடுத்து ரைக்க
உலகிற்கோர் தமிழ்க் குடும்பம் எடுத்துக் காட்டாம்,
உலகில்வாழ் தமிழர் நாம் ஒன்றுசேர்வோம்!

பன்னாட்டில் வாழ்கின்ற தமிழர் தங்கள்
பாலமென, தமிழ்மொழியை அமைத்துப் பாரில்,
என்னாடும் வியப்புறவே திறத்தால், பண்பால்
ஏற்றமுற்ற தமிழரெலாம் ஒன்றி ணைந்து

பன்னரிய மாநாட்டை பாங்காக் நாட்டில்
புகழ்சிறக்கஅமைத்திட்டார் பெருங்க விக் கோ
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் சார்பில்
பன்னாட்டுத் தமிழினத்தர் ஒன்றுசேர்வோம்,

கலைஞரின்நல் பவழவிழா பாங்காக் நாட்டில்
கற்றதமிழ் இனம் கூட பெருமை சேர்க்க
உலகபெரும் தமிழ்மொழியின் மாநாட் டிற்கு
வரவேற்கும் தாய்லாந்து மக்க ளுக்கும்,
இலியாசு, சிக்கந்தர்பாட்சா மற்றும்
அண்ணல்பெருங் கவி.வா.மு சேது ராமன்,
பலபொறுப்பு ஏற்றதமிழ்ச் சான்றோ ரெல்லாம்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்து கின்றேன்!

குழந்தைகள். அவர்கள் படித்துப் பட்டம் பெற்றதால் எப்படி விவஷாயம் பார்ப்பானுங்க! உடனே பட்டணத்தில் தொழில் தெடங்க கடன் வாங்கி செய்த முயற்சி தோல்வி கண்டதில், குடும்பம் கடன் தொல்லையால் திண்டாடிக் கொண்டிருந்தது. பாட்டிக்கு இந்த விஷயம் ரொம்பத் தாமதமாகத்தான் தெரிய வந்தது. உடனே பத்து நாளாக இதற்கு என்ன செய்வது என்று ஆண்டவனை வணங்கியபடி பாட்டி சிந்தனையில் இருந்தாள். திடீரென சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் தான் சேர்த்து வைத்திருந்த தங்கக் காசுகள், தனது அப்பா வீட்டில் சீதனமாக கொடுத்த நகைகள் யாவும் குதிருக்குள் வைத்தோமே என்ற நினைவு வருகிறது.

உடனே போய், தேடிப் பார்த்தாள். அப்படியே வைத்தது வைத்தப் படி இருந்தது. ஏறத்தாழ மூன்று கிலோ நகைகள். பாட்டிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அன்று பவுன் விலை 15 ரூபாய் இன்று என்ன விலை அடே அப்பா! அப்படியே கொண்டுபோய் விற்று கடனை அடைத்துவிட்டு மீண்டும் செல்வக் குடும்பமாக மாறியது. இந்தக் கதையை ஏன் நான் கூறுகிறேன் என்றால் பாட்டியிடம் பொற்குவியல் இருந்தும் நினைவில் இல்லாத போது மனம் வருந்தியது. அது நினைவில் வந்த பொற்குவியலைப் பெற்ற பின் எல்லாத் துன்பமும் சென்று விட்டது. இதைப் போல் நம்மிடம் இருக்கும் பேரின்பச் செல்வமான மெய்ஞ்ஞானம் நம்மிடையே இருந்து மறதி என்ற மாயை இருள் மறைத்து நிற்கிறது. அதை அகற்றினால் மெய்ஞானச் செல்வம் பெற்று மட்டற்ற மகிழ்சியடையலாம்.

ஒன்றே கடவுள்
உணர்வே பிரமம்
அறிவே சற்குரு
சற்குருவே கடவுள்

சற்குருவைப் பெற உண்மையான அன்பும் நேசமும் வேண்டும் பன்னாட்டுத் தமிழ் நெஞ்சங்கள் மனதில் இறையருள் நிலைக்கு உறவு சேர்க்கும் 'பெருங்கவிக்கோ' ஓர் உறை மோர்! பால் போன்ற நல்ல மனமுள்ளவர்களைத் தயிராக்கி, கடைந்து வெண்ணெயெடுத்து உருக்கி நெய்யாக்கும் உத்தமர்! அவருடைய முயற்சி வெற்றிபெற எனது நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துக்கள். ✖

கண்ணபிரானுக்கும் கலைமகளுக்கும் கவிதை பாடிய முஸ்லீம் சதாவதானி!

மானா மக்கீன்

செய்கு தம்பி என்ற பெயருடைய ஒரு சின்னத்தம்பி, எந்த விதமான வசதியும் உதவியும் அற்றவராக, தமிழ் மீது தனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக, ''உங்களுக்குப் பணிவிடை செய்ய வந்துள்ளேன்'' என்றபோது அண்ணாவி அரவணைத்தார்- தமிழன்னைக்காக.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இந்நிகழ்வு.

பையனுக்குப் பத்தொன்பது தான் வயது.

அதற்குள் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் அத்துப்படி!

அந்த இளமையில் சென்னை மண்ணை மிதிக்கவும் காலமகள் கைகொடுத்தாள்.

அங்கு வந்ததும் தமிழ்ப் பணிக்கே!

உறவினர் முறையாகச் செய்யித் தாஹா சாஹிப், ஸ்ரீ பத்மநாப அச்சுக் கூடத்தில் பதிப்பித்த ஹசரத் (கோட்டாறு) ஞானியார் சாகிபின் 'மெய்ஞ் ஞானத் திருப்பாடல் திரட்டு' நூலுக்கு இளைஞனது உழைப்பு மெய்ப்புத் திருத்தல் போன்ற பல பணிகளுக்குத் தேவையாயிருந்தது.

அது முடிந்த பிறகும், அவர்தம் சேவையை, பார்த்தசாரதி நாயுடு என்ற அச்சக உரிமையாளர் விரும்பினார். அங்கு வெளியான நூல் அத்தனைக்கும் தலைமை பிழைதிருத்துபவரானார் அவர்.

கணினி என்பதை அறியாத காலத்தில், அவரது மனவரங்கின் உள்ளே ஒவ்வொரு தமிழ் இலக்கிய - இலக்கண நூலுக்கும் பதிவு நடந்தது.

அந்த அளவு நினைவாற்றல் மிக்கவராக அவர் விளங்கினார்.

அவனைச் 'சதாவதானி' என்றனர்.

'தமிழ்க்கடல்' என வாழ்த்தினர்.

'கலைக்களஞ்சியம்' எனப் போற்றினர்.

'மகாமதி' என மாபெரும் பெயர் சூட்டினர்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர் பெருமக்களுள் ஒருவராக்கினர்.

தேவாமிர்தப் பிரசங்கியாகவும் திகழச் செய்தனர்.

ஆஹா! ஆஹா! மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களால் பாடல் பெற்ற நாஞ்சில்நாடு பெற்றதே பேறு!

பெற்றோர் வைத்த பெயர் செய்குதம்பி.

பிற்காலத்தில் அல்லாமா, டாக்டர் காவன்னா பானா செய்கு தம்பிப் பாவலர் என அழைக்கப்பட்டார்.

19-ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலும், 20-ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரையிலும் அவர் வாழ்ந்தார். (1874-1950) இரு நூற்றாண்டுகளிலும் இலக்கியப் பணி புரிந்தார்.

அவர் உயிர் மூச்சு முழுதுமே தமிழாக இருந்தது.

பாவலர் அவர்களது பேரரான காவன்னா பானா செய்குதம்பி அவர்கள் 1987இல் தொகுத்த நூலொன்றில் காண முடிகிற இவ்வரிகள் அவர் தமிழுக்காகவே வாழ முற்பட்டதை நிரூபிக்கின்றன:

''நெசவுப் பாவிலே சீர் பார்த்த வேளை,
கவிப்பாவிலே சீர்பார்க்கத் துடித்தார்.
தறிப்பாவிலே அசைநோக்குங் காலை
இலக்கியப் பாவிலே அசைநோக்க
விழைந்தார்

பாவிலுள்ள தளையெல்லாம் பாட்டில்

தளையாகக் கண்டார்.

நூல் முடிந்து பாவாக்கும் நேரமெல்லாம்

பாப்புனைந்து நூலாக்கப் பரபரத்தார்

இடமும் வலமுமாக ஓசை ஓடங்கள்

அவருக்கு எதுகையை - மோனையை நினைப்பூட்டின''

நாஞ்சில் நாட்டு இளங்கடை கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த செய்குதம்பி அவர்களுக்கு 5-ஆம் வகுப்புக்குமேல் படிக்க வறுமை இடந்தர மறுத்துவிட்டது. பெற்றோரின் நெசவுத் தொழிலில் ஈடுபட்ட போதிலும் அறிவுவேட்கைக்கு ஆட்பட்டவராக இருந்தார்.

விசித்திரம் என்னவென்றால், 'நூல்கள் இரண்டு' பாவலரை வாழ்நாள் முழுதிலும் சுற்றி வந்திருக்கின்றன!

ஒன்று- நெசவு நூல்.

மற்றது- இலக்கிய நூல்.

ஊரிலே நூல்கடை வைத்து நெசவுத் தொழிலுக்கு உதவினார்.

இவரையே பிற்காலத்தில் ''திரு.வி.க.'' என்ற திருமிகு கல்யாணசுந்தரனார் தன் மானசீகக் குருவாக ஏற்றார்.

''தெ.பொ.மீ'' என்ற திருமிகு மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தம் பால பருவத்திலேயே பாவலரது தமிழ்ப்பற்றை, தமிழ்ப்பித்தை தன் நெஞ்சிலும் தேக்கினார்.

மறைமலை அடிகளார் அவர்களோ, அருட்பா - மருட்பா போரில் மருண்டு விடாதவராகப் பாவலரை இறுக அணைத்து நின்றார்.

அருட்பா - மருட்பா- அதென்ன?

இளையதலைமுறையினர் அறிய அவா கொள்ளலாம். இந்த எழுத்துகளில் இரு இடங்களில் வந்தும் விட்டது!

''வேகமாக விளக்குங்கள் அய்யா, தொலைக்காட்சிப் பார்க்க ஓட வேண்டும்'' என்போரும் இருக்கலாம்!

மன்னியுங்கள். அந்த அற்புத நிகழ்வை அறிய கொஞ்சம் தாமதமாகும். அதற்குள் இன்னொரு கடமையை முடித்து விடுகின்றேன்.

அது, பாவலர் அவர்களது தமிழ் இலக்கியப் பணிகளை வகைப்படுத்தும் கடமை.

''நாயக மான்மிய மஞ்சரி'' என்ற பேரிலக்கியம், இறைத்தூதர் நபிகளார் (ஸல்) அவர்கள் மீது அவர் பாடியது. அதில் இடம் பெற்றுள்ள ஒரு பாடலில் தமிழ் பேசும் மக்களுக்குத் தனித்துவமான செய்தி ஒன்றுள்ளது.

''ஒன்று தெய்வ மொன்று மதமொன்று மக்கள் சாதியென
நன்றுபெற வோதியலை நாட்டிநவின் நான்மறையுங்
குன்று பெற தீப்மெனக் கோத்தருளிக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கூளிதேயோ
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ''

'ஒன்றே குலம், ஒருவனே இறைவன்' என்ற நபி பெருமானார் அவர்களின் ஒப்பற்ற போதனையைப் பாவலர் அவர்கள் தேன் சொட்டும் பாடலாக என்றோ தமிழ்மக்களுக்கு அர்ப்பணித்து விட்டார்கள்.

அனைத்து இனத்தாராலும் போற்றப் படும், மதநல்லிணக்கத்திற்கு ஓர் உதாரண புருஷரான நாககூர் ஆண்டகை மீதும் அன்னாருக்குப் பாசமும் நேசமும் இருந்தது. ''திரு நாகூர்த் திரிபந்தாந்தி'' பிறந்தது.

அதன்பின் 'திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதியையும் படைத்துத் தந்தார்.

இது முடிந்தபிறகுதான், பாவலர் அவர்களுக்கு கோவை பாடுவதைப்பற்றி சிந்திக்க நேரம் வாய்த்தது.

''அதிலும் என் திறமையை நிருபிப்பேன்'' எனச் சூளுரைத்தார்.

இந்தக் கோவை பாடுதலில், புலவரேறுகள் எனப்படுபவர்களே ஒத்துச் கொள்கிற

ஒன்றுளது. அதனைப் பாடுவதென்பது அத்தனை இலகுவானதல்ல என்பதே அது!

தமிழன்னையின் உதவியால் தன்னிகரில் லாப்பணியினை நிறைவேற்றினார் கோவை நூல்களிலே.

''கன்றெடுத்துக் கனியுகுத்துக் கருதுமுல
கோரடியில் கவினைச் சேர்த்து
குன்றெடுத்துப் பசுநிறைகாத் தாயர்குலக்
கோபியர்கள் கொண்ட கூறை
சென்றெடுத்துத் தூதுரைத்து வெண்ணை யொடு
தயிர் நெய் பால் சேர ஒன்றாய்
அன்றெடுத்துத் தின்றகை யாதவனை
மாதவனென் றகூத்துள் வைப்போம்''

இதுவே அன்றைய தமிழகம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோரின் பண்பும் பண்பாடும். தமிழ் முஸ்லிம்களுக்கும் தமிழுக்கும் இடையே இருந்த பந்தம்.

பாக்களின் மூலமாக மட்டுமே தமிழ் வளர்த்தார் என்பதல்ல. ஏட்டுச் சுரைக்காயாகச் செல்லரித்துக் கொண்டிருந்த நல்ல பல இலக்கியங்களைப் பதிப்பிப்பதிலும் பாவலர் அவர்களுக்கே முதலிடம். உரைநடையிலும் பணிகள் தொடர்ந்தன.

அவர்தம் சீறாப்புராண உரை உன்னத மானது. வேதாந்த விவகார கிரிமினல் கேஸ், தேவலோக கிரிமினல் கேஸ் (தலைப்புகளே புதுமை)! போன்றவை உரைநடை நூல்களே.

எழுதுகோலை ஏந்திய கரம் ஓய்வுக்கு ஏங்கிய நேரங்களில், நாவுக்கு நல்ல வேலை கொடுத்த மனிதரும் 'மகாமதி' அவர்களே!

அதற்கு இலங்கை, வடபுலமும் பங் களிப்புச் செய்துள்ளது.

அப்பாடா, வந்துவிட்டேன். 'அருட்பா - மருட்பா' வுக்கு!

பழுத்த சைவப்பழமானவர் ஆறுமுக நாவலர் அய்யா. யாழ்ப்பாணம் பெற்றெடுத்த தமிழ் மாணிக்கம். அவரது மாணாக்கருள் ஒருவர் திரு நா. கதிரவேல் பிள்ளை. இவரும் இலங்கை மண்ணே. தமிழகத்தில் வாழ்ந்த பொழுது, இராமலிங்க அடிகளாரின் அருட் பாவை 'மருட்பா' என மார்தட்டினார்.

அந்த எதிர்ப்பினால் தமிழக முஸ்லிம் ஒருவரது தமிழ் உணர்வு வானளாவிற்று! நாவலர் அய்யாவும், பிள்ளை அவர்களும் எதிர்பார்க்காதவொன்றானது.

மேடைப் பேச்சிலே, இலக்கிய ஆய்விலே இலைமறைத்த காயாக இருந்திருக்க வேண்டிய ஒரு நாஞ்சில் நாட்டு முஸ்லிம், காஞ்சீபுரத்து வீதிகளிலே தமிழ் இந்துக்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டார். பெரியகோயிலில் பூரணகும்ப மரியாதையும் வழங்கினார்கள். ''தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்'' என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்தனர்.

ஏன்...? ஏன்...?

ஒரு முஸ்லிம் பெருமகனான பாவலர் அவர்கள், அருட்பாவுக்கு ஆதரவாக அடுக்கடுக் காக ஆதாரங்களையும் மிகமிகத் தெளிவான வாதங்களையும் மேடை தோறும் வைத்த பொழுது தமிழன்னை மகிழ்ந்தாள், ஆசி வழங்கினாள்.

''அருட்பா நூலாக இருக்கலாம். ஆனால் அது தமிழ் நூல். தன்னேரில்லா ஞானப்பூங்கா'' என்ற குறிப்பிலே தமிழ் அன்னை தனி மதிப்புப் பெற்றாள்.

பாவலர் அவர்களுக்கு இராமலிங்க சுவாமிகள் மீதிருந்த அபிமானம் போல கவியரசர் கம்பனிடமும் இருந்தது. அன்னாரது கம்பராமாயணச் சொற்பொழிவுகளும் புகழ் பெற்றது!

''கம்பன் காவியத்தை நயம்பட விளக்கும் பழைய தலைமுறைப் பெரியார்களோடு ஒப்பிட, நம் காலத்து வாழ்ந்தவர் ஒருவர் பாவலர் அவர் கள் தான். அவர், என் குரு ஸ்தானத்திலிருக்கிறார்.

-இது, தமிழ்ப்பெரியார் திரு.வி.க. அவர்கள் வாக்குமூலம்! ஆயிரத்திலொரு வார்த்தை!

செந்தமிழ்ப் பண்பாடு!

பாவாணர் பா.அமிழ்தன்

செந்தமிழ்ப் பண்பாடு; - பண்டைய
செந்தமிழ்ப் பண்பாடு!
சிந்தை கிளரவைக்கும் - சங்கத்துச்
செந்தமிழ்ப் பண்பாடு!

தன்பஞ்சு மெத்தையிலே - உறங்கிய
தண்டமிழ்ப் பாவலர்க்கு
மென்பஞ்சுச் சாமரத்தால் - தண்காற்று
வீசிநின் றான், அரசன்!
(செந்தமிழ்ப்)

நெல்லைப் புடைப்பதுபோல், - பாய்புலியை
நெட்டிப் புடைத்துவிட்டாள்,
மல்லல் மறக்குலப் பெண், - முறத்தால்!
மாதர் மணித்திலகம்!
(செந்தமிழ்ப்)

உற்ற துணையின்றிக் - கிடந்த
ஊதிகை கண்டிரங்கிப்
பொன்தேரைத் தந்து சென்றான்; - பாரிவேள்
புல்லுயிர் நேசித்தான்!
(செந்தமிழ்ப்)

(ஊதிகை - முல்லை)

மன்னன் பெருஞ்சோழன்! - கவிதை
மன்னன் பிசிராந்தை!
முன்னரே காணவில்லை; - நட்புறவு
முற்ற இணைந்து இறந்தார்!
(செந்தமிழ்ப்)

பெண்டு தனித்திருந்த - வீடுதட்டி
விட்ட பிழைக்காகத்
துண்டித்து வீசிவிட்டான், - தன்கையைச்
சோழன் கரிகாலன்!
(செந்தமிழ்ப்)

வாடை நடுக்கமுற்ற - மயிலுக்கு
மாணிக்கப் போர்வைநல்கி,
ஆடை அருளிநின்றான்! - வேள்பேகன்
அன்பில் அசோகமன்னன்!
(செந்தமிழ்ப்)

தொண்டுகள் மக்களுக்கே - எந்நாளும்
தோதுடன் செய்திடவே
முண்டுத் துறபெடுத்தாள்! - மணிமேகலை
மூவாது வாழுகின்றாள்!
(செந்தமிழ்ப்)

'கணவர் இழந்தவர்கள் - புகலிடம்
காணுவ தில்லை!' என்று
கணத்தில் உயிர் துறந்தாள், - செழியன்
காதலி கோப்பெண்டு!
(செந்தமிழ்ப்)

நிச்சயம் செய்திருந்த - திருமணம்
நேராமற் போனதனால்,
இச்சை ஒழிந்துஒருத்தி - முதுமை
ஏற்பொடு காத்திருந்தாள்!
(செந்தமிழ்ப்)

ஆர்ந்து மலரில்வண்டு - செழுந்தேன்
அச்சமின் றிப்பருகத்
தேர்மணி நாக்கினையே - கயிற்றால்ஒரு
செம்மல் பிணைத்துவிட்டான்!
(செந்தமிழ்ப்)

பாடும் மலர்வனத்தில் - சிலப்பூக்கள்
பையப் பறிப்பதுபோல்,
பீடு தமிழ்ப்பண்பில் - மிகச்சில
பேசி முடித்துவிட்டேன்!
(செந்தமிழ்ப்)

இராமாயணத்தையும், பெரிய புராணத்தையும், சீறாப்புராணத்தையும் ஊரெல்லாம் கொண்டு சென்று, மக்களை இலக்கிய முக்குளிப்புக்கு உள்ளாக்கியவர் அவர்!

எட்டுப்பேர் கேள்விக்குக் தட்டாமல் பதில் கூறுகிறவர் ''அட்டாவதானி''. பத்துப் பேர் கேள்விக்குப் பதில் அளிக்கிறவர், ''தசாவதானி''. பதினாறுபேர் கேள்விகளதுக் குப் பதில் விடுப்பவரோ, ''சோடசாவதானி'', ஒரு நூறுபேர் கேள்விகளுக்கு பதில் வழங்குபவர் ''சதாவதானி''.

அந்தவகையில், அவதானத்திலேயே தலையாயதான சதாவதானத்தைப் பாவலர் அவர்கள் நிறைவேற்றினார்கள். ❑

- மானாமக்கீன்-

குயில் பாட்டும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்

- இரவீந்திர பாரதி -



இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியைப் புகழிலேற்றும் கவியரசராய்த் திகழ்பவர் மகாகவி பாரதியார். அவரது நேர் வாரிசாகத் திகழ்பவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பாரதியைப் போலவே பாரதிதாசனும் ஏராளமான தனிப்பாடல்களைப் பாடிக் குவித்தார். அமர இலக்கியங்களாகத் திகழும் குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போல பாரதிதாசனும் சஞ்சிவி பர்வதத்தின் சாரல், புரட்சிக் கவி, வீரத்தாய் கடல் மேற் குமிழிகள் போன்ற இலக்கிய வளம் மிக்க குறுங்காவியங்களைப் படைத்துப் புகழ்பெற்றார்.

இரு கவிஞர்களின் படைப்புகளுமே எளிமையும் வலிமையும் வாய்ந்தவை. எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று செய்து தருவோன் தமிழ் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு ஆண்டுகளுக்கு நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும் என்பார் மகாகவி பாரதி.

பாரதி வழிவந்த பாரதிதாசனும் எளிய நடை ஒன்றாலேயேத் தமிழின் மேன்மையைத் தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை என்று அறுதியிட்டு உறுதிபடக் கூறுகிறார்.

கதை அம்சம்:

நாடகப் பாங்குடன் கதை சொல்லும் உத்தியில் சிறந்து விளங்குகிறது குயில் பாட்டு. எடுத்த எடுப்பிலேயே கதை நடக்கும் இடத்திற்கே கொண்டு செல்கின்றது. இது தானா அந்த மாந்தோப்பு என்று திகைக்கும் போதே குயிலின் மோகனப் பாட்டு நம் நெஞ்சைச் சுண்டியிழுக்கிறது.

குயிலின் காதல் கீதத்தில் நெஞ்சைப் பறிகொடுத்த கவிஞன் குயிலைச் சந்திக்கிறான். குயிலும் உயிர்க் காதல் கொண்டு நான்காம் நாள் வருமாறு கூறுகிறது. கவிஞன் கால்கள் அடுத்த நாள் தானாகவே சோலைக்கு இழுத்துவர அவன் காணும் காட்சி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

கவிஞனிடம் காதல் கனிமொழிகளை அள்ளி வீசி உள்ளம் கரைந்த அந்தச் சின்னக்குயில் ஒரு குரங்கினிடமும் முன்பு பேசிய அதே காதல் பேச்சுகளை உயிரைப் பிழியும் அதே பாடலை, அப்படியே அடுத்த நாள் மாட்டோடு, அதனுடனும் அதேபேச்சு, அதே பாட்டு. கவிஞனின் வாளுக்குக் காளைமாடும் தப்பியது. நான்காம் நாள் குயில் வரச்சொன்ன நாள். குயிலின் தாழ்ந்த செயலைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போதே அதன் உருவம் கண்ணுக் குத் தெரிய, கவிஞன் அதைப் பின் தொடர, மீண்டும் சோலைக்குள் சந்திப்பு நிகழ்கிறது. கவிஞன் குயிலுடன் ஆத்திரம் கொண்டு பேசுகிறான். குயிலோ வருத்தமுற்றுக் கண்ணீர் சிந்தத் தன் முற்பிறப்புக் கதையை உரைத்தது. கவிஞன் மனமுருகிக் குயிலைத் தீண்டவும் அழகு தவழும் பெண்ணாகிக் கவிஞனை அடைகிறது. இவ்வாறு கதை தொய்வில்லா

மல் சென்று நிறைவு பெறுகிறது. சஞ்சீவி பர்வதத்தின் சாரலின் தொடக்கம் அருமை யாக அமைந்து விடுகிறது. கதை நிகழும் இடத்துக்கே நம்மைக் கொண்டு சென்று விடுகிறது.

குப்பன் எனும் வேடக்குமரன் தன் காதலி வஞ்சிக்காகக் காத்திருக்கிறான். அவர் சஞ்சீவி பர்வதத்தில் உள்ள இருவகை மூலிகைகளைப் பறித்துத் தரும்படி கேட்கிறாள். ஒரு மூலிகை யைப் பறித்து வாயில் போட்டால் உலகத்தார் பேச்சைக் கேட்கலாம், மற்றொன்றைத் தின்றால் உலகத்துக் காட்சிகளை நேரில் காணலாம்.

குப்பன் அவளோடு கொஞ்சி விளையாட விரும்பி மூலிகையைப் பறித்து வருவதில் தாமதம் செய்கிறான். அவள் பொறுமை யிழந்துத் தானே பறிந்துவர முற்படுகிறாள். குப்பன் அவளை அழைத்துச் சென்று மூலிகையைப் பறித்துக் கொடுக்கிறான்.

முதலில் ஞாலத்துப் பேச்சறிய இருவரும் நாவிலிட்டுத் தின்றார்கள். உலகத்து மக்கள் பேசும் பேச்சினைத் தமிழ்மொழியில் கேட்டார்கள்.

இத்தாலி நாட்டுக்காரன் பேசுகிறான். அவன் உணவு விடுதியில் தன்னருகே அமர்ந் துள்ள கருப்பனைக் கண்டு வெறுத்துக் கூறு கிறான். பின் அமெரிக்கன் ஒருவனது பேச்சைக் கேட்கிறார்கள். அடுத்த ஓர் ஆங்கிலேயரின் பேச்சு. அவன் நம் நாட்டிலுள்ள ஒற்றுமை யின்மை தங்கட்கு எவ்வாறு சாதகமாக இருக்கிறது என்பதை விவரமாகத் தெரிவிக் கிறான். வஞ்சி மூலிகையைப் பறித்துக் கொடுத்த குப்பனுக்கு ஆசையுடன் முத்தம் கொடுக்க முனைகிறாள். அப்போது 'சஞ்சீவி பர்வதத்தைப் பேர்த்து வரவேண்டும் என்ற குரல் கேட்டுத் திடுகிட்டான் குப்பன். தனது கதி என்னாகுமோ என்று கலங்க, வஞ்சி சிரித்து இது கதா காலட்சேபம் செய்யும் பாகவதன் குரல் என்று கூறி மற்றொரு மூலிகையை வாயில் மெல்லவைத்து அந்தக் காட்சியைக் காட்டி விளக்குகிறாள். இரண்டாவது மூலிகையை முதலிலேயே பயன்படுத்தாமல் கதைத் தன்மை கெடாது தொட வேண்டிய இறுதியில் பயன்படுத்த வைப்பது நல்ல உத்தி.

வானொலி அதிகம் பரவாத காலத்தில் வானொலி போலவும் தொலைக்காட்சி தோன்றாத காலத்தில் இங்கிருந்தே காட்சி களை காண முடியும் எனக் கற்பனை செய்திருப்பதும் கவிஞரின் சிந்தனைத் திறனைக் காட்டுகிறது.

கற்பனை

காணும் இடமெங்கும் கற்பனை அழகு கொஞ்சி விளையாடும் அற்புதக் காவியங்கள் குயில்பாட்டும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்

'காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே
நீலக்கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாய்ச்சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினால் வேதப் பொருள்படி

என்று தொடங்கும் போதே, கற்பனை வாசலைத் திறந்து வருகிறது.

குயில் பாட்டுக் கவிஞர் தான் இக் காவியத்தை எழுத நேர்ந்த அனுபவத்தை

'முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேன் யான்.

எனக் கற்பனை நயம் மின்னி மிளிரக் கூறுகிறார். குயிலின் இன்னிசைத் தீம்பாடல் எப்படி இருந்தது?

'இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்தது போல்
மின்னற் சுவைதான், மெலிதாய் மிகவினிதாய்
வந்து பரவுதல் போல்' இருந்ததாம்.

குயிலின் தோற்றமோ! வானத்து மோகினியாள் இந்த உரு எய்தித்தன் தோற்றம்

விளக்குதல் போல் இருந்தது. என்கிறார். கற்பனை ஆற்றலில் சிறந்து விளங்கும் கவிஞர் அவையடக்கத்தோடு, 'கற்பனையும் வர்ணனையும் காட்டிக் கதை வளர்க்கும் விற்பனர் தம் செய்கை விதமும் தெரிகிலன் யான், என்று கூறினாலும், அவரே.

'காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன்'

என்றார்.

வான் வெளியெங்கும் பரவி நிற்கும் சூரியனின் பொன் வண்ணக்கதிர்களின் அழகே ஒரு விந்தை. அதை நிதமும் ஓதிப் புகழ்வோர் கூட அதற்கொரு உவமைகூற இயலுமோ? என்று வினா எழுப்பித் தன்னால் மட்டுமே அதனைக் கூற இயலும் என்று சாதித்துக் காட்டுவதே ஒரு விந்தைதான்.

தங்கத்தை நன்றாக உருக்கி, அதன் சுழலைக் குறைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பப்பட்டுள்ளதே அதுதான் இங்கிதமோ? என்பார். தங்கமுருக்கிச் சுழல் குறைத்துக் தேனாக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?

அந்த விந்தை செய்யும் சோதி

புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கும் வல்லமை மிக்கது

குயில், குயிலி எனும் அழகுப் பெண்ணாய் மாறும்போது இவளது கொள்ளை அழகை வர்ணிக்கும் விதமோ கற்பனைக்கு இலக்கணமாய் அமைகிறது.

..... கவிதைக் கனி பிழிந்த
சாற்றினிலே பண் கூதெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனோடே இன்னமுதைத்தான் கலந்து
காதல் வெயிலில் காயவைத்த கட்டியினால்
மாதவனின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.

என்று கற்பனை அழகின் உச்சிக்கே சென்று விடுகிறார் கவிஞர்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் ஓர் அற்புதமான கற்பனைக் காவியம். இதிலும் கற்பனையும் அற்புதமும் இழைந்து குழைந்து நிகழ்ச்சிக்குச் சோலையூட்டுகின்றது.

வரக்கண்ட வஞ்சியை வாரியணைக்கச் சென்ற குப்பனை, தொடாதீர்கள் என்றாள் அவ்வஞ்சி,

'குன்றுபோல் நின்றபடி குப்பன் உரைக்கின்றான்
'கண்ணுக்குள் பாவையே! கட்டமுதை நான் பசியே
முன்னப்போம் போது நீர் ஓர் தட்டுத் தட்டிவிட்டாய்
'தாழச்சுடு வெய்யில் தாளாமல் நான் குளிர்ந்த
நீழலைத்தாவும்போது நில் என்று நீ தடுத்தாய்!
நேற்றுத்தான் இன்பக்கரை காட்டினாய்! இன்று
சேற்றிலே தள்ளிவிட்டாய்

இந்தக் காதல் ரசம் ததும்பும் அமுத வரிகளில் கற்பனை ஆட்சி புரிவதை எளிதில் உணரலாம்.

காதல்

காதலின் மேன்மையை, அதன் அழகை, அதன் அளப்பரிய சுவையைத் தங்கள் கவிதைக் காவியங்களில் அள்ளி அள்ளிக் கொடுக்கச் சளைக்காதவர்கள் புதுமைக் கவிஞன் பாரதியும் புரட்சிக்கவிஞன் பாரதிதாசனும்.

காதல் என்பது இருமனங்களை இணைய வைப்பது. ஈருடல் ஓருயிராய்ப் பரிணமிப்பது; இரு ஆன்மாக்கள் இரண்டறக் கரைவது.

குயில் பாடுகிறது.

'காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்,

அதுமட்டுமா?

'காதலை வேண்டிக் கரைகின்றேன்
இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்,
'காதலோ காதல் காதல் கிடைத்திலதேல்
சாதலோ சாதல்'

என்றும் பாடுகின்றது.

மேலும் காதல் என்பது ஒளி, இன்பம், நாதம், தாளம், பண், புகழ், உறுதி, கடல், குழல், என்று பல்வேறு வகையாகச் சித்திரிக்கப்படுகின்றது.

பொதுவாக மானுட வாழ்வின் ஊற்றுக் கண்ணாக ஆதார சுருதியாக விளங்குவது காதல்தான் என்பது தெளிவாகிறது. அது வாழ்வின் பிரிக்க இயலாத சிறப்பினை யுடையது காதல். அவ்வாறு பிரிக்க நேரின் மனித வாழ்வே துன்பமாய், சேதமாய், கூள மாய், மண்ணாய், இகழ்ச்சியாய், இறுதியாய், விழவாய்ப் பயனற்றுப் போய்விடும் என் பதைக் குயில் பாட்டு உணர்த்துகிறது.

'பாரதியின் குயில்பாட்டு ஒரு சோக மயமான அனுபவம், பேருணர்ச்சி, சோகம் கரைக்கட்டி வலுவும் வடிவும் தர, இன்ப வெள்ளம் பெருக்காகப் பாய்ந்தோடும் ஒரு மகத்தான இயக்கம். அது காதலா, சாதலா என்ற கேள்வியின் சூழலில் சிக்கித் தத்தளித்து இறுதியிலே காதல் வெல்லும் ஒரு காட்சியின் சித்திரம் அது ஏன்கிறார். ஆர்.கே. கண்ணன் அவர்கள் தனது புதுநெறி காட்டிய பாரதி என்ற நூலில்.

குப்பன் தன் காதலி வஞ்சியை வாரியணைக்கச் சுரக்கின்ற காதலொடு செல்கின்றான், மனம் ஒன்று படுவதுடன் தேக சுகமும் காதலின் வளர்ச்சிக்கு உரமூட்டும் அது சிற்றின்பம் அல்ல; அது தேவசுகம், அமுதம் பெற்ற வானோர்க்கேனும் மாதரின்பம் போற்பிறிதோர் இன்பம் உண்டோ? என்று பாரதி கூறுவதற்கேற்ப உண்ணுகின்ற கட்டமுதாய், குளிர்ந்த நிழலாய் விளங்குவது பட்டறிந்த தேகசுகம்.

'தொட்டறிந்த கையைத் தொடாதே என்றாய்! நேற்றுப் பட்டறிந்த தேகசுகம் விட்டிருக்கக் கூடுவதோ?

இனிக் கவிஞர் தன் கூற்றாய்க் கூறும்போது

'கண்ணின் கடைப் பார்வைக் காதலியர் காட்டி விட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்

எனக் காதலின் வலிமையை விளக்குவார்.

இரு கவிஞர்களும் தங்கள் காவியங் களில் மானுடக் காதலின் மேன்மையை வலியுறுத்திச் சாதனை புரிகின்றனர்.

சமூகப் பின்னணி

குயில்பாட்டு நிகழும் இடம் தோப்பு, மலை, காடு, முதலிய பகுதிகள், தலைவி குயிலி வேடர் தலைவன் வீரமுருகனின் புதல்வி. அடுத்த பிறவியிலும் அவள் விந்த கிரிச் சாரலில் ஒரு வேடனுக்கு மகளாகப் பிறக்கிறாள். அவளை மணக்க விரும்பியவன் அவளது மாமன், வேடன். பெற்றோர்களால் நிச்சயக்கப்பட்டவன் தேன்மலையைச் சார்ந்த வேடர் தலைவன் மொட்டைப் புலியன் மகன் நெட்டைக் குரங்கன் என்பவன்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலும் குயில் பாட்டில் போலவே வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு. காட்டு மறவர் களும் காதல் மணம் செய்வதுண்டு. சஞ்சீவி பர்வதத்துச் சாரலின் நாயகியாகிய வஞ்சியும் ஒரு வேடர் குலப் பெண்தான். அவளது காதலன் குப்பனும் அதே குலத்தைச் சார்ந்தவனே.

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட, அடக்கப் பட்ட பழங்குடி இனத்தவர்களைக் கதைத் தலைவர்களாகத் தேர்வு செய்திருப்பது கவனத் திற்குரியது. தன்னேரில்லாத் தலைவன், தலைவி என்ற காப்பிய மரபை மீறிப் புரட்சி செய்திருக் கின்றனர், பாரதியும் பாரதிதாசனும்.

ஒளியே இறை!

-புலவர் ஆதி. நெடுஞ்செழியன்-

வழிபாட்டு முறைகளில் காலத்திற்குக் காலம் மனித மனம் பலவித மாறுதல்களைக் கண்டு வந்திருக்கிறது. கல், செம்பு, இரும்பு, சுதை, மரம், என்ற எப்பொருளிலும் உருவங்களைச் செய்தாலும் அதில் ஒட்டல், வெட்டல், திரித்தல் என்ற நடப்புகளால், ஆண்டுகள் பலவற்றின் முன்பு கண்ட உருவமா இது? என்னும் ஐயப்பாட்டினூடே அளவு கடந்த பக்தியில் அடையாளம் கூறிச் சரியாகப் புலப்படாமல் வழிபாடு மட்டும் தொடர்கிறது.

இவ்வுருவங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு கட்டப்பட்டக் கதைகள், கூறப்பட்ட விரிவுரைகள் ஆகிய இவைகளினால் ஓர் இணைப்புத் தன்மையும் சலிப்பு போன்றவையும் உருவாகி உண்மை விடுபட்டதாக மனம் கருதியது.

நன்கு கவனித்தால் அனைவருக்கும் பொதுவான ஒளி வழிபாட்டில் மட்டும் மாறுதல்கள் ஏதும் இன்றி இன்றளவும், விரிவு படுத்தப்பட்ட ஒரு நிலை, சிறு வேறுபாட்டோடு மட்டும் விளங்கி வருவதைக் காணமுடிகிறது. ஏனெனில்

'நெருப்பு மட்டுமே உலகில் அழுக்கு இல்லாதது'

மற்ற வழிபாடுகள், மதமாற்றங்கள், மதக்காழ்ப்புகள், சலசலப்புகள் போன்றவற்றால் மனத்தின் ஆதார சுருதியாகிய 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதே மாறி விடுமோ என்று கருத வேண்டிய சூழலில் தான்

'ஓடும் குருதியில் சிவப்பும்
வழியும் வியர்வையில் உவர்ப்பும்'

உலகப் பொதுவாம் என்னும் கருத்தை வலியுறுத்தத் தொடங்கினர்.

அதன்விளைவாகவே உலகெங்கும் உருவாக்கப்பட்ட அமைதி ஆலயங்களில் ஒளிவழிபாடு தனிவழிபாடாக வலியுறுத்தப்பட்டது.

''அணுவிணுக்கணுவாய் மதித்திடாப் பேரொளி அனைத்தும்'' எனும் உமறுப்புலவர் கருத்துகள் போன்றவை மதிப்பிடப்பட்டன.

''அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ''

என்று கவி பாரதி கூறியது போல் உலகை அழிக்க ஒரு பொறி போதும் என்பது உணரப்பட்டது- உணர்த்தப்பட்டதன் அடிப்படையிலேயே ஆன்மீகம் தன் பணிகளைத் தொடங்கியது.

அறிவின் கூர்மையைப் பயன்படுத்திப் புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் என்ற கூறுபாடுகளைக் கொண்ட அணுவின் தன்மையை அறிந்தவர்கள் அரிய உண்மைகள் பலவற்றை அறிவித்ததற்கு நாம் ஒளி உலகின் சார்பில் நன்றியைக் கூற வேண்டும்.

சமயம் சார்ந்த ஞானிகளின் அடிப்படைத் தன்மை, ஒளிவழிபாட்டில் இருந்தமையாகிய எளிமைத் தன்மையைக் கருதலாமே!

''பெரிய சுடர்களை உண்டாக்கினவனைத்
துதியுங்கள்''

(136 - 7 - புதிய ஏற்பாடு) என்கிறது விவிலியம்.

''அன்தஷம் சுன் அன்தபதுருன்
அன்த நூறுன் ஃபவ்க்க நூறு
அன்த இக்சீருன்வ ஃகாலி
அன்த மிஸ்லா ஹுஸ்ஸுதூர்''

(கதிரவன் போல் தோன்றுபவன்- நான் காம்பிறைச் சந்திரன் போல் தோன்றுபவன்- மிக்க ஒளியுடைய மாடத்தின் விளக்கினைப் போல் விளங்குபவன் ஆண்டவன்) என்பது நபிமொழிகளின் நயம்பட்ட உரை.

"ஒளி ஒன்றே அண்ட பகிரண்டம் எல்லாம்"
என்பது வள்ளலார் வாக்கு.

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறுபோற்றுதும்
திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"

என்பது சிலம்பு வரிகள். எண்ணிறந்த பாட்டுக்களால் ஒளிவழிபாட்டின் உண்மைத் தத்துவங்கள் புலப்படவே செய்கின்றன. நமது நாடு ஆன்றோரும் சான்றோரும் நிறைந்தது. சமரச சன்மார்க்கம் எனும் மனப்பக்குவம் நிலவிய நாடு.

தூய்மையே சைவமாகும் எனும் கருத்தைப் "பஞ்சபூதங்கள்" சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டிடத்தும் சிவபெருமானது விளக்கத்தைக் காண்பதே சைவம்" என்கிறது புத்த காப்பியமாகிய மணிமேகலை.

"எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டார்"
என்பது திருவுந்தியார் வாக்கு. இவ்வாறு இறைவனை ஒளியாய் வணங்கும் ஒற்றுமைப் போக்கே உண்மைப் போக்காகும். ஒளி எனில் உள்ளத் தெளிவு எனினுமாம்.

"ஒளியும் மலர்ச்சியும் மயக்கமில் இனிமையும்
நிலைத்த குணமும் நீண்ட உறுதியும்"

என்பது அகத்துறைப் பாடல் வரிகள். கற்பு நெறியைக்கூட ஒளியால் நிரூபித்த உண்மையை

"நெருப்பின் நாக்கு நிரூபித்த கற்பு"

என்பதனால் இன்றும் பேசப்படுகிறது. விளக்கின் வழிபாடு நமக்குப் புதிதன்று. இது சங்ககால வழிபாடேயாம்.

"தையல் கொண்டாடும் விளக்கீடு" என்பதாலும்

"கவிகொள் ஆயம் மலி தொகுப்பு எடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி,

என்பதாலும் சங்கப் பாடல் வரிகளால் ஒளி வழிபாடு உயர்ந்த வழிபாடாக நம்மிடையே இருந்திருப்பது தெளிவாகின்றது.

வாழ்க ஒளி வழிபாடு!
வளர்க மனித நேயம்!!

முயற்சி வெல்க!

-பாவலர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்-

காவல்துறை அதிகாரி
போல்தோற்றம் கொண்டாலும்,
தமிழ் மீதுள்ள

ஆவலினால் அனைவரிட
மும் வா.மு. சே. சின்னக்
குழந்தை போலத்

தாவிவந்து வெள்ளைமனத்
தொடும்சிரித்துப் பேசிமகிழ்ந்
திடுவார்; என்றும்

காவலிருப் பார்நமது
கண்போலும் தமிழ்த்தாய்க்கு
சொல்வ துண்மை!

அண்ணாவின் வாரிசாய்நம்
அனைவரையும் காக்கின்ற
கலைஞர் தம்மின்

கண்ணான தம்பிகளில்
கரும்பான கவிதைசொலக்
கற்ற இந்தப்

பண்பாளர் குண்டுசட்டிக்
குள்ளேம்ட் டும்அல்ல;
இந்தப் பாரில்

ஒண்டமிழ்த்தாய் பெற்றமக்கள்
உள்ளநாடெல் லாம்சென்று
தமிழ்வ ளர்த்தார்!

தாய்லாந்தில் பன்னாட்டுத்
தமிழுறவு மாமன்ற
மாநா டொன்றைப்

போய் நடத்த விருக்கின்ற
பருமீசை அன்பர்இவர்
முயற்சி வெல்க!

ஆய்வாளர் எல்லாரும்
அணிவகுத்துத் தமிழின்புகழ்
காக்கச் செல்க!

பாய்போடா விட்டாலும்
படுத்துறங்கிச் சுகம்காண்போர்
விலகிக் கொள்க!

அண்ணாவின் தமிழ்நடை

புலவர் தி. நா. அறிவுஒளி

“இதுவரை தமிழ்நாட்டில் என் எழுத்து நடையைப் பற்றிப் பெருமையோடு பேசிக் கொள்கிறார்கள் என்றுகேள்விப்பட்டேன். இனி வருங்காலத்தில் ‘அண்ணாத்துரை நடை’ அண்ணாத்துரை தமிழ் என்று வரப்போகிறது. எதிர்காலத்தில் தமிழ்மொழி அழிந்து சிதைந்து போகுமோ என்று சஞ்சலமடைந்து வந்தேன். அதைக் காப்பாற்ற இதோ அண்ணாத்துரை வந்து விட்டார்! இனி நான் அமைதியோடு சாவேன்!''

(மக்கள் ஆரவாரம் ஈரோட்டுத் தீர்மானம் விளக்கப் பேச்சு - சென்னைக் கூட்டத்தில் திரு.வி.க.வின் பேச்சு)

பேரறிஞர் அண்ணாவின் தமிழ்நடையின் சிறப்பைக் குறித்து, தமிழ்ப்பெரியார் திரு.வி.க. அவர்களின் மனந்திறந்த பாராட்டே மேற்கண்ட உரை.

தமிழின் உரைநடை வரலாற்றில் பேரறிஞர் அண்ணாவுக்கு ஓர் ஒப்பற்ற சிறப்பிடம் உண்டு. இதில் இரண்டாம் கருத்துக்கே இடம் இல்லை. ஆயினும், ஓர் அறிஞரை இன்னோர் அறிஞர் அடையாளங் காட்டும் சிறப்பு, பாராட்டுஞ் சிறப்பு வரலாற்று மாண்புடையதன்றே?

அண்ணாவின் அழகுத்தமிழ் நடையில் கற்பனை வளம் கொஞ்சும்! காப்பியப் புலவருக்குரிய உணர்வுப் புனைவுத் திறம் விஞ்சும்! கண்ணால் காட்சியை நேரிற் காண்பது போன்ற புலனுணர்வைப் படிக்கும் போதே ஊட்டும் எழிலார்ந்த நடை அண்ணாவின் வீறார்ந்த நடை! ‘பிடிசாம்பல்’ என்னும் வரலாற்றுக் கதையில் சிறப்பான வரலாற்று மாந்தனான மாமல்லரின் மனப் பான்மையைத் தனக்கே உரிய தனிநடையில் அண்ணா எப்படி விளக்குகிறார் பாருங்கள்.

''கொஞ்சும் போதே கிளி கடித்து விடுகிறதே கோதையர் இதழை! மன்னனாம் எனக்குள்ள புகழை மிஞ்சிடும் புகழ் பெற்ற மாவீரன் பரஞ்சோதியின் கூர்வாள் புகழின் சின்னம் இன்று. நாளை அதுவே புரட்சிக் கருவியாக மாறினால்...

பொறாமையா எனக்கு? இல்லை! இருக்காது! அப்படியும் திட்டாகச் சொல்வதற் கில்லையேர!

எனக்கு இலேசாகக் கோபம்! பொறாமை கொஞ்சம் உண்டாயிற்று. மறைப்பானேன். கொஞ்சம் அச்சம் கூடத்தான். அருவருப்பும் தட்டிற்று.

மன்னனும் மனிதன்தானே! மனம் நிம்மதியாகவா இருக்க முடியும்? மன்னன், மக்களின் படைத் தலைவனிடம் அடைக்கலம் புகுவது கண்டு?''

(பிடிசாம்பல் வரலாற்றுக்கதை பேரறிஞர் அண்ணா)

மாமன்னன் மாமல்லனுக்குப் பொறாமை உண்டெனக் கண்ட அண்ணாவுக்குப் பொறாமை உண்டாகுமா? இல்லை என்பதை அவர் வாழ்வு நடை காட்டுகிறது.

அமெரிக்கா ஏல் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் வகுப்பு நடத்தவும் அப்பல்கலைக் கழகச் சிறப்பினை ஏற்கவும் சென்ற அண்ணா அவர்கள் பேராசிரிர் இலக்குவனாரின் தொல்காப்பிய ஆங்கில ஆய்வு, மொழி பெயர்ப்பு நூல்களையும், கலைஞர் மு.கருணா நிதியின் சிலப்பதிகார நாடக ஆங்கில மொழி பெயர்ப்பையும் எடுத்துச் சென்று அயல் நாட்டினர்க்கு அறிமும் செய்வித்தார்!

தாமே எழுத்தாளராக இருந்த அண்ணா மற்ற எழுத்தாளர் படைப்புகளை வெளியுலகத்

தில் அறிமுகம் செய்வித்தாரென்றால் அழுக்காறுடையவரால் அது நடக்குமா?

''சிந்தித்தால் உரையாற்றலாம். சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும்தான் கவிதை இயற்ற முடியும்''

''தாம் கண்டு உள்ளம் நெகிழ்ந்தவற்றை மற்றவர்கள் கண்டு நெகிழும் வண்ணம் அள்ளித் தருவதுதான் கவிதை'' எனக் கவிதைக்கு இலக்கணம் வகுத்த இடத்தில் 'நூற்பா நடை'யினைத் தழுவியுள்ளார் அண்ணா.

கலைஞரின் அன்னையாரின் மறைவுக்குப் பின் இரங்கல் உரையாற்றினார் அண்ணா. அப்போது,

''அன்னையை இழந்து மட்டுமல்ல; நடமாடும் அன்பை இழந்து தவிக்கிறார்கள்'' என்றார். 'நடமாடும் அன்பு' என்று அன்னையாரைக் குறித்தது தமிழுக்குப் புது உணர்வூட்டும் சொல்லட்சி நடை!

3.2.1963 திராவிடநாடு ஆசிரியவுரையில் மேற்குறித்த அரங்கில் கட்டுரையில்''குயில் பறந்து விட்டது நாதம் நிலைத்திருக்கிறது. மலர் உதிர்ந்து விட்டது; மணம் நிரம்பியிருக்கிறது. அஞ்சுகம் மறைந்து விட்டார்கள்; அவர்கள் பற்றிய நினைவு நிலைத்திருக்கிறது. என எழுதினார். ஓர் இரங்கப்பா என்று சொல்லும் வண்ணம் அண்ணாவின் அழகுநடை அரும்பியிருப்பதைக் கற்போர் உணரலாம். அண்ணாவுக்குள் ஒரு பாவலர் இருந்திருக்கிறார்.அதனால்தான் உரைநடையையே பாட்டு நடையில் அண்ணா படைத்தார். கணக்காயர் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் உரைநடையில் செய்யுள் நடையழகாற்றலை நுகர்ந்தோம். அதற்கு அடுத்து அண்ணாவின் நடையில் அந்த அழகாற்றலைக் கண்டோம்.

''வல்லதிகாரக் கொடுமையைப் புரட்சியால் மாற்ற முடியுமா? முடியாது. வல்லாட்சிக் கொடுமைச் சுமையை ஒருவரிடமிருந்து இன்னொரு கொடியவரிடம் புரட்சி மாற்றுகிறது. அவ்வளவுதான் என்று பேரறிஞர் பெர்னார்டு சா கூறினார். அது உண்மை என்பதை நாம் உணர்கிறோம். வெள்ளையன் ஆட்சி கொடிது எனக் கூறிப் போராட்டம் செய்தனர். வட நாட்டுக் கொள்ளையன் ஆட்சி என்ன அன்பும் அருளும் கொஞ்சிக் குலவும் ஆட்சியா? கொடுங்கோன்மை இங்கிலாந்துக்காரனிடமிருந்து தில்லிக்காரனுக்கு மாறியிருக்கிறது. மக்களின் துன்பமோ அன்றும் இன்றும் ஒரே வகையில்தான் இருக்கிறது. ஆங்கிலத்தைத் திணித்தான் ஆங்கிலேயன் அடிமை நாட்டில். இந்திக்காரன், இந்தியைத் திணிக்கறான் உரிமை நாட்டில்! யாருக்கு விடுதலை வாய்த்திருக்கிறது? ஆங்கிலப் படை வடஇந்தியர் படையாக மாறியுள்ளது! ஆங்கிலர் அடிமையாயிருந்த காவல்துறை, வடநாட்டாட்சியினர் அடிமையாயிருந்து கொடுமை செய்கிறது. மக்கள் படும்பாடு மாறவில்லை.

அண்ணா மொழித்திணிப்பை, மறைமுகமாக மொழி அடிமைப்படுத்துவதைக் கடுமையாக எதிர்த்தார். தந்தை பெரியாரின் வழியில் அணுவும் மாறாமல் எதிர்த்தார்.

நாட்டு ஒற்றுமை என்றுபேசிக்கொண்டு மொழித் திணிப்புச் செய்வது கொடுங்கோன்மை என்று அஞ்சாமல் அயராமல் அண்ணா தமிழுக்கு அரணாகி நின்றார்.

''நாட்டிலே ஒற்றுமை வேணடும். இந்த குறிக்கோள் அனைவரும் ஏற்கத்தக்கது; அதன் வெற்றிக்காக அரும் பணியாற்றுவது மாணவர் கடன். 'நாட்டின் ஒற்றுமைக்காக உன் மொழி, உன்மரபு அழிந்திடவும் ஒருப்பட வேண்டும். பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்! இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது'' என்று அழுத்தந் திருத்தமாக எழுதினார் அண்ணா. இஃது அழுத்தமான நடையில் திட்ட வட்டமாக அமைந்துள்ளது.

1969, பிப்ருவரி 21-ஆம் நாள் இரவு 12.22 மணியளவில் அண்ணா மறைந்தார்.

அதற்கு முன் மருத்துவர்கள் தடுத்தும் 'தமிழ்நாடு' பெயர்சூட்டு விழாவில் கலந்து உரையாற்றினார். அப்போது----

''இத்தகு விழாவில் கலந்து கொள்ளாத உடம்பில் உயிர் இருந்தென்ன? போயென்ன? என்று சொல்லி விட்டுத்தான் வந்திருந்தேன்'' எனப் பேசினார்.

திருக்குறள் யாப்பின் திண்மை இவ்வுரை நடையில் பொலிகிறது.

இருக்கும் நிலைமாற இரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல், பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்

(பாவேந்தரின் தமிழர்களின் எழுதுகோல்)

என்னும் புரட்சிப் பாவேந்தரின் பொன் மொழிக்கு எடுத்துக் காட்டாக அண்ணாவின் எழுத்தோவியங்கள் இலங்கின.

''அடிமைத்தனம் ஓர் கூட்டுச்சரக்கு அடிமைத்தனம் ஏற்படுவதற்கான கரணியங் களை ஆராய்ந்தாலும் அடிமைத்தனம் என்பதும் ஒரு கூட்டுச் சரக்கு என்பது தெரியும்.''

''விதி ஒரு நோய். நெடுநாளாக மனித சமுதாயத்தில் இருந்து வருவது. அதன் பிடியும், வேகமும் குறைக்கப்படுவதற்கு மற்ற நாட்டினர் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் அளவையும், திறத்தையும் நாம் விதியெனும் நோயைக் குறைக்க அல்ல வளர்த்திட வேலை செய்து கொண்டிருந்தோம். அதனாலேதான் விதிக்கு அடிமைப் பட்டிருக்கும் நிலை இங்கு மிகமிகக் கவலை தரும் அளவுக்கு இருக்கிறது.

கண்முன் நடைபெறும் பல நிகழ்ச்சி களுக்கும் காரணம் கண்டுபிடிக்கத் தெரியாத பருவம் குழந்தைகளுக்கு. ஆனால், காரணம் கண்டுபிடிக்கும் திறமை ஏற்படாவிட்டாலும், சந்திக்காமலிருப்பதில்லை.

அன்பையும் அனைத்தையும் ஒன்றாகக் கலந்து வானத்திலுள்ள நிலவையும் காட்டிக் குழந்தைகளுக்குத் தாய் சோறிடும் போது, குழந்தையும் நிலவைப் பார்க்கிறது. ஏதேதோ பண்ணத்தான் சொல்கிறது. ஏதேதோ கேள்வி களைக் கேட்கிறது.

யாரம்மா இவ்வளவு அழகான விளக்கை அவ்வளவு உயரத்தில் ஏற்றி வைத்திருக் கிறார்கள். அந்த ஒரு விளக்கைச் சுற்றி ஏனம்மாஇவ்வளவு சிறு சிறு விளக்குகள் உள்ளன? என்று கேட்கிறது.

அம்மா, அந்தச் சந்திரனைப் பிடித்துத் தா? நான் பந்தாட வேண்டும் என்று கேட்கிறது இன்னொரு குழந்தை. நிலவையும் பார்த்து விட்டுத் தன் அன்னையின் திருமுகத்தையும் பார்த்து, இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று யோசிக்கிறது இன்னொரு குழந்தை.

குழந்தை உள்ளத்தில் குமுறி எழும் எண் ணங்கள் வேடிக்கையானவை. ஆனால் முடிவு களல்ல. ஆசை அலைகள் அவை மனித சமுதாயத்தில் குழந்தைப் பருவத்திலேயும் இதே போலத்தான் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இயற்கைக் காட்சிக்கும் ஏதோ ஒரு வகையான காரணம் தேடி அலைந்து பலப்பல விசித்திர மான காரணங்களை விளக்கங்களை மனித சமுதாயம் எண்ணற்று பேசி நம்பலாயிற்று.

மனித சமுதாயத்தில் பாலப்பருவத்தில் கிடைத்த பல உண்மைகள், இன்று உண்மைகள் என்று உலகினரால் ஒப்புக் கொள்ளப்படுவ தில்லை. பர்மாவை சப்பானியர் பிடித்தபோது அவர்கள் வெளியிட்ட நோட்டுகள் எப்படி, இன்று பர்மாவில் செல்லுபடியாகாதோ அது போலச் செல்லுபடியாகாத நோட்டுகளைச் சேகரித்து வைத்துச் சிறுபிள்ளைகள் விளையாடி னால் கேடுஅதிகம் இல்லை; அந்த நோட்டுகள் செல்லுபடியாக வேண்டும் என்று வாதாடினால் நாட்டுக்கு எவ்வளவு பெரியதொல்லை. அதுபோல மனித சமுதாயத்தின் சிறு பிள்ளைப் பருவ எண்ணங்களை ஏற்பாடுகளை தத்துவங் களை விளக்கங்களை இன்னும் நம்பித்தான் தீரவேண்டும். அவைகளுக்குக் கட்டுப்பட்டுத் தான் ஆக வேண்டும் என்று வாதிடுவது எவ்வளவு பெரிய கேடுஎன்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர்பார்ப்பதற்கு நேர் மாறான நிகழ்ச்சிகளைக் காணும் போது, சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன்

துவக்கப்பட்ட காரியம், நல்ல முயற்சிக்குப் பிறகும் முறிகிற போது, போட்ட கணக்குப் பொய்யாகும் போது, விதைத்து முளைக்காத போது, நண்பர்களிடமிருந்து பகைகிளம்பும் போது, ஓவியம் தீட்டுகையில் வண்ணக் கலயம் உடையும்போது, வீணை மீட்டும் போது நரம்பு அறுந்து, நரம்பு வேகமாகக் கண்ணில் பாயும் போது, இவை போன்ற திகைப்பூட்டும் சம்பவங்கள் மனதைக் குழப்பும் நிகழ்ச்சிகள் நேரிடும் போது மனம் ஒடியுமோ என்று மருளும்போது ஏதேனும் ஓர்வகை ஆறுதல் தேவைப்படுகிறது. அப்போது விதியென்னும் தத்துவம் வெற்றிச் சிரிப்புடன் மக்கள் உள்ளத்திலே புகுந்து கொள்கிறது. குடிபுகுந்த பிறகு விதிதான் எசமானன். அந்த எண்ணத்துக்கு இடமளித்தவன் அதற்கு அடிமை. அடிமையை ஆட்டிப்படைக்கிறது விதி. பிறகு தெய்வீக முலாம் பூசிவிட்டனர் விதியென்ற தத்துவத்திற்கு. ஆகவேதான் அதனை உதறித் தள்ள நெஞ்சுரம் பலருக்கு வருவதில்லை (அண்ணாவின், 'விதிக்கு அடிமைத்தனம்')

பகுத்தறிவுக்கு வலிமை சேர்க்கும் இக் கருத்துக் களஞ்சியத்தின் நடையும், அடுக்கிச் செல்லும் ஆற்றலும் தனியழகாற்றலுடையது தான்.

''உயர்ந்த சாதிக்காரர், கொழுத்த பணக்காரர், தேர்ந்த தந்திரக்காரர், மிகுந்த வடிவுள்ளவர் என்று எந்தக் காரணத்தைக் கொண்டாகிலும் ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வழி அமைந்து விடுமானால் அங்கு ஏட்டிலே எவ்வளவுதான் சிறந்த முறையில் சுதந்திரத்தின் கோட்பாடுகள் சாசனம் தீட்டப்பட்டிருப்பினும் உண்மையான சுதந்திரம் மலராது, நிலைக்காது.

''ஒருசிலர் உயர்ந்த சாதியினர் என்று கூறப்பட்டு, மக்களால் நம்பப்பட்டு, அந்த நம்பிக்கை முறியாதிருக்க ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருமானால், பிறகு அவர்கள் மற்ற மக்களைத் தமது இட்டம் போல் ஆட்டிப் படைக்க முடியும். செல்வத்தால் கிடைக்கும் சக்தியைக் கொண்டு சுதந்திரத்தைச் சூறையாடிவிட முடிகிறது. இவரை எதிர்த்து நாம் என்ன செய்ய முடியும், அவர் நம்மைப் பணத்தாலேயே அடித்துக் கொன்றும் விடுவார் என்ற அச்சம் பிடித்தாட்டும்போது, சுதந்திரமாகச் சிந்திக்கவோ, நடந்து கொள்ளவோ எப்படிச் சாத்தியமாகும்?

எனவே, மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக் கூடிய வளர்க்கக் கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகள்.

''பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், மதச்சுதந்திரம் ஏட்டில் இருக்குமளவுக்கு நடைமுறைக்கு வருவதில்லை.

சொல்லுகிறபடி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளர்க்கும், சொன்னபடி செய்யக் காணோம்? ஏன்? என்று கேட்கும் விழிப்புணர்ச்சி மக்களுக்கும் ஏற்பட வேண்டும். இந்த ஆளவந்தோர்களைப் போல மக்களைச் சீர்கேடான முறையிலே நாங்கள் நடத்த மாட்டோம்; சுதந்திரத்தைக் பறிக்க மாட்டோம்; எம்மை ஆட்சியாளராக்கினால்--- என்று கூறி, பொது மக்களின் ஆதரவைத் திரட்ட மற்றோர் கட்சி இருக்கிறதென்றால்தான் ஆள்பவர்கள் மக்களின் சுதந்திரத்தை மதித்து நடக்க முன்வருவார்கள்.

(அண்ணா - சொல்வதெல்லாம் செய்தல் சுதந்திரம்)

அண்ணாவின் எழுத்தோவியம் பழமொழிகள் போல் நிலைத்திருக்கும் பொன்மொழிகளாக மிகப்பல உள்ளன. அவற்றைத் தொகுத்தால், அதுவே ஒரு தனி நூலாகிவிடும்.

சவுக்கடி ஓயவில்லை சவுக்காலடிப்பவன் குதிரைமீது! சவுக்கடி படுபவன் தரையில்!

பார்க்கிறார்கள் பலர்; பதறுகிறார்கள், ஆனால் வாய்திறந்து ஒரு வார்த்தை! ஐயோ! பாவம்! விட்டு விடுங்கள் என்று கூறுவில்லை. ஏன்? அடிப்பவன் எசமானன்? வெள்ளை இனம்! துடிப்பவன் அடிமை! நீக்ரோ. பார்ப்

பவர்களுக்கும் அடிமைகள், நீக்ரோக்கள்; ஐயோ! பாவம்! என்று சொன்னாலோ, போதும் நிறுத்துங்கள் என்று கூறினாலோ, அதே சவுக்கடி விழும் இவர்களுக்கு; இன்னும் வேகமாக; அடி தாளமாட்டாமல் ஓடினாலோ, வேட்டைநாய்களை அவிழ்த்து விடுவார் எசமானர்!!! எனவே அவர்கள் பார்க்கிறார்கள், தங்கள் இனத்தவன் ஒருவன், தள்ளாடும் வயதினன் சவுக்கடி படுவதை! எசமானன் அடிப்பதுடன் விடவில்லை. குப்புறக் கீழே விழுந்தவன் மீது குதிரையை ஏற்றுகிறான்! குற்றுயிராகிறான் அடிமை! போகம் தீருகிறது எசமானனுக்கு. மாளிகை செல்கிறான்! இரண்டு நாட்களில் அந்த கருப்பு அடிமை இறந்து போகிறான் மற்ற கடமைகள் அவனை அடக்கம் செய்கிறார்கள். பிரார்த்தனை செய்யப் படுகிறது! சட்டம்? அடிமையை என்ன செய்ய வும் உரிமை பெற்றவன் எசமானன்? பயல் செத்து விட்டான் என்று கூறுகிறது. அந்த அடிமை செய்த பல குற்றங்களிலே; சவுக் கடியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் செத்ததும் ஒன்று என்பது போல! இதைக் கண்ட ஒரு கட்டுடல் கொண்ட நீக்ரோ இளைஞன்; அந்த ஊரையே அழித்து, வெள்ளையர்களைக் கொன்று குவித்து, விடுதலை பெறத் திட்ட மிடுகிறான். இந்தப் புரட்சி 1800 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் நடைபெற்றதை, 'கருப்பு இடி' என்ற ஏடு எடுத்துக் காட்டுகிறது.

ஆயுதம் இல்லை, புரட்சி நடத்திட! பயிற்சி கிடையாது போர் முறையில்! அடக் கிடப் பலமான பட்டாளம் வெள்ளை அரசிடம் இருப்பதும் தெரியும். பிடிபட்டு விட்டால் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பது புரிகிறது. ஆனாலும் எத்தனைக் காலத்திற்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பது! கண் எதிரே சவுக்காலடித்துச் சித்திரவதை செய்கிறான், பார்த்துக் கொண்டுதானே இருக்க முடிகிறது! செத்தானே அந்தக் கிழவன், புரட்சியா செய்தான் இல்லையே! அடங்கி, ஒடுங்கிக் கிடந்தான்! சவுக்கடி விழவிழத் துடித்தான்; எதிர்த்தானா? இல்லையே! வாய்திறக்கவே இல்லை! கண்ணீர் வடித்தான். முடிவு? புதைத்து விட்டார்கள்! புரட்சி செய்து பிடி பட்டால் சாக வேண்டும்! சரி! புரட்சி செய்யா திருந்தால் மட்டும் வாழ்கிறாமோ? இது ஒரு வாழ்வா? எந்த நேரத்திலும் சவுக்கடி விழலாம். எந்தச் சமயத்திலும் குதிரையை விட்டு மிதிப்பார்கள், குற்றுயிராக்குவார்கள். பிறகு கர்த்தரிடம் சேர்ப்பிப்பார்கள்! செபம் நடத்து வார்கள்! இது ஒரு வாழ்வா? இதை விட எதிர்ப்போம்; வெற்றி பெற்றால் விடுதலை! இல்லையானால் வீர மரணம்!

இவ்விதம் கூறுகிறான் 'கருப்பு இடி' என்ற காவியத் தலைவன் கேப்ரியல். சரி என்று இசைகின்றனர் ஆயிரம் அடிமைகள். ஊரை வளைத்துப் பிடித்துக் கொள்ளத் திட்டம் வகுக்கிறான். திட்டம் வெற்றிபெறவில்லை. பெருமழை; அவன் திட்டத்தை நாசமாக்கி வருகிறது. பிடிபடுகின்றனர். பலர். கேப்ரிய லும் வேறு சில தம்பதிகளும் தப்பி ஓடு கின்றனர். காட்டுப் புறம் படைவருகிறது. வெள்ளையரின் இதழ்கள் கருப்பு அபாயம் பற்றிப் பொறி பறக்க எழுதுகின்றன கேபிரியல் பிடிபடுகிறான். பிடிபடுகிறான் என்றுகூடச் சொல்வதற்கில்லை! தானே தன்னை ஒப்படைக் கிறான் சரண் அடையவில்லை. அந்தச் சம்பவ மும் கேபிரியலின் வீரத்தை விளக்குவதாகவே அமைகிறது. கேபிரியல் தப்பிச் செல்வதற்காக ஒரு படகு தயாராகிறது. ஆனால் கடைசி நேரத்தில் அவனுக்குத் துணை செய்ய முன் வந்தவன் பிடிபடுகிறான். போலீசு அவனை வளைத்துப் பிடித்துக் கொண்டு எங்கே கேபிரியல்? என்று கேட்கிறார்கள்; அவன் தனக்கு ஏதும் தெரியாது என்று மறுக்கிறான்; கொடுமைப்படுத்துகிறார்கள் போலீசு படை யினர்; தனக்காகத் தன் நண்பன் இம்சைக்கு ஆளாவது கண்டு தாங்காத கேபிரியல் போலீ சிடம் நிற்கிறான். 'இதோ நான்தான் கேபிரியல் விடுங்கள் அவனை! என்னைக் கைது செய்து கொள்ளுங்கள் என்று கூறுகிறான்.

யாவரும் கேளிர்!

- கவிமுரசு தி.பொன்னுச்சாமி -

இந்த உலகமே என்வீடு, இருப்பவர் அனைவரும் என் உறவு!
எந்த மொழியினர் ஆனாலும் இதய அன்புடன் உறவாடி
சொந்தம் என்ற உணர்வோடு சிந்தையில் கொண்டு வாழ்வீரேல்
இந்த உலகில் என்றென்றும் அன்பும் அமைதியும் நிலைத்திருக்கும்!

நாட்டின் எல்லை தடையாமோ நட்புடன் உலகில் வாழ்வதற்கு
காட்டு மிருகம் கூட கனிவுடன் உறவாய் வாழ்கிறது!
கூட்டுற வோடு வாழ்ந்துவிடில் கொடுமைப் பசிப்பிணி இருக்காதே!
நாட்டின் எல்லை கடந்துலகில் நட்புடன் வாழ முனைவீரே!

பேசும் மொழிகள் வெவ்வேறாய்ப் பிரிந்தே இருந்த போதிலுமே
பாசம் கொண்டு உறவாடிப் பழகுவீர் மனித இனத்தோரே!
ஈசன் மனிதற்(கு) இதயத்தை இதற்கே படைத்தார் என்றுணர்வீர்!
தேசம் நடந்தே உணர்வினிலே மனித நேயம் வளர்ப்பீரே!

அண்டம் முழுவதும் தேடிடினும் மனிதக் கூட்டம் அங்கில்லை!
அண்ணில் பிறந்த மனிதயினம் மகத்துவம் அறிந்து வாழ்நாளில்
அன்பைப் பெருக்கி வாழ்வதுதான் பிறவிப் பயனென எண்ணிடுவீர்!
நெஞ்சம் பதற வன்முறைகள் நிகழும் கொடுமை மாறாதா?

யாதும் ஊரே யாவருமே கேளிர் என்ற தமிழ் முழக்கம்
ஞாலம் முழுவதும் மக்களிடம் நன்றாய் அன்பை வளர்த்திடுமே!
கோல வாழ்வு உலகத்தில் கொடுமை இன்றி வாழ்வதுதான்!
போரின் கொடுமை இல்லாமல் புவியில் அமைதி காத்திடுவீர்!

தம்பி! கருப்பு இடி என்ற நூலிலே கூறப்பட்டிருப்பது அவ்வளவும் கற்பனை அல்ல; வரலாற்று நிகழ்ச்சி, வடிவம், கதையாக்கப்பட்டிருக்கிறது; அதற்கேற்ற சம்பவக் கோர்வைகள்; உரையாடல்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் ஒரு நீக்ரோ புரட்சி ஏற்பட்டதும் கேபிரியல் போன்ற நீக்ரோ தலைவர்கள் பிடிபட்டுக் கொல்லப்பட்டதும் உண்மைச் சம்பவங்கள்.

(அறிஞர் அண்ணா, 'வெள்ளை மாளிகையில்')

"இந்த உலகத்தில் தானே முயன்று, இன்ப நல்வாழ்வு தேடிக் கொள்வதுதான் லோகாயதம்" (அண்ணா சொல்லும் பயனும்)

கருத்தாலும் எண்ணும் புதுமை எண்ணங்களாலும், தமிழைத் தம் விருப்பப்படி கையாளும் திறனாலும் அண்ணாவின் தமிழ்நடை எளிமையும் தெளிவுங் கூடியிருக்கிறது. அத்துடனமையாமல் கற்போர் நெஞ்சில் தைக்கும்படியும் விறுவிறுப்புள்ளதாக அமைந்த பண்பு பாராட்டத்தக்கதாகும். தமிழ் எழுத்துக்கும் நடைக்குப் புத்துயிரூட்டிய மறுமலர்ச்சி படைப்பாளி அண்ணா என்று இருபதாம் நூற்றாண்டு இலக்கிய உலகம் பெருமிதம் கொள்ளலாம். தமிழ் எழுத்திற்கும் நடைக்குப் புத்துயிரூட்டிய மறுமலர்ச்சிப் படைப்பாளி அண்ணா என்று இருபதாம் நூற்றாண்டு இலக்கிய உலகம் பெருமிதம் கொள்ளலம். ★

தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை-சிக்கல்களும், தீர்வுகளும்

-இரா. இரவி-

தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி நடைபெறுவதாலும், அதற்கு வள்ளுவரின் வாக்குப்போல அமைந்திட்ட தமிழ்த்துறை அமைச்சர், தமிழ்க்குடிமகன் அவர்களின் முயற்சியாலும், இன்றைக்கு தமிழ்நாட்டில் தமிழ் முதன்மைப் படுத்து வதற்கான முயற்சிகள் நடைபெற்று வரு கின்றன. இதனைத் தமிழ் கூறும் நல் உலகம் போற்றினாலும், சில மஞ்சள் பத்திரிகைகள் தமிழை முதன்மைப்படுத்துவதை கொச்சைப் படுத்தி வருகின்றன. தமிழுக்கும், தமிழருக்கும் எதிராக எழுதும் எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அதனை தமிழர்கள் ஒட்டுமொத்த மாக 'புறக்கணிக்க வேண்டும். தமிழர்கள் தரும் பணத்தில் பத்திரிக்கை நடத்திக்கொண்டு தமிழை கொச்சைப்படுத்துவதை நாம் பொறுத் துக்கொண்டு இருக்கக்கூடாது. இனியாவது தமிழையும் தமிழரையும் கொச்சைப்படுத்தி னால் நாம் இங்கு' பத்திரிகை நடத்திட இயலாது என்பதை அவர்கள் உணரும் வகை யில் பாடம் புகட்டவேண்டும்.

அரசுப் பேருந்துகளில் உள்ள எண்களில் தமிழ் இடம்பெற்றுள்ளது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய செயல். இதற்குத் தமிழக முதல்வரையும், அமைச்சர் தமிழ்க்குடிமகனை யும் பாராட்டியே தீரவேண்டும். வரலாற்றில் அவர்களுக்கென்று தனி இடம் நிச்சயம் உண்டு. இதனை உடனடியாகத் தனியார் பேருந்துகளி லும், பொது மக்கள், தமிழர்கள் தங்கள் வாகனங் களிலும் தமிழுக்கு இடம் தாருங்கள். மனப் பூர்வமாக தமிழால், தமிழர்களால் நாம் வள மாக வாழ்கின்றோம் என்பதை உணர்ந்து வணிக நிறுவனங்களில் உடனடியாகப் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு இடம் தாருங்கள். அரசு இதுவரை பலமுறை அறிவித்துவிட்டது. எனவே, அருள் கூர்ந்து தமிழுக்கு இடம் தாருங்கள். தமிழ்நாட்டில் தமிழ் இல்லாத பெயர்ப் பலகைகள் இன்னும் ஏராளம் உள்ளது. அவர்கள் எல்லாம் உடனடியாகத் தமிழுக்கு இடம் தரவேண்டும். ஆங்கிலத்திற்கோ மற்ற மொழிகளுக்கோ இடம் தரவேண்டாமென சொல்லவில்லை. தமிழுக்கு முன்னுரிமை தாருங்கள்; உரிய இடம் தாருங்கள், தமிழகத் தில் உள்ள ஊர்ப்பெயர்கள் எல்லாம் ஏதோ பெயர் சூட்டவேண்டும் என்ற காரணத்திற்காகச் சூட்டப்பட்டவை அல்ல. காரண காரியத்தோடு சூட்டப்பட்ட பெயர்கள். ஆனால், இன்று அந்தக் காரணப் பெயர்கள், நல்ல தமிழ்ச் சொற்கள். எல்லாம் எழுத்துப் பிழையோடு, பொருட் பிழையோடு எழுதப்பட்டும், உச்சரிக்கப்பட்டும் வருகின்றன. இவற்றிலுள்ள பிழைகள் எல்லாம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும். திருத்துவதற்கும் இதுதான் தக்க தருணம். இப்போது முடியாவிட்டால் இனி எப்போதும் முடியாது. எனக்கு தெரிந்த எழுத் துப் பிழையோடு தற்போது தமிழைத் தேய்த்து வரும் செயலுக்கு சில எடுத்துக்காட்டுகள் இங்கே கூறுகின்றேன்.

மேலே கூறப்பட்ட எழுத்துப்பிழைகள் பேருந்துகளில் பெயர்ப்பலகைகளில் இடம் பெற்றுள்ளன. இவை எல்லாம் உடனடியாக திருத்தப்படவேண்டும். இதுகுறித்து மாண்பு மிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் மடல் வரைந்துள்ளேன். இவை மட்டுமல்ல பிழைகள். இன்னும் ஏராளம் உள்ளன. உடனடி யாக தமிழ் அறிஞர்கள் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் போன்றவர்களை அழைத் துக் கலந்துரையாடி தற்போது வழக்கில் உள்ள அனைத்துப் பிழைகளும் அகற்றப்பட்டு அன்னைத் தமிழை அரியணையில் அமர வைக்கவேண்டும். நல்ல தமிழ்ச் சொற்களை நடைமுறைக்கு கொண்டு வருவதில் சிக்கல்

இருக்கலாம். அதற்குப் பயந்து விட்டுவிடக் கூடாது. சிக்கல்களைக் களைந்து தமிழர்கள் யாவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். எழுத் துப்பிழைதானே இருந்துவிட்டுப் போகட்டும் என்று இருந்துவிட்டால் எழுத்துப்பிழை பொருட்பிழையைத் தோற்றுவிக்கும். எதிர்கால சந்ததிகளுக்கு எழுத்துப்பிழை என்பது தெரி யாமலே போய்விடும். இதனால் தவறான பொருளையே சரியான பொருள் என எண்ணிவிடுவார்கள். எனவே, இதுபோன்ற சின்னச்சின்ன எழுத்துப்பிழைகள் என்பது தமிழ்த்தாயின் உடலை ஊனப்படுத்துவதற்குச் சமம். எனவே, ஊனம் களைய நம்மை நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டது போல "தமிழா, நீ பேசுவது தமிழா?' என்று கேட்குமளவிற்கு இன்று நாம்பேசும் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்து இருக்கின்றன. எனவே, தமிழர்களாகிய நாம் நம்மால் முடிந்த அளவிற்குப் பிறமொழிச் சொற்களைத் தவிர்த்து நல்ல தமிழால் பேசுவதற்கு உறுதி ஏற்கவேண்டும். பலவருடங் களாகவே கலந்துவிட்டன. இப்படியே இருந்து விட்டு போகட்டும் என்று விட்டுவிட்டால், நாளடைவில்தமிழே அழிந்துவிடுமோ? என அஞ்ச வேண்டி உள்ளது. வழக்கில் உள்ளது என்பதற்காக வளரவிட்டோமேயானால் நாளை நமது அன்னைத் தமிழையே அழித்துவிடும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக குறிப்பிட்டால் நன்கு விளங்கும். ஒரு படிக்காத பாமரனிடம் ஒருவர் "அய்யா பேருந்து நிலையத்திற்கு எவ்வழியாகச் செல்லவேண்டும்" என்று கேட் டார். அவர் பதில் எதுவும் சொல்லாமல் விழித்தார். அவர் திரும்ப "பஸ் ஸ்டாண்டுக்கு எப்படிச் செல்ல வேண்டும்" என்று கேட்ட வுடன் "அப்படித் தமிழில் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு வழியைக் காண்பித்தார். இதனை நகைச்சுவைக்காக குறிப்பிடவில்லை. படிக்காத பாமரர் கூட பஸ் ஸ்டாண்டு என்ற சொல்லைத் தமிழ்ச்சொல் என்று நினைத்துக் கொண்டு பயன்படுத்தி வருகின்றார். அவர் மட்டுமல்ல, படித்த நாமும் பலரும் ஆங்கிலச் சொற்களை நம்மை அறியாமலே தமிழோடு கலந்து பேசி வருகின்றோம். ஒரு குடம் பாலில் துளி நஞ்சு கலந்தாலும் பால் நஞ்சாகிவிடும். அதைப் போலத்தான் நல்ல தமிழில் பிற மொழிச் சொற்களான நஞ்சுகளை கலந்து தமிழைப் பாழ்படுத்தி வருகின்றோம். இப்படி அயல் மொழிகளின் ஆதிக்கத்தால், கலப்பால் பல மொழிகள் அழிந்தே போய்விட்டன என்று வரலாறு கூறுகின்றது. நமது கன்னித் தமிழுக்கு அழிவில்லை என்றாலும் தமிழர்களாகிய நாம் விழிப்புணர்வு பெற வேண்டியது காலத்தின் கட்டாயம். பிற மொழிச் சொற்களைக் களை வதற்கு உடனடியாக அனைத்துத் தமிழர்களும் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென பணிவுடன் வேண்டுகிறேன்.

இன்றைக்கு தனியார்த் தொலைக்காட்சி கள் மனிதனை மூளைச்சலவை செய்து வரு கின்றன. மேலும் கைகளைக் கட்டிப்போட்டு, அதன் முன் அமரச்செய்து அடிமையாக்கி விடுகின்றது. தனியார்த் தொலைக்காட்சிகள் வருவதற்கு முன்பு நூல் படிக்கும் பழக்கம் தமிழர்களின் இரத்தத்தில் ஊறிய பழக்கமாக உலகநாடுகளிலும் இது போன்ற பலவிதமான தொலைக்காட்சிகள் இருந்தாலும் அவர்கள் நம்மைப் போன்று இப்படி அடிமையாகி விடுவது இல்லை. ஓய்வு கிடைக்கும்போது, விரும்பும் போது எப்போதாவது தான் தொலைக்காட்சி பார்க்கின்றனர். அதைப் போலவே தமிழர்களும் மாறவேண்டியது அவசியம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அந்த அள விற்கு நமது பண்பாட்டையும் மொழியையும் அவை சிதைத்து வருகின்றனர். குடும்பத்துடன் அமர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு நிகழ்ச்சி களை, விளம்பரங்களைக் காட்டி வருகின்றனர். விஞ்ஞான வளர்ச்சியை தவறாகப் பயன்படுத் திப் பேய், பிசாசு போன்ற மூட நம்பிக்கை களைப் பரப்புவதற்கும் புராணக் குப்பை

நல் தமிழினமே!
முந்தைய வரலாறு
முடிந்த வரலாறு
இன்றைய வரலாறு
இனியநல் வரலாறு
உலகை ஒருகுடையில்
உயர்வாய்க் கண்டான்
உலகே சுருங்கியது
உயர்வுகள் அரும்பியது
தமிழினம் ஒரேஇனம்
தரணியில் உயர்இனம்

தளராது தோள் கொடுப்போம்
தகுதியால் உயர்வடைவோம்
சிறு சிறு பூசல்கள் சிதல்மாக்கும் நம்மை
சிதலமாக்கும் நம்மை
சாதிச் சண்டைகள்
சனியனாய் விரட்டும்

காதலிப்போம் கைபிடிப்போம்

-அறிவண்ணல் விழுப்புரம்-

களைப் பரப்புவதற்கும் விஞ்ஞானத்தின் துணைக்கொண்டு அறிவை சிதைத்து வருகின்றனர். நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குபவர்கள் பேசுவதில் இருபது விழுக்காடு கூட தமிழ் இருப்பதில்லை. பிற மொழிச் சொற்களைத் தான் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். இதைப் பார்த்து நமது இளைஞர்கள் பலர் இதுதான் நாகரிகம் என்று கருதிப் பிறமொழிச் சொற்களையே அதிகம் சேர்த்து அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழைக் கலந்துபேசி தமிழ்த் துரோகம் செய்து வருகின்றனர். எனவே, தமிழர்களின் இன்றைய தலையாய கடமை தொலைக்காட்சிகளுக்கு அடிமையாவதைத் தவிர்த்து நல்ல தமிழ் நூல்களைப் படிப்பதற்கு நேரத்தை செலவிட வேண்டும். மேலும் அரசுத் தொலைக்காட்சிகளில் இந்தி ஆதிக்கத்தை அழிக்கவும் தனியார்த் தொலைக் காட்சிகள் தமிழ்மாலை, தமிழ்ச்சேவை என்று விளம்பரப்படுத்திக் கொண்டு தமிழ்க்கொலை புரிவதை உடனடியாக நிறுத்தவேண்டுமென நமது கண்டனக் கடிதங்கள் பறக்கட்டும். அவர்கள் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

தமிழகத்தில் தமிழ் படிக்காமலே பட்டம் பெறும் அவலநிலை இருந்தது. இப்போது கலைஞர் அவர்களின் பொன்னான நடவடிக்கைகளின் காரணமாக அவலநிலை மாறி வருகின்றது. நமது தாய்மொழி தமிழ். நமது தாய்க்கு துன்பம் நேருகின்றபோது நாம் பார்த்துக்கொண்டு இருப்போமோ? இருக்க மாட்டோம். தமிழர்கள் அனைவரும் ஓரணியில் திரளவேண்டும். நாம் அனைவரும் தமிழர்கள், மொழிதான் நம்மை இணைக்கக்கூடியது, அதைவிடுத்து, பிரிக்கக்கூடிய சாதியையும், மதத்தையும் நமது மனத்திலிருந்து அகற்றி விட்டு தமிழ்மொழி பேசும் நாம் அனைவரும் தமிழர்கள், உடன்பிறப்புகள் என்று எண்ணினால் நமக்குள் பகைமை ஏது. ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழ்மொழிப் பற்று அவசியம் இருக்கவேண்டும். வடக்கே ஒரு காவலரால் பாதிக்கப்பட்ட தமிழர் தனது மனைவி கற்பழிக்கப்பட்டதைப் புகாராக ஆங்கிலத்தில் எழுதிக்கொடுத்தபோது அதனை வாங்க மறுத்து இந்தியில் எழுதித் தந்தால்தான் வாங்குவேன் என்றார் வடவர். ஆனால், நமக்கு அவர்களைப் போல் மொழி வெறி இல்லாவிட்டாலும் மொழிப்பற்று அவசியம் ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்க வேண்டும். மொழிப்பற்று இல்லாவிட்டால் அவன் தமிழனே இல்லை. தமிழால் ஒன்றுபடுவோம். தமிழால் வாழ்வோம். தமிழை வாழ்விப்போம். பன்னாட்டு தமிழுறவு மன்ற 4-ஆம் மாநாட்டிற்கு வருகை தரும் தமிழர்கள் அனைவரையும் வருக! வருக! சிறப்புதருக! என வரவேற்று மாநாடு சிறக்க எனது பணிவான வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலக்கியப் பெண்கள்

திருமதி. வாசுகி கண்ணப்பன்

நேற்றைய சரித்திரம், இன்றைய இலக்கியம், அவ்விலக்கியமே காலத்தின் கண்ணாடி. நம்முடைய கலாச்சாரம், பண்புகளை மண்ணுக்கு உணர்த்தும் மாபெரும் சான்றாகும்.

பெண்களே நாட்டின் கண்கள், அதனால் தான் ஓடும் நதிகளுக்கெல்லாம், கங்கா, யமுனா,கோதாவரி, காவேரி என்று பெண்களின் பெயர்களையே வைத்தார்கள். கல்வி, செல்வம், வீரத்திற்கு தெய்வமாக சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை எனக் கொண்டு கும்பிடுகின்றனர். நாம் வாழும் நாட்டைத் தாய்நாடு என்கின்றனர்.நாம் பேசும் மொழியைத் தாய் மொழி என்கின்றோம். அதனாலன்றோ கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கூட மங்கையராய் பிறக்க நல்ல தவம் செய்திடல் வேண்டும் என்று கூறாமல் மங்கையராகப் பிறக்க மாதவம் செய்திடல் வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து பாடியுள்ளார்.

பெண்கள், பல இலக்கியங்களில் பல்வேறு பெருமைகளுடன் பரிமளிக்கின்றனர். நான் இங்கு காணவிழைவது, பல்வேறு நிலைகளில் பெண்களின் பெருமை. ஆம், பெண் என்பவள் வாழ்க்கையில் பல நிலைகளில் வாழ்கின்றாள். எந்த நிலையிலும் பெண் தான் எண்ணிய நற்செயல்களைச்செயல் படுத்துவதில் திண்ணிய நெஞ்சத்தவராக இருப்பார்கள். அந்த வகையில் பெண்ணை மகளாக, காதலியாக, மனைவியாக, தாயாக, சகோதரியாக, ஆலோசகராக, என்று பல நிலைகளிலும் பார்க்கலாம். அவர்கள் எவ்வாறு தங்கள் எண்ணத்தையும், கடமையையும், பொறுப்பையும் எப்படி கடைப்பிடித்து செயலாற்றினார்கள். என்று பார்ப்போம்.

சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாளின் வாழ்க்கையே இலக்கியச் சான்றாகும். பெரியாழ்வாரின் மகளாகத் தோன்றி இறைவன் திரு நாமத்தைப் பாடி இறைவனுக்கு பணி செய்து, இறைவனையே கணவராக அடைய எண்ணுகிறாள். அவளுடைய எண்ணத்தை ஈடேற்றியது என்பதை திருப்பாவைப் பாடல்களே பறைசாற்றுகின்றது. அதற்கு மேலும் நாலாயிரப் பிரபந்தத்தில் மணவாள முனிகள் பாடிய பாடலும் ஒரு சான்றாகும்.

திருவாடிப்பூரத்து ஜெகத் துதித்தாள வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினான வாழியே
பெரியாழ்வர் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்புதூர் மாமுனிக்கு பிள்ளானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன் றுரைத்தாய் வாழியே
உயரரங்கற்கே கண்ணி உகந்தளித்தாய் வாழியே
மருவாரும் திருவன்னி வளநாடு வாழியே
வண்புதுவை நகர்க்கோவை மலர்ப் பதங்கள் வாழியே

என்ற பாடல் மூலம் ஆண்டாளின் ஆழ்ந்த பக்தியையும் பக்தியால் ஏற்பட்ட மோட்சத்தையும் உணர முடிகிறது.

அதேபோல், பக்த மீராவும் அத்தனை எதிர்ப்பையும் மீறி, தன் பக்தியால் கண்ணனையே, கணவனாகக் கொண்டார் என்றால் திண்ணிய நெஞ்சத்தின உறுதியை உணர முடிகின்றது.

காதலியாக தங்கை

இந்நிலையில் நான் விளக்க நினைப்பது வளையாபதியின் வரலாறு.

இது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. இன்றைய கலப்புத் திருமணத்தை காதல் திருமணத்தை அன்றே உணர்த்திய இலக்கியம்.

பெரும்பணக்காரன், ஆற்றல் மிக்க வியபாரி நவ கோடி நாராயணன், வேறு குலத்தில் பிறந்த பெண்ணைக் காதலித்து, மணம் செய்து கொண்டார். இன்று போலவே அன்றும் ஊரார் பழிக்கும், ஏச்சுக்கும் பயந்து வாணிபம் செய்வது போல் கப்பலேறி அயல்நாடு சென்று விடுகின்றார். அச்சமயம் இவர் கருவுற்றிருக்கின்றாள். பெண்ணுக்கு யார் துணை?

மன உறுதியும், இறைவனும் தான். ஆமாம் வளையாபதியும் அவ்வூர் தெய்வமான காளியிடம் சென்று பாடி சரணடைகின்றாள் எப்படி?

"சய சய நின்மலை சய சய முக்கனி
சய சய சங்கரியே
சய சய கண்டிகை சய சய நிட்களை
சதுரி சவுந்தரி யே
சய சய சுந்தரி சய சய வெற்றி கொள்
சதுரி சவுந்தரி யே
சய சய துங்க பரம்பரை யென்றிரு
சரணம் வணங்கினனே

காளியும் தோன்றி, நான் உன்னைக் கணவனுடன் சேர்ப்பேன். அதுவரை இங்கேயே என் கோவிலிலேயே இரு. நான் உன்னைப் பாதுகாக்கின்றேன் என்றுசொன்னாள். இறைவியின் வாக்கை உறுதியாகநம்பி வாழ்கின்றாள். வளையாபதி செய்தள்ளது கலப்புத்திருமணம்மல்லவா? அறிவும், அழகும் நிறைந்த குமரனை ஈன்றெடுத்தாள் முறைப்படி, செம்மையாக வளர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்து விளக்குகிறான் குமரன். வயது வளர வளர, நண்பர்கள் சேர சேர, தந்தையைப் பற்றி கேள்வி கேட்க, குமரன், தாயிடம் வந்து அழுது புலம்புகின்றான். தந்தையார் என்று காட்டுமாறும் வினவினான். வளையாபதியும், விளக்கமாக விளக்க, அனது தந்தையைத் தேடி காவிரிப்பூம்பட்டினம் சென்று, கண்டுபிடித்து விளக்குகின்றார். அவரோ, விரட்டி அடிக்கின்றார். இவரோ வணிகச் சங்கத்திடம் சென்று, முறையிட சங்கமும் சான்றுகளுடன் வரக் கூறுகின்றனர். அப்பொழுதும் அன்னைக் காளியிடம் சென்று முறையிடுகின்றாள். இப்பொழுதும் பக்தியை மெச்சி, காளி நானே நேரில் வந்து சங்கத்தில் சாட்சி சொல்கின்றேன் என்று கூறினார். அதேபோல் வானிலிருந்து இறங்கி வந்து தோன்றி இவள் கூறியது உண்மையே என்று கூற, மறுவாழ்வு பெருகின்றனர். இவ்விலக்கியம் 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அன்றிலிருந்து இன்று வரை கலப்புத் திருமணத்திற்கு எதிர்ப்பும் ஏமாற்றமும் தான் உள்ளது. என்பதையும், உறுதியான பெண்கள், தங்கள் இறை பக்தியில், தன்மைபிக்கையுடன் போராடித் தன் உரிமையை நிலை நாட்டுகின்றனர் என்பதற்கு இவ்விலக்கியம் ஒரு சான்றாகும். மேலும் கலப்புத் திருமணத்ததால் பிறக்கும் குழந்தைகள் நல்ல அறிவு உள்ளவர்களாக இருப்பர். சாதியும் ஒழியும் என்ற பாங்கையும் இன்றைய அறிவியலையும் காணலாம். ♣

தமிழ் நெஞ்சம்!

-கவிஞர் ஆற்றலரசு-

பாடிக்கொண் டேயிருப்பேன் - உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன்!

வள்ளுவன் குறளதில் வையமே போற்றிடும்
வளமுடை கருத்துரைகள் - அன்றித்

தெள்ளிய காப்பியம் செப்பிடும் நிதியில்
தெவிட்டாத இன்ப மதாம்!

அள்ளியே பருகிட அகப்புறத் தொகுப்பினில்
ஆயிரச் சுவைநிகழ்வோ

கிள்ளைகள் பாடியே இன்னிசை மீட்டிடும்
கனித்தமிழ் சிறப்பதனைப்

பாடிக்கொண் டேயிருப்பேன் - உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன்!

சித்தம் வியந்திடும் தேவாரத் திருப்பாடல்
சிலபேரை ஞானியாக்கும்! - அந்தத்

தத்துவ ஞானிகள் தம்மையே ஒப்பவே
தங்களை ஆக்கிடுவார் - தினம்

இத்தரை மீதினில் யாருளார் சொல்லிடு
இல்லையே என்குவீரோ?

நித்தமும் சென்றிடு நன்னெறிப பாதையில்
நிலையான தமிழமுதைப்

பாடிக்கொண் டேயிருப்பேன் - உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன்!

தொன்மைத் தமிழ் இலக்கியங்களில்
அண்மைக்கால சிந்தனைகள்

கவிஞர். காஞ்சித்தம்பி

பிறநாட்டு நல் அறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமை எனில் "வெளி நாட்டோர்"
அதை வணக்கம் செய்தல் வேண்டும்".

"வலியோர்தமை எளியோர் சிலர் வதைத்து மகராசர்களாக உலகாள்வதை எதிர்த்து "மக்களிடத்தே பொது உடைமைத் தத்துவத்தை

போதித்த "காரல் மார்க்ஸ்" "ஏங்கல்ஸ்" போன்றோரின் கருத்துகளை நாம் சற்று ஆராய்ந்தோமானால் ஆண்டான், அடிமை, ஏழை, பணக்காரன், வலியோர், எளியோர் ஒருவரை ஒருவர் வஞ்சித்து, சுரண்டி அவர் களது உழைப்பை உறிஞ்சி, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, தொழிலாளர்களின் உழைப்பை உதிரமாக உறிஞ்சும் நிலை எல்லா நாட்டிலுமே இன்று அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் உள்ளது.

அன்டை நாடுகளைக்கூட இந்நோய் பற்றிக்கொண்டது. வலிய நாடுகளின் ஆதிக்கம் எளிய நாடுகளின் மீது படை எடுப்பாக மாறிக் குண்டுமழை பொழியும் அளவுக்குப்போய் அணு ஆயுதங்களை ஏவும் அளவுக்கு வந்து விட்டது. ஆகவே நாட்டில் பொதுஉடமைத் தத்துவம் வளர்ந்த எழுச்சி ஏற்பட்டால் தான்.

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பரா கிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ?

என்ற பாவேந்தரின் சிந்தனையை சிரமேற் கொள்வோம்.

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்ன வர்க்கே சரண் நாங்களே"

என்ற கம்பனின் காவியத்தில் "பொது உடமை" தத்துவத்தை எடுத்து இயம்புகிறார்.

"சிற்றாறும் வரப்பெடுத்த வயலும் ஆறும்
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேற உழுதுழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத்தோளெல்லாம் எவரின் தோள்கள்"?
கற்பிளந்து மலை பிளந்து கனிகள்வெட்டிக் கருவியெலாம்
செய்து தந்த கைதான் யார்கை?
பொற்றுகளை கடல் முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?
உறைத்திட்டார் புரட்சிக் கவிஞர் என்று
உண்மையை உணர்த்த உலகத்தில்
பொது உடமை தத்துவத்தை எடுத்தியம்பி
உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்

இஸ்லாம் கடல்கடந்து வந்தது. அதன் மொழிகள் அரபும், உருதும் தமிழகத்துக்கு வந்தபின் தமிழ் கற்று தமிழ்மொழி வாயிலாக இஸ்லாத்தைப் பரப்பியது. இஸ்லாமியத் தமிழ் நூல்களில் முதலாவதும் சிறந்ததும் "சீறாப் புராணம்" ஆகும்.

கம்பனையும் சேக்கிழாரையும் நன்கு கற்ற உமறுப்புலவர் 5027 விருத்தங்களில் சீறாப் புராணத்தைப் பாடினார். "குலாம்காதர் நாவலர்" என்றொரு புலவர், நாவலர் பட்டத் துடன் விளங்கினார். குணங்குடி மஸ்தான் சாகிப், பீர்முகம்மது அப்பா முதலிய இஸ்லாமிய சித்தர் (சூபி)களும் இருந்தனர்.

சித்தர் நூல்களைப்போன்று இவர்களும் நூல்கள் செய்தனர்.

நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் முகியித்தின் பிள்ளைத்தமிழ் மக்கா கலம்பகம், மதீனாக் கலம்பகம், மதீனாத்தந்தாதி, மக்காந்திரிப் பந்தாதி முதலிய சிற்றிலங்கியங்கள் பல தோன்றின. அந்தாதி, கலம்பகம், மாலை, பிள்ளைத்தமிழ் போன்று அதிகாரம் வழங்கி வந்த சிற்றிலக்கியங்கள் தவிர கிஸ்ஸோ, படைப்போர், மஸஸலா முனாஜாத், நாமோ என்ற புதுவகை இஸ்லாமிய சிற்றிலக்கணங் களையும் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் செய்தார்கள்.

சதாவதானம் ''செய்குதம்பி பாவலர்'' அருட்பா மருட்பாவாதத்தில் அருட்பாவின் பக்கம் இருந்து உண்மையை விளக்கிய செய்தி தமிழகம் அறிந்ததே. ''கம்பராமாயண சாகிபு'' என்று அவரைச் சொல்வார்கள். இன்றைக்கும் கம்பராமாயண சார்பாக விளங்குபவர் சென்னை கம்பன் கழகத்தலைவர் நீதிபதி ''மு.மு. இஸ்மாயில்'' ஆவார்.

மணவை முஸ்தபாவின் ''தமிழ் அறிவியல் தொண்டும்'' குறிப்பிடத்தக்கது. ''இஸ்லாம் எங்கள் வழி'' இன்பத்தமிழ் எங்கள் மொழி'' என்று இன்றும் முஸ்லிம்கள் கூறிக் கொள்வதைக் காண்கிறோம். ''இஸ்லாமும் தமிழும்'' என்ற நூல் பேராசிரியர் அப்துல் கரீம் என்பவரால் எழுதப்பெற்றது. தமிழின் சிறப்பும் இஸ்லாமியப் புலவர்களின் பெருமையும் தொண்டும் விவரிக்கப்பட்டுள்ளது.

கணினி வழித் தமிழ்:

''காசிநகர்ப்புறத்து பேசும் ஒலிதான் அதைக்
காஞ்சி''யில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

''காற்றில் ஏறி விண்ணையும் சாடுவோம்''

''வானை அளப்போம்! விண் மீனை அளப்போம்''
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்''

என்று பாரதியின் கனவு நனவாகி விஞ்ஞான வளர்ச்சியின் பரிணாம வளர்ச்சிதான் கம்ப்யூட்டர் எனும் கணிப்பொறி. இது பல்வேறு தொழில் நுட்பங்களை உள்ளடக்கியது வியத்தகு சாதனைகளைச் செய்வது இன்றைய விஞ்ஞான உலகில் துல்லியமான கணக்குகளை சரிபார்ப்பதற்கும் உலகத்தின் எந்த மூலையிலிருக்கும் ஒருவருடன் தொடர்பு கொண்டு செய்யவேண்டிய பணிகளை இருந்த இடத்திலிருந்து மனித மூளையாக செயல்படுவதுதான் ''இண்டர் நெட்'' இதில் அனைத்து குறியீடுகளும் ஆங்கிலத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் இன்று 5½ கோடி தமிழர்களும் பல்வேறு உலக நாடுகளில் 1½ கோடி தமிழர்களும் 95 லட்சம் தமிழர்கள் பிறநாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரிஷியிஸ் தீவு ஆகிய நாடுகளில் தமிழ் ஆட்சி மொழி பெருமையைப் பெற்றுள்ளது. இன்று உலகத் தமிழர்களுடன் தொடர்புச் சாதனமாக தமிழ் இணையம் (Internet Tamil - 99) உள்ளது. உலகத் தமிழர்களை இணைக்கும் பாலமாகவும் தமிழர்களை தமிழ்மொழி வழியாக ஒன்றிணைக்கும் சாதனமாகவும், உலகச் சமுதாயத்தை இணைக்கும் தகவல் தொழில் நுட்பமாகவும், இது இருக்கிறது. ஒரு புரட்சியின் தொடக்கமாகவும், ஆங்கிலத்திற்கு நிகராகவும், அமைந்துள்ளது. ஆசியாவிலேயே பன்னாட்டுத் தமிழர்களும் தமிழைத் தகவல் புரட்சியின் ஆற்றல்மிகு கருவியாக இதைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

கணினித்துறையில் பிற இந்திய மொழிகள் இடம் பெறுமுன்னர் முன் தோன்றிய மூத்தமொழி என்ற பெருமையுடன் ''தமிழ்'' கணினிப் பயணம் தொடங்கித் தமிழ் இணையம் 99'' என்ற தமிழோசை இன்று இனிமையாக ஒலிக்கிறது.

தமிழ் தொடர்பான இணையத்தளங்கள் 3000 உள்ளன.

திருக்குறள், கம்பராமாயணம், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், டாக்டர் கலைஞர் ஆகியோரின் படைப்புகள் திரைப்படங்கள், நாளேடுகள், வார இதழ்கள் இணையத்தில் உள்ளன.

பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் (Pencilvania University) அதன் வலைமனையில்

(Website) தமிழை பேச்சு நிலையில் கூட கற்றுத் தருகிறது, பேசிக் காட்டுகிறது. தமிழ் ஒரே மொழிதான். ஆனால் இண்டர்நெட்டில் (Internet) வெவ்வேறு இடங்களில் தமிழ் மொழியின் தன்மை வேறுபடுகிறது. இக் குறையைத் தீர்த்து வைக்க 1999-ல் நடைபெற்ற தமிழ் இணையக் கருத்தரங்கில் (சிங்கப்பூர்) முழுவதும் விவாதிக்கப்பட்டது.

அண்மையில் தமிழக அரசு, டாக்டர் கலைஞர் அவர்களின் தீவிர முயற்சியினாலே 1999-க்கான இணையக் கருத்தரங்க மாநாட்டை சென்னையில் நடத்தியது. அதன் வரவேற்புக் குழுத் தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன்,எம்.பி. அவர்கள் இருந்து நடத்தினார்கள்.

1999 பிப்ரவரி 7,8 தேதிகளில் இம்மாநாடு சென்னையில் முத்தமிழறிஞர் தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் மலேசிய அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமுவேல் இலங்கைத் தொழில் அமைச்சர் தொண்டமான், சிங்கப்பூரில் 9 தமிழ்இணைய மாநாட்டு அமைப்பாளர் சிங்கை திரு.கோவிந்தசாமி. புதுவை முதல்வர் ஆர்.வி. ஜானகிராமன், மொரிஷியஸ் தீவின் கல்வி அமைச்சர் திரு.ராமசாமி சிதம்பரம்பிள்ளை, வேல்ட்டு டெல் நிறுவனத்தலைவர் திரு. சாம்ப்பிட்ரோடா மற்றும் உலகத்தின் பல்வேறு நாட்டுப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பாக விவாதித்துக் கீழ்க்கண்ட தீர்மானங் களை நிறைவேற்றினார்கள்.

தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்கள் அமைக்க நூறு மில்லியன் அமெரிக்க டாலர்கள் (430 கோடி) தேவைப்படுகிறது. இத் திட்டத்தின்படி முதலாண்டில் 1500 மையங் களும். ஐந்து ஆண்டுகளுக்குள் 10 ஆயிரம் மையங்களும் அமைப்பதாக குறியீடு நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அமையும் சமுதாய இணைய மையங்களுக்கிடையே இணைப்பு தருவதற்கும தனி கேபிள் தொங்க இருக்கிறது. உலகத்தமிழர்களிடையே இணைக்கும் பால மாகவும், எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம், வேளாண்மை தொழில்துறை வளர்ச்சி, அரசு நலத்திட்டங்கள், அரசாங்கத்தின் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அனைத்து அலுவலகங்களுடன் தொடர்பு உடனுக்குடன் தகவல் பறிமாற்றங்கள் மற்றப் பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வுகாணவும் உறுதுணையாகத் தமிழ்நெட்-99ன் பயன் அளவிடற்கரிய தேவை யாக அமைந்து செயற்பட உள்ளது. இது உலகத் தமிழர்களின் உவகைபொங்கும் வாழ்த்துகளோடு சிறப்புடன் செயல்பட வேண்டுகிறேன்.

எந்நாளோ?

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் காலை ஞானத்தால்
பராக்கிராமத்தால், அன்பால்
உன்னத இம மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட்டிடல் எந்நாளோ?

கைத்தறிச் சித்திரங்கள்
கதங்கள் வான நூற்கள்
மெய்த்திற நூல்கள், சிற்பம்
விஞ்ஞானம், காவியங்கள்
வைத்து தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தகச்சாலை எங்கும்
புதுக்கு நாள் எந்த நாளோ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடுதன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண் வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?

என்ற பாவேந்தரின் பாவைச் சொல்லி முடிக்கின்றேன்.

இலக்கியம் கூறும் உலகு

-திருக்குறள் திருத்தொண்டர் லலிதாசுந்தரம்-

இலக்கியம் என்பது குறிக்கோளுடையது. கலை என்பது மக்களின் தவிர்க்க முடியாத உயிரோட்டம் உள்ள வடிவம் ஆகும். காலத்தை வென்று நிற்பது இலக்கியம்.

தொல்காப்பியம், திருக்குறள், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணி மேகலை, புராணங்கள் முதலிய இலக்கிய நூல்கள் தமிழர்களின் சிறந்த பண்பாடு களையும், சிறப்புகளையும், மரபுகளையும் நாகரிகங்களையும் நமக்கு உணர்த்தும் வர லாற்று காலக் கண்ணாடிகளாகத் திகழ்கின்றன.

ஒவ்வொரு இலக்கியத்திற்குப் பின்னா லும் ஒரு மனிதனும், ஒவ்வொரு மனிதனுக்குப் பின்னாலும் ஒவ்வொரு இனமும் இருக்கிறது.

இலக்கியம் முக்கியமான சாசனம், கலைப் படைப்பிற்கு மூலகாரணம் மனிதன் என மார்க்சியத் திறனாய்வாளர்கள் கூறு கிறார்கள்.

இலக்கியத்தின் பயன்:

இலக்கியம் முப்பொருளளித்தல் என்பது தொல்காப்பியர் கருத்து. நாற் பொருளையும் அளிக்க வேண்டும் என்பது பவணந்தியார் கருத்து. மக்கள் தம் மன மாசுகளைப் போக்கி உள்ளத்தைத் தெளிவடையச் செய்வதே நூல் மாண்பு. இதனையே

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

எனத் திருவள்ளுவர் நவில்கிறார்.

''உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்கும்நூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்கும் நூல்மாண்பு.''

என பவணந்தியார் கூறுகிறார்.

''அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே'' என நன்னூலார் கருதுகிறார்.

தமிழர் பண்பாட்டின் தலையாய நிலை யாகத் திகழ்வது **''யாதும் ஊரே, யாவரும் கேளிர்''** என்ற கணியன் பூங்குன்றனார் பாடிய பாடலாகும்.

கடமைகள்:

சங்க காலத் தமிழர்களின் கடமைகளை

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''.

என்று புறநானூறு-*194* தெளிவாகக் கூறுகிறது.

சமுதாயத்தில் பெண்கள் நிலை:

சங்ககாலம் பெண்மை போற்றப் பெற்ற பொற்காலம். சமுதாயத்தில் பெண்கள் மிகச் சிறந்த இடம் வகித்தனர். சமூக விழாக்களில் பங்கேற்றனர். சுதந்திரமான வாழ்க்கை வாழ்ந்தனர். கள் அருந்தினர்.

''துணைப் புணர்ந்த மட மங்கையர்
பட்டு நீக்கித் துகிலுடுத்தும்
மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்''

என்று பட்டினப்பாலை பண்பாட்டினைப் பகர்கின்றது.

''இம்மை மாறி மறுமையாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சு நேர்பவளே.''

(குறுந்தொகை - 49)

என்ற பாடலிலிருந்து மகளிரின் கற்பும் எத் தனைப் பிறவி எடுத்தாலும் தன் கணவனையே துணைவனாக அடையவேண்டும் என்ற நல்லெண்ணமும், பண்பாடும் புலப்படுகிறது.

மக்கட் பேற்றின் சிறப்பினை

"படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும்
உடைப் பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே-

என்று புறநானூறு கூறுகின்றது.

கற்றோரை மதித்தல்:

"ஒரு குடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்."

(புறநா - 183)

என்று புறநானூற்றுப் பாடல் வழி அறிவுடை மூத்தோனை அரசன் மதித்து, கற்று வல்ல புலவர்களையும் நன்கு ஆதரித்தான், என்பதை அறிகிறோம். கற்று வல்ல புலவர்கள் பலரது தணிக்கைக்குப் பிறகு பாடல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இத்தணிக்கைக் குழுவிற்கு சங்கம் என்று பெயர்

"செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலரை உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர"

என மருதக் கலி-3 கூறுகின்றது.

பெண்களுக்கு இடதுகண், இடதுதோள் துடித்தால் நல்லது என எண்ணுகின்றனர்.

ஆனால் பண்டைய அறிஞர்கள் நாள் பார்த்தல், நேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல், குறி பார்த்தல், குறி கேட்டல் போன்றவைகளை மூட நம்பிக்கைகள் என்பதை மறுத்து

"எண்ணிய எண்ணியாங்கு எய்துர் எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்"

(குறள் - 666)

திருவள்ளுவர் உரைக்கிறார்.

எரிநட்சத்திரம்: எரிநட்சத்திரம் எரிந்து விழுந்த 7ஆம் நாள் சேர மன்னன் இரும்பொறை இறைவனடி எய்தினார்.

எரிநட்சத்திரம் எரிந்து வீழ்வது கெட்ட சகுனமென நம்பினர்.

வறுமை:

தமிழர்களின் வறுமையைச் சித்தரிக்கும் இடத்திலும் உண்மையைக் குறிக்கிறது சிறுபாணாற்றுப்படை

"திறவாகக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குறைக்கும் புல்லென் அட்டில்."

(சிறு.பா.130-132)

நாட்டுப்புறப்பாடல்கள்:

தமிழர்களின் நாட்டுப்புறப் பாடல்கள் பலவிதப் பண்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன இவை பரிணாம வளர்ச்சிக்கு வித்திடுகின்றன.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிழையும்"

என இந்தத் திருவாசகப் பாடலை உயிரியல், தாவரவியல், பறவையியல், பற்றி வர்ணிக்கப்படுகிறது.

ஊழ்வினை:

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்"

சிலப்பதிகாரம் பதிகம் 55-57

ஆகிய மூன்று கருத்துகளையும் பண்பாடாகக் காட்டுகின்றார்.

அக்காலத்தில் வாழ்ந்த சான்றோர் பெருமக்கள் பலர், பொதுமக்கள், ஆகியோர் மறுமைப் பயன் கருதி இம்மையில் அறம் செய்வர் என்பதனை

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக என்பதால் அறியலாம்

(புறநானூறு - 13)

என்ற புறநானூறு வழி மக்களின் பண்பாட்டினை அறியலாம்.

தமிழுறவு மன்றத்தின் தமிழ்த் தொண்டு

ஞான ஒளி திருத்தொண்டர் வி.ஜி. சந்தோசம்

எண்ணத்தில் எழுச்சியூட்டும்
இறையருள் பெற்ற என்னருமைத் தமிழா
எல்லோரும் ஞான ஒளியோடு
மனித நேயத்தோடு வாழ
இறை யொளியை வேண்டி மகிழ்கின்றேன்
அன்னைத் தமிழுக்காக
அல்லம் பகலும் அயராதுழைத்து
அனைவருக்கும் தமிழுணர்வு ஊட்டு
என்னருமைச் சகோதரர்
கவிஞருக்குக் கவிஞன்
கன்னித் தமிழாகக் காட்சி கொடுப்போன்
கவிமனம் கொண்ட பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமனுக்கு
வண்டமிழால் வாழ்த்தி மகிழ்கின்றேன்
நடமாடும் ஔவையாகவும்
நானிலம் போற்றும் நற்றமிழ் விளக்காய்
மிடுக்கு மீசையுடன் துடுக்காய் பணிசெய்யும்
அன்பின் மாமணியாக
தூய நல் தமிழ் ஆசான்
நம் பியை மனதில் கொண்டான்
சக்தியை நினைத்து சாதனை செய்யும்
சர்வ மதங்களையும்
மத நல்லிணக்கத்தோடு மனதாரப் பாராட்டி
உலகத் தமிழால் உயர்த்துவோம்
என்ற உன்னத நோக்குடன்
பேங்காக் மாநகரில்
நான்காம் உலகளாவிய மாநாடு
நடைபெறுவதைக் கண்டு மகிழ்ந்தேன்!
நாலா தேசத்து அறிஞர்களும்
அறிவுச் சான்றோர்களும்
ஆன்மீகத் தலைவர்களும்
அமைச்சர் பெருமக்களும்
பெரும் பொருள் கொண்டோர்
அனைவரும் கலந்து கொள்ளும் மாநாடு
காலத்தால் அழியாப் பொக்கிஷமாக
ஈரடி நாயகன் அமுது போல்
வாழ்க வாழ்க வென
சந்தன மணங்கமழ
பன்னீர்மணம் வீசி பரிக்கா மலர் தொடுத்து
ஞான ஒளி நல்லாசியுடன்
சகோதரர் கவிச்சக்கரவர்த்தி
வாழ்த்தினேன் கவிதை
மலர் மனத்துடன்

"ஊழின் பெருவலி யவுஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந் துறும்"

(திருக்குறள் - 380)

என ஊழின் வினையைக் குறிக்கின்றது. சாதியம் பற்றியக் கொள்கை

"நீர் வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய"
"நீர் வாழ் சாதியுள் தந்தும் ஒன்றும்"

என்பதால் அறியலாம். சாதி என்பது தண்ணீரில் வாழும் உயிர்களைக் குறிப்பிடு கின்றன. சாதி என்ற சொல் தமிழில் இல்லை.

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"

-என்ற தெல்காப்பியச் சூத்திரம் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோரின் தொழில்களைக் குறிக்கிறது:

உலகப் பண்பாடு:

தமிழ் மக்கள் தமது உயிர் போனாலும், எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பார்கள். எவ்வளவுத் தொகை பரிசாகக் கிடைத்தாலும் பழி தரும் செயலைச் செய்ய மாட்டார்கள். பொறுத்துப் போகும் பண்பினர். தம்முடைய நன்மையைக் கருதாமல் கொள்கையிலே உறுதி யானவர்கள். பிறர் நன்மைக்காக உழைக்கும் நல்ல பண்பினர். இத்தகையோர் இவ்வுலகில் உள்ளதனால் இன்பம் உண்டு. இதனை

"உண்டாரல் அம்ம இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகு உடன் பெறினும் கொள்ளலர்; அயர்வு இலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே

(புறம் - 182)

எனப் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் பண் பாட்டை விளக்கும் பாடல் இது. தமிழ் நாட்டி னர்க்கு மட்டும் அன்று, இது உலக மக்கள் அனைவர்க்கும் உரிய பண்பாடாகும். ✳

தொன்மைத் தமிழ்மொழி இலக்கியங்களில் அண்மைக் காலச் சிந்தனைகள்

-இரா. வரலட்சுமி-

முன்னுரை:-

தொன்மைத் தமிழ்மொழி இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளில் காணப்படும் ''சுற்றுச் சூழல் விழிப்புணர்வு என்ற கருத்தை அண்மைக் காலச் சிந்தனையாளர்களின் விளக்கங்களுடன் காண்போம். இன்று உலக மக்களின் ஒருமித்த குரலாக ஒலிப்பது சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பாகும். இதனை வள்ளுவர் புறத் தூய்மை, அகந்தூய்மை என்று பிரித்து ஒரே குறளில் கூறுகிறார்.

''புறம் தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும் (கு.298)

தூய்மை:

தூய்மை உணர்வு என்பது எண்ணம், செயல், தனி மனித வாழ்க்கை, குடும்பம், நாடு உலகம் என்று படிப்படியாக வளரும். புறம் தூய்மைக்கும் பெரிதும் பயன்படுவன நீர், நிலம், காற்று ஆகும்.

''நீர் இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாதுஒழுக்கு (கு20.அ.2.)

நீர் இல்லாமல் உலகவாழ்க்கையில்லை மழையில்லாமல் மனித ஒழுக்கமில்லை என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

''புறத்தூய்மை நீரான் அமையும்'' (கு.28)

நம் அன்றாட வாழ்க்கை பயன்பாட்டுக்கு நீர் தேவைப்படுகிறது. தூய்மையான நீர் அவசியம். நீர் மருந்தாகவும் பயன்படுகிறது. நீரின் தன்மை குளிர்ந்திருப்பது தான். குளிர்ந்த நீரில் குளித்தால் சுகமாக இருக்கும். குளிர்ந்த நீரும் தீமை தருமானால் பயன் படுத்தக் கூடாது என்பது வள்ளுவரின் கருத்து.

''நிழல் நீரும் இன்னாத இன்னா தமர்தீரும்
இன்னாவாம் இன்னா செயின் (கு881)

கிராமங்களில் ஒரே நீர் நிலையில் குளித்தல், துணி துவைத்தல், மாடுகளை குளிப்பாட்டுதல், சமைக்க, குடிக்க பயன்படுத்துதல் வழக்கமாக உள்ளது. இம்முறை சுகாதார கேடு ஆகும். இக்கருத்தைத்தான் வள்ளுவர் குறளும் சுட்டுகிறது.

நிலத்தடி நீர்:-

இன்று உலகம் முழுமையும் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் விழிப்பாக உள்ளது. நிலத்தடி நீர் குறையுமானால் பயிர் தொழில் சிறக்காது. உயிரின வாழ்க்கைக்குத் தேவையான நீர்வளம் கிடைக்காது. குப்பைக் கூளங்கள், வேதியல் பொருட்கள், அசுத்த நீர்கசிவு போன்றவற்றால் நிலத்தின் இயல்பால் நீர்மாறி, நச்சுத்தன்மை பெறும் என்பது அறிவியல் அறிஞர்களின் கருத்து. வள்ளுவருக்கு இக்கருத்து உடன் பாடாகும்.

''நிலத்து இயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனந்த இயல்பது ஆகும் அறிவு'' (கு.452)

நீர்நிலைகள்:-

மழையே மாசு கட்டுப்பாட்டுக்கும் காரணமாக அமைகிறது எனலாம். நீர் நிலைகளின் கரையை உயர்த்த வேண்டும். உயர்த்தினால் தான் நீர் மட்டம் உயரும். மழைநீர் வீணாகாமல் காக்கபடும் என்பதாகும். பாண்டிய மன்னன் வைகைக்கரையை உயர்த்திய வரலாறு அறிவோம். இன்று கலைஞர் ஆட்சியிலும் நீர் நிலைகளை ஆழப்படுத்தும் பணியும், கால்வாய்கள் தூர் வாரும் பணியும் நடைப்பெறுவதை செய்திகள் வாயிலாக அறிகிறோம். இக்கருத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் தெளிவாக கூறுகிறார்.

''அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந்து அற்று''

மழைவளம் குறைந்தால், நாட்டில், பஞ்சம், பட்டினி தொற்றுநோய் போன்றவை

நிகழ வாய்ப்புண்டு, இதைத் தவிர்க்க அறிவியல் அறிஞர்கள் செயற்கை மழையை உண்டாக்கு கிறார்கள். மழை குறைந்தால் நீண்ட கடலும் தன் வளத்தில் குறையும் என்கிறார் வள்ளுவர்.

''நெடும்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி
நீர்நல்காது ஆகி விடின்'' (கு17)

கடர்நீரின் அளவு குறைய உப்பின் அளவு அதிகமாகும். உப்பின் அளவு 2 சதவீதம் என்றால் 3 (அ) 4 சதவீதமாக உயரும், இந்த மாற்றத்தால் கடல் வாழ் உயிர் இனங்கள் அழியவும், இடம் பெயரவும் வாய்ப்புண்டு. இதனால் சுற்றுப்புறச் சுழல் பாதிக்கப்படும்.

நெடும்கடல் - பரந்து விரிந்த கடல்

காடுவளர்ப்பு, காற்றுத்தூய்மை:

தூய்மையான காற்றை பெற மரம் அவசியம். மனிதன் இயற்கையின் நுட்பக் கூறு. இயற்கையின் செயற் பாடுகளுக்கு எற்ப அவனுடைய செயல்பாடுகள் அமையும். சிற்றெறும்பு 10 அடுக்கு மாளிகையை தரை மட்டம் ஆக்குவேன் என்றால் அது சாத்திய மன்று. உலகளவில் இது ஓர் அற்பம் இந்தனைப் பெரிய உலகம் பார், அதில் நீ இத்தனை கொய்யா பிஞ்சு'' என்றார் இயற்கையை எதிர்ப்பதால் பல துன்பங்களுக்கு ஆளாவதுடன் மனநிலையும் பாதிக்கப்படுகிறது. இயற்கை செழிப்பான வளத்தையும், வளமாக இருந்தால் அது சமுதாயத்திற்குச் செய்யும் சேவையின் மதிப்பு சுமார் ரூ.15.90 இலட்சமாகும் என்கிறார் கல்கத்தா வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் டாக்டர் டி.எம்.தாஸ் அவர்கள்.

காடுகளை அழித்ததன் விளைவு நிலச்சரிவு ஏற்பட்டது. மழைபெய்யாத் துன்ப நிலை ஏற்படுகிறது. வள்ளுவர் காடு என்றால் நன்கு தழைத்து இருக்கவேண்டும். போகின்ற இடங் களுக்கு எல்லாம் நிழலாக இருக்க வேண்டும். பட்டை உரிக்கப்பட்டு மொட்டை அடிக்கப் பட்டதாக இருக்கக் கூடாது. அதுவே நாட்டுக்கு அரண் ஆக அமையும் என்றார்.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண் (கு742)

ஒரு தனிமரத்தின் நிழல் பத்து குளிர்சாதன பெட்டிகள் ஓடுவதற்கு சமம் என்பது ஆராய்சி யாளர்களின் கணிப்பு.

காற்று மாசுபடுதல் :-

காற்று மாசுபட்டால் உயரின வாழ்க்கைப் பாதிக்கப்படும். காற்று வீசும் இடத்திற்கு ஏற்ப தன்மை மாறுபடுகிறது என்பது வள்ளுவரின் கருத்து. காற்று மாசுபடாமல் இருக்க வேண்டும்.

''அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல் மாஞானம் கரி' (கு246)

நம் நாடு இயற்கையாகவே மூலிகை களும், மருந்து மரங்களும் நிறைந்தது இங்கு வீசும் காற்று மருந்து மரங்களின் தன்மையால் மருத்துவ குணம் பெற்று நோய் தடுக்க உதவு கிறது. இக்கருத்தை வள்ளுவர் கீழ்க் காணும் குறளின் மூலம் விளக்குகிறார்.

''மருந்தாகித் தப்பா மரத்துஆற்றல் செல்வப்
பெருந்தகை யான்கன் படின்'' (கு.217)

அறிவியல் வளர்ச்சிக்காரணமாக தொழில் பெருகிவிட்டன. அவற்றில் இருந்து வெளி வரும் நச்சு காற்று 'ஓசோன்' படலத்தை அழித்து பூமிக்கு ஆபத்தை உண்டாக்கிக் கொண்டிருக் கிறது. மாசுபடும் காற்று மேகத்தோடு கலக்கும் பொழுது அமிலத்தன்மை பெறுகிறது. மழை பெய்யும் பொழுது இந்த அமிலத் தன்மையும் சேர்ந்து பொழிவதால் காடு அழிகிறது.

வளைகுடாப் போரில் 50க்கு மேற்பட்ட எண்ணைக் கிணறுகள் எரிந்தன. அதனால் நாள் ஒன்றுக்கு 7,65,000 டன் எடையுள்ள புகைக்கரி ஆகாயமண்டலத்தில் 1600 மீ. பரப்பை ஆக்கிர மித்துள்ளதாக செய்தி குறிப்புவெளியானது. கடல் வாழ் உயிரினங்கள் அழிந்தன. காற்று மாசுபடுவதுடன் சுற்றுப் புறச்சூழலும் பாதிக்கப் பட்டது. வண்டிப் புகைகள், கடுமையான சத்தங் கள், மனித உறுப்புகளை பாதிக்கச் செய்கின்றன. நச்சுத் தன்மையால் சிவப்பு அணுக்கள் சாகடிக்

பாதை ஒன்று அமையாதா

கவிக்குயில் பொன்.அய்யனாரப்பன்

ஐந்தரும் இலக்கணம் அவனியில் பெற்றது தமிழ்ஒன்றே
வியந்து போற்றும் வேந்தர் மூவரைப் பெற்ற மொழி
நைந்து போனது நஞ்சுளம் கொண்டவர் வருகையினால்
பைந்தமிழ் விழுங்கப் பாய்ந்தன பிறமொழி கொஞ்சமன்றோ!

ஆண்ட தமிழினம் அடிமை பட்டவராய்ப் போனாரோ?
பூண்ட பெருமைகள் புதையுறக் கண்டவர் நொந்தாரோ?
தூண்டத் தலைமை துணைவர இலாதவர் வீழ்ந்தாரோ?
கூண்டுக் கிளியாய்க் கொடியவர் பால்சிறைப் பட்டாரோ?

சிலம்பு மேகலைச் சீரணி பூண்டவள் தமிழன்னை
நிலம்பல வியக்கும் நெடுங்குறள் கண்டவர் வள்ளுவர்
உலகத்து உறவை ஓங்கியே உரைத்தவர் பூங்குன்றன்
பலம்பெற வைத்தவர் பாரதி தாசனாம் மாப்புலவன்

அழிந்து சிதைந்தது அன்னியர் பற்பலர் படையெடுப்பால்
விழுந்து கிடந்தது வீழ்ச்சி கண்டது மதக்கலப்பால்
எழுந்து நடந்தது இதய வேந்தன் அண்ணாவால்
செழித்துக் கொழுத்துச் சிறந்தது கலைஞர் மொழிவளத்தால்!

வேலை இலாமல் வீதியில் அலைவது சிறப்பாமோ?
கோலைப் பிடித்தவர் குடியை மறத்தல் மரபாமோ?
வாலைப் பிடித்து நல் வாழ்வைக் காண்பது மற மாமோ?
பாலை வனத்தில் பயணம் போவது மகிழ்வாமோ?

உழைப்பைத் தந்தவர் ஒதுக்கப் படுதல் முறையாமோ?
விழுப்புண் சுமந்தவர் வீதியில் கிடப்பது ஒழுங்காமோ?
தழைக்க வைத்தவர் தரித்திரம் அடைவது சால்பாமோ?
அழைத்துச் சென்றவர் அடித்து உதைப்பது அழகாமோ?

கூலித் தமிழர் குருதிக் கண்ணீர் நிற்காதா?
போலித் தமிழர் புன்மை பலவும் ஒழியாதா?
ஆலைத் தமிழர் அவலம் முற்றிலும் மாறாதா?
வேலித் தமிழர் விடுதலை உணர்வுகள் பொங்காதா?

எங்கும் எதிலும் என்றும் செந்தமிழ் துலங்காதா?
பொங்கிப் பெருகும் புதுப்புனல் ஆறாய் ஓடாதா?
கங்குல் கிழிந்துக் கதிரொளி ஏற்றி வைக்காதா?
தங்கிடத் தரணியில் தனியிடம் ஒன்று கிடைக்காதா?

ஈழத் தமிழர் இன்னல் மறைவது எந்நாளோ?
வேழத் தமிழர் வீரப் போர்பல புரியாரோ?
பேழைத் தமிழர் பெருமை மீண்டும் திரும்பாதோ?
ஊழை வென்றே உலகைத் தமிழ் மொழி ஆளாதா?

அறிவியல் மொழியாய் அன்னைத் தமிழ்மொழி ஆகாதா?
துறைதொறும் தமிழ்மொழி தொல்தமிழ் நாட்டை ஆளாதா?
செறிவுறும் பொறியியல் சிந்தனை கோடிகள் மலராதா?
நிறைவுறும் தொழில் துறை நிமிடம் தோறும் வளராதா?

கணினி மொழியாய்க் கவின்தமிழ் மாறிட உழைப்பாரோ?
கணினி நுண்பொறி கணக்கிடும் கணித்திறன் தெளிவாரோ?
கணினி மயத்தைக் கைகளில் ஏற்றவர் உய்வாரோ?
கணினி காலக் கண்ணாடியாய் தாமென நினைப்பாரோ?

உலகத் தமிழர் உணர்வுகள் ஒன்றாய்க் கலக்காதா?
கலகம் தவிர்த்த கருணை அன்பறம் சூழாதா?
அலுத்துப் போனவர் அகங்களில் அமைதி பெருகாதா?
பலமுடன் செல்லும் பாதை ஒன்று அமையாதா?

கப்பட்டு வியாதிகள் உண்டாகுகின்றன. செயற்கை, இயற்கையை பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்தாகும்.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்த செயின்" (குறள்-637)

வள்ளுவர்எல்லாநிலைகளிலும்தூய்மையை விரும்புகிறார். மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவராக விளங்குகிறார். வள்ளுவரின் கருத்து கள் இன்றைய அறிவியல் அறிஞர்களின் அறிவி யல் சிந்தனையுடன் ஒத்திருப்பதைக் காணலாம் புறத்தூய்மை என்பது, வீட்டின் தூய்மை, நீரின் தூய்மை, நிலத்தடிநீர் பாதுகாப்பு, காடுவளர்ப்பு, காற்றின் தூய்மை, காற்று மாசுபடாமல் இருத் தல் செயற்கை இயற்கையை கெடாமல் செயல் படுதல் ஆகியனவாகும்.

அகத் தூய்மையையும் வள்ளுவர் வலியுறுத்துகிறார். மனம் செம்மையாக இருந் தால் உடல் நலம் பாதிக்காது இது தான் இன்றைய மருத்துவர்களின் கூற்றும் ஆகும். மனத்தைச் செம்மைபடுத்த தியானம், யோகம் போன்ற பயிற்சிகள் வலியுறுத்தப்படுகின்றன. மனக் கட்டுப்பாடு இருந்தால் உலகில் எதையும் சாதிக்கலாம். மேற் கூறிய செயல்களை நாம் கைக்கொண்டு வாழ்ந்தால்'' வையந்துள் வாழ் வது திண்ணம். இன்றைய அறிவியல் சிந்தனையோடு வள்ளுவன் வகுத்த நெறியைக் கடைப்பிடித்து வாழ்வோமாக.

திருக்குறளில் சமயச் சார்பு இன்மை

-சந்திரா கருணாகரன்-

சமயம் என்பது தனிமனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்புகளை அனுபவங்களை, நடைமுறைகளைக் கூறுவது எனலாம். இந்த வகையில் திருக்குறள் சமயம் சார்ந்த நூலா? எந்தச் சமயத்தைச் சார்ந்துள்ளது? இதை எப்படி அறிந்து கொள்வது? இவைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

படைப்பாளன் தனது கருத்துகளை தான் எழுதும் நூலில் ஏற்றிக் கூறாமல் இருக்கமாட்டான். அப்படியானால் திருவள்ளுவரும் திருக்குறளில் அதுபோல் ஏதேனும் கூறியுள்ளாரா? என், எம், நாம், யான் என்ற குறியீடுகளில் ஏதேனும் சமயக் கருத்துகளைக் கூறியுள்ளாரா? சமயக் கருத்துகள் உள்ளனவா? என்று திருக்குறளை ஆராய்ந்து பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

என்: என்னும் சொல் திருக்குறளில் 66 இடங்களில் உள்ளன. அவற்றில் 32 இடங்களில் ''என்ன'' ''எவை'' என்ற பொருளிலும் 33 இடங் களில் காமத்துப்பாலிலும் தலைவன் தலைவி கூற்றாக வருகின்றது. 771 குறட்பாவில் போர் வீரனைச் சுட்டி உள்ளது.

எம்: 15 இடங்களில், 14 இடங்கள் காமத்துப் பாலிலும் 790 ஆம் குறட்பாவில் நட்பு பற்றி கூறப்பட்டுள்ளது.

நாம்: 1195-ஆம் குறட்பாவில் தலைவன் கூற்றாக வருகின்றது.

நான்: என்று எங்குமே சுட்டப்படவில்லை.

யான்: 15 இடங்களில், 13 இடங்களில் காமத்துப் பாலிலும் 2 இடங்களில் பொது, நட்பு பற்றியும் கூறப்பட்டுள்ளது.

யாம்: 300-வது குறளில் வாய்மை குறித்து வருகின்றது. மேற்கண்டவற்றிலிருந்து திருவள்ளுவர் திருக் குறளில் எந்த சமயத்தைப்பற்றியும் குறிப்பிட வில்லை என்பது புலனாகின்றது. ஆனால் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், கிறித்துவம் ஆகிய சமயங்கள் திருக்குறள் எங்கள் சமயத்தைச் சார்ந்த நூல் என உரிமை பாராட்டுகின்றன.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)

சமணம்: ஆதிபகவன் என்ற சொல் இடப தேவரையே குறித்து வள்ளுவர் எழுதியுள்ளார். எனவே திருக்குறள் சமண சமய நூல் எனக் கூறுபவர் தமிழ் ஒளி. 24 தீர்த்தங்கரர்களில் முதல்வரைக் குறிப்பதே ''ஆதிபகவன்'' எனக் கூறுவர். தி. அனந்தநாதர், ஸ்ரீபால், தி. அனந்தன், எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோரும் இக்கருத்தினரே.

மறுப்பு: திருக்குறள் சமண நூல் அல்ல. துறவறம் விரும்பும் சமணர்களுக்கு காமத்துப்பால் பொருந்துமா? என மறுத்துள்ளார் செல்வி காமாட்சி சீனிவாசன். திருக்குறள் சமண நூல் அல்ல என மறுத்துள்ளார் ஆல்பர்ட் சுவைட்சர்.

பௌத்தம்: 'ஆதிபகவன்' புத்தரையே குறிக்கும். ''மலர்மிசை ஏகினான்'' என்ற சொல்லும் புத்தரைக் குறிப்பது என்பவர், டாக்டர் ந. கந்தசாமி.

மறுப்பு: இக்கருத்தினை மறுத்துள்ளார் ஆல்பர்ட் சுவைட்சரும், கு.ச. ஆனந்தன் அவர்களும், வள்ளுவரின் பொருட்பால் பாகுபாடுபோல் பௌத்தப் பனுவல்களில் விளக்கம் இல்லை எனக் கூறியுள்ளார்.

சைவம்: ''ஆதிபகவன்'' என்ற சொல் ஆதிபரமேசுவரனையே குறிப்பது. எனவே திருக்குறள் சைவ நூல் என்பார்கள் அரசஞ் சண்முகனார், ஈசுவரமூர்த்தி, க.வெள்ளை வாரணன், இராம. அண்ணாமலை, சிவலிங்கம் ஆகியோர்கள்.

மறுப்பு: உயிர்களுடன் கடவுள் இரண்டற கலந்திருப்பது, மாயை இன்மை, கடவுள் 8 வடிவங்களில் இல்லை. 36 உருவ வழிபாடுகள் இல்லை என மறுப்பவர்கள் வீ. அரங்கநாதன், செல்வி காமாட்சி சீனிவாசன்.

வைணவம்: அடிஅளந்தான், தாமரைக்கண்ணன் இரண்டும் திருமாலுக்குரிய பெயர்கள். திருக்குறள் வைணவ நூல் என்பவர் சி.வேங்கட சாமி. மனுநூலை ஆதாரமாகக் கொண்டு திருக்குறளில் உள்ள ''ஆதிபகவன்'' நாரா யணனே என்பவர் புருசோத்தமன். 'அறவாழி அந்தணன்'' திருமாலைக் குறிக்கும் என்பவர் கி.வேங்கடசாமி.

மறுப்பு: அடிஅளந்தான், தாமரைக்கண்ணன், செய்யாள் என்றும் சொற்கள் வள்ளுவர் காலத்தில் மக்கள் நடைமுறையில் பயன் படுத்தின. மக்கள் புரிந்து கொள்ளும்படி குறியீட்டுச் சொற்களாகவே இவற்றைத் திருவள்ளுவர் பயன்படுத்தி உள்ளார். கடவுள் வாழ்த்துப் பகுதியில் இவை வரவில்லை என மறுப்பவர்கள் டாக்டர் சஞ்சீவி, கு.ச. ஆனந்தன், செல்வி காமாட்சி சீனிவாசன் ஆகியோர்.

கிறித்துவம்: ''ஆதிபகவன்'' இயேசுவையே குறிக்கும். ஈகை, பிறர் தீமைகளை மறுத்தல், பணிவுடைமை ஆகியவை இயேசுவின் அருளுரை போல் உள்ளன என 9 புத்தகங்கள் வெளியிட்டுள்ளார் மு. தெய்வநாயகம் என்பார். ஜி.யு.போப், ஏரியல் என்பார்களும் இக் கருத்தினரே.

மறுப்பு: இவர்களது கருத்துகளை பல அறிஞர்கள் மறுத்துள்ளனர். ஈகை, பிறர் தீமைகளை மறத்தல், பணிவுடைமை ஆகியவை ஐரோப்பா வுக்குப் புதிது அல்ல.

''ஆதிபகவன்'' எப்பொருள் உண்டாவதற்கும் ஒரு மூலப் பொருள் காரணமாக அமையும். அம்மூலத்தையே திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்பவர் சீயெஸ்ஸார்.

மேற்கண்ட உண்மைகள், திருக்குறளில் எல்லாச் சமயத்தினரும் ஏற்கும் கொள்கையும், மறுக்கும் கொள்கையும் உள்ளன என்பதைப் புலப்படுத்துகின்றன. இதுவே திருக்குறள் சமயச் சார்பின்மையை உறுதிப்படுத்துகின்றது எனலாம். பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான். (972) இக்குறள் நமக்கு வள்ளுவரின் உலகை ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கின்றது எனலாம். இகல் என்று அதிகாரம் முழுவதிலும் பிரிவினை ஒழிய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். 'என' 'எனது 'நம்' 'நமது' என்று இல்லாமல் பொது நலம் விரும்புவர் திருவள்ளுவர். கடவுள் வாழ்த்து அதிகாரத்திலும் எச்சமயமும் சாராமல் எம்மதத்தினரும் விரும்பும் வகையில் கடவுளின் எட்டுக் குணங்களைக் கூறியுள்ளார்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (280)

இக்குறப்பாவில் சமயங்களின் வெளித் தோற்றத்தைச் சாட்டியுள்ளார். சார்பு வேறு. தழுவல் வேறு. சார்பு இன்றி வாழ வேண்டும் என

சார்புணர்ந்த சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய் (359)

என சார்பு இன்மை கூறியுள்ளார். சமயச் சார்பு இல்லை எனிதும், கடவுள் கோட்பாட்டை வலியுறுத்தியுள்ளார். திருவள்ளுவர் காலத்தில் அருள்முதல் வாதிகள், பொருள்முதல் வாதிகள் வாழ்ந்திருப்பர். திருவள்ளுவரும் ஏதோ ஒரு சமயத்தைச் சார்ந்தவராகவே இருக்கக்கூடும். எனினும் திருக்குறளில் எந்தச் சமயச் சார்பையும் குறிக்கவில்லை. இது மிகவும் வியப்பானதே.

திருவள்ளுவர் எல்லாச் சமயங்களின் போக்கையும் அறிந்திருக்கக் கூடும். எனவே சமயம் சாராத பொதுமறையைத் தமிழில் யாத்து உலகும் ஈந்தார்.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என வள்ளுவரின் சிறப்பை நளிற்ற பாடிய பாரதியார்

மனித இன ஒருமைப்பாடு கருதி இங்ஙனம் யாத்துள்ளார் என்றே கூற வேண்டும். ஒன்றே உலகம், பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும், உலகளவில் இகல் நீக்கி அன்பும் ஒற்றுமையும் ஓங்கி யாவரும் ஆதியில் ஒரு தாயின் மக்கள் என உணரும் வழியில் திருக்குறளை எழுதியிருக்கின்றார். எனவே திருக்குறள் சமயச் சார்பு இல்லாத உலகப் பொதுமறை எனலாம்.

உங்கள் வீட்டில் இருந்தவாறே, அஞ்சலில் ஆணை அனுப்பி, எந்த ஒரு தமிழ் நூலையும் நீங்கள் விலை கொடுத்து அஞ்சலில் பெறுக.

உலகில் எந்த வெளியீட்டாளர்களிடம் உள்ள எந்தத் தமிழ் நூலையும் இருப்பிலிருப்பின் விலைக்குத் தருவோம்.

மின்னம்பலத்தில் **tamilnool.com** இத்தொகுப்பைக்காணலாம்.
விபரங்களை மின்அஞ்சலில் பெறத் தொடர்பு கொள்க: **sachi@giasmd01.vsnl.net.in**

குறிப்பு: நூல் வெளியீட்டாளர், சிறு பதிப்பகங்கள், நூலாசிரியர் யாவரும் தம் வெளியீட்டு விபரங்களை அனுப்புக. எமது தொகுப்பில் இணைத்து விற்பனையைப் பெருக்குக.

20,000க்கும் அதிகமான, விற்பனைக்காக இருப்பில் உள்ள தமிழ் நூல்களைப் பற்றிய விபரங்களைக் கணிப்பொறியில் தொகுத்துளோம். நூலாசிரியர் வாரியாக, நூல் தலைப்பு வாரியாக, பின்வரும் *40 பாடவாரிப் பட்டியல்*களையும் விலைக்குத் தருவோம்.

அகராதி > 125, அரசியல் > 300, அறிவியல் > 400, இசை > 80,
இதழியல் > 50, இலக்கணம்-மொழியியல் > 160, இலக்கியம் > 1500,
இல்லம் > 225, உளவியல் > 50, ஓவியம் > 40, கல்வி > 40,
கவிதை > 500, காதல்-காமம் > 80, சட்டம் > 100, சமயம் > 2000,
சமூகம் > 200, சமையல் > 200, சிறுகதை-நாவல் > 3200, சிறுவர் > 1300,
சோதிடம் > 500, தத்துவம் > 175, திரை > 60, தையல் > 40,
தொழில் > 200, நகைச்சுவை > 125, நாடகம் > 80, நுண்கலை > 20,
நூலகம் > 15, பயணம் > 100, பாடநூல் > 200, புவியியல் > 100,
பொதுஅறிவு > 175, பொருளியல் > 50, பொன்மொழி > 80, மருத்துவம் > 800,
முகாமை-தன்னம்பிக்கை > 550, வாழ்க்கை வரலாறு > 600, வரலாறு > 200,
விளையாட்டு-உடற்பயிற்சி > 100, வேளாண் > 75.

உலகின் மிகப் பெரிய தமிழ்நூல் அங்காடி

காந்தளகம்

834, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 853 4505
41, அஞ்சலக வீதி சாவகச்சேரி, யாழ்ப்பாணம்

நான்காம் மாநாட்டில் நடைப்பயண நினைவுகள்

-நடைப்பயண அரிமா, இல. பழனிமுத்து-

தமிழ் நாட்டில் கல்வித்துறையில், ஆட்சித்துறைகளில், நீதி மன்றங்களில், திருக் கோயில்களில் அனைத்துத் துறைகளிலும் நம் தாய் மொழியாம் தமிழ் மொழியே முன்னிலையில் இருக்க வேண்டும், செயல் படுத்த வேண்டும் என்று கோரி, பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் முனைவர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஐயா அவர்கள் தலைமையில் தமிழ் நடைப் பயணம் நடந்ததை இக்கட்டுரை நினைவுகூர்கிறது.

சுடரொளி துணைத் தேடாமலேயே இருட்டிலும் ஒளிரும் இரேடியம் போன்ற தமிழ்ப் பற்றுமிக்க பெருங்கவிக்கோ அவர்கள் கன்னியாகுமரி முதல் சென்னை வரை, 50 நாட்கள் 12.2.93 முதல் 30.3.93 வரை, 1,500 கி.மீ தூரம் 200 க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர், ஆர்வலர்களுடன் தலைமையேற்று வீறு நடைபோட்டு வந்தார்.

இதை ஆரம்பிப்பதற்கு முன்பு நடந்த சில செயல் முறைகளையும் அறிதல் அவசியம். தமிழ்நாட்டில் மொழிப் பற்று மங்கி வருவதைக் கண்ட பெருங்கவிக்கோ அவர்கள் மனம் சோர்வுற்றார். பின்பு மங்கிக் கொண்டிருக்கும் மொழிப் பற்றை தமிழ்நாட்டின் பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர், நகரங்களிலெல்லாம் தமிழ் எழுச்சியை ஏற்படுத்துவதற்காக தமிழகம் முழுவதும் நடந்தே ஏற்படுத்த வேண்டும் என்றுதான் இந்த நடைப்பயணத் திட்டத்தை வழிவகுத்தார்.

இதுபற்றிமுதன் முதலில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களிடம் அனுமதி வேண்டினார். அதற்கு அவர் பெருங் கவிக்கோ இது சாதாரணமான காரியமல்ல, இதற்கு நிறைய ஆட்கள் வேண்டும், பணம் வேண்டும் இதற்கெல்லம் நீங்கள் என்செய்வீர்கள்? ஒருவேளை தமிழ்நடைப்பயணம் பாதியிலேயே நின்றுவிட்டால் அந்த அவமானம் உங்களுக்கல்ல; தமிழ் மொழிக்குதான் அவமானம் ஏற்பட்டுவிடும் என்று கூறி அனுமதி தர மறுத்தார். பின்பு மாண்புமிகு தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர் அவ்வமயம் அமைச்சர் அல்ல. முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்களை சந்தித்துவிட்டு பின்பு மீண்டும் முத்தமிழ்க் காவலரிடம் சென்று ஒரு வழியாக அனுமதி பெற்றார்.

பின்பு நடைப்பயண ஆயத்தப் பணிகள் தொடங்கின அச்சமயத்தில் தான் நான் தமிழ் நடைப்பயணத்தில் கலந்துகொள்ள முதலில் பெயர் கொடுத்தேன். பணிகளும் செம்மையாக நடைபெற்றது. அண்ணன்வா.மு.சே திருவள்ளுவர், வா.மு.சே ஆண்டவர் ஆகியோர் அல்லும் பகலும் அயராது பாடுபட்டனர்.

9.2.93 அன்று நடைப்பயண இயக்கத் தலைவர் பெருங்கவிக்கோ அவர்களின் பிறந்த நாள் விழா, காதி கிராமோத்யோக் பவனில் நடைபெற்றது. மறுநாள் காலை 6 மணிக்கு திருமதி சேதுமதி அம்மாள் ஆரத்தி எடுத்து பெருங்கவிக்கோ தலைமையில் முதல் குழுவை கன்னியாகுமரிக்கு அனுப்பி வைத்தார்கள் 11.2.93 அன்று காலை அண்ணன் வா.மு.சே ஆண்டவர் அவர்கள் மற்றொரு குழுவை கன்னியா குமரிக்கு அழைத்துவந்தார்கள்.

11.2.93 மாலை 6.30 மணிக்கு தமிழ் நடைப் பயண இயக்க கொள்கை விளக்கக் கூட்டம், காந்தி மண்டபம் முன்பு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தலைவர் பெருங்கவிக்கோ அவர்கள் நடைப்பயணத்தின் நோக்கத்தை தெளிவுபட விளக்கினார். இக்கூட்டத்தில் முத்தமிழ்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசும் போது இக்காலத்தில் எழுதிக் கொண்டிருக்கும் புலவர்கள் மத்தியல், செயல் பட்டுக்கொண்டிருக்கும்

புலவர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஒருவரைத் தான் காண்கிறோம் என்று பெருங் கவிக்கோ அவர்களது செயலைப் பாராட்டினார்.

இக்கூட்டத்தில் நீதியரசர் பெ.வேணு கோபால் அவர்கள் நடைப்பயணக் குழுவி னருக்கு உற்சாகமளித்துப் பேசினார். கன்னியா குமரி மாவட்டம் முழுவதற்கும் பொறுப்பாக கல்வி வள்ளல் பேராசிரியர் ம.சங்கரலிங்க னார், தமிழாசிரியர் புலவர் பெருமாள் பிள்ளை, தியாகி மணி மற்றும் பல பெருமக்கள் நல்ல ஏற்பாடுகளைச் செய்தனர். இதற்கு தமிழாசிரியர் கழக மாநிலத் தலைவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் தமிழாசிரியர் கழகம் மூலமாக ஒத்துழைப்பளித்தார்கள்.

12.3.93 அன்று காலை சூரிய உதயத்தின் போது, தமிழ் நாட்டில் தமிழ் எழுச்சியும் உதயம்பெற்றது. காந்தி மண்டபம் முன்னிருந்து, தலைவர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் தலைமையில் அவர் நடைப் பயணத்தை முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி., நீதியரசர் பெ.வேணுகோபால் ஆகியோர் துவக்கிவைத்தனர். 200 க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர் கள், கல்லூரி பல்கலைக்கழக மாணவர்கள் அடங்கிப் படை வெற்றி முழக்கத்தோடு புறப்பட்டது.

''அன்னைத் தமிழே அரியணை ஏறு; ஆங்கிலமே வெறியேறு''

''வேண்டும், வேண்டும் அனைத்துத் துறைகளிலும் தமிழ்தான் வேண்டும்''

''தமிழ் வாழ்க'' தமிழா கட்சியை மற சாதியைமற மதத்தை மற!

''தமிழை நினை'' என்ற முழக்கமிட்டு நடந்து வந்தனர்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. அவர்களும், நீதியரசர் பெ.வேணுகோபால் அவர்களும் கன்னியாகுமரி நகர எல்லை முடியும் வரை நடந்துவந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

இவ்வாறு ஆரம்பித்த இத்தமிழ் நடைப் பயணம் சிறப்பாக நடந்து வந்தது. தலைவர் பெருங்கவிக்கோ அவர்களின் நோக்கம் வெற்றி பெறும் வண்ணம் பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர், நகரங்கள் அனைத்திலும் தமிழ் மக்கள் பெருவாரியான ஆதரவைத் தந்தார்கள்.

தமிழ்மொழிக்கு ஏற்பட்டுள்ள தாழ்வை ஏற்கமாட்டோம், இப்பொழுதே நம் தாய் மொழிக்குரிய உயர்வை பெற்றுத்தர ஒவ் வொருத் தமிழனும் உறுதிகொள்வோம் எனும் அடிப்படையில் தமிழ்ப் பெருமக்கள் பெருங் கவிக்கோ அவர்களுக்கும் நடைப் பயணக் குழுவினருக்கும் ஊக்கம் தந்தனர். ஒவ்வொரு ஊரிலும் மாலை மரியாதைகள், தமிழ் பண்பாட்டைச் சிறப்பிக்கும் வகையில் மேள, தாளங்கள் முழக்கி வாண வேடிக்கை செய்து வரவேற்று மகிழ்ந்தனர்.

இரவு தங்கும் ஊர்களிலும், மதிய உணவு உண்ணும் ஊர்களிலும் தமிழ் எழுச்சிப் பயண விளக்கக் கூட்டங்கள் நடைபெறும். இதில் பெருங்கவிக்கோ அவர்கள் சிறப்புரையாற்றுவர் கள், அந்தந்த ஊர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். அண்ணன் வா.மு.சே. தமிழ் மணி கண்டன் அவர்கள் நடந்து வரும்பாதை களில், மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில் தமிழ் முழக்கம் போடும் விதம் தனி சிறப் புக்குரியதாக விளங்கியது.

ஒவ்வொரு ஊரையும் குறிப்பிட்டு, உதவி யோர்கள் அனைவரையும் குறிப்பிட்டு எழுத கட்டுரை இடம்தராது என்பதால் பொறுத்தருள வேண்டும். விருது நகரில் இனமானப் பேராசிரியர் அவர்களின் இளவல் பேராசிரியர் திருமாறன் அவர்கள் நல்ல ஊக்கம் தந்தார்கள். பாளையங்கோட்டை அருகில் வரும்போது மரங்களே இல்லாத பாலைவனம் போன்ற பகுதியில் வந்து கொண்டிருக்கும்போது,

அப்போதைய தி.மு.க., மாநிலங்களவை எம்.பி, வை.கோ. அவர்கள் சந்தித்து நடைப்பயணக் குழுவை சந்தித்து நடைப்பயணக் குழுவை வாழ்த்தும் போது இன்று பாலைவனத்தில் நடந்து வரும் நீங்கள் தான், நாளை தமிழை சோலை வனத்தில் வைக்கப் போகிறீர்கள்''. என வாழ்த்தினார்.

பல்வேறு ஊர்கள் வழியாக திருப்பரங் குன்றம் அடைந்தோம், அங்கு கவிவேந்தர் மு. மேத்தா தலைமையில் கவியரங்கம் நடை பெற்றது. இங்கிருந்து மதுரை மாநகரம் வரை (தற்போதயை தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர்) முனைவர் மு.தமிழ்க் குடிமகன் அவர்கள் பெருங்கவிக்கோ அவர்களோடு நடந்துவந்தார் கள். அன்று இரவு நடந்த விளக்கக் கூட்டத்தில் அண்ணன் கவியரசன் குழந்தைக்கு ''தமிழ் நடைப்பாவை'' என்ற பெயர் சூட்டினார்.

மதுரையை அடுத்த கீரனூரில் குழுவந்த போது திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் சந்தித்து வாழ்த்துரை வழங்கி விட்டுச் சென்ற அடுத்த கணமே மறைந்த தவத்திரு குன்றக் குடி அடிகளார் அவர்கள் வந்து வாழ்த்தினார்கள். இந்த நிகழ்வானது தமிழ் மொழி என்றாலே ஆத்திக நாத்திக உணர்வுகள் அகன்று நாம் தமிழர்கள் என்ற உணர்வுக்கு எழுத்துக்காட்டாக அமைந்தது.

திருச்சி, தஞ்சாவூர் நகரங்களில் மீண்டும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. அவர்கள் வாழ்த்தினார்கள். இங்கு பள்ளி, கல்லூரி மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை நடத்தி வரவேற்றது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறு கடலூர் வழியாக புதுச்சேரிக்கு வந்தது தமிழ்ப்படை. இங்கு புதுச்சேரி மாநில முத லமைச்சர் மாண்புமிகு வைத்தியலிங்கம் அவர் கள் நேரில் வந்து வாழ்த்தினார்கள். புதுவை மாநிலத்தில் தமிழ்மொழிக்கு முதன்மை தருவோம். என்ற வாக்குறுதியை அளித்தார். மறுநாள் காலை புதுவை அமைச்சர் ரங்கசாமி அவர்கள் வழியனுப்பிவைத்தார்கள். அடுத்து கிரனூரில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ச.ராமதாஸ் அவர்கள் வாழ்த்தினார்கள். பின்பு திண்டிவனம் வழியாக சென்னை நோக்கி வெற்றிநடை போட்டு வந்தோம். மதுராந்தகத்திற்கு முன் 5.கி.மீ. தொலைவிலேயே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் பெருங்கவிக்கோ அவர்களைக் கட்டித் தழுவினார். பின்பு உடன் நடந்து வந்தார். மதுராந்தகத்தில் இரவு தமிழ் எழுச்சி விளக்கக் கூட்டத்தில் வாழ்த்துரை வழங்கினார் தமிழ் நடைப்பயணக் குழு மேல் மருவத்தூர் வந்தடைந்தார். அதுபோது அண்ணன் வா.மு.சே ஆண்டவர் அவர்களின் பிறந்த நாள் கொண்டாடினோம். உடன் திருமதி சேதுமதி அம்மாள் அவர்களும் வந்திருந்தார்.

இவ்வாறாக வெற்றிநடை போட்ட தமிழ் நடைப்பயணம் வெற்றிகரமாக சென்னையை அடைந்தது. பின்னர் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து மனுகொடுத்து தமிழ்நடைப் பயணத் தலைவர் பெருங்கவிக்கோ அவர்களுடன் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. புலவர் கி.த.பச்சையப்பன், முனைவர் தெய்வநாயகம், அண்ணன் திருவள்ளுவர் ஆகியோர் சென்றனர். ஆனால் அங்கு முதல்வர் வெளியே சென்று விட்டதால், அரசுச் செயலாளரிடம் மனுவைக் கொடுத்துவிட்டு வந்துவிட்டனர்.

30.3.93 அன்று வெற்றிகரமாக பயணத்தை நிறைவு செய்த குழுவினருக்கு பெரியார் திடலில் இரவு நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் அனைவருக்கும் தமிழ் நடைப்பயண அரிமா எனும் பட்டத்தை வழங்கிச்சிறப்பித்தனர். இந் நிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், துணைவேந்தர்கள் பேராசிரிர்கள் கலந்து கொண்டு பெருங்கவிக்கோ அவர்களைச் சிறப்பித்தனர்.

பாரதிதாசனின் தமிழ்ப் பற்று

முனைவர் இந்திராணி மணியன்

பாரதிதாசனைப் பற்றி ஒரு சிறிது அறிந்தோரும் அவர்தம் தமிழ் பற்று பற்றி அறியாமல் இரார். நீதி நூல்கள் எப்பொழுது தோன்றின எனில், அந்நியர் ஆட்சியில் பண்பாட்டுக் கலப்புற்று, மக்களுக்கு எது நல்லது எது கெட்டது, எது நம் பண்பாடு என்று அறியாத குழப்பம் ஏற்பட்ட பொழுது, இதுதான் நம்பண்பாடு, இதைத்தான் செய்யவேண்டும். இதைச் செய்யக்கூடாது என்று அறிவிக்க வேண்டிய காலகட்டத்தில் தோன்றின என்று கூறுவர். அதே போல், 'என்று தணியுமிந்த சுதந்திர தாகம், என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'' என்று இந்திய விடுதலைக்கு முன் பாரதியார் பாடியது போல், 'ஆங்கிலேயர் ஆட்சி மடிந்தாலும், என்று மடியும் எங்கள் ஆங்கில மோகம்' என்று பாட வேண்டிய கால கட்டத்தில் பாரதிதாசன் தம் தமிழ்ப் பற்றைப் பறை சாற்றினார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் உயர் கல்வி கற்பவர்க்கும் கல்லாதவர்க்கும் வேறுபாடு என்ன என்றால், உயர்கல்வி கற்றவர் ஆங்கிலத்திலேயே எழுதுவர், ஆங்கிலத்திலேயே பேசுவர், ஆங்கிலத்திலேயே சிந்திப்பர். தமிழில் கற்பதற்கு என்ன இருக்கின்றது என்பது அவர்கள் எண்ணம். இது பாரதியார், பாரதிதாசன் காலத்தில் மட்டுமல்ல, இன்றும் அந்த நிலைதான். முன்னுக்கும் ஒருபடி மேலே, இப்பொழுது புற்றீசல் போல் தமிழ்நாடு முழுவதும் ஆங்கிலத்தில் மழலையர் பள்ளிகள் தோன்றியுள்ளன; எங்கும் 'இங்கிலீஷ் மீடியம் பள்ளிகள்', 'எங்கும், எதிலும் ஆங்கிலம்' கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி என்றால் அதில் சேருவதற்கு மாணவர்கள் முன் வருவதில்லை. பெற்றோரும் அதை விரும்புவதில்லை, தமிழ் படித்துவிட்டு 'குண்டு சட்டிக் குள் குதிரை ஓட்ட முடியுமா' வெளி மாநிலங்களில், வெளிநாடுகளில் வேலை தேட வேண்டாமடா? என்னும் கூக்குரல்கள். எந்த நாட்டிலும் அவரவர் தாய் மொழியைக் கற்க வேண்டும், தாய் மொழியில் கையெழுத்து இடவேண்டும் என்னும் வற்புறுத்துதல் இந்த அளவுக்கு இருக்க முடியாது. தமிழர்க்குத் தமிழ் மொழிமேல் அத்தனை பற்று. 'பொய் சொல்லாதே, பொய் சொல்லாதே' என்று யாரிடம் இவ்வளவு வற்புறுத்த வேண்டி உள்ளது? பொய்யைக் கலந்து பேசாதவரிடம் அல்லது மெய்யே பேசாதவரிடம் தான்.

பாரதிதாசன் ஆரியத்தை ஏன் வெறுத்தார்? உலக மக்கள் எல்லாம் ஒன்றே என ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று உலகுக்கே எடுத்துக் கூறும் உயர்ந்த சமுதாயமாக இருந்தது தமிழ்ச்சமுதாயம். அங்கே பலரும் பல தொழில் புரிந்தனர். ஆனால் தொழிலால் ஏற்படும் பாகுபாடோ, உயர்வு, தாழ்வோ அன்றில்லை. தொழிலைப் பிறப்புரிமையாக்கி 'சாதி' என்னும் முத்திரையைக் குத்தியது ஆரியப் பண்பாடு. நாட்டு நலுனுக்காகச் செய்யப்படும் உழவு, நெசவு, கைத்தொழில்கள் அனைத்தும் பின்தள்ளப்பட்டு, அவற்றைச் செய்வோர் அனைவரையும் 'சூத்திரர்' எனப் பாகுபடுத்தி சாதிப்படியில் கீழ்ப்படிக்குத் தள்ளியது ஆரிய முறை. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் தமிழ்த் திரு நாட்டிலே சாதிக்கொரு நீதி புகுத்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக 'கல்வி கற்கும் வாய்ப்பே இவர்களுக்குப் புறக்கணிக்கப்பட்டது. வான நூல், கணித நூல், மருத்துவ நூல், கட்டடக் கலை, இசைக் கலை, நாடகக் கலை, சிறந்த இலக்கியங்கள் ஆகியவை அனைத்தும் தமிழிலிருக்க, வேத நூல் கல்வியே உயர்கல்வியாகக் கருதப்பட்டது.

தமிழும் வடமொழியும் கலந்து எழுதும் நடை மணியும் பவளமும் சேர்ந்தது போன்ற

அழகு நடை என்று போற்றப்பட்டது. சிலர் இதற்கும் ஒருபடிமேலே சென்று 'தமிழ் ஒரு தனிமொழியா' என்று எள்ளி நகையாடினர். எல்லாம் வடமொழியிலிருந்து வந்தவை, வடமொழி தேவபாஷை, இந்திய மொழிகள் அனைத்திற்கும் அதுவே தாய் என்னும் கருத்து பரவலாக, ஆணித்தரமாகப் பரப்பப்பட்டது. சிலர், தமிழா அது நாங்கள் வீட்டில் பேசும் 'கொச்சை மொழி' சமஸ்கிருதமே எங்கள் தாய் மொழி, அதனைத்தான் நாங்கள் கற்போம், 'ஆனந்தவிகடன், கல்கி படிக்கும் அளவுக்குத் தமிழ் தெரிந்தால் போதும் என்று பேசத் தொடங்கினர், அவ்வறே செயல் பட்டனர்.

இதற்கிடையில் வடமொழிக் கல்வியின் ஆதிக்கத்தால், ஊடுருவலால், தமிழ் மொழி வடமொழிக் கலப்பிற்கேற்ப வெவ்வேறு மொழிகளாகப் பிரிந்தன, மக்கள் பிரிந்தனர், நாட்டின் எல்லை பிரிந்தது, ஆட்சி பிரிந்தது. இவற்றையெல்லாம் தமிழ் மக்கள் மௌன சாட்சியங்களாகக் கண்டு கொண்டிருந்தனர். அவர்களில் சிலரே தன்மானம், தமிழ்மானம் உந்தப்பெற்று, தமிழின் தாழ்வுக்கு அணை போட்டு, தமிழின் மேன்மையை எடுத்துக் கூறத் தொடங்கினர். தமிழின் தொன்மை, வளமை, தனித்தன்மை, தாய்த்தன்மை ஆகியவை பற்றி எழுதினர், பேசினர்; ஆராய்ந்து கூறினர். வட மொழிச் சொற்கள் நீக்கப்பட்டுத் தூய தமிழில் எழுதுவது சிறப்பாகக் கருதப்பட்டது. 'இந்திய மொழிகளின் தாய் சமஸ்கிருதம்' என்னும் கருத்து மாறி, 'திராவிட மொழிக் குடும்பமும் அதில் தமிழ் மொழி மூத்த மொழி என்னும் கருத்தும், ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தக் கால கட்டத்தில் தான் பாரதிதாசன் ஆவேசத்துடனும், ஆத்திரத்துடனும் தம் கருத்து களை ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.

''ஆண்டார் தமிழர் இந்நாடு, அதன்பின் ஆரியர் என்போர் ஈண்டுக் குடியேறினார்''
என்று ஆரியர் இந்தியாவிற்கு வந்து குடியேறி யவர், என்னும் கூற்றில் தொடங்கி,

''ஓதும் உயர்வு தாழ்வை
ஆரியர் உரைத்திட்டால்
ஏதுக்கு நாம் ஏற்பதோ''

என்று, சாதி, உயர்வு தாழ்வு எல்லாம் ஆரியரால் வந்தது, தமிழர் ஏற்கக் கூடாதது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் பாரதிதாசன்.

தாழ்த்தப்பட்டோர். பிற்படுத்தப் பட்டோர் என்று பல நிலைகளில் தமிழ் மக்கள் ஓடி, ஓடிச் சான்றிதழ்களைச் சேகரித்தாலும், சாதி சாதியாகப் பிரித்து ஆரசியல்வாதிகள் ஓட்டு களைப் பெற்றாலும் நடை உடை பாவனை களாறும், பழக்க வழக்கங்களாலும், பேச்சு முறையாலும், சமூகத்தில் மற்ற சாதிக்காரர்கள் அனைவரும் ஒன்றாகவும், பார்ப்பனர் ஒன்றாக வும் இருவேறுபட்ட நிலையில் நிற்கின்றனர்.

இதனைப் பாரதிதாசன் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வேறுபாடு நீங்கும் நாளே தமிழ் நாட்டிற்கு நல்ல நாளாகும்.

எத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் 'நாம் தமிழர்' என்னும் ஒருமைப்பாடு தமிழ் மக்கள் அனைவர் உள்ளங்களிலும் வேரூன்ற வேண்டும். மனமாசு துடைக்கப்படுதல் போல் இவ்வேறுபாட்டுத் தூசு அகற்றப்படல் வேண்டும்.

''மனத்துக்கண் மாசிலனாதலே அனைத்தறன்''

மற்றவை எல்லாம் வெறும் மேடைப் பேச்சுகள், வேடப் பேச்சுகளே யாகும்.

'நாம் தமிழர்' என்னும் உணர்வு இருந் தால்தான் மற்ற பேதங்கள் இல்லையாகிப் போகும், இன ஒற்றுமை ஏற்படும். தமிழ் மக்களிடம் 'நாம் தமிழர்' என்னும் ஒற்றுமை இல்லாததால்தான் நாடு முன்னேற்றம் அடை வதில் தடை ஏற்படுகின்றது. எந்தத் திட்டம் கொண்டு வந்தாலும் அதற்கொரு தடை.

தமிழ்நாட்டில் தமிழில் கல்வி கற்பிப் பதற்கு ஒரு தடை. பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும் என்பதற்குத் தடை, நீதி மன்றங்களில் வழக்குகள் தமிழில் விசா ரிக்கப்படவேண்டும் என்பதற்குத் தடை.

தமிழர்கள் தமிழில் பாடவேண்டும்; தமிழ்ப் பாடல்களைக் கேட்க வேண்டும், தமிழில் அர்ச்சனைகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் கூட சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்றால் தமிழர்களின் மனநிலையை என்னவென்று, சொல்வது.

அதனால்தான் பாரதிதாசன் முதலில் தமிழர் யார் என்பதை வரையறுத்துக் கூறுகிறார்.

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் தமிழன்

தமிழ் மொழி, இனம், நாடு என்னும் பற்றுடையோன் தமிழன்

தமிழப்பற்று இல்லாதவன், தமிழுக்கு நன்மை செய்யதவன் தமிழ் அறிஞனாயினும் அவன் தமிழ் அல்லன்.

தமிழ் அறிஞனாயினும் தமிழர்க்கு இன்னல் புரிபவனை முட்டாள் என்றும், முட்டாளாயினும் நன்மை புரிபவனே தமிழன் என்றும் கூறுகிறார்.

தமிழன் என்று சொல்லிக் கொண்டால் போதாது அவ்வாறு சொல்லிக் கொள்வதில் பெருமைபட வேண்டும்.

தமிழனென்று பெருமையோட
தலைநிமிர்ந்து நில்லடா
தரணி எங்கும் இணையிலா உன்
சரிதை கொண்ட சொல்லடா

உலகின், எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் ''தான் தமிழன்'' என்று அறிவித்துக் கொள்வதில் ஒவ்வொரு தமிழனும் பெருமைப் படவேண்டும். அவ்வாறு மற்றவர்கள் இனம் காணும் வகையில் பெருமையுடன், தரத்துடன், பண்புடன், அறிவுடன், திறமையுடன் நடந்து கொள்ளவும் வேண்டும். இதுதான் தமிழரின் தனித்தன்மையாக இருக்க வேண்டும்.

அத்தகைய மேன்மை உடைய தமிழனை யாராவது இகழ்ந்தால் 'என் தாய் தடுத்தாலும் விடேன்' என்கிறார் பாரதிதாசன். இது தான் தன்மான உணர்வு.

தமிழர் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து உயர்ந்தால்தான் நாடுயரும், மக்கள் வாழ்வுய ரும் அதற்குத் தமிழர் ஒவ்வொருவரும் தமிழின் சிறப்பினை உணரவேண்டும். தமிழைப் போன்ற தொன்மையான, வளமையான மொழி உலகில் வேறெதுவும் இல்லையென்றே கூறுவேண்டும், பாரதியார் கூறியது போல் ''இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை''.

தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்
இமயம் போலுயர்ந்த ஒருநாடும்
தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்

தமிழின் மேன்மையை எவ்வளவு எடுத்துச் சொல்லியும் தமிழர்கள் அதனை முழுமையான மனத்தில் வாங்கிக் கொண்டார்களா! என்பது தெரியவில்லை. இல்லையெனில் பாரதிதாசன்.

''தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ் தானில்லை''
என்று மனம் வருந்திக் கூறியிருப்பாரா?

பாரதியார் கூறினார்

''தெருவெல்லாம் தமிழ் முழக்கம், தமிழ் ஒலிக்கச் செய்திடல் வேண்டும்.''

யார் எதைக் கூறினாலும் மக்கள் காதுகளில் ஒலிப்பதில்லை போலும், இன்றும் சென்னைத் தெருக்களில் ஆங்கிலம் ஒலிக்கின்றது. தெலுங்கு ஒலிக்கின்றது, காது கொடுத்துக் கேட்க முடியாத கொச்சைத் தமிழ் ஒலிக்கின்றது. பேச்சுக்குப் பெருமை சேர்க்கும் தூய ஒலி கேட்கப்பட வில்லை. 'இந்துகினுபோ, கஸ்மாலம்'' தான் சென்னைத் தமிழ் என்பதில்லை. மச்சி, ஜொள்ளு என்பதும் சென்னைத் தமிழ்தான்.

''நான் பீச்சுக்கு வாக்கிங் போறேன். அதுதான் குட்பார் ஹெல்த்துன்னு டாக்டர் சொல்றார். வொய் டோன்ட் யு ஜாயின் மி''

பேசுபவரும், கேட்பவரும் தமிழர் தான்.

தமிழ் மொழியின் நிலை நாளுக்கு நாள் நலிந்து கொண்டு வருகிறது.'' தமிழ் இனி மெல்லச் சாகும் என்றார் பாரதியார்.

இந்நிலை மாற என்ன வழி?

'மயிலே மயிலே இறகு போடென்றால் போடாது' என்றொரு பழமொழி உண்டு. தமிழில் பேசு, தமிழே பேசு, தமிழைப் படி பிறகு பிற மொழிகளைப் படி என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் செயல் நடைபெறாது.

''ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால்
ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர்
எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார்''

என்று ஏழைகளைப் பார்த்து பாரதிதாசன் கூறுவதை தமிழ் அன்பர்களைப் பார்த்தும் கூறுவதாகக் கொள்ள வேண்டும். குழந்தை மணம், விதவை மணம், கலப்பு மணம் ஆகியவை எல்லாம் முதலில் எதிர்ப்புகளை எதிர் கொள்ளவில்லையா? இசைக்கு மொழியில்லை என்று கூறி முதலில் தமிழிசைக்கு எவ்வளவு எதிர்ப்புத் தெரிவித்தனர்? 'சதி'யைத் தடுத்து நிறுத்த எத்துணை சதித்திட்ட வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது?

அதனால் கலக்கம் வேண்டாம். பாரதி தாசன் கூறியபடி,

'நமக்கு வந்துள்ள கேடுகளை உணர்வீர்
வரப்போகும் கேடுகளை அறிவீர்
தொண்டர் படையை அமைப்பீர்
தொல்சீர் தொல்லைகளை அழிப்பீர்'

எனவோர் இயக்கமாக இயங்கி செயல்பட வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தமிழர் சீரழிந்து வருகின்றார்கள். தம் சீரழிவுக் குக் காரணம் இன்னதுதான் என்பதை அவர்கள் இன்னமும் அறியவில்லை. அளவு கடந்த வழிபாடு, அதிலிருந்து அதே வீதத்தில் அரச வழிபாடு, எடுத்ததற்கெல்லாம் பயம். பின்னர் சுயநலம் அதற்கு மேல் ஒற்றுமையின்மை.

ஆராய்ந்து தமிழ் மக்களின் அவல நிலையை எடுத்துக் கூறியுள்ளார். தவறு கண்ட பின் திருத்திக் கொள்வதுதான் மனிதத் தன்மை.

எதற்கும் முதற்படியாய்த் தமிழ் படிக்க வேண்டும். ''அவள் வாத்திச்சி - அறை வீடு கழகம். தவழ்ந்தது தங்கத் தமிழ்ச் சுவை'' என்று குடும்ப விளக்கில் பாரதிதாசன் கூறியதுபோல், ஒவ்வொரு வீட்டிலும் தமிழ்ப்பெண் தமிழ் வாத்தியாராக மாறவேண்டும். வீடுகளில் தமிழ் மணம் கமழ வேண்டும். தெருக்களில் தமிழ் ஒலி சிறக்க வேண்டும்!

அவர் தம்முடைய வாழ்க்கையை ஒரு வழிகாட்டியாக அமைத்துக் காட்டுகிறார்.

''தமிழ் அவர்க்கோர் பூக்காடு
அவர்ஓர் தும்பி''

வெண்ணிலாவும் வானும், வீரனும் கூர்வாளும் போல் கன்னல் தமிழும் அவரும் என வாழ்ந்தவர்.

அன்பில்லா நெஞ்சில் தமிழில் பாடிநீ
அல்லல் நீக்க மாட்டாயா என ஏங்கியவர்.

தமிழே அவர் பேச்சு, தமிழே அவர் மூச்சு,

'இன்பத் தமிழுக்கு இன்னல் விளக்கையில்
கன்னலோ என்னுயிர்'' என வாழ்ந்தவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக,

எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்.

என் பிறந்த பொன்னாட்டுக்கும், மொழிக் கும் நல்லதுசெய்ய வேண்டும் என்பதையே கடமையாக கொள்கையாகக் கொண்டவர்.

மங்கை யொருத்தி தரும்
சுகமும் எங்கள்
மாத்தமிழுக் கீடில்லை காண்

எனக் கூறியது மட்டுமன்றி

நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்
நான், நான், நான்

என வாழ்ந்தவர்.

அவர் வழி வாழ்பவனே உண்மைத் தமிழனாவான்.

மலேசியாவில் நாடகக் கலை

பி.கே. சாமி, தலைவர்,
மலேசியத் தமிழ்க் கலைஞர் இயக்கம்

நாடகம் என்பது நடனத்திலிருந்து மருவி வந்தது. தமிழில் ''கூத்து'' என்று கூறுகின்றோம் காவடியாட்டம், ஒயிலாட்டம், கும்மியாட்டம், கரகாட்டம், உறுமிகோமாளியாட்டம், கை சிலம்பு, கணியான் ஆட்டம் (தேவதைகள் பற்றியது) இவை பழங்காலத்து நடனங் களாகும்.

தமிழகத்தில் கூத்து வடிவில் நாடகம் தோற்றம் பெற்றது. குரவைக் கூத்து, சாக்கைக் கூத்து, வள்ளிக்கூத்து என்று பல்வேறு வகையான கூத்துக்கள் நடைபெற்று வந்துள்ளன.

இக்காலத்தில் நாடகத்தைப் பற்றிய தெளிவான ஒரு குறிப்பை சிலப்பதிகாரத்தில் காணலாம். நாடகம் எனும் பெயரில் தமிழில் உள்ள முதல் குறிப்பை ஆய்ச்சியர் குரவையில் ''வாலசரித'' நாடகம் என்பதை இளங்கோ குறிப்பிடுகிறார். அதாவது மாயோனை கண்ணனைப் புகழ்ந்து ஆயர்குல மக்கள் ஆடிப்பாடி வழங்கும் நாடகமாகும்.

சிலம்பு அடிப்படை நாடக அமைப்பை, தன்மையை அதன் கூறுகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

உலக வரலாறுகளில் நாடகம் என்று பார்க்கின்ற போது கிரேக்க, ரோமானிய, லத்தின், மொழிகளில் நாடகங்கள் வெளிவந்துள்ளன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் Homer எழுதிய 'Odissy', 'Iliad', என்ற நாடகங்களின் வடிவங்களைக் கூறலாம்.

வரலாற்று ஓட்டத்தில் குறிப்பிட்ட சிறந்த நாடக ஆசிரியர்கள் ஷேக்ஸ்பியர், ஜார்ஜ் பெர்னாட்ஷா, ஜெப்ஷன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

நாடகங்கள் வழி சமுதாயத்தில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதற்கு திராவிட இயக்கம் ஆற்றிய தொண்டு குறிப்பிடத் தக்கது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் காலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், நடிகவேள்எம்.ஆர்.ராதா, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி போன்றோரைக் குறிப்பிடலாம்.

தந்தை பெரியார் அவர்கள் திராவிட இயக்க நாடகங்கைளப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது என்னால் கல்லடி வாங்கி, சொல்லடி வாங்கி மேடைகளில் முழங்கிய பகுத்தறிவுக் கருத்துகளை, மக்களுக்கு எளிய வகையில் அவர்கள் அறியும்படியும், சிரிக்கும் வகையிலும் பேரறிஞர் அண்ணாவும், என்.எஸ். கிருஷ்ணனும் நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறார்கள் என்று பாராட்டினார். மேலும் என்.எஸ்.கே.யுனுடைய நாடகங்களைப் பாராட்டி 20-வது நூற்றாண்டு நாடக மலர் ஒன்று வெளியிட வேண்டுமானால், அந்த மலரின் அட்டைப் பகுதியல் என்.எஸ். கிருஷ்ணனின் படத்தை வெளியிட வேண்டும் என்றார்.

மலேசியத் தமிழ் நாடக வளர்ச்சியின் தொடக்கம் இந்திய மண்ணின் உணர்வுகளைப் பிரதிபலித்து ஆரம்பித்தது. பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள், நவாப் ராஜமாணிக்கம், அருணாச்சலக் கவிராயர், ஆகியோர் தமிழகத்தில் நாடகத்தை வளர்த்தனர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தென் கிழாக்காசியாவில் தமிழர்களின் கலை பண்பாடுகளும், இந்து சமய கலாச்சாரமும் பரவி மேலோங்கி இருந்தன என்பதற்குப் பல சரித்திரச் சான்றுகள் உள்ளன.

குறிப்பாக மியன்மார் (பர்மா), தாய்லாந்து, இந்தோசீனா (கம்போடியா), இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ்க் கலைகளும், பண்பாடுகளும், இந்து ஆலய ஆசாரங்களும் தொடர்ந்து இருந்து வருவதை அறியலாம். பல சரித்திர ஆசிரியர்கள் ஆதாரங்கள் காட்டுகின்றனர்.

கம்போடியாவிலுள்ள அங்கோர்வாட் விஷ்ணு ஆலயமும், இந்தோனேசியாவின் புரீபுடுர் ஆலயமும் சான்றுகளாகக் கொள்ள லாம்.

இராஜ ராஜ சோழன், இராஜேந்திர சோழன், மலேசியாவிலுள்ள (மலாயா) கடா ரத்தை ஆட்சி செய்ததைக் குறித்தும் வாணிப கலாச்சாரத் தொடர்பு கொண்டிருந்ததைப் பற்றியும் தஞ்சை பெரிய கோயிலுள்ள கல் வெட்டிலும் காணலாம். கோலாலம்பூர் மாநகரி லுள்ள பெரியசாலை ஒன்றுக்குக்கூட ஜாலான் (சாலை) ராஜாச் சோலா என்ற பெயர் தற் பொதுகூட வழங்கப்பட்டு வருகிறது.

சோழர்கள் காலத்திற்குப் பின்னர், தமிழ் நாட்டை ஆண்ட பல்லவர்களும் கூட மலேசியா வுடன் வாணிபம் மற்றும் கலாச்சார தொடர்பை வைத்திருந்தார்கள்.

15-ஆம் நூற்றாண்டில் மலாக்காவுக்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் செட்டி யார்கள் தமிழ் முஸ்லீம்கள் வந்திருந்து வாணி பம் செய்தனர். பின்னர் தமிழ் நாட்டுடன் தொடர்பு அற்றுப்போய்விட்டது. அவர்களில் மலாக்கா செட்டிகளைத் தவிர்த்து மற்றவர்கள் மலாய்க்காரர்களோடு இரண்டறக் கலந்து போயினர்.

இந்த வரலாற்றுச் சான்றுகளை வைத்துப் பார்க்கின்றபோது, மலாய்க்காரர்களிடம் இன்று வரை இருந்துவரும் கவின் கலைகள் பெரும் பாலும் தமிழர்களின் கலைகளை அடிப்படை யாகக் கொண்டிருக்கின்றன எனக்கூறலாம்.

நடன வகையில் ஓயிலாட்டம், புரவியாட் டம் போன்றவை மருவிய நிலையில் வழங்கப் பட்டு வருவதையும், நிழலாட்டத்தில் மகா பாரதக் கதைகளும், இராமயணக் கதைகளும் வழங்கப்பட்டு வருவதையும் இன்றும் காண லாம். மேலும் முரசு தப்லா போன்ற கொட்டு களையும் பயன்படுத்தி வருவதையும் காணலாம்.

மலேசியாவில் தமிழ் மேடை நாடகங்கள்

வணிகர்களாகவும் நாடுகளைப் பிடித்து தமது அரசின் கீழ் கொண்டுவரும் வீரர்களாகவும் வந்த தமிழர்கள், 1870ஆம் ஆண்டுகளில் காடுகளை அழித்து, கரும்பு, மிளகு, தென்னை, ரப்பர்தோட்டங்களில் வேலை செய்ய ஒப்பந்தக் கூலிகளாக (சஞ்சி) ஆங்கிலேயர்களால் கொண்டு வரப்பட்டனர். தமிழர்களிடையே இருந்த ஜாதிகள் அடிப்படையில் இவர்களைப் பிரித்து வரிசை வீடுகளில் (லயன்கள்) கட்டிக்கொடுத்தனர். தோட்டங்களைவிட்டு ஓடி விடாதபடி தோட்டங்களில் கோயில்கள், கடைகள், தமிழ்ப்பள்ளிகள், கள்ளுக்கடைகள், குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஆயம்மா, கொட்டகை போன்றவற்றைக் கட்டிக் கொடுத்த தோடு, தொழிலாளர்களிடையே அவர்களுக்குத் தெரிந்த ஆட்டங்களை ஆடவும், பாடவும், மேளங்கள் வாசிக்கவும் பறைகள் கொட்டவும் ஊக்க மூட்டி வந்தனர்.

மெல்ல மெல்ல ஆலயத் திருவிழாக்களில் நடனங்கள் நடைபெறவும் நாடகங்கள் நடைபெறவும் தொடங்கின. குறிப்பாக வட மலாயாவிலுள்ள தோட்டங்களில் கோயில் திருவிழா காலங்களில் நாடகத்தை தவறாது நடத்தி வந்தனர். கோயிலுக்கென கட்டப்பட்ட மண்டபத்தில் கோயில் ஒரு பக்கம், மறுபக்கம் நாடக மேடையும் அமைந்திருக்கும். சில தோட்டங்களில் நடுப்பகுதி பள்ளியாகவும் செயல்பட்டு வந்துள்ளன.

அக்காலத்தில் சில தோட்டங்களில் கோலாட் டம், கும்மியாட்டம், கரகாட்டம், புரவியாட் டம், போன்றவை அவ்வப்போது நடைபெற் றன. இவற்றில் தேர்வு பெற்ற கலைஞர்களை தோட்டந் தோட்டமாகச் சென்று ஆடிப்பாடி சன்மானம் பெற்று வருவதும் உண்டு.

சில தோட்டங்களில் இராமயாணம், மகாபாரதம், சாந்தசக்குபாய் மற்றும் புராணக் கதைகள் கதாகாலட்சேபங்களும் கூட நடை பெற்றுள்ளன. தமிழகத்திலிருந்து வரும் கதா காலட்சேபம் நடத்துபவர்கள் நகர்களில் உள்ள கோயில்களிலும், தோட்டங்களில் உள்ள கோயில்களிலும் கதாகாலட்சேபங்களைச் செய்து ரசிகர்களிடமிருந்து வசூலாகும் பணத் தையும் கோயில் தலைவர்கள் வழங்கும் தட்சணையும் பெற்றுச்செல்வார்கள்.

இந்தக் கலை வளர்ச்சி என்பது தமிழகத்தி லிருந்து கலைஞர்கள் வந்து செல்லும் வசதிகள் வந்த பிறகு, அதாவது கப்பல் போக்குவரத்து வசதிகள் வந்த பின்னரே ஏற்படலாயிற்று.

மலேயாவுக்கு வந்து பொருளீட்டிக் கொண்டு தாய்த் தமிழகத்துக்குச் சென்றுவிட வேண்டும் என்ற முழு நோக்கத்தில்தான் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களும், வணிகர்களும் கல்வி கற்றவர்களும் அந்தக் காலத்தில் வந்தார்கள். வணிகர்களைத் தவிர மற்றவர்கள் அவ்வளவு சுலபத்தில் தாயகத்துக்கு திரும்பிச் செல்ல முடியவில்லை. அதிலும் தொழிலாளர்களாகக் கொண்டுவரப்பட்டவர் களை ஆங்கிலேய துரைமார்கள் ஒப்பந்தக் கூலிகளாக தோட்டங்களில் வைத்து வேலை வாங்கினர். இந்துச் சூழ்நிலையில்தான் தோட்டத் தொழிலாளர்களாக இருந்த தமிழர்கள் தங்களுக்குத் தெரிந்த ஆடல் பாடல்களை ஆடிப்பாடி பொழுதைக் கழித்தனர்.

இந்தியர்களைப் போன்றே இந்த நாட் டிற்கு ஈயச்சுரங்களில்வேலை செய்ய வந்த சீனர்கள். தங்கள் நாட்டிலிருந்து கலைஞர்களைக் கொண்டு வந்து சீன நாடகங்களை நடத்தினர். சீன கோயில்களில் திருவிழாக் காலங்களில் ஒரு வாரம், இரண்டு வாரம் என்று நீள நாடகங்கள் நடக்கும். பகல், இரவு என்று தொடர்ந்து நடைபெறும் இந்நாடகங்களை மக்கள் இருந்து பார்க்கிறார்களோ இல்லையோ நாடகம் தொடர்ந்து நடைபெறும் (தற்போதும் கூட இதுபோன்ற ''ஓபேரா'' நீள நாடகங்கள் கோயில் திருவிழாக்களில் நடை பெறுகின்றன) இந் நாடகங்கள் தெய்வங்களுக்காகப் படைக்கப் படுவதால் மனித ரசிகர்களைப்பற்றி கவலைப் படுவதில்லை.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பும் பின்பும் அதாவது நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு (1957) பல ஊர்களில் சீனர்கள் நாடக மேடைகளை நிரந்தரமாக அமைந்திருந்தார்கள். நாடகத்திற்கு வேண்டிய கேஸ்லைட் போன்ற சிலவற்றை தமிழ் நாடகக்காரர்கள் சீனர்களிட மிருந்து வாடகைக்கு எடுத்துச் செல்வதும் உண்டு.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்த நாட் டிற்கு 1910 ஆண்டில்தான் தமிழ் நாட்டிலிருந்து முதல் நாடகக் குழு வந்ததாகத் தெரிகிறது. அந்த குழு ஓரளவு வெற்றிகரமாக நடைபெற்றதால், பல நாடகக் குழுக்கள் மலாயாவுக்கு வந்து சென்றுள்ளன.

1910 ஆம் ஆண்டில் வந்த இந்து விநாயக சபா, 1920 வந்த நவநீத நாடகக் குழு, வைத்தியலிங்க செட்டியார் நாடகக் குழு, முத்தையா பிள்ளை நாடகக்குழு, தனவள்ளி அம்மாள் நாடகக் குழு, 1925இல் வந்த ஆரிய நடன விநோத சபா, 1927இல் வந்த சாமிராவ் சரஸ்வதி நாடகக் குழு, 1930-ஆம் ஆண்டுகளில் வந்த எஃப்ஜி நடேசய்யர் நாடகக் குழு, ராஜலட்சுமி நாடகக்குழு, வி.ஏ.செல்லப்பா நாடகக்குழு, மெட்ராஸ் சுகுண விலாஸ் நாடகக்குழு, கே.டி.அரங்கசாமி நாயுடு நாடகக் குழு இன்னும் பல நாகக் குழுக்கள் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பு (1941) சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ, பினாங்கு, என்று பெரிய நகரங்களில் கூடாரமிட்டு மாதக் கணக்கில் தங்கி நாடகங்களை நடத்தியதாகவும் தெரிகிறது. அதாவது 1910க்கும் 1940க்கும் இடையில் தமிழகத்திலிருந்து 22 நாடகக் குழுக்கள் மலாயாவுக்கு வந்து சென்றுள்ளன. இவற்றில் வந்த தமிழக கலைஞர்கள் இங்கேயே தங்கிவிட்டனர். குறிப்பாக அரங்கசாமி நாயுடு டிராமா கம்பெனியையும், மொய்தின் சாயிபு நாடகக்கம்பெனியையும் குறிப்பிடலாம்.

திருவாளர்கள் மணிராஜ், சி.வி.ஆறு முகம், டி.என். வைத்தியநாதன், மற்றும் திருமதி சாரதா போன்றவர்கள் அந்தக் குழுக்களில் வந்து தங்கிவிட்ட கலைஞர்கள், மேலும் சில ஹார் மோனிஸ்டுகள், மிருதங்க, தப்லா, வித்வான் கள், நாடக ஆசிரியர் சிலரும் இங்குள்ள மற்ற குடும்பங்களோடு இணைந்துவிட்டனர். இங்கும் பல நாடகக் கலைஞர்கள் உருவாகலாயினார்.

பினாங்குக்கு அருகேயுள்ள சுங்கை ரம்பை என்ற ஊரில் பல நாடகக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.

அந்தக்கால பிரபல சினிமா நடிகர்களான எம்.கே.ராதா, டி.ஆர். மகாலிங்கம் போன்றோ

ரும் நாடகக் குழுக்களில் சேர்ந்து வந்து சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1941-ஆம் ஆண்டிலிருந்து 1945-ஆம் ஆண்டுவரை மலாயா, ஜப்பானியர் ஆட்சியில் இருந்தது. யுத்தப் பேரிடர்களால் நாடு சீர் குலைந்து கிடந்தது. போதாக்குறைக்கு பெரும் பாலான ஆண்கள் (தென்னிந்திய தொழிலா ளர்கள்) சயாம் நாட்டிற்கு ரயில் பாதை போட ஜப்பானியர்களால் கொண்டு செல்லப்பட்டு விட்டனர். நாட்டில் பஞ்சம் பட்டினி தலைவிரித்தாடியது. துன்பமான சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில் கூட ஒரு சில மேடைநாடகங்கள் நடந்துள்ளன.

ரயில் பாதை அமைக்க சயாமுக்கு அனுப்பப்பட்ட தமிழர்களுக்காக நாடகங்களை நடத்த ஜப்பானியர்கள் வட மலாயாவைச் சேர்ந்தசில கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து ஈபோவிலிருந்து இரயில் ஏற்றி சயாமுக்கு (தாய்லாந்துக்கு) அனுப்பியுள்ளனர். (அக் குழுவில் இடம்பெற்று சயாமுக்கு சென்று நாடகங்களை நடத்திவிட்டு திரும்பிய நாடகக் காவலர்'' ஆர் பி.எஸ். மணியம், தமது நாடக நூலில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானியர் ஆட்சிக்காலத்தில் ஜப்பானிய ஆளுநர் சோனா என்பவர் பெயரில் கூட ஒரு அமெச்சூர் நாடகக்குழு அமைக்கப்பட்டு நாடகங்களை அரங்கேற்றியுள்ளனர்.

1943-ஆம் ஆண்டுவாக்கில் இந்திய நாட்டை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுவிக்க, மாவீரர் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் அவர்களால் சிங்கப்பூரில் ஐ.என்.ஏ. எனப்படும் இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டது. மலேயாவிலுள்ள பல்லாயிரம் இந்திய இளைஞர்கள் அந்த ராணுவத்தில் சேர்ந்தனர். அவர்களிடையே வீர உணர்வுகளை ஏற்படுத்து வதற்கு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. கோலாலம்பூரில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் முன்னிலையிலும் தமிழ் நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

1930க்கும், 1940க்கும் இடையில் மலாசி யாவில் பல உள்நாட்டு கலைஞர்களைக் கொண்ட அமெச்சூர் குழுக்கள் அமைக்கப்பட்டு நாடகங்கள் நடத்தப் பெற்றுள்ளனர்.

கோலாலம்பூரில் சங்கீத அபிவிருத்தி சபா, சிலாங்கூர் இந்தியர் சங்கம், பங்சார் ரோடு, நாடக சபா, ஈப்போ நவரத்தினம்மாள் நாடகக் குழு, மூவார் நந்தனார் மடம் இன்னும் பல ஊர்களிலும் பல அமெச்சூர் நாடகக் குழுக்கள் தோன்றி நாடகங்களை நடத்தியிருக்கின்றன. 1938ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து வந்த ஒரு நாடகக் குழுவைச் சேர்ந்த ஒரு நாடக ஆசிரியரான திரு.டி.கே. சின்னசாமி என்பவர் பயிற்சி அளித்த அரிசந்திரா என்ற நாடகம் சித்தியாவானில் அரங்கேறியுள்ளது. (அதில் எனது பெரியப்பா, சிற்றப்பா, சகோதரர், மைத் துனர் ஆகியோர் முழுக்கப் பங்காற்றியுள்ளனர்)

இரண்டாம் உலக யுத்திற்குப் பிறகு, மலேயாவிலும் இந்திய சுதந்திரப் போராட்டம் இந்தியர்களால் நடத்தப்பட்டு வந்தது. சுதந்திர தாகம், ஜெய்ஹிந்த் என்றெல்லாம் சில நாடகங்களும் அரக்கேற்றம் கண்டன.

1948-ஆம் ஆண்டுவாக்கில் மலாயாவில் கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட பிரச்சாரங்கள் மேடை நாடக வழியாகவும் நடத்தப்பட்டது. தகவல் இலாகா தமிழ்ப் பகுதியில் நாடகக் குழுவொன்றையும் நடத்தி வந்தது. பிரபல நாபுக் கலைஞர் காளி சுப்பையா மற்றும் திரு.வி.கோவிந்தராஜு மற்றும் பலரும் இருந்து பணியாற்றி வந்தனர்.

1950-களில் நாடெங்கும் பல நூறு அமெச்சூர் நாடகக் குழுக்கள் அமைக்கப்பட்டு நவீன நாடகங்களை நடத்தி வந்தன. இவற் றோடு ரத்தனப்பா நாடகக் குழு, புக்கிட் மெர்த்தாஜம், சுப்பிரமணியர் தேவர் நாடகக் குழு, காப்பார் பெருமாள் ஓவியர் குழு, கிள்ளான் புருஷோத்தமன் குழு ஆகியவையும் பகுதித் தொழில் ரீதியாகவும் நாடகங்ளைப் போட்டு வந்தனர்.

1956-ஆம் ஆண்டில் கே.ஆர் இராமசாமி நாடகக் குழு, 1957-இல் டி.கே.எஸ்.சகோதர் களின் நாடகக் குழு, 1959-இல் எம்.எஸ் திரௌபதி நாடகக்குழு, 1960-இல் டி.கே.ராம

சந்திரன் நாகக் குழு, 1977-இல் (1982-இல் இரண்டாம் முறை) வி.எஸ்.மனோகரரின் நேஷனல் தியேட்டர்ஸ் நாடகக்குழு, எம்.ஆர். ராதா நாடகக்குழு டி.ஆர்.மகாலிங்கம் நாடகக் குழு 1978ல் ஒய். ஜி.மகேந்திரனின் நாடகக் குழு ஆகியவை வந்து நாடகங்களை நடத்திச் சென்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1957-க்குப் பிறகு சினிமாப் படல்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு வெளிவந்து ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துவந்ததால் மேடை நாடகங்கள் தொய்வடையலாயின.

மேடை நாடகங்களுக்கு மவுசு குறைந்து விட்டதென்றாலும் கோலாலம்பூரிலும் வேறு பல நாடகங்கள் அவ்வப்போது நடைபெற்று கொண்டுதான் இருந்தன.

1960 மலேசியத் தமிழர் கலைமன்றம் அமைப்பைத் தொடங்கி நடத்தி வந்த கலைமாமணி அமரர் ஆழி அருள்தாசன் அவர்கள் தலைநகரிலும் மற்ற ஊர்களிலும் யார் குற்றவாளி, மின்னொளி நினைவுச் சின்னம், வாடாமலர், உயிரோவியம், ஒரேகுரல், கடாரம், முல்லைத் தேர் போன்ற நாடகங்களைத் தயாரித்துப் படைத்தார். கடாரம் என்ற நாடகத்தை தமிழகத்திற்கு எடுத்துச் சென்று அரங்கேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. கோலாலம்பூர் வளரும் கலைஞர்கள் நடத்திய 1941 என்ற நாடக் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று இரண்டு முறை அரங் கேற்றம் கண்டது. இரத்தப் பேய் என்ற நாடகம் வெற்றி கண்டதால், அதே நடிகர்களைக் கொண்டு (சென்னையில்) சினிமாப் படமாகவும் தயாரிக்கப்பட்டது.

திரு.வி.குழந்தைவேலு குழுவினர் தயாரித்த "தந்தையின் குரல்" என்ற நாடகத்தில், இந்திய சமுதாயத்தின் தமிழினத் தலைவரும், மலேசிய இந்தியர் காங்கரசின் தேசியத் தலைவரும். எரிபொருள் அஞ்சல் தொடர்பு துறை அமைச்சருமான மாண்புமிகு டத்தோஸ்ரீ டாக்டர் ச.சாமிவேலு முக்கிய பாகமேற்று நடித்துள்ளார் என்பதோடு அரங்கேறும் மேடை நாடகங்களுக்கு ஆதரவு வழங்கி வருவதோடு, நடிகர்களையும் பாராட்டி உற்சாகமூட்டியும் வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரைப் போலவே டத்தின்ஸ்ரீ இந்திராணி சாமிவேலு அவர்களும் நாடகக் கலைஞர்களையும் நாடக எழுத்தாளர்களையும் பொன்னும் பொருளும் கொடுத்து பாராட்டி வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

மலேசிய நாட்டிலுள்ள சிறந்த நாடகாசி ரியர்களில் மெல்லிசை மன்னார், செவ்விசைச் சித்தர் ரெ.சண்முகம் அவர்களைக் குறிப்பிட லாம் நடிகர், பாடகர், கவிஞர், எழுத்தாளர், இசையமைப்பளர் நாடக இயக்குனர் என்று கலைத்துறையோடு ஐக்கியமாகிக் கொண்டிருக் கும் ரெ.சண்முகம் அவர்கள் எழுதி, இயக்கிய மனக்கடல், அறத்தின்வெற்றி, தெய்வமகள், நீயா நானா போன்ற மேடை நாடகங்கள் நல்ல வெற்றியைக் கண்டன. இவரது துணைவியார் சந்திரா சண்முகம் தொழில் நடிகராகவே வளர்ந்தவர். செல்விகள் மலர்விழி தர்மாவதி ஆகியோரும் சிறந்த நடிகைகளாகவும், பாடகிகளாகவும் விளங்கி வருகிறார்கள்.

தற்போது சிறந்த தொலைக்காட்சி நாடகங் களைத் தயாரித்து வழங்கிக் கொண்டிருக்கும் கே.விஜயசிங்கம் மற்றும் மனு ராமலிங்கம், குரு சந்தானம், ரவிசங்கர், பிரேம் கமால், மணி வாசன், ஜி.எஸ். மணியம், சோ. பரஞ்சோதி, மெ.அறிவானந்தன், ந.செங்குட்டுவன். ஜே.அந் தோணிசாமி, எம்.எஸ். மணியம் மற்றும் (பினோமினா) பாலா போன்றோரும் நாடகங் களை இயக்கி அரங்கேற்றியுள்ளனர். அடியே னும் பாரதியின் பாஞ்சாலி சபதம் கவிதை நாடகத்தை இயக்கி அரங்கேற்றினேன். இந்நாட் டில் அரங்கேற்றிய முழு கவிதை நடகம் என்ற பெருமை அந்த நாடகத்திற்குக் கிடைத்தது.

மணிமன்றங்களின் தேசியத் தலைவராக இருந்து அமரராகிவிட்ட சா.ஆ.அன்பானந்தன் அவர்கள் தமிழ் மேடைநாடக உலகில் ஒரு மறக்க முடியாதவராக விளங்கியவராவார். சிறந்த எழுத்தாளரும், கவிஞர் மேடைப் பேச்சாளருமான அமரர் சா.ஆ.அன்பானந்தன் அவர்கள் சிறந்த மேடை நடிகருமாவார்.

ஆழி அருள்தாசன், சா.ஆ.அன்பானந்தன், பி.கே.சாமி, டாக்டர் வி.பூபாலன், கே.விஜய சிங்கம், மனுராமலிங்கம், சோ.பரஞ்சோதி கேசவன் ஆகியோரைக் கொண்டு அமைக்கப் பட்ட மலேசிய தமிழ்க் கலைஞர் இயக்க நாடக வளர்ச்சிக்கு பல வகையில் பணியாற்றி வந்தது, இன்றும் செயல்பட்டு வருகிறது.

மலேசியாவில் மேடை நாடகக் கலை அருகிவிடாதிருக்க சில அமைப்புகளும் ஒரு சிலரும் தொடர்ந்து நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டுதான் வருகிறார்கள். ஆயினும் எல்லா நாடகக்களும் கலை அளவிலும் பொருள் அள விலும் வெற்றி பெறுவதாகத் தெரியவில்லை. இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம்.

அரங்க வாடகை, காட்சி ஜோடனை, ஒலி, ஒளி ஆகியவற்றுக்கு ஆகும் அதிகச் செலவு, ரசிகர்களின் குறைவான ஆதரவு, நல்ல கலைஞர்களின் குறைவான ஒத்துழைப்பு ஆகியவற்றைக் குறிப்பிடலம். மேலும், சினிமா படங்கள் குறைந்த விலையில் வீடியோ நாடாக்களில் கிடைப்பதால், குடும்பத்தோடு வீட்டைவிட்டு வெளியில் வந்து டிக்கெட் வாங்கி நாடகம் பார்க்க ஏன் சிரம்படுவானேன் என்ற ரசிகர்களின் எண்ணமும் ஒரு காரண மாகும். பல நாடகங்கள் தொலைக்காட்சியிலோ அல்லது வீடியோ நாடாவிலோ வீடு தேடி வந்துவிடும்போது மேடையை நோக்கி ஏன் ஓட வேண்டும்?

நாடக நடிகர்களும் மேடை நாடகங்களில் நடிப்பதைக் காட்டிலும் தொலைக்காட்சி நாட கங்களில் நடிப்பதையே பெரிதும் விரும்பு கிறார்கள்.

சினிமா, தொலைக்காட்சி, வீடியே போன்றவையும் ஒரு காலத்தில் ரசிப்பதற்கு அலுத்துப் போகலாம். அப்போது ரசிகர்கள் மேடை நாடகங்களை நேரில் கண்டு ரசிக்க வரலாம். வரும் வாய்ப்பு இருப்பதாகவே எண்ணுகிறோம்.

காலத்திற்கு ஏற்றவாறு மேடை நாடகங் களைதயாரிக்க முற்பட்டால் ரசிகர்களின் ரசனை மாறலாம். இதற்கு காலத்தை கண்ணாகக் கருதவேண்டும். குறைந்த காலத்திலேயே பயிற்சிகளை முடித்துக்கொண்டு அரங்கேற்ற வேண்டும். அதிநவீன சாதனங்களைப் பயன் படுத்த வேண்டும். வலுவான கருவைக் கொண்ட கருத்தாழமிக்க கதைகளை விரக்தி ஏற்படாத வண்ணம் படைக்க வேண்டும்.

சினிமா வேறு, மேடை நாடகம் வேறு. சினிமா பாணியில் மேடை நாடகங்களைத் தயாரிக்கக்கூடாது என்று கூறுவோரும் உள்ள னர். எது எப்படியாயினும் மக்கள் ரசிக்கும் வண் ணம் படைக்க வேண்டும் என்பதே முக்கியம்.

உண்மையான கலைகளுக்கு என்றும் மதிப்பு உண்டு என்பதை உணர்ந்து கொண் டாலே போதும். உலகம் உள்ளளவும் உண்மை யான கலைகளே நிலைத்து நிற்கும் என்பது எனது ஆழமான கருத்தாகும்.

இந்த எனது கட்டுரைக்கு டாக்டர் ஏ.என்.பெருமாள் அவர்களின் தமிழ் நாடகம் என்ற நூலும் திரு.அ.மணிசேகரன் அவர்களின் மலேசியாவில் மேடை நாடகங்கள் என்ற நூலும் நாடகக் காவலர் ஆர்.பி.எஸ்.மணியம் அவர்களின் "மலேசியாவில் நாடகக் கலையும் நாமும் என்ற நூலும் பெரிதும் உதவின. உண்மையில் மலேசிய திருநாட்டில் தமிழ் மேடை நாடகங்கள் பற்றி மிகத் தெளிவாக அறிந்து கொள்ள இந்த நூல்களும் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றன.

வானொலி நாடகங்கள்

நாடகம் என்பது ஒரு கவின் கலை. மக்களை மகிழ்விக்கின்ற அற்புதக்கலை. மக்களை மகிழ்விக்கின்ற அதே வேளை, அவர் களுக்குத் தேவையான தகவல்களை வழங்கவும், வாழ்க்கை நெறிமுறைகளை தெரிவிக்கவும் சிந்தனைக்களைத் தூண்டவும், நாடகக்கலை சிறந்த செயல் நடைமுறைகளை மேற்கொள்ளச் செய்யவும் இயன்ற கலை.

தமிழில் கூத்து என்ற வடிவத்தில் நாடகம் தோற்றம் கண்டது. தாளம், இசை, ஆடல் என்ற வகையில் தோன்றி அதில் கதை சொல்லும் முறையை வகுத்து, வண்ண ஒளிகளோடும், ஆடை அணிகலன்களோடும் மேடை அரங் கேற்றம் கண்டது.

உலகில் நாடகத்தின் பரிமாண வளர்ச்சி இப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.

''மேடை நாடகம்'' என்பது இன்று ஒரு பழங்காலத்து நிலையாகக் கருதப்பட்டாலும்... இதுவே இன்றைய வானொலி, சினிமா, தொலைக்காட்சி, வீடியோ, ஆகியவற்றுக்கு அடிப்படையான கலை என்பதை யாராலும் மறக்க முடியாது. வெறும் ஒலிகளைத்தான் கேட்க முடியும்.

வெறும் இந்த ஒலிகளைக் கொண்டு அற்புதங்களைப் படைக்க முடியும் என்பதனை வானொலி நாடகங்கைளக் கேட்போர் அறிவார்கள். கலைத்துறையில் சிறந்த சாதனைகளைப் படைத்திருக்கின்றன.

மிக முக்கியமாகத் தெரிவிக்க வேண்டிய கருத்து கதை புத்தகங்களை வாசிப்பதாலும், வானொலி நாடகங்களைக் கேட்பதாலும், மனிதனின் கற்பனை வளம் பெருகுகின்றது. படிப்பதையும் - கேட்பதையும் மனதில் திரை விரித்து அற்புதக் காட்சிகளாக சித்திரிக்கின்றன. தொலைக் காட்சிகள் நமக்கு வந்து சேராத வரையில் வானொலி நாடகங்கள் கலைத் துறைக்கு சிறந்த சேவையாற்றி வந்துள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்து பிரிட்டிஷார் மீண்டும் வந்தபோது 1946ஆம் ஆண்டு ரேடியோவை மலேசியா தொடங்கியது.

மலேசிய வானொலி - சிங்கையும் சேர்ந்திருந்த காலத்தில் ஒரே நிலையமாகச் சேவையைத் தொடங்கிய காலத்தில் நாடகங்கள் ஒலியேறி இருக்கின்றன.

குறிப்பாக, மலாயா கம்யூனிஸ்டு பயங்கர வாதிகளை ஒடுக்க அவர்களுக்கெதிராக பிரச்சாரங்கள் செய்வதற்கென வானொலி சேவை வேகமாக முடுக்கிவிடப்பட்டது. அதில் பிரச்சார நாடகங்களும் ஒலியேறியிருக்கின்றன.

வானொலி தமிழ்ப் பிரிவில் தஞ்சை எஸ்.தோமஸ் தலைவராக இருந்த காலத்தில் நாடகங்கள் தயாரிப்பது தொடங்கப்பட்டது என நினைக்கிறேன். அவருக்குப் பிறகு திரு.இராமச்சந்திர ஐயர். திரு.ஹனிப் போன்றவர்கள் பொறுப்புகளில் இருந்துள்ளனர்.

மதிப்பிற்குரிய திரு.ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் பொறுப்பிற்கு வந்த பிறகு மலேசிய வானொலி ஒரு தனிச் சிறப்பைப் பெற்றது. மலேசிய வானொலி இந்தியப் பகுதி ஒரு பல்கலைக்கழகம் போல் தமிழுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும், தமிழ் இசைக்கும், தமிழ் நாடகங்களுக்கும் தரமான சேவையை வழங்கி, வளர்சசிக்கு வழிகோலியது என்பதை அழுத்தமாகக் கூறலாம்.

வானொலி நாடகங்கள் படைக்கத் தொடங்கிய காலங்களில் நாடகங்களை எழுதிய எழுத்தாளர்களில் ஒரு சிலரைக் குறிப்பிட வேண்டுமென்றால், சிங்கை ரெசுவப்பா, தினகரன், கவிஞர் க.பெருமாள், சி.கோன், பைரோஜி நாராயணன், பழநியப்பன், டாக்டர் ரெ.கார்த்திகேசு, ரெ.சண்முகம் ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

இவர்களில் க.பெருமாள், ரெ.சண்முகம், பைரோஜிநாராயணன், பழநியப்பன், சுங்கை சிப்புட், கை.சே.பெ. பொன்னம்பலம், சுங்கைப்பட்டாணி ரெ.ராமசாமி போன்றோர் இலக்கிய நாடகங்களையும் கவிதை நாடகங்களையும் எழுதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் சா.ஆ.அன்பானந்தன், ப.சந்திரகாந்தம், மெ.அறிவானந்தன். பழனியப்பன், தீனரச்சகி, சந்திர சூரியா, கண்மணி கிருஷ்ணன், சக்கவர்த்தி சுப்பிரமணியம் வைரக்கண்ணு, சுங்கை பக்காப் சுப்பிரமணியம், பட்டார்வெர்த் ஜெயலட்சுமி, ஈப்போ அன்னக்கிளி ராசையா, மு.அன்புச் செல்வன், மைதி. சுல்தான், அரிகிருஷ்ணன், சரஸ்வதி, பி.கே.சாமி இன்னும் பலரும் அதிகமாக வானொலி நாடகங்களை எழுதியவர்கள் ஆவர்.

வானொலி நாடக தயாரிப்பாளர்களில் திருவாளர்கள் சுவாமிநாதன், அசன்கனி, கமலா தேசிகன், துளசிகிருஷ்ணன், சரஸ்வதி, ராமச்சந்திரன், ராமன், பீட்டர், சந்திர சுரியா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழினப் பொருளாதாரம், மொழி வளர சில துளிகள்!

தருமலிங்கம் மலேசியா

மலேசியாவைப் பொறுத்தமட்டில் 1957-ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து; மற்ற இன மக்கள் கண்டுள்ள வளர்ச்சியைக் கண்டு நம் தமிழினம் பெமூச்சு விட்டுக் கொள்வதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை.

பலர் இன்னமும் சேவைத் துறைகளையும், தொழில் துறைகளையுமே நம்பி இருக்கும் வேளையில் ஒருசிலராவது நல்ல தொழில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள் என்றெண்ணி மன ஆறுதல் கொள்ளலாம்.

இந்த நிலை தொடர்ந்து நீடிப்பதற்கும், இன்னும் மோசமடைவதற்குமான அறிகுறிகளே அதிகம் காணப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியும், கல்வியும் ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டுள்ளதென்பதை நாம் தவிர்க்க முடியாது.

மலேசியாவில் பட்டப்படிப்பு வரை கல்வி பெறும் வாய்ப்புகளிருந்தாலும் அதைப் பெறுவதற்கு அடிப்படை பொருளாதார வசதி வேண்டும். உபகாரச் சம்பளம் பெற்று பயிலும் வாய்ப்போ மிகக் குறைவாக இருக்கின்றது. வெகுச் சிலருக்கே அந்த வாய்ப்பும் கிடைக்கின்றது. அதே வேளையில் அன்றாடம் கிடைக்கின்ற வூருவாய் குடும்பச் செலவுகளை சமாளிப்பதற்கே குறைவாக இருக்கின்றதே என்ற குடும்பத் தலைவனின் புலம்பலுக்கிடையில் எவ்வாறு மேற்கல்விக்கான பணத்தை திரட்ட இயலும், ஆகவே திறமையுள்ள குழந்தைகளும் கல்வி பெறுவதிலே அனாதை ஆகின்றார்கள்.

எரிகின்ற நெருப்பில் எண்ணை ஊற்றுவது போல அமைகின்றது கல்விக் கழகங்கள் கேட்கின்ற தொகைக்கு எட்டியது வாயிக்கு எட்டாத கதை.

கல்வி பற்றாக்குறையின் விளைவாக தரமான வேலை வாய்ப்புகளையும் இழந்து, மீளாப் பொருளாதார, சிக்கலில் தவிக்கும் ஒரு சமூகமாக தமிழினச் சமூகம் மாறிவருவதைக் காண முடிகிறது.

குடும்பத்தைப் பராமரிக்கவே ஆண்களும் பெண்களுமாக வேலை செய்ய வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்படுகின்றது. மற்ற சமூகப் பெண்களும்-வேலைக்குச் சென்றாலும் அவர்களில் பலர், வீட்டு வேலைக்காரிகளை நியமித்துப் பராமரிக்கின்றனர். ஆனால், தமிழின சமூகத்தினர் குழந்தைகளைப் பராமரிக்க இயலாது. பல சமூக சீர்கேடுகளில் ஈடுபட்டு பின் தள்ளப்பட்டுள்ளனர்.

தங்களது மன உலைச்சலையும் சில கட்டு பாட்டு கொள்கைகளின் காரணமாக நிகழ்ந்துள்ள தொழில்துறை இழப்புகளையும் எதிர் கொண்டுள்ள இச்சமூகம் தனது ஆதங்கத்தை வெளிப்படுதினால் அடக்குமுறை பாயும் என்றெண்ணி தங்களது சமூகத்தினிரிடையே குழம்பிக் கொண்டிருக்கின்ற அவல நிலை.

இன்று ஐக்கிய நாட்டு சபையில் ஏறக்குறைய நூற்று அறுபது நாடுகள் உறுப்பியம் பெற்றுள்ள நாடுகளில் தமிழினத் திற்கென்று ஒரு தனிநாடு இல்லை.

உலகிலுள்ள அத்தனை நாடுகளிலும் இந்தியர்களும் இன்னும் குறிப்பாக தமிழர்களும் வாழ்கின்றார்கள். இன்னும் குறிப்பாக பிஜி, மொரீசியஸ், இலங்கை, சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா, மலேசியா, போன்ற பதினைந்து நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ் மொழி, கலை, கலாச்சாரம், வாழ்ந்தாலன்றி தமிழினம், நிலை மாறிப் போய்விடும் என்ற கலக்கம் மூதறிஞர்களிடத்தில் பரவலாக பேசப் பட்டுவருவதும் தெளிவே.

அதற்காக தமிழ் வாழ்ந்தால் தமிழினம் உலகில் தலை நிமிர்ந்து பீடு நடை போடுமென்றும் நாம் சொல்லிவிட முடியாது. பொரளாதார வளமோடும், கல்வித்திறனோடும் செயல்பட்டு கடப்பாடோடும் சமுதாய வளர்ச்சிக் கொள்கையை வகுத்தாலன்றி தமிழினம் தன்னம்பிக்கையோடு வாழ வளர முடியாது.

கடந்த காலங்களில் தென்னிந்தியாவிலிருந்து காலனித்துவ ஆட்சியினரால் மலேசியா கொண்டு வரப்பட்ட இந்தியர்கள்,குறிப்பாக தமிழர்கள் உடல் உழைப்பு வேலைகளையே செய்து வந்துள்ளனர்.

அவர்களின் எண்ணங்கள் அனைத்தும் தாய்த் தமிழகத்தையேச் சுற்றி வந்துள்ளதென்பதற்கு, 1965- அறிஞர் அண்ணாவின் சான்றாக அமைகிறது. தமிழர்கள் உலகமெங்கும் இருந்தாலும் இங்கே தான் வாழ்கின்றார்கள். தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டின் குடிமக்களாகி வாழ்க்கை வளப்பதை அந்நாட்டோடு இணைத்து விட வேண்டும். அதுபோல மலேசியாவில் சிறப்பாக வாழுகின்ற தமிழினம் முற்றாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மலேசியாவைப்பொறுத்தமட்டில் அறிஞர் அண்ணாவின் உரையில் எத்தனை உண்மைகள் தொக்கி நிற்கின்றன. ஆற்றில் ஒருகாலும் சேற்றில் ஒரு காலும் வைத்திருந்த இச்சமூகம் பல வாய்ப்புகளை இழந்து இன்று சிறுபான்மை சமூகமாகி தொடர்ந்து நம் முன்னோர்கள் சுற்றி வந்த வாழ்க்கைச் சக்கரத்தை மீண்டும் தொடுக்கும் நிலையிலுள்ளோம். பூமி உருண்டை என்று நமக்கு நாமே உணர்த்திக் கொண்டு வருகிறோம். குண்டு சட்டியில் குதிரைச் சவாரி செய்கிறோம்.

ஆகவே கல்வி மேம்பாட்டிற்கான பணிகளை முடுக்கி விடவும் பொருளாதார வளர்ச்சியில் பரவலாக பயனடையும் வகையிலும் நம் சமூகம் திட்டமிட்டு செயல்பட வேண்டிய கடைசி படிக்கல்லுக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இத்திட்டங்களுக்கு தாய்த் தமிழகமும் மற்ற நாட்டு தமிழ்க்குடி மக்களும் ஒருவரோடொருவர் வந்துறவாடி ஒற்றுமை புனைந்திட முன்வர வேண்டும்.

கல்வி ஊக்குவிப்பு

இந்தியாவிலே குறிப்பாக தமிழகத்திலே இப்பொழுதிருக்கின்ற நிலை மாறி வெளிநாட்டு தமிழர்களுக்காக கல்விக்கான ஏற்பாடுகள் சிலவற்றைச் செய்திடல் அவசியம்.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கல்லூரியிலும் பயில விழையும் வெளிநாட்டு தமிழினக் குழந்தைகளுக்கு குறைந்து 15% இடங்களை ஒதுக்கீடு செய்தல் பன்னாட்டு தமிழுறவு மன்ற உலகளாவிய கிளைகளின் பரிந்துரையோடு வருவோருக்கு இடம் ஒதுக்கிடல், தமிழக அரசாங்கமே இதற்கு ஒப்புதல் ஆதரவு, ஒத்துழைப்பு நல்கிடவேண்டும்.

பல்கலைக் கழகங்களில் விகிதாச்சாரப்படியும் குறிப்பிட்ட துறைகளில் பயிலுகின்ற நிலமையின் காரணமாக பல திறமையான மாணவர்களுக்கும் கூட மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் பயிலும் வாய்ப்பு மிகவும் குறைந்துள்ளது. அதனை ஈடுசெய்யவே தமிழினக் குழந்தைகள் வேறு நாட்டில் கல்வி தொடரும் கட்டாயம் ஏற்படுகின்றது.

ஆகவே தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் தரபார்த்து ஊக்குவிப்புத் தொகை கேட்காமல் இட ஒதுக்கீடு செய்திடல் அவசியம். நல்ல திறைமையான மாணவர்களுக்கு தமிழக அரசு உபகாரச் சம்பளங்களை வழங்கி ஆதரவுக் கரம் நீட்டிடல் அவசியம். அதனை தமது கடப்பாடாகக் கொள்வது உலக தமிழினத்திற்கு செய்யும் தொண்டாகும்.

மேலும் வெளிநாட்டு தமிழின மக்கள் குறைந்த செலவில் தங்கி பயிலும் வாய்ப்பினை உருவாக்கும் வகையில் தமிழக அரசு கல்லூரி ஒன்றை நிறுவி, பொறியியல், பொருளாதாரம், மருத்துவம், கணினி, மின்னியல் போன்ற துறைகளை சுலபமாக அறிமுகம் செய்திட வேண்டும்.

இளைஞர்கள் பரிமாற்றுத் திட்டம்

கலை கலாச்சார இளைஞர்கள் பரிமாற்றுத் திட்டங்களை உருவாக்கி இருவழி / இரு நாடு தத்தெடுக்கும் முறைகள் வழி வளரும் சமூதாயம் அறிவாற்றல் பெற பெரும் வாய்ப்பை உருவாக்குதல் அவசியம். தமிழர்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளும் மிகமிகக் குறைவு. அப்படியே கிடைத்தாலும் பெற்ற அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் வசதியும் அதைவிடக் குறைவு.

தமிழ்க் கல்வியும், அதன் வளர்ச்சியும்

பல இனங்கள் வாழும், மலேசியாவில் அவரவர் தாய் மொழியினை கற்றறியும் கல்வி கொள்கை வழங்கப்பட்டாலும், தமிழ் மொழி கற்பதற்கு பல வழிகளிலும் இடையூறுகள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

இதற்கு மிக முக்கியமான காரணம் சிறுபான்மைத் தமிழர்கள் சிதறிக்கப்பட்டு வாழ்கிறார்கள். தமிழ் மொழி பள்ளிகளுக்குள் செல்ல வேண்டுமென்று ஆர்வமுள்ள பெற்றோர்கள் கூட தங்களது குழந்தைகளை வசதி குறைவினால் அருகாமையி

லுள்ள வேற்றுமொழிப் பள்ளிக்கு அனுப்ப வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றார்கள். இந்த வேற்று மொழி பள்ளிகளில் தமிழ்மொழியை படிப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் பொறுப்பாசிரியர்களுக்கு எழுவது கிடையாது.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் பற்றாக்குறை என்றுசொல்லித் தமிழ்மொழியை போதிப்பதின்று பின்வாங்கிடும் நிலை.

இந்தப்பற்றாக்குறையை நீக்கி நற்றமிழ் பயின்றிட தமிழக மலேசிய அரசாங்க அளவில் கருத்து பரிமாற்றம் செய்ய பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் ஆவன மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக மொழிப் பிரச்சார இயக்கம் வழி தமிழக அரசு மேற்கொள்வது உலக அரங்கில் தமிழ் மொழி வளர ஒரு நிரந்தர அமைப்பு இருக்கின்ற தோற்றம் பெறும். தமிழக அரசு அறநிதி ஒன்றைத் துவக்கிடும். உந்துதலை பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் வகை செய்ய வேண்டும்.

மருத்துவ பேருதவி

உலகிலேயே மருத்துவ நிபுணத்துவம் நிறைந்த நாடு தாய்த் தமிழ்நாடு என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

இந்த மருத்துவ நிபுணத்துவத்தை முறையாக பெறுகின்ற வாய்ப்பு பலருக்கு கிடைக்காமல் போவதற்கு காரணமே பொருளாதாரச் சிக்கல் தான்.

மலேசிய தமிழர்களில் இன்னும் அன்றாட ஊதியத் தொழிலாளர்களாக இருப்பதால் நவீன மருத்துவ முறைகளைப் பெருவதில் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளனர். இவர்கள் போன்றே உலகில் பல பாகங்களிலுள்ள தமிழர்களும் அடங்கும்.

இவர்களுக்கு விடி வெள்ளியாக தமிழக மக்களும், அமைப்புகளும் அரசும் இலவச பராமரிப்பு அறநிதியைத் தோற்று வித்தும் பேருதவி நல்கிட இந்த மாநாடு உதவட்டும்.

வாணிகத் தொடர்பு

கடுமையான உழைப்பும், அறிவாற்றலும் ஒருங்கிணைந்துப் பெற்றத் தமிழினம் ஏனோ உலகரங்கில் பொருளாதார ரீதியில் இன்னும் பின் தங்கியே உள்ளனர். ஒரு சிலர் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றோரைத் தவிர மற்றவரெல்லாம் பின் செல்பவர்களாகவே வலம் வருகின்றனர்.

இப்பொழுது இந்தியா மேற்கொண்டுள்ள திறந்த பொருளாதார கொள்கையை வழிகாட்டியாகக் கொண்டு, தமிழ்நாடுஅரசு மிகக் குறுகிய காலத்லேயே பெரிய வாப்பைக் கொண்டு வந்துள்ளது. இந்த பொருளாதார வளர்ச்சியில் உலகத் தமிழினத்தையும் இணைத்துச் செயல்பட பொருளாதாரக் குழுக்கள் அதிக அளவில் பயணம் செய்து வாய்ப்பு வசதிகளை எடுத்தியம்பி பரவலாக பயண்டையச் செய்ய வேண்டும்.

பன்னாட்டுத் தமிழர்கள் உற்பத்தி செய்கின்ற ஏற்றுமதி இறக்குமதி செய்கின்றபொருட்களை கண்காட்சிக்கு வைத்து வணிகர்களை இணைத்து வைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை பலரும் பெறலாம்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் தனது உலகளாவிய தொடர்பு வழி முழுவிவரங்களைப் பெற்று கையேடொன்றை தயாரித்தளிப்பதன் வழி மேலும் பொருளாதார தொடர்புகளை இணைக் கலாமே!

பண்டைக் காலம் தொட்டு தமிழினம் மற்றவர் களுக்கு வாரி வழங்கி போதுமென்ற மன புன்சிரிப்பு என திருப்தி கொண்டு கொடுத்துக் கொண்டே இருந்தது தவிர எதையும் எடுத்துக் கொள்ள முயற்சிக்க வில்லை.

பிஜியில் இழந்தோம், இலங்கையில் இழந் தோம் இன்னும் தமிழகத்தில் கூட தமிழனம் போராடிப் பெற வேண்டிய நிலையிலே உள்ளது.

''திரைகடல் ஓடித் திரவியம் தேடு'' என்ற அடைமொழிக்கொப்ப உலகமெங்கிலும் ஓடி தேடிப் பித் திரிகின்ற நிலையை எண்ணி என்று பிறருக்கும் விடிவு காலம், உழைக்கத் தயாராக இருந்தும் உதவிட ஆளில்லை. இந்த மாநாடு வழி காட்டிட இழுத்துச் செல்லுமா அல்லது வழிகாட்டி மரம்போல் நின்றுவிடுமா?

இம்மாநாட்டில் சில பல நல்ல முடிவுகள் பிறந்திடல் வேண்டுமென்பதால் எனது எண்ணங் களை ஆய்வுக் கூட்டுரையாக சமைக்காமல் கருத்து தீர்மானங்களாக உங்கள் முன் வைத்துள்ளேன்.

THE SUPREMACY OF TAMIL CULTURE

Dr. V.G. Santhosam

I deem it a privilege and honour to participate in this FOURTH CONFERENCE OF THE INTERNATIONAL TAMIL INTEGRATION SOCIETY held at BANGKOK, THAILAND. And I am really thankful to the organisers of this conference, especially Perumkavikko Dr. Va.Mu.Sethuraman for having given me this golden opportunity.

Perumkavikko is known for his invincible courage and determination in facing challenges and overcoming difficulties like a roaring lion, his unquenchable and staunch love for Tamil and Tamils all over the world is incomparable and unparalleled. At the very outset, let me congratulate Perumkavikko Dr. Va.Mu. Sethuraman for having successfully organised this Conference. My best wishes and prayers are always with him. And it is my sincere and strong wish that the International Tamil Integration Society under his leadership and guidance should come forward with plans and proposals for a place of pride and honour for Mother Tamil to be in the forefront in the comity of nations in leading the world into Light and Life beyond the dawn of the 21st Century towards the Third Millemium in consonance with the secular and spiritual character of Tamil Culture.

It is a well known piece of history that the VGP Brothers had grown from poverty to prosperity through industry and trade. It is also a known fact that parallel to this growth in wealth stands our service to society which covers a variety of spheres. The VGP World Tamil Sangam was started in 1993. Our love for Tamil was the motivating force behind its birth. The Basic objective of the VGP World Tamil Sangam has been to integrate the Tamils all over the world and fill their minds with the spirit of development in industry and trade treading the path of ancient Tamils known for their overseas trade and commerce. "Ulagai Tamilaal Oyarthuvom" (Let us develop the world with the help of Tamil) is the motto of the VGP World Tamil Sangam. Acting largely on the advice of Muthamizh Kavalar K.A.P. Viswanatham, the VGP World Tamil Sangam has been instrumental in focussing new lights on the ancient glory of Tamil Culture and Literature. It is all history now to remember a ship voyage from Chennai to Andaman Islands for conducting its annual conference with 432 participants on board of the shop itself, an Air flight from Chennai to Madurai for conducting a Poets' Meet in the aeroplance itself and a Train Journey for conducting a Literary Debate in the Train itself with more than hundred participants. All these adventurous events still remain in our memories as spectacular and splendid examples of doing noble things in most novel ways unmindful of the costs involved in the ventures.

My deep association, as the Founder-President of the VGP World Tamil Sangam with numerous poets and scholars in Tamil has become contributive to the development of poetic genius in me. Gradually I have authored nearly 40 books and there are more than 30,000 hymns to my credit sung of different deities of different religions. Six university Vice-Chancellors in a joint sitting conferred on me the covetous title of "Kavi Chakravarthy" The

title, "Ezhisai Enthal" was conferred on me by Kalaingar Dr.M. Karunanidhi, Cheif Minister of Tamilnadu.

Very soon, I have begun to realise that Mother Tamil and Spirituality are not only inseparable but also inevitably one in essence. Spirituality is the life-breath of Tamil and what Mother Tamil spearheads all around from time immemorial is only the spiritual culture based on a synthe sis between materialism and spiritualism. Poverty to no one but prosperity to one and all both materially and spiritually is the ideal of the Tamil Culture. No other language in the world than Tamil can put a claim to the legacy and heritage of a spiritual culture. Indeed, secularism in its proper perspective is the sole and special feature of the Tamil Spiritual Culture. Such a real and true secularism shines through Tamil saints like Tholkappiar, Thirumoolar, Thiruvalluvar, Vadalur Vallalar and Vaikunta Swami.

Inspired by the secular and spiritual outlook and character of Tamil Culture, the Gnanaoli Peetam headed by me has recently constructed the VGP temple of World Peace in Chennai. It was inaugurated by Kalaignar Dr. M. Karunanidhi in the holy presence of Swami Sachinthananda and other spiritual leaders from all world religions. This Temple aims at uniting all world religions under the banner of Universal Truth and at bringing the Hindus, Muslims, Christian and peoples of all religions into one fraternal fold of universal brotherhood in the name of one God. God is worshipped in the form of light at the VGP Temple of World Peace. "Light Divine leads to Life Divine" is the motto of the Temple. As such, the VGP Temple of World peace stands for Life Divine upon earth and strives for the transformation of Kaliyuga into Dharmayuga. It has come to integrate, harmonise and spiritualise the human race under once umbrella of Universal Integration. It has come to herald the Universal Religion of Universal Love and Integration. As the sole and singular custodian and guardian of spiritual culture from time immemorial, Tamil and Tamils march ahead in the fore front in this historical march towards Universal Truth, Love and Peace. And no wonder, the VGP Temple of World Peace stands charged with this highest mission on earth. This is all due to my love and affection for Tamil, Tamils and Tamil Culture.

As the Founder - President of both the VGP World Tamil Sangam as well as the VGP Temple of World Peace, I am really happy to be with you all here at the Fourth Conference of the International Tamil Integration Society. It is my firm conviction that with Secularism and Spiritualism as the two eyes of the Tamil Culture, Mother Tamil alone is cable of leading the world into the 21st Century future that belongs to spiritual culture. It is noteworthy of special mention here that the Tamilnadu Government under the enlightened statesmanship of Kalaignar Dr. M.Karunanidhi has been second to none in promoting Tamil. The sovereignty of Tamil has been steadily expanding into all spheres of life. We can very well hope that the enthronement of Mother Tamil will become total and complete under this rule.

While wishing all success to this great conference of historical importance, I appreciate the kind gesture of the Tamils in Bangkok for having come forward to host this conference and spearhead a new turn in the history of Mother Tamil.

Thank you - Live With Light.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றக் குறிக்கோள்கள்

1. உலகில் உள்ள பல நாட்டுத் தமிழர்களின் இணைப்புப் பாலமாக இருப்பது.

2. (1) உண்மை, (2) உறுதி (3) உழைப்பு (4) துணிவு (5) அறுவடை என்ற ஐம்பெரும் ஆற்றல் களை உலகத் தமிழருக்கு உணர்த்தலும் ஊட்டுதலும்.

3. (1) தமிழ் - தமிழின உயர்வு (2) பன்னாட்டு உறவு (3) பொதுப் பயன் தரும் ஆக்கம் (4) தன்னல மறுப்பு ஆகிய நான்கு பெரும் நோக்கங்கட்கான கொள்கை வழி நடப்பது - நடத்துவிப்பது.

4. தமிழர்கள் அயல் நாடுகள் சென்றவுடன் தாய்த் தமிழை கலாச்சாரத்தை மறக்கின்றனர். இதனைப் போக்க வெளிநாட்டுத் தமிழர்களின் குழந்தைகட்குத் தமிழ் கற்றுக் கொடுக்கவும் தமிழர்களுக்குத் தமிழ்க் கலாச்சாரப் பெருமையை உணர்த்தவும் ஆசிரியப் பெருமக்களைத் தமிழகத்திலிருந்து அனுப்புவது; தமிழை மறவாமல் காப்பது.

5. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற தமிழர்களின் நெஞ்சோடு நெஞ்சம் கலந்து உறவாடும் வகையில் அவர்களை வரவேற்றுச் சிறப்புச்செய்வது.

6. வெளிநாட்டுத் தமிழர்களுக்குத் தேவையான புத்தகங்கள். கலாச்சாரப் பண்பாட்டுத் தொடர்புக்குரிய பொருள்கள் மற்றும் பல நல்லனவற்றைத் திரட்டி அனுப்புவது.

7. தமிழ்மொழி, உலகில் மூத்தமொழி, தமிழ் இலக்கண இலக்கியங்கள் தொன்மை வாய்ந்த இனிமையும் சிறப்பியல்பும் வாய்ந்தன என்பதை உலக மொழியாளர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளும் வகையிலான நடைமுறைகளை வகுத்துச் செயலாக்கம் செய்ய நன்னெறி வகுப்பு! உலகத்தின் உயர்தனிச் செம்மொழி தமிழ் என்பதை உலக அரங்கில் நிலை நாட்டுவது.

8. உலகத் தமிழறிஞர்களை தமிழர்களை ஒன்றுபடுத்துவதும் ஒருமைப்படுத்துவதும் - ஒற்றுமையாகச் செயலாக்கம் செய்யச் சிந்திக்கச் செய்வதும் இணைப்புப் பாலமான வழிமுறை நெறிகளைக் காட்டுவதும் படித்தவர்களின் அடிமை மனப்பான்மைகளை நீக்கித் துணிவைச் சுவைக்க வழி வகுப்பது, நெறிப்படுத்துவது.

9. வெளிநாட்டுத் தமிழர்கள் - தமிழறிஞர்கள், தமிழகத் தமிழர்கள் - தமிழறிஞர்கள்; கொண்டும் கொடுத்தும் வெளிநாட்டுக்கு , அனுப்பியும், தமிழகத்திற்கு வரவழைத்தும் தொடர்பு கொள்ள வைப்பது.

10. பன்னாடுகளிலும் வாழும் தமிழர்கள் தமிழகம் வந்தால், அவர்கள் தங்குவதற்கும், அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்வதற்கும், தகவல்கள் அறிவதற்கும் தேவையான அனைத்து நிலைகளையும் அடைவதற்கும் உலகில் முப்பதிரண்டு நாடுகளுக்கு மேல் வாழும் உலகத் தமிழர்களின் ஓங்கிய உறவைக் குவித்து வளர்ப்பதற்கோர் அரசியல் சார்பற்ற நிறுவனத்தை - மையத்தைத் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையம்பதியில் அமைப்பது, பின்னர் இதனை விரிவுபடுத்துவது.

மேற்குறித்த கொள்கைகள் வெற்றி பெற உழைக்கும் திறன் உள்ளவர்கள் பன்னாடுகளிலிருந்து தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

வணக்கம்.

வா.மு.சே. திருவள்ளுவர்
இயக்குநர்

International Tamil IntergrationSociety
12, Sai Nagar Annexe, Chinmaya Nagar,
Chennai - 600 092. India
Ph : 91-44-4871375, 91-44-8552237
Email : kokudil@md2.vsnl.net.in

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்
12, சாயி நகர் இணைப்பு, சின்மயா நகர்
சென்னை - 600 092. இந்தியா
தொலை பேசி - 91-44-4871375, 92-44-8552237
மின் அஞ்சல் Kokudil@md2.vsnl.net.in

With best compliments from

A happy and highly valuable NEWS to those who are suffering from

PSORIASIS

an incurable, Chronic skin disease that prevails all over the world.

PSORIASIS is an international skin disease which affects millions of people in all the countries of the world.

No age and sex in exception for this skin disease. This is not a life threatening disease like HEART DISEASE, AIDS, CANCER Etc. But a very trouble some, worrying skin disorder which affects the external apearance of a person , disfigures him cosmetically and make the patient as a disliked person in the society.

Poeple are suffering from this PSORIASIS from a few months to several years even up to 10,15, 20, 25, 30, 35, 40 , and 50 years.

My first research patient of PSORIASIS is the well known freedom fighter, of Tamil Nadu, India, namely PARALI SU. NELLAYAPPAR who is popularly known as the brother of Maha KAVI SUBRAMANIA BHARATHI. PARALI Su NELLAYAPPAR was suffering from PSORIASIS for a period of FIFTY YEARS which is the longest period of all my PSORIASIS patients. He tried all the systems of medicine existing in the world to-day and find no cure. he lost all hopes of getting this cured in his life time.

THIRTY YEARS ago, suddenly Dr. A. Ananda Kumar of CHENNAI (MADRAS) came to see him and took him as his research patient to cure with SIDDHA MEDICINES. Dr. Anandakumar has treated him for about FIFTY DAYS WITH SIDDHA MEDICINES, internal and external. After FIFTY DAYS of treatment he was cured of PSORIASIS COMPLETELY. Photos were taken before starting the treatment and after the treatment is over. They are published herewith. After this success story, till today about Five Thousand Patients of PSORIASIS have been cured by Dr. ANANDAKUMAR. Patients from Tamilnadu, India and Malaysia, and Singapore got cured in the first INSTANCE. Now, today this NEWS has spread all over the world, especially by the TAMIL speaking population and gradually people from all over the world are coming to CHENNAI (MADRAS) to get them cured of PSORIASIS.

THE SIDDHA TREATMENT is not the same for all the patients. It differs from individual to individual according to the condition of the sufferer. So no market sale of medicine are possible. One has to come to CHENNAI (MADRAS) and then only can get a cure . But this itself is a very good and happy NEWS. As otherwise there is no possiblity of cure available.

By the several treatments that are available all over the world, the disease disappears and comes again as relapse is a rule. There is no end for the disease. According to clinicians, if this disease does not relapse for a minimum period of TWELVE YEARS then only it can be said that it is cured. So we are watching to this effect. Many of the patients were cured by our medicines without relapse. The reseach is continuing.

For those suffers of PSORIASIS the information that PSORIASIS is curable, itself is an important NEWS, which gives peace of mind to millions of people.

For further particulars, please write to (DON'T ENQUIRE BY PHONE)

DR. A. ANANDA KUMAR, G.C.I.M.

DIRECTOR,

PANDIT S. S. ANANDAM RESEARCH INSTITUTE OF SIDDHA MEDICINE

NO. 22, RAGAVAIAH ROAD, T. NAGAR,

CHENNAI - 600 017, TAMIL NADU

INDIA.

With Best Compliments from

EBENEZER MATRICULATION HIGHER SECONDARY SCHOOL, CHENNAI - 80.

(Recognised by Govt. of Tamil Nadu)

TAMIL NADU

Medium of Instruction : English, with Tamil / French / Hindi as Second Languages
Co - Educational - Hostel Attached
Classes from Lower Nursery to Std. XII.

Apply immediatly for admission

Cost of application & Registration Rs. 100/- (may be sent by D.D. Drawn in favour of **EBENEZER MATRICULATION HIGHER SECONDARY SCHOOL** payable at Chennai.

For details contact :

EBENEZER MATRICULATION HIGHER SECONDARY SCHOOL,
7th Street, Housing Board Colony,
Korattur, Chennai - 600 080. Phone : 6250 237
TAMIL NADU

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய
நான்காம் மாநாடு

உடல் நலம் பேண
பல் நலம் காக்கவும்

அன்புடன்,

மகளிர் மாமணி. திருமதி. **வாசுகி கண்ணப்பர்**
பேராசிரியர். **ஜே. ஜி. கண்ணப்பர்**
சென்னை

With best compliments from

MALLIKA BATTERY SERVICE PRIVATE LIMITED

340 T.T.K. ROAD, ROYAPETTAH, CHENNAI- 600 014.
Phone : Off : 827 33 56/8273359
SERVICE STATION : Ph : 8273367/8263335
FAX No: 8238169
e - mail : mbs@md3vsnl.net.in

WHOLE SALERS FOR DAGENITE & DYNEX BATTERIES

BRANCHES : 5-4-81, M.G. ROAD, SECUNDERABAD-500 003.
Ph : 7825165/7834237

344, ANNA SALAI, PONDICHERRY -605 001.
Ph:336740

337, NORTH MASI STREET, MADURAI - 625 001.
Ph: 623331

With best compliments from

HOTEL SRIRAM NALLAMANI

Comfortable Stay Personalised service

3-A, Whannels Road,
Egmore, Chennai - 600 008.
Phone: 853 3866, 852 7840, 858 8405 (5Lines)

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு
மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



காயத்திரி

எமது நிறுவனத்தில் தொலைபேசி அட்டைகள் / சஞ்சிகைகள், இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து கடலுணவு வகைகள், மரக்கறி வகைகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

210, Rue du Fbg. St. Denis,
75010 / Paris.
Tel: 01 42 09 22 43
Fax: 01 46 07 09 34

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

பாண்டியன் பைந்தமிழ் பதிப்பகம் வழங்கும் இனிய தமிழ் நூல்கள்
பேராசிரியர் வி. கலைமணி எம்.ஏ, எம்.லிட்., எழுதிய

நாடகங்கள்

1. சான்றோர் பழிக்கும் வினை
2. வீர மார்த்தாண்டன்
3. ஔரங்சீப்பின் வீழ்ச்சி
4. மக்கள் தலைவன்
5. காதல் பித்தன்
6. கரிகால் வளவன்
7. மணிநாட்டுக் கூனன்
8. கண்ணனின் கபட நாடகம்
9. நகைச்சுவை நாடகங்கள் நான்கு
10. மாணவன்
11. சி.ஐ.டி. சித்ரா

தமிழில் சமூக நாடகம் பற்றிய ஆய்வு நூல்கள்

1. சமூக நாடகம் தோற்றமும், வளர்ச்சியும்
2. முதல் சமூக நாடகம் - டம்பாச்சாரி
3. சமூக நாடகம் - வகையும் தொகையும்

பயண நூல்கள்

1. அமெரிக்காவில் ஐந்து மாதங்கள்
2. பித்தன் பிறந்த பொன்னாடு
3. எனது இலங்கை பயணம்

சிறுகதைகள்

1. அன்னை பூமி
2. அரவிந்தன்

புதினங்கள்

1. பெண் பிறவி
2. பனியில் கருகிய மலர்
3. மனிதனின் மறுபக்கம்
4. மனச்சுமை

இலக்கியம்

1. இலக்கியம் காட்டும் இணையற்ற நண்பர்கள்
2. நல்ல தீர்ப்பு வழங்கிய நீதியரசர்கள்

வரலாறு

1. விடுதலைக்கு வித்திட்ட வீரர் அழகு முத்துதேவர்
2. வேளிர் வரலாறு

நல்வாழ்வு நூல்

1. உண்ணும் உணவில் ஓர் ஒழுங்கு முறை

1. தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகனார் எழுதிய "மனம் கவர்ந்த மலேசியா" (பயண நூல்)
2. நாட்டரசன் கோட்டை புலவர் துரை குமரேசன் எழுதியது "விடுதலைப் போராட்ட வீரர் " காப்பியம்
3. துரியோதனன் சபதம் – நாடகம் நாடகக் கலைஞர் சி. கரிகாலன் இயற்றியது.

மொத்த நூல்களையும் வாங்குவோருக்கு 25 சதவீதம் கழிவு தரப்படும், ஏழுதுக

பாண்டியன் பைந்தமிழ்ப் பதிப்பகம்

22, கந்தன் தெரு, மதுரை மீனாட்சி நகர், வளசரவாக்கம், சென்னை–600 081.

GREENLAND ASIA SHOP

BEISING STR - 12A
45141 ESSEN
TEL Phone : 0201/ 321288

விலைவிபரம்

புளி	*0.99*	
BROKEN RICE	24.90	DM
BROKEN RICE Tilda	27.90	DM

10 K குத்தரிசி	30.00	DM
1 K விளை மீன்	4.99	DM
1 K நண்டு	6.50	DM
1 K சீலா	6.50	DM
1 K கணவாய் (பெரியது)	6.50	DM
1 K சுறா	6.50	DM

மலிவு விற்பனை அல்ல நிலையான விலை

உரிமையாளர்:
I. ARULAMPHALAM

Best Compliments from

MUTHU CHEMICALS

22, Vengalakadai Street, Madurai - 625 001.
Phone: Office : 621809 Resi: 627737 Grams : SKYLARK

Wholesalers & Distributors:
For Dyes, Detergent Chemicals and Oils
Distributor:
Aravali Minerals & Chemicals Industries (P) Ltd., Udaipur For Soap Stone Powder

Stockist:

Ultramarine & Pigments Ltd., For OOB Ultramarine Blue

With Best Compliments from

Hotel Keerthi (Private) Limited

(Near Thangam Theatre)
40, West Perumal Maistry St., Madurai - 625 001.
Tel: 0452 - 741501 (10 Lines) Fax: 741510

S. Pandian

Syarikat Balamurugan

355- E, Jalan Sungai Besi, 31/2, Mile, 57100 Kuala Lumpu-
Tel: 7835730 / 7824581 Fax: 781 4304

Residence:

No. 10, Pandian St., Sivagami Nagar, Narayanapuram, Nathan Road,
Madurai - 14. Tamil Nadu
Tel: 0452 - 681 193 / 0452 - 681 680

With Best Compliments from

ASCON
TRAVEL PVT. LTD.

Ascon Travel is proud to be associated with International Tamil Integration Society and wishes the Conference in Bangkok all success.

VAZHGA THAMIZH!!

ASCON TRAVEL Pvt. Ltd., provides:

- Intenational / Domestic air travel tickets
- All countries Visa assistance
- Passport assistance
- Car Hire
- Hotel Accomodation
- Package Tours

H.O: 5, Thirumalai Pillai Road, Chennai - 500 017.
Tel : 8233378 (8 Lines) Fax: 8233102
E-Mail: ascon.che@gnmds.globalnet.ems.vsnl.net.in

Branches: Hari Lola , Mint Road, Mumbai-400 001.
Tel: 267 8864 / 2678963 Fax: 2692471
E.Mail: ascontvl@bom5.vsnl.net.in
G1, Sreenivasa Towers, 8-3-1187Begumpet,
Hyderabad - 600 016. Tel: 3304743, 3304745 Fax: 3104881
1y, Lavelle Road, Singapore - 560 661.
Tel: 2218700 Fax: 0210700

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு
மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

ஆஸ்கான் பயண ஏற்பாட்டு நிறுவனம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்துடன் இணைந்து செயல்படுவதில் ஆஸ்கான் நிறுவனம் பெருமிதம் கொள்கிறது. பாங்காக்கில் வருகிற மே மாதம் 23-25 வரை. நடைபெறும் இம்மன்றத்தின் உலகளாவிய நான்காம் மாநாடு சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறோம்.

வாழ்க தமிழ்

ஆஸ்கான் நிறுவனத்தின் சேவைகள்

- பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வானூர்தி பயணச்சீட்டுகள்
- அனைத்து வெளிநாடுகளுக்கும் செல்ல நுழைவுச் சீட்டு ஏற்பாடு
- கடவுச் சீட்டு பெற உதவி
- வாகன வசதி ஏற்பாடு
- விடுதியில் தங்கும் ஏற்பாடு
- தொகுப்பு முறை பயண ஏற்பாடு



தலைமை அலுவலகம்: 5, திருமலைப் பிள்ளை சாலை, சென்னை – 600 017.

தொலைபேசி : 823 33 78, 823 33 79

தொலைபேசி : 82333102

E-Mail: ascon.che@gnmds.globalnet.ems.vsnl.net.in

பொன்னின் பெருமை?

பெண்ணின் பெருமை?



L.K.S

கோல்டு ஹவுஸ்

60, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை–600 017.

போன்: 434 1111, 434 3323, 4344444, 4345555

L.K.S GOLD IS CASH IN HAND

எங்களின் நகை சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயனைடையுங்கள்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு
மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



அன்புடன்

கே. பழனிச்சாமி ஏ. எம். என்.

1, ஜாலன் மெகா 12,

தாமான் மெகா ஜெயா அம்பாங்

68000 சிலாங்கூர்

மலேசியா

எசன் மாநகரில் உங்கள் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்ய நீங்கள் நாட வேண்டிய நிறுவனம்

அபிராமி எண்டர்பிரைஸ் அன் வீடியோ

❁ தரமான தங்க நகைகள் 22 கேரட் ❁ ஆசிய உணவுப் பொருட்கள் ❁ கடல் உணவுப்பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் ❁ அனைவருக்கும் ஏற்ற ஆடைவகைகள் புதிய பழைய வீடியோ பிரதிகள், ஒடியோ சீடிக்கள்.

❁ **மறந்து விடாதீர்கள் உங்கள் மங்கள வைபவங்களுக்குத் தரமான முறையில் புதிய தொழில் நுட்பத்துடன் நீங்கள் நினைக்கும் காட்சிகளை வீடியோ படம் பிடித்துத் தருபவர்கள் அபிராமி வீடியோ மூவி ஸ்தாபனம்.**

Pfrede Market -9, 45127 Essen Germany

Tel: 0201 - 236925

With Best Compliments from

Mejestic Motors

117, General Patters Road,

Chennai - 600 002.

Grams : "MONOLY" Fax: 044- 8532799

Phone: 857 0937 / 854 9573

பாங்காக்கில் நடைபெறும் பைந்தமிழ்
மாநாடு வெற்றி பெற வாழ்த்துக்கள்

SIVAMALA

CORPORATION SDN.BHD. (155634H)



S.CHANDRASAEGARAN P.J.K.J.P
MANAGING DIRECTOR

WISMA SIVAMALA

NO.6-3, JLN PJS 11/28, SUNWAY METRO, BANDAR SUNWAY,
46150 PETALING JAYA, SELANGOR DARUL EHSAN,MALAYSIA.
TEL: (603)737 4935, 737 4942, FAX: (603) 737 4945 H/ Phone : 012- 2329118

தாய்லாந்தில் நடைபெறும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

சேது வள்ளியம்மாள் கல்வி அறக்கட்டளை

59, வள்ளியம்மாள் தெரு, சென்னை–53.

சேது பாஸ்கரா மேல்நிலைப்பள்ளி,

அம்பத்தூர், சென்னை–53.

TEL: 638 5871

FAX: 6382777

Email: sethubas@md3.com

கருணையகம்

டாக்டர் இகெதா பள்ளி

1515, 13 வது தெரு, அண்ணாநகர் (மேற்கு)

சென்னை–40.

TEL: 628 7397

சேது பாஸ்கரா I.T.I. கண்டர மாணிக்கம்

(மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

சிவகங்கை மாவட்டம்

With Best Compliments from

ASIAN SHIELD SDN BHD

176 - A & B, JALAN BAPU UNJUR
TAMAN BAYU PERDANA
41200 KLANG
SELONGOR DARUL
EHSAN
TEL: 03 - 3237735, 03 - 3237736
FAX: 03 - 323 7737

Best wishes for the success of

IT IS TIME YOU OWN A HOUSE SITE

for Rs. 48, 000/- at

V. G. P VINOTH TOWN PART - IV

SRI PERUMBUDUR

- Sriperumbudur is a fast developing satellite town, near metro Chennai
- It is very peaceful and unpolluted.
- V G P Vinoth Town - IV is near the Rs. 2400 crore investment Hyundai Car Factory.
- Also near the Rajiv Gandhi Memorial Mandapam with Rs. 500/- crore development plant.
- Land appreciation here being quite fast, it is a sound investment for the future of your children.
- Size of each plot is 223 sq. metre. 2400 sq.ft.)
- Instalment facility available, pay just 30% while booking. Rest through 24 easy monthly instalments.
- Rush Now! Book your plot!

Please contact : **V G P HOUSING PRIVATE LIMITED**

Corporate office: VGP Square, Saidapet, Chennai - 600 015

Ph: 457333, 457372, 4320752 Fax: 91-44-4346134

V.G.P. Victory House: No.39, Anna Salai, Chennai 600 002.

Ph: 8547307, 85267872, 8530314, 8530315

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு

மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

நிறைந்த வசதிகளுடன், குறைந்த வாடகையில்
சிறந்த தங்குமிடங்கள் (லாட்ஜ் மேன்சன்)

இராயப்பேட்டையில்:

தர்பார் கெஸ்ட் ஹவுஸ்

79,டாக்டர் பெசன்ட் சாலை, ஐஸ் ஹவுஸ்
(மீர்சாகிப் பேட்டை மார்கெட் சமீபம்) சென்னை - 600 014. போன்: 8544802, 8548817
ஃபேக்ஸ், தொலைபேசி, டி.வி. மற்றும் குளிர்பதன வசதியும் உண்டு

மவுண்ட் ரோட்டில்:

ஹோட்டல் ராயல் தர்பார்

30,31,மீரான் சாகிப் தெரு, (காசினோ தியேட்டர் அருகில்)
சென்னை - 600 002. போன்: 8526844, 8587502

மண்ணடி பிராட்வேயில்:

நியூ மார்பில் லாட்ஜ்

168, பிராட்வே ரோடு, மினர்வா பஸ் நிலையம் அருகில்
சென்னை -600 108.

With Best Compliments from

Lalitha Jewellery Mart (P) Ltd.,



123, Usman Road, Panagal Park, T. Nagar, Chennai - 600 017.
Phone: 8282939, 8283477 Fax: 91 - 44 - 8284311

Get Moving ..

with the experts

for
reliable and
efficient service

SOUTHERN PACKERS & MOVERS PVT. LTD.

PROFESSIONAL PACKERS & MOVERS OF DOMESTIC, INDUSTRIAL & EXPORTS

BRANCHES :
AHMEDABAD, BANGALORE, BHOPAL, CALCUTTA, COIMBATORE, DELHI, ERNAKULAM, GOA, GURGAON, HYDERABAD, INDORE, JAIPUR, LUCKNOW, MADURAI, MUMBAI, MYSORE, PONDY, PUNE, TRICHY, TRIVANDRUM, ASSOCIATES, ALL OVER INDIA.

- ❐ HOUSEHOLD PACKING CRATING, MOVING UNPACKING WITH ESCORTS
- ❐ STORAGE & INSURANCE/ WAREHOUSE
- ❐ DOOR TO DOOR SERVICE TO ANY CORNER
- ❐ LOCAL SHIFTING & MOVING SERVICE
- ❐ CARS TRANSPORTATION AND CONVOY SERVICES
- ❐ FLEET OWNERS & TRANSPORT CONTRACTORS
- ❐ APROVED PACKERS & MOVERS FOR NATIONALISED BANKS AND STATE AND CENTRAL GOVERNMENT AUTHORITIES
- ❐ CUSTOMS CLEARING & FORWARDING SERVICE FROM AIRPORTS, HARBOUR, RAILHEADS
- ❐ COVERED MINI VAN LCV, OPEN & COVERED TRUCKS AVAILABLE AT ANY TIME

CREDIT CARDS ACCEPTED

PHONE: 4756157, 4752672, 4754644

H.O: No. 12, RANGANAYAKI STREET. AYYAVOO NAIDU COLONY,
AMINJIKARAI, CHENNAI -600 029.

24/1, SHIVAGANGA MUTT ROAD, CHAMARAJPET,
BANGALORE - 18. Ph: 625 336/ 6615840

❐ MADURAI - Ph: 700033/701733. ❐ TRICHY - Ph: 463762
❐ PONDICHERRY - Ph: 30319

A UNIT OF SFC (P) LTD. STEPPED IN 23rd YEAR OF SERVICE

With Best Compliments from

SARA NURSING COLLEGE

DHARAPURAM - 638656

ERODE Dist. TAMIL NADU STATE, SOUTH INDIA

Phone: 04258 - 20659

(RECOGNISED BY GOVERNMENT OF TAMIL NADU)

No. 18327/PME / 1 /93 dated :23.6. 1993

AFFILIATED TO TAMIL NADU DR. M.G. R. MEDICAL UNIVERSITY

No.21181 / Alfin 11/ 1 / 93 dated 20. 1. 95

AND APPROVED BY TAMILNADU NURSES & MIDWIVES

COUNCIL No.235 / NC / 161 / 94

SARA NURSING COLLEGE

ADMISSION NOTICE

No Donation, No Capitation Fee

B.Sc. NURSING - 4 YEARS

Eligibility : Pass in +2, P.D.C. or equivalent with Science Subjects

SALIENT FEATURES:

* Students from All over India
* Qualified teachers
* Reputed results
* Owned by Minority Community - Many concessions
* Well equipped Laboratory, Class rooms and Hostel
* Fee at Government rate

ADMINISTRATOR

பேங்காக்கில் நடைபெறும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற
நான்காம் மாநாடு மாபெரும் வெற்றி பெற
வாழ்த்துகிறோம்.

மயிலாடுதுறை

நம்ம ஊரு செய்தி

உள்ளூர் செய்திப் பத்திரிக்கை

ஆசிரியர்

முனைவர் **அ. அய்யூப்**

(பொருளாளர்: உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகம்)



12, 2–வது முதன்மைச் சாலை
நகர வளர்ச்சிக் குடியிருப்பு
சென்னை – 600 004.
பேசி & தொலைவடிவம் : 499 11 61

141, பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை – 609 001.
பேசி : 25152

எண்கணித ஜோதிடம் நியூமராலஜி

டாக்டர். ஆர். ஐ. துரைமுருகர்

நியூமராலஜிஸ்ட், ஜெம்மாலஜிஸ்ட்

உழைப்பவன் – உழைப்பாளி

படித்தவன் – படிப்பாளி

திறமையுள்ளவன் – திறமைசாலி

ஆனால் அதிஷ்டம் சேராவிட்டால் எப்படி அதிஷ்டசாலியாக முடியும்?

10 +10 = 20 கூட்டல். இது உழைப்பிற்கு கிடைக்கும் கூலி

10 X 10 = 100 பெருக்கல் . இது உழைப்பிற்கு கிடைக்கும் அதிஷ்டம்

நியூமராலஜி என்பது பெருக்கல் போன்றது

"உங்களிடம் "லக்" இருந்தும் அது எங்கோ லாக்காகிக் கிடக்கிறது. அதைத் திறக்கும் திறவுகோல் தான் நியூமராலஜி" பிளானடரி டெக்னாலஜியான நியூமராலஜியை முறையாகப் பின்பற்றினால் நீங்களும் அதிஷ்டசாலியாகலாம். என்னிடம் ஆலோசனை பெற விரும்பினால் அப்பாயின்ட்மெண்ட் வைத்துச் சந்திக்கலாம். அல்லது புத்தகங்களை வாங்கிப் படிக்கலாம்.

ஆர். ஐ. துரைமுருகர் எழுதிய நூல்கள்

1. எண்களால் ஏற்றமிகு வாழ்வு – ரூ. 105
2. Successful Life Modern Numerology - Rs. 100-00
3. அதிஷ்டம் அளிக்கும் அதிசயக் கற்கள் – ரூ. 42–00
4. Our Lucky Gem Stones - Rs. 60.00

குறிப்பு: **ஆர். ஐ. துரைமுருகர்** தினத்தந்தியில் ஞாயிறு மலரில் பிறந்த நாள் பலன் எழுதுகிறார்.

விஜய் டீவியில் செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியிலிருந்து 6.30 வரை அடுத்த ஏழு நாட்கள் பலன் கூறுகிறார் . ராஜ் டிவியில் காலை 7 மணிக்கு வரும் இளம் தென்றலில் மாதப் பத்திரிக்கையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

முகவரி: **ஆர். ஐ. துரைமுருகர்**

111, கௌடியா மட் ரோடு,

ராயப்பேட்டை போலீஸ் நிலையம் அருகில்

சென்னை – 600014. ஃபோன்: 826 2914

பிறந்த நாள் காண்பவர்களுக்கு வருடப்பலன் கூறுகிறார் " உங்கள் நட்சத்திர யோகம்"

P.S.S. KRISHNAMURTHI EXPORT (P) LTD

EXPORTERS & IMPORTERS

Plot No: C-18 & C- 19A, SIPCOT INDUSTRIAL COMPLEX,
TUTICORIN - 628 008. (S. INDIA)
PH: 0461-340355, 340611 (O) 046 - 326905 (R)
FAX: 0461 - 326866 TELEX: (434)- 410 KRIS IN CABLE : NIPPONKRIS
Email: pssk@vsnl.com website:http://www.pssk.com

Krish Group's

Product Range

- Medicinal Herbs
- Herbal Extracts/ Herbal Tea
- Spices / Ground Spice Powders
- Natural Essential Oils
- Psyllium Husk / Seeds
- Dried Decorative Flowers
- Dried Marine Products

This brochure contains products generally dealt by us, however, if you have any specific product of your interest, please contact us. We look forward to your valuable enquiries.

BOARD OF DIRECTORS
CHAIRMAN & MANAGING DIRECTOR
Mr. P.S.S. KRISHNAMURTHI
DIRECTORS
Mrs. K. SAKUNTHALA
Dr. J. JAWAHAR
Mrs. J. THIRIBURASUNDARI
Mr. P.S.S.K. RAJA SANKARA LINGAM
Mrs. VEILA K. RAJA
CORPORATE HEAD QUARTERS

P.S.S. KRISHNAMURTHI EXPORTS (P) LTD.

C- 18 & C- 19A, Sipcot Industries Complex, Tuticorin - 628 008.
Tamil Nadu State, India.
REGD. OFFICE:
54, P.S.S. Nadar Street, Tuticorin - 628 001. Tamil Nadu State, INDIA.
Telephone: (91-46) 340355, 340611, 340612
Telefax : (91-461) 326866 Telegram : NIPPONKRIS Email: pssk@md3.vsnl.net.in
Iternet: http://www.pssk.com
Subsidiary Concerns PSSK PACKING CO.(PVT) LTD.,
SAKUNTHALA TRADING CORPORATION,
P.S.SOMASUNDARA NADAR MEMORIAL TRUST
P.S.S. HOSPITAL, TUTICORIN.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு

மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

Est. 1966

தஞ்சை கமலா, இந்திரா நாட்டியப் பள்ளி

SEKOLAH TARIAN TANJAI KAMALAA INDIRA

TANJAI KAMALAA INDIRA DANCE SHCOOL
kualalampur, malasiya.

With Best Compliments from

KM VET PHARM

Distributors for Animal Health Products

Dr. MAANIKAM B.V.Sc., AMIM.

Distributor for Bayer, Sime Darby B. Braun, T. T. K Pharma (Chennai) Indian Herbs International, New Delhi etc.,

kualalampur, malasiya.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு
மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



கே.வி.எஸ். பாண்டியன் & சகோதரர்கள்

பரமக்குடி,
இராமநாபுரம்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாடு
மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

நவநீதா டெக்ஸ்டைல்ஸ்

கம்பளி போர்வைகள், வண்ணமிகு பொன்னாடைகள், துப்பட்டிகள்
மொத்தமாக வாங்க சிறந்த நிறுவனம்

21, கிடங்குத் தெரு, சென்னை -600 001.

NAVANEETHA TEXTILES

21, GODOWN STREET,
CHENNAI - 600 001.

Best compliments from



COCONUT MAGIC

PURE

VVD
GOLD
COCONUT OIL

SINCE 1942

Manufactured & Marketed by

VVD & SONS Pvt. Ltd., TUTICORIN

உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் உடனடியாகத் தீர்வு காண

இன்றே சந்தித்து ஆலோசனை பெறுங்கள்!

உலகப் புகழ், சன் டீவி, ராஜ் டீவி, விஜய் டீவி, மற்றும் பத்திரிக்கை துறையில் பிரபலம் கொண்ட பல்வேறு விருதுகள் பெற்ற இவர் நிறைய மருத்துவ சேவை இலவசமாகவே செய்து சாதனைகள் நிகழ்த்தியவர். இதற்கு இவருடைய அலுவலகத்தில் உள்ள ஆதார பூர்வமான கடிதங்களே சாட்சி.

செவாலியர், டாக்டர், நவரத்தின ஜோதிடர்

டீ. இந்தர்சந் சுரானா அவர்கள்

எண்: 26, சி.என்.கே. சாலை, சேப்பாக்கம், திருவல்லிக்கேனி,
சென்னை – 600 005. போன்: 854 4827

With Best Compliments from

Orchid Pharmacare Pte Ltd

No.6, KERBAU ROAD,, LITTLE INDIA,
SINGAPORE - 219145
TEL: 2975493, 2975539
HEALTHCARE WITH A DIFFERENCE

ஓர்கிட் பார்மாகேர் பிரைவேட் லிமிடெட்
மருந்தகம் (மெடிக்கல் சாப்)

சன் டீவியில் ஒளிபரப்பாகும் மருந்துகள் லேகியங்கள்– மாத்திரைகள் மற்றும் எல்லாவித தைலங்களும் இங்குக் கிடைக்கும்.

ஆயுர்வேத – ஹோமியோபதி – நாட்டு மருந்துவகைகள் – மற்றும் ஹிமாலயா டிரக் கம்பெனி (Himalaya Drug Co.), டாபர் இந்தியா லிமிடெட் (Dabur Drug Co.), கிரவுன் ஹெர்பல் புராடெக்ட்ஸ் (Crown Herbal Products), மைதிலிஸ் ஹெர்பல் பியூட்டி புராடெக்ட்ஸ் Maitilis Herbal Beauty Products), சர்மிலா பார்மாவின் (Sarmila Parma),
மருந்து வகைகளும் எங்களிடம் கிடைக்கும்
இறக்குமதி – முழு விற்பனையாளர் – EAGLES BLACK HENNA

ORCHID PHARMACARE PTE.LTD.
No.6, Kerbau Road, Singapore - 219145 Tel: 2975493 - 2975539

With Best Compliments from

EBENEZER MATRICULATION HIGHER SECONDARY SCHOOL (RESIDENTIAL)

Recognised by Govt. of Tamil Nadu

YELAGIRI HILLS. TAMIL NADU

MADRAS MATRICULATION SYLLABUS

Medium of Instruction : **English, with Tamil / French / Hindi as Second Languages**

Residential - Co - Educational

Situated in a Mountainous tourist resort in 20 acres of campus - just 230 Kms away from Madras.

Classes form Lower Nursery to Std. XII.

School offers excellent educational facilities.

100% success every year

- **Computer Science as a subject from Std.I onwards**
- **Separate classes conducted for Music, Dance and Karate**

Principal,

EBENEZER MATRICULATION RESIDENTIAL SCHOOL

KOTTUR, YELAGIRI HILLS. TAMIL NADU

Athanavur, P.O. Pin - 635853

North Arcot Ambedkar District.

TAMIL NADU. Phone: 0417945 - 220, 221, 252

or

THE DIRECTOR

EBENEZER GROUP OF SCHOOLS,

7TH STREET, HOUSING BOARD COLONY,

KORATTUR, CHENNAI- 600 080. Phone: 625 0237

Best wishes for the success of

FOR LIASION IN GERMANY

HAVE YOUR OFFICE IN THE HEART OF EUROPE i.e . GERMANY

WE LOCATE POTENTIAL BUYERS / SELLERS for EXPORT/IMPORT of product especially export of second-hand industrial units, used machines, building equipments (roads as well as buildings), used cars, heavy vehicles, scrap metals,etc. from GERMANY

We can receive your representatives, arrange suitable hotel/private accommodation airport pick-up and transfer transport, translation/interpreting services etc at a very nominal charges.



for the further details contact

POOPAL

POSTTACH 20 12 25

53142 BONN

GERMANY

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற 4 ஆம் மாநாடு

வெற்றி பெற வாழ்த்துகள்



ALANKAR SHIPPING & TRADING CO (P) LTD.,

STEVEDORES, EXPORTERS, IMPORTERS CLEARING AND FORWARDING AGENTS
INDENTING AGENTS, AIR & SEA CARGO AGENTS

INTERNATIONAL FREIGHT FORWARDERS AUTHORISED MAS AIR CARGO AGENTS

ALANKAR & CO.,

SHIP CHANDLING, BONDED STORES SUPPLIERS AND CATERING CONTRACTORS

BRANCHES

25-12-53, Godavari st.,
Visakhapatnam - 530 001,
Phone: 561556

120/7 Aberdeen Bazar,
Port Blair- 744 104.
Andaman & Nicobar, Islands,
Ph : 322 38

20/73, Roche Colony,
South Beach Road,
Tuticorin- 628 001
Phone : 329293.

No. 1, Binny Compound
Park Road,
Tirupur - 641 601.
Ph : 0421 - 701695.

REGD. OFFICE:

243, Thambu Chetty Street, Chennai- 600 001.

Phone : (044) 5233024, 5233025, 5225597

Fax : (044) 5223160 Telex : 041-6278 ANCO IN

E-MAIL : rameshn@md2.vsnl.net.in

வரலாறு படைக்கும் வெற்றித் தமிழன்
டாக்டர் பெருங்கவிக்கோவின் ஒப்பற்ற அரிய

70 கவிதை இலக்கியங்கள்



நெஞ்சத்தோட்டம்	36-00
தாயுமானவர் அந்தாதி	2-00
தமிழ் முழக்கம்	20-00
வாழக நீ எம்மான்	25-00
எண்ணச்சுடர்	30-00
ஐயப்பன் பாமாலை	4-00
தாய்மண்(காவியம்)	66-00
இருபது கட்டளைகள்	14-00
ஐயப்பன் ஆற்றுப்படை	2-00
பற்றிலான் பற்று	5-00
உலகை உயர்த்திய ஒருவன்	5-00
மலைநாட்டின் மீதினிலே	50-00
காலக்கனி(நாடகக்காவியம்)	20-00
கௌதமரின் கண்ணீர்	11-00
உலக உலா(பயணக் கட்டுரை)	25-00
கவிதைக்கதிரோன்	51-00
அழகின் வெள்ளம்	7-00
கோலாலம்பூர் மகாமாரியம்மன் பிள்ளைத்தமிழ்	12-00
பண்தேடும் பாடல்கள்	25-00
திருச்சிற்றம்பலத் திருவந்தாதி	7-00
எழுதுகோலே உனக்கு ஓர் எச்சரிக்கை	25-00
விடிந்தால்;விடுதலை!	36-00
ஐயப்பன் சாதுகுருசாமிகள் பாமாலை	2-50
காலம் சொல்லும் கவிதை	50-00
மண்ணில் விழுந்த மழைத்துளிகள்	7-00
அரங்கம் கண்ட தமிழ்ச்சுரங்கம்	7-00
விந்தைகள் விளையும் விண்ணும் மண்ணும்	7-00
மங்கலமாய் வாழ வேண்டும்	7-00
நினைவலைகளின் நீரோட்டம்	7-50
கொஞ்சும் எழில் ரிஞ்சிங் தோட்டம்	2-50
உயிர் நாதத்தின் ஊற்றுகள்	7-00
தராசு செவ்சென்கோ கவிதைகள்	15-00

தேவியின் திருவருள்	7-00
முத்தமிழ் மாமணிகள்	7-00
ஓர் அருவியின் பயணம்	7-00
உள்ளத்தில் ஓசை	7-00
சிந்தனைச் சுடர்	100-00
பன்மணி ஒலிகள்	7-00
உணர்வின் ஊற்று	7-00
கரைகடந்த வெள்ளம்	7-00
ஆழ்மன அலைகள்	7-00
வெற்றிமகள்	7-50
புதியபாதை	7-50
சிவப்பு விழிகள்	7-50
கவிதை மழை	7-50
இருண்ட மேகங்கள்	145-00
மின்னல் கீற்று	7-00
வைகறை வரும்	30-00
ஐயப்பன் அருளமுதம்	30-00
கெய்ரோவில் பெருங்கவிக்கோ	25-00
துருக்கியில் பெருங்கவிக்கோ	30-00
இசுரேலில் பெருங்கவிக்கோ	60-00
தமிழ் நடைப்பாவை	15-00
குரு அஞ்சலி	40-00
மனைவிக்கு	25-00
ஆற்றல் மிகுந்த அருங்கவிஞர்	34-00
(திறனாய்வாளர் வல்லிக்கண்ணன்)	
தமிழ் நூல்களில் கவிதைபற்றிய	
கருத்துகளும் கற்பனைகளும்	60-00
பறந்த போதினிலே பிறந்த கவிமகளே	45-00
தமிழ் எங்கள் புகழ் மிக்க புலவர்க்குவேல்	61-00
உலகக் கவிஞனின் அறைகூவல்	54-00
ஆயிரம் வாசல்	61-00
சந்தித்தேன் சிந்தித்தேன்	54-00
விடுதலைச் சுவடுகள்	63-00
அமெரிக்காவில் பெருங்கவிக்கோ	59-00
Flames of Thoughts	25-00
Translated by Dr.Krishna Srinivas	
Tamil poets Today	30-00
Buddha's Tears	25-00
Randon reflection	30-00
Vision and Vibrations	60-00
(trnslated by Dr.G. Soundararaj)	
Goddess of victory	35-00
(Translated by Dr. Muruguvannan)	

கிடைக்குமிடங்கள்:

தமிழ்மணி புத்தகப்பண்ணை
281, காயிதேமில்லத் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
தொலைபேசி/நகல் - 8552237

கவி அரசன் பதிப்பகம்
"திருவள்ளுவர் இல்லம்"
12, சாயிநகர் இணைப்பு,
சென்னை - 600 092. தொலைபேசி 487 1375